JL
Δ2y7M36m211,N24
N21-1.1-12
208735

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

10 MA

அன்டர் பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.

ரௌத்ரி ௵ தை௴ முதல் துன்மதி ௵ மார்கழி௴ வரையில்

## தொகுதி ஒன்று

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

வருடசந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 4

208735

Printed by Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway, Madras

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

## அட்டவணை.


கடவுள் வணக்கம்—
1, 33, 65, 97, 129, 161, 193, 225, 257, 289, 321, 353

குருதேவர் வாக்கியம்—
1. *தன்னை யுணர்தல்* ... ... 2, 34
2. *தலைவனது இயல்பு* ... 66, 98
3. *மாயையி னியல்பு* ... ... 290, 322,

ஸ்ரீராமகிருஷ்ண சரித்ராமிருதம்—
9, 40, 71, 105, 130, 162, 198, 230, 261, 317, 323,

ஸ்ரீராமகிருஷ்ண தேவர் வரலாறு (செய்யுள்) ...194, 226, 258

விவேகாநந்த ஸ்வாமிகள்—
*அருள் வாக்கியத் திரட்டு* 55, 85, 149, 177, 206, 270
*ஹிந்து மதமும் ஸ்ரீராமகிருஷ்ணரும்* ... 117, 235

அவதார புருஷர் சரித்திரம்—
*புத்த தேவர்* ... 179, 210, 340,

பக்தர்களின் சரித்திரம்—
*அன்னை ஸ்ரீ சாரதா தேவியார்* ... 50, 93, 121
*பரதரது திவ்ய சரித்திரம்...* ... 114
*அஜாமிளன்* ... ... 135
*அயுதர்* .. ... 171
*கண்ணப்ப நாயனார்* ... ... 238
*துர்க்காசரண நாக மஹாசயர்* ... 264, 294
*இந்த்ரத்யும்னன்* ... ... 303
*சிறுத்தொண்ட நாயனார்* . ... 337

புராணக்கதைகள்—
*தியாகம்* ... ... 47
*பரதரது திவ்யசரித்ரம்* ... ... 114
*அஜாமிளன்* ... ... 135
*அயுதர்* ... ... 171
*ஸ்வதர்மம்* ... ... 285
*கஜேந்திர மோக்ஷம்* ... ... 303
*இந்திரனும் விரோசனனும்* ... 334
*ஸ்ரீகிருஷ்ண விஜயம்* ... 361

மண்ணுளார் செய்த மாதவப் பயனாய்
வாரிசூ ழுலகிடை யுதித்து
விண்ணுளார் தாழும் விழையுமெய்ஞ் ஞான
வேதநூன் முடிபினை விளக்கு
மண்ணலாம் ராமக் கிருட்டிணர் பதத்தை
யன்பொடு துதித்தவ ருரைத்த
வெண்ணிலா மொழியு ளொருசில தமிழி
லெழுதுவன் குருபதந் தொழுதே.

## நூல்

### தன்னை யுணர்தல்

உன்னைநீ யுணர்வா யுணர்ந்திடி லிறையை
யுணர்குவா யுன்னுள்யா னென்ன
மன்னிய தெதுவோ கால்கர முதிர
மாம்சமோ மற்றவ யவமோ
என்னநன் றாகச் சிந்தைசெய் வாயேல்
யானெனப் படுவதொன் றில்லாத்
தன்மையு முணர்வாய் வெறுமையாய் முடியுஞ்
சாற்றவே றொன்றிலாத் தகைமை.

தோற்றிய வீர வுள்ளியை யுரிக்கத்
தோல்வரும் விதையிலா தாகும்
சாற்றிடில் வெட்ட வெளியதாய் முடியும்
யானெனுந் தன்மையு மஃதே
ஈற்றினின் மிஞ்சுஞ் சுத்தசித் தாகி
யியம்பொணா வாத்தும சொரூபஞ்
சாற்றுநா னிறக்கக் கடவுளுந் தோற்றுஞ்
சத்திய முணர்ந்துகொள் வாயே. (1)

நானெனு முனைப்பு மிருவகைப் படுமா
னன்றுமீ தென்னுடை யுறையுள்
ஆனவிம் மனையு மென்னதே யிவனென்
னருமக னெனலபக் குவமாம்
கோனெனை யாண்ட கடவுள்யா னடிமை
குமரன்யா னவற்கென்றான் முதலாய்
ஈனபந் தத்தில் விடுபட்டே னுணர்வே
னெனைத்துமென் றிருத்தல்பக் குவமே. (2)



ஓரொரு மொழியா லடியனே னுண்மை
யுணர்ந்திட வுரைத்திரீ யென்னச்
சேர்பவன் றனக்கு மறுமொழி யாகச்
செப்புவார் நங்குரு தேவர்
சீரிய பிரம மொன்றுமே யுண்மை
செகத்தென மருவிய தோற்றம்
பேருள வெல்லாம் பொய்யென வுணர்ந்து
பேச்சொழிந் திருத்திரீ யெனவே. (3)

நானெனு மகந்தை யுடல்விழு மளவு
நைந்திடா தெஞ்சிநின் றிடுமால்
வானக மிமிர்ந்த தெங்கினிற் பழுத்த
மடல்விழுந் திடமடற் றழும்பு
தானக லாது நிலைபெறு மதுபோற்
சாருவ தெனினுமே னிலைக்கண்
ஆனவன் றன்னைத் தளைந்திடா தெஞ்சி
யற்பமா யிருக்குமிவ் வகந்தை. (4)

மேனிலை யடைந்தீர் நாடொறுந் தியானம்
வேண்டுமோ வென வெங்கோன் வினவ
ஞான நந்தத்தோ தாபுரி யதற்கு
நாடொறுஞ் சுத்திசெய் திலமேல்
ஈனவெண் கலத்திற் களிம்புறு மதுபோ
லிதயத்து மெனக்குரு தேவர்
ஆனபொற் கலம்போன் மாசுரு தியினை
யறிந்தவர் மனமென வறைந்தார் (5)

வேறு

காட்டு மியர்யங் கருதிலிரண் டுண்டு
மாட்டுந் தொகுத்தல் வகுத்த லென்னிவை
ஓட்டின தாகும் விதையே யுணருங்கால்
மீட்டுமவ் வோடு விதையின தாமே (6)

# நமது பத்திரிகை

### கடவுள் வணக்கம்.

*உலகம் யாவையும் தாமுள வாக்கலும்*
*நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலால்*
*அலகி லாவிளையாட் டுடை யாரவர்*
*தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.*

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் என்னும் இப்பத்திரிகை இம்மாதம் முதற்கொண்டு வெளிவரும் என்பதை நாம் பக்தர்களுக்கு அறிவித்தவுடனே, அவர்கள் வெகு குதூஹலத்துடன் பத்திரிகையைத் தமக்கு அனுப்புமாறு வேண்டினர். கற்றறிந்த பெரியவர்கள் விஷயதானம் செய்வதாக ஒப்புக்கொண்டனர். தமிழ் நாட்டிலுள்ள ஜனங்களில் பெரும்பாலார் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர். இவற்றை யெல்லாம் நோக்குமிடத்து, நம் பத்திரிகை தக்க சமயத்திலேயே வெளி வருகின்றதென்றும், நமது தமிழ் நாட்டிலுள்ள ஓர் பெருங்குறையை நீக்குமென்றும் எமக்குத் தோன்றியது.

மேனாட்டு நாகரிகத்தில் இதுவரையில் ஈடுபட்டுச் சற்று மதி மயங்கி, கற்றறிந்தும் மூடர்கள் போலிருந்த பரத நாட்டார் இப்பொழுது கண்விழித்துக் கொண்டனர். காரணம் என்னவெனில், கொஞ்ச காலத்திற்கு முன் ஐரோப்பாவில் நடந்த பெரும் யுத்தத்தின் ஆரவாரமும், உலகமெங்கும் தற்காலம் நடைபெறும் ஜன சமூகங்களின் கிளர்ச்சிகளுமே. அதனால் நம்மவர்கள் ஐரோப்பிய நாகரிகத்தினிடம் இதுவரை வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். ஐரோப்பியர்களுடைய நாகரிகம் வெறும் வெளிப் பகட்டு என்றும், பார்வைக்குப் 'பள பள' வெனத்தோன்றி கண்ணைப் பறித்தாலும், ஆழமில்லாது ஓடும் ஓர் சிற்றாற்றைப் போன்றது என்பதையும் நம் நாட்டார் அறிந்தனர். நமது ஸநாதன தர்மமோ, ஆழமாய், அகன்றதாய், சாசுவதமாய், சுத்த நீருடன் ஓடும் கங்கா நதியைப்போன்று மேன்மையுடைய தென்பதும் நம்மவர்க்கு வெளியாயிற்று.

புண்ணிய பூமியாகிய பாரத வர்ஷத்தின் சரித்திரத்தை ஆராய்வோமாயின், மற்ற நாடுகளுக்கும் நமது தாய் நாட்டிற்குமுள்ள மாறுபாடுகள் தெளிவாய்ப் புலப்படும். பிற நாட்டார்கள் தங்கள் எல்லைகளைத் தாண்டி அயல் நாடுகளின்மீது படையெடுத்து,



அவைகளைத் தம் தேசத்தோடு சேர்த்துப் பெரிய ராஜ்யங்களை ஏற்படுத்துவதிலும் தம் தேக வலியால், பலங்குன்றியவர்களை அடக்கி யாள்வதிலும் பல நூற்றாண்டுகளாய் முயன்று வருகின்றனர். ஆயின் இந்நாட்டார் மட்டும் அமைதியையே நாடினவர்களாய், தம் நிலைமையோடு திருப்தி கொண்டவர்களாய், தம் எல்லை கடந்து பிறநாடுகளை அடக்கி யாள்வதில் மனம் வைக்காதவர்களாய், உள்நாட்டங் கொண்டவர்களா யிருக்கின்றனர். 'நம்மவர்கள் சக்தி குறைவுள்ளவர்கள்; அதனாற்றான் இவ்வாறிருக்கின்றனர்' என்று நாம் சொல்வது பொருந்தாது. உண்மைக் காரணம் என்னவெனில், இந்தியர்கள் வெளி விஷயங்களை விட ஆத்ம விஷயத்தை அதிக மேன்மையாய்ப் பாராட்டுவதேயாம். இவர்களுடைய வாழ்க்கைக்கு மூலாதாரமா யுள்ளது ஆத்ம வித்தையே.

இந்த உள் நாட்டத்தைக் கைவிட்டதாலேயே நமது நாடு இப்போது ஓர் விதமான குழப்பத்திலிருக்கிறது. மேல்நாட்டு நாகரிகத்தின் முக்கியச் சின்னங்களான புகைவண்டிகளிலும், மின்சார விளக்குகளிலும், ஆகாயக் கப்பல்களிலுமே நாம் பக்தி செய்து அவைகளையே சரணாகதியாக அடைய வாரம்பித்தோம். அவைகள் நமக்கு வாகனமாயிருப்பது நீங்கி, நம்முடைய மனதிலேறி சவாரி செய்யத் தொடங்கிவிட்டன. நாம் சுதந்திரத்தை யிழந்து பிரகிருதிக் கடிமைகளாகி துக்க மனுபவிக்கத் தலைப்பட்டோம். அவைகள் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் ஸாதன மென்பதையும், இவைகளுக் கப்பாலுள்ள ஆத்ம தத்வத்தை உணர வேண்டுவதே நம் கடமை என்பதையும் அறிந்த பின்னரே நாம் சுதந்திரம் பெற்று ஆனந்த மடையலாகும். வேதங்களும், புராணங்களும் அவதார புருஷர்களும், ஆசாரியர்களும் கூறியுள்ளவாறு "ஒருவன் தன் ஆத்மாவை ரக்ஷிக்காவிட்டால் உலகனைத்துந்தான் ஆண்டும் என்ன பயன்?" இந்த ஜன்மத்தில் ஆத்மாவை உணராதிருத்தல் "மஹதீ விநஷ்டி:" மகா நஷ்டம், மகத்தான நாசம் என்று உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது. மகா மேருபர்வதம்போல் பணம் சேர்த்தென்ன? கடல்போல் பரந்த கல்வி கற்றென்ன? உலகெல்லாம் கட்டி ஆண்டென்ன? கடலைக் கடந்தென்ன? ஆகாயத்திற் பறந்தென்ன? உண்மை யுணர்ச்சி இல்லாவிடத்து இஃதெல்லாம் வீண் டம்பமே! உண்மை யுணர்ச்சியுள்ள விடத்து இதிலெல்லாம் நாட்டமெங்ஙனம்?

*"கற்றதனா லாய பயனென்கொல்; வால் அறிவன்*
*நற்றாள் தொழா அர் எனின்?"*

'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாயுள்ள சர்வேசுரனைத் தமக்குள்ளறிந்து உய்ய வகை தேடாராயின் இம்மனித ஜன்மம் எடுத்தது வீணே!

ஆகையால் வாழ்க்கையின் உண்மைப் பயனை உணர்ந்துய்யும் பொருட்டு, எல்லோருக்கும் எளிதில் விளங்கத் தக்கவாறு அநாதியான ஆத்ம ஞானத்தை யெடுத்துக் கூறுவதே இந்தப் பத்திரிகையின் முக்கிய நோக்கமாகும். ஆத்ம வித்தையைப் பரவச்செய்தால் மற்றெல்லா ஐசுவரியங்களுந் தாமே வந்தடையும். இதை அடைந்தால் வேறு அடையவேண்டுவ தொன்றில்லை. இந்த சுகத்தி லாழ்ந்த பின்னர் இதற்கு மீறின ஆநந்தமில்லை; இதுவே வாழ்க்கைப் பயன். நமது நாடு இதுகாறும் ஆத்மஞானம், அமைதி, அன்பு, என்னும் ஆகாரத்தாலேயே போஷிக்கப்பட்டு வளர்ந்தது; இனியும் அவ்வாறே வளரும். ஸ்தூல தேகத்தின் வன்மையாலும், எல்லை கடந்து நாடுகளைக் கைப்பற்றுவதாலும், வியாபாரப் பித்தலாட்டங்களாலும் மேன்மையடையக் கருதுவது வீண்; அஃது ஒரு நிலை அற்றது. அது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதை ஒக்கும். இதுவரையில் துருவ நக்ஷத்திரத்தைப் போன்று நமக்கு வழி காட்டியாயிருந்த ஸநாதன தர்மத்தையே இனியும் நாம் பின்பற்றவேண்டும். அதுமட்டுமன்றி, ஏனையோர்க்கும் அசைவற்ற பரஞ்சோதியைச் சுட்டிக்காட்டி அவ்வழியிற் பின்பற்றச் செய்தல் வேண்டும். இதுவே இந்திய நாட்டாருக்குப் பூர்வகாலந் தொடங்கி ஏற்பட்ட கடமை; பரதக்கண்டத்திற்கு ஜகதீசுவரனால் நியமிக்கப்பட்ட தொழில் இதுவே. ஆத்ம வித்தையைக் காப்பாற்றி உலகெங்கும் பரவச் செய்யும் விஷயத்தில், இந்தியா ஒன்றின் முன், மற்றெல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்தாலும் இணையாக மாட்டா. இந்நாட்டில் தோன்றிய அவதார புருஷர்களுக்குக் கணக்கில்லை. ஆத்ம வித்தையென்னும் மகாமேரு பர்வதத்தின் உச்சியில் நின்றுகொண்டு, அழிவற்ற, அபரிமிதமான தேஜஸ்ஸுடன் விளங்கும் நமது ரிஷிகள், "புத்தர்களே! கேண்மின்! ஆதித்ய வர்ணனையும், அஞ்ஞானத்துக் கப்பாலாயுமுள்ள பரம புருஷரைக் கண்டோம். நீங்களும் ஓடோடியும் வாருங்கள்! இதைவிட வேறு மார்க்கமில்லை" என்று அன்பு நிறைந்த சொற்களால் உலகனைத்தையும் உய்விக்கக்கருதுகின்றனர். கடல்நீர் மேகமாகமாறி ஆகாயத்திற் கிளம்பிப் பலநாடுகளில் மழையாகப் பெய்வதுபோல் இங்கு தோன்றிய பல மதங்கள் வெளிநாடுகளில் பரவி நிற்கின்றன. புத்தமதம் சீனாவிலும் ஜப்பானிலும் முக்கியமாய் வளர்ந்து வருகின்றது. இதுமட்டுமன்றி, பல் வேறிடங்களில் உற்பத்தியாகும் நதிகள் ஒரே கடலை யடைவது போன்று, இஸ்லாமிய (முகம்மதிய) மதம், ஸோராஸ்டிரிய (பார்ஸி) மதம், கிறிஸ்தவ மதம் முதலிய பல சமயங்களும் நம் நாட்டை அடைந்து நமது ஸநாதன தர்மத்தில் ஸமரஸப்பட்டுப் போய் விட்டன. இந்தத் தர்ம ஸமன்வயத்தையும்



வேதாந்தத்தின் சிறப்பையும், உலகின்கண் கடைசியாய்ப் போதித்தவர் பரமாசாரியராகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர். அவருடைய பிரிய சிஷ்யராகிய ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் "ஸர்வஸங்க பரித்யாகம்" என்னும் எண்ணெய் நிரம்பிய விளக்கில், ஸேவை என்னும் திரியிட்டு, அத்தூய விளக்கைக் குருவிடமறிந்த 'ஆத்மஞானம்' என்னும் ஒளியில் ஏற்றி, அஞ்ஞானமென்னும் இருள் நிறைந்த இடங்களிலெல்லாம் எடுத்துச் சென்றனர்; உலகெங்கும் வேதாந்த தத்துவத்தைப் பிரசாரம் செய்து அதன் மேன்மையை ஸ்தாபித்தனர். இம்மார்க்கத்திலேயே நாமும் செல்லவேண்டு மென்பது எம் கொள்கை.

இந்த உயர்ந்த லட்சியத்தை அடையும் பொருட்டு, உபநிஷத்துக்களின் உட்கருத்துக்களும், பக்திமான்களின் சரித்திரங்களும், ஸாதன பரிசிரமங்களும் (ஸேவை செய்யும் வழிகளும்), கல்விப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் எளிதில் உண்மையை விளக்கக் கூடிய சிறு கதைகளும், ஏற்கெனவே ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் இதர பாஷைகளில் பதிப்பிக்கப் பட்டுள்ள மத விஷயமான நூல்களின் மொழி பெயர்ப்புகளும், மேல் நாட்டு சாஸ்திர ஆராய்ச்சியால் வெளியாயுள்ள பல அருமையான விஷயங்களும் இப்பத்திரிகையில் வெளிவரும்.

இப்பத்திரிகை ஹிந்து மதத்தைப் பிரசாரம் செய்வதாயினும், மற்ற மதங்களைச் சிறிதேனும் தூஷிப்பதல்ல. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறியுள்ளவாறு, தர்ம மார்க்கத்தை வாஸ்தவத்தில் கைப்பற்றுபவன், தன் தர்மத்தைத் தவிர்ந்த மற்றைய தர்மங்களும், ஸத்தியத்தைத் தேடி அடைவதற் கேற்ற வழிகளென்றே கருதவேண்டும். இதர தர்மங்களுக்கு நாம் எப்போதும் மரியாதை பாராட்டுபவர்களாக இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் தம்முடைய தர்மத்தில் உறுதியாக நிலைத்திருக்க வேண்டுமென்பதும், ஆனால் அன்னிய தர்ம (மத) த்தைத் தூஷிக்கவோ பழிக்கவோ கூடாதென்பதுமே எம் கொள்கை. ஆகையால் மதங்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதும், இந்து மதம் நமக்குப் பொருத்தமானது என்பதை விளக்குவதும், ஸத்தியம், அஹிம்ஸை, ஈகை, அடக்கம், நேர்மை, ஒழிபு இவைகளுக்கு வழி காட்டுவதும், வெளி நாட்டத்தைவிட உள் நாட்டம் வெகு அவசியமென்பதை எடுத்துக் கூறுதலுமே எம் கடமையெனக் கருதுகின்றோம்.

இவைகளைக் கூறுமிடத்து பூர்வ காலங்களி லிருந்த பழக்க வழக்கங்களை, முந்நாட்களிலிருந்தவாறே திரும்ப ஸ்தாபிக்க முயல வேண்டுமென்பது எம் கருத்தல்ல. சாசுவத தர்ம ஸ்வ

ரூபத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து தத்தம் இயற்கைக்குத் தகுந்தவாறும், காலத்திற் கேற்றபடியும் தக்க வழிகளை அனு சரித்துய்ய வேண்டுமென்பதே எம் நோக்கம். ஒருவர் வழியை மற்றொருவர் முற்றிலும் பின் பற்ற இயலாது; ஆகையால்தான் உலகில் மதம் ஒன்றல்ல, இரண்டல்ல. ஒவ்வொருவர் மதமும் வெவ்வேறு; உண்மை ஒன்றேயாயினும், அவரவர் நிலைமைக்குத்தக்கவாறு அதையுணரும் மார்க்கங்கள் பல. ஆனால் எல்லாவற்றிலும் ஒரு விஷயம் மறக்கத் தக்கதன்று. அதாவது, தற்காலத்தில், பெரும்பாலார் கருதுவதுபோன்று நாம் செய்யும் காரியங்களே முக்கியமென்று கருதாமல், கருமத்தை அனுசரிக்கும் குணமே முக்கியமென்பதை யுணர வேண்டும். நம் காரியம் எவ்வாறிருக்கவேண்டுமென்பது நம் நோக்கமாயிருக்க வேண்டுமே தவிர, எவ்வளவு காரியங்களைச் செய்து முடிக்கவேண்டு மென்பதல்ல. பகவான் கூறுவதாவது, "மாலையில் கோக்கப்பட்டிருக்கும் புஷ்பங்கள் எனக்கு வேண்டாம். அதனுள்ளே போகும் நூற்சரடு மட்டுந்தான் எனக்குத் தேவை." ஆகையால், நாம் பிறரைச் சீர்திருத்த முயலுந் தொழிலை விட்டுத் தாம்தாம் ஆத்மானுபத்தைப் பெற வழி தேடுவோமாக! அப்பொழுது, நாராயண உபநிஷத்துக் கூறும் வண்ணம், "நறுமணம் பொருந்திய புஷ்பங்கள் நிறைந்த செடியிலிருந்து ஸுகந்தம் எல்லாத் திக்குகளிலும் எவ்வாறு பரவுமோ, அவ்வாறே, நல்ல கர்மங்களின் வாசனை எங்கெங்கும் பரவும்." இதுவே ஜன ஸமூகம் முன்னேற்ற மடைவதற்குத் தகுந்த வழி. இதைத் தவிர வேறு வழியில்லை.

இப்பத்திரிகையை இப்பொழுது வெளிக்கொண்டு வருவதில் எங்கள் நோக்கங்கள் எவையெனச் சிறிது மேலே கூறி முடித்தோம். இனி அதன் குறை குணங்களைப் பகுத்தறியுமாறு இதை வாசிக்கும் அபிமானிகளிடம் விடுகின்றோம். பணிசெய்து கிடப்பதே எம் கடமை, பலனை நோக்குவது எம் கருத்தல்ல; எங்கும் நிறைந்த பொருளாய், எதற்கும் முதற்காரணமாயுள்ள சர்வேசுவரனுக்கே அர்ப்பணம்.

ஓம் தத்ஸத்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருத.

## பிரிவு. 4.

1882ஆம் அக்டோபர்மீ.

கேசவ சந்திரஸேனருடன் பகவான் புகைக்கப்பலில் சென்றது.

## அத்தியாயம்—3.

### கர்மயோகம்.

ஓர் பிராம்மோ:—ஸ்வாமி! ஒருவன் உலகத்தைத் துறந்தாலொழிய கடவுளை யடைய முடியாதென்பது உண்மையா?

பகவான் (புன்சிரிப்புடன்):—இல்லவேயில்லை. எல்லாவற்றையும் துறந்துவிடவேண்டுமென்பது உன் விஷயத்திலல்ல. உன் தற்கால நிலைமையே உனக்குப் போதுமானது. நல்ல தங்கமும், கலப்பிடமான தங்கமும் இருக்கின்றன. இவ்விரண்டும் உடயோகப்படவில்லையா? பளிங்குபோன்ற சுத்தமான சர்க்கரையும், சுத்தம் செய்யாத வெல்லமுமிருக்கின்றன. இவ்விரண்டும் இனிப்பாக விருக்கவில்லையா? (யாவரும் சிரிக்கின்றனர்.)

நீ இப்பொழுதிருக்கும் நிலைமையே உனக்கு சௌக்கியமாயிருக்கிறது. 'நாக்ஸ்' என்னும் சீட்டாட்டம் உனக்குத் தெரியுமா? அந்த ஆட்டத்தில் 17 எண்ணம் ஆகிறவரையில்தான் ஆட்டம் நடந்துகொண்டிருக்கும். ஆட்டத்தில் ஜயமடைய 17 எண்ணம்தான் வேண்டும். நான் அவ்வாட்டத்தில் வேண்டியதற்குமேல் பிடித்ததினால் ஆட்டம் போய்விட்டது. நீங்கள் அதிக கெட்டிக்காரர்களாகையினால், சிலர் 10, சிலர் 6, சிலர் ஐந்தோடே திருப்தியாயிருக்கிறீர்கள். நீங்கள் அதிகமாக பிடி பிடிக்காததினால் உங்களுக்கு ஆட்டம் போகவில்லை. இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. அது ஸரிதான்; இல்லையா? (யாவரும் சிரிக்கின்றனர்.)

நீ இவ்வுலகில் கிரஹஸ்தனாயிருந்தாலும் சரி, லௌகிகனாயிருந்தாலும் சரி; அதினாலொன்றும் பாதகமில்லை. நீ உன் மனதைமட்டிலும் பகவானிடத்தில் நிலைநிறுத்தவேண்டும். ஒரு கையினால் உன் வேலையைச் செய்; மற்றொரு கையினால் பகவானுடைய பாதங்களைப் பிடித்துக்கொள். இவ்வுலகில் உனக்குச் செய்யவேண்டிய வேலை யில்லாமலிருக்கும்பொழுது, நீ உன் இருகைகளாலும் பகவான் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்து, உன் ஹ்ருதயத்தோடு அணைத்துக்கொள்.

மனம் இருப்பதுபோலவே எல்லாம். மனம் தன் சுயாதீனத்தையிழந்தால், நீயும் உன் சுயாதீனத்தை யிழக்கிறாய். மனம் சுவதந்திரமுள்ளதாயிருந்தால், நீயும் சுவதந்திரனாகிறாய். மனமானது, வண்ணானிடமிருந்து அப்பொழுதுதான் சலவைபண்ணி வந்த வெள்ளை வஸ்திரத்திற்குச் சமானமானது. இந்த

* சேலம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தாரால் பதிப்பிக்கப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்ராமிருதம், முதற் பாகத்தின் தொடர்ச்சி.

வெள்ளை வஸ்திரத்தை நீ உனக்கு இஷ்டமான வர்ணத்தில்—சிவப்பு, மஞ்சள், ஊதா, பச்சை முதலான வர்ணங்களில் தோய்க்கலாம். நீ இங்கிலீஷ் படித்தால், உனக்குத் தெரியாமலே இங்கிலீஷ் பேசவரும்; (யாவரும் சிரித்தல்) பூட்ஸ் போட்டுக்கொள்வாய்; சீட்டி (Whistle) யடித்து ஊதுவாய்; உண்மையில் நீ இங்கிலாந்து தேசத்தில் பிறந்தவனைப்போலவே நடந்துகொள்ளப் பார்ப்பாய். ஸம்ஸ்கிருதம் படிக்கும் பண்டிதன் எப்பொழுதும் சுலோகங்களையே எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பான். மனம், கெட்ட ஸஹவாஸத்தில் பழகினால் அதின் வர்ணம் மாறி, அதற்குத் தகுந்தபடியே பேச்சும், நினைவும் மாறும். பக்தர்களின் நடுவிலிருந்தால் மனம் பகவானைத் தியானிக்கவும் பகவானைப்பற்றியே பேசவும் செய்யும்.

மனதுதான் எல்லாவற்றிற்கும் காரணம். மனம் எந்த வஸ்துக்களின் மத்தியில் உஜ்ஜீவித்து வேலை செய்கிறதோ, அதற்குத் தகுந்தபடி அதன் சுபாவத்தை மாற்றிக்கொள்ளும். மனைவியிடமிருக்கும் பிரியம் ஒருவிதம்; குழந்தையினிடமிருக்கும் அன்பு முற்றிலும் வேறுவிதமானது. ஒருவன் தன் மனைவியை ஒரு பக்கத்திலும், குழந்தையை மற்றோர் பக்கத்திலுமாக வைத்துக்கொண்டிருக்கிறான். இருவரையும் தழுவுகிறான்; ஆனால் வெவ்வேறு விதமான பிரியத்தினால் தழுவுகிறான்.

கிறிஸ்தவர்களுக்கும், பிரம்மஸமாஜத்தவர்களுக்கும் உபதேசம்.

பகவான் (பிரம்மஸமாஜத்தவர்களை நோக்கி) :—பந்தம், மோக்ஷம் இரண்டும் மனதை ஒட்டினது. முக்தன்; நான் உலகத்திலிருந்தபோதிலும், கானகத்திலிருந்தபோதிலும், நான் பந்தத்தில் கட்டுப்பட்டவனல்ல. நான் கடவுளின் குழந்தை; அரசர்களுக்கரசனும் கடவுளின் பிள்ளை. என்னைப் பந்தப்படுத்துவதற்கு யாரிருக்கிறார்கள்?

நீ ஒரு பாம்பினால் கடிக்கப்பட்டால், "விஷமில்லை, விஷமில்லை" என்று சொல்லிக்கொண்டு உன் மனோசக்தியை உபயோகிப்பது, விஷத்தை விலக்குவதற்கு ஓர்வழி. அதுபோலவே "நான் பந்தத்தில் கட்டுப்பட்டவனல்லன்; நான் ஸ்வதந்திரன்" என்று நீ சொல்லவேண்டும். உன் மனோசக்தியை உபயோகப்படுத்தினாயானால் நீ சுவதந்திரனாகிறாய்.

ஒரு சமயம், கிறிஸ்தவர்களின் புஸ்தகமொன்றை என் கையில்கொடுத்தார்கள். நான் அதைப்படித்து அர்த்தம் சொல்லும்படியாகக் கேட்டேன். அதில், ஆரம்ப முதல் கடைசிவரையில், "பாபம்" என்ற விஷயத்தைத் தவிர வேறொன்றும் எழுதப்பட்டிருக்கவில்லை.

(கேசவரை நோக்கி) :— பிரம்ம ஸமாஜத்தவர்களும், பாபத்தையும் பாபிகளையும்பற்றியே பேசுகிறார்கள். எந்த மூடன், "நான் பந்தத்தில் கட்டுப்பட்டவன்" என்று ஓயாமல் சொல்லுகிறானோ, அவன் நிச்சயமாக முடிவில் தானாகவே பந்தத்தில் கட்டப்படுகிறான். எந்த மதியீனன் தான் "நான் பாபி, நான் பாபி" என்று சொல்லுகிறானோ அவன் பாபியாகவே ஆய்விடுகிறான்.

ஈசுவர நாமத்தை சிரத்தையுடன் ஸ்மரிக்கும் பாபியும் மோக்ஷமடைவான். "என்! நான் ஈசுவரனுடைய நாமஸங்கீர்த்தனம் செய்யவில்லையா? நான் இன்னும் பாபியாயிருக்கவேண்டுமா? நானின்னும் பந்தத்திலிருக்கவேண்டுமா?" என்று கடவுளிடத்தில் பக்தியுடன் சொல்லவேண்டும். கிருஷ்ணகிஷோர்



ஏகாக்ர பக்தியுடன் கடவுளை வணங்கி வந்த வைதிக பிராம்மண சிரேஷ்டர். அவர் பிருந்தாவனத்திற்கு யாத்திரை போனார். ஒருநாள், அநேக ஆலயங்களுக்குச் செல்லாய்போய்த் தரிசனம் செய்து வருகையில், அவருக்கு மிகவும் தாகமாயிருந்தது. ஒரு கிணற்றருகில் ஒருவன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, அவ்விடம் சென்று அவனோடு "அப்பா! எனக்குக் கொஞ்சம் ஜலம் இறைத்துக் கொடுக்கிறாயா? நீ என்ன ஜாதி?" என்று கேட்டார். அதற்கு அம்மனிதன் "ஸ்வாமீ! நான் தாழ்ந்த ஜாதி, சக்கிலியன்" என்றான். கிருஷ்ணகிஷோர் "அதைப்பற்றி அக்கரையில்லை; கடவுள் நாமத்தை 'சிவ, சிவ' என்று உச்சரித்துக்கொண்டே ஜலமெடுத்துக் கொடு" என்றார்.

கடவுள் நாமத்தை கீர்த்தனை செய். உன் சரீரம், மனம், ஆத்மா எல்லாம் சுத்தமாய்விடும்.

உன் ஜீவிதகாலம் முழுவதிலும் ஏன் பாபத்தையும், நரகத்தையும்பற்றியே பேசவேண்டும்? நீ கடவுள் திருநாமத்தில் பக்தியுடன் ஒருதரமாகிலும் "ஈசா! செய்யவேண்டாதவைகளை நான் செய்திருக்கிறேன். செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டேன். பிரபோ! என் பிழையைப் பொறுத்தருளவேண்டும்!" என்று சொன்னால், சகலபாபமும் உன்னைவிட்டகலும்.

பகவான் பாடுகிறார் :—

ஈசுவர நாமத்தின் மஹிமை.

1. என் தாயே! உன் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு மாத்திரம் நான் மரணமடைய அருள்புரிவாயாக. அப்பொழுது தன்னியனான இந்த உன் குழந்தையை நீ யிரட்சிக்கிறாயா, இல்லையா என்று தெரியவரும்.

2. நான் கோஹத்தி, பிரம்மஹத்தி, ஸ்திரீஹத்தி, மதுபானம், சிசுஹத்தி இவைகளில் எதைச் செய்திருந்தாலும், எனக்குக் கவலையில்லை. இக்கொடிய பாபங்களெல்லாமிருந்தபோதிலும் உன் ஆக்ஞைப்படி சிருஷ்டி செய்கிற பிரம்மாவின் பதத்தையும் எளிதில் அடையும்படியான சக்தி என்னிடமிருக்கின்றது.

* * * * * *

நான் என் ஜகன்மாதாவிடம் தூய்மையான பக்தியைமட்டிலுமே வேண்டிக்கொண்டேன். என் கையில் புஷ்பங்களுடன் கைகூப்பி, "அம்மா! களங்கமற்ற பக்தியிருக்கும்படி எனக்குக் கிருபை செய். இதோ பாபம் இருக்கிறது; இதோ புண்ணியமுமிருக்கிறது; அவைகளை உன் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். அவ்விரண்டையுமெடுத்துக்கொள். தாயே! இதோ அறிவும், இதோ அறிவின்மையுமிருக்கின்றன; அவ்விரண்டையும் நீ யெடுத்துக்கொள். எனக்கு பக்தி மட்டிலும் இருக்கும்படியாகக் கிருபை செய். இதோ ஒரு பக்கம் சுசியும், மற்றோர் பக்கம் அசுசியுமிருக்கின்றன. நான் அவ்விரண்டையும் வேண்டேன். இதோ பாபமும், இதோ புண்ணியமுமிருக்கின்றன. இவ்விரண்டையும் உன் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். என் தாயே! எனக்கு உன்னிடம் பக்தியும் அன்பும் இருக்கும்படியாகக் கிருபை செய்" என்று பிரார்த்தித்தேன்.

(பிராம்மோ பக்தர்களை நோக்கி) —'ராமப்பிரஸாதருடைய பாடலொன்றைக் கேளுங்கள்' என்று பகவான் பாடுகிறார் :—

## என் ஜகன்மாதாவும், இந்திரிய நிக்கிரகமும்.

1. ஓ, மனமே! வெளியில் உலாவப் போவோம் வா. என் ஜகன்மாதாவாகிய கல்பக விருக்ஷத்தினடியில் சென்று, தர்மார்த்த காமமோக்ஷங்களான நாலு பழங்களைப் பறிப்போம்.

2. ஓ, மனமே, நீ கல்பக விருக்ஷத்திற்குச் செல்லுகையில், உன் மனைவிகளிருவரில் நிவிருத்தியை உன்னோடு அழைத்துச் செல். வித்யா ஸித்தியங்களை நன்றாய்ப் பகுத்தறியும் அவள் பிள்ளையாகிய விவேகனிடம் பகவானைப் பற்றிக்கேள்.

3. நீ சுசி, அசுசி இவ்விரண்டையும் சமமாகப்பாவித்து, ஸாதுக்களுடைய நிலையில் எப்பொழுது தங்கப்போகிறாய்? இவ்விரு பத்தினிகளுக்குள் பார்க்கும் வித்தியாசம் எப்பொழுது நசிக்கிறதோ அப்பொழுது நீ யென் ஜகன்மாதாவைப் பார்ப்பாய்.

4. நீ உன் பெற்றோராகிய அவித்தையையும், அஹங்காரத்தையும் விலக்கு. மோஹம் உன்னை அதன் வலையில் இழுக்க யத்தனம் செய்தால், நீ க்ஷமையாகிய தூணைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்.

5. தர்மாதர்மங்களாகிய இரு ஆடுகளையும், ஓர் ஸ்தம்பத்தில் கட்டிவிடு. அவைகளடங்காமலிருந்தால், பகவானது பலிபீடத்திற் கெதிரில், ஞானமாகிய கத்தியினால் அவைகளை வெட்டிப் பலியிடு.

6. ஓ, மனமே! நீ உன் முதல் மனைவியாகிய பிரவிருத்தியின் மக்களை கிட்ட நாட வொட்டாமல் எச்சரிக்கை செய்; அவர்கள் உனக்குக் கீழ்படியாவிட்டால், ஞானமாகிய சமுத்திரத்தில் அவர்களை ஆழ்த்திவிடு.

7. நீ யிவ்வாறு நடப்பாயாகில், யமனுக்குத் திருப்தியாகப் பதில் சொல்ல முடியும். நானும் உன்னை அப்பொழுது, 'என் குழந்தாய்,' 'என் கண்மணீ,' 'என் குலதெய்வமே' என்றும், இன்னும் மற்ற செல்லப்பெயர்களாலும் அழைப்பேன். அப்பொழுது நீ உன் மனதுக்கேற்ற மனமாயிருப்பாய்.

கிரஹஸ்தனுக்கும் கடவுளைப் பார்க்கும்படியான பாக்கியம் கிடைக்கலாம். ராஜ ரிஷியான ஜனகமஹாராஜாவின் விஷயம் அப்படி. முன் ஒரு பக்தன், இவ்வுலகம் கனவினால் ஆகப்பட்டதென்று சொன்னான். ஆனால் இன்னொரு பக்தனான பிரஸாதின் அபிப்பிராயப்படி அப்படிச் சொல்வது, முழுவதும் உண்மையாகாது. ஏனெனில், ஒருவன் உலகத்திலிருந்த போதிலும், உலகில் பற்றற்றிருக்கலாம்.

பகவான் பாடுகிறார்:—

1. வாஸ்தவத்தில் இவ்வுலகம் ஆனந்த மயமானது. நான் உண்டு, களித்து சுகிக்கட்டும்.

2. ராஜ ரிஷியாகிய ஜனகர், உலகைத் துறந்த சந்நியாசிக்கு எவ்விதத்தில் தாழ்ந்தவர்?

இல்லவேயில்லை; அவரொருவரே சரீரத்தையும் ஆத்மாவையும் சமமாகப் பாராட்டினவர். பாலைக் குடித்துக்கொண்டே பிரம்மத்தையும் அறிந்தார். (யாவரும் சிரித்தல்.)



ஆனால் ஒருவன் ஜனகராஜாவின் நிலைமைக்குத் திடீரென்று குதித்து வந்துவிட முடியாது. ஜனக மஹாராஜா இவ்வுலக சந்தடியிலிருந்து ஒதுங்கி, ஏகாந்தத்திலிருந்து அநேக வருஷகாலம் பக்தியை அப்பியசித்து வந்தார். ஆதலால் ஒவ்வொருவரும் சிறிது காலம் ஏகாந்தத்திலிருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒருவன் மனித சஞ்சாரமற்ற விடத்திற்குச் சென்று ஏகாந்தத்திலிருந்து மூன்று நாள் கடவுளைக் குறித்து திடமாகக் கதறுவானாகில், அது சிரேஷ்டமானதாகும். அவ்விதம் ஒருநாள் கழித்தாலே மிகுந்த லாபம் உண்டு. ஜனங்கள் மனைவி மக்களின் பொருட்டு குடம் நிரம்பக் கண்ணீர் விட்டுக் கதறியழத் தயாராயிருக்கிறார்கள். ஆனால், பகவான் பொருட்டு யார் கதறுகிறார்கள்? சமுசாரிகள் பகவானையடையும் பொருட்டு இடைக்கிடை ஏகாந்தத்திற் சென்றிருப்பார்களானால், அதுவேயவர்களுக்கு அளவற்ற நன்மையைக் கொடுக்கும்.

ஜிஞ்ஞாஸுவின் (ஆத்மஞானத்தை விரும்பினவன்) முயற்சியின் முதற்படியில், ஆயிரக்கணக்கான இடையூறுகளேற்படுகின்றன. அவ்விடையூறுகளின் காரணம் உலகமும், அதன் விஷயங்களினாசைகளும். பாதைக்கருகில் நடப்பட்ட மரத்தை ஆடுமாடுகள் தின்னாமலிருக்கும் பொருட்டு அதற்கு ஒரு வேலி யவசியம். செடி, சிறியதாயும் மிருதுவாயு மிருக்கும் வரையில் வேலி யவசியம்; அதன் அடிமரமும், வேர்களும் பெரிதாகவும் பலமாகவுமான பிறகு, வேலி அவசியமில்லை. அப்பொழுது ஒரு யானையை அம்மரத்தில் கட்டின போதிலும் அதற்குத் தீங்குண்டாவதில்லை.

உலகப்பற்றுள்ளவனுடைய வியாதியானது மிகவும் கடுமையானது. அவனுடைய அவயவங்களும், அவற்றின் தொழில்களும் முற்றிலும் ஒழுங்கு தவறி யிருக்கின்றன. அவன் தன் சொந்தப் பிதாவாகிய ஈசுவரனை மறந்து, பெண்ணாசை பொன்னாசைகளைக் கைப்பற்றி யிருக்கிறான். அவனுடைய கஷ்டமெல்லாம் இவைகளினால் வந்தது. அவனுக்கு அமைதியும், ஏகாந்தமும் அவசியம்.

ஸந்நிபாத ஜ்வரமுள்ள ஒருவனைப் படுக்க வைத்திருக்கும் அறையில், பானை நிரம்ப ஜலத்தையும் ருசியுள்ள ஊறுகாய்களையும் வைக்கலாமா? அம்மனிதனை சொஸ்தப்படுத்த வேண்டுமென்ற எண்ணமிருக்கும் பக்ஷத்தில், ஊறுகாய்களையும், ஜலத்தையும் அப்புறப்படுத்த முடியாவிட்டால், அவனை அவ்விடத்தினின்றும் வேறிடத்திற்குக் கொண்டுபோக வேண்டும்.

உலகப்பற்றுள்ள ஸம்ஸாரி அப்பேர்ப்பட்ட வியாதிஸ்தன். உலக விஷயங்கள் தண்ணீர்ப் பானை; அவைகளை அனுபவிக்கவேண்டுமென்னும் ஆசை அந்நோயாளியின் தாகம். ஊறுகாயை நினைக்கும் பொழுதே வாயில் ஜலம் ஊறுகிறது; அவைகளை நம்மெதிரில் வைத்திருக்க வேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. விஷய புத்தியுடன் பார்க்கப்பட்ட ஸ்திரீகள் அவைகளுக்குச் சமானம். ஆதலால், ஏகாந்தந்தான் அதற்குச் சரியான ஔஷதம்.

முதலில் எது நித்தியம், எது அநித்தியம் என்ற அறிவு வேண்டும்; இரண்டாவது, இவ்வுலகில் பற்றுதலில்லாமல் வாழ்வதெப்படி யென்றறிய வேண்டும். இவ்விரண்டும்—விவேக வைராக்கியங்கள்—இருந்தால், இல்வாழ்க்கையிலிருக்கலாம். ஸம்ஸாரமென்னும் ஸாகரத்தில், காமக்குரோத முதலான முதலைகளிருக்கின்றன. அச்சமுத்திரத்தில் நீ ஸ்நானம் செய்ய விரும்பினால், சரீரத்தில் மஞ்சளை யரைத்துப் பூசிக்கொள். அப்பொழுது முதலைகளால்

உனக்கு ஒரு தீங்கும் நேரிடாது. நித்தியா நித்திய வஸ்து விவேகமும், வைராக்கியமும் மஞ்சள்; கடவுள் ஒருவரே நித்தியம்—மெய்; இவ்வுலகம் அநித்தியம்—பொய்.

இதோடு இன்னொன்று கூடவேண்டும்; அதாவது, பகவானிடம் அத்தியந்த பக்தி. பிருந்தாவனத்துக் கோபிகள் அப்பேர்ப்பட்ட பக்தியுடையவர்கள். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் அவர்கள் அத்தியந்த பிரேமையுடனிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் அவர்களுக்கிருக்கும் அளவற்ற அன்பைக் காட்டுகின்ற பாடலொன்றைக் கேளுங்கள்.

### பாடல்.

### கடவுளுக்காக ஏங்குதல்.

1. ஆ! அதோ அவ்வனத்தினின்றும் புல்லாங்குழலின் இனிய சப்தம் வருகிறது. நானவ்விடம் போகவேண்டும்!

சியாமளஸுந்தராங்கனாகிய என் காதலன், எனக்காக அவ்விடம் காத்துக் கொண்டிருக்கிறான்!

ஆ! என் பிரிய சகிகாள்! நீங்களும் கூட வருகிறீர்களா இல்லையா சொல்லுங்கள்,

2. என் தோழிகாள்! அவன் பெயர் உங்களுக்கு வெறும் சப்தமாத்திரமான வார்த்தை மட்டும் போலும்!

ஆனால் எனக்கோ அவன் உயிர் நிலை. ஆ! என் பிராணனும், ஹிருதயமும், ஆத்மாவும் அவனே.

இப்பாடலைப் பாடும்பொழுது ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய கண்களினின்றும் நீர் பெருகிற்று. அவர், உருக்கத்துடன் கேசவ்முதலிய பக்தர்களைப் பார்த்து, "நீங்கள் பிரம்ம ஸமாஜத்தவர்கள்; கடவுள் அரூபியென்றே நம்புகிறீர்கள்; பகவானுடைய அவதாரங்களில் உங்களுக்கு நம்பிக்கையில்லை. ஸரி, அதனால் பாதகமில்லை. நீங்கள் ராதையையும், ஸ்ரீகிருஷ்ணனையும், இன்னும் பிறரையும் பகவானுடைய அவதாரமாகக் கருதவேண்டிய அவசியமில்லை. ஆனால், ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் கோபிகளுக்கிருந்த பற்றுதல், அத்தியந்தப் பிரேமை அவனுக்காக அவர்கள் மனங்கசிந்துருகியது ஆகிய குண விசேஷங்களை நீங்களும் பாராட்டலாம்.

இப்படிக் கசிந்துருகுவதுதான் பகவானை அடைவதற்கு அதாவது ஈசுவர தரிசனத்துக்கு அடுத்தபடி." என்றார்.

---

## அத்தியாயம். 4.

## குருவும் சிஷ்யனும்: கடவுள் ஒருவரே குரு

இப்பொழுது. நீர்வடியும் சமயம் கப்பல் விரைவாகக் கல்கத்தாவை நோக்கிச் செல்கிறது. ஹௌரா பாலம் தாண்டி, கல்கத்தாவை ஒட்டினாற் போலிருக்கும் விருக்ஷவகைத் தோட்டத்திற்கு (Botanical Garden) அருகில் வந்து விட்டது. இன்னும் சற்று தூரம் போகும்படியாகக் கப்பற்றலைவனுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. பகவான் செய்வதையும், சொல்வதையும்



கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு நதியில் கப்பல் எவ்வளவு தூரம் வந்ததென்று தெரியவில்லை; அவர்கள் முழுமனதையும் செலுத்திக்கேட்டுக் கொண்டிருந்தார்கள்! நாழிகையோ தூரமோ இவ்வளவு ஆயிற்றென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

கேசவர் குருவுக்கு பொரியும், தேங்காயும் கொடுத்தார். அவ்விடமிருந்தவர்களெல்லோரையும் அதை எடுத்துக்கொள்ளும்படியாக வேண்ட அவர்கள் அதைத் தங்கள் வஸ்திரங்களில் வாங்கிக்கொண்டு, சாப்பிட்டு மிக்க ஆனந்தமாயிருப்பதைப் பார்த்தால், அக்கப்பலில் ஏதோ ஒரு உற்சவம் கொண்டாடப்பட்டதைப்போல் தோன்றிற்று.

விஜயர், கேசவ், இருவரும் ஒருவருக்கொருவர் விரஸமாயிருப்பதாக பகவான் அறிந்தார், இவர்களுடைய மனஸ்தாபங்களை ஸரிப்படுத்த வேண்டுமென்பது பகவான் கருத்து. பூமியில், மனிதர்களுக்குள் சமாதானமும், அந்நியோந்நியமும் விளங்கச் செய்வது அவருடைய அவதாரத்தின் கருத்தன்றோ?

பகவான் கேசவரைப் பார்த்து.—அப்பா, இதோ விஜயன் இருக்கிறான். உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களைப்பற்றியும், வாக்கு வாதங்களைப்பற்றியும், நீங்கள் தொந்திரவுப்படுத்திக் கொள்ளவேண்டாம். ஸ்ரீராமனுக்கும், சிவனுக்கும்கூட சண்டை நடந்திருக்கிறது. (யாவரும் சிரிப்பு.)

சிவன் ஸ்ரீராமனுடைய குரு. அவர்கள் சிறிது நேரம் சண்டையிட்டு பிறகு சமாதானமாகி முன் போலவே அத்தியந்த சிநேகிதரானார்கள். ஆனால் அந்தச் சண்டை அவர்களுடைய பரிவாரங்களுக்குள் நடந்து கொண்டேயிருந்தது. பூதங்களின் கூக்குரலும், வானரர்களின் கீச்சிடுதலும் சுலபத்திலடக்க முடியவில்லை. நீங்களும் திரும்ப நண்பர்களாய் விடுவீர்கள். ஆனால், உங்கள் சிஷ்யர்களோவெனில், அவர்களும் உங்களைப்போல்தானேயிருப்பார்கள். (யாவரும் சிரிப்பு.)

விஜயன் உனக்கு ஆப்தபந்து. இவ்வித்தியாசங்கள் விலக்க முடியாதவையன்றோ! பிதாவுக்கும் மகனுக்கும்கூட மனஸ்தாபமேற்படலாம். உதாரணமாக, ஸ்ரீராமனையும், அவர் குமாரர்களான லவ குசலர்களையும் பார். இன்னும், தாயும் மகளும் செவ்வாய்க்கிழமை விரதம் அனுஷ்டிக்கையில், ஒருத்தி க்ஷேமத்தை மற்றொருத்தி கோரினவளாயிருந்த போதிலும் அவளவள் தனித்தனியே விரதம் அனுஷ்டிப்பதைப் பார்த்தால், ஒருத்திக்கொருத்தி விரோதம் பாராட்டுகிறது போல் தோற்றலாம்.

அவ்வாறே, கேசவ்! நீ ஒரு ஸமாஜம் ஏற்படுத்தியிருக்கிறாய். விஜயனும் சொந்தமாக வேறு ஒரு ஸமாஜம் ஏற்படுத்த வேண்டியதன்றோ? (யாவரும் சிரிப்பு.)

ஈசுவர சிருஷ்டியில், இம்மாதிரி சண்டைகளுக்கும், வித்தியாசங்களுக்கும் போதுமான அளவு இடமிருக்கிறது. ஸாதுக்களைத் தன் பிரேமையினால் உத்தாரணம் செய்ய பகவானே பிருந்தாவனத்தில் அவதரித்திருக்க, பகவானுடைய பிரேமாவதாரத்திற்கு, ஜடிலகுடிலர்கள் ஏன் தடையாகநின்றார்கள்? ஒருக்கால், இஜ்ஜடிலகுடிலர்களின் இடையூறுகளில்லாவிடில், பிரேமைரூபமாயிருக்கும் அவ்வவதார புருஷனுடைய லீலைகள் போஷணையின்றி ருசித்திருக்குமோ! (யாவரும் சிரிக்கின்றனர்.) ஒரு காரியத்தில் தடையேற்படுமாகில், அதுவே அக்காரியம் முற்றுப் பெறும்படி தூண்டுவதாகும். ஸ்ரீமத்

ராமானுஜர் விசிஷ்டாத்வைதி; அவரது குருவோ சுத்த அத்வைதி. ஆதலால் அவர்களுக்குள் வித்தியாசமிருந்தது. குருவும் சிஷ்யனும் ஒருவருடனொருவர் விவாதம் செய்தனர். இவ்விதம் ஏற்படுவது சகஜம். இருந்தபோதிலும் சிஷ்யன் குருவுக்குச் சொந்தமன்றோ!

அவர்கள் யாவரும் சந்தோஷமடைந்தனர். ஸ்ரீ ராம கிருஷ்ணர் (கேசவைப் பார்த்து):—உன் சிஷ்யர்கள் உன்னிடமிருந்து விலகிக் கொள்வது ஆச்சரியமன்று. அவர்களை சிஷ்யர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னால் அவர்களின் ஸ்வபாவத்தை நீ நன்கு ஆராய்ந்து பார்ப்பதில்லை.

மனிதர்கள் உருவத்திலும், தோற்றத்திலும் ஒரே மாதிரியாகவே யிருக்கிறார்கள். ஆயினும், அவர்களுடைய ஸ்வபாவ குணங்களில் வித்தியாசங்களிருக்கின்றன. சிலர், பகவானை யடையச் செய்யும் வழியில் சேர்க்கும் ஸத்வ குணமுடையவர்களாயும், சிலர், வேலைகளில் மயக்கத்தைக் கொடுக்கும் ரஜோ குணமுடையவர்களாயும், மற்றும் சிலர், அஞ்ஞானத்திற்குக் காரணமாயிருக்கும் தமோகுணமுடையவர்களாயு மிருக்கிறார்கள். மோதகங்கள் (கொழுக்கட்டைகள்) பார்வைக்கு ரூபத்தில் ஒரே மாதிரியாக விருந்தபோதிலும், அவற்றிற்குள்ளிருக்கும் வஸ்துக்களில் வித்தியாசங்களிருக்கின்றன. சிலவற்றில் கிரட்டியபாலும், மற்றும் சிலவற்றில் தேங்காயும் சர்க்கரையும், வேறு சிலவற்றில் திதிப்பற்ற உளுந்தும் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. (யாவரும் சிரிப்பு.)

நான் நினைத்து உணரும் விதம் என் ஜகன் மாதாவினால் எனக்கு வேறு விதமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. ஜகன் மாதாவின் குழந்தையாகிய எனக்கு உண்ணவும், விளையாடவும்தான் தெரியும், மற்றவைகளெல்லாம் அவளறிந்து செய்யவேண்டும்.

மூன்று வார்த்தைகள் எனக்குச் சுருக்கென்று தைக்கின்றன. அவையாவன, குரு, கர்த்தா, பிதா. நான் கர்த்தாவன்று; என் ஜகதீசுவரியே கர்த்தா. நான் அவள் கைக்கருவி. ஸம்ஸார வாழ்விலிருந்து குழந்தைகளுக்குப் பிதாவாயிருக்க எனக்குப் பிரியமில்லை. ஈசுவரனுக்கே என்னுடைய காலத்தையெல்லாம் செலுத்தி, ஒரு மனித குடும்பத்தில் மாத்திரமல்லாமல், சகல ஜீவராசி ரூபங்களிலுமிருக்கிற அவனுக்குத் தொண்டு புரிவதிலேயே எனக்குப் பிரியம். இன்னும் கடவுள் ஒருவரே நமக்கு குரு.

அவரே நமக்கு உபதேசம் செய்யவல்லவர். நானோ, தாயைக்காணாவிட்டால் தன் துர்ப்பலத்தை யறிந்து அழும் குழந்தைபோல விருக்கிறேன். மனிதர்கள் குரு ஸ்தானம் வகிக்க ஆயிரக்கணக்காகக் கிடைப்பார்கள். ஒவ்வொருவனும் குருவாயிருக்க ஆவல் கொள்ளுகிறான். சிஷ்யர்களா யிருக்க எத்தனை பேர் விரும்புவார்கள்?

குருவாயிருந்து சிஷ்யனுக்கு உபதேசம் செய்வது மிகக்கடினம். குரு ஈசுவரனைப் பார்த்திருந்தால், உபதேசம் செய்ய பகவானிடம் ஆக்ஞை பெற்றிருந்தால், அது விஷயம் வேறு. அவ்விதம் ஆக்ஞை பெற்றவர்கள் நாரதர், சுகதேவர், சங்கராசார்யர்.

நீ யப்படி கடவுளின் ஆக்ஞை பெறாதவனாயிருந்தால், உன் வார்த்தையைச் செவிகொடுத்துக் கேட்பவர் யார்? கல்கத்தா ஜனங்களுக்கு நூதன விஷ-



யங்களிலிருக்கும் பிரீதி யுனக்குத் தெரிந்த விஷயமே. அடுப்பின் மீது பாத்திரத்தில் வைத்திருக்கும் பால், நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் பொழுது பொங்கி வருகிறது. ஆனால், நெருப்பை அவித்தவுடனே பொங்குதல் நின்றுவிடுகிறது. கல்கத்தா ஜனங்களுக்கு நூதன அனுபவத்தில் பிரீதி வெகு அதிகம். அவர்கள் ஓரிடத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்து, அவ்விடம் பூமி கெட்டியாயு, கடினமாயும் மிருக்குமாகில், அவ்விடத்தை விட்டு விடுவார்கள். மற்றோரிடத்தில் வெட்ட ஆரம்பித்து அவ்விடம் மணற்றரை கண்டவுடனே அவ்விடத்தில் வெட்டுவதையும் நிறுத்தி வேறிடம் பார்ப்பார்கள். ஜனங்களுடைய போக்கு இவ்விதமாகத்தான். அவர்களுடைய மதிப்பு உபயோக மற்றது.

இன்னும் சிலர் தாங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளையே ஈசுவராக்ஞைகளென்று நினைக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அபிப்பிராயம் பிசகு. ஒருவன் கடவுளைப் பார்த்து, அவருடன் பேசின பிறகுதான் அவருடைய ஆதேசம் பெறலாமே யல்லது அது வரையில் கூடாது. பகவத் ஆக்ஞை! அதற்கு என்ன அற்புதமஹிமை யிருக்கவேண்டும்! அதனால் ஒரு மலையை நகர்த்திவிடலாம். கடவுளிடமிருந்து நேரில் ஆதேசம் பெறாத ஒரு உபந்நியாஸமானது சாரமற்றதா யிருக்கும்; ஜனங்கள் சிறிது காலம்தான் உபந்நியாஸத்தில் கவனம் செலுத்துவார்கள். பிறகு, முழுதும் அவர்கள் நினைவிலிருந்து நழுவிவிடும். அப்படி உபதேசித்ததை வாழ்க்கையில் அனுஸரிப்பது, இன்னும் மிக துர்லபம்.

கமார்புக்கூரில் ஹலாதர் புக்கூர் என்ற ஒரு குளமிருக்கிறது. அக்குளத்தைச் சுற்றிலும் ஜனங்கள் அசுத்தப்படுத்தி வந்தார்கள். அக்குளத்தில் காலையில் ஸ்நானம் செய்யவந்தவர்கள், அவ்விதம் அசுத்தம் செய்தவர்களை உரத்த குரலில் கோபித்துக் கொண்டு வைதார்கள். ஆனால் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. மறுநாளும் அவ்வாறே அசுத்தம் செய்திருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் முனிசிபல் அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். வில்லையணிந்த சேவகன் ஒருவன் அதை விசாரிக்கவந்தான். அவன், 'அவ்விடமிருந்தவர்களுக்கு "இனிமேல் அசுசி செய்யக்கூடாது" என்று ஒரு நோட்டீஸ் எழுதிப் படித்தான். ஆச்சரியம்! உடனே அசுசி செய்வது நின்று விட்டது. (யாவரும் சிரித்தல்.)

பகவத் தத்துவங்களை போதனை செய்வதற்கு கடவுள் ஆக்ஞையொன்றே அத்தியாவசியம். அதின்றி ஒருவன் மற்றவர்களுக்குப் போதனை செய்வது கேலிக்கு இடம். ஒருவன் தானே யொன்றும் அறியாமல் மற்றொருவனுக்குப் போதனை செய்ய நினைப்பது குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோலாம். அதனால் தீமை யேற்படுகிறதே தவிர நன்மை யேற்படமாட்டாது. நீ கடவுளை யறிந்த பிறகுதான் மற்றவர்களுடைய ஆத்ம வியாதிகளை அறிந்து சொல்ல முடியும்.

கடவுளிடமிருந்து நேரே ஆதேசம் பெறவேண்டும். அப்படி யில்லாவிடில், 'நான் குரு; நீங்கள் எனது சிஷ்யர்கள்' என்று சொல்வது அஹம்பாவமாகும். இவ்வஹம்பாவம் அஞ்ஞானத்தினாலுண்டானதாம். ஈசுவரன் ஒருவனே ஜகத்கர்த்தாவென்றும், நாம் அவனுடைய கேவலம் கருவியென்றும் ஒருவன் அறிவானாகில், அவன் இவ்வுலகிலேயே பந்தத்திலிருந்து விடுபடுகிறான். எல்லாக் கஷ்டங்களும், மனோசாந்தமின்மையும், 'நான் கர்த்தா, நான் பிரபு' என்னும் எண்ணத்தினாலுண்டாகின்றன.

*கர்மத்தைப்பற்றி மேல் நாட்டாரது அபிப்பிராயம்: கர்மம் வாழ்நாளின் முடிவா? அல்லது, முடிவை அடைய ஒரு ஸாதனமா?*

ஸ்ரீராம கிருஷ்ணர் (கேசவ், இன்னும் மற்ற பக்தர்களையும் நோக்கி):—நீங்கள் உலகத்திற்கு நன்மை செய்வதைப்பற்றி சுலபமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் எவ்வுலகிற்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவ்வுலகம் குடுக்கையிலடங்கி யிருக்கிறதோ? மிற்க, உலகிற்கு நன்மை செய்வதற்கு நீங்கள் யார்? சொல்லுங்கள். முதலில் பக்தி ஸாதனையில் பகவானைப் பாருங்கள்; அப்பொழுது ஞானம் உதித்து, ஸித்திகளும் கைகூடும்; பிறகு நன்மை செய்வதைப்பற்றிப் பேசலாம். அதுவரையில் கூடாது.

ஒரு பிரம்மோ பக்தர்:—ஸ்வாமி! பகவானை பார்க்கும்வரையில், நாங்கள் எல்லாக் கிரியைகளையும் விட்டுவிடவேண்டுமென்பது தங்கள் கருத்தோ?

பகவான்:—இல்லை, எல்லாக் கிரியைகளையும் நீங்கள் ஏன் விடவேண்டும்? தியானம், பஜனை, கடவுளின் திவ்வியநாம ஸ்மரணை முதலிய பக்தி மார்க்க ஸாதனைகளை நீங்கள் செய்யவேண்டியது அவசியம்.

பிரம்மோ:—உலக ஸம்பந்தமான கிரியைகளை நாங்கள் விலக்கவேண்டுமென்பது தங்கள் கருத்தோ?

பகவான்:—ஆம், ஆனால் அதுவும் செய்யலாம். இவ்வுலகிலிருப்பதற்கு எவ்வளவு கிரியை அத்தியாவசியமோ, அவ்வளவு கிரியையில்மட்டும் உன் புத்தியைச் செலுத்து. அதோடு உன் கண்களில் நீர் பெருகக் கடவுளை, கருணை செய்யும்படியும், இஹபரபலாபேக்ஷையும், தண்டனையின் பயமுமில்லாமல் கடமைகளைச் செய்ய மனவுறுதியைக் கொடுக்கும்படியும் பிரார்த்தி. அவ்விதம் பிரார்த்திக்கும்பொழுது, "ஏ ஈசா! உலக சம்பந்தப்பட்ட இக்கிரியைகள் தினேதினே எனக்குக் குறையும்படியாக அருள்புரிவாயாக. ஏனெனில், என் வேலை அதிகமாவதினால் உன்னை மறக்கும்படியாக நேரிடுகிறது. சில சமயங்களில் நான் என் கடமைகளை நிஷ்காமியமாகச் செய்யவேண்டுமென்று எண்ண, என்னை அறியாமலே அது காமியமாக முடிந்து நான் ஏமாந்துபோவது எவ்விதம் என்று எனக்கே தெரியவில்லை. நான் பிச்சை கொடுக்க, அந்தோ, என்னைத் தெரியாமலே அது கீர்த்தியைத் தேடச் செய்கிறது." என்று சொல்லிப் பிரார்த்தி.

சம்புமல்லிக் எல்லாருடைய நன்மையின்பொருட்டு ஆஸ்பத்திரிகள், ஔஷதசாலைகள், பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் இவை கட்டுவதையும், ரோடுகள் போடுவதையும், கிணறுகள் குளங்கள் வெட்டுவதையும்பற்றிப் பேசினான். அதற்கு நான் "ஆம், ஆனால் நீ மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது பற்றற்று செய்தல் வேண்டும்; அதிலும், உன் கைக்கு வந்த வேலைகளையே செய்யவேண்டும். மேலும், அதிக அவசியமான வேலைகளைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். நீயாக வேலைகளைத் தேடிச் செல்லாதே. அதிலும், உன்னால் பராமரிப்பதற்கு முடியுமான வேலைகளுக்குமேல் அதிகமானவைகளை எடுத்துக் கொள்ளாதே. நீ யவ்விதம் செய்தால் கடவுளை மறப்பாய். ஜகன்மாதாவாகிய காளியின் சந்நிதிக்குச் செல்; நீ அத்திவ்விய தரிசனம் பெறுவதற்கு முன்னால் ஸந்நிதானத்திற்குச் செல்லும் வழியில் நீ தர்மங்களைச் செய்யலாம். ஆனால், நீ தர்மத்தையே செய்துகொண்டிருந்தால், பொழுதுபோய் ஆலயத்தின் வாயில் மூடப்பட்டுவிடும். அப்பொழுது ஜகன்மாதாவின் தரிசனம் உனக்குக் கிடைக்



காது. புத்திசாலிகள், ஆலயத்தின் வாயில்களிலிருக்கும் அளவற்ற கூட்டத்தை விலக்கி உள்ளே சென்று முதலில் ஜகன்மாதாவை தரிசிப்பார்கள். அவளைத் தரிசனம் செய்தபிறகு, தானம் செய்வதிலும், நற்கர்மங்களிலும் கவனத்தைச் செலுத்தலாம்.

முதலில் கடவுளைப் பார்; பின்னர் நீ யுன் கடமைகளைப் பற்றிப் பேசு. தங்கள் கடமைகளைச் செய்பவர்களின் நோக்கம் யாதாயிருக்கவேண்டுமென்று நினைக்கிறாய்? கர்மம், அல்லது, ஒருவன் செய்யவேண்டிய கடமையானது ஸாதனம்; கடவுளை அடைவதே பயன்; ஸாதனத்தையே பயனாக நினைத்து விடவேண்டாம். ஆகையினால் நான் சம்புவைப் பார்த்து, "நீ கடவுளைப் பார்த்தாய், அல்லது கடவுளே உனக்கு பிரத்தியக்ஷமானாரென்று வைத்துக்கொள்வோம், அப்பொழுது நீ அவரிடம், 'பிரபோ! நான் ஆஸ்பத்திரிகளும், ஔஷதசாலைகளும், பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் கட்டும்படியாக அருள்புரிவாயாக' என்று சொல்லுவாயா?" என்று கேட்டேன். (யாவரும் சிரிக்கின்றனர்.) இல்லை; அவைகளெல்லாம் இவ்வுலக நிலையிலிருக்கும் வரையிலுமே. இவ்வுலக நிலையோ மோக்ஷ நிலையை உத்தேசிக்கக் கொஞ்சமும் ஸ்திரமற்றது. உண்மையான பக்தன், 'ஏ ஈசா! உன் பாதாரவிந்தங்கள் எனது இருப்பிடமாயிருக்கவும், உன் திவ்விய சந்நிதானத்தில், நான் எப்பொழுதுமிருக்க எனக்கு சுதந்திரமிருக்கவும், உன்னிடத்தில் எனக்கு களங்கமற்றதும், உண்மையானதுமான ஆநந்த பக்தியிருக்கவும் அருள்புரிவாயாக!' என்று பிரார்த்திப்பான்.

பற்றுதலின்றி கர்மம் செய்வது மிக்க கடினம். நமது சாஸ்திரங்களிற் கூறியிருக்கிறபடி எல்லாக் கர்மங்களையும் செய்வது இக்கலியுகத்தில் மிகுந்த கடினம். இக்கலியுகத்தில் உயிர் அன்னத்தினால் நிலைத்திருக்கிறது. தர்மமும், கர்மமும் செய்ய அவர்களுக்குச் சாவகாசம் கிடையாது. ஸம்ஸாரமாகிய கொடிய ஜ்வரத்தினால் பீடிக்கப்படும் வியாதிஸ்தனுக்கு, பூர்வ வழக்கப்படி நாட்டு வைத்தியனுடைய மெதுவான சிகிச்சை செய்தால் நோயாளிக்குக்கதியுமிராது. ஜனங்களுடைய ஆயுள் சொற்பம். ஜ்வரமோ சில மணி நேரத்தில் சாகடித்துவிடும். தற்காலத்து ஜ்வரத்துக்கு மருந்து, டாக்டர் குப்தாவின் ஜ்வரஹரி. இது உடனே பலன் தரும்.

ஆம், இக்கலியுகத்தில் கடவுளை அடைவதற்கு ஒரே வழியானது அவனிடம் அன்பு செலுத்தி பக்தியோடிருப்பதாலும், அவனை நினைந்துருகி பிரார்த்தித்து அவனது அனந்த கல்யாண குணங்களையும் திவ்வியத் திருநாமங்களையும் புகழ்ந்து பாடுதலாலுமே.

(கேசவ் முதலான பிரம்ம ஸமாஜத்தவர்களை நோக்கி):—உங்களுடைய வழியும் பக்தியோகமும், ஆத்மபரித்யாகமுமேயாம். உங்களைப்போல் பகவந் நாமத்தைப் பாடுகிறவர்கள் பகவத் கிருபைக்குப் பாத்திரராவார்கள். உங்களுடைய வழி தெளிவாயும், யுக்திக்கனுஸரணையாயுமிருக்கிறது. அஹங்காரத்தை உங்களுக்கு உதறித்தள்ள முடியாது. ஆகையால், "பிரம்மம் ஒன்றே நிஜம்; உலகம் கனவுபோல் பொய்" என்று நம்பும் வேதாந்திகளைப்போல் சொல்வது உங்களுக்குத் தகைமையன்று. நீங்கள் வேதாந்திகளல்லர்; பக்தர்கள். நீங்கள் தெய்வத்தை நம்புகிறீர்கள். அதுவே சரி. இந்த வழியிலேயே செல்லுங்கள். கடவுளுக்காக மனமுருகி இவ்வழியில் சென்றால் ஈசுவரனை உண்மையாகக் காண்பீர்கள்.

## அத்தியாயம்—5

### ஒரு சிஷ்யனுடைய வீட்டில்

கப்பல் கல்கத்தாவையடைய, யாவரும் கப்பலை விட்டிறங்குவதற்குத் தயார் செய்துகொள்ளுகிறார்கள். அறையைவிட்டு வந்ததும், புண்ணிய கங்கா நதியையும், அதன் கரையையும் பூர்ண சந்திரன் தன் இனிய கிரணங்களால் பிரகாசிப்பித்ததைக் கண்டார்கள்.

பகவான், ம— உட்பட இரண்டு மூன்று சிஷ்யர்களோடு, கரையில் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்த வண்டியில் ஏறினார். கேசவஸேனருடைய மருமகனான நந்தலால் என்பவரும் வண்டியிலேறினார். அவர் பகவானுடன் சிறிது தூரம் போகவிரும்புகிறார்.

வண்டியில் யாவரும் ஏறி உட்கார்ந்ததும், பகவான் 'அவன் எங்கே' என்று கேசவரைக் குறித்துக் கேட்டார். சில நிமிஷத்தில் கேசவர் சிரித்துக்கொண்டு, 'யாரெல்லாம் கூடப்போகிறார்கள் ?' என்றார். கிடைத்த மறுமொழியினால் திருப்தியடைந்து, பகவானுக்கெதிரே கீழே தரையில் விழுந்து நமஸ்கரிக்க, பகவானும், அன்புடன் அவரிடம் விடைபெற்றுக்கொண்டார்.

வண்டி புறப்பட்டது. அவ்விடம் ஆங்கிலேயர்கள் வசிக்குமிடம் ; நன்றாய் ஜலம் தெளிக்கப்பட்ட அழகிய தெருக்கள், இரு பக்கங்களிலும் அழகிய மாளிகைகளையுடைத்தாயிருந்தன. அன்று பௌர்ணமி. அவ்வழகிய அரண்மனைபோன்ற கட்டிடங்கள், மிருதுவும் நிர்மலமுமான சந்திரிகையில் உறங்குவதுபோல் காணப்பட்டன. வாசல்களில் வாயு தீபங்கள் (Gaslights) வைக்கப்பட்டிருந்தன ; உள்ளே அறைகளெல்லாம் தீபங்களால் பிரகாசித்துக்கொண்டிருந்தன. இனிய சங்கீதத்தின் சப்தம் காதிற்கெட்டுகின்றது ; ஐரோப்பிய ஸ்திரீகள் பியானோ வாத்தியத்துடன் ஒத்துப் பாடிக்கொண்டிருக்கிறார்கள்போலிருக்கிறது.

வண்டிபோய்க்கொண்டிருக்கும்பொழுது பகவான் ஆனந்த பரிதராயிருந்தார். திடீரென்று அவர், "எனக்கு தாகமாயிருக்கிறது ; என் செய்வது?" என்றார். நந்தலால் இந்தியா கிளப்பிற்கெதிரில் வண்டியை நிறுத்தச் சொல்லி, ஜலம் கொண்டு வருவதற்காக மாடியின்மீது ஏறிச் சென்றார். ஒரு கண்ணாடி டம்ளரில் ஜலம் கொண்டுவர, பகவான் புன்னகையுடன் "இந்த டம்ளர் நன்றாய்க் கழுவப்பட்டதா ?" எனக் கேட்டார், நந்தலால், "ஆம்" என்று விடையளிக்க, பகவான் டம்ளரிலிருந்து சாப்பிட்டார்.

பகவான் குழந்தைபோன்ற சுத்த சுபாவத்துடனிருந்தார், இருபக்கங்களிலுமிருக்கும் அனேகப் பொருள்களைப் பார்ப்பதற்காக உற்சாகத்துடன் தலையை முன்னிட்டுக்கொண்டு உற்று நோக்கினார். மனிதர், மிருகங்கள், வண்டிகள், வீடுகள், சந்திரிகை, விளக்குகளால் பிரகாசிக்கும் தெருக்கள் முதலியவைகளைப் பார்ப்பதில் அவருக்குண்டான ஆனந்தத்திற்களவில்லை !

நந்தலால் கொலுத்தோலா வந்ததும் இறங்கினார். வண்டி ஸுரேசமித்திரருடைய வீட்டு வாசலில் வந்து நின்றது. ஸுரேசர் பகவானிடம் மிகவும் பக்தியுடையவர் ; ஆனால், அவர் இப்பொழுது வீட்டிலில்லை. அவர் காங்குர்கச்சியில், தான் புதிதாக வாங்கியிருக்கும் தோட்டத்திற்குப் போயிருந்தார். அவருடைய ஜனங்கள் ஓரறையைத் திறந்து, அவர்களை உட்காரும்படியாக அழைத்தார்கள்.



வண்டி வாடகை கொடுக்கவேண்டும். யார் கொடுப்பது ? ஸுரேசர் வீட்டிலிருந்தால் அவர் கொடுப்பார். பகவான் ஒரு சிஷ்யனைப் பார்த்து, "இவ்வீட்டுப்பெண்டுகளிடம் வண்டி வாடகை கொடுக்கும்படியாகக் கேள். அவர்களின் யஜமானர்களும், பிரபுக்களும் நம்மிடம் வருவது வழக்கம் என்பதையவர்கள் நன்கறிந்திருக்கலாமே." என்றார். (சிரிப்பு.)

நரேந்திரன் (விவேகானந்தர்) அருகில்தான் வசிக்கிறார் ; ஆகையால் பகவான் அவருக்குச்சொல்லியனுப்பினார். இதற்குள் அவ்வீட்டிலுள்ளவர்கள் அவரை மாடியின் கூடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். தரையின்மீது பாய் விரிக்கப்பட்டு, அதில் கம்பளமும், வெள்ளைத்துப்பட்டியும் விரிக்கப்பட்டிருந்தன. மூன்று நான்கு திண்டுகளும் போடப்பட்டிருந்தன. ஸகலமதங்களுடைய ஸமரஸத்தைக்காண்பிப்பதாகக் கருதி ஸுரேசரால் எழுதுவிக்கப்பட்ட அழகிய சித்திரப்படமொன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அந்தப்படத்தில், ஹிந்துமதம், மஹம்மதியமதம், புத்தமதம், கிருஸ்துமதம், இவைகளும், இவற்றின் பிரிவினைகளும் கடவுளாகிய ஒரே லக்ஷியத்தையே நாடிச்செல்லுகின்றன என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கேசவருக்குசொல்வதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

நரேந்திரன் வந்தபொழுது பகவான் புன்னகையுடன் பேசுகிறார். அவருடைய ஆனந்தமானது இருமடங்கு அதிகரித்தது.

அவர் நரேந்திரனைப்பார்த்து புன்சிரிப்புடன், "நாங்கள் கேசவஸேனருடன் வெகு உல்லாஸமாய்க்கப்பலில் வந்தோம். விஜயனும் வந்திருந்தான். (ம—வைச்சுட்டிக்காட்டி) நீ ம—வைக்கேள் : தாயும் மகளும் செவ்வாய்க்கிழமை விரதம் தனித்தனியே அனுஷ்டிப்பதைப்பற்றியும், இவ்வுலகில் ஈசுவரனுடைய திருவிளையாடலானது, ஜடிலகுடிலர்களின் தடையில்லாவிடில் போஷணையின்றி மங்குமென்றும், நான் எவ்விதம் கேசவனுக்கும், விஜயனுக்கும் சொன்னேன் என்று கேள்" என்று சொன்னார்.

(ம—வைப்பார்த்து) ம—அப்படியல்லவா ? எனக்கேட்க, ம— ஆம் ஸ்வாமி ! அப்படியே என்றான்.

அப்பொழுது வெகு நேரமாய்விட்டது. ஸுரேசர் இன்னும் வரவில்லை. பகவான் தக்ஷிணேசுவரர் ஆலயத்திற்குத் திரும்பிப்போகவேண்டும். இப்பொழுது மணி பத்தரையாய்விட்டது. ஆதலால் அவர் ஆலயத்திற்குப்போவதற்காகப் புறப்பட்டார்.

வீதிகளெல்லாம் சந்திரிகையில் முழுகியிருந்தன. வண்டி வாசலில் தயாராகவிருந்தது. பகவான்வண்டியிலேறினார். நரேந்திரன், ம—இவ்விருவரும் பகவானை வணங்கி, விடைபெற்று தங்கள் தங்கள் வீடு சென்றார்கள்.

# ஆசாபாசம்.

"உத்தமமான மோக்ஷத்தை யடைந்த மஹாத்மாக்கள், என்னையே யடைந்தவர்களாய், அநித்யமானதும் துக்கத்திற்கு இருப்பிடமானதுமான பிறப்பைத் திரும்பவு மடைகிறதில்லை" என்றருளியிருக்கின்றார் பகவான் கீதாசாரியர்.

இதற்கு மாறாக, வாழ்க்கைப் பயனை உணராத ஜனங்கள், இவ்வுலகின்கண், மண், பெண், பொன் என்னும் முப்பிரியாலாகிய ஆசையென்னும் கயிற்றால் கட்டப்பட்டவர்களாய், வீடு, மனைவி, மக்கள் என்பவற்றையே போற்றி, தேகம் ஸ்வாதீனமற்றும், வியாதிகளாலடிக்கடி பீடிக்கப்பட்டும், மனம் ஒரு நிலையில் நில்லாமல் கெட்ட வாஸனைகளால் கவரப்பட்டும், இறப்பதற்கே பிறந்தும், மறுபடி பிறந்து துக்கங்களை யனுபவிப்பதற்கே இறந்தும், வேம்பின் புழு வேம்பன்றி மற்றொன்றுண்ணாதது போல, இந்த துக்கம் நிறைந்த ஸம்ஸாரக் கடலிலேயே கிடந்துழல்கின்றனர். இவ்வாறுள்ள ஜீவாத்மாக்களையும் கருணா நிதியாகிய பரமாத்மா தகுந்த சமயத்தில் துக்கக் கடலிலாழ்ந்து மூழ்கிப் போகாவண்ணம் குருமூர்த்தமாய் எழுந்தருளித் தடுத்தாட் கொள்கின்றனர். இதனுண்மையை விளக்கக் கீழே ஓர் கதை கூறுவாம்.—

புண்ணியம் தழைக்கும் இப்பரத கண்டத்தில், வட இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்தில் முன்னொரு காலம் ஒருவன் அறுசுவை அமைக்கப்பெற்ற தின்பண்டங்களைச் செய்துவிற்று ஜீவனம் செய்து வந்தான். அவன் வீடும், வீட்டுக்கடுத்த பெயர்பெற்ற கடையும், கிராமத்திற்குச் சற்று விலகியிருந்தன. கடையில் வரும் லாபத்தில் தன் வீட்டுச் செலவுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு மீதியை ஒருவரும் அறியாத விதம், தினம் தினம் சேகரித்து வந்தான். அவன் குடும்பம், அவன் மனைவியும் இரண்டு சிறிய பிள்ளைகளும்தான்.

ஒருநாள் பகலில் அவன் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்த பொழுது, ஒரு கிழிந்த ஆடையைத் தரித்தவரும், நல்ல தேஜஸுடையவருமான ஒரு ஸன்னியாஸி, வெயிலினின்றும் தங்கி இளைப்பாறுவதற்காக அங்கே வந்தார். சிறிது சிரமம் தீர்ந்ததன்பின் தம் தாகத்தைத் தணிப்பதற்கு நல்ல ஜலம் கேட்க, அந்தக் கடைக்காரன் ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரும், கொஞ்சம் தித்திப்பான



பக்ஷணமும் கொடுத்தான். பசியுந்தாகமும் அடங்கினவுடன் அந்தச் சாதுவானவர் அவனைப் பார்த்து, தன்னுடைய ஆடை மிகவும் கிழிந்திருப்பதனால் கொசு உபத்திரவிக்க, தமக்கு இரவில் தூக்கமே யில்லையென்று சொல்லி, அதைச் செம்மையாக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டார். நல்ல மனிதனான அந்த வியாபாரி, மூன்றுமணி நேரம் அவ்வாடையோடு பாடுபட்டுக் கடைசியில் அதைத் தரிக்கத் தக்கதாகச் செய்து கொடுத்தான். அன்றிரவு அவர் நன்றாய்த் தூங்கினார்.

மறுநாட் காலையில் அந்த மஹான், அவன் கடையிலிருந்தபோது அவன்முன் வந்தார். இச்சமயத்தில் அவனிடத்தில் ஒன்றும் யாசிக்கவில்லை. ஆனால் அவன் தமக்கு முன்பு செய்த நன்றிக்குப் பிரதிசெய்ய நினைத்து, துறவி யாதலின் அவனுக்குத் திரவியத்தைக் கொடுக்க மனமில்லாமல் அதனினும் அதிக மேலான இன்பத்தைக் கொடுக்கக் கருதினார். மஹா தத்துவங்களை உணர்ந்த ஞானியானபடியால் அவரால் ஆகாதது என்ன வுண்டு?

அவரைப்போன்ற சாதுக்கள் இவ்வுலகத்தில் பற்றற்றவராயிருந்தும், மாயையினால் மூடப்பட்ட ஜனங்களுக்கு உதவி புரிவதற்கும், நன்மார்க்கத்தைப் போதிப்பதற்கும் சஞ்சரிக்கிறார்கள். அந்த வியாபாரிக்கு உலக வாழ்க்கையில் வாஞ்சை அதிகரித்திருப்பதையும் கடவுளை வந்தனஞ் செய்து மேன்மையான பதவியை அடையவேண்டு மென்கிற எண்ணம் அவனுக்குச் சிறிதும் இல்லாதிருப்பதையும் அவர் கண்டார். அவர் அவன்மேல் கருணை கூர்ந்து அளவற்ற பதத்தைக் கொடுக்கும் மோக்ஷ லோகத்திற்கு வருவாயா வென்று அவனைக் கேட்க, அவன் சிறிதுநேரம் தயங்கி ஆலோசித்து, "ஸ்வாமி, யார்தான் அந்த இடத்திற்குப் போக விரும்பார்? மனிதர்கள் இவ்வுலகத்தில் செல்வத்தையும், புகழையும் துறந்து, இந்த ஜன்மம் நீங்கியபின் அந்த உயர்ந்த பதவியை யடைவதற்காகவே பல்லாண்டு வனத்தில் தபஸிகளாய் திரிகிறார்களல்லவா? ஹே கிருபாகடாக்ஷமுள்ள முனிசிரேஷ்டரே! உம்முடைய உபகாரம் ஈடற்றதா யிருக்கிறது. இதோ பாருங்கள், என்னுடைய இரண்டு சிறிய பிள்ளைகளை! அவர்களுக்கு இங்கே என்னைத் தவிர கதி ஒருவருமில்லை. இப்பொழுதே இவர்களை அனாதையாய் விட்டு விட்டுத் தங்களுடன் வருவேனானால் யார் இவர்களை ரக்ஷிப்பார்கள்? ஆகையால், தாங்கள் தயவுசெய்து எட்டுவருஷங் கழித்து வந்தால் தங்களுடன் வருவேன். அதற்குள் இவர்களுக்குப் பொருள் தேடத் திறமை வந்துவிடும். இதுவே எனக்கு ஒரு பெருபகாரம்" என்றான். இதைக் கேட்டவுடன் சாது, அவனுக்குப் பிள்ளைகளி

னிடத்தில் பற்று அதிகமாயிருப்பதைக் கண்டாரே யல்லது, கடவுளிடத்தாசையாவது, மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடையவேண்டுமென்கிற விருப்பத்தைபாவது அவனிடத்தில் சிறிதும் கண்டாரில்லை. ஆனாலும் அவன் விருப்பத்திற்கிசைய தான் எட்டு வருடம் கழிந்தபின் வருவதாகச் சொன்னார்.

குறித்த காலத்தில் அந்தச் சந்நியாஸி திரும்பிவந்து அவனைப் பார்த்ததில், அந்தக் கடைக்காரன் மிக விசனத்துடன் தனக்கு இடையில் நேரிட்ட கஷ்டங்களையும், தன் பிள்ளைகளின் துர்நடத்தையையும், தான் அருமையாகத் தேடிவைத்த பொருள்களை அவர்கள் துன்மார்க்கத்தில் செலவழித்ததையும் சொல்லி, தன் பிள்ளைகளை நல்ல வழியில் கொண்டுவர வேறொரு மார்க்கம் தோன்றாமையால் அவர்களுக்குக் கலியாணம் செய்தால் குடும்பபாரம் உறைத்து நல்ல வழியில் திரும்புவார்கள், என்றும், ஆகையால், தான் அவர்களுக்கு விவாகம் செய்யப் போவதாகவும் சொல்லி, இந்த சுப காரியத்தை நிறைவேற்ற பணம் அவசியம் வேண்டியதால் இன்னும் ஐந்து வருஷம் கெடு கொடுக்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

இதை யெல்லாம் பொறுத்துக் கேட்ட அந்த முனிசிரேஷ்டர், இவனுக்கு நாளுக்கு நாள் குடும்பத்தில் பற்று அதிகரித்திருப்பதைக் கண்டு, அவன்மீது இரக்கங்கொண்டு அவனிஷ்டப்படி திரும்பி வருவதாகச் சொன்னார்.

ஐந்து வருஷங்களும் சீக்கிரம் சென்றன. சொன்ன கெடுவில் மஹானும் அந்தக் கடை முன் தோன்றினார். அந்தக் கடையோ ஒரு குடிசையாய் மாறி, அதில்அவனுடைய மூத்த பையன் சொல்ப விலையுள்ள பண்டங்களை ஏழைகளுக்கு விற்பதைப் பார்த்தார். அவனை நெருங்கி, அவனுடைய தகப்பனார் எங்கே யென்று விசாரித்ததில், அந்தப் பையன் "சுவாமி! எங்கள் பிதா எங்களைத் துக்க சாகரத்தில் தள்ளிவிட்டுக் காலஞ்சென்று நாலு வருஷங்களாயின. நாங்கள் வறுமையால் வாடுகிறோம். முன்னிருந்த நேர்த்தியான கடை இப்பொழுதில்லை. நானே சில்லரைச் சாமான்களை விற்கிறேன். அதோ பாருங்கள் என்னுடைய தம்பியை; அவன் உழுது கொண்டிருக்கிறான்" என்றான். இதையெல்லாம் மௌனமாய்க் கேட்ட அத்துறவி, முக்கால முணர்ந்தவராகையால் அந்த மனிதன் தன் இரண்டாவது குமாரனால் வயலில் ஓட்டப்பட்ட எருதுகளில் ஒன்றாய்ப் பிறந்திருக்கிறான் என்பதை யறிந்து, எப்பொழுது கலப்பையினின்றும் எருதுகளை விடுவிப்பார்கள் என்று நன் பகல்வரைக்கும் காத்திருந்து, அன்டையில்ஒருவருமில்லாத தருணத்தில்



மாடுகள் கட்டியிருக்கும் கொட்டைகைக்குச் சென்று, தன் கையிலுள்ள கலசத்திலிருந்து சிறிது மந்திர தீர்த்தத்தை அம்மாட்டின்மீது தெளிக்கவே, அதற்குப் பூர்வஞானம் உதித்தது. மஹானுக்கும் தனக்கும் நேர்ந்த நிபந்தனையை அம்மாடு நினைத்து, தலை குனிந்து, " ஸ்வாமி! நீர் குறித்த தினத்தில் வந்தீர். தங்களுக்கு மறைவாயிருக்கும் பொருள் ஒன்றுமில்லை. எப்பக்கமும் வறுமை சூழ்ந்திருப்பதை யறியலாம். நான் பாடுபட்டுத் தேடிவைத்த பொருள் அனைத்தையும் இம்மூடர்களாகிய என் பிள்ளைகள் வாரிச் செலவிட்டார்கள். இன்னும் இரண்டொரு வருஷத்தில் இவர்கள் சாப்பிடுவதற்கு வழியில்லாமல் தடுமாறுவார்களென்பதில் ஸந்தேகமில்லை. சுவாமி, இச்சமயத்தில் இவர்கள் பொருட்டுச் சில காலம் உழுவதற்குதவி ஆபத்தினின்றும் இவர்களை நீக்க நினைக்கிறேன்" என்றது.

இதைக்கேட்ட அந்த ஸந்நியாஸி, இவனுக்கு எவ்வளவே போதித்தும் பற்று அதிகமா யிருப்பதையும், அதை விட்டுவிட மனம் திடமாயில்லாததையும் தெரிந்து அவன்மீது கருணைகூர்ந்து சில வருஷம் சென்றபின் வருவதாகச் சொன்னார்.

மறுபடியும் அக்கடையைத் தேடினார். கடையை அவர் காணாமல் வீட்டிற்போய்த் தேடவும் அங்கு பசியால் இளைத்திருந்த ஒரு நாய் அவரை எதிர்த்தது. உடனே வீட்டிற்குள்ளிருந்த ஜனங்களைக் கூப்பிடவே பெரிய பிள்ளை வெளியில் வந்தான். குடும்பத்தின் யோக க்ஷேமத்தையும் அம்மாட்டைப் பற்றியும் விசாரித்ததில், அந்தப்பிள்ளை "ஸ்வாமி! மாடு இறந்து வருஷம் ஒன்றாயிற்று. ஐயோ! எவ்வளவு நல்ல பிராணி. புஜிக்கும் ஆகாரமோ கொஞ்சம். அதுகாலை முதல் மாலைவரை நன்றாய் வருந்தி உழைக்கும். அதற்கொன எருது கிடைப்பதரிது." என்றான். இதைக்கேட்டதும் அவர் வரவைக்கண்டு குலைத்த நாய் வியாபாரி யென்றும், வீட்டில் பாக்கியிருந்த சொத்துக்களை வெகு விசுவாஸத்தோடு பிறர் ஒரு துரும்பு கூட எடுக்கவொட்டாமல் காத்துக்கொண்டிருப்பதையும் அறிந்தார்.

முற்பிறப்பில் ஏற்பட்ட நிபந்தனையை ஞாபகப்படுத்தும் பொருட்டு அந்நாய்க்குப் பூர்வஞானம் தோன்றும் வண்ணம் செய்வித்தார். உடனே அந்நாய் அவர் பாதத்தில் விழுந்து தனக்கு நேரிட்ட துக்கங்கள் அனைத்தையுஞ் சொல்லியழுது, " ஸ்வாமி என்னுடைய அதிருஷ்டஹீனர்களாகிய பிள்ளைகளுக்காக நான் தேடிவைத்த சொத்தில் மிஞ்சியதை, சுற்றுப்பக்கத்திலிருக்கும் திருடர்கள், அபகரியாமலிருக்கும் பொருட்டுச் சிலவருஷம் இங்கேயே திரிய தயவு செய்யவேண்டும்." என்று சொன்னான்.

அவனோடு வாதாடுவது வீண் என்று நினைத்து மகானும் அவன் கேட்டுக் கொண்ட பிரகாரம் திரும்பிவருவதாகச்சொன்னார்.

இன்னும் ஒரு முறை அவ்விடத்தை நாடிச் சென்றார். அங்கே கடையைக்காணாமல் புதிதாய் அமைக்கப்பட்ட இரண்டு சிறுகுடிசைகளைக்கண்டு பக்கத்தில் விசாரித்ததில் இரண்டு சகோதரர்களும் தாயபாகத்திற்காக வழக்காடி பொருள் அனைத்தும் இழந்தார்களென்று தெரிந்து, மெதுவாய்ப்பிள்ளைகள் வசிக்கும் ஒரு வீட்டுக்குள் புகுந்தார். அங்கே நாயைக்காணவில்லை; அவ்வடிகள் யோகசித்தி பெற்றவராகையால், அந்தகடைக்காரன், ஒருவரும் அறியாமல் பலகாலமாய்ப் பணத்தைச்சேகரித்துப் போட்டு வைத்திருந்த ஒரு பித்தளைக்குடத்தைச் சுற்றி வீட்டினுள்ளே ஒரு சுரங்கத்தில் பாம்பாயிருந்ததை அறிந்தார். அப்பொழுது அப்பிள்ளைகளிருவரும் சண்டை போட்டுக்கொண்டு வீட்டினின்று வெளியே வந்தார்கள்.

இச்சாதுவைப் பார்த்து அவர்களுள் பெரியவன் "அடா தம்பி, இந்தப்பாவியாகிய நாடோடி எப்பொழுது நம் வீட்டில் காலை வைத்தானோ அன்று தொட்டு நமக்குத்தரித்திரம் மேலிட்டு வருந்துகிறோம்" என்று சொல்லி இருவரும் அவரைப்பார்த்து "ஏ துஷ்டா, உடனே எங்கள்வீட்டை நாடாமல் ஓடிப்போ! இல்லாவிடில் இன்று உன் ஆயுள் முடியும்!" என்று கூவினார்கள். அந்தத் தபசி சிறிதும் அஞ்சாராகி சாந்தமாய் அவர்களைப்பார்த்து "என் நண்பர்களே, அவ்வளவு வறுமை உங்களைப் பீடித்ததா? உங்களுக்குப் பணக்குறை மேலிட்டிருக்கிறதுபோல் தோன்றுகின்றது. அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன். உங்கள் தகப்பனார் வழக்கமாய்த் தூங்கும் அறையிலிருக்குஞ் சுரங்கத்தில் புதையலிருக்கிறது. அதையெடுத்து இருவரும் பங்கிட்டு உங்கள் கஷ்டத்தைத்தீர்த்துக்கொள்ளுங்கள்" என்றார். இதைக்கேட்டமாத்திரத்தில் அதிக சந்தோஷத்துடன் அறைக்குட் சென்று சுரங்கத்தைத்தோண்டவும், ஒரு ஸர்ப்பம் இவர்களைச் சீறிவெளியேவந்தது. அவர்கள் பயந்து ஓடி, வெளியே வந்து, இந்தச்சாதுவானவர் ஒரு பெரிய மாயாவி யென்றும், போக்கிரி யென்றும், தங்களைப் பாம்புக்குப் பலிகொடுக்க நினைத்தாரென்று மெண்ணி, உடனே அவரைத்தண்டக்கால் புடைக்க எத்தனித்தார்கள். இவர்கள் கருத்தையறிந்த சாது உடனே அவர்களைப்பார்த்து, "என்னைப்பொய்யனென்று நினைக்கிறீர்கள் போலும். அந்தக்குடத்தின் மேலிருக்கும் துருப்பிடித்த மூடியைப் பாருங்கள் அதில் நீங்கள் இச்சிக்கும் சொத்து இருக்கிறது. சர்ப்பத்தைக் கொன்று எடுத்துக்கொள்ளுங்கள்." என்றார். இதைக் கேட்டமாத்திரம் சற்றுதூரத்தினின்று துவாரத்தையுற்றுப் பார்த்ததில் அழுக்குப் படிந்த மூடியைக்கண்டதும் ஸந்நியாசியைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்தை விட்டுத் தங்கள் முழுக் கோபத்தையும் பாம்பின்மேல் தாக்கி, அதைக் கொன்றுவிட்டார்கள். இவ்வுலகத்தில் கடைசியாயிருந்த பற்றினின்றும் விடுபட்ட அப்பாம்பின் ஜீவன், சந்நியாசியைப் பின்தொடர்ந்து வெகுகாலம் அவருக்குத் தொண்டு புரிந்து, முடிவில் அவருடைய கருணையால் மோக்ஷபதவியையடைந்தது.



அற்றது பற்றெனில் உற்றது வீடு

# சிருஷ்டி ஜாலம்.

ஸ்தாவர ராக்ஷஸன்: தென்னாபிரிகாவைச் சார்ந்த மடகாஸ்கர் என்னும் தீவின் சில பாகங்களில், மனிதரையும், மிருகங்களையும் கொன்று தின்னும் ஓர் வகை மரமுள்ளதாய்ச் செய்திவருகின்றது. தேசசஞ்சாரம் போயிருந்த ஜர்மானிய தாவர சாஸ்திரி ஒருவர் இதைத் தான் நேரில் கண்டதாய் ஒரு பத்திரிகையில் விரிவாயெழுதியிருக்கிறார். அத்தீவிலுள்ள ஜனங்கள் இதை ஸ்தாவர ரூபமாயுள்ள ஓர் அரக்கன் என்று நம்பி, தாங்கள் தகுந்த பலிகொடாவிடின் தங்களெல்லோருக்கும் ஆபத்து விளையும் என்றெண்ணங்கொண்டவர்களாய் அடிக்கடி சிறுவர்களையும் சிறுமிகளையும் இக்கொடிய மரத்துக் கிரையாக்குகின்றனராம். இம்மரம் பார்வைக்கு அழகாயும், குற்றமற்றதாயும், விசிறி வாழையளவுள்ளதாயும், கைகள் போன்ற கிளைகளைத் தரைமட்டம் வரை தொங்கவிட்டுக்கொண்டும் இருக்கிறதாம். மேலே விரிந்து குழிவாயுள்ள விடத்தில் ஓர் விதமான ரஸம் தேங்குகின்றதாம். இது மதுர ரஸம் வாய்ந்த விஷம். இதைப் பருக வரும் பக்ஷிகள் மயக்கமடைந்து இம்மரத்துக் கிரையாகின்றன. மிக்க சாந்தமான வெளிப்பார்வையுடைய இம்மரம் அருகில் வந்து யாராவது அதைப் பரிசிக்க நேர்ந்தால், உடனே வெறிகொண்டதுபோல் நாற்புறமும் தன் கைகள்போன்ற கிளைகளைத் தூக்கிச்சுற்றி, பக்கத்திலுள்ளவற்றை இறுக்கக் கட்டிப் பிடிக்கின்றது. இந்தக் கிளைகளின் முன்புறம் மாசற்றதாயினும், பின்புறம் ஈட்டி போன்ற முட்கள் நிறைந்திருக்கின்றன. இரையாயகப்பட்ட ஜந்துவின் தேகத்தில் இம்முட்கள் சென்று உதிரத்தையும் மாம்ஸத்தையும் உண்டு உயிரைக் கவர்கின்றன.

* * *

வயிரம்: வயிரம் கரியின் ரூபபேத மென்பதைப் பலரும் அறிவர். இதை முதலிலறிந்த சில சாஸ்திர வித்பன்னர்கள் வெகுகாலமாய்க் கரியை வயிரமாக்க முயன்று வந்திருக்கின்றனர். இப்

பொழுதே ஜர்மனியில் இம்முயற்சி பயன் பெற்றதாம். இயற்கையில் அகப்படுவது போன்ற பெரிய வயிரங்கள் ரஸாயன முறையில் செய்யப் பட்டிருக்கின்றனவாம். கூடிய சீக்கிரத்தில் வெளிநாடுகளுக்கு வருமெனக் கேள்வி.

* * *

தந்தியில் போட்டகிராப்: சமாசாரங்கள் தந்தியில் அனுப்புவதுபோல், ஓரிடத்தில் காணப்படும் காட்சிகளையும் ஆயிரம் மைல்களுக் கப்பாற்பட்ட இதரவிடங்களில் ஏக காலத்தில் தந்தி மூலமாய்க் காணும்படி செய்யப் புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணப் போட்டகிராப் கண்ணாடியில் படம் பிடித்து அதன்மேல் ஒளி தாக்கும்படி செய்து,பின் அதன்வழி வெளிவரும் ஒளியை 'ஸெலினியம்' என்னும் ஒரு உலோகத்தின்மேல் படும்படி செய்தால், 'ஸெனியம் ஸெல்' என்னும் கருவியினுற்பத்தியாகும் மின்சாரசக்தி, ஒளிக்கனு குணமான மாறுபாடுகளையடைந்து, 'டெலி போனில்' சப்தம் பிரதிபலிப்பது போல், வெகுதூரத்துக் கப்பால் மின்சார சக்தியால் ஒளியைப் பிரதிபலிக்கச் செய்து, அங்கே ஒரு போட்டகிராப் கண்ணாடி வைக்கப்பட்டால் அதில் அனுப்பப்பட்ட போட்டகிராப் பதியும்படி செய்கின்றது. இதெல்லாம் ஒருக்ஷண நேரத்துக்குள் நடக்கின்றது.

* * *

பைசாச உலகு:—மானிடர் இறந்த பின்னர் ஸூக்ஷ்ம சரீரங்களுடையவர்களென்றும், இவர்களுக்கு மனோசக்தியுண்டென்றும் சில மேனாட்டு மனோதத்துவ சாஸ்திரிகள் நம்புகின்றனர். இறந்த பின்னரும் பலர் தங்கள் எண்ணங்களை உயிரோடிருப் போர்க்குத் தெரிவிக்க முயலுவதாய் இவர்கள் கூறுகின்றனர். இதுவரை 'மீடியம்' என்னப்படும் சில ஸ்திரீகள் மூலமாயே பெரும்பாலும் இதனுண்மை பரீக்ஷிக்கப்பட்டது. இப்பொழுது சரீரமற்ற இந்த பூதர்களுடைய எண்ணங்களை யுணரக்கூடிய ஓர் அற்புதமான இயந்திரத்தை, 'எடிஸன்' என்னும் ஓர் அமெரிக்க பௌதிக சாஸ்திரி செய்து வருகின்றனராம். இவரே 'கிராம போன்' கண்டு பிடித்தவர். இந்த யந்திரம் வந்துவிட்டால் இறந்துபோன நம் தாய் தகப்பன்மார்களுடனும், உறவினர்களுடனும் பேசி, அவர்கள் மனோபாவங்களை யுணரலாம் போலும்!



## வர்த்தமானம்.

சென்ற நவம்பர்மீ 23உ ஸ்ரீமதி ஸுதீராதேவி காசி ஸ்ரீராமகிருஷ்ண ஸேவாசிரமத்தில் தேகவியோக மடைந்த செய்தியை யறிந்த ஜனங்கள் மிக்கத் துயருற்றனர். இவ்வுலக வாழ்க்கையில் இம்மாதுசிரோன்மணி 'பரோபகாரார்த்தமிதம் சரீரம்' என்னும் ஆன்றோர் மொழிக்கு ஓர் நிதர்சனமாய் விளங்கினர். கல்கத்தாவிலுள்ள 'ஸ்ரீ நிவேதிதா பெண் பாடசாலைக்குத் தலைவியாகவும், ஸ்ரீ நிவேதிதா காலஞ்சென்ற பின்னர் அம்மாது கல்வி விஷயமாய்ச் செய்து வந்த முயற்சிகளைக் கைக்கொண்டு, ஏற்பட்ட வேலைகளனைத்தையும் ஸ்ரீமதி கிரிஸ்தியானுவுடன் இம்மாதே பூர்த்தி செய்யத் தலைப்பட்டனள்.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமி ஸந்யாஸிகளுக்கு மடம் ஸ்தாபிக்க ஆரம்பித்தபொழுதே ஸந்யாஸினிகளுக்கும் தனி மடங்களேற்படுத்தி, ஸ்திரீகளும் 'ஸேவை, பரித்யாகம்' என்னும் உயர்ந்த லட்சியங்களைக் கைப்பற்றி யொழுக ஸாதனங்களேற்படுத்த வேண்டுமென்று எண்ணங் கொண்டார். இதுவே ஸ்திரீ தர்மங்களைச் சீர்திருத்துவதற்கேற்ற வழியென்பது அவர் கொள்கை. ஆனால் தம் ஜீவிய காலத்தில் இது விஷயத்தில் சிரத்தை கொண்டு, மடத்தின் தலைமை வகிக்குந் திறனுள்ள ஸ்திரீ ஒருவரும் முன் வராததால் அவர் தம் எண்ணத்தை முற்றிலும் நிறைவேற்ற முடியாமற் போயிற்று. எனினும் அவர் கல்கத்தா பாக்பஜாரில் பெண்கல்விப் பாடசாலை யொன்றேற்படுத்தி அதற்குத் தமது சிஷ்யை ஸ்ரீ நிவேதிதா தேவியைத் தலைவியாய் நியமித்தனர்.

ஸ்ரீமதி ஸுதீரா தேவி இப்பாடசாலையில் உபாத்யாயினியாயும், சிஷ்யையாயும் வந்து சேர்ந்தனர். சேர்ந்த நான்கு வருஷங்களுக்குப் பின்னர், இப்பாடசாலையின் பாரம் இவர் தலைக்கே இறங்கிற்று. அதன் முன்னேற்றத்துக்காக ஊக்கங்கொண்டு இடைவிடா துழைக்கலானர். அங்கேயே மாணவர் குருகுல வாஸம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து 'மாத்ரு மந்திரம்' என்னும் இல்லத்தை ஸ்தாபித்தார். இஃதனைத்தும் திவ்ய மாதாவின் அன்பையும் ஆதரவையும் பெறுவதாகி, அவருடைய பரிசீலனையின் கீழ் நடைபெற்று வந்தது. ஸ்ரீமதி ஸுதீரா தேவியின் பக்தியும், உயர்ந்த லட்சியங்களும், காந்தம் ஊசியை யிழுப்பதுபோல், அம்மாதைக்காண நேர்ந்த பெண்களின் மனத்தைக் கவர்ந்து, அவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வந்தன. இம்மாதின் முயற்சியாலும்,

உழைப்பாலும், வங்காள நாட்டில் இதுபோன்ற பெண் பாடசாலைகள் பலவிடங்களில் ஸ்தாபிக்கப் பட்டன. இவ்விடங்களில் பெண்கள் மததத்வங்களை யுணர்ந்து சிறந்த ஆத்ம ஞானத்தின் பெருமையை அறியலாயினர்.

இத்தகைய நற்குண நற்செய்கைகள் வாய்ந்த இம்மாது பிரயாகைக்கு யாத்திரை சென்று திரும்புகையில் காசியை யடுக்கும்பொழுது புகைவண்டி திடீரென அசைந்ததில் கீழே விழ நேர்ந்தது. பின்னர் ஸ்ரீராமகிருஷ்ண ஸேவாசிரமத்துக்குக் கொண்டு போகப்பட்டனர். அங்கே மறுநாள் மஹா ஸமாதியில் ஆழ்ந்து பரஞ்சோதியில் இரண்டறக் கலந்தனர்.

இறக்குந் தருவாயில் இவர் வயது முப்பத்திரண்டே. இவர் தலைமையின் கீழ் நடைபெற்று வந்த பல பாடசாலைகளுக்கும் இஃதோர் மகா நஷ்டம். சர்வேசுவரன் லீலைகளை யாரறிவார்!

*
* *

அமெரிக்கா வேதாந்த ஸங்கம்:—ஸங்கத்தைச் சார்ந்த வொருவர் கீழ் வருமாறு எழுதுகிறார்.—

வழக்கம்போல இவ்வருஷம் ஸான்பிரான்ஸிஸ்கோ வேதாந்த ஸங்கத்தாரில் பதினேழு பெயர்கள், சென்ற ஜூன் மாதத்தில் அந்தோணிமலைச் சார்பிலுள்ள சாந்தி ஆசிரமம் சென்று ஸ்ரீமத் பிரகாசானந்த ஸ்வாமிகளின் ஆதரவைப் பெற்று யோகாப்யாஸம் செய்து வந்தார்கள். பெண்டிர்களை விட அதிகமான ஆடவர் வந்தது இதுவே முதல் தடவை. ஈசுவரப்ரேமையில் முமுக்ஷுக்கள் எளிதில் ஈடுபடும்படி செய்யவல்ல ஸ்வாமிகளை குருவாய்ப் பெற்றது எம் பாக்கியமே. பொருளைச் சேகரிப்பதிலும் இந்திரிய சுகங்களை நாடுவதிலுமே மதிமயங்கிக் கிடக்கும் இந்நாட்டில், வாலிபர்கள், இவைகளை வெறுத்து, ஸ்வாமிகளுடைய உபதேச மொழிகளைச் செவிக்கொண்டு சாசுவத தர்ம நிலையை யறிய முயலுதல் ஓர் நற்குறியாம்.

முதன்முதலில் மனதை ஒரு நிலை நிறுத்தற்கும் தியானம் செய்தற்கும், அதிதீவிரமான வைராக்கியமும் மனோவுறுதியும் அத்யாவசியம். அந்நிலையைப் பெறும்பொழுதுதான், பிறர் நம்மை யறியும் வாற்றுக்கு மாறுபட்டதும், உண்மையானதுமான ஆத்மஞானத்தைப்பெற்று தன்னைத் தானுணர்தல் ஸாத்யமாகும். அப்பொழுதே அகங்கார பாவத்தைக் களைந்து உண்மை ஸ்வரூபத்தை யறிவதில் யோகமார்க்கங்களின் சிறப்பு விளங்கும். அதில் வென்றி னின்றால், நாளுக்குநாள், மனதில் விரிக்கொணா அமைதியும் ஆனந்தமும் நிறைந்து விருத்தியடைந்து நம்மை ஈசுவரனிடம் அழைத்துச் செல்லும்.



முப்புறமும் சிவலிங்க ரூபம் விளங்கப்பெறும் விருக்ஷத்தினடிக்கு தினந்தோறும் நாங்கள் மும்முறை போய் தியானத்திலுட்காருவது வழக்கம். இங்குவரும் ஸ்வாமிகளுடைய மகிமையாலும் பகவந் நாம ஸங்கீர்த்தன கோஷத்தாலும் மேன்மை பெற்ற இந்த சாந்தமான இடத்தில், மனம் ஒரு நிலைப்படுத்தல் மிகவெளிது. ஸ்வாமிகளுடைய கீர்த்தனையில் மனதை நிறுத்தி அரைமணிநேரம் தியானத்திலிருப்போம். பின் ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்ராமிருதம், விவேக சூடாமணி, உபநிஷத்துக்கள், இவைகளை வாசிப்பதும், கடைசியில் பகவந் நாம ஸங்கீர்த்தனத்துடன் சாலைகளுக்குத் திரும்புவதும் வழக்கம்.

இவ்வருஷம் பருவகாலம் மிக்க ரம்யமாயிருந்தது. சமையல் வேலைகளையும் இதரவேலைகளையும் ஸ்வாமிகளுக்குத் திருப்திகரமாய்ச் செய்து, அவருக்கு சுச்ருஷை செய்வதில் மாணவர்கள் ஊக்கங்கொண்டிருந்தமையால், ஸ்வாமிகள் வருஷம்முழுதும் உழைத்தபின் சிறிது சிரமசாந்தியடைந்தனர்.

ஜூன் 19ந் தேதி மிக்கச் சிறந்து விளங்கியது—'துணி ராத்திரி'—என்றும் மறக்கத்தக்கதன்று. அக்னிவலம் வருதலும், ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தலும், ஸ்வாமிகள் 'குரு கீதா' 'உபநிஷத்து' வாசிக்க சிரவணம் செய்தலும், ஸ்திரீகள் பக்திரஸம் வாய்ந்த பாடல்கள் சொல்லக் கேட்டலும், ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளுடைய கிரந்தங்கள் வாசித்தலும், பின்னர் தியானத்தி லாழ்தலும்—அவ்விரவை எல்லா வற்றுள்ளும் மிக்கச் சிறந்த காலமாக்கின.

நடுநிசியில் அக்னியாராதனை முடித்தபின்னர், சிஷ்யர்கள் ஸம்ஸ்கிருத நாமதேயம் பெற்று, பிரணவ மந்திரத்தையும், குருமூர்த்தத்தையும் தியானித்து ஆனந்த பரவசரானார்கள். நாங்களிருந்த குன்று எங்களை ஸ்வர்க்க லோகத்துக்கு உயர்த்துவதாயும், மாசற்ற இரவு எங்களை ஈசுவரஸந்நிதானம் சேர்ப்பிப்பதாயும் எங்கள் மனதில் விளங்கின.

கடைசியாக சிஷ்யர்கள் குரு முன்னிலையில் தங்கள் மனோபாவங்களைச் சிறிது வெளியிட்டனர். அவர்களுடைய பயபக்தியையும் அன்பொழுகும் சொற்களையும் கேட்போர் வன்னெஞ்சராயினும் உருகி பகவத் பிரேமையிலீடுபடுவர்.

இப்பேர்க்கொத்த அமிருதத்தை யெங்களுக் கூட்டுவதற்கு, மிக்க மகிமை வாய்ந்த ஸ்வாமிகளை யாம் பெற்ற பாக்கியமே பாக்கியம்.

சென்ற ஜூன்மீ ஸ்ரீமத் பரமானந்தஸ்வாமிகள், அமெரிகாவில், 'ஸின்சினடி' நகரத்திற்கு நான்கா முறை சென்று 'வேதாந்தம்' 'முமுக்ஷுத்வம்' 'பிறப் பிறப்பு' 'ஐக்ய பாவம்' இது போன்ற பல விஷயங்களைப்பற்றி மிக்க அருமையான பிரஸங்கங்கள் செய்தார். இச்சிறந்த மத விஷயங்களைக் கற்க ஆவல் கொண்டவர்களால் ஓர் ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

* *
*

கல்கத்தா விவேகானந்த ஸங்கம்: இச்சங்கத்தின் கடைசி ரிபோர்ட்டு இங்கு செய்யப்படும் சிறந்த காரியங்களைச் செவ்வையாய்க் காட்டுகிறது. நாற்பத்தொரு மதப்ரஸங்கங்களும் பனிரண்டு மாதமுறை வகுப்புகளும், 37 வாரமுறைக் கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. தவிர ஓர் சிறந்த வாசகசாலையும், பூஜையறையும் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதைச் சேர்ந்த வைத்திய சாலையில் 1,584 பெயர்களுதவி பெற்றனர். முப்பத்தேழு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. பஞ்சம் நிகழ்ந்த இடங்களில் உதவி சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. வருமானம் ரூ. 3171-15-6 செலவு ரூ. 3259-0-9 ஆயிற்று. இத்தர்மத்தை நிலை நிறுத்த சாசுவத நிதியொன்று ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன பகவத் கிருபையால் சீக்கிரமே தேவையான உதவி கிடைக்கு மென்பது திண்ணம்.

* *
*

கல்கத்தாவுக்குத் தெற்கே பவானிபூரில் புதிதாய் ஓர் மடம் ஸ்தாபிக்கப்பட்டது. மடத்திற்கு வீடு ஓர் பக்தரால் கொடுக்கப்பட்டது. சென்ற நவம்பர் 17வ ஸ்ரீமத் சிவானந்தஸ்வாமிகளின் பார்வையின் கீழ், பூஜை, ஹோமம், முதலியன செய்யப்பட்டு ஸுதினம் பக்த கோஷ்டிகளால் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளின் 59-வது பிறந்த நாள் நடைபெறும். இந்த ஜனவரிமீ 30வ யாகும்.

மறுவாரம் ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல் பொதுக்கூட்டம் மயிலாப்பூரில் கூடும்.

---

Printed by Thompson & Co., at the "Minerva" Press
33, Popham's Broadway, Madras.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

" இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு "—திருக்குறள்.

தொகுதி 1 ] ரௌத்திரிஸு மாசிமீ [ பகுதி 2

உ

## கடவுள் வணக்கம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்தெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்தெது மனவாக்கினிற்
றட்டாமனின்றெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

---

அப்பனீயம்மைநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியுநீ,
யொப்புடையமாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ்சுற்றமு
மோருருநீ,
துய்ப்பனவுமுய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந்
துறப்பிப்பாய்நீ,
யிப்பொன்னீயிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீயேறூர்ந்த செல்வ
னீயே,

# குருதேவர் வாக்கியம்.

## தன்னை யுணர்தல்

எனதெனு மெண்ணத் துள்ளே
　　யின்றெனு முண்மை தோன்றும்
இனவொளித் தகைமை கண்டோ
　　னிருவினையு முணர்ந்து கொள்வான்
கனபழி யிதுவென் றோர்வான்
　　கருதிற்புண் ணியமுந் தேர்வான்
மனனிடைச் சரியீ தென்ன
　　வல்லினை பிழையுங் காண்பான்.

[நான் என்பது நினைக்கப்படும் பொழுதே நானில்லாததும் நினைக்கப் பட்டதாகிறது. எவன் பிரகாசத்தை உணர்கிறானோ, அவன் இருவினையும் உணர்கிறான். எவனுக்குப் பாபம் இன்னதென்று தெரியுமோ, அவனுக்குப் புண்ணியமும் இன்னதென்று தெரியும். எவனுக்குக் குணம் இன்னதென்று தெரியுமோ அவனுக்குக் குற்றமின்னதென்றுந் தெரியும்.] (7)

பாதுகை யணிந்து கொள்ளிற்
　　பரந்தமுண் மேன டந்து
போதலு மெளிது ஞான
　　போதபா துகையைக் கொண்டாற்
றீதிலா தெங்குஞ் சென்று
　　திரியலா மிடர்முண் மிக்க
பூதல வடவி யுள்ளும்
　　போகலாந் துன்ப மின்றே.

[காலில் செருப்புப் போட்டுக் கொண்டால் முள்ளின்மேலும் சுலபமாய்ப் போகலாம். ஞானமாகிய செருப்பைப் போட்டுக்கொண்டால் உலகமென்னும் முள் நிறைந்த வனத்தில் பயமின்றி எங்குந் திரியலாம்.] (8



### வேறு.

பண்டொர் நாயொ டொண்ட ஞானி
　　பக்கு வத்தை யோர்கிலாக்
கண்ட மாக்கள் பித்தெ னக்க
　　ருத்தி லெண்ணி நக்கனர்
விண்டு வோடு விண்டு வுண்ண
　　விண்டு வேந கைத்ததேன்
உண்டு விண்டு வொன்று மென்றவ்
　　வுண்மை ஞானி யோதினர்.

[முன்னொருகாலத்தில் ஒரு அவதூத ஸந்நியாஸி யிருந்தார். அவரை யெல்லோரும் பித்தர் என்று எண்ணினார்கள். ஓர்நாள் அவர் ஒரு கிராமத்தில் பிச்சையெடுத்து வந்து, ஓர் நாயுடன் உட்கார்ந்து உண்ண ஆரம்பித்தார். ஓர் கவளம் நாய்க்கு ஊட்டுவதும், மற்றோர் கவளம்தான் உண்பதுமாயிருந்த இவர் கோலத்தைக் கண்டு ஜனங்கள் கைகொட்டிச் சிரித்தனர். இது கண்டஞானி 'ஏன் நகைக்கின்றீர்கள்? விஷ்ணு, விஷ்ணுவுடன் உட்கார்ந்து உண்பதைக் கண்டு விஷ்ணுவே சிரிப்பதேன்? உள்ளதெல்லாம் விஷ்ணுமயம்' என்று கூறினார்.] (9)

இறைவனைப்பு றத்து நாட
　　லெண்ணல் பேதை மைத்தனம்
உறையு ளெஞ்சு ளென்ன வோர்த
　　லுண்மை ஞான மாகுமால்
அறிவ னிங்க மர்ந்தி ருப்பி
　　னங்கு மாகு மம்புய
நறைகொ ணுண்ம லர்ப்ப தத்தை
　　நண்ணி வாழ லாகுமே.

[ஈசுவரனை வெளியே தேடுதல் அக்ஞானம். தனக்குள்ளேயே இறைவனிருப்பதை உணர்தலே ஞானம். இந்நிலையடைந்தோனே பரத்திலு மடைகிறான்; அதாவது இங்கு உண்மையை உணர்ந்தோனே அங்கும் அவருடைய பாதகமலங்களிற் சேர்ந்து வாழ்வான்.] (10)

# அவனன்றி யோரணுவு மசையாது.

"பிருதிவியில் வாசம் செய்பவனும் பிருதிவியினுள்ளே யிருப்பவனும் இருந்து, எவனைப் பிருதிவி யறியவில்லையோ, பிருதிவி எவனுடைய சரீரமே, எவன் உள்ளிருந்து பிருதிவியை ஆளுகின்றானோ, அவனே உன் ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்ற பொருள்.

"அப்புவில் வாசம் செய்பவனும், அப்புவினுள்ளே யிருப்பவனுமிருந்தும், எவனை அப்பு அறியவில்லையோ, அப்பு எவனுடைய சரீரமோ, எவன் உள்ளிருந்து அப்புவை ஆளுகின்றானோ, அவனே உன் ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்ற பொருள்.

"தேஜஸில் வாசம் செய்பவனும், தேஜஸினுள்ளே யிருப்பவனுமிருந்தும், எவனைத் தேஜஸ் அறியவில்லையோ, தேஜஸ் எவனுடைய சரீரமோ, எவன் உள்ளிருந்து தேஜஸை ஆளுகின்றானோ, அவனே உன் ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றபொருள்" என்று உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களிலும், மனிதன், மிருகம், செடி கொடி, கல், மண் முதலிய சிருஷ்டிப் பொருள்கள் அனைத்துள்ளும் அங்கங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய் வியாபித்து நிற்கும் பரம்பொருள் ஒன்றே. ஒன்றாயிருக்கிற அக்னி உலகத்தில் பிரவேசித்து ரூபங்கள் தோறும் வேறுபட்ட ரூபத்தையுடையதாய் எப்படி விளங்குகிறதோ, அப்படி ஒரே பரமபுருஷன் எல்லா ஜீவர்களுக்கும் அந்தராத்மாவாய் சிருஷ்டிப் பொருள்கள் தோறும் வேறுபட்ட ரூபமுள்ளவனாய் விளங்குகிறான். மனிதன் நாமரூபங்களால் மிருகத்தினின்றும் வேறுபட்டவன்; உண்மையில் ஒன்று. மிருகம் நாம ரூபங்களால் புற்பூண்டுகளினின்றும் வேறுபட்டது; உண்மையில் ஒன்று. புற்பூண்டுகள் நாமரூபங்களால் மட்டும் கல் மண் இவைகளினின்றும் வேறுபட்டவை; உண்மையில் அவையுடன் ஒன்றே. ஆகையால் நாமரூபங்களாகிற உபாதிகளை நீக்கி வஸ்துவைக் கவனிப்போமானால் எல்லாவற்றுள்ளும் ஒரே சுத்த சைதன்யம் விளங்கும்.

ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஐந்து குணங்கள் உண்டு. அவை யாவன: 'அஸ்தி, பாதி, பிரிய, நாம, ரூப'—உண்மை, பிரகாசம், பிரியம், நாமம், ரூபம், என்பன. உண்மையெனின் அழியாத் தன்மை; ஒரு காலத்திருந்து மற்றோர் காலத்து இல்லாமற்போவன வெல்லாம் தோற்றம்; உண்மையல்ல. உள்ளன வெக்காலத்துமுண்டு. பிரகாசம் எனின் ஞானத்துக்குப் பொருளாகுந்தன்மை,



பிரியமெனின், ஆனந்தரூப முடைத்தாயிருத்தல். இம்மூன்றுமே ஸத்-சித்-ஆனந்தம் எனப்படுவன. இம்மூன்றுமே ஈசுவரனைக் குறிப்பன. நாமரூப மென்பவற்றாலேயே நாம் அறியும் உலகமாக்கப்பட்டிருக்கின்றது. ஸச்சிதானந்தமாகிய பரம்பொருள் எல்லாப் பொருட்களிலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிற்கின்றது.

அசேதனம் எனப்படும் கல் மண்ணுக்கும், சேதனம் எனப்படும் ஜீவராசிகளுக்கும் இந்நிலையில் பேதமில்லை. எல்லாம் ஸத்ரூபம். கல்லும் மண்ணும் உயிரற்றவை யல்ல. அவைகளின் நிலைக்குத் தக்கவாறு உயிருள்ளவைகளே. ஒரே வேஷக்காரன் பல்வேறு ரூபங்களைத் தரித்து சமயோசிதமாய் நடிப்பதுபோல் ஒரே ஈசுவரன் பல்வேறு உபாதிகளால், மனிதனாகவும், மிருகமாகவும், புற்பூண்டுகளாகவும், கல் மண்ணாகவும் விளங்குகிறான். ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் கூறியுள்ளவாறு, 'மனிதன் ஆடவன் எனப்படுமிடத்து ஸ்திரீயினின்றும் வேறுபட்டவனாய்க் கூறப்படினும் மனிதவர்க்கத்தைக் கூறுமிடத்து ஸ்திரீ புருஷர் ஒன்றே. மனிதன் எனப்படுமிடத்து மிருகங்களினின்றும்பிரித்துக் கூறப்படினும் ஜீவராசிகளைக் குறிக்குமிடத்து, மனிதன், மிருகம், புற்பூண்டு எல்லாம் ஒன்றே. ஆகையால் நீ உலகுடன் ஒன்றே. அந்த ஸத்ரூபத்தை யறிதலே ஞானம். ஈசுவரனாகிய ஒன்றில் நாமெல்லாம் நிலைபட்டிருக்கின்றோம்.' அவனாலேயே இவ்வுலகுக்கு வாழ்வும் பிரகாசமும். "அவன் ஒன்று என்னும் இலக்கம். உலகப் பொருள்கள் அந்த ஒன்றுடன் பின் சேர்க்கப்படும் பூஜ்ஜியங்கள். ஒன்றை எடுத்துவிட்டால் பூஜ்ஜியத்துக்கு மதிப்பில்லாதது போல், அவனன்றி உலகுக்கு அர்த்தம் கிடையாது." எனக் குருதேவர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

ஸச்சிதானந்த ரூபமாகிய ஈசுவரனிடத்தில் நாமரூபமெனப்படும் அஸத்தாகிய உலகம் எங்ஙனமெனின், உலகம் உண்மையல்ல, தோற்றமே—அதாவது, உலகத்தில் நாமரூபம் கல்பிதமே; நம் மனோபாவமே; வஸ்துவில் நாமரூபங்கள் கிடையா. ஸச்சிதானந்தமே எல்லா வஸ்துக்களுக்கும் சுத்த ஸ்வரூபம். 'உலகம் நாணலும் பாசியும் மூடிய ஓர் குளம். குளத்தில் நீ நீரைக் காணவேண்டுமானால் பாசியைக் களைந்துபார்' என்பது பரமஹம்ஸரது உபதேசம்.

இந்த நாமரூபமாகிய உலகமே மாயை எனவுங் கூறப்படும். பொருட்களின் தோற்றத்துக்கும் மறைவுக்குங் காரணமாயிருக்கும் சக்தியின் ஸமஷ்டியே மாயை. உலகிலுள்ள சக்தியின் மொத்தப்பரிமாணம் ஒரு சமயத்தில் அதிகமாவதும் மற்றொரு சமயத்தில் குறைவதுமில்லை. இவ்வுண்மையைக் காட்டும் பொருட்டுப் பௌராணிகர்கள் ஈசுவரனுக்குக் களத்ரம், சக்தி அல்லது மாயை யென்றும், அவள் எண்ணிறந்த குழந்தைகளைப் பெற்றும், அளவிறந்த அண்ட

சராசரங்களுக்கு அன்னையாயிருந்தும், என்றுங் குமரியாய் விளங்குகிறாளெனவுங் கூறி யிருக்கின்றனர். ஈசுவரனாகிய புருஷன் அழிவற்றவன்; மாறுதலற்றவன். இவன் ஸ்ரீயாகிய பிரகிருதியின் மூலமாய்ப் பிரகாசிக்கிறான். பிரகிருதியும் மாறுதலற்றது; அழிவற்றது. ஆகையால் பிரகிருதி புருஷ ரூபமாகிய உலகமும் மாறுபாடற்றது, அழிவற்றது என்பதும் சொல்லாமலே விளங்கும்.

உலகம் ஓர் காலத்தில் மேன்மையடைந்த தென்பதும் மற்றோர் காலத்தில் தாழ்வடைந்த தென்பதும் பொருந்தாது. ஒரு காலத்தில் பிரகாசியாமல் மறைந்து நிற்பது, மற்றோர் காலத்தில் பிரகாசிக்கிறது. விதைக்குள்ளிருக்கும் சக்தி அவ்யக்தம். அஃது மரமாகும்பொழுது வியக்தமாகிறது. இல்லாதவஸ்து ஒன்றும் புதிதாக உண்டாகவில்லை. முதலில் விதை, மண், நீர், காற்று எனப் பிரிந்திருந்த பல பொருட்களின் சேர்க்கையால் மரம் என்பதுண்டாயிற்று. பின் மேஜை, நாற்காலி முதலிய வஸ்துக்களில் அதே மரம் வேறுபட்ட நாமரூபங்களோடு பிரகாசிக்கிறது. ஜனசமூகங்களின் உயர்வு தாழ்வுகளும், நாகரிக நிலையின் மேம்பாடுகளும் குறைகளும், ஆலோசிக்குமிடத்து நாமரூப பேதங்களாலானவை யென்று தெள்ளெனப் புலப்படும்.

ஏற்கனவே கூறியவாறு நாமரூபங்கள் உண்மை யல்ல. அவை தோன்றி மறைவனவாதலால் வஸ்துவில் கிடையா; நம் மனத்துள்ளவைகளேயாம். ஓர் மட்குடத்தின் நாமமும் ரூபமும், அது செய்யப்பட்டிருக்கும் களிமண்ணில் இல்லை; நம் மனத்திலேயே இருக்கின்றன. மனதில்லா விடத்து அவைகளில்லை. மனது ஓர் வர்ணக்கண்ணாடி போன்றது. அதன் மூலமாய் மற்ற பொருள்களைப் பார்த்தால், அக்கண்ணாடியின் வர்ணத்துக்குத் தக்கவாறு அவை மாறுபட்டுக் காண்கின்றன.

ஆகையால் உண்மை ரூபத்தைக் காணவேண்டுமாயின் மனமாகிய கண்ணாடியை நீக்கி விட்டுப் பார்க்கவேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்தி அதைப்பின் விட்டு அதற்கு அதீதமான நிலைமையடைந்தால், அங்கு நாமரூபமான உலகம் மறைந்து சுத்த சைதன்யமான ஆத்மா விளங்கும். அங்கே

"சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்குமில்லை,
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவுமில்லை,
சொல்லு மில்லை யிராப்பகலுந் தோற்ற மில்லை,
யந்தமில்லை யாதியில்லை நடுவுமில்லை.
யகமுமில்லை புறமுமில்லை யனைத்துமில்லை.
"இல்லையில்லை யென்னி லொன்று மில்லாதல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கையாகிச்
சொல்லரிய தன்மையதா யான்றானென்னத்
தோன்றாதெல்லாம் விழுங்குஞ் சொரூபமாகி
யல்லையுண்ட பகல்போல வனைத்தை யெல்லா
மடையவுண்டு தடையற, வுன்னறிவைத்தானே
வெல்லவுண் டிங்குன்னையுந் தானாக்கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளங்குந் தானே."



ஆகையால் நாம் காணும் இவ்வுலகனைத்தும் ஓர் கனவு போன்றதே. கனவு கண்டவன் விழித்துக் கொண்டதுங் கனவு மறைவதுபோல் துரீயா வஸ்தையை யடைந்து ஆத்ம சைதன்யத்தை யுணர்ந்தால், ஜாக்ராவஸ்தையில் நாம் காணும் இவ்வுலகமாகிய கனவும் மறையும்.

முன்னொரு காலத்தில் ஒரு பிராமணன் இந்திரனைக் குறித்துக் கொடியதவம் புரிந்தான். இந்திரன் திருப்தியடைந்து அவன் முன் தோன்றி என்ன வரம் வேண்டுமென்று கேட்க, அப்பேராசை கொண்ட பிராமணன் தனக்கு தேவலோகத்துள்ள கற்பக விருக்ஷத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். இந்திரனும் அவ்வாறே வரமளித்தான்.

கற்பகவிருக்ஷத்தையுடையோர் எதுவேண்டுமென்று நினைத்தாலும் அது அப்பொழுதே அளிக்கப்படும். அப்பிராமணன் தனக்குச் செல்வம் வேண்டுமென்று நினைக்கப் பொன்னும் வெள்ளியும் மணிகளும் அவன் முன் குவிந்தன. ராஜ்யம் வேண்டுமெனக் கருதியதும் அளவிறந்த ராஜ்யத்துக்கதிபதியானான். மாதர் வேண்டுமென நினைத்த மாத்திரத்தில் அத்யந்த ரூபலாவண்யமுள்ள பல ஸ்திரீகள் எதிர் நின்றனர். கண்ணிமைப்பதற்குள் அத்யற்புதமாய் தோன்றிய இவையனைத்தையும் நோக்கி ஐயுற்று, இவை வந்தவாறே கற்பக விருக்ஷத்துடன் மறைந்து போமோவென நினைக்கவே, மண், பெண், பொன், அனைத்தும் கற்பகத்துடன் வந்தவழியே மறைந்து விட்டன.

நமதுமனம் இதுபோன்ற ஓர் கற்பக விருக்ஷம். நம் மனதுக்கியைந்தவாறு உலகம் தோன்றுகிறது. அதில் தோன்றும் நன்மை தீமைகளும், இன்பதுன்பங்களும் மனதிலுண்டாகும் ஸங்கற்ப விகற்பங்களே. மனோ நிலையை ஆராயப்புகுவோமானால் கர்ப்பூர தீபம் போலப் போயொளிக்கும். அவ்வாறு மனது மறைந்தவிடத்துப் பொய்த்தோற்றமனைத்தும் மறைந்து உண்மை விளங்கும். எங்கெங்கும் அவனைக் காணுதலே இவ்வுண்மை நிலை.

"அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிய
வாப்தர் மொழி யொன்று கண்டா
லறிவாவதேது சிலவறியாமை யேதிவை
யறிந்தார்களறியார் களார்
மௌன மொடிருந்ததாரென் போலுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
வன்மை யொடிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவ்ய மெவ்விடம்
பூதபேதங்க ளெவ்விடம்
பொய்மெயித மகிதமேல் வரு நன்மை தீமையொடு
பொறை பொறாமையு மெவ்விட
மெவர் சிறியரெவர்பெரிய ரெவருறவரெவர் பகைஞர்
யாது முனையன்றி யுண்டோ
யிகபர மிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே."

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 5.

## 1883 ௵

## பகவான் கேசவ சந்திரஸேனருடன் லில்லி காட்டேஜில்.

## அத்தியாயம்—1.

### ஜகன்மாதாவும், அவளுடைய அவதாரங்களும்.

---

1883-ஆது வருஷம் நவம்பர் மாதம் 28-ம் தேதி மத்தியானம் இரண்டு மணிக்குமேல் லில்லி காட்டேஜுக்கு எதிராகவிருக்கும் வட்டப்பாதையின் (Circular Road) பக்கத்துப் பாதையில் ஒரு வாலிபன் முன்னும் பின்னுமாக உலாவிக் கொண்டிருந்தான். அவ்வொற்றையடிப் பாதையானது லில்லி காட்டேஜுக்கு அருகாக தெற்கு வடக்காகப் போகிறது.

லில்லிக்காட்டேஜானது கேசவ ஸேனருடைய ஸமாஜத்தைச் சேர்ந்த பிராம்மோ பக்தர்கள் இருக்குமிடமாகிய மங்களபுரிக்குத் தெற்காக விருக்கிறது. அவ்விடத்தில் கேசவர் தன் குடும்பத்துடன் வசிக்கிறார். கேசவ் இப்பொழுது மிகவும் அசௌக்கியமாக விருக்கிறார். அவரது நண்பர்கள், அவருக்கு சௌக்கியமாவது மிகவும் துர்லபமென்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் கேசவரிடத்தில் மிகவும் அன்புடையவர். அவர் இன்று கேசவரைப் பார்க்க வருவார். அவர் இப்பொழுது தக்ஷிணேசுவரம் ஆலயத்தை விட்டுப் புறப்பட்டிருப்பார். ஆதலாற்றான் அவரது சிஷ்யனாகிய இவ்வாலிபன், தன் அன்பார்ந்த குருநாதன் வரவை யெதிர்பார்த்துக் கொண்டே பாதையில் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருக்கிறான். வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகவந்து கொண்டிருக்க, அவன், அவைகளை யெல்லாம் பகவான் வந்து விட்டாரோவென்று பார்க்கிறான்.

அவன் பகவானுடைய வரவை யெதிர்பார்த்துக் கொண்டு, வழியில் போகிறவர்களை யெல்லாம் கவனித்துக் கொண்டே யிருக்கிறான். அவன், எதிராகவிருக்கும் பிராம்மோ ஸ்த்ரீகளும், பிராம்மோச் சிறுமிகளும் படிக்குமிடமாகிய விக்டோரியா காலேஜைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அக்காலேஜ் கட்டிடத்திற்கு வடக்கே யிருக்கும் பங்களாவில் ஒரு ஆங்கிலேய துரை வசிக்கிறார். அந்த பங்களாவும் இவ்வாலிபனுக்கு நேரே எதிர்ப்பார்வையி லிருக்கிறது.

அவன் சிறிது நேரமாகப் அந்த பங்களாவை பார்த்துக் கொண்டிருந்தான். அவ்விடத்தில்ஒன்றும் ஸரியாயில்லை; அவ்வீட்டிற்குள் பரபரப்பும் குழப்பமுமாக விருந்தது; அவர்கள் துக்கமாயிருப்பதாகக் காணப்பட்டார்கள். சற்றுநேரத்திற் கெல்லாம், யமனுக்கு அறிகுறியான கருப்பு உடைதரித்த வண்டிக்காரர்களுடனும், வேலையாட்களுடனும் பாடை வண்டி கொண்டு வரப்பட்டது. ஏனெனில் யமன் அவ்வீட்டிற்கு வந்திருக்கிறான். ஒரு ஜீவன் இந்த மண் சரீரத்தை விட்டுப் போய்விட்டது. அது இவ்வுலகை விட்டு சாசுவதமான உலகை அடைந்தது;



நித்தியத்துவத்தி லிருந்து இவ்வுலகத்திற்கு வந்த ஜீவன் இப்பொழுது இவ்வுலகை விட்டது!

முன்னும் பின்னுமாக உலாவிக்கொண்டே சிஷ்யன் தனக்குள் யோசிக்கலானான்:—"இவ்வுலகை விட்டு ஜீவன் எங்கு போயிற்று? நித்தியத்துவத்திலிருந்து வந்து, நித்தியத்துவத்தை யடைந்தது!

சிஷ்யனுக் கெதிராக வண்டிகள் போய்க் கொண்டிருந்தன; அவன் அவைகளைப் பார்த்தான்; ஆனால் பகவான் வரவில்லை.

சாயங்காலம் மணி ஐந்தாயிற்று. பகவான் வருகிறார். லட்டு, ரக்கல், எம் இன்னும் மூன்று நான்கு சிஷ்யர்களும் அவரோடு இருந்தார்கள்.

அவர் கேசவரின் ஜனங்களால் வரவேற்கப்பட்டு, மாடிக்குப் போனார், கூடத்திற்கு தெற்கு பக்கமாகவிருக்கும் ரேழியில் பகவான் உட்கார்ந்தார்.

### பகவான் ஸமாதியிலிருத்தல்.

பகவான் சற்று நேரமாகக் காத்துக் கொண்டிருந்தார். உள்ளே அறையில் அசௌக்கியமாகப் படுத்துக்கொண்டிருக்கும் கேசவரைப் பார்க்க விரும்பி பகவான் ஆத்திரப்படுகிறார். கேசவ் வியாதியினவஸ்தையினடுவில், இப்பொழுதுதான் கொஞ்சம் தூங்குகிறாரென்று, அவருடைய ஜனங்கள் மிகவும் தாழ்மையுடன் சொன்னார்கள். சீக்கிரம் வந்து பகவானைப்பார்ப்பார்.

கேசவ் அதிக அசௌக்கியமாயிருக்கிறார். ஆதலால் அவருடைய சிஷ்யர்கள் அவர் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்கிறார்கள். ஆயினும், பகவான் அவரைப்பார்ப்பதற்கு மிகவும் ஆவலுடையவராயிருந்தார். அவர் கேசவரின் சிஷ்யர்களான பிரஸன்னன், அமிருதன் முதலானவர்களிடம் கேட்டுக்கொள்கிறார்.

பகவான் (கேசவரின் சிஷ்யர்களை நோக்கி):—நல்லது, அவன் இங்கு வர வேண்டுமென்ற அவசியமில்லை. நானே உள்ளேபோய் அவனைப் பார்க்கிறேன்.

பிரஸன்னன் (வணக்கத்துடன்):—ஸ்வாமி! ஒரு நிமிஷம் பொறுங்கள்; அவர் சீக்கிரம் இங்கு வந்து விடுவார்.

பகவான்:—நீதான் மண்டையாக விருக்கிறாய்; நான் அவனைப் பார்க்க எவ்வளவு ஆவலாயிருக்கிறேன்!

பிரஸன்னன் அவரது சிந்தனையை மாற்ற கேசவரைப் பற்றிப் பேசுகிறான்.

பிரஸன்னன்:—ஸ்வாமி! அவருக்குப் பெரிதான மாறுதல் ஒன்று ஏற்பட்டிருக்கிறது: தங்களைப் போலவே அவரும் அடிக்கடி ஜகன்மாதாவோடு பேசுகிறார்! தங்களைப் போலவே அவரும் அவளுடைய இனிய குரலைக் கேட்கிறார்! சில சமயங்களில் கண்ணீர் பெருக்குகிறார்!!

கேசவ் குழந்தைபோல் சிரித்துக்கொண்டும், கூப்பிட்டுக் கொண்டும் ஜகன்மாதாவோடு பேசுகிறாரா? இந்த நற்செய்தி பகவானுக்குத் தாங்கமுடியவில்லை. அவர்மெய் மறந்து ஸமாதியை யடைந்தார்!

பிரம்மானந்தத்தினால் மயங்கிய இம்மஹா புருஷன் சிலையைப்போல் அசைவற்று உட்கார்ந்திருந்தார். குளிர்கால மாலையினால் அவர், காச்மீரத்துப்

பச்சைக் கம்பளிச்சட்டை தரித்திருந்தார். அவர் கைகட்டி உட்கார்ந்திருந்தார்; சரீரம் நிமிர்ந்திருந்தது; கண்கள் சலனமற்றிருந்தன. ஸமாதியிலாழ்ந்து, இவ்விதமான நிலைமையில் அவர் வெகுநேரம் வரையிலிருந்தார். இவ்வித ஒப்புவமையற்ற பிரம்மானந்த நிலைமையானது அவரை விடும்படியான குறிகளொன்றும் காணவில்லை.

சாயுங்காலமாயிற்று. கூடத்தில் விளக்கேற்றப் பட்டது. பகவான் ஸமாதியினின்றும் திரும்பினார். அவரை கூடத்திற்குக் கொண்டு வருவதற்காகப் பார்க்கிறார்கள்;

அவர் ஒரு சிறு கட்டிலின்மீது உட்கார்ந்திருக்கிறார். விளக்கேற்றியிருக்கும் அவ்வறையில், மெத்தைபோட்ட நாற்காலிகளும், கட்டில்களும், கண்ணாடிகளும் எல்லாப் பக்கங்களிலுமிருந்தன. ஸமாதி நிலைமையானது அவரை முழுவதும் விடவில்லை. அவர் குடிகாரனைப் போல் சிரிக்கிறார். அவர், கட்டில், மெத்தைபோட்ட நாற்காலி, கண்ணாடி முதலியவைகளைப் பார்க்கிறார். அவர் தனக்குள்ளும், தன் ஜகன்மாதாவோடும் பேசுகிறார்!

ஸ்ரீராமகிருஷ்ணர் (கட்டில் நாற்காலி முதலியவைகளை நோக்கி):— இவைகள் சிறிது காலத்திற்குமுன் பிரயோஜனமுள்ளவைகளாயிருந்தன! ஆனால் இப்பொழுதோவெனில் அவைகள் சற்றும் பிரயோஜனமில்லை,

கேசவரின் காலமானது நெருங்கிவிட்டதென்றும், அவர் இவ்வுலகை விட்டுப்பிரிந்து தன் ஜகன்மாதாவினிடம் போகவேண்டுமென்றும், பகவான் தனது அந்தர்முக திருஷ்டியில் அறிந்தாரோ?

அவர், ரக்கல் என்னும் வாலிபனான சிஷ்யனைப் பார்த்து "ரக்கலா?" என்றார்.

அவர் ஜகன்மாதாவோடு பேசுகிறார்:—"ஆ! அம்மா! நீ யிங்கே யிருக்கிறாய்! நீ எவ்வளவு அழகாய் அலங்கரித்துக் கொண்டிருக்கிறாய்! ஆ! என்னம்மா! நீ சிரம்பபடாதே. இவ்விடத்தில் உட்காரு!!"

இதற்குள் பிராம்மோ பக்தர்கள் அவ்வறையில் நிறைந்திருந்தனர். அவரது சிஷ்யர்களான லட்டு, ரக்கல், இவர்கள் அவரருகில் உட்கார்ந்திருந்தார்கள். பகவான் ஆத்மாவின் அழிவின்மையைப் பற்றிப் பேசுகிறார். அவர் கேசவரின் ஆத்மா சரீரத்தை விட்டுப் போகவேண்டுமென்பதை தெளிவான திருஷ்டியுடன் பார்க்கிறாரோ? பகவான் சொல்லுகிறார்:—

"சரீரமும், ஜீவனும்! சரீரம் ஆரம்பத்தை யுடையது. அதற்கு ஒரு முடிவு வேண்டும். சரீரம் நசிக்க வேண்டும். ஜீவன் நசிக்கிறதில்லை!

"ஜீவனானது சரீரத்தை விட்டு வேறானது. ஈசுவரனைப் பார்க்கிறவரையில், சரீரமே ஜீவன் என்னும் நம்பிக்கையை விடமுடியாது. இந்த நம்பிக்கை அஞ்ஞானிக்கு இன்னும் பலமாகப்பிடித்துக் கொண்டிருக்கும். கடவுளைப் பார்த்தவனுக்கு சரீரமே ஜீவன் அல்லவென்பது நன்கு விளங்கும்.

"பழுக்காத கொட்டைப்பாக்கின் தோலானது, பாக்கோடு ஒட்டிக் கொண்டிருக்கும். ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித்தெடுப்பது மிகக்கடினம். ஆனால் நன்றாய்ப் பழுத்த கொட்டைப்பாக்கின் விஷயம் அவ்விதமன்று. தோல் அதோடு ஒட்டிக் கொள்ளாது. அதைக் குலுக்கினால் பாக்கு உள்ளே ஆடுவது தெரியும்.



இப்பொழுது உள்ளே பிரவேசித்தது யார்? வெறும் எலும்பும் தோலுமாக நிழலை போன்ற உருவத்தையுடைய ஒருவர் பகவானை நோக்கி வந்தார்! அவர் சுவரைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டே கட்டிலினருகில் வந்தார். இப்பொழுது தரையில் கம்பளியின்மீது இன்னும் ஸமாதி நிலைமையிலேயே உட்கார்ந்திருக்கும் பகவானுடைய திவ்ய சரணங்களில் அவர் விழுந்து நமஸ்கரித்தார். அவருக்கெதிரிலிருக்கும் இவ்வுருவம் கேசவர். அல்ல, கேசவரின் உடைந்த பிரதிமை; நூற்றுக்கணக்கான பிரசங்க மேடைகளிலிருந்து பிரசங்கம் செய்த சூரன்! எல்லோராலும் கவனிக்கப் பட்டவர்! வங்காளச் சிறுவர்களின் குலதெய்வம்! ஒருபொழுதும் மறக்க முடியாதபடி அவ்வளவு பலமும், உருக்கமும் இனிமையும், அழகுமுள்ள வார்த்தைகளால் தன் ஜீவனையே குழந்தைபோல் ஜகன்மாதாவுக்குப் பிரார்த்தனையாக வார்த்து, பிரம்ம ஸமாஜத்தின் ஈசுவராராதனை நடத்திக் கொண்டிருக்கும்பொழுது, பார்த்தமாத்திரத்திலேயே மனக்கிளர்ச்சியைக் கொடுக்கும் தெய்வ உருவத்தை யுடையவர்!!

பகவான் இன்னும் பிரம்மானந்த நிலைமையிலேயே யிருக்கிறார்! கேசவரை அவர் அறியாததுபோல் பார்த்துக் கொண்டிருக்கிறார்! கேசவ் உட்கார்ந்துகொண்டு உரத்தகுரலில், "இதோ வந்திருக்கிறேன், ஸ்வாமி! நானிதோ வந்திருக்கிறேன்" என்றார். கேசவ் மெதுவாக பகவானுடைய இடதுகையைத் தடவினார்.

ஆனால் இன்னும் உலகப் பிரக்ஞை வந்ததாகக் காணவில்லை. நித்தியானந்தக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்! சற்றுநேரம் கழித்து பைத்தியம் பிடித்தவனைப்போல் தனக்குத்தானே பேசிக்கொள்ளுகிறார்! இதுதான் பகவத் பக்தியென்னும் பைத்தியமோ? பகவான் பேசுகிறார்:—

எனக்கு ஆத்மாவின் அறிவு இல்லாமலிருக்கிறவரையில், உபாதிகளுக்குள் வஸ்துவானது மறைபட்டிருக்கிற வரையில், கேசவ், அமிருதன், பிரஸன்னன், முதலியவர்களும், மற்ற வஸ்துக்களும் தனித்தனியாகவும், பல வாகவும் தோற்றுகின்றன. ஞானம் முதிரும்பொழுது எல்லாம் ஒன்றாய்விடுகிறது. 'பலவாகத்தோற்றும் வஸ்துவொன்றே; அவ்வஸ்துவே கடவுள்' என்று அறிவதே முதிர்ந்தஞானம்.

மேலும் ஞானியானவன், இவ்வஸ்துவாகிய பிரம்மமே—ஜீவர்களாகவும், ஜகத்தாகவும், இருபத்துநான்கு தத்துவங்களாகவும்—தன்னைப் பிரித்துத்தோற்றுவிக்கிறதென்று பிரத்தியக்ஷத்தில் பார்க்கிறான்.

சக்தியே எங்கும் தோற்றுவிக்கிறது. உண்மையாக ஒரே ஆத்மா தன்னையே பலவாகப் பிரித்துத் தோற்றுவிக்கிறது. ஆனால் சிலரிடத்தில் சக்தியானது அதிகமாகத் தோற்றுவிக்கிறது. சிலரிடத்தில் குறைவாகத்தோற்றுவிக்கிறது. வித்தியாஸாகரர் என்னிடம், "கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் சக்திகளைச் சிலருக்குக் குறைவாகவும், சிலருக்கு ஜாஸ்தியாகவும் கொடுத்திருக்கிறாரென்பது உண்மையா? கடவுள் பக்ஷபாதமுள்ளவரா?" என்று கேட்டார். அதற்கு நான், "அப்படி யில்லாவிட்டால் எவ்விதம் ஒருமனிதன் பத்து மனிதர்களுக்குப் பதிலாகவும், சிலசமயம் 50 பேர்களுக்குப் பதிலாகவும் நின்று எதிர்க்கமுடியும்? மேலும், அப்படி யில்லாவிடில் தக்ஷிணேசுவரத்திலிருந்து நாங்கள் எதற்காக இவ்வளவு தூரம் உங்களைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறோம்?

ஈசுவரஸிருஷ்டியில் வேற்றுமையிருப்பது நிஜம். அதற்குச் சூக்ஷ்மமான ஆழ்ந்த உட்கருத்து ஒன்றிருக்கவேண்டும். அதினால் கடவுள் பக்ஷபாதமுடையவரென்று ருஜுவாகிறதில்லை" என்று பதிலளித்தேன்.

எவனிடத்தில் ஈசுவராம்சம் அதிகமாகத் தோற்றுகிறதோ, அவனிடத்தில் மற்றவர்களைவிட சக்தியிருக்கிறது. ஒரு பணக்காரனுக்கு வசிப்பதற்கு வீடுகள் அநேகமிருக்கலாம். ஆனால், அவனுக்கு மிகவும் பிரியமான ஒருவீட்டில்தான் அவனை ஸாதாரணமாகக் காணலாம். கடவுளிடம் அன்பு செலுத்தப்பட்டவன்தான் கடவுளின் கிருஹம்; கடவுளிடமிருந்து விசேஷமான சக்திகளெல்லாம் அவனுக்குக் கிடைக்கின்றன.

அப்பேர்ப்பட்டவனுக்கு யாது அடையாளம்? கடவுள் பெயரால் அவன் செய்யும் அரிய செயல்களே. அவைகள் மஹா சக்திகளின் பலன்களென்பது உறுதி.

இந்த ஆதிசக்தி, அல்லது ஈசுவரன், பிரம்மத்தைத் தவிரவேறன்று. ஒன்றைத் தவிர்த்து மற்றொன்றை நினைக்கமுடியாது. ஒளியைத் தவிர்த்து இரத்தினத்தையும், இரத்தினத்தைத் தவிர்த்து அதன் ஒளியையும் நினைக்கமுடியாது. இன்னும், அதுபோலவே சர்ப்பமும், அதன் வளைந்தோடும் குணமும்; ஒன்றைவிட்டொன்றைப் பிரித்து நினைக்கமுடியாது.

பிரம்மத்தினுடையவும், ஈசுவரனுடையவும் ஒற்றுமையைப் பற்றி வார்த்தைகளால் வியக்தமாகச் சொல்ல முடியாது. உபமானமும் கொஞ்சம்தான் விளக்கிக்காட்டும்.

என் அம்மையாகிய ஜகதீசுவரி இருபத்துநான்கு தத்துவங்களாகத் தோன்றியிருக்கிறாள். இது 'அனுலோமவிலோம' முறைப்பிரகாரம்: அவளிடத்திலேயே ஜீவனும், ஜகத்தும் அனுலோமித்து (அடங்கி) இருந்தன. இவைகள் அவளிடத்திலிருந்தே விலோமித்து (வெளித்தோன்றி) வந்திருக்கின்றன. ரக்கல், நரேந்திரன் முதலிய சிறுவர்களைப் பார்க்க, நான் ஏன் ஆவலாயிருக்கிறேன்? அவர்களுக்கு உலகின்,—காமினீ காஞ்சனத்தின்—ஸ்பரிசம் இன்னும் உண்டாகவில்லை. ஜகன் மாதாவே சரீரமெடுத்திருக்கிறாள். ஆதிசக்தியானவள் இவ்வுலகில் தோன்றி, விசேஷமாக இந்த மனித சரீரங்களில் தோற்றுவித்திருக்கிறாள்!

ஹஸ்ரன் என்னிடம், "தாங்கள் ஏன் இவ்வாலிபர்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? தாங்கள் எப்படி கடவுளிடம் மனதைச் செலுத்தப் போகிறீர்களோ!" என்று சொல்லி அடிக்கடி என்னைக் கடிந்து கொள்ளுகிறான். (கேசவ் முதலியவர்கள் சிரிக்கிறார்கள்.)

ஹஸ்ரன் சொன்ன வார்த்தையானது என்னை ஆலோசனை செய்யச் செய்தது. நான் ஜகன்மாதாவினிடம், "அம்மா! ஹஸ்ரன் சொல்வதெல்லாம் வாஸ்தவமா? நான் உண்மையாக உன்னை மறந்துகொண்டு வருகிறேனா?" என்று சொல்லி ஸ்தோத்திரம் செய்தேன். நான் இதைப்பற்றி போலநாத் என்பவரைக் கேட்டேன். அவர், மஹாபாரதத்தில் இவ்விஷயத்தைப்பற்றி மிகதெளிவாக விளக்கியிருக்கிறதென்று சொல்லி என்னை ஸமாதானப்படுத்தினார். ஸமாதியில் பிரம்மத்தையடைந்தவனுக்கு, இந்த மித்தையான ஜகத்தில் பிடிப்பொன்றுமில்லாததினால், காமினீ காஞ்சனங்களைவிட்டு, ஈசுவரனை நேசிக்கும்



பரிசுத்த ஜீவர்களின் ஸஹவாஸத்தை நாடுவது அவசியமென்று அதில் சொல்லியிருக்கிறது. இப்படி மஹாபாரதத்திலிருந்த பிரமாணமானது என் மனதை ஸமாதானப்படுத்தியது, நியாயாதிபதி முன்வழக்கில் செய்த தீர்ப்பானது, புதிதாக அதுபோன்ற வழக்குக்கொண்டுபோகப் பட்டவனுக்கு ஆதாரமாயிருப்பது போலாயிற்று. (யாவரும்சிரிப்பு.)

ஹஸ்ரனைக் குற்றம் சொல்வதற்கில்லை. ஒருவன் கடவுளைக் காண்கிறவரையில், "நேதி நேதி" என்று சொல்லி, அதாவது கடவுள், மனிதன் பிரகிருதி இவ்விரண்டையும் தவிர்த்து, முற்றிலும் வேறான வஸ்து என்று அறியவேண்டும். ஆனால், கடவுளைப் பார்த்தவனுடைய விஷயம் முற்றிலும்வேறு. அவன் அனுலோம, விலோமத்தின் உண்மையை—ஜீவனும் ஜகத்தும் பிரம்மத்தில் அடங்கியிருந்தனவென்றும், பிரம்மத்திலிருந்தே வெளியில் தோன்றினவென்றும், அப்பிரம்மமாகிய கடவுளே இந்த ரூபங்களாகத்தோற்றுவிக்கிறானென்றும் அறிகிறான். வெண்ணெய் தனியாகக்கிடைக்க வேண்டுமானால் மோரைப் பிரித்துவிடவேண்டும். முடிவில் தயிருக்கு வெண்ணெ சம்பந்தம்; வெண்ணெய்க்கு தயிர் சம்பந்தம்; இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமானது. மனிதனும் பிரபஞ்சமும் அவனிடத்திலிருந்துண்டானது. ஆனால், சிலவற்றில் அவனுடைய அம்சம் மற்றவைகளில்விட அதிகமாகவிருக்கிறது.

ஈசுவரனை அடைவதற்கு மனிதனுடைய அந்தக்கரணத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பக்தி யதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு எல்லா வஸ்துக்களிலும் அவனை உணர்வது ஸுலபமானது. ஆற்றில் பிரவாஹம் வந்து கரைபுரண்டு போகும் வரையில் ஸமுத்திரத்தை யடையவேண்டுமானால், அந்த ஆற்றின்வழியாகத்தான் படகைச் செலுத்திச் சுற்றிக்கொண்டு போகவேண்டும். பிரவாஹம் வரும்பொழுது வெளியிலும், நிலங்களிலும் ஜலம் ஆழமாக விருப்பதால் நேரே குறுக்காகப் படகைச் செலுத்தலாம்.

வயல்களில் பயிர்கள் அறுவடையான பிறகு, வரப்பின் வழியாகத்தான் நடக்கவேண்டுமென்ற கட்டுப்பாடின்றி, வயலில் எவ்விடத்திலும் நடக்கலாம்.

ஒருவன் கடவுளை ஒருதரம் பார்த்தபிறகு, அவன் கடவுள் எல்லாவற்றிலும் தோன்றியிருக்கிறான். எல்லாவற்றையும்விட மனிதனிடத்திலிருக்கிறார். அதிலும், இவ்வுலகின் அற்பப் பொருள்களாகிய காமினீ காஞ்சனங்களினின்றும் விலகியிருக்கும் பரிசுத்த ஆத்மாக்களில் இன்னும் அதிகமாக விருக்கிறார். (அவ்வறை நிச்சப்தமாயிருக்கிறது.)

ஒருவன் ஸமாதியில் கடவுளைப் பார்த்தபிறகு அதினின்றும் திரும்பி இவ்வுலகின் அற்பவிஷயங்களில் தன்மனதைச் செலுத்துவது மிகக்கடினம். ஆகையால்தான் அவன் இவ்வுலகத்தையும், இவ்வுலகிலடையக் கூடிய பணம்,பெயர், கௌரதை, அதிகாரம், இந்திரிய சுகம் முதலானவைகளையும் தொடாத சுத்தாத்மாக்களின் ஸஹவாஸத்தையே நாடுகிறான்.

ஜகன் மாதாவாகிய சக்தி, பிரம்மமே தவிர வேறில்லை. ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களாகிய தொழிலை நடத்துவதாக பாவிக்கப்படும்பொழுது, சக்தி, அல்லது பிரகிருதியென்றும், இவைகளில்லாமலிருப்பதாக பாவிக்கப்படும்பொழுது பிரம்மம், அல்லது புருஷன் என்றும் அப்பரம்பொருள் அழைக்கப்படுகி

றது. பிரம்மத்தை அடையாளங்களால் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது ஜகன்மாதா என்றும், ஜகத்பிதா என்றும் சொல்லலாம். பிதாவானவன் வீட்டுக்காரியாதிகளை எல்லாம் மாதாவிடம் ஒப்புவிக்கிறான். தாயானவள் தன் எல்லாச் சக்தியையும், அதிகாரத்தையும் தந்தையிடமிருந்து அடைகிறாள்.

பிரபஞ்சத்தில் அந்தர்யாமி யாயிருக்கும் பிரம்மத்தை, ஜகத்திற்கு அதிகாரியான ஜகன்மாதாவைத் தவிர்த்து நினைக்கமுடியாது. ஒன்றை நினைக்கும் பொழுது, மற்றொன்றும் கூடவேவரும். புருஷனை நினைக்கும் பொழுது, பிரகிருதியின் எண்ணமும் கூடவேவரும். பிரகிருதியை நினைக்கும் பொழுது, புருஷன் என்ற எண்ணமும் கலந்தேயிருக்கும். தந்தையென்பதென்னவென்றறிந்தவன், தாய் என்பதென்னவென்றும் அறிவான். (கேசவ் சிரிக்கிறார்.)

இருள் என்ற அறிவுடையவனுக்கு, அதன் பரஸ்பர சம்பந்தமான வெளிச்சம் என்ற அறிவும் இருக்கும். இரவு என்பதன் கருத்தையறிந்தவன் அதன் ஸம்பந்தமான பகல் என்பதின் கருத்தும் அறிவான். சந்தோஷத்தை யுணர்ந்தவன் அதன் ஸம்பந்தமான துக்கத்தின் உணர்வையும் அறிவான். இது உனக்குத் தெரிகிறதா?

கேசவர் (சிரித்துக்கொண்டு):—ஆம், ஸ்வாமி, தெரிகிறது.

பகவான்:—நான் மாதா என்று சொன்னது யார் என்று தெரியுமா? சிருஷ்டிப்பவளும், இரக்ஷிப்பவளும், தன் குழந்தைகளைத் தீங்கினின்றும் காப்பாற்றி அவர்களுக்கு தாங்கள் எவ்விதம் இவ்வுலகில் ஜீவிக்கவேண்டுமென்பதைக் கற்பித்து, இன்னும் எவ்விதம் முக்தியையும் உண்மை ஞானத்தையும் அடைவது என்பதையும் எடுத்துக்காட்டும் ஜகன்மாதாவே. உண்மையாகக் குழந்தை, தாயாரைப் பிரிந்து ஜீவிக்கமுடியாது. அவன்ஒன்றும் அறியான். ஆனால் அவன் தாய் எல்லாம் அறிவாள். குழந்தை தன் ஆகாரத்தைத் தாயின் கையிலிருந்து வாங்கி சாப்பிட்டுக்கொண்டு விளையாடுவான். அவன் தன் எல்லாக்கவலைகளையும் தாய்மீது போடுகிறான்.

கேசவ்:—ஸ்வாமி! அது முற்றிலும் உண்மை.

(தொடரும்.)

# தியாகம்

[நம் பரதநாட்டில் மகாபாரதம் என்னும் நூல் மிகுதியாகப் பாராட்டப்பெற்று வருகிறது. அதனுள் உண்மைப் பொருள் நிறைந்திருப்பதனாலும், பகவத்கீதை முதலிய அருமையான உபதேச மொழிகள் பல அமைக்கப்பட்டு இருப்பனவாலும், அதை ஐந்தாவது வேதம் என்று கொண்டாடுவார்கள். ஆயினும் அதனைப் படியாதார் இக்காலத்து நம்மைச் சேர்ந்தோரில் பலர் இருக்கிறார்களென்பது எல்லாரும் அறிந்த விஷயமே. அந்நூலைப் படித்து, அதனாலுண்டாகும் இன்பத்தையும், நன்மையையும் உணர்ந்தோரில் ஒருவரும், அதனைப் பிறருக்குத் தெரிவியாமலிரார். அருமையான நீதிகளும், நுட்பமான பொருளும், வெகுசுலபமான கதைகளால் சிறு குழந்தைகளும் எளிதில் அறியும்படி விளக்கப் பட்டிருக்கின்றன, அந்நூலிலுள்ள பல கதைகளில் பின் வருவது ஒன்று.]

குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்கள் வெற்றி பெற்று நாடு முழுவதையும் அரசாண்டார்கள். ஐயம் காரணமாக ஒருபெரிய யாகம் செய்தார்கள். யாகம் வெகு விமரிசையாக நடந்தது; பொன்னை மலை மலையாகக்குவித்து வைத்திருந்து தானம் செய்தார்கள். வேதம் கற்ற பிராமணர்கள் கணக்கில்லாமல் வந்து அன்னமுண்டு பாண்டவர்களை வாழ்த்திச் சென்றார்கள். இத்தகைய யாகம் இதுவரையில் நடந்ததில்லை என்று எல்லோரும் சொல்லிப் புகழ்ந்தார்கள்.

யாகம் முடிந்தவுடன் ஒரு கீரிப்பிள்ளை வெகு வேகமாக யாகசாலைக்குள் ஓடிவந்தது. அதனுடைய பாதி உடம்பு பொன்னிறமாயிருந்தது. மற்றப்பாதி சாதாரணமாகக் கறுத்துத் தோன்றிற்று. அங்கிருந்தார் ஒருவரையும் கவனியாமல் அது யாகசாலையில் விழுந்து புரண்டு புரண்டு எழுந்தது. பின், சுற்றி நின்றவர்களைப் பார்த்து, "இது முழுவதும் பொய், இது யாகமல்ல" என்று சொல்லிற்று. அங்கிருந்தோர் அக்கீரியைப் பார்த்து சொல்லலுற்றார்கள். "என்ன, நீ இங்கு நடந்த தர்மத்தைப் பார்க்கவில்லை போலிருக்கிறது. அன்றேல் இவ்வாறு பேசியிருக்க மாட்டாய்; இந்த யாகத்தால் இந்நாட்டிலிருந்த ஏழைகளெல்லாரும் பணக்காரர்களாகி விட்டார்கள்; குடிகளெல்லாம் மகிழ்ந்து வாழ்கின்றன.

இதைப்போல் யாகம் இதுவரை நடந்ததில்லை. கீரிப்பிள்ளை யாகை யால், உனக்கு அறிவு குறைவுதான் போலிருக்கிறது."

வெளியே போக நினைத்தகீரி இதைக்கேட்டதும் மிக்க கம்பீ ரத்தோடு திரும்பி அவர்களைப்பார்த்துப் பின்வருமாறு சொல் லிற்று.

"இங்கிருந்து வெகு தூரத்துக்கப்பால் ஒரு சிறுகிராமம் இருக்கிறது. அங்கே ஒரு அந்தணன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவனது மகன் தன் மனைவியுடன் பெற்றோருக்கு உத வியாயிருந்தான். அவர்கள் மிக ஏழைகள்; அக்கிராமத்திலுள்ளோ ருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதனால் கிடைக்கும் கொஞ் சப் பணத்தை வைத்துக்கொண்டு பிழைப்பார்கள். சிலவருஷங்க ளுக்கு முன் அந்நாட்டில் கொடிய பஞ்சமொன்று வந்தது; மூன்று வருஷகாலம் பிராணிகள் உணவுப் பொருளில்லாது ஒன்றன் பின் ஒன்றாயும், கூட்டங் கூட்டமாயும் மடிந்தன. ஏழைப்பிராமணன் குடும்பம் எல்லோருக்கும் மேல் கஷ்டப்பட்டது. ஐந்து நாட் களாகச் சிறிதும் ஆகாரமில்லாது இருந்தார்கள். ஆறாவது நாள் தகப்பன் எங்கேயோ தேடிச் சிறிது அரிசி மாவைப்பெற்று வீடு வந்தான். வழக்கம்போல் கடவுளைப் பூஜை செய்துவிட்டு அந்தமாவை நால்வருமாகப் பங்கிட்டு உண்ண ஆரம்பித்தார்கள்.

"அப்பொழுது வாசலில் கதவோசை கேட்டது. அந்தணன் கதவைத்திறக்க ஒரு அதிதி வந்திருக்கக் கண்டான். குளிர்ந்த முகத்துடன் அவரை வரவேற்றுத் தனக்காக வைத்திருந்த மாவை அவருக்குக் கொடுத்தான். விருந்தினராய் வந்தவர் பசியின் மிகுதி யால் அதை ஒரேவாயில் விழுங்கிவிட்டு, 'ஐயா, தாங்கள் என்னைக் கொன்றுவிட்டீர்கள்; எனக்குப் பத்து நாட்களாக ஆகாரமில்லை. தாங்கள் கொடுத்தது, அடங்கியிருந்த பசியைக் கிளப்பிவிட்டது. என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது" என்று கதறினர். இதைக் கண்ட அந்தணன் மனைவி, தன் பங்கைக் கொடுத்தாள். கணவன் அதைத்தடுக்க அவள், "இந்த விருந்தினர் பசியால் வருந்துகின்ற னர்; இல்லறத்தைக் கைக்கொண்டுள்ள நாம் அவரைக் காப்பது கட மையாகும்; மனைவியாகிய நான் தாங்கள் செய்தவாறு அவருக்கு என் பங்கைக் கொடுக்க வேண்டாமா?" என்று சொல்லித் தனக்கு உணவாக வைக்கப்பட்டிருந்த மாவை விருந்தினருக்கு அளித்தாள். ஆயினும் அவர் பசிக்கொடுமை தணியவில்லை. அதைப்பார்த்த மகன் "பெரியோரே! என்னுடைய பங்கையும் புசியுங்கள்; என் தந்தை தொடங்கிய காரியத்தை நிறைவேற்றுவது என் கடமையாகும்"



என்று கொடுத்தான். அதுவும் அவர் பசியைப் போக்கவில்லை. பின் அப்புதல்வன் மனைவியும் தன்பங்கைக் கொடுத்திட்டாள். பெரியவருக்குப் பசி தணிந்தது. அவர்களை வாழ்த்திக் கொண்டு சென்றார்.

"அன்று இரவு அந்நால்வரும் உணவு இல்லாமையால் இறந் தார்கள். அவர்கள் வைத்திருந்த மாவில் சிறிது தரையில் கிடந்தது. அதன்மேல் நான் விழுந்து புரண்டேன். அந்த மாவு பட்ட என் உடம்பில் பாதி பொன்னிறமாயிற்று; அதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கிறீர்கள். அம்மாதிரியான தியாகம் உலகத்தில் வேறு எங்கா வது நடக்கிறதாவென்று அறியும் பொருட்டுப் பல இடங்களிலும் சுற்றித் திரிந்தேன். எங்கும் நான் காணவில்லை; அதனால் தான் என் உடம்பில் மற்றப் பாதி கருமையாகவே இருக்கிறது. இக்கார ணத்தைக்கொண்டுதான் இது யாகமில்லை யென்று நான் துணிந்து சொன்னேன்"

இவ்வாறு கீரிப்பிள்ளை கூறிற்று. ஆகையால் சிறப்புக்காகவும் கீர்த்திபெறும் பொருட்டும் அளவற்ற செல்வத்தைச் செலவிடினும் அது பயனற்றதாம். கடமை யென்று உணர்ந்து நன்மனதுடன், பிரதியுபகாரத்தை யெதிர்பாராது கொடுக்கப்பட்டது அற்பமாயி னும் அளவற்ற மேன்மையுள்ளது.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலமறிமினே.

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சிவ தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே.

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

*"அண்டரண்டம் யாவுநீ கொண்டு நின்ற கோலமே*
*தொண்டர் கண்டு சொரிகண்ணீர் கண்ட நெஞ்சு கரையுமே,*
*அன்னைபோல வருண் மிகுத்து மன்று ஞான வரதையே*
*என்னையே யெனக்களித்த நின்னையாறு நினைவனே"* —தாயுமானவர்.

புண்ணிய பூமியாகிய இப்பாரதகண்டத்திலே வடநாடுகள் பலவற்றினும் சிறந்து விளங்குவதாகிய வங்காள நாட்டிலே கமார்ப்புகூர் என்னும் ஸ்தலத்துக் கருகிலமைந்த ஜயராம்பட்டி என்னுங் கிராமத்திலே, சுமார் எழுபது வருஷங்களுக்கு முன்னே, பிரம்ம குலத்திலே, ஸ்ரீராமசந்திர முகோபாத்யாய ரென்னும் மகானுபாவ ரொருவரிருந்தார். அவர் மனைவி சுசீலை ஸ்ரீமதி சியாமா தேவி யென்னும் உத்தமி. இவர்கள் தெய்வபக்தி பூண்டு தங்கள் நிலைக் கேற்ற தருமங்களை வழுவறச்செய்து இல்லறம் நடாத்திவரும் நாளில் தம்மரபு விளங்கவேண்டித் தமக்குச் சந்ததியுண்டாக அருள்புரியும்படி ஈசுவரனைப் பிரார்த்திக்க, அவர் திருவருளால் ஓர் பெண் மகவுண்டாயிற்று. அதுகண்டு மகிழ்ந்து அக்குழந்தைக்கு ஸ்ரீசாரதாதேவியெனத் திருநாமம் புனைந்தனர். தமதருமைச் செல்வி, ஸீமந்தபுத்ரி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரவும், உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் முதலிய நற்குணங்களனைத்தும் அவளுடனேயே வளர்ந்து வரக் கண்டு பெற்றோர் அளவிலா வானந்தங் கொண்டனர்.

இவ்வாறு ஆறுவயதானதும் தமதருமைப் புதல்விக்குத் திருமணஞ் செய்துகளிக்க அவாக்கொண்டு, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரெனப் பின் லோகப் பிரசித்திப்பெற்ற கதாதரரென்னும் வாலிபன் நேர்ப்பட அவருக்குக் கன்னிகாதானம் செய்தனர்.

மணமகன் அவதார புருஷனாதலால் தான் மணக்கத்தக்க கன்னிகையுள்ள விடத்தைத் தான் மெய்மறந்ததோர் ஆவேசநிலையில் நியமித்ததாகக் கூறுவர். கதாதரனுடைய பந்துக்கள் அவருக்கு மணஞ் செய்யவேண்டி கன்னிகையை இங்குமங்குந் தேடித்திரிகையில், அவர்கள் முயற்சியனைத்தும் பயனற்றதாகக்கண்டு, கதாதரன் "என்னை மணப்பவள் இருக்குமிடம் விட்டு நீங்கள் இங்கு மங்கு மலைந்தென்ன பயன்? ஜயராம் பட்டியில் ஸ்ரீராமச்சந்திர முகோபாத்யாயர் வீட்டில் எனக்குரிய கன்னியைக் காண்பீர்கள்" என்று கூறினராம்.



ஈசுவரலீலையின் மகிமையை யாரறிய வல்லார்! தன்திருவவதாரத்தின் கருத்தை நிறை வேற்றுவதற் கியைந்தவாறு தான் வாழ்க்கைத்துணைவியாய்க் கொள்ளக்கூடிய ஸ்திரீ ரத்னத்தை இவர் ஜாக்ராவஸ்தையில் அறிந்திலரெனினும் அனையாள் பிறந்திருந்தவிடம் இவருக்கு ஓர் ஆவேச நிலையில் தெரிந்தது. இவர்களிருவருக்கு மிசைந்த தெய்வீகப் பொருத்தத்தைப்பற்றி ஓர் சிறுகதையுண்டு. ஸ்ரீசாரதாதேவி வெகு சிறு குழந்தையாயிருக்கையில் ஓர்நாள் தாய் ஸங்கீதம் நடக்கும் ஓரிடத்துக்குக் குழந்தையை எடுத்துப்போயிருந்தபொழுது, அங்கு கூடியிருந்த பலசிறுவர்களையுங் காட்டி அவர்களுள் யாரை மணக்கப்பிரியமென்று தன் மகவை வினவ, அச்சிறுமி கதாதரனையே ஆனந்த பூரிதையாய் இருகைகளாலும் பன்முறைசுட்டிக்காட்டினாள். இக்கதை இவர்கள் குலங்களில் இன்னும் பலரால் விந்தையாய்க் கூறப்பட்டு வருகிறது.

திருக்கலியாணக் கோலத்திற்காக ஸ்ரீராமகிருஷ்ணருடைய தாயார் சில விலையுயர்ந்த ஆபரணங்களை அருகிலிருந்த லாஹாப்ரபுவின் கிருகத்திலிருந்து சில நாட்கள் இரவல் வாங்கிவந்து தன் மருமகளுக்குப் பூட்டினாள். பின் அந்நகைகளை உடையவருக்குத் திரும்பிக் கொடுக்கும் சமயம் வந்த பொழுது, சிறுமியணிந்திருந்த நகைகளை வாங்க மனமில்லாதவளாயும், இன்னது செய்வதென்று தெரியாதவளாயும் தயங்கினாள். இந்நிலையை ஸ்ரீராமகிருஷ்ணர் உணர்ந்து அச்சிறுமி நித்திரை சென்றதும் சந்தடியின்றி நகையனைத்தையும் கழற்றித் தாயிடம் ஒப்புவித்தனர். சிறுமி தூங்கியெழுந்து நகைகளைப்பற்றி வினவ, மாமியார் துக்கம் நிறைந்த மனத்தினளாய் "எனதருமைச் செல்வி! இவைகளைவிட மதிப்பிலும் அழகிலும் மிக்க உயர்ந்த ஈடற்ற ஆபரணங்களால் இனி உன்னைக் கதாதரன் அலங்கரிப்பான்" எனக்கூறித் தேற்றினாள். இச்சொல் உயர்ந்த உண்மையில் நிறைவேறிற்றன்றோ?

விவாக உத்ஸவம் முடிந்தபின்னர் ஸ்ரீசாரதாதேவி தன் பெற்றோருடன் தன்கிராமத்துக்குத் திரும்பிவந்து இளமைப்பருவத்துக்கேற்ற விளையாட்டுகளிலும் வேடிக்கைகளிலும் விநோதமாய்க் காலங்கழித்து வந்தாள். ஸ்ரீராமகிருஷ்ணரோ தக்ஷிணேசுவரம் சென்று தவத்திலாழ்ந்தனர். ஆகையால் இச்சிறுமி நாயகனை யடிக்கடி காணும் பாக்கியம்பெற்றாளில்லை. விவாகமான மறு ஆண்டு ஒரு முறை கதாதரர் கமார்ப்புகூர்வர அப்பொழுது, இவளும் அங்குவருமாறு அழைக்கப்பட்டாள். அவள் வயது ஏழேயாதலால் அச்சமயம் நிகழ்ந்ததொன்றும் செவ்வையாய் இவள் மனதிற்பதியவில்லை. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணருடன் வந்திருந்த அவர் மருமகன் ஹிரு

நயன், மூலையில் வெட்கி யொளித்திருந்த இவளைத் தேடிக்கண்டு தான் சிரமப் பட்டுச் சேகரித்து வந்த தாமரைமலர்களால் இவள் பாதகமலங்களை யர்ச்சித்து நின்றது மட்டும் இவரது களங்கமற்ற மனதில் ஆழ்ந்தூன்றியது.

இவ்வம்மணி இதற்கு ஆறு வருஷங்களுக்குப் பின்னர் மற்றொருமுறை கமார்ப்புகூர் போகச் சமயம் வாய்த்தது. ஆனால் அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்திலிருந்தார். சில மாதங்கள் மாமியாரகத்தில் தங்கிவிட்டுப் பின் ஜயராம்பட்டிக்குத் திரும்பிச் சென்றாள். பின் சிலமாதங்களுக்குள் தன் நாயகன் கமார்ப்புகூர் வந்த நற்செய்திகேட்டு மிக்க மனமகிழ்ச்சியுடன் அவரைக் காணுமாறு சென்றனள்.

ஸ்ரீ சாரதாதேவிக்கு வயது பதினான்கு. இப்பொழுதே கணவனுடைய அன்பை முதன் முதல் உணரும் பாக்கியம் பெற்றனள். வயதிற் சிறியோளாயினும் ஞானத்திற் பெரியவளாய் எமதம்மை தன்நாயகனைச் சந்தித்தவுடனேயே தன் உடல் பொருள் ஆவி யனைத்தையும் அவர் பாதாரவிந்தங்களில் சேர்ப்பித்து,

"என்னைநாடிய என்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட்டு வெளி
தன்னை நாடுவன் தன்னந்தனியனே" என்றவாறு

அவரைச் சரணாகதி யடைந்தனள்.

இவளுடைய அத்யந்த மனோபாவத்தை முற்று முணர்ந்த எம்பெருமான் இவளை ஆட் கொள்ளத்திருவுளம் பற்றி ஹிதோபதேசங்கள் பல செய்யத் தொடங்கினர்.

ஸ்ரீராமகிருஷ்ண தேவர் கிருஹஸ்தரென முதன் முதல் அவர் குரு ஸ்ரீ தோதாபுரிஸ்வாமி உணர்ந்தக்கால் அவரை நோக்கி உபதேசித்தருளிய தாவது: "நீ எந்த ஆசிரமத்திலிருந்தாற்றா லென்ன? விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் ஞானாக்னியை வளர்த்துக் கொண்டிருக்கும் புருஷன் தன் மனையாளுடன் கூட ஸதா வசிப்பவனாயினும் பிர்ம்ம ஞானத்திலேயே ஊன்றி நிற்கிறான். புமானிடத்திலும், ஸ்திரீயிடத்திலும் எவனொருவன் வித்யாஸ பாவமின்றி ஒரே ஆத்மாவைக் காண்பவனாய் அதற்குத்தக்கபடி நடந்து கொள்ளுகிறானோ அவனே பிரம்மஞானி. முமுக்ஷுக்களாயினும் ஸ்திரீ புமான்களிடம் பேதபுத்தியுள்ளவர்கள் உண்மைநிலைக்கு மிக அப்பாற்பட்டவர்கள்." இஃது ஸ்ரீராமகிருஷ்ணர் மனதில் நன்கு பதிந்திருந்தது. இவ்வுபதேசத்தின் ஒளியை முன்கொண்டு தன்



ஸாதனாபலத்தால் தன்னைச் சரணடைந்த பெண்மணியைக் கரையேற்ற யத்தனிக்கலாயினர்.

தான் செய்யத்தக்கதென நிச்சயித்தாராயின், அக்கர்மம் எஃதாயினும் சிறிதும் அசிரத்தையன்றி செய்து முடிக்கும் சுபாவமுள்ளவர் ஸ்ரீராமகிருஷ்ணர். ஆகவே தன் மனைவியைத் தன் பிரதம சிஷ்யையாய் பாவித்து தன்திருவுளக் குறிப்பை யவள் உணர்ந்து நடக்குமாறு சமயோசிதமாய் உபதேசமொழிகள் பல கூறிவந்தனர். ஸநாதன தர்மத்தின் நிலையை உணர்வித்து மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்பித்து, மனதை ஒரு நிலைப்படுத்தி பந்துவர்க்கங்களிடம் நடந்து கொள்ள வேண்டியமாதிரியும், பொருள்விஷயத்தில் மனம் பெறவேண்டிய சிற்றையும் எடுத்துக்காட்டி, லோகஸங்கிரஹார்த்தமாய் கால தேசவர்த்தமானங்களுக் கேற்றவாறு நடந்து கொள்ளவேண்டிய கிரமத்தையும் எடுத்துக்கூறினார். அமிருதம் போன்ற இவ்வுபதேசம் பசுமரத் தாணியறைந்தாற் போல் இவள் இளமனத்திற் பதிந்து ஆத்மஞானத்தை நாடச் செய்தது. தன் கணவனிடம் சிற்றின்பத்தைக் கனவிலும் நினைத்தறியாதவளாய்க் கணவனை ஈசுவராவதாரமா யறிந்து அவர் திருவடிக் கன்புபூண்டு பேரின்பத்தை நாடிநின்றனள். ஸச்சிதானந்த ரூபியாய் விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய ஸந்நிதியில் தான்பெற்ற பேற்றைத் தன் சிஷ்யைகளுக்கு விவகரிக்குங்கால் "என் இருதய கமலத்தில் அமிருதம் நிறைந்து எத்திக்குந் தானாகிப் பெருகிச்சென்றும் சிறிதுங் குறையாமல் ததும்பி நின்றது போன்ற ஓர் நிரதிசயமான அனுபவம் எனக்குண்டாயிற்று" என்று கூறியிருக்கின்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணதேவர் ஏழுமாதகாலம் கமார்ப்புகூரில் தங்கிவிட்டுதக்ஷிணேசுவரம் திரும்பிச்சென்றார். ஸ்ரீசாரதாதேவி தன் தாய்வீடு சென்றனள். அவரையணுகும்போது ஆவல் நிறைந்திருந்த அவள் மனம், அவரைப் பிரிந்தபோது ஆனந்தப் பித்தேறியிருந்தது. பழைய சாரதாதேவி மறைந்து அந்த ஸ்தானத்தில் புதியதோர் சாரதா தேவியே தோன்றினாள். ஆனால் இம்மாறுதல் மற்றோருக்கு எளிதில் விளங்கவில்லை. அன்பு ஒன்றைத்தவிர இரண்டாவது மற்றொன்றுக்கும் இவள் மனதில் இடமில்லை. ஆசைகள் அனைத்தும் ஒழிந்தன. ஆத்மாவினிடத்தில் மனது ஊன்றியதால் தேகபாவனை வரவரக் குறைந்தது. உடலில் கவனங் குறைந்தது. உடல் ஜயராம் பட்டியிலிருந்தும் உயிர் நாதனையே நாடி தக்ஷிணேசுவரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய மலரடியிலேயே நின்றது. சில சமயங்களில் உடலந் தனித்திருப்பதையும் சகிக்கலாற்றாதவளாய் வருந்துவள். பொறுமையாலும், மனோநிக்ரஹத்தாலும்

தன்னை யடக்கிக்கொண்டு "என்னிடம் அளவிலா அன்பு காட்டி அறியாத பக்குவத்தே என்னை யடக்கி யாட்கொண்ட என் நாதன் என்னை மறப்பனோ! ஒருக்காலும் மறவான்; மனமே சும்மாவிரு, சீக்கிரமே அவன் உன்னை அருகிலழைத்துக் கொள்ளுவான்" என்று தனக்குத்தானே சமாதானஞ் செய்து கொள்ளுவாள்.

இவ்வாறாக நான்கு வருஷங்கள் கழிந்தன. எம தம்மணியும் பதினெண்வயது நிரம்பப்பெற்றாள், எமதண்ணலின் கதிரொளியால் பொங்கிய இவளுடைய மனக்கடல் அலைகுறைதலின்றி மேனோங்கியே நின்றது. உண்மைக்காதலில் கசிந்துருகும் மனம் தேசகாலங்களால் கட்டுப்படமாட்டாது. சுற்றியிருந்ததும் தேகத்தை யொட்டியதுமான சுகதுக்கங்கள் அவளுடைய தூய்மையான மனோநிலையைக் கறைப்படுத்தக் கூடிய வலியுடைத்தாயில்லை. மனம் அன்பின்வழியே இடைவிடாதுருகி நின்றது. இச்சமயத்தில் இவளது தூயமனத்திலும் கவலையுண்டாக்க வல்லதோர் செய்தி இவள் காதுக்கெட்டியது. ஒன்றுமறியாத மூடர்கள் சாரதாதேவியின் கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாயும் கோவண மிழந்ததுந் தெரியாதவனாய் ஹரிநாமத்தைப் பிதற்றிக் கொண்டு திரிவதாயும் பேச ஆரம்பித்தார்கள். இவளுடைய தோழிகள் இவளைக் கண்டால் கணவனுக்குப் பித்தேறியதைப்பற்றிப் பிரலாபித்துத் துக்கிக்கலாயினர். மாயையின் போக்குத்தான் என்னே! எமதன்னையும் இதை யெல்லாங்கேட்டுச் சோகத்திலாழ்ந்தனர். துக்காக்கிராந்தையாய், "அவரும் இம்மாறுதலடைந்து விட்டனரோ? ஜனங்கள் கூறுமாறு என் நாதனுக்கும் பித்தப்பிடிக்கலாச்சுதோ? இஃதுண்மையாயின் நானினி இங்கு தாமதிப்பது சரியல்ல. அவரண்டை சென்று அவரைப் போஷித்தல் என் கடமையன்றோ?" எனச் சிந்திக்கலாயினள். தக்ஷிணேசுவரம் சென்று தன் ஆருயிர்த்தலைவனை நேரிற் கண்டு தான் செய்யத் தக்கதைச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்.

## விவேகானந்த சுவாமிகளது அருள்வாக்கியத் திரட்டு.

நன்மை உண்மையை யடுத்துள்ளது; ஆனால் அது உண்மையாகாது. தீமையால் கலக்கமுறாமல் நிற்கக் கற்றுக் கொண்ட பின்னர் நன்மையால் சந்தோஷப்படாமலிருக்க நாம் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். நன்மை தீமை இவ்விரண்டிற்கும் நாம் அதீதமெனக் காணல் வேண்டும். நன்மை தீமைகளைத் திருத்தும் வகையை ஓர்ந்து அவை இரண்டும் அவசியமெனக் காணல்வேண்டும்.

துவைதமாகிய எண்ணம் பூர்வீக பாரசீகரிடத்திருந்து வந்துள்ளது. உண்மையில் நன்மையும் தீமையும் ஒன்றேயாகி நமது மனத்தை இருப்பிடமாய்க் கொண்டுள்ளன. மனது சமத்துவத்தையடையும்பொழுது நன்மை தீமைகளால் அது தாக்கப்படுவதில்லை.

பந்தம் முற்றிலும் அறுமாயின் அப்பொழுது நன்மையாகிலும், தீமையாகிலும் மனத்தைத் தாக்காது. நாம் பந்தநிவர்த்தியாகிய நிலையிலும் பரமானந்தப் பிராப்தியிலும் சுகித்துநிற்போம். தீமையானது இரும்பால் செய்தவிலங்கு; நன்மை பொன்னாலாய விலங்கு; ஆகவே இவ்விரண்டும் விலங்கே. விடுதலையடைந்திரு. உனக்குப் பந்தமில்லையென ஐயந்திரிபறத் தெரிந்துகொள். இரும்பு விலங்கின் கட்டைத் தளர்க்கப் பொன்விலங்கைக் கைப்பற்று. பின்னர் இரண்டையும் உதறித்தள்ளு.

தீமை யென்னும் முள்ளானது நமது சதையில் தைத்துக் கொண்டிருக்கிறது. இந்த முள் எந்தச் செடியினுடையதோ அச்செடியினின்றுமே இன்னொரு முள்ளை யெடுத்துத் தைத்த முள்ளைப் பிடுங்கவேண்டும். பின்னர் இவ்விரண்டையும் எறிந்துவிட்டுச் சுயேச்சையாயிரு.

இவ்வுலகின்கண் எப்பொழுதும் ஈகையாளியின் அந்தஸ்தை வகித்துநில். எல்லாவற்றையும் கொடுத்துவிடு; அதற்குப் பதில் ஒன்றையும் கோராதே, பிரேமையைச் செலுத்து. யாவர்க்கும் உதவியைச் செய்; சுசுருஷை பண்ணு; உன்னால் இயன்ற எந்த அற்பப் பொருளையும் கொடுத்துவிடு. ஆனால் ஒருபொருளைக் கொடுத்

து அதற்கீடாக இன்னெருபொருளை வாங்கிக்கொள்ளுந் தன்மையைத் தவிர். கொடுக்கும்போது மாத்திரம் யாதொரு நிபந்தனையுங் கூருதே. உன்மேலும் மற்றவர்களும் யாதொரு நிபந்தனையும் சுமத்தமாட்டார்கள். கடவுள் நமக்கு எவ்வளவு உதாரத்துவத்துடன் கொடுக்கிருரோ அவ்வளவு உதாரத்துடன் நாமும் கொடுப்போமாக,

கடவுள்தான் தாதா. உலகிலுள்ள யாவரும் வியாபாரிகள்கள் போல்வர். கடவுளிடமிருந்து ஒரு செக் (Cheque) அம்சாவது உண்டிபெற்றுக் கொண்டால் அஃது எங்குஞ் செலாவணியாகும். கடவுள் தெரிவாக உணரக் கூடாததும் வாக்குக் கப்பாற் பட்டதுமான பிரேமரசமாம்; ஸ்வானுபவத்தில் ஓர்ந்துணரக் கூடுமேயன்றி இலக்ஷணங்களுடன் எடுத்துரைக்கப் படுவதன்று.

போலீஸ்காரரால் பின் தொடரப்பட்ட மனிதனைப்போல நாம் இவ்வுலகின்கண் ஓடிக்கொண்டிருக்கிறோம். இதனுல் உலகத்தின் சௌந்தரியம் நமக்குப் புலப்படுவதில்லை. நம்மைப் பின் தொடர்ந்து வரும் இந்தப் பயம், யாவும் சடவஸ்துக்களிடத்தில் நமக்கிருக்கும் நம்பிக்கையால் உண்டாயிருக்கிறது. சடப்பொருளின் இருக்கைக்கு அதனை ஓர்ந்துணரும் மனத்தின் சந்நிதானமே ஹேதுவாக இருக்கிறது. நாம் பார்க்கும் யாவும் சடப்பொருள்களினின்றும் ஊற்றுநீர் போல் வெளிவரும் கடவுளேயாம்.

திராக்ஷக்கொடியில் திராக்ஷக்குலைகள் அனேகமாக இருப்பதுபோல காலவளவில் ஏசுகிருஸ்துக்கள் பலர் அவதரிப்பார்கள், அப்பொழுது லீலை முற்றுப்பெறும். எல்லோரும் மறைந்து விடுவார்கள். ஒரு கொப்பரையில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கும்பொழுது முதலில் ஒரு குமிழி, பின்னர் இன்னெரு குமிழி, பின்னர் இன்னென்று, இவ்விதமாகக் குமிழிகள் அதிகமதிகமாகிக் கொதி கிளம்பி நீராவியாகித் தண்ணீர் மறைந்துவிடுகிறது. இதுவரை உலகமீன்ற குமிழிகளில் புத்தரும், கிறிஸ்துவும் இரண்டு பெரியகுமிழிகளாக மதிக்கப் படுகின்றனர். மோஸஸ் என்பவர் ஒரு சிறியகுமிழி. இதைவிடப்பெரியபெரிய குமிழிகளுந்தோன்றின.— காலஞ்செல்லச் செல்ல எல்லாம் குமிழிகளாகி மறைந்துவிடும். ஆனல் சிருஷ்டி, எப்பொழுதும் புதிதாகவேயிருந்து, புதுஜலத்தை உண்டுபண்ணி முன்போலக் குமிழிகளை உண்டாகும்படி செய்து மறையும்படி செய்யும்.

(வரும்)

# ஸங்கீத ஸ்வப்னம்.

"ஓசை ஒலியெலாமானுய் நீயே
உலகுக் கொருவனுய் நின்ருய் நீயே.........
வாசமலரெலா மானுய் நீயே......
பேசப்பெரிது மினியாய் நீயே
பிராணுயடி யென்மேல் வைத்தாய் நீயே"

ஒரு சாயுங்காலத்தில் நானும் கனகசபையும் ஒன்றும் பேசாமல் கடற்கரை மணலிலே உட்கார்ந்துகொண்டிருந்தோம். மணி ஆறடிக்கலாயிற்று. அலைகள் சின்னஞ்சிறு குன்றுகள் போல எழும்பி ஒன்றையொன்று தொடர்ந்து கரையில் வந்து மோதிச் சிதறின. தினகரன் வெகுதூரத்திற்கப்பால் தன் கிரணங்களைக் கனக மழைபோலச் சொரிந்து கொண்டிருந்தான். அவன் தனது கதிர்களால் மேகக்கூட்டத்தைத் தாக்கினது ஓர் யுத்தவீரன் தன்னை எதிர்க்க வந்த ராக்ஷஸ சேனைகளை அடித்துத் துரத்தி யோட்டியது போல இருந்தது. சிறிது நேரத்தில் அவனும் வட்டப் பம்பரம் போலச் சுழன்று கொண்டு மேற்றிசையில் மறைந்தான்.

உற்ருர் உறவினர் இல்லாத என் மனதிலே சோகம் மேலிட்டு அதனுடன் பக்தியும் வைராக்கியமும் கலந்திருந்தன. இயற்கை வனப்பிலும் மனிதனுடைய ஹிருதயத்திலும் ஒளித்திருக்கும் கள்வனை என் மனம் நாடிற்று. நான் கண்ட ஸூர்யாஸ்தமனம் கடவுளின் தரிசனம்போல விருந்தது. அதை என்னுல் எடுத்துரைக்க முடியாது. என் உடலும் பூரித்தது; மனமும் ஆனந்தக் கூத்தாடியது.

வானவில்லின் நானாவித வண்ணந்தோய்ந்த முகிற்குலங்கள் கணந்தோறும் அவற்றின் நிறத்தையும் ரூபத்தையும் பலவாறு மாற்றிக்கொண்டே யிருந்தன. உலக அமைப்பு என்ன அற்புதம்! ஜீவகோடிகளின் வாழ்க்கை மேன்மை விளங்குவதற்காகவோ இவ்வற்புதக் காட்சிகளை அவன் அமைத்துள்ளான். சில நிமிஷங்களுக்கு, நான், நீ, எனது, உனது, என்ற வேற்றுமைகளழிந்து ஜீவாத்மாவும் சைதன்யத்திற் கலந்து நின்றது. அவன் மாயை என்னே!

"நீ பாட்டுக் கச்சேரிக்கு வருகிருயா?" என்ற என் சினேகிதனுடைய கேள்வி என் மனதைக் கலைத்தது. அக்கேள்வியை அவ்வளவாகக் கவனியாமல் முன்போலவே என் மனதை உயர் நிலையிலே நிறுத்த முயன்றேன். திரும்பவும் அக்கேள்வியே பிறக்க "எங்கே பாட்டுக் கச்சேரி?" என்றேன். "தெரியாதா உனக்கு, சந்திரசேகர அய்யர் வீட்டிலே, பிருந்தாவனத்தி லிருந்து கோபால தாஸர் வந்திருக்கிருராம். அவர் தமது வீணகானத்தினுல் சேதன சேதனப் பொருள்களெல்லாவற்றையும் மயக்க வல்லவராம். அவருடைய வீணகானத்தில் பக்திரஸமே மிகுதியாக நிறைந்திருக்குமென்கிருர்கள். அவரைத் தரிசிப்பதினுலேயே ஜனங்கள் பரவசமடைந்து விடுவார்கள் என்றும் சொல்வாருண்டு. நான் போவது திண்ணம்; நீ வருகின்ருயா?" என்ருன் கனகஸபை. அப்பொழுது அடைந்திருந்த அமைதியை இழக்கப் பிரியமில்லாதவனுய், "வரத்தான் வேண்டுமோ?" என்று கேட்டேன். அதற்கு அவன் "நீ இதுகாறுங் கேளாத ஸங்கீதம்; இச்சமயத்தைக் கைவிடக் கூடாது," என்ருன்.

போகும்போது நான் கண்ட காட்சியையும் எனக்குக் கிடைத்த ஆனந்தத்தையும் நினைத்து வியப்படைந்தேன். பங்களாவை அணுகும்போதே அதிமதுரமான ஸங்கீதம் என் செவிவழி புகுந்து மற்றெல்லா நினைவுகளையும் ஓட்டி விட்டது. சந்திரசேகர அய்யருடைய வீட்டுக் கூடத்தில் இதற்குள் கணக்கற்ற ஜனங்கள் கும்பலாகக் கூடிவிட்டார்கள். இப்பெருங் கூட்டத்தினிடையே நாங்கள் நுழைந்து சென்று ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டோம்.

மனோவாக்குக் கதீதமாகவும் பிரணவ ஸ்வரூபமாகவும் ஸர்வ வியாபகமாகவு மிருக்கிற பரமாத்மா எல்லோர் மனதையுங் கவரக் கூடிய பேரழகு வாய்ந்த சிறுபாலனாகி வண்ணச் சிறு கைகளிலே சின்னஞ் சிறு குழலேந்தி வேணுகோபாலனாக விளங்கிய உருவத்திலே முதன் முதலாக என் திருஷ்டி பதிந்தது. அவனுக்குச் செய்திருந்த அலங்காரங்களை என் மனம் நாடியது. பின் அவனுடைய ஸந்நிதானத்திலே நாமதாரியாய், அரைக்கண்ணடைத்து, ஈசனிடத்திலே ஈடுபட்டு, மெய் மறந்தவராய், தெய்வீக அருள் நிறைந்தவராய் விளங்கிய கோபால தாஸருடைய முகாரவிந்தத்திலேயும் என் திருஷ்டி பதிந்தது. முதிர்ந்த அனுபவத்தைக் காட்டிய அவருடைய கைவிரல்கள் வீணையின் தந்திகளை சுயேச்சையாகத் தழுவி பக்தி ரசத்தை ஊட்டுகிற அமுத கீதத்தைப் பொழிந்து கொண்டிருந்தன.

அவர் அருகாமையில் பல ஸங்கீத வித்வான்களும் மற்றவர்களும் சித்திரம்போல ததாகாரமாய் உட்கார்ந்து கொண்டிருந்தனர், வீணையினின்று உண்டாகிய ஒலியலைகளைத் தவிர்த்து, அங்கு வேறு தொனிகளாவது அசையும் பொருள்களாவது இருப்பனவாகத் தோற்றவேயில்லை. அக்கூடம் இன்னிசை வடிவான கடலோ எனத் தோற்றியது. நானும் அப்பெரிய நெருக்கத்திலே எப்படி உட்கார்ந்தால் கடைசி மட்டும் கால் கடுக்காமல் இருக்கலாமோ அப்படி ஓரிடத்தில் அமர்ந்து ஸங்கீதத்தில் என் மனதை ஏகாக்ரப்படுத்தினேன்.

அவர் பைரவி ராகம் வாசிக்க ஆரம்பித்தார். அது எல்லோர் மனதையும் கரைக்கும். அதன் சில தொனிகள் கேட்போரைத் தூங்கவுஞ் செய்யும். அவருடைய விரல்கள் அத்தகைய தொனிகளை எழுப்பின. மெள்ள மெள்ள என் கண் முன்னிருந்த கூட்டம் மறைந்தது. கோபாலதாஸரும் மறைந்தார். வீணையும் மறைந்தது. ஓர் பேரொளி பரவியது; அதுவும் சிறிது குறைந்தது.

ஓர் மலைச்சரிவு, அங்கே உயர்ந்து வளர்ந்த மரங்கள் தங்கள் சாகைகளை ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருந்தன. தரை, குறுஞ்செடிகளாலும்பலப் புல்வகைகளாலும் முற்றிலும் மூடப்பட்டிருந்தது. புஷ்பச் செடிகள் பல வர்ணங்களோடு நானாவிதமாகப் புஷ்பித்திருந்தன. அவைகள் மனிதனுக்குப் பயன்படாமற் தங்கள் பரிமளத்தை அக்கானகத்தில் நிறைத்தன. காலைப்பகலோன் தன் மஞ்சள் நிற வெயிலை அடர்ந்த கிளைகளினூடாக நுழைத்து வேங்கைப் புலியின் தோல் விரித்தாற்போல ஆங்காங்கே விரித்திருந்தான். எங்கும் மௌனம் நிறைந்திருந்தது. மந்தமாருதம்



எங்கிருந்தோ ஓர் இனிய கானத்தைச் சுமந்து வீசியது. அது சொல்லுக்கடங்காத பேரானந்தத்திலே என்னை அழுத்தி விட்டது. பக்ஷி ஜாலங்கள் உச்சாணிக் கொப்புகளிலிருந்து சலித்துக் கொண்டிருந்தன. குயிலினங்கள் பாடின. வண்டினங்கள் ரீங்காரம் செய்து அலர்ந்த புஷ்பங்களை மருவித் தேனுண்டு களித்தன. சில்வண்டுகள், "ஷூயூங்! ஷூயூங்!" என்று சப்தித்துக் கொண்டிருந்தன. தென்றற்காற்றில் இலைகள் அசைந்து கலகலத்தன. இவற்றிற்கெல்லாம் மேலாக எங்கிருந்தோ வந்த ஓர் இனிய கானம் என் காதின் பக்கமாக முழங்கிக் கொண்டிருந்தது.

இப்பிரதேசத்தைத் தாண்டி மலையடிவாரத்தை யடைந்தேன். இவ்விடத்தில் சிற்றாறு ஒன்று மலையின் உச்சியிலிருந்து 'சோ' என்று ஓர் தடாகத்தில் விழுகின்றது. அங்கிருந்து வெளிக்கிளம்பி பாறைகளினூடாக, "கடகடா களகளா" என்ற சத்தத்தோடு வளைந்து திரிந்து ஒழுகி ஸமநிலத்தை நாடுகின்றது. நான் இத்தாழ்வரை வழியாக நடந்து ஸமநிலப் பிரதேசத்தை அடைந்தேன். இங்கு நதியின் இருகரைகளிலும் தென்னை, கமுகு, முதலிய விருக்ஷங்கள் அணிவகுத்தாற்போல நிற்கின்றன. பிறகு இந்த ஆறு கற்களினூடாகப் பிதற்றிச் சலித்துச் செல்கின்றது. நான் அவ்விருக்ஷ ஜாலங்களுக்கிடையே ஓர் புராதனக் கோயிலின் அகன்ற படித்துறையை இங்கு கண்டேன்.

நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தேன். சிலர் ஆற்றின் மத்தியிலுள்ள பாறையொன்றின் மேல் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சிறுமியொருவள் அருகாமையிலிருந்து கல்லுங்கரையப் பாடினாள். அவர்கள் இந்த உலகத்தாரோ என்று சந்தேகம் அடைந்தேன். அங்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தாரே என்று தோன்றியது. அச்சிறுமியின் கானமும் அவர்களுடைய 'கலகல' வென்ற நகைப்பொலியும் கபடமற்ற வார்த்தைகளும் சிறிது தள்ளியிருந்த மலைத்தொடரின் வளைவிற்பட்டு எதிரொலித்தன. அவர்களுடைய ஸம்பாஷணையைக் கேலிபண்ணுவது போல நதியும் சத்தம் செய்தது. இந்த இளைஞர் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த நான், "ஆஹா! இந்த இடத்திலே நான் மட்டும் இவர்களுடன் சேராமல் விலகி நிற்கிறேனே; என்னுடைய யௌவனத்தையும் இதுபோல ஆனந்தமாகச் செலவு செய்யக் கூடாதா?" என்று ஏங்கினேன். மெதுவாக அவர்களை நெருங்கி நடந்து கொண்டிருந்த சம்பாஷணையில் நானும் சேர்ந்து கொண்டேன். பிறகு, என் தரத்தவனை ஒருவனுடன் சேர்ந்து நீரோடையிலிறங்கி ஸ்நானம் செய்தேன். இது என்ன புதுமை! அவனுடைய பெயரும் கனகஸபையாக விருந்தது. நானும் அவனும் அத்யந்த சிநேகிதர்களாகி விட்டோம். குளித்ததும் அவர்கள் எல்லோரும் ஸ்வாமிதரிசனம் செய்துப் பின் இரண்டு மைலுக்கப்பாலிருந்த தமது ஊருக்குப் புறப்பட்டார்கள். எனது சிநேகிதன் என்னையுங்கூட வரும்படி அழைத்தான். வழியெங்கும் ஸங்கீதம் ஒலித்தது.

அவர்களுடைய ஊர் அந்த அடிவாரத்திலிருந்து இரண்டு மைலுக்கப்பால் இருந்தது. பாதையின் இரு பக்கத்திலுமுள்ள சோலைகளிலே பறவைகள் தத்தம் பாஷையில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தன. தென்னை, மா, பலா, முதலிய விருக்ஷங்களுக்கிடையே மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், மந்தாரை, ஜவந்தி, சாமந்தி முதலிய நறுமலர்கள் பூத்துச் சொரிந்திருந்தன. அந்தக் காலை வேளையிலே மெய்வருந்தப் பாடுபடும் வேலைக்காரர்கள் பலர் வேலை செய்துகொண்டிருந்தார்கள். எங்கும் பாட்டு நிறைந்திருந்தது.

எப்பக்கமும் வயல்கள் விரிந்து கிடந்தன. சில மனிதர்கள் தங்கள் வேலைக்காரர்களை உயர்ந்த குரலில் ஏவிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பாடிக்கொண்டே வேலை செய்தார்கள். வழியோரத்தில் ஒருத்தி ஒரு மரத்தில் துணிகொண்டு ஓர் தொட்டிலமைத்து அதிலே தன் குழந்தையைவிட்டு,

"மன்னே மாமணியே! மனதிலே வாழ்துரையே!
என்னுள்ளே தங்கும் என்னன்பே! கண்வளராய்!"

என்று தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

ஏகாந்தமான ஒரு வயலிலே கருட பக்ஷிகள், 'கிருஷ்ணா!' என்று கத்திக்கொண்டே வட்டமிட்டன. இங்ஙனம் பலவிதமான காட்சிகளின் ஆனந்தத்தை நான் அனுபவித்த பொழுதும் இடைவிடாத ஓர் இனிய கானமும் என் செவிவழி புகுந்து என் பிராணாதாரத்தைப் பலப்படுத்தி நின்றது.

என்னுடன் நடந்து சென்றவர்கள் எல்லோ ரிருதயத்திலும் சந்தோஷமும் உற்சாகமும் ததும்பின. அவர்களும், போகும் மார்க்கத்தில் மௌனம் நிறைந்திருந்த இடங்களிலெல்லாம் தமது இனிய குரலினாற்பாடி ஒலியலையெழுப்பினர். அதுவும் வெளியில் நிறைந்திருந்த மௌனத்தோடு இசைந்து என் உள்ளத்தில் ஒலித்த மதுர கீதத்தில் லயப்பட்டது.

கனகசபையின் தாய் தந்தையர்கள் என்னிடம் அளவிலா அன்பு பாராட்டினர். நானும் அங்கேயே பிறந்து வளர்ந்தவனைப் போல எல்லோருடனும் பழகிவிட்டேன்; இந்த இடத்திலேயே பிறந்து வளர்ந்தவனைப்போல ஸ்திரமாக உறைந்து விட்டேன். கனகசபையுடன் சேர்ந்து தினமும் வயற்புறங்களில் வேலைகள் செய்வேன். காலை முதல் சாயுங்காலம் வரையும் உழைத்து விட்டுப் பொழுது சென்றதும் வீடு திரும்புவேன். சந்தோஷமாகப் பாடிக்கொண்டும் சம்பாஷணைகள் செய்து கொண்டும் திரும்பி வருகிற போது வழி நடப்பதே தெரியாது. வீடு வந்து சேர்ந்ததும் வாசற் பக்கத்திலே கட்டிலில் உட்கார்ந்து கொண்டு சிறுவர்களுடன் பேசிக் கொண்டிருப்போம். அனேக தினங்களில் கனகஸபையின் சிறிய தங்கை ஆகாசத்திற் சஞ்சரிக்கும் பறவைகளும் ஆடு மாடுகளும் ஸ்தம்பித்து ப்ரமிக்கும்படியாகப் பாடுவாள்.....................இதனோடு இசைந்தே அந்த இடைவிடாத கானமும் ஒலித்துக் கொண்டிருந்தது.

(இன்னும் வரும்.)

# சிருஷ்டி ஜாலம்.

நெருப்பவிக்கும் ஆட்களைக் காப்பாற்றும் நீர்ப் போர்வை:— தீப்பற்றி யெரியும் வீடுகளை அவிக்கப் புகும் ஆட்களுக்கு அமெரிக்கா தேசத்தில் ஓர் அற்புதமான நீர்க்கவசம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. அதை யணிந்துகொண்டு கொழுந்து விட்டெரியும் தீ மத்தியில் செல்வது ஸாத்யமாகின்றது. சிறிதும் அபாயமில்லை. தீயால் எரிக்கப்படாத கல்நார் அல்லது அஸ்பெஸ்டாஸ் என்னும் பொருளாலான இருமடிப்புக் கவசத்தின் மத்தியில் எப்பொழுதும் நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. இக்கவசம் நீரால் நிரம்பியிருப்பினும் உள்ளிருப்பவனை உஷ்ணத்திலிருந்து முற்றும் காப்பாற்ற வல்லதல்ல. ஆனால் இது நிறைந்து தலையிலணிந்துள்ள துவாரம் நிறைந்த கவசத்தின் வழியாய் வேகத்துடன் வெளிப்போந்து நீரூற்றைப் போல் பெய்து இவனைச் சுற்றி இடைவிடாமல் நிற்கும் ஓர் நீர்ப் போர்வையை உண்டாக்குகின்றது. இவ்வாறு ஸதா வர்ஷிக்கும் நீரைக்கடந்து தீ மனிதனை யணுகவியலாது. தெருவிலுள்ள நீர்நிலையிலிருந்து ஓர் குழாய் இவன் உடுப்பில் சேர்க்கப்படுகின்றது. இது வழியாய்த் தேவையான நீர் வருகின்றது. சுவாசத்துக்குத் தக்க காற்றுக்கிடைப்பதற்கும் வழி செய்யப்பட்டிருக்கின்றது. இம்மாதிரி கவசமணிந்த மனிதன் தீ மத்தியில் பிரவேசித்து அபாயத்திற் கிடக்கும் பிறரையும் சிறிதும் துன்பமின்றியில் எடுத்துக் கொணர்ந்து விடலாம்.

ஜீவஹிம்ஸையின்றி மாம்ஸ ஆகாரமாம்!—ஜான் டெக்டர் என்னும் ஓர் ஆராய்ச்சி வித்பன்னர், ஓர் சிறு மாம்ஸத்துண்டால் வேண்டியவளவு அதே மாதிரி மாம்ஸத்தைத் தகுந்த ரஸாயனங்களின் உதவியால் விருத்தி செய்யலாமென்று நம்புகிறார். ஒரு அவுன்ஸ் நிறைக்குக் குறைந்த ஓர் சிறு துண்டு ஓர் ரஸாயனத்தில் ஒரு புட்டியில் ஒரு வாரம் வைக்கப்பட்டதில் மூன்றரைப் பவுண்டு நிறையுள்ளதாய் அதேமாதிரி மாம்ஸமாய் வளர்ந்ததாம். ஜீவன் தேகத்தை விட்டகன்ற பின்னரும் சிறிதுகாலம் தேகத்தின் பல பாகங்களும் அழிவடையாமல் உயிருடனிருக்கிற தென்று அவர் காட்டுகிறார். இதற்குக் காரணம் தேகம் 'ஸெல்ஸ்' எனப்படும் அணுரூபமான பல ஜீவராசிகளின் தொகுதியேயாம். இவைகள் ஒன்றைவிட்டொன்றகன்று அழியும் பொழுதே நமது தேகத்திலுள்ள

மாம்ஸத்துண்டுகள் உயிரை யிழக்கிறதெனக் கூறலாம். அதற்கு முன்பாக அவைகளை யெடுத்துத் தகுந்த திரவத்தில் வைத்தால், சில செடிகளின் கிளைகள் வெட்டி வேறிடங்களில் நட்டால் அவை அங்கே வேரூன்றி வளர்வதுபோல் ஓர் உயர்ந்த ஜந்துவின் தேகத்தில் வாஸம் செய்து வளர்ந்துவந்த ஜீவராசிக் கூட்டமாகிய இந்த மாம்ஸம் இங்கே தனக்கிசைந்த ஆகாரம் கிடைக்கப் பெற்று வளர்கிறதென்று இவர் கூறுகிறார். இது ஸாத்யமாயின் ஸமுத்திர ஜலமே மாம்ஸத்துண்டுகளுக்குத் தகுந்த ஆகாரமாகலாமென்றும் ஜீவவதை யின்றியிலும், சிரமமின்றியிலும், ஏராளமான மாம்ஸம் உற்பத்தி செய்யலாமென்றும் இவர் நம்புகிறார்.

சமுத்திரத்தி லாழ்ந்துபோன கப்பல்களை மீட்பது:—ஐரோப்பிய மகாயுத்தத்தில் மூழ்கியச் சண்டைக்கப்பல்களன்றி தங்கம் வெள்ளி முதலிய நாணயங்கள் நிறைந்த பல கப்பல்களும் வெகுகாலமாய் சமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. இவைகளை மீட்பதற்குத் தக்கப் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகின்றது. கப்பல் மூழ்கியிருக்குமிடத்தை நீரில் மூழ்குவோர் நிர்ணயித்து அவைகளில் துவாரம் விழுந்திருக்கு மிடங்களைக் கண்டுபிடிக்கின்றனர். பின்னர் அந்த நிலைக்கு மேலே வேறு கப்பல்களைக் கொணர்ந்து தகுந்த யந்திரங்களின் உதவியால் மூழ்கிக்கிடக்கும் கப்பலுக்குள் காற்றை வெகு வேகமாய்ச் செலுத்துகின்றனர். காற்று உள்ளே செல்லச் செல்ல எந்த துவாரத்தின் வழியாய் நீர் உள்ளே நுழைந்ததோ அது வழியாய்ச் சிறுகச் சிறுக அந்நீர் வெளிச் செலுத்தப்படுகின்றது. இவ்வாறாகத் தண்ணீர் நிறைந்திருந்த கப்பலின் அடிப்பாகத்தில் காற்றைப் பிடித்தடைத்துத் தக்க சமயத்தில் மூழ்கும் மனிதர்கள் ஆயுதங்களுடன் கீழ்ச் சென்று துவாரங்களை மறுபடி நீர் உட்போகாவண்ணம் செப்பனிட்டுவிடுகின்றனர். பின்னர் உயிர் பெற்றெழுவதுபோல் கப்பல் மேற் கிளம்பி நீர்மட்டத்திற்குத் தானே வந்து சேருகிறது. இம்முறையால் ராயல் ஜார்ஜ் என்னும் ஓர் கப்பல் ஆறு நாட்களில் மீட்கப்பட்டதாம். நடு சமுத்திரத்திலேயே அதைச் செப்பனிட்டு மறுபடி அதை முன்னிருந்தவாறு கடலில் ஓடச் செய்தனராம்.

சப்தத்துக்கும் ரூபத்துக்குமுள்ள சம்பந்தம்.—அழகிய உருவம் இனிய கானமாய் மாறியது. டாக்டர் மில்லர் என்னும் ஓர் நிபுணர் ஓர் அழகான உருவத்தைச் செவிக்கினிய கானமாய் மாற்றக் கூடுமென்றும் அந்த கானத்தாலேயே அதற்கனுகுணமான ரூபத்தைத் திருப்பவு முண்டாக்கக் கூடுமென்றுங் கூறுகிறார். வெவ்வேறு இந்திரியங்களால் வெவ்வேறு விதமாய் உணரப்படினும் இன்



துகர்ச்சி யெல்லாம் ஒன்றே யென்பதும் தோற்றத்தில் மட்டுந் தாரதம்மிய மென்பதும் இவர் கொள்கை.

ஓர் இனிமையான பாட்டின் கிராமபோன் பிளேட்டை இவர் உற்று நோக்கியபொழுது அதன் கோடுகளில் ஓரிடத்தில் அழகிய முகம் போன்ற வளைவு ஒன்று தென்பட்டதாம். இதனின்றும் அவ்வுருவத்துக்கும் அதனாலுண்டாகும் கானத்துக்குமுள்ள ஸம்பந்தத்தைச் சிந்தித்து, ஒவ்வொரு அழகிய உருவத்தாலும் இனிய கானத்தை யுண்டாக்கக் கூடுமென்னும் தீர்மானத்தை யடைந்துப் பின், அதைத் தக்க கருவிகளைக் கொண்டு பரிசீலனை செய்ததில் அத்தீர்மானம் முற்றும் உண்மையென்றே வெளியாயிற்று. அழகிய உருவத்தால் இனிய ஒலியும், அவலட்சணமான உருவத்தால் கடோரமான சப்தமும் உண்டானதாகவும் ஆங்காங்குண்டான ஒலியலைகளைப் 'போனோடேக்' போன்ற ஓர் கருவியால் கிராமபோன் பிளேட் போன்ற தகடுகளில் பதிப்பித்ததில் கானமாயிருந்த முதலுருவங்களே திரும்பத் தோன்றியதாகவும் கூறுகிறார்.

வட்டிக்கு வட்டி:—இதன் அர்த்தத்தை உணர்ந்தோர் சிலரே. ஒரு ரூபாய் ஆயிரம் வருஷத்துக்கு நூற்றுக்கு வருஷத்துக்கு ஐந்து வீதம் வட்டிக்குவட்டி சேரும்படி விட்டிருப்பதாய் வைத்துக் கொள்வோம். அதன் தொகை நாம் என்றுங் கண்டறியாத நிதியாகும். கணக்கிட்டுப் பார்த்தால் ஒன்றரைக் கோடிகோடிகோடி ரூபாய் ஆகிறது. இத்தொகையை வெள்ளியாக மாற்றி உருக்கி வார்க்க முடியுமானால் பூமியின் பரிமாணமுள்ள ஓர் பிரம்மாண்டமான கோளமாகும்.

## வர்த்தமானம்

பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவருடைய எண்பத்தாறுவது பிறந்த நாள் மஹோத்ஸவம் நிகழும் மாசி௴ 30௳ (13-3-21) ஞாயிற்றுக்கிழமை மயிலாப்பூர், பிராடிஸ் ரோடிலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் கொண்டாடப்படும்.

ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்களுக்கு அன்னமளித்தல் உத்ஸவத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். முற்பகலில் பஜனையும் பிற்பகலில் ஹரிகதையும் பிரஸங்கங்களும் நடைபெறும்.

இச்சிறந்த கைங்கரியத்துக்குப் பொருளுதவி செய்ய விரும்புவோர், தொகையை ஸ்ரீராமகிருஷ்ணமடம் மானேஜருக்கு அனுப்பலாம்.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளின் ஐம்பத்தொன்பதாவது பிறந்த நாட் கொண்டாட்டம் சென்ற தை௴ 25௳ (6-2-21.) மிக்க விமரிசையாய் எல்லாவிடங்களிலும் நடந்தேறியது.

* *
*

வங்காளத்தில், பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால் ஓர் நெசவுச்சாலை யேற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது இரண்டு தறிகள் இருக்கின்றன. இம்மாதிரி பல விடங்களில் சிறு தொழிற் சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்துடன் சிலர் சேர்ந்து மிக்க ஊக்கத்துடன் வேலை கற்றுக்கொள்ளுகின்றனர். ஸ்ரீநிவேதிதா பெண் பாடசாலையிலும் பெண் பிள்ளைகளுக்கு இத்தொழில் ஓர் ஸ்திரீயால் கற்பிக்கப்படுகின்றது.

* *
*

ஸ்ரீராம கிருஷ்ண மாணவரில்லம், மயிலாப்பூர், சென்னை: இஃது சென்ற பதினாறு வருஷங்களாக மயிலாப்பூரில் நடைபெற்றுவரும் ஓர் சிறந்த தர்மம். சென்னை ராஜதானியில் பல ஜில்லாக்களிலிருந்தும், இதர விடங்களிலிருந்தும், மதராசுக்குப் படிக்க வரும் ஆரிய மதத்தைச் சார்ந்த வாலிபர்கள் கல்வியில் மட்டும் சிரத்தையுள்ளவர்களாயின் எந்த ஜாதியாராயினும் இவ்வில்லத்தில் உதவிபெறுகிறார்கள். தருமத்திற்கு அன்னமும் வசிக்க இடமும் பெறுவதன்றி, சொந்த வீட்டில் பெற்றோர்களால் பாதுகாக்கப்படுவதைவிடப் பதின்மடங்கு அதிகமான அருமையுடனும் பொறுப்புடனும் வளர்க்கப் படுகிறார்கள். இவர்கள் ஒரு வருஷமாவது பரீக்ஷைகளில் தவறாமலும், இங்கே இருக்குங்காலம் முழுவதும் பிரம்மசாரிகளாகவும் இருக்க வேண்டிய தவசியம். தகுந்த பண்டிதர்களிடமும் ஸ்ரீராம கிருஷ்ண மடத்திலுள்ள ஸந்நியாஸிகளிடமும் மத விஷயங்களைக் கற்றுக்கொள்வதோடு, ஸத்ஸங்கத்தின் பயனைச் சுய நயமின்றிப் பிறர் பொருட்டுழைப்பதிலும் பகவத் கைங்கரியத்திலும் ஊக்கங் கொண்டவர்களாய் மாணவர்கள் வளர்கின்றனர்.

1920-ம் வருஷத்தில் இத்தருமத்துக்கு வருமானம் ரூ. 9184-2-4. செலவு ரூ. 8525-2-6. ஒவ்வொரு மாணவனுக்கும் மாதம் ஒன்றுக்குச் சராசரி ரூ. 13-12-0. செலவாகிறது. வருஷ முடிவில் மூலதனம் உள்படக் கையிலிருந்த தொகை ரூ.37,974-9-9.

பல தார்மிகர்களுடைய உதவியாலும், கவர்ன்மெண்டு கிரான்டாலும் நூறு மாணவர்களிருக்கக்கூடியதாய், ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபாய் மதிப்பில் ஓர் கட்டிடம் கட்டப்பட்டு முடியுந் தருணத்திலிருக்கிறது. இது விஷயமாய் 1920-ம் வருஷக்கடைசி வரை வருமானம் ரூ. 1,62,868-7-10; செலவு ரூ. 1,56,891-0-5.

இத்தருமத்துக்குப் பொருளுதவி செய்ய விரும்புவோர், தொகையை, மயிலாப்பூர், ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லக் காரியதரிசிக்கு அனுப்பலாம்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1] ரௌத்ரி ௵ பங்குனி ௴ [பகுதி 3

உ

## கடவுள் வணக்கம்

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்தநிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணா னந்தமே.

---

அன்றே யெந்தன் ஆவியும் உடலும் உரிமை யெல்லாமும்
குன்றே யனையாய்! என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோ ரிடையூறு எனக்குளதோ! எண்டோள்முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய்; பிழைசெய்வாய்; நானோ அதற்கு நாயகமே?

# குருதேவர் வாக்கியம்

## தலைவனது இயல்பு

மன்னுயிருக் குயிராக விறைவனிருந் திமெரபை
வழுத்தக் கேண்மோ
பொன்னுடைய புரவலர்தம் மனையினிடைத் திரைமறைவிற்
பொருந்து கின்ற
மின்னனையார் புறந்தோற்றார் யாவரையுந் தாங்காண்பார்
மேவு மீசன்
அன்னதுபோ லெவ்விடத்து மெவ்வெவர்த மகத்திடையு
மமர்ந்து நிற்கும்.

ஈசுவரன் மனிதனிடம் எவ்வித மிருக்கிறனென்று உனக்குத் தெரியுமா? தனவந்தர்களுடைய வீட்டில் ஸ்திரீகள் திரை மறைவிலிருப்பதைப் போலவே அவனிருக்கின்றான். அந்த ஸ்திரீகள் எல்லாரையும் பார்க்க முடியும்; ஆனால் அவர்களை ஒருவரும் காணமுடியாது. இதேமாதிரியே கடவுள் ஒவ்வொருவரிடமும் அமர்ந்திருக்கிறார். 1

செய்யவொளி தருந்தீப மதன்றுணையா லுணவமைப்பர்
சிலர்சில் லோர்கள்
பொய்ம்மருவு சிட்டமைப்பர் பாகவதம் படிப்பர் சிலர்
புரையி றீபத்
தெய்துபிழை யொன்றிலையா மிறைவர்திரு நாமத்தா
லினையவ வீடும்
வையமிசைக் களவுமெனிற் சித்திதரு மிறைவனுக்கோர்
மாசுண் டாமோ.

வெளிச்சந்தருவது விளக்கின் இயற்கை; அவ்வெளிச்சத்தினுதவியால், சிலர் சமைக்கலாம்; சிலர் பொய்ப்பத்திரங்கள் எழுதலாம்; மற்றுஞ்சிலர் பாகவத பாராயணம் செய்யலாம். இப்படியெல்லாம் செய்வது விளக்கின் குற்றமாமோ? அதுபோல, பகவந்நாமத்தின் உதவியால் முக்தி யடையச் சிலர் முயல்வதும், வேறு சிலர் களவு செய்வதில் ஜயமடையவேண்டுமென்று அவர் திருநாமத்தை ஜபிப்பதும் அவருடைய தப்பாமோ? 2

கற்பதருப் போலீசன் கருதியதெல் லாந்தருவன்
கல்வி கற்று
விற்பனநீ தாசனத்தை விழைந்தடைந்த வழியவன்சேய்
விரும்பு செல்வம்



பெற்றவனென் றுவகையுறி லாமென்னும் பின்னவன்றான்
பெரிது சிந்தித்
தெற்றெனக்குப் பயன்வந்த தென்செய்தே னெனிற்செய்த
தென்னே வென்னும்.

ஈசுவரன் சற்பகத்தருவைப் போன்றவர்—நீ அவனிடம் தேடுவது உனக்குக்கிடைக்கும். ஒவ்வொருவனும் தான் வேண்டியதைப் பெறலாம். ஒரு ஏழையின் மகன் கல்வி கற்று, உயர்ந்த நீதிபதி ஸ்தானத்தை அடைந்தால், தான் ஸௌக்யமாக இருப்பதாக நினைக்கிறான். கடவுளும் 'நீ அப்படியே இரு' என்று அவ்வெண்ணத்தையே திருப்பிக்கூறுகிறார். பிறகு அந்த நீதிபதி உபகாரச் சம்பளம் பெற்று, பகவானுடைய கருணையால் விஷயங்களை ஸரியாக அறிய ஆரம்பிக்கிறான். அப்பொழுது அவன் "நான் என்ன உண்மையான காரியம் இவ்வாழ்க்கையில் செய்திருக்கிறேன்?" என்று தனக்குத்தானே கேட்டுக்கொள்கிறான். அப்பொழுது கடவுள் "ஆம், உண்மைதான்; நீ என்ன செய்திருக்கிறாய்" என்று அவன் வார்த்தைகளையே திருப்பிக் கூறுகிறார். 3

சுத்தபரப் பிரமமெனச் சொல்லிபனிர்க் குணமிறைவே
தோற்ற மாய
சத்தியினின் வேறிலையாற் பரம்பொருளை தொழிலின்றித்
தனியாய் நிற்பின்
சுத்தபரப் பிரம்மமதாம் தொழின்மேவிப் படைத்தளித்துத்
துடைக்கு மென்னச்
சித்தமிசை நினைக்குங்காற் சத்தியெனும் பெயரோடு
திகழா நிற்கும்.

பிரம்மனுக்கும் சக்திக்கும் வேற்றுமை யொன்று மில்லை. பரமாத்மன் தொழிலொன்றும், செய்யாமலிருக்கும்போது அவன் சுத்தப்பிரம்மன் எனப் படுவான்; தொழில் கொண்டு, ஆக்கல், அளித்தல், அழித்தல் செய்யும்போது அவன் சக்தி யென்னும் பெயரை யடைவான். 4

இன்னமர பிதுவருமென் றியைந்தமுறை நடப்பதன்றி
யியல்பின் வேறாய்ப்
பின்னுமொரு தொழில்புரித லிறைவருக்கு மியலாது
பெரியோ யென்னச்
சொன்மதுர பாபுமொழி கேட்டிறைவர்க் கியலாத
தொன்றின் றென்று
மன்னுமெங்கள் குருதேவர் இசைத்திடலுஞ் செவிப்படுத்த
மதுர பாபு
செம்மலரைத் தரும்பூண்டில் வெண்மலரைத் தரவலதோ
தெய்வ மென்ன

அம்மரபி னவர்நினைப்பி னாமென்று சின்னாளி
லங்கு நின்ற
செம்மலர்ப்பூஞ் செடிவெள்ளைச் செழுமலரைத் தரவையன்
சென்று காட்ட
விம்மிதரா னய்யநின்னொ டுரையாடே னெனப்பாபு
விளம்பி னின்றார்.

ஒருநாள் ஈசுவரனைப்பற்றிச் சம்பாஷிக்கும்போது, மதுரபாபு, "ஈசுவரனும் இயற்கை விதிகளின் படித்தான் நடக்கவேண்டும். தம்மிஷ்டப்படி நடக்க இயலாது" என, ஸ்ரீராம கிருஷ்ணர், "அஃதெப்படி யாகும்? அவர் தம் மிஷ்டப்படி நடப்பர்" என்றார். அதற்கு மதுரபாபு, 'அவரிச்சை ஒன்றாலேயே, இந்தச் செம்மலர்ச்செடியை வெண்மலர்கள் பூக்கச்செய்ய முடியுமோ? என்றார். அதற்கு ஸ்ரீராம கிருஷ்ணர்,' "நிச்சயமாய் அவர் அப்படிச்செய்யக் கூடும்—அவர் இச்சையாயின், இச்செடி வெண்மலர்களை பூக்கக்கூடும்" என்றார். ஆனால், மதுரர் திருப்தியடைந்ததாகத் தோன்றவில்லை. சில நாட்கள் கழித்து தக்ஷிணேசுவரத்திலுள்ள மேற்கூறிய புஷ்பச்செடி, ஒரு கிளையில் வெண்மலர்களையும், மற்றொரு கிளையில் சிவப்பு மலர்களையும் புஷ்பிக்கப் பெற்றிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்விரண்டு கிளைகளையுமுடைய பெரிய கிளையை மதுரபாபுவிடம் கொண்டுபோனார். அவர் ஆச்சரியங்கொண்டு "ஸ்வாமி, இனிமேல் நான் உங்களுடன் எதைப்பற்றியும் வாதம் செய்வதில்லை" என்று கூறினார்.



---

ஈசுவர தியானத்தில் மிதமிஞ்சிப் போவதும், அதனால் துன்பமடைவது மில்லை. வைரத்தினுடைய ஜோதி, பிரகாசித்துக் குளிர்ச்சியைத் தருமேயொழிய ஒரு போதும் சுட்டெரிக்காது.

*
* *

எண்ணெய் இல்லா விட்டால் விளக்கு எரியாது. அது போல, ஈசுவரனில்லாவிட்டால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது.

*
* *

பணத்தினால் உணவை மட்டுந்தான் பெறக்கூடும். ஆகவே அதுவே உன்புருஷார்த்தமெனக் கருதாதே.

*
* *

உலக விஷயங்களில் ஆசைகுறையும் அளவுக்கு ஈசுவர பக்தி அதிகரிக்கும்.

---

# யார் சண்டாளன்?

ஓர் பிராம்மண ஸந்நியாஸி கங்காநதிக் கரையில் ஓர் ஆசிரமம் அமைத்துக்கொண்டு, அதில் பலவருஷங்களாய்க் கொடுமையான தவம் புரிந்துவந்தார். மாரி காலங்களில் நீர்ப்பரப்பில் மூழ்கியும், வெயிற் காலங்களில் கொழுந்து விட்டெரியும் அக்னி யிடைநின்றும், உலர்ந்த சருகுகளையும், நீரையும், காற்றையுமே ஆகாரமாகக் கொண்டும், மௌனவிரத மனுஷ்டித்தும், இவருக்கு ஞானம் சித்திக்கவில்லை. யாராவது அருகில் வந்தால் தனக்கு அசுசி யேற்பட்டுவிடுமென்று நிர்மானுஷ்யமான இடத்தை நாடுவார். அவரை ஒருக்காலும் ஒருவரும் தீண்டக்கூடாது; புசிப்பதையும் பார்க்கக் கூடாது. பிறருடைய பார்வையாலுந் தோஷமுண்டாகு மென்பது இவர் கருத்து. ஸதா பகவந்நாமத்தை முணுமுணுத்துக் கொண்டே யிருப்பார். ஆனால் பிறருடைய கஷ்டங்களைச் சிறிதுங் கவனிக்க மாட்டார். அவரவர் கர்மபலனை அவரவர் அனுபவித்தே தீரவேண்டு மென்று சொல்லி வாளா விருப்பார். பசியால் வருந்தி வந்தவனுக்கு உண்பதற்குச் சிறிதளியார்; தாகம் என்று கேட்டால் சிறிது நீர் கூடக்கொடாமல், 'குளத்திற் குடிக்கலாம் குறுணித்தண்ணீர்' என்பார். பிறருடன் நல்வார்த்தை சொன்னால் தன் மகிமை குறைந்துவிடுமென்று எண்ணுவார். அவர் சரீரம் எவ்வளவு உலர்ந்து வருந்திய போதிலும் இந்திரியங்கள் சிறிதும் உலரவில்லை. அகங்காரம் சிறிதுங் குறையவில்லை.

ஓர் நாள் ஒரு ஏழை வண்ணான் இவர் ஆசிரமத்துக்கருகில் வந்து இவர் அங்கிருப்பதை யுணராதவனாய், நீரில் இறங்கித் தன் துணிகளை யெல்லாந் தோய்த்துச் சுத்தம் செய்ய வாரம்பித்தான்; தோய்க்கும் பொழுது சில நீர்த்துளிகள் தபஸிக் கருகாமையிலும், அவர் மேலும் விழுந்தன. உடனே 'இந்தக் குற்றத்தைச் செய்தவன் யாரடா?' என்று கர்ச்சித்துக்கொண்டு கோபாவேசராய் எழுந்து வந்து, "அடே! சண்டாளா, நான் இருக்குமிடம் இது என்று உணராமல் என்னை அசுத்திப்படுத்தினாயே! உன்னைத் தண்டிப்பேன்' என்று அதட்டி, வாயில் வந்தபடி யெல்லாம் இழிசொற்கள் கூறி, கல் மண்ணாங்கட்டி முதலியவைகளை யெடுத்து வண்ணான்மீது எறிந்து, அவனைப் புண்படுத்தினார். இதுவும் போதாதென்று அவனருகில் சென்று, கையினால் குத்தி, கால்களாலும் திருப்பித்திருப்பி உதைத்தார். இவையனைத்தையும் வண்ணான் சாந்தமாய்ப் பொறுத்துக்கொண்டு, வெகு விநயத்துடன் இருகைகளையும் கூப்பி எதிரில் நிற்பவர் ஓர் பெரிய பிராம்மணர் என்றும் தபஸி யென்று முணர்ந்து, "சுவாமி, என்னை மன்னிக்கவேண்டும்; மகா அபராதம் தெரியாமல் செய்து விட்டேன். நீங்கள் இருப்பதை நான் அறியவில்லை" என்று சொல்லித் தன் குற்றத்தைப் பொறுக்

குப்படி மன்றாடிகேட்டுக்கொண்டான். ஆனால் அத்தபஸி அவன்
தன் பாதங்களிடை வீழ்ந்ததையுங் கவனியாமல், இன்னும் வேக
மாக உதைக்க ஆரம்பித்தார். மறுபடியும் அவ்வண்ணான், கன்
களில் நீர்ததும்ப, உதடு துடிக்க, 'ஸ்வாமி, என்னை மன்னிக்கவேன்
டும்; என்னை மன்னிக்கவேண்டும்; எளியேன் தெரியாமற் செய்த
குற்றத்தைப் பெரியோர் பொறுத்தருளல் வேண்டும். இதோ, எட்
டிப்போய் விடுகிறேன்' என்று அழுதுகொண்டு, அவர் செய்த
தீங்கை நினையாமல், அவருக்குப் பன்முறை வணங்கி அவ்விடம்
விட்டகன்றான்.

பின்பு, ஸந்நியாஸி, சண்டாள ஸ்பரிசதோஷத்தை நீக்குவதற்
காகக் கங்கையில் ஸ்நாநம் செய்து சரீரத்தைச் சுத்தம் செய்துகொள்
வதற்காக நீரிலிறங்கினார். வண்ணானும் சிறிது தூரத்துக்கப்பால்
சென்று ஸ்நாநம் செய்வதை இவர் கண்ணுற்று, அவனை நோக்கி
'உனக்கென்ன முழுக்கு?' என்று வினவினார். அதற்கு வண்ணான்,
"தாங்கள் எக்காரணம் பற்றி முழுகுகிறீர்களோ, அக்காரணம்
பற்றியே அடியேனும் முழுகுகின்றேன்" என்றான். தபஸி "நான்
சண்டாளனாகிய உன் ஸ்பர்சம் ஏற்பட்டதால் முழுகுகிறேன்" என்
றார். வண்ணான் தாழ்மையுடன், 'ஐயா, ஜாதிச் சண்டாளனைக்காட்டி
லும் பரம சண்டாளனாகிய ஒருவன் என்னைத்தீண்டிவிட்டான்; உம்
மால் எனக்கு அவனுடைய ஸ்பர்சம் கிட்டியது; அந்த தோஷத்
தைப் போக்கத்தான் நானும் முழுகுகிறேன்' என்று விடையளித்
தான்.

இதைக் கேட்டவுடன் ஸந்நியாஸி திடுக்கிட்டு, சிறிது ஆலோ
சித்து "ஆகா நம்முடைய தவமெல்லாம் வீணாயிற்றே; சண்டாளனு
க்கும் இழிவானோமே. எல்லாங் கற்றும் என்ன பயன்? சினமிறக்க
யான் இன்னும் கற்க வில்லையே!'கோபம் பாபம் சண்டாளம்' என்ப
துபழமொழி யன்றோ? பனியால் நனைந்தும் வெயிலாலுலர்ந்தும் பசி
யால் வருந்தியும் ஆய கலைகளை யெல்லாங் கற்றும் சிறிதும் பயனிலா
மற் போயிற்றே! ஒன்றுந்தெரியாத வண்ணானே எல்லா உபத்ரவங்
களையும் பொறுத்துக்கொண்டு வெகுசாந்தமாயிருக்கிறான்.'கொடிது
கொடிது! கோபங்கொடிது! இந்திரிய நிக்ரஹமில்லாத தவத்தால்
என்னபயன்? கோபத்தையடக்காதவன் எக்குற்றங்களிலும் தலை
யிட அஞ்சான்; கொலைக்கும் பின் வாங்கான்; மாதா, பிதா, ஆசாரி
யன் என்றும் பாரான்; சொல்ல வழங்காதக் கடூரமொழிகளை உரை
ப்பான்' எனக்கூறக்கேட்டிருக்கின்றோமே. ஜலத்தால் அக்னியை
அவிப்பது போல், கோபாக்னியைப் புத்தியால் சாந்தம் செய்வதே
தவம். அந்தத்தவம் சித்திக்கப்பெற்றவனே புருஷச்ரேஷ்டன்;
அவனே தன்னியன்; அவனே யோகி. நானல்லவோ பரம சண்டா
ளன்; வண்ணானல்லவோ பரம யோகி" எனக்கூறிச் சிந்தையி
லாழ்ந்தார்.

" அந்தக்கரண மடங்கத்துறப்பதுவே
யெந்தத்துறவினு நன்றெந்தாய் பராபரமே."

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்

## அத்தியாயம்—2.

### கேசவசந்திரஸேனருடன் நடந்த கடைசி ஸம்பாஷணை.

இப்பொழுது பகவான் ஸமாதியினின்றும் சுபநிலைமையை அடைந்து விட்டார். அவ்விடம் கூடியிருந்தவர்கள், பகவான் கேசவருடன் பேசிக் கொண்டிருப்பதை ஆவலுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். கேசவராகிலும், பகவானாகிலும் "சௌக்கியமா?" அல்லது, "எப்படியிருக்கிறது" என்றாவது ஒன்றும் சொல்லவில்லை, கடவுளைத்தவிர வேறொரு பேச்சும் நடக்கவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (கேசவரை நோக்கி):—பிரம்மஸமாஜத்தவர்கள் ஈசுவர சிருஷ்டியின் மஹிமையைப் பற்றி ஏன் அவ்வளவு பேசுகிறார்கள்?"பிரபோ நீ சூரியனை சிருஷ்டித்தாய், சந்திரனை சிருஷ்டித்தாய், நக்ஷத்திரங்களை சிருஷ்டித்தாய்" என்று ஏன் நீங்கள் இவைகளைப்பற்றி இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? அநேகர் தோட்டத்தின் அழகிலும்,அதின் அழகு மிகுந்த புஷ்பங்களிலும், அவற்றின் இனிய வாஸனையிலும் மயங்குகிறார்கள். தோட்டத்தின் எஜமானனைத் தேடுகிறவர்கள் மிகச்சொற்பமே. இவைகளில் எது சிரேஷ்டமானது? தோட்டமா? அல்லது, அதின் பிரபுவா? நமக்குள் மரணமானது சுற்றி நடந்து கொண்டிருக்கிற வரையில் தோட்டம் மித்தை-பொய். பிரபுவே நிஜம்!

சாராயக்கடையில் இரண்டு மூன்று கோப்பை சாராயமெடுத்துக்கொண்ட பிறகு, பீப்பாயில் இன்னும் விலைக்கு விற்பதற்கு எவ்வளவு டன் சாராயமிருக்கிறதென்று எவன் கவனிக்கிறான். ஒரே சீசா அவனுக்குப் போதுமானது.

நான் நரேந்திரனைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஆனந்தத்தினால் மயங்குகிறேன். நான் அவனிடம் அவன் தகப்பனார் யாரென்றாவது, அவனுக்கு எத்தனை வீடுகளிருக்கின்றன வென்றாவது எப்பொழுதும் கேட்டதில்லை.

மனிதர்கள் தங்கள் தங்கள் சொந்தப் பொருள்களையே விசேஷமாய் மதிக்கிறார்கள். அவர்களுக்கு பணம், வீடு, சாமான்கள் முதலியவைகளே மேலானது. ஆகையினால்தான் அவர்கள் ஈசுவரன் தன்னுடைய சிருஷ்டியை சூரிய சந்திர நக்ஷத்திரங்களை மதிப்பாரென்று நினைக்கிறார்கள். மனிதர்கள் ஈசுவர சிருஷ்டிகளைப்பற்றிப் பிரமாதமாகப் பேசினால் அவருக்குத் திருப்தியாய் விடுமென்று எண்ணுகிறார்கள்.

ஒரு ஸமயம் சம்பு (மல்லிக்) என்னிடம் "ஸ்வாமி! என் சொத்தை யெல்லாம் அம்பாளுடைய திருவடியில் அர்ப்பணம் செய்துவிட்டு நான் மரணமடையும்படி தாங்கள் அனுக்கிரகம் செய்யவேண்டும்." என்று சொன்னான். அதற்கு நான், "நீ யென்ன சொல்லுகிறாய்? இதெல்லாம் உனக்குத்தான் சொத்து! ஜகன் மாதாவுக்கு இதெல்லாம் மண்ணுக்குச் சமானம்" என்றேன்.

ஒரு ஸமயம் விஷ்ணுவாலயத்தில் களவு போயிற்று. விக்கிரஹத்திற்கு அலங்கரித்திருந்த நகைகளைத் திருடன் எடுத்துக்கொண்டு போய் விட்டான். மதுரபாபுவும் (ஆலயத்தின் தர்மகர்த்தாவும், ராஷ்மணிராணியின் மாப்பிள்ளையுமாகிய மதுரநாத பாபு) நானும் என்ன ஸமாசாரமென்று பார்ப்பதற்காக அவ்விடம் சென்றோம். மதுரர், "ஆ தெய்வமே! உனக்குச் சக்தியில்லை! உன் ஆபரணங்களையெல்லாம் திருடர்கள் அடித்துக்கொண்டு போய் விட்டார்களே! உன்னாலொன்றும் பிரயோஜனமில்லையே!" என்று உரத்த குரலில் சொன்னான். அதற்கு நான் சுருக்காய் மனதில் பாயும்படி, "நீ யேனிப்படி மூடத்தனமாகப் பேசுகிறாய்! நீ சொல்லப்பட்ட நகைகளெல்லாம் இவ்விக்கிரஹத்தில் நீ ஆராதித்துவரும் ஜகந்நாதனுக்கு மண்ணாங்கட்டிக்குச் சமானம்! அவனிடமிருந்தே ஐசுவரிய லக்ஷ்மி தன் சக்தியை அடைகிறாளென்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்றேன்.

ஈசன், ஒருவன் தனக்களிக்கும் தனத்தை லக்ஷியம் செய்கிறாரா? இல்லை. எவன் அன்பும் சிரத்தையும் செலுத்துகிறானோ அவனுக்கு மாத்திரம்தான் கடவுள் கருணை புரிகிறார். தன் பொருட்டுப் பாராட்டும் விஜயபக்தியும், விவேகமும் வைராக்கியமுமே அவருக்கு சிலாக்கியமானது

ஒவ்வொருவனும் அவனவன் ஸ்வபாவத்திற்குத் தக்கபடி கடவுளை ஆராதிக்கிறான். தமோகுணியானவன் மாம்ஸத்தில் பிரியமிருப்பதினால், தன் தெய்வத்துக்கு மிருகங்களை பலி கொடுக்கிறான். ரஜோகுணியானவன், அவன் மனம் பல எண்ணங்களிலுமிருப்பதினால் தன் தெய்வத்துக்குப் பலவிதமாகச் செய்கிறான். ஸத்வகுணியானவன் தான் செய்வதை வெளிக்குக் காட்டிக் கொள்ளமாட்டான். அவன் புஷ்பமும் வில்வதளமும் கங்காதீர்த்தமும் கொண்டு கடவுளுக்கு அர்ப்பணம் செய்கிறான். சுலபமான அதிரஸம், பாயஸம் முதலானவைகளை சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறான்.

இன்னுமொரு வகுப்பு பக்தர்களிருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளைப் போல் குணாதீதர்கள். அவர்களின் ஆத்மாவானது முக்குணங்களிலும் பற்றற்றிருக்கும். அவர்களின் ஆராதனையானது, பகவந்நாமத்திலேயே முழு நம்பிக்கை வைத்து அதை சிரத்தையுடன் மேன்மேலும் உச்சரித்துக் கொண்டிருப்பதே. ஆம், பகவந்நாமத்தைத் தவிர வேறெதுவுமில்லை!

பகவான் (கேசவை நோக்கிப் புன்னகையுடன்):—நீ அசௌக்கியமாயிருக்கிறாய்; அதில் ஒரு ஆழ்ந்த கருத்திருக்கிறது. பகவானை நாடி எவ்வளவோ உருக்கமான மனோபாவங்கள் உன் சரீரத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும். உன் அசௌக்கியமே அதற்குச் சாக்ஷி. அம்மனோபாவங்களுண்டாகும் பொழுது, அவைகளினால் சரீரத்திற்கு இன்னது தான் வருமென்று அச்சமயத்தில் சொல்லமுடியாது.

ஒரு கப்பலானது கங்காநதியில் விரைவாகச் செல்கிறது. ஆனால் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் பெரிய அலைகளால் கரை மோதப்பட்டு, சில சமயம் அதன் சில பாகங்கள் அடித்துக்கொண்டு போகப்படுவதைக் காணலாம்.

ஒரு யானையானது ஒரு குடிசைக்குள் புகுந்தவுடனே அதை யசைத்துக் கடைசியாக அதை யிழுத்துக் கீழே வீழ்த்துகிறது. பகவான் மீதிருக்கும் பக்தியானது, பிரமாணத்தில் யானைக்குச் சமானம். அது மனித சரீரமென்று சொல்லப்பட்ட களிமண் குடிசையை அநேகமாகக் கீழே தள்ளி விடுகிறது.



ஒரு வீடு நெருப்புப் பற்றிக் கொண்ட பொழுது முதலில் உள்ளிருக்கும் சில சாமான்கள் எரிந்து போகின்றன. பின்னர் அவ்வீடு முழுதும் எரிந்து போகின்றது. அவ்வண்ணமேதான் கடவுளைப் பார்க்கும்பொழுதும் ஏற்படுகிறது. பகவத்காக்ஷியென்னும் நெருப்பினால் முதலில் காமக்குரோதங்களான மனோ விகாரங்களும், பின்னர், நான் கர்த்தா என்னும் அஹங்காரமும், முடிவில் வீடு முழுதும், அதாவது, சரீரமும் எரிந்து போகின்றன.

எல்லாம் ஈசுவராக்கினைப்படி நடக்கிறதென்று நீ நினைக்கலாம். டாக்டர் வியாதிஸ்தனுக்கு முழுதும் சொஸ்தமாகிற வரையில் அவனை விடுவதில்லை. உன் பெயரை ஆஸ்பத்திரி புஸ்தகத்தில் பதிவு செய்து கொண்டாய் விட்டது. ஆகையினால், டாக்டர் துரை உன்னைப்பார்த்து நீ சௌக்கியமென்று சொல்லுகிற வரையில் நீ போகமுடியாது. அவ்விதம் உன் பெயரை எழுதிக்கொள்வதற்கு நீயேன் இடம் கொடுத்தாய்? (யாவரும் சிரிப்பு.)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கடவுளுடைய ஆஸ்பத்திரியைக் குறித்துப் பேசியதற்கு கேசவ் சிரித்தார்.

பகவான் (கேசவரைநோக்கி):—ஹிருதயன் "அப்பேர்ப்பட்ட பக்தியும் அதோடுகூட அவ்வளவு அசௌக்கியமும் நான் பார்த்ததில்லை" என்று சொல்லுவதுண்டு; அச்சமயத்தில் நான் கடுமையான வயிற்றுப்போக்கினால் மிகவும் அசௌக்கியமாயிருந்தேன். அப்பொழுது, இலக்ஷம் எறும்புகள் என் மூளையை அரித்துத் தின்பதுபோல் தோன்றிற்று. ஆனால், நான் கடவுளைப்பற்றியே பேசுவேன். நாதகூர் கிராமத்து வைத்தியனாகிய ராம் என்பவர் என்னைப் பார்க்கவந்தபொழுது, நான் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருப்பதைப்பார்த்து, "என்ன இவர் வெறும் எலும்பும் தோலுமாயிருக்க, இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறாரே! இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ!" என்றார்.

பகவான் (கேசவரை நோக்கி)—ஒவ்வொன்றும் அவன் ஆக்கினைப்படி நடக்கின்றன. ஆ, என் அன்னையே! நீ உன்னிஷ்டப்படியே செய்கிறாய்! நீ உன் காரியத்தைச் செய்கிறாய்! ஆனால் மூட மனிதன், 'நான் செய்தேன்' என்று சிலாகித்துக் கொள்ளுகிறான்.

தோட்டக்காரன், ஸாதாரண ரோஜாச்செடியையும், உயர்ந்த ஜாதி பஸ்ஸோரா ரோஜாச்செடியையும், எப்படி வைத்து வளர்க்க வேண்டுமென்று நன்கறிவான். பின்சொன்னவைக்கு, அவன், இரவில் பனி விழும்படியாக அதன் மலர்களைச் சுற்றிலுமிருக்கும் மண்ணைக் கிளறியெடுத்து சுத்தப்படுத்துகிறான். பனியானது செடிக்கு அழகும், பலமும் கொடுக்கிறது. உன் விஷயத்திலும் அப்படித்தானிருக்கலாம். கடவுளாகிய தோட்டக்காரன் எவ்விதம் உன்னை நடத்தவேண்டுமென்று அறிவார். அவர் உன்வேர் வரையில் கிளறுகிறார். அதினால் ஞானமாகிய பனி உன்மீது விழ, அதினால் நீ முன்னிலும் பரிசுத்தனாகி, உன் வேலையும் அதிகமாக நிலைத்திருக்கும்.

எப்பொழுதாகிலும் நீ அசௌக்கியமாயிருக்கிறாயென்று நான் கேள்விப்பட்டால் என்மனது மிகவும் வருத்தமடையும். போனதடவை நீ அசௌக்கியமாயிருக்கையில், இரவில் கடைசி ஜாமத்தில் எழுந்து, என் ஜகன்மாதாவினிடம், "ஆ, என்னம்மா! கேசவுக்கு ஏதாகிலும் தீங்கு நேரிட்டால் நான் கல்கத்தாவுக்குச் செல்லும் பொழுது உன்னைப்பற்றி யாருடன் பேசுவேன்?" என்று கதறுவேன். நான் கல்கத்தாவுக்கு வந்து, அம்பாளுக்கு பழமும், சர்க்கரையும

நைவேத்தியம் செய்து, உனக்கு சௌக்கியமாவதற்கு அம்பாளை உருக்கத்துடன் பிரார்த்தித்தேன்.

அவ்விடமிருந்தவர்களெல்லோரும் கேசவரின் மீது அவருக்கிருக்கும் சொல்லமுடியாததான ஆழ்ந்த அன்பைப் பார்த்து ஆச்சரியத்துடன் பிரமித்து பகவானைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பகவான் மேலும் சொல்லுகிறார்:-

வாஸ்தவமாக உனக்கிப்பொழுதிருக்கும் அசௌக்கியத்தைப்பற்றி எனக்குக்கவலை முன் அவ்வளவு தீவிரமாயில்லை. ஆனால், இப்பொழுது இரண்டு மூன்று நாளாகக் கொஞ்சம் கவலையாயிருக்கிறது.

கூடத்திற்குச் செல்லும் கிழக்கு வாசற் கதவிற் கருகில் கேசவரின் தாயார் நின்று கொண்டிருந்தாள்.

உமாநாத் பகவானிடம், "ஸ்வாமி! இதோ அம்மா உங்களை நமஸ்கரிக்கிறாள்" என்று உரத்த குரலில் சொன்னான்.

பகவான் புன்னகை கொள்கிறார். உமாநாத் மேலும், "ஸ்வாமீ! கேசவ் சீக்கிரம் சௌக்கியமாகக் கடவதென்று ஆசீர்வாதம் செய்யும்படியாக அம்மாள் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறாள்" என்று சொன்னான். அதற்கு பகவான் "உங்கள் பிரார்த்தனைகளை நித்தியானந்தமயியாகிய ஜகன்மாதாவிடம் செய்யுங்கள். அவளே வியாதிகளை யெல்லாம் விலக்கப்பட்டவள்" என்று சொல்லி மேலும் சொல்லுகிறார்.

ஸ்திரீகளும் குழந்தைகளும் உள்ள அறைகளில் நீ வெகு நேரம் இருக்கக் கூடாது. அப்படி யிருந்தால் தெய்வத்தை மறந்து அஞ்ஞானமாகிய கடலில் முழுகுவதற்கு இடமாகும். உனது நண்பர்களால் பகவானைப்பற்றிய வார்த்தைகளைச் சொல்லக்கேட்டால் உனக்கு குணமாயிருக்கும்.

கேட்பவர்களுக்கு பயபக்தியை உண்டு பண்ணத்தக்க விதமாய் பகவான் இவைகளைச் சொன்னார். இவ்வளவு நேரமாக குருவாக உபதேசித்துக்கொண்டிருந்தவர் உடனே கேவலம் குழந்தையின் சுபாவத்தை யடைந்தார். அவர் புன்னகையுடன் கேசவை நோக்கி, "எங்கே உன் கையைப் பார்க்கட்டும்" என மொழிந்து, தன் உள்ளங்கையில் கேசவரின் கையைவைத்துக் கொண்டு, அதன் நிறை பார்ப்பவர்போல்மேலும் கீழும் மெதுவாகத் தூக்கிப்போட்டுக்கொண்டிருந்தார். கடைசியாக அவர், "இல்லை; எல்லாம் ஸரிதான். உன் கை இலேசாகத்தானிருக்கிறது. தீங்கு நினைப்பவர்களுடையவும், தீங்கு செய்பவர்களுடையவும் கைகள் இம்மாதிரியிருக்கமாட்டா. (யாவரும் சிரிப்பு.)

ஜகன்மாதாவே ஒவ்வொன்றையும் விதிக்கிறாள். அப்படியிருக்க, இப்பொழுதிருந்து அடுத்த நிமிஷம் மறைந்து போகும் மூடனாகிய மானிடன் எல்லாம் தான் செய்ததாக சிலாகித்துக் கொள்கிறான்.

இரண்டு சந்தர்ப்பங்களில் கடவுள் நகைக்கிறார். ஒன்று, இரண்டு ஸகோதரர்கள் தங்கள் பிதிரார்ஜிதமாகிய நிலத்தைக் கயிற்றினால் அளந்துகொண்டு, "இது என்னுடையது, அது உன்னுடையது" என்று சொல்லி பங்கிட்டுக்கொள்ளும்பொழுது, "இம்மூடர்கள் பூமி யெல்லாம் என்னுடையதென்றறியாமல், தங்களுடையதென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்" என்று கடவுள் புன்னகை கொள்கிறார்.

இரண்டாவது—ஒரு குழந்தை மிகவும் அசௌக்கியத்தினால் அபாய நிலையிலிருக்கையில், வைத்தியனானவன், அழுது கொண்டிருக்கும் தாயாரை



நோக்கி, "அம்மா பயப்படவேண்டாம், உன் குழந்தையை நான் சௌக்கியப்படுத்திவிடுகிறேன்" என்று சொல்லும் பொழுது கடவுள் புன்னகை கொள்கிறார். மரணத்தை விளைவிப்பது ஈசுவரனென்பதையும், மனிதனுக்கு அதைத் தடுக்கச் சக்தியில்லை என்பதையும் இம்மூட வைத்தியன் அறியவில்லை. (யாவரும் நிச்சப்தம்.)

கேசவருக்குத் தொடர்ச்சியான இருமல் வந்தது. அது வெகு நேரம் வரையில் இருந்தது. பூஜ்யரான நோயாளியின் கஷ்டத்தைப் பார்த்து அவ்விடமிருந்தோரனைவரும் மனதில் மிகவருத்தம் கொண்டார்கள். யாவரும் இருமல் எப்பொழுது நிற்குமென்று மூச்சுவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய கஷ்டமானது அவ்வளவு கடுமையாக விருந்தது. ஆதலால் கேசவ் அவ்வறையை விட்டுத் தன் படுக்கைக்குப்போக வேண்டும். அவர் பகவான் பாதத்தில் விழுந்து, தன் சிரஸ்ஸு தரையில் பட நமஸ்கரித்தார்.

கேசவ் அவ்விடத்தை விட்டுத் தன் படுக்கை யறைக்கு முன்போலவே சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்து போனார்.

* * *

தக்ஷிணேசுவரம் கோவிலுக்குப் புறப்படு முன்னால் ஸ்ரீராமகிருஷ்ணரைக் கொஞ்சம் பக்ஷணம் எடுத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அவர் அவ்விடமிருப்பவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார். அவரருகில் கேசவரின் மூத்தகுமாரன் உட்கார்ந்திருந்தான்.

அமிருதன், "இவன்தான் அவருடைய மூத்தபிள்ளை. தயவுசெய்து தாங்கள் இவனை ஆசீர்வதிக்க வேண்டும்" என்றான். பகவான் அச்சிறுவனை மெதுவாகத் தடவிக் கொண்டிருப்பதைப் பார்த்து அமிருதன் மேலும், "ஸ்வாமி! தங்கள் கரத்தை இவன் தலையில் வைத்து ஆசீர்வாதம் செய்யமாட்டீர்களா?" என, பகவான் "எனக்கு ஆசீர்வாதம் செய்ய அதிகாரமில்லை. அவ்விதம் செய்வது என் ஜகன்மாதாவே. எல்லா ஆசீர்வாதங்களும் அவளிடமிருந்துதான் வருகின்றன," என்று விடையளித்தார்.

பகவான் புன்னகையுடன் சிறுவனைத் தடவிக் கொண்டிருந்தார். அவர் கேசவரின் சிஷ்யர்களான அமிருதன் முதலான பிராம்மோ பக்தர்களிடம் கேசவரைப்பற்றி மேலும் சொல்லுகிறார்.

ஒரு மனிதனுக்கு 'அவன் சௌக்கியமடையட்டும்' என்று சொல்ல எனக்குச் சக்தியில்லை. என் ஜகன்மாதாவிடம் அப்பேர்ப்பட்ட சக்தியைக் கொடுக்கும்படியாக நான் எப்பொழுதும் கேட்டதில்லை. எனது இடைவிடாத பிரார்த்தனையானது, "ஆ, என்னம்மா! எனக்கு தூய்மையான பக்தி, அதாவது, சரீர சௌக்கியம், இன்பம், பணம், கீர்த்தி முதலியவைபோன்ற யாதொரு ஆசையுமில்லாமல் நிர்மலமான உண்மையான பக்தி யிருக்கும்படியாக அருள் புரிவாயாக," என்பதாம். வியாதிகளை சௌக்கியப்படுத்துவது போன்ற அற்புதமான சக்தியைக் கொடுக்கும்படியாக நானவளை எப்பொழுதும் கேட்டதில்லை.

கேசவ் என்ன மஹா பெருமையை யுடையவர். ஐசுவரியத்தைத் தேடும் லௌகீகர்களாலும், பக்தியைத் தேடும் புண்ணிய புருஷர்களாலும் ஸமமாக அபிமானிக்கப்படுகிறார்.

நான் ஒருஸமயம் தயானந்தரை ஒரு பங்களாவில் பார்த்தேன். அன்றைக்கு அவர் கேசவ் வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரையும் கேசவ் வந்து விட்டாரா என்று கேட்டுக் கொண்டிருந்தார். கேசவ் மீது அவருக்கிருக்கும் ஆவலினால் அடிக்கடி யவர் தன்னறையை விட்டுக் கேசவை விசாரிப்பதற்காக வெளியே வந்தார்.

தயானந்தர் வங்காள பாஷையை கௌரந்த பாஷையென்று சொல்லுவார்.

கேசவுக்கு வேதத்தில் சொல்லியிருக்கும் தெய்வங்களிலும், ஹோமத்திலும் நம்பிக்கையில்லைப் போலிருக்கிறது. ஆகையால் தயானந்தர், "கடவுள் அநேக வகைகளைச் சிருஷ்டித்திருக்கிறார்; அவ்வாறே இத்தெய்வங்களையும் சிருஷ்டித்திருக்கக்கூடாதா?" என்றார்.

பகவான் கேசவைப்பற்றி அவரது சிஷ்யர்களின் முன்பு மிகவும் பெருமையாகப் புகழ்ந்து பேசுகிறார்:

கேசவ்தான் குருவென்னும் கர்வமற்றவன். அவன் அடிக்கடி தன்சிஷ்யர்களிடம், "தக்ஷிணேசுவரம் கோவிலுக்குச் சென்றால் உங்கள் ஸந்தேகம் நிவர்த்தியாகும்." என்று சொல்வான். நானும், "கேசவினுடைய கீர்த்தி கோடி மடங்கு அதிகரிக்கட்டும்" என்று சொல்வேன், எனக்கு என்னத்திற்கு கீர்த்தி?

ஆம், கேசவ் லௌகீகர்களாலும், ஈசனையே தேடப்பட்ட மஹாத்மாக்களாலும் ஸமமாக அபிமானிக்கப்படும் பெருமையுடையவர்.

சாப்பாடாயிற்று; அவர் தக்ஷிணேசுவரம் போவதற்காகப் புறப்பட்டார், பிராம்மோ பக்தர்கள் அவரை வழியனுப்ப அவருடன் கீழேயிறங்கி வந்தார்கள். மாடிப்படியிறங்கி வந்து கொண்டிருக்கையில் கீழே மெத்தைப்படி யருகில் விளக்கில்லாமலிருப்பதைப் பகவான் கவனித்து, அம்ருதன் முதலானவர்களை நோக்கி, "இவ்விடங்களி லெல்லாம் விளக்கேற்றி யிருக்கவேணும். மனைவியில் ஜகன் மாதா ஒவ்வொரு வீட்டிலும் வாஸம் செய்கிறாள். இப்படி தீபமேற்றாமல் விட்டிருப்பது வறுமை விளைவிக்கும். இனிமேல இப்படி தீபமேற்றாமல் இருக்கக் கூடாது" என்றார்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இரண்டு மூன்று சிஷ்யர்களுடன் வண்டியிலேறி ஆலயத்திற்குச் சென்றார்.

---

என் மனத்தையோ கெட்ட வாஸனைகள் ஸதா தம் வழி கவர்ந்து செல்கின்றன; என் உடலத்தையோ வியாதிக் கூட்டங்கள் இடைவிடாமல் தகிக்கின்றன; என் வயிற்றுப் பிழைப்போ பிறர் கையிலகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. ஆகையால் ஹே! சங்கபாணே! உன் திருவடிகட்கே சரணம், சரணம்

உ

# தர்ம ஸமன்வயம்

## அல்லது

# மதங்களின் ஒற்றுமை

"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி"
உள்ளது ஒன்றே; பலர் பலவிதமாய்க் கூறுகின்றனர்—
ஒருரையால் வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல் கோடி—
இருக்வேதம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமாயானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.
தாயுமானவர்.

இவ்வுலகின்கண் எல்லா நாடுகளிலும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வேற்றுமைகளும், போட்டா போட்டிகளும் சச்சரவுகளும் மேம்பட்டுவரும் இக்காலத்தில் தர்மஸமன்வயத்தின் சிறப்பையும், பல மணிகளூடு செல்லும் சரடுபோன்று வேற்றுமைப்பட்ட பல கொள்கைகளையும் ஊடுருவி நிற்கும் அழிவிலா ஒற்றுமையையும், எளிதில் போதித்தருளிய பரமாசாரியர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர். வேறு வேறாகத் தோன்றும் தர்மங்களெல்லாம் ஒரே ஈசுவரனையடைய வேறுவேறான வழிகளேயென்றும், ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்குரிய மார்க்கத்தை சிரத்தையுடன் அனுசரிப்பதன்றி பிற மார்க்கங்களை த்வேஷிப்பதும் தூஷிப்பதும் தவறென்றும் எமதாசாரியர் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். "ஒரு பெரிய தடாகத்தில் குளிக்குந் துறைகள் அநேகம் இருக்கின்றன. ஸ்நாநம் செய்யவோ ஜலம் மொள்ளவோ, ஒருவன் எந்தத் துறைவழியாக இறங்கின போதிலும், நீர் மட்டத்துக்குப் போகக் கூடும். ஒரு துறை நல்லது, மற்றொரு துறை கெட்டது என்று சண்டை போடுவது வீண் காரியம். அதுபோல நித்யானந்தமாகிய நீர்த்தடத்துக்குப் போகும் துறைகளும் பல. உலகத்தி

துள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒவ்வொன்றாகும். இந்தத் துறைகளில் ஏதாவதொன்றின் வழியே நேராக திடபக்தியுடன் சென்றால் நீ நித்யானந்த நீர்த்தடத்தை யடைவது நிச்சயம்.' இவ்வுண்மையைப் பலர் ஏற்கெனவே உணர்ந்ததாய் நினைக்கக்கூடும். ஆனால் நமது பழக்க வழக்கங்களை உற்று நோக்குங்கால் மத ஒழுக்கங்களில் ஒற்றுமையிருக்க வேண்டிய விடங்களில் வேற்றுமையைக் கற்பித்தும், அன்பு பாராட்டவேண்டிய விடத்தில் த்வேஷத்தைப்பாராட்டியும் நாம் இழிவு நிலையை யடைந்து வருகிறோமென்பது தெள்ளெனப் புலப்படும்.

ஒவ்வொருவனும் தான் செல்லும் வழி யொன்றே சரியானதென்றும், உலகுக் கெல்லாம் அஃதொன்றே வழியென்றும், ஏனையவெல்லாம் தவறான மார்க்கங்களென்றும் கருதுகின்றான். கிருஸ்தவர்கள் தங்கள் மதமே உலகனைத்துக்குமான ஒருவழியென்றும் அது ஒன்றே ஈசுவர ஸம்மதமென்றும், அதைப் பின்பற்றாதவர்களுக்கு மோக்ஷமே கிடையாதென்றும் கூறுகின்றனர். அவ்வாறே முகம்மதியர்களும், ஸோராஸ்டிரியர்களும், பௌத்தர்களும், ஜைனர்களும் இதர மதஸ்தர்களும் தத்தம் மதமே உண்மையென்று கூறுவதுடன் சமயம் வாய்த்த போதெல்லாம் பிறமதங்களைக் கண்டனம் செய்வதிலும் அன்னிய மதஸ்தர்களை உபத்திரவித்தலிலும் பிரமுகர்களா யிருந்திருக்கின்றனர். ஆனால் அநாதியான வேதத்தை ஆதாரமாகக்கொண்ட ஆரியர்களோ 'ஏகம் ஸத்விப்ராபஹுதா வதந்தி'--உண்மை யொன்றே; பலர் பலவிதமாய்க் கூறுகின்றனர்—என்றவர்களாய்ப், பிறமதக்கண்டனம் செய்வதும், அன்னிய மதங்களைத் தூஷிப்பதும் தவறென்று கொண்டவர்களாய் அடங்கியிருந்திருக்கின்றனர். 'தாகம் வந்தபோது அவனவன் தக்க விடத்தில் தண்ணீரைத் தேடிக்கொள்வான்' என்பது இவர்கள் கருத்து. காலகதியில் இவர்களும் உண்மையை மறந்து தங்களுக்குள்ளேயே பலவிதமான பேதங்களைக் கற்பித்துக்கொண்டு ஒரு சாற்றார் மற்றோர் சாற்றாருடன் சச்சரவிட்டுக் கொள்ளலாயினர். ஸநாதன தர்மத்தில் பல பிரிவினைகள் ஏற்பட்டு, ஒற்றுமையை யிழந்து உயர் நோக்கமின்றி, அத்வைதிகளும், த்வைதிகளும், சைவரும் வைணவரும் தென்கலையாரும் வடகலையாரும் த்வேஷம் பாராட்டுதல் ஸஹஜமாய்விட்டது. ஆகையால் இந்நிலையைச் சீர்திருத்த முயலுவது நமது முக்கியக் கடமைகளில் ஒன்றாம்.

நமது ஸநாதன தர்மமாவது என்ன? இதற்கு மூலாதாரமாயுள்ளவை, உபநிஷத்துக்கள், வேதாந்த ஸூத்ரம், பகவத்கீதை என்பன மூன்றுமே. இவையே ப்ரஸ்தானத்ரய மெனப்படுவன; நமது தர்மத்தின்மூன்று கால்கள். இவைகளின் தத்வத்தை நிர்ண



யிக்கப்புகும் பாஷ்யங்களில் முக்கியமானவை மூன்று; ஸ்ரீமத்வாசாரியார் செய்த த்வைத ஸித்தாந்தம், ஸ்ரீமத் ராமானுஜாசாரியாரது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம், ஸ்ரீமத்சங்கராசாரியாரது அத்வைத ஸித்தாந்தம். இந்த ஸித்தாந்தங்களெல்லாம் வெவ்வேறாய்ப்புலப்படினும் உண்மையில் ஒன்றேயென்பது தான் கற்றறிந்தோர் கொள்கை. இதைச் சிறிது ஆராய்வோம்.

ஸ்ரீமத்வாசாரியார், ஈசுவரன், ஜீவன், பிரகிருதி இம்மூன்றும் நித்யமென்றும், அநாதியென்றும், ஜடப்பிரகிருதியினின்று ஜகத்தை ஈசுவரன் சிருஷ்டித்தபடியால் ஈசுவரன் நிமித்த காரணமென்றும், ஜடப்பிரகிருதி உபாதானகாரணமென்றும் பிரகிருதி, புருஷன் ஜீவன் இவை ஒன்றுக் கொன்று முற்றும் வேறானவை யென்றும், ஆனால் பிரகிருதியும் ஜீவனும் ஈசுவராதீனத்துக்குட் பட்டவை யென்றும் கூறுகின்றார். பிரகிருதியின் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களால் பாதிக்கப் பட்டு ஜீவன் பலவித கர்மங்களைச் செய்கின்றான். அதனால் ஜனனம், மரணம் புனர்ஜன்மம் இவைகளுக்கு உட்பட்டுக் கர்ம பலனைப் புசிக்கிறான். கர்மம் நாசமானால் முக்தி பெறுகிறான். முக்திக்கு ஸாதனம் ஈசுவரனிடம் பக்திசெய்தல். ஈசுவரன் ஸர்வலோக நியந்தாவான விஷ்ணுவாய் உபாஸிக்கத் தக்கவன். இவ்வுபாஸனத்தால் ஈசுவரப்ரஸாதம் பெற்று ஜீவன் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யடைகின்றான். ஸ்ரீமத்வாசாரியார் மூன்று பொருள்களை நித்யமாய் ஒப்புக்கொண்டாலும் ஜீவனுக்கு கதி ஈசுவரனென்றும் அவரே உண்மையறிவுக்கும் ஆனந்தத்துக்கும் நிலையென்றும் அவரைத்தேடியடைதலே வாழ்க்கைப்பயனென்றும் கூறுகின்றார். ஜீவன் பிரகிருதியை விட்டு மேனோக்கிச் சென்று ஈசுவரனை நாடக்கடவன். இஃது எல்லாஸித்தாந்தங்களிலும் பொதுவான முக்கியாம்சமாம். இங்கே ஒற்றுமை நிலைபெறுகின்றது. இந்நிலையை யடையுமாறு ஸ்ரீமத்வாசாரியார் கூறுவதாவது 'நான் வேறு பிரகிருதி வேறு, எனக்கும் பிரகிருதிக்கும் ஸம்பந்தம் வாஸ்தவத்தில் இல்லை; இந்திரிய மூலமாகவே சம்பந்தம் ஏற்படுகிறது. ஆகையால் இந்திரிய வாயிலை யடைத்து விட்டால் பிரகிருதி ஸம்பந்தம் ஒழிந்துவிடும். மனதையொரு நிலைப்படுத்தி திவ்ய கலியாண குண ஸம்பன்னனான ஈசுவரனிடம் பக்தி செய்தால் அவருடைய கருணையால் ஈடேறலாம்'.

ஸ்ரீராமானுஜாசாரியார் ஸித்தாந்தமும் அநேகமாய் இதுவேயாம். அத்வைதம் என்றால் இரண்டற்றது. விசிஷ்டம் என்றால் விசேஷணங்களுடன் கூடினது. ஆகவே விசிஷ்டாத்வைதம் என்றால், சித், அசித், என்ற விசேஷணங்களுடன் கூடிய பரப்பிரம்மமே ஒன்று என்னும் ஸித்தாந்தம், புரப்ரம்மம் ஸ்வதந்திரத்துவம், மற்ற

இரண்டும் அதை ஆசிரயித்து நிற்கும் பரதந்திர தத்துவங்கள். ஒரு பதார்த்தம் வர்ணம் முதலிய குணங்களுடன் கூடியிருப்பது போலும், அதினின்றும் அக்குணங்களைப் பிரிக்க முடியாததுபோலும் பரமாத்மா, சித் அசித்துக்களுடன் சேர்ந்து பிரிபடாமல் ஒரு வஸ்துவாயிருக்கிறது. சித் அசித்துக்கள் பரமாத்மாவுக்குச் சரீரமாகவும் கூறப்படும். அசித் என்பது மூலப்ரக்ருதி; இஃது குடத்துக்கு மண் காரணமாயிருப்பது போல் சிருஷ்டிக்கு உபாதான காரணம். சித் என்பது ஜீவாத்மா; ஈசுவரன், அசித் என்னும் இரண்டு தத்துவங்களுக்கும் வேறானது. ஒவ்வொரு ஜீவாத்மாவும் வெவ்வேறு. பரமாத்மா ஒன்று; ஜீவாத்மா பல. பரமாத்மா அளவில்லாதவன்; ஜீவாத்மா அளவுள்ளவன். பரமாத்மா விபு; ஜீவாத்மா அணு. பரமாத்மா ஸர்வத்துக்கும் நியந்தா; ஜீவாத்மா கர்மாதீனன். பிறப்புஇறப்பாகிய ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு, கர்மக்கட்டுக்கு அப்பாற் சென்று ஈசுவர ஸாம்யத்தையடைதலே மோக்ஷம். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய முத்தொழில்களும், லக்ஷ்மீ பதித்வமும் நீங்க மற்றெல்லா வாற்றானும் ஜீவாத்மா ஸர்வலோக சரண்யனான வாஸுதேவனுக்கு ஸாம்யன். இந்நிலையடைதலே வாழ்க்கைப் பயன்.

இதற்கு உபாயங்கள் நான்கு: கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி. யோகமாவது பரமாத்மாவை எப்போதும் மனதில் தியானித்து பலாபேட்சையின்றிக் கர்மங்களைச் செய்தல். பிரவிருத்தி மேலிட்டால் இஃது கர்மயோகமெனவும், சாஸ்திர விசாரம், ஸ்வரூபத்தில் ஏகாக்ரசித்தம் இவைகளால், ஞானயோகமெனவும், பரப்ரம்மத்தை இடைவிடாமல் தியானித்தால் பக்தியோகமெனவும், இம்மார்க்கங்களை அப்யஸிக்க இயலா விடத்து ஈசுவரனையே சரணாகதியாக வடைந்து அவரே ரக்ஷகரென்னும் பூர்ண விசுவாசத்துடனிருப்பது பிரபத்தியெனவுங் கூறப்படும். ஸதாசாரியனைத்தேடி யடைந்து, வேதாந்தத்தில் பக்தியுடன் விசாரம் செய்து நித்யாநித்ய விவேகமடைந்து வைராக்கிய முள்ளவனாய் ஈசுவரப் பிரீத்யர்த்தம் கர்மத்தைச் செய்தலே ஜீவன் கடமை.

ஸ்ரீமத்வாசாரியார், பிரகிருதி, புருஷன், ஜீவன், வெவ்வேறானவையென்றும், ஜீவன் பிரகிருதியை விட்டுப் பிரிந்து செல்லமுடியுமென்றுங்கூற, இவர் ஈசுவரன் பிரிக்கவியலா வண்ணம் ஒன்று பட்டிருக்கிறாரெனக் கூறுகிறார். இதொன்றில் தவிர மற்ற விஷயங்களில் இரு ஸித்தாந்தங்களும் ஒருப் பட்டவையே.

ஸ்ரீசங்கர ஸித்தாந்தமோவெனின் 'ஏகமேவாத்விதீயம் பிர்ம்ம' உண்மைப்பொருள் மூன்றல்ல, இரண்டல்ல, ஒன்றே'யென்பது. பாரமார்த்திகமாய்ப் பார்க்குங்கால் இந்த ப்ரபஞ்சத்தில் ஆத்மாவுக்கு வேறாயும் ஸத்தியமாயுமுள்ள பொருள் ஒன்றுமில்லை. ஆகையால் துக்கநிவிருத்தியின் பொருட்டு ஜீவன் தேடியடைய வேண்டியதொன்றில்லை. துக்கம் பழுதையில் பாம்பு தோன்றுவதுபோல் அக்ஞானஸம்பவமே யொழிய வாஸ்தவமில்லை. ஜீவன் நாடும் ஸச்சிதானந்தமே உண்மை; அஃது ஜீவனிடத்திலேயே நிலை பெற்றிருக்கின்றது. தன்னிடமுள்ளதையே உணராது தவித்தல் எங்ஙனமெனின், இதுவே மாயையெனப்படும். மூடர்கள் பதின்மர் யாத்திரை போகையில் எண்ணிக்கை சரியாயிருக்கிறதாவெனக் கணக்கிட்டதில் எவ்வாறு ஒவ்வொருவனுந் தன்னை விட்டு மற்றோரை மட்டும் எண்ணித் தங்களில் ஒருவனை யிழந்ததாய் அவர்கள் துக்கித்தார்களென்றும், வேறொருவன் வந்து உண்மையைக் காட்டிய விடத்தில் துக்க நிவிருத்தியடைந்தார்களென்றும் நாம் கேட்டிருக்கின்றோம். ஜீவனுடைய துக்கமும் இப்படிப்பட்டதே. இந்த துக்கம் ஞானோதயத்தாலேயே தீரும். ஆகையால் மோட்சத்தை விரும்பும் ஜீவன் எல்லாவற்றினும் பற்றை விட்டுத் தனக்கு ஸ்வதஸ் ஸித்தமாயுள்ள இன்ப நிலையை யனுபவிக்கக்கடவன்.

மற்றைய ஸித்தாந்திகள் ஜீவாத்மபரமாத்ம பேதத்தை ஒப்புக் கொண்டு, ஜீவாத்மாவை அணுவெனவும் அளவுள்ளதெனவும் கூற, இவர் ஆத்மா ஒன்றே, இரண்டற்றது, அளவற்றது, விபுத்வமும் அணுத்வமும் ஓரிடத்திலேயே யமையு மெனவுங் கூறுகின்றார். ஆத்மாவை வர்ணிக்குமிடத்து "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" என்று உபநிஷத்துக்கள் கூறுவதால் ஒரே பொருளை அணுவினும் அணுவாகவும், பெரிதினும் பெரிதாகவுங் கூறுதல் தவறாகாது. ஆழ்ந்தாராய்வோமானால் அணுவாய்க்கூறின் என்? விபுவாய்க்கூறின் என்? அவனன்றி யோரணுவு மசையாதன்றோ? அவன் எங்கு நிறைந்த பொருளன்றோ? அனுபவப்பற்றி எல்லாக்கொள்கைகளும்உண்மையே. அவைகளின் நோக்கங்களும் இறுதியும் பாரமார்த்திகத்தில் ஒன்றாயு மென்பதும் விளங்கும்.

நமது நாட்டைவிட்டுப் பிறநாடுசென்று இரண்டொரு பிறமதங்களைக்கவனிப்போம். பாலஸ்தீனாவில் மோஸஸ்ஸுக்குக் கடவுள் ப்ரத்யக்ஷமானார். மோஸஸ் கூறுவதாவது: கடவுள் ஒருவரே. அவரிடமிருந்து, அவர் ஸங்கல்பத்தால் உலகனைத்தும் உண்டாயது. அவரிடமேயே உலகம் லயம்பெறும். அவரை ஸர்வலோக கர்த்தாவாயுந் தாதாவாயும் ஆராதித்தல் மனிதன் கடமை. இவர் ஜனங்களுக்கு போதித்தது பக்திமார்க்கம். பின்னர் இவரினும் சிறந்த ஆசாரியர் அதே தேசத்தில் அவதரித்து ஞானமார்க்கத்தையும் வைராக்கியத்தையும் புகட்டி ஜீவன்களை ஆட்கொண்டார். இவரே இயேசு

கிறிஸ்து. இவர் தன் வாழ்க்கையால் தியாகமும் ஸேவையும் ஸாதனங்களென்று கண்கூடாய்க் காட்டியருளினார். மண், பெண், பொன் இவைகளில் பற்றற்று தீவிரமான பக்தியுடனும் விவேகத்துடனும் வெளிநாட்டத்தை விட்டு உள் நாட்டத்தால் நாமரூப அதீதனான ஈசுவரனை மனதால் உபாஸிக்கவேண்டுமென்று போதித்தருளினார். இதுவே கிறிஸ்து மத தத்துவம். கர்மமும், பந்தமும், ஜன்மமும், ஸம்ஸாரமும் வெவ்வேறுவிதமாய்க்கூறப்படினும், முக்கியாம்சம் நமதாசாரியர்கள் கூறப்பட்டவாறே கூறப்பட்டிருக்கின்றது.

மேலும் இந்த உண்மையே முகம்மதால் அரேபியாவில் பிரசாரம் செய்யப்பட்டது. முகம்மது ஓர் சிறந்த பக்தர். மக்காவுக்கருகில் ஓர் மலைக்குகையில் சென்று நீண்டகாலம் உள்நாட்டமுடையவராய் ஈசுவரனைப்பற்றி இடைவிடாது சிந்தித்து வருகையில், ஓர் நாள் ஞானோதயம் பிறக்க, பலநாளாக இருட்டாயிருந்த ஓரறையில் தீபம் கொண்டுவரப்பட்டவுடன் இருள் உடனே மறைவது போல், இவர் அக்ஞானம் முற்றும் மறைந்து ஞான ஒளியால் திடீரெனப் பிரகாசித்தார். ஆடுமேய்க்கும் இடையனாயிருந்த இவர் ஆவேசம் கொண்டு கிளம்பி தான் கண்ட உண்மை நிலையைப்பிறர்க்கும் புகட்டித் தடுத்தாட்கொள்ள முயன்றனர். தான் ஈசுவரதூதனெனக் கருதினார். கடவுள், அல்லா ஒருவரே யென்றும், அவர் நாமரூபமற்றவராதலால் பிரதிமை ரூபமாய் உபாஸிக்கத் தக்கவரல்லவென்றும், தூய்மையான மனத்தினிடை அரூபியாய்ச் சிந்திக்கத்தக்கவரென்றும், அவரையே சரணடையவேண்டுமென்றும் போதித்தார்.

கிருஸ்துவும், முஹம்மதும் தாங்கள் கூறிய மார்க்கத்தைத் தவிரவேறு மார்க்கமில்லை யென்றதால், ஈசுவரன் ஒருவனே யெனக்கொள்ளலும், அவனை மனோவாக்கதீதமாயுணர்தலும் வழியெனவற்புறுத்திக் கூறினாரேயன்றி, தங்களால் போதிக்கப்பட்டதைத் தவிர, வேறொருகாலத்திலும் தேசத்திலும் ஈசாவதார[illegible] யென்றும், இதே மார்க்கம் வேற்றிடங்களில் கற்பிக்கப்படவி[illegible] யென்றும் கருதினாரல்லர் என்பது எம் துணிவு.

[illegible] மறுபடியும் இந்தியாவை நோக்குவோமானால், புத்தமது ஜைனமதம் இவைகளைக் காண்கின்றோம். புத்தர் இளமைப்பருவத்தில் உலக வாழ்க்கையின் சிறுமையையுணர்ந்து ஞானத்தைப்பெற வேண்டி வனம் சென்று தவம்புரிந்தார். போதிமரத்தடியில் தீ[illegible] வைராக்கியத்துடனமர்ந்து 'என் உயிர் பிரிந்தாலும் சரி; மெ[illegible] உடல் உணர்ந்தாலும் சரி; நான் பல ஜன்மங்களாய் முயன்[illegible] இதுவரையறியாத உண்மையை உணராமல் இவ்விடம் விட்டு



கேன்' என்று இந்திரியங்களின் வெளிப்போக்கை நிக்ரகம் செய்து ஸமாதியிலாழ்ந்து முடிவில் அக்ஞான ஒழிவு அல்லது நிர்வாணம் என்னும் உயர் நிலையை யடைந்து எங்கெங்கும் ஆனந்தம் நிறைந்திருக்கக்கண்டார். பின்னர் தான் பெற்ற அனுபூதியைப் பிறரும் பெற்றுய்யும் வண்ணம் தர்மப்ரசாரம் செய்யலானார். தன்னுயிரை மன்னுயிர் போல் பாவித்து, அஹிம்ஸையும் கொல்லா விரதமும் பூண்டு, ஸத்யத்தையும் ஜீவதயையும் பிரதானமாய்க் கொண்டொழுக வேண்டுமென்றும் போதித்தார். இவர் கூறும் நிர்வாணமும் நமதாசாரியர்கள் கூறும் மோக்ஷமும் ஒரு நிலையையே குறிக்கும். ஆனால் ஸத்கருமத்தையே முடிவாய்க் கொண்டு அவைக் கதீதமான ஓர் நியந்தாவைக் கூறாததால் இந்த மதத்தை நாஸ்திக வாதமென்பர். ஜைனமதமும் இவ்வாறே.

பல மதங்களையும் ஆழ்ந்தாராய்வோமாயின் அவைகள் ஒவ்வொன்றும் ஸச்சிதானந்த நிலையை யடைதற்கே பல வேறுவிதமான மார்க்கத்தைக் கற்பிக்கின்றன வென்பது வெளியாகும். வெளிப்பார்வைக்கு கால தேசங்களால் வேற்றுமையாய்க் காணப்படினும், அவை ஒரே ஊருக்குப் போகும் பல பாதைகள் போன்றிருக்கின்றன.

'ஒரே வஸ்துவான தண்ணீரைச் சிலர் ஜலம் என்றும், சிலர் வாரி என்றும், சிலர் அக்வா என்றும், சிலர் பாணி யென்றும் வேறு வேறு வார்த்தைகளால் கூறுகின்றனர். அதுபோல ஒரே ஸச்சிதானந்த பிர்ம்மத்தைச் சிலர் கடவுளென்றும் சிலர் அல்லாவென்றும், சிலர் ஹரி என்றும், சிலர் சிவனென்றும், சிலர் பிர்ம்மம் என்றும் கூறுகின்றனர்.'

'ஒவ்வொருவனும் தன் தன்னுடைய மார்க்கத்தை யனுசரிக்கட்டும். கிறிஸ்தவன் கிறிஸ்து மார்க்கத்தையும், முகம்மதியன் முகம்மதிய மார்க்கத்தையும் பின்பற்றவேண்டும். ஹிந்துக்களுக்கோ ஆரியரிஷிகள் ஏற்படுத்திய பிராசீன மார்க்கந்தான் உத்தமமானது.'

'நோய் கொண்ட குழந்தைகளுக்குப் போஷணை செய்யுந் தாய் அததற்குத் தக்க ஆகாரத்தைக் கொடுப்பதுபோல் வேறு வேறான நிலையிலுள்ள மனிதர்களுக்கு ஈசுவரன் வேறு வேறான மார்க்கங்களை நியமித்தருளியிருக்கின்றனர்.'

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா 'எவரெவர் எந்தெந்த மாதிரி என்னை உபாஸிக்கிறார்களோ, அந்தந்த மாதிரி நான் அவர்களைத் திருப்தி செய்கிறேன்; மனிதரெல்லாம் எவ்வாற்றானும் என் வழியையே

'அனுஸரிக்கிறார்களென்று நீயறி' என்று கீதையில் அருளியிருக்கின்றார்.

அன்னேயனே யெனுஞ் சிலசமய மின்னையே
ஐயாவையா வென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்றுமிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேற்
பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
பிறவுமே நிலயமென்றும்
தன்னே ரிலாததோ ரணுவென்று மூவிதத்
தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதாஞான வானந்தமா
யென்னேயென் னேகருணை விளையாட்டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

---

## வர்த்தமானம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது எண்பத்தாறாவது பிறந்த நாள் மஹோத்ஸவம் சென்ற மாசிமீ 30உ (13-3-21) ஞாயிற்றுக்கிழமை, மயிலாப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது.

காலை முதல் மாலை வரையில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் மடத்திற்கு வந்து பஜனை செய்தும் செய்வதைக் கேட்டும் ஆனந்தித்தனர். சுமார் நாலாயிரத்துக்கு மேலான ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

பகல் 2½-மணிக்கு ஸ்ரீமான் இராமஸ்வாமி அய்யங்கார் 'ருக்மிணி பரிணயம்' என்னும் விஷயத்தைப் பற்றிக் காலக்ஷேபம் செய்தார். மாலை 5½-மணிக்கு ஸ்ரீமான் எஸ். வரதாசாரியார் பி. ஏ., பி. எல். "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரது உபதேசங்களும் நமது ஆசாரமும்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பிரஸங்கம் செய்தார். பின்னர் நமது பூர்விக தர்மத்தின் சிறப்பைப்பற்றி அக்ராஸனாதிபர் ஸ்ரீமான் கே. ஸுந்தர ராமய்யர் பேசினார். பக்தர்களுக்கு ப்ரஸாதம் வழங்கின பிறகு கூட்டம் கலைந்தது.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரது பிரதம சிஷ்யர்களில் ஒருவரும், இவ்வுலகமெங்கும் ஏற்பட்டிருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களுக்குத் தலைவருமான ஸ்ரீமத் ப்ரஹ்மானந்த ஸ்வாமிகள் வரும் சித்திரை மாதத்தில் இங்கு விஜயம் செய்வார் என அறிகிறோம். அவர் ஸ்ரீராம கிருஷ்ண மாணவர் இல்லத்தின் கிருகப்ரவேச நிகழ்வை முன்னிட்டு வருகிறாராயினும் சில மாதங்கள் தென்னாட்டில் தங்குவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

# விவேகானந்த ஸ்வாமிகள்

## அருள்வாக்கியத் திரட்டு.

கடவுள்மீதுள்ள அத்யந்தப் பிரேமை பக்தி எனப்படும். இந்த பிரேமைதான் உண்மையான இறவாத் தன்மையாகும். இவ்வமரத் தன்மையை யடைந்த புருஷன் பூர்ண திருப்தியை யடைந்தவனாய் மாச்சரிய மடைவதில்லை. அமரத்தன்மையை யறிந்த மனிதன் உன்மத்தனாகி விடுகின்றான்.

ஆசைகளை நிறைவேற்ற பக்தியை உபயோகிக்கவியலாது. ஏனெனில் எல்லா வாசைகளுக்கும் அதுவே இடையூறாகும். பிரேமைக்குரிய அறிகுறிகளை நாரதர் பின்வருமாறு கூறியிருக்கிறார். எல்லாவெண்ணங்களையும், எல்லா மொழிகளையும், 'எல்லாக்கிருத்தியங்களையும் கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டு கடவுளை மறப்பதால் மட்டும் ஒருவன் துக்கத்தை யடைவானானால் அப்பொழுதுதான் அவனுக்குப் பிரேமை துவக்கமுற்றதென மதிக்கற்பாலது.'

"மனிதர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் காட்டும் நேசமானது ஒரு பிரயோசனத்தை எதிர்பார்த்தே காட்டப்படுகின்றது. இவ்விதப் பிரதி லாபத்தைக் கருதியதல்ல மேற்சொன்ன பிரேமை. இதுபற்றியே, பிரேமைக் கொப்பாகிய பக்தி கிடையாது."

"உலக வழக்கத்தையும், சாஸ்திரத்தில் கூறியிருக்கும் வழக்கத்தையுங் கடந்து சென்றவன் எவனோ அவனே சன்னியாசியெனப்படுவன். எப்பொழுது நமது ஆத்மா முற்றும் கடவுளிடத்தில் செல்லுகிறதோ எப்பொழுது நாம் கடவுளைச் சரணாகதி யடைகின்றோமோ அப்பொழுது இவ்விதப் பிரேமை உதிக்கப்போகின்றதென்று நமக்குத் தெரிகிறது."

கடவுளுக்கும் அவர்மீது உனக்கிருக்கும் பிரேமைக்கும் மத்தியில் யாதொன்றையும் நிற்கவிடாதே. அவரைநேசி, அவரைநேசி, அவரைநேசி. உலகத்தார் என்னவேண்டுமென்றாலும் சொல்லட்டும். பக்தி மூன்றுவிதமாகும்; ஒன்று, இது வேண்டும் அதுவேண்டும் என்று இரந்துகேட்டல். இவற்றிற்குப் பதில் ஒன்றும் கொடுப்

பதற்கு எண்ணமிருப்பதில்லை. இரண்டாவது, நேசம்பண்ணி நேசத்தை எதிர்பார்ப்பது. மூன்றாவது, பக்தி செய்வதே யொழிய பதிலொன்றுங் கோருவதில்லை. இந்தப்பிரேமை விளக்கு வெளிச்சத்தின்மீது விட்டிற்பூச்சிகளுக் கிருக்கும் பிரேமை போலாம்.

பிரேமையானது கிரியையைவிட உயர்ந்தது; யோகத்தை விட உயர்ந்தது; ஞானத்தைவிட உயர்ந்தது.

அத்தியந்த ப்ரேமைக்கும் ஞானத்திற்கும் வித்தியாசமில்லை. இரண்டுமொன்றே யென்னலாம்.

கடவுளைப்பற்றிக் கற்பனை பண்ணுவது தகுதியன்று. நாம் பிரேமை பாராட்டி உழைக்கவேண்டும். உலகத்தையும் அதன் கண்ணுள்ள பொருளையும் விட்டுவிடு. அல்லும்பகலும் கடவுளைப்பற்றி நினை. கூடியமட்டும் வேறெதைப் பற்றியும் நினையாதே. தினந்தோறும் எண்ணவேண்டிய இன்றியமையாத எண்ணங்களைக் கடவுள் வாயிலாகவே எண்ணக்கூடும். அவருக்காகப்புசி, பானம்பண்ணு, நித்திரைசெய்; எல்லாவற்றிலும் அவரைப்பார். எல்லாவிடத்திலும் கடவுளைப் பேசு. இதுவே மிகுந்த பிரயோஜனத்தைத் தரத்தக்கது.

---

எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங் கிருப்பது நீ யன்றோ பராபரமே.

அனைத்துமாய் நின்றாயே யான் வேறோ நின்னை
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே

ஒருரையால் வாய்க்கு முண்மைக் கோரனந்த நூல்கோடி
பேருரையாற் பேசியென்ன பேறும் பராபரமே

சொல்லாலடங்காச் சுகக்கடலில் வாய் மடுக்கி
னல்லா லென்றாக மறுமோ பராபரமே

# ஸங்கீத ஸ்வப்னம்

(60-பக்கம் தொடர்ச்சி)

ஆனால் நான் இதுகாறு மறியாத ஓர் புது உணர்ச்சி நானறியாமலே என் மனதின்கண் புகுந்து கொண்டது. அது என் ஆண்மை, வீரம், விடாமுயற்சி எல்லாவற்றையும் சில நாட்களுக்குள் அடித்துத் தூரத்தி விட்டது. ஒருநாள் ஏழு நாட்கள் போலச் சென்றது. நடுக்கடலில் புகலின்றித் தத்தளிக்கும் ஒருவன்போல அர்த்த ராத்திரிப் பொழுதில் தனியே தூக்கம் வாராமல் புரண்டு கொண்டிருந்தேன். மன்னுயிரை யெல்லாந் தூங்கச் செய்த இராத்திரிக்கு நான் ஒருவனே துணைவன்; என்னையன்றி வேறு துணையில்லை. அங்ஙனமே பகற்பொழுதிலும் தனியே இருந்து ஏங்கிப் பெருமூச்சு விடலானேன். என் விசாரம் என் உயிரை உண்ண வாரம்பித்தது. ................ஒரு அற்பன்...அவர்களுக்கு முன்னும் பின்னும் தெரியாதவன். இந்த ஊருக்கே புதிது......அப்படிப்பட்ட நான், மிகப் பழமையான சாகையிலே தோன்றிய கனியை அடைய ஆசைப்படுவதா? இது தர்மமா? இது விடனின் செயலல்லவா? ஆனால் அப்படிப்பட்ட வரம்பு கடந்த காமம் இவ்வளவு நாளாக என்னைப் பாதியாது இப்பொழுது எங்கிருந்து வந்தது? கைம்மாறு இல்லாத இந்த ஆசை என்னை மோகச் சுழியிலே ஆழ்த்திக் கொல்லவோ தோன்றியுள்ளது? ஆனால் முன்னும் பின்னும் கொஞ்சங்கூட அறியாதவள் போன்ற அவளுடைய பார்வையில் அவள் காதலை நான் அறிந்தேன். அவள் தாய்தந்தையர்கள் இதை யறிந்து என்னை ரக்ஷிக்கமாட்டார்களா? ஆ, தெய்வமே! என்று கவலைப்பட்டேன். கடவுள் கடாக்ஷம் ஏற்பட்டது.

என்னை ஆதரித்து ரக்ஷித்தவர்கள் பக்கத்திலேயே ஒரு சிறு வீடு வாசல் அமைத்துக் கொண்டேன். பாடுபட்டு ஜீவனம் செய்பவனுக்குப் பொருள் சேருவதும் சாதாரணமே. என் வரும்படி சுருக்கமாக விருந்தபோதிலும் என் மனைவி அதற்குத் தக்கவாறு செலவைச் சுருக்கினாள். முன்போலவே நெற்றிவேர்வை நிலத்தில் விழுந்து பெருகும்படி வேலை செய்துவிட்டு வீடு திரும்புவேன். என் வாழ்விலும் இன்பம் துன்பம் இரண்டும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. எனினும் எனக்கு என் வாழ்வு தேவர்களுடையதைப்பார்க்கிலும் மேன்மையாகவே தோன்றியது. அவன் அனுக்கிரகத்

தினால் எனக்கு ஏற்பட்ட இல்வாழ்க்கையை நான் நடத்துச் சென்ற காலத்திலும் அவன் கமலச் சேவடிகளை நிதமும் வணங்கி அவன் திருநாமத்தைப் புகழ்ந்து பாடுவதை வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு அதன்படி நடந்து வந்தேன். இதனுடன் வீட்டில் ஒழுங்கும் சமாதானமும் அன்பும் தர்மமும் நிறைந்திருந்ததால் அந்த வாழ்வின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

நான் ஒருநாள் அருவிக்குச் சென்று ஸ்நானம் செய்து விட்டு வீடு திரும்புகையில் பல அழகிய காட்சிகளைக் கண்டு களித்து வந்தேன். ஓர் பசும்புல் நிறைந்த மைதானம். அங்கு பல பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. ஒரு மரத்தினடியில் அப்பசுக்களை மேய்க்குமிடையன் தன் குழலைக் கையில் வைத்து ஊதிக்கொண்டிருந்தான். சில பசுக்கள் வீட்டிலிருந்த தம் கன்றுகளை நினைத்து “அம்மா!” என்று கத்திக் கொண்டிருந்தன. மற்றொரு இடத்தில் ஓர் ஆட்டிடைச் சிறுவன் தன் ஆடுகளையெல்லாம் ஒரு பூவரசு மரத்தின் கீழ் விட்டுக்கொண்டு யதேஷ்டமாகத் இலைகளையும், மெல்லிய கிளைகளையும் ஒடித்துக் கொடுத்தான். அவைகள் இலைகளைத் தின்று கொண்டிருக்கையில் அவன் ஒரு இலையைப் பறித்துச் சுருட்டி வைத்து “பூ!” என்று ஊதிக்கொண்டிருந்தான். சில ஆட்டுக் குட்டிகள் “மே, மே!” என்று கத்திக் கொண்டிருந்தன. அவைகள் எவருடைய அன்பை பெதிர்பார்த்து அங்ஙனம் “மே! மே!” என்று கத்துகின்றன வென்று நினைத்தேன்.

இன்னொரு பக்கத்தில் மேட்டுப் பாங்கான நிலத்தில் புஞ்சைப் பயிர் செய்யப் பட்டிருந்தது. அந்த அழகிய காலைவேளையில் அத் தோட்டங்களிலுள்ள வேலைக்காரர்கள் மனோற்சாகத்தோடு வேலை செய்து கொண்டிருந்தனர். சிலர் துலாக்கட்டை மீது,

'மெய்வருந்தும் எங்களுக்கே
மேலன்பு பூண்டருளி
ஐயமிலா தளித்திடுவாய்
அருள்நிதிகள் தாயே நீ!'

என்று பாடி நடந்தனர். வேறு சிலர் சால் பூட்டியிருக்கும் மூங்கிலைப் பிடித்துக் கொண்டு,

'ஏலேயேலோம் பத்தேடி
ஏலேயேலோம் பத்தாந்தம்பி'

என்று பாடிக்கொண்டே நீர் மொண்டுகொண்டிருந்தனர். இன்



னும் சிலர் இறைக்கப்பட்ட நீரை ஒவ்வொரு செடிகளுக்கும் மரங்களுக்கும் பாய்ச்சும்பொழுது,

'பைம்புனலை யூற்றிடுவாய்,
பசுங்கொடியைப் போற்றிடுவாய்,
தீம்புனலை வார்த்திடுவாய்,
செழுங்கொடியைக் காத்திடுவாய்.'

என்று பாடிக்கொண்டிருந்தனர். சில துலாக்கட்டைகள் அச்சாணிகளுக்கு எண்ணெய் இல்லாமல் “கிறீச்சு, கிறீச்சு!” என்று கரைந்து கொண்டிருந்தன. இங்ஙன மெங்கும் பற்பல ஒலிகள் உண்டாயின. இவ்விதம் எழும்பிய பற்பல ஓசைகளினூடாக வஸந்தமும் அந்த இன்னிசையைத் திரட்டி வந்து என்னிருதயத்துள் பிரவேசித்தது.

எனது ஸீமந்த புத்திரி கீர்வாணி கணவன் வீடு போகக் காத்திருந்தாள். கோவிந்தன் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கொண்டிருந்தான். அவனுடைய உபாத்தியாயர்கள் எல்லோரும் ஒன்றுபோல அவனுடைய புத்தியையும் வினயத்தையுங் கண்டு மெச்சினார்கள். அவன் படிப்பில் ஜாக்கிரதையாக விருந்ததோடு வீட்டு வேலைகளையும் பொறுப்பாகக் கவனித்து வந்தான். வெகு சீக்கிரம் என்னிலும் அதிகப் புத்திமானாகவும் அறிவுடையவனாகவும் விளங்குவான் என்ற எண்ணம் எனக்கு உண்டானதும் நான் அடைந்ததோர் ஸந்தோஷத்திற் களவே யில்லை. அவனுக்குப் பின் பிறந்த காருண்யம் வீட்டிலேயே விளையாடிக் கொண்டிருந்தாள். செவிக்கினிய அவளது மழலைச் சொல்லும் கலகலவென்ற சிரிப்பும், கண்ணுக்கினிய ஓயாத விளையாட்டும் புதிது புதிதாகச் செய்யும் சேஷ்டையும் நவநவமான குறும்புத்தனமும் எங்களுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தபோதிலும், எங்களுக்கு எப்பொழுதும் அவளை மேற்பார்வை செய்யும் ஓர் பெரிய அலுவல் ஏற்பட்டது.

ஒருநாள் மாலைப்பொழுதில் நான் வீட்டிற்குத் திரும்பிவந்தவுடன் என் குழந்தை ஏதேதோ சமாசாரங்களை அவளுடைய மழலைச் சொற்களால் சொரிந்தாள். பல சமிக்ஞைகளுடன் அவள் மொழிந்த மொழிகள் எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை. அவள் தாயார் சொன்ன குருவிக்கதையைச் சொல்லுகிறாள் என்று கோவிந்தன் சொன்னான். அதன் பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது.

இதன் பிறகு காருண்யம் கதை சொல்ல என்னைத் தொந்தரவு செய்ய வாரம்பித்தாள். மெள்ள மெள்ள கோவிந்தனும் கீர்வாணியும் அவளுடன் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் மூவரையும்

ஒரே சமயத்தில் திருப்திப் படுத்துவதென்பது அசாத்தியமாக விருந்தது. வயதில் சிறிது முதிர்ந்த இருவருக்கும் குடும்ப சரித்திரத்தைக் கேட்பதில் சலிப்பே கிடையாது. குழந்தை காருண்யத்திற்குக் குருவிக் கதைபோல விருந்தால் ரஸமாகக் கேட்பாள். ஆனால் கோவிந்தனும் கீர்வாணியும் அவர்கள் பாட்டன் கதையைச் சொல்லவேண்டுமென்று பலதடவையாக மன்றாடுவதைக் கண்டு, அவளும், பாட்டன் கதையிலேதோ விசேஷமிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு, “ தாத்தாக் கதை சொல்லு !” என்று அவர்களுடன் சேர்ந்து கத்தத் தொடங்கினாள். அந்த “ தாத்தாக் கதையை ” அவ்விருவர்களுக்கும் குறைந்தது இருபது முறை சொல்லியிருப்பேன். ஆனாலும், இப்பொழுதும் திரும்பவும் சொல்ல வேண்டுவதாக ஏற்பட்டதால், அவர்கள் தாத்தா கோவிந்தசாமியவர்கள் ஸர்க்கார் உத்தியோகம் நடத்திய விமரிசையையும் அவருடைய தாராளச் செலவையும் அவருக்கு ஏழைகளிடத்துள்ள அன்பையும் தைரியத்தையும், அவர் எப்படி ஒரு தடவை வீட்டில் நுழைந்த திருடனைப் பிடித்துக் கட்டி ஜெயிலுக்குக் கொண்டு போனார் என்பதையும், என் தாயார் எப்படித் தனக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்களையும் துன்பத்தையும் பூமாதேவி போலப் பொறுத்து இல்லறம் நடத்தினாள் என்பதையும், அவருக்குப் பிறகு என் தாயின் மரணத்தையும், அதன் பிறகு நான் அனுபவித்த கஷ்டங்களையும் அவர்களுக்கு விரிவாகக் கதைபோலச் சொன்னேன். அவர்கள் இந்தக் கதையைப் பல தடவை கேட்டிருந்தும் அதில் வெறுப்படையாது இப்பொழுதும் அதிக ஆவலுடன் கேட்டனர். காருண்யத்திற்கு இக்கதை அத்தனை ரம்யமாக விருந்திருக்குமோ வென்பது எனக்குச் சந்தேகமே. ஆனாலும், அவள், அதிசயம், சந்தோஷம், ஆத்திரம், அச்சம், பயம், துக்கம் முதலிய ரஸங்களைக் கீர்வாணி கோவிந்தன் இருவர்களுடைய முகத்தினின்று தெரிந்துகொண்டு அவற்றை அவ்வாறே நடித்துக் காட்டி வந்தாள். கதை முடிந்த பிறகு, விளக்கின் முன்பாக உட்கார்ந்து ஈசன்மீது பாடிக்கொண்டிருந்த தம் தாயின் பாடலைக் கேட்க அவர்களெல்லோரும் சென்று விட்டனர். அவள் அன்பும் கருணையும் நிறைந்த ஆனந்தமூர்த்தியிடம் ஈடுபட்டுப் பாடிய பாட்டில் நானும் ஈடுபட்டேன். ஆனால் வெகு சீக்கிரம் என் மனம் அவள் பாட்டிற்கும் என் குழந்தையின் மழலைச் சொல்லிற்கும் மேலான வோர் சங்கீதம் கேட்க, அதில் லயித்து விட்டது.

என் மைத்துனன் வியாதியினால் படுத்தான். எங்கள் குடும்ப வைத்தியர் குறித்துக் கொடுத்தக் குறிப்புப்படிக்குக் கஷாயத்திற்கும் லேகியத்திற்கும் குளிகைக்கும் உள்ள மருந்துகளைச்



சேர்க்கத் தேடியலைந்தேன். தினம் வீட்டில் தினிசு தினிசான மருந்துகள் செய்யுந் தொழிலாக முடிந்தது. மருந்துகள் அதிகமாக வியாதியும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவன் தனது தங்கையாவது கீர்வாணியாவது எப்பொழுதும் பாடிக் கொண்டேயிருந்தால் தன் நோவைச் சற்று மறந்திருப்பான். நானும் அவன் சொஸ்தமடையும் பொருட்டு விச்வேச்வரனை தினமும் வேண்டிக் கொண்டேன். ஒரு நாள் ஸாயங்காலம் அடிவாரத்திலுள்ள கோயிலுக்குச் சென்று அவனுடைய க்ஷேமத்திற்காக ஈச்வரனுக்கு அர்ச்சனை அபிஷேகங்கள் செய்யக் கருதிப் புறப்பட்டேன்.

அன்று பௌர்ணமி கழிந்த இரண்டாம் நாள். மாலைப்பொழுதில் உலகெங்கும் மெள்ள மெள்ள இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. காகமும் மற்றப் பறவைகளும் பற்பல தொனிகளைக் கிளப்பித் தத்தம் கூடுகளையும் மரங்களையும் நாடிச் சென்றன. சிறிது நேரத்திற்கெல்லாம் பறவைகளுடைய அரவமும் நின்றது. மரங்கள் இலையசைக்காது ஸ்தம்பித்து நின்றன. அங்கு குடிகொண்டிருந்த அதிசயத்தையும் பயத்தையும் விளைவிக்கும் அப்பெரிய மௌனத்திலுங்கூட, எங்கும் பரந்து முழங்கி நிறையுமந்த இன்னமுத நாதத்தை நான் கேட்கலானேன். சில மண்டபங்களிலும் சிறு இல்லங்களிலும் ‘ மினு, மினு ’ என்று தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. சிறிது நடந்ததும் அருவியின் ‘ சோ !’ என்ற சத்தம் காதில் நுழைந்தது. நான் முன் என் மைத்துனனை எங்கு சந்தித்தேனோ அங்கேயே சென்றேன். கல்லணன் நிறத்தை விண்ணும் மண்ணும் மெழுகியதோ எனத் திகைக்குமாறு எங்கும் சூழ்ந்த இருளகற்றும் வெண்திங்கள் கீழ்த்திசையில் உதித்தெழுந்து தன் குளிர் நிலாக் கற்றைகளை இலைகளினூடும் கொம்புகளினூடும் அவ்வாற்று நீரின் மீதும் கரையின்மீதும் வீச வாரம்பித்தான். அருகிலிருந்த ஓர் மரத்தின் அடர்ந்த கிளை மறைவில் ஓர் கோகிலம் “குக்கூ! குக்கூ!” என்று கூவிக் கொண்டிருந்தது. அந்நாதம் மலைவளைவிற் சென்று தாக்கி எதிரொலித்தது. அச்சிற்றாறு அங்கு பாறைகளிலுள்ள பள்ளங்களில் விழுந்து வெளிக்கிளம்பிய பொழுது “குளுகுளு” என்று பிதற்றிக் கொண்டிருந்தது. அது கூழாங்கற்களின் மீதும் சரலின் மீதும் ஓடியபொழுது “மணமணு, முணுமுணு” என்று முணங்கிய வண்ணமாயிருந்தது. அந்த அழகிய இரவிலும் இந்த ஒலிகளினூடாக ஓர் இனிய கானம் என் இருதயத்தில் வந்து தாக்கியது. அருவியின் ‘சோ’ வென்ற சத்தமும் ஓடையின் பிதற்றலும் இலைகளின் ‘சலசல’ வென்ற ஓசையும் வேலைக்காரிகள் வேலை செய்யும் பொழுது பாடுகின்ற தாலாட்டும், இடையர்கள் ஊதும் வேய்ங்குழல் நாதமும், கன்றுகாலிகள் கத்தும் ஓசையும், குழந்தை

களின் மழலைச் சொல்லும், பெண்களின் மெல்லிய குரலும் யௌவன ஆடவர்களின் கருணை நிறைந்த நகைப்பும் வயோதிகர்கள் கடவுள்மீது கனிந்து பாடும் தமிழ் மறையும் கோகுலத்தின் பண் நிறைந்த இன்னொலியும் பல்லியங்களின் நாதமும் வாழ்க்கையின் இசைவும் எல்லாம் என் இருதயத்தின்கண் வந்து தாக்கிய ஒலியில் கட்டுப்பட்டிருப்பது போலத் தோற்றின. அந்த அதிமதுர நாதத்தைக் கேட்டதும் என் மனம் தாய்ப்பசுவைக் கண்ட கன்றெனவும் தாயின் குரல் கேட்ட குழந்தையெனவும் ஆனந்தம் அடைந்தது.

நான் என் கால் கைகளைக் கழுவிக்கொண்டு ஸர்வேச்வரனுடைய கோவிலுக்குள் சென்றேன். அங்கு மூல மண்டபம் சென்று என் தலைமீது இரு கை குவித்து அரைக்கண்ணடைத்து மனதை ஓர் நிலைப்படுத்தி நின்றேன். முன்போலவே அந்த அதிமதுர நாதம் கேட்டது. அது அந்தக் கர்ப்பக்கிருகத்தின்கண் புகுந்து அங்கிருந்த ஸர்வேச்வரனுடைய பிம்பத்தில் சென்று லயமடைந்தது. ஸர்வேச்வரன் நாதங்களுக்கெல்லாம் நாதனும் நாதாந்த காலாதீதனாயுங் காணப்பட்டான். அவனிடமிருந்து வந்த வாசாமகோசரமாகிய அதிமதுரநாதம் என் உடல் உயிர் ஆவியனைத்தையும் தூளாக்கி ஒவ்வொரு சிறு தூளையும் நாதத்தின் பல நுட்பமான ஒலிகளின் சிறிய பரமாணுக்கள் என மாறச் செய்தது. நானும் நாதத்துடன் ஒன்றாய்ச் சேர்ந்து கொண்டேனோ ?

“பலே ! பலே !! பேஷ் ! திவ்யம் ! ஆஹா !” என்ற கூச்சல் என்னை நாதபரவச பராதீன நிலையிலிருந்து கேவலம் பூர்வ ஜாக்ரதாவஸ்தையில் திருப்பவும் தள்ளி விட்டது. அப்பொழுது பைரவி ராகம் கேட்டு மெய்ம் மறந்த பாமர மனிதர்களுக்கு இவ்வுலகத்தை மீண்டும் எடுத்துக் காட்டுவான் வேண்டி, பைரவனின் முடிமீது விளங்கும் பிறைமதி தன் வெண்ணிலாக் கதிர்களை விரித்துக் கொண்டுக் கீழ்ப்பாற்றிசையில் உதித்தெழுந்தான்.

---

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி யரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

# அன்னை ஸ்ரீசாரதா தேவியார்.

(54-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

ஸ்ரீராமசந்திர முகோபாத்தியாயர் எமது அன்னையாரின் உள்ளக் கருத்தையுணர்ந்து அவரை தக்ஷிணேசுவரம் கூட்டிப்போக யத்தனித்தார். அக்காலத்தில் புகைவண்டி கிடையாது. தூரதேசம் செல்வதனால் பல்லக்கேறிச் செல்வது வழக்கம். அஃதியலாவிடத்துக் கால் நடையாகத்தான் போய்த் தீரவேண்டும். பல்லக்கேறிச் செல்லப் பொருளின்மையால் இவர்கள் ஜயராம்பட்டியிலிருந்து தக்ஷிணேசுவரத்துக்கு ஐம்பதுமைல் தூரம் நடந்தே செல்லலானார்கள்.

மூன்று நாட்கள் கழிந்தன. நடையால் மெலிந்த ஸ்ரீசாரதா தேவியாருக்கு நான்காம் நாள் கடுமையான ஜ்வரங் கண்டது. ஆகவே வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். உடல் வருந்திப் பின்னிடைந்த பொழுதும் மனம் விரைந்து நாயகனையே நாடிநின்றது. நோயால் வருந்துகையில் எமதன்னை ஓர் அதிசயமான கனவு கண்டார். இதைப் பின்னொரு காலத்தில் தன் சிஷ்யைகளிடம் கீழ் வருமாறு கூறியிருக்கின்றனர். “நான் பிரக்ஞையின்றிப் படுக்கையில் கிடக்கும்போது ஓர் யௌவனஸ்திரீ என்னருகில் வந்துட்காரக்கண்டேன். அவள் நீலவர்ணமாயிருந்தாள். அவளுடைய அத்யந்தமான அழகும் அதிப்பிரியமான வதனமும் என்றும் மறக்கத்தக்கதன்று. அவள் பூப்போன்ற கரங்களால் என்னைத்தடவிக் கொடுக்கவே நோய் பறந்தோடிவிட்டது. நான் அவளை நோக்கி, ‘அம்மா, நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?’ என் வினவினேன். ‘நான் தக்ஷிணேசுவரத்திலிருந்து வருகிறேன்’ என்றனள். நான் அதிசயித்து, ‘நீங்கள் தக்ஷிணேசுவரத்திலிருந்தா வருகிறீர்கள்? நான் அங்கேதான் போகவேண்டும். அவரைக் காணவேண்டும்; அவரைப் போஷிக்க வேண்டும். நான் துர்ப்பாக்கியை. இங்கே நோயில் வீழ்ந்தேன். அவரைக் காண்பேனோ?’ என்றேன். உடனே அவள் ‘அஞ்சேல். உன் வியாதி சீக்கிரமே நீங்கும். நீ தக்ஷிணேசுவரம் போய் அவரைக் காண்பாய்; உனக்காக அவரை நான் அங்கு வைத்திருக்கிறேன்’ என்றனள். ‘அப்படியா? நீங்கள் யார்?’ என்று மறுபடியும் கேட்டேன். ‘நான் உன் சகோதரி’ என்றனள். ‘ஆம்! அதனால்தான் நீ இங்கே வந்தாய்’ எனக் கூறிவிட்டு நான் திரும்பவும் தூக்கத்திலாழ்ந்தேன்.”

மறுகாலையில் படுக்கை விட்டெழுந்ததும் ஸ்ரீசாரதாதேவியாருக்கு முந்தின நாள் கண்ட ஜ்வரம் மாயமாய் மறைந்ததைக் கண்டு ராமச்சந்திர முகோபாத்யாயர் மிக்க வியப்புற்றார். வழியில் தங்குவதில் பயனில்லாமைபற்றித் தன் புத்திரியின் விருப்பத்துக்கிணங்கி மறுபடியும் புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் மறுபடியும் சாரதாதேவிக்கு ஜ்வரங் கண்டது. இதைத் தன் பிதாவிடங் கூறவில்லை. இவ்வாறு வழி நடக்கையில் தற்செயலாய் ஓர் பல்லக்கு எதிர்ப்பட அதில் ஏறி உபத்திரவமில்லாமல் தக்ஷிணேசுவரமடைந்தனர்.

ஸ்ரீசாரதா தேவியார் தக்ஷிணேசுவரம் காளிகோயில் சென்று தன் நாயகன் திருவடிகளைச் சேவித்தபொழுது இரவு மணி ஒன்பது. அப்பொழுது அவருக்கு ஜ்வரம் முற்றும் நீங்காமையைக் கண்டு ஸ்ரீராமகிருஷ்ண தேவர் சிறிது மனக்கவலை கொண்டார். தன்னறையிலேயே ஓர் தனிப்படுக்கை விரித்து அதில் அவரை விடுத்தார். அடுத்த நாட் காலை அவர் வியாதிக்குத் தக்க சிகித்ஸை செய்ய நான்கு நாட்களில் சொஸ்தமாயிற்று. இந்த நான்கு நாட்களும் தன் பாதுகாப்பில் வைத்திருந்து சௌக்யமானவுடன் தன் தாயுடன் கோயில் நந்தவனத்தில் ஓர் சிறு அறையில் வசிக்கும்படி ஏற்பாடு செய்தார். ஸ்ரீராமசந்திர முகோபாத்தியாயரும் தன் புத்திரி மனமகிழ்ச்சியடைந்ததைக் கண்டானந்தித்து அவளை நாயகனிடம் சேர்த்ததில் திருப்தி யடைந்து தம்மூரேகினார்.

எமதன்னை மனத்திற் சிறிது காலமாய்ப் பரவிநின்ற கவலையனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிற்று. தன் நாதனுடைய அளவிறந்த அன்பையும் ஆதரவையும் பெற்றவளாய் அவரைப்பற்றித் தனக்கெட்டிய செய்தி பொய்யெனக் கண்டதனால் அதிகரித்த ஆனந்தமுடையவளாய்த் தன் மாமியாருடனிருந்து கொண்டு குருதேவருடைய சிசுருஷையிலமர்ந்தார்.

குருதேவரும் தேவியைத் தன் பிரிய சிஷ்யையாய்க் கொண்டு மிக்க அன்புடனும் ஆதரவுடனும் நடத்திவந்த தன்றி அவள் செய்யும் ஒவ்வொரு சிறு காரியத்தையும் செவ்வனே செய்யுமாறு வற்புறுத்திக் கூறி வழிகாட்டி வந்தார். 'செய்வன திருந்தச்செய்' என்றவாறு எக்காரியமும் அவர் முன்னிலையில் அத்யந்த பத்திரத்தையுடனும் விநயத்துடனும் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பொருளும் அததனிடத்தில் வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு காரியமும் அததற்கேற்பட்டகாலத்தில் சரிவரச் செய்யப்படவேண்டும். உள்ளும் புறம்பும் ஒருங்கே சுத்தப்படவேண்டும். அவர் முன்புள்ள பொருட்கள் அழகும் அமைதியும் நிறைந்தனவாயும் செய்யப்படும் செயல்கள் அன்பும் நேர்மையு முள்ளனவாயு மிருத்தல்வேண்டும். பஹிர் விஷயங்கள் அனாவசியமெனச் சிலர் கூறுவது முற்றுந் தவறென்பது அவர் கொள்கை.



ஓர் நாள், எமதன்னை ஓர் சிறு குழந்தையைப்போல் சிறிது கர்வத்துடனும் பரபரப்புடனும் தன் கணவன் முன் காய்களும் கனிவர்க்கங்களும் நிறைந்த ஓர் கூடையைத் தூக்கிக் கொண்டுச் செல்ல, அதைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ணதேவர் 'ஏன் இவ்வளவு ஆடம்பரம்?' என முகம்வாடி, மனம் நொந்து, கண்ணீர் ததும்பப் பின்னிடைந்தனள். அவள் அவ்வாறு வருந்தப் பொறாதவராய் எமதையன் "அவள் கண்ணீர் பூமியில் வீழ்ந்தால் என் தெய்வபக்தியும் பறந்தோடிப்போமே! அவளை இங்கழையுங்கள்" எனக்கூறினார்.

மற்றோர்நாள் தேவியார் தம் மெல்லிய கரங்களால் கணவன் பாதங்களைப் பிடித்துக் கொண்டிருக்கையில், அவர் அவளை நோக்கி 'இப்பொழுது நான் உன்னிடத்தில் இவ்வாலயத் தமர்ந்துள்ள காளிதேவியையே பிரத்யக்ஷமாய்க் காண்கின்றேன். என்னையீன்ற ஜகன் மாதாவே இப்பொழு என் பாதங்களையும் பிடிக்கின்றாள். ஆச்சரியம். அவள் லீலைகளை யாரறிவார்' என்றனர்.

குருதேவர் ஈசுவரத்தியானத்திலும் ஸமாதியிலும் தன்னையண்டியவர்க்கு ஞானோபதேசம் செய்தலிலுமே ஸதா நிற்க, அவருக்கு சிசுருஷை செய்வதே எமதன்னையின் தொழிலாயிருந்தது.

தேவியார் தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்த ஒரு வருஷத்துக்கெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய ஸாதன பரிசிரமங்களும் முடியப்பெற்றன. பின்னொருக்கால் தேவியாரைப்பற்றிப் பேசும்பொழுது "அவள் நிர்காமமும் இவ்வாறு சுத்தமாயிருந்திராவிடின் என் ஸாதனங்களுக்கு விக்ன மேற்பட்டிருந்தாலுமிருக்கும். விவாகமானது முதல் இது ஒரு கவலையா யிருந்தது. அவள் மனத்தில் காமமின்றி யருள் புரியும்படி ஸதா ஜகன் மாதாவை நான் வேண்டிவந்தேன். என் வேண்டுதலும் நிறைவேறிற்று" எனக் கூறியிருக்கிறார்.

ஸாதனங்கள் பூர்த்தியாகுந் தருணத்தில் அவருடைய அகங்காரம் முற்று மழிந்து ஸமுத்திரத்தில் மூழ்கிய உப்புப் பிரதிமைபோல் எங்கு நிறைந்த பொருளுடன் இரண்டறக் கலந்தார். ஸாதன ஸமாப்தி காலத்தில் தன் சிறு அறையில் ஜகதீசுவரியைப் பிரதிஷ்டை செய்துப் பூஜை செய்யுங்கால், அங்கிருந்த தேவியார் மெய்ம்மறந்து நிற்க, ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை ஜகன் மாதாவுக் கேற்பட்ட ஸ்தானத்திலுட்காரும்படி நியமிக்க அவரும் தம்முணர்ச்சியில்லாதவராய் அவ்விடத்தமர்ந்தனர். எமதையன் மனதால் ஜகன் மாதாவை ஸ்மரித்துத் 'தாயே! உன்னை இந்த தேகத்தில் பிரதிஷ்டை செய்ய விரும்புகின்றேன், லோகோபகாரார்த்தமாய்

அதைப் பரிசுத்தமாக்கி உன் வாசஸ்தானமாய்க் கொள்வாயாக.' எனப்பிரார்த்தித்தார். பின்னர் அவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவியைப் பூஜித்து தூபதீப நைவேத்தியங்கள் அளித்துத் தேவிக்குத் தன் திருக்கரங்களால் அமுதூட்டுவித்தனர். ஸமாதியிலாழ்ந்து வெகு நேரமின்று பின் ஜாக்ராவஸ்தைக்குத் திரும்பியதும் தன் ஸாதன பரிசிரமங்களின் பலன்களை தேவியின் பாதாரவிந்தங்களில் சேர்ப்பித்து, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து,

"ஸர்வமங்கள மாங்கல்யே சிவேஸர்வார்த்தஸாதகே
சரண்யே திரியம்பகே தேவிநாராயணி நமோஸ்துதே"

என்று ஸ்துதித்து நின்றனர். இவ்வத்புதமான விரத ஸமாப்தியை பக்தர்கள் 'சோடஸிபூஜை' எனக்கூறி வருகின்றனர்.

இதற்கு நாலைந்து மாதங்களுக்குப் பின்னர் தேவியார் காமர்ப்புகூர் போக நேரிட்டது. அங்கு சிறிது காலம் தங்கிவிட்டு அடுத்த வருஷம் பர்த்தாவிடம் தன்னைச் சேர்க்க வழித்துணையொருவருமின்றித் துன்புற்றிருக்கையில் தக்ஷிணேசுவரத்துக்கு அக்கிராமத்து ஸ்திரீகள் சிலர் யாத்திரை புறப்பட அவர்களுடன் சேர்ந்து கால் நடையாக வர வாரம்பித்தனர். நெடுந்தூரம் நடக்கவியலாமல் அன்று மாலைப்பொழுதில் களைத்து ஓரிடத்தில் இளைப்பாற உட்கார்ந்தனர். கூடவந்தவர்கள் இதைக் கவனியாதவர்களாய் முன் சென்று விட்டனர். மறுபடியும் அவர் புறப்பட யத்தனிக்கையில் இருள்சூழ்ந்து கொண்டது. முன் பின் செல்லத் தோன்றாமல் திகைத்து நிற்கையில் நீண்ட தடி பிடித்தவனும் கரிய நிறமுள்ளவனுமான ஓர் மனிதன் ஒரு ஸ்திரீயுடன் எதிர்ப்பட்டான். அம்மனிதன் இவரை நோக்கி 'இவ்வேளையில் இங்கு நிற்கும் ஸ்திரீ நீ யார்?' என வினவினான். ஸ்ரீசாரதா தேவியார் மிக்க அச்சமுற்று அருகினின்ற ஸ்திரீயை இறுகத்தழுவிக் கொண்டு 'தாயே! அடியேன் உங்கள் புத்ரி சாரதா, கூடவந்த யாத்திரிகர்களுடன் நடக்கவியலாமல் களைப்பால் பின் தங்கிவிட்டேன். நீங்கள் என் கஷ்டகாலத்தில் தாய் தந்தையர் போல் எதிர்ப்பட்டது அதிர்ஷ்ட வசமே. இன்றேல் நான் என்ன கதியடைந்திருப்பேனோ அறியேன்!' என்று பகர்ந்தனர். இச்சொற்களைக் கேட்ட எவர் மனந்தான் இரங்காது? அவர்களிருவரும் இவரை நல்வார்த்தைகளால் தேற்றித் தங்களுடன் அடுத்த கிராமத்துக்கழைத்துச் சென்று ஆகாராதிகளைக் கொடுத்துப் பின் தாரகேசுவரம்வரை அழைத்துச் சென்றனர். இங்கே யாத்திரிகர்கள் தங்கியிருந்தமையால் அவர்களுடன் சேர்ந்து கொண்டனள். யாத்திரிகர்களும் சாரதா தேவியைக் காணாமல் துயரமனுபவித்து வந்தமையால் அவர் திரும்ப வரப்பெற்று அளவிலா வானந்தங் கொண்டனர். தேவியார் தம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றிய வழிப்போக்கனையும் அவன் மனைவியையும் என்றும் மறக்கவில்லை; அடிக்கடி அவரைத் தன் பெற்றோர்களெனவுங் கூறுவார். அவர்களும் பலமுறை இவரைக் காணுமாறு தக்ஷிணேசுவரம் வந்தனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு— திருக்குறள்.

தொகுதி 1.] ரௌத்ரி௵ சித்திரை௴ [பகுதி 4.

உ

## கடவுள் வணக்கம்.

அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்ற
னுருயிர்க் கொருதுணையே யரசேபூவை
நிறம்பழுக்க வழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறப்பழுக்கு மிலங்கையிரா வணனைப் பண்டோர்
வாளியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்குஞ் சீராம வள்ள லேநின்
றிருவருளே யன்றிமற்றோர் செய லிலேனே.
மண்ணாளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணாளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் றிருவருளே வேண்டி நின்றேன்
புண்ணாளா நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணாளா சுடர்க்கமலக் கண்ணா வென்னைக்
கைவிடின் என் செய்வேனே கடைய னேனே.

ஸ்ரீராம நாமத்திருப்பதிகம்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

நாலாயிரதிவ்ய பிரபந்தம்-திருக்கச்சி.

# குருதேவர் வாக்கியம்

தலைவனது இயல்பு.

உருவமில்லா னவனு முருவ முள்ள னவனு
மொருவ னேயாம்
உருவமில்லா நீருருவ முறைநீரைப் போற்றிகழ்வ
துருவ மாகும்
உருவமில்லா நீர்தானே யுறையினுறை நீராகி
யுருவ மாகும்
உருவமில்லா நீராகு முறைநீரு முருகியக்கா
லுருவம் போமே.

ஈசுவரன் ரூபமுடையவனா, ரூபமில்லாதவனா, என்பது உனக்குத் தெரியுமா? ஈசுவரன் ரூபி, அரூபி என்று சொல்வது உறைந்த பனிக்கட்டியைப் பற்றி பேசுவது போலாம். ஜலம் உறைந்தால் அதற்கு உருவமுண்டாகிறது. அதே பனிக்கட்டி நீராகக் கரையும்போது, உருவம் மறைந்து போகிறது. 6

வேறு.

ஐயவதி சயமிதுபா ரெங்கள் பாட்ட
னட்டவசுக் களிலொருவ னைந்த டக்கி
மெய்யுணர்ந்தும் மாயையினிற் பட்டுக் கண்ணீர்
விடுகின்றா ரென நரன்நா ரணற்குச் செப்பப்
பொய்யுரையா வீட்டுமரும் புகல்வார் கண்ணா
புன்மாயை யாலல்ல நினது லீலைச்
செய்கையுணா ராதழுதேன் ஐவர் துன்பந்
தீர்ந்தநிலை நீதுணையாய்ச் சேர்ந்து மென்றே

பீஷ்மாசாரியர், அம்புப்படுக்கையில் படுத்துக்கொண்டு, இவ்வுடலை நீக்குவதற்கு ஏற்ற ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. இதைப் பார்த்த அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானை நோக்கி, 'ஆ கிருஷ்ணா! என்ன ஆச்சரியம்! ஸத்தியந் தவறாதவராயும், இந்திரியங்களை அடக்கினவராயும், ஆத்மஞானம் நிறைந்தவராயும், அஷ்டவசுக்களில் ஒருவராயுமிருக்கும் என் பாட்டனார் கூட மாயையால் சிக்குண்டு கண்ணீர் சொரிகின்றாரே!'' என்றான். இதைக் கிருஷ்ணர் பீஷ்மருக்கு அறிவிக்க, அவர், "ஹே கிருஷ்ணா! மாயையால் கட்டுண்டு நான் கண்ணீர் விடவில்லை என்பதை நீர் அறிவீர். உம்முடைய லீலை எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லையே என்பதுதான் என்னை கண்ணீர் விடச்செய்கிறது. எந்த



பகவானுடைய திருநாமங்களை ஸ்மரிப்பதால் ஜனங்கள் துன்பங்களைத் தாண்டிச் செல்கிறார்களோ, அவர் பாண்டவர்களுக்குத் தேரோட்டியாக இருந்து உதவி புரிகிறார். அப்படி யிருந்தும் பாண்டவர்கள் படுந்துன்பம் முடிந்தபாடில்லை" என்றார். 7

ஆரணங்கள் புகழ்கின்ற வாரணாசி
யருநகரை மதுரபா புடனடைந்த
பூரணரெங் குருதேவர் திரையி லங்க
புனிதரைக்கண் டிறையொருவன் புலமி லாரெக்
காரணத்தாற் பலரென்றா ரென்ன மௌனி
கரத்திலொரு விரல்காட்டிச் சலன மற்றார்
தேரின்ற தத்துவநூல் பலவா யோதச்
சிந்தையடக் கினருணர்வுக் கொன்று மென்றே.

மதுரபாபு காசியாத்திரை சென்றபோது ஸ்ரீராமகிருஷ்ணரும் அவருடன் சென்றார். அப்புண்ய க்ஷேத்திரத்தில் இருந்தபோது, ஸ்ரீராமகிருஷ்ணர், த்ரைலிங்க ஸ்வாமிகளைத் தரிசித்து "ஈசுவரன் ஒருவனிருக்கும்போது, ஜனங்கள் பல ஈசுவரர்களைப் பற்றிப் பேசுவானேன்?" என்று கேட்டார். ஸ்வாமிகள் மௌனவிரதம் அனுஷ்டித்து வந்ததால், அவர் ஒன்றும் பேசாது குறிப்பாய் ஒரு விரலை உயர்த்தி, நிஷ்டையிலாழ்ந்தார். அவர் அப்படிச் செய்ததின் பொருளென்னவெனில், தியானத்தினால் ஒருவன் ஒருவரேயென அறிகிறான். ஆனால் தத்துவ விசாரத்தினால், ஈசுவரர்கள் பலர் என்னு முணர்ச்சி தோன்றுகிறது. 8

கரைகடந்த நீர்ப்பரப்பா முவரி நாப்பட்
கடுங்குளிரா லுறைந்தநீர்க் கட்டி தோன்றி
வரையெழுந்த வெங்கதிரா லுருகிப் போகும்
மரபினைப்போ லன்பரன்பின் வலிமையாலே
உரைகடந்த பூரணமாங் கடவுள் பல்வே
றுருவுடனே தோற்றும்பின் னுண்மை ஞானப்
பரிதியெழுந் திடவுருவ மறைந்து போகும்
பார்க்குமிடத் தருவமாம் பரமதாமே.

ரூபியான ஈசுவரனும் அரூபியான ஈசுவரனும் வேறானவர்களல்ல; எவர் ரூபத்தோடிருக்கிறாரோ, அவரே ரூபமில்லாதவராகவு மிருக்கிறார். தன் பக்தனுக்கு ஈசுவரன் பல ரூபங்களுடன் தரிசன மளிக்கிறார். அகண்டு பரந்திருக்கும் கடற் பரப்பைப்பற்றிச் சற்று யோசித்துப் பார். எந்த திக்கில் பார்த்தபோதிலும் நிலம் தெரிவதில்லை; இங்கும் அங்கும் அதிகக் குளிரினால் உறைந்த பனிக்கட்டிகளே பார்வைக்குத் தென்படுகின்றன. இதைப் போலவே, பகவான் மீதுள்ள தீவிரபக்தி யென்னும் குளிரினால் எங்கும் நிறைந்த எல்லையற்ற பரம்பொருள், உறைந்து அதாவது உருவமடைந்து பக்தனுக்குத் தோன்றுகிறார். மேலும் சூரியன் உதயமானவுடனே, பனிக்கட்டி கரைந்துபோவது போலவே, ஞானசூரியன் உதயமானவுடன் ரூபியான ஈசுவரன் மறைந்துவிட, அரூபியான ஈசுவரனே காணப்படுகின்றான்.

௬

# ஸ்பர்ச வேதி

> “தேடினேன் நிக்கனைத்துந் தெண்டமிட்டேன் சிந்தை கசந்து,
> வாடினே னென்மயக்க மாற்றாய் பராபரமே.”

ஸ்பர்சவேதியால் தொடப்பட்ட எல்லாப் பொருட்களும் பொன்னாகமாறு மென்று, கேள்வியுற்ற ஓர் வாலிபன் எவ்வாற்றானு மதைத் தேடி யடையவேண்டு மென்று அளவிலா அவாக்கொண் டவனாய்த் தேச யாத்திரை செய்யப் புறப்பட்டான். அவன் செல்லும் வழியெல்லாம் தரையில் இறைந்து கிடக்கும் கற்களை யெல்லாம் உற்றுற்று நோக்குவதும், எதாவதொன்று சற்று ப்ரகாசமாய்த் தென்பட்டால் அதை ஆவலுடன் எடுத்துத் தான் கழுத்திலணிந்திருந்த இரும்புச் சங்கிலியை அதனால் ஸ்பர்சிப்பதும், சங்கிலி பொன்னாக மாறியதாவென்று பார்ப்பதும், இல்லாதது கண்டு அதையெறிந்து விட்டு வழி நடப்பதும் இவன் வழக்கமாயிற்று. காலையில் துயிலெழுந்தது முதல் இரவு நித்திரையிலயரும் வரை இதே வேலை, இதே கவலை; இரவிலும் இதைப்பற்றியே ஸ்வப்னங்கள் காண்பான். நாட்களும், மாதங்களும், வருஷங்களும் விரைவிற் சென்றன. நின்ற விடம் நில்லாமல் ஊரூராய் அலைந்து திரிந்தும், ஸ்பர்ச வேதியைக் கண்ட பாடில்லை. வாலிபன் உடலும் மெலிந்தது; முகத்திலிருந்த ஒளியும் அகன்றது. ஒன்றையுங் கவனியாமல் பித்துப் பிடித்தவன் போலானான். கண்ட கற்களை எடுப்பதும் கழுத்திலிருந்த சங்கிலியைத் தொடுவதும் கைக்குப் பழக்கமாயிற்று ; அதிலுங்கூட இவன் புத்தி செல்லாமல் நின்று விட்டது. ஸ்பர்சத்தால் மாறுதலேற்பட்டதா வென்பதையுங் கவனிப்பதில்லை.

இவ்வாறாய் ஆயுட்கால முழுவதையும் வீணிற் செலவிட்டும், நரை மேலிட்ட தள்ளாத வயதிலும் ஸ்பர்ச வேதியை யடைய வேண்டுமென்ற ஆசை இவனை விடவில்லை. ஓர் நாள் மாலைப்பொழுதில் இவன் ஓர் கடற்கரை யோரத்திற் கிடக்கும் பருக்கைக் கற்களை யெடுத்து வழக்கம்போல் சங்கிலியை ஸ்பரிசித்துக் கொண்டிருந்ததைக் கண்ட சில சிறுவர்கள் கிழவனைச் சுற்றி நின்றுகொண்டு இதை வேடிக்கையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிலொருவன் “இந்தப் பைத்தியக்காரன் கழுத்திற் பார்த்தாயா பொற்சங்கிலியை?” என்று விளம்ப, இதைச் செவியுற்ற கிழவன் அதிசயித்துத் தன் சங்கிலியை உற்றுநோக்க அஃது இரும்பாயில்லாமல் உண்மையில் பொன்னாகவே மாறியிருந்தது. அந்தோ! எப்பொழுது அம்மாறுத லுண்டாயிற்றென்பதை அவன் உணரவில்லை. என்ன துரதிர்ஷ்டம்! தேடும் பொருள் கைத்தலத்தகப் பட்டிருந்தும் அதை யனுபவிக்கும் பாக்கியம் பெற்றிலனே!



நாம் எல்லோரும் இவ்வாறு பித்தேறியவர்களே. துக்கத்தை நீக்கும் ஸ்பர்ச வேதியையே இடைவிடாது தேடித் திரிகின்றோம். சிலர் பொன்னிலும், சிலர் புகழிலும், சிலர் மண்ணிலும் சிலர் பெண்ணிலும் இதைக்காண முயல்கின்றோம். ஆனால் ஒருவனும் அதை எளிதில் அடைவதில்லை; ஏனெனில் மேற்கூறிய கிழவனைப் போல் மதியீனர்களாய் அது கிட்டிய காலத்தும் உணரும் சக்தியின்றி யிருக்கின்றோம். அதை யடையும்வரை உண்மையில் இன்பங் கிடையாது. எந்த போக்யமான வஸ்துவிலும் நமது மனம் முடிவான திருப்தி யடையாது. சிறு குழந்தை கையிலகப்பட்ட பொருட்களை யெல்லாம் ஆவலுடன் எடுத்து உற்று நோக்கிப் பற்களால் கடித்துப் பார்த்துவிட்டுச் சிறிது நேரத்தில் எறிந்துவிட்டு வேறு பொருட்களை நாடுவதுபோல் நாம் ஒன்றை விட்டொன்றை நாடுவதே தொழிலா யிருக்கின்றோம்.

> “ஆசைக் கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டி,
> யாளினுங்கடன் மீதிலே
> யாணை செலவே நினைவரள கேசனிகராக
> வம்பொன் மிக வைத்தபேரு
> நேசித்து ரஸவாத வித்தைக் கலைந்திடுவர்
> நெடுநாளிருந்த பேரு
> நிலையாக வேயினுங் காய கற்பந்தேடி
> நெஞ்சு புண்ணாவர்.”

ஓர் மனிதன் தனக்குக் கிடைத்த பொருளால் மட்டும் ஒருக்காலும் திருப்தியடைய முடியாது. பெற்ற பொருளே போதுமென்று திருப்தி யடைந்ததாகக் கூறும் உலகமாந்தர் பலர் திறனற்றோரே யாவர். திறனின்மையைத் திருப்தியெனக் கொள்ளலாகாது. மாதம் நூறு ரூபாய் கிடைக்கப்பெறும் ஒருவன் தன் முயற்சியின்றி இருநூறு ரூபாய் கிடைத்தக்கால் ஆவலுடன் அதை ஏற்றுக் கொள்வானானால் அதுவே அவன் தன்னிலையில் திருப்தி யடையவில்லை யென்பதற்குப் போதுமான அத்தாட்சி. அநித்யமான செல்வத்தில் எவ்வாறு மனிதன் திருப்தியடையக் கூடும்? யமதர்ம ராஜன் நாசிகேதஸை நோக்கி “விஸ்தாரமான ராஜ்யத்தையும், நீண்ட ஆயுளையும், சிரஞ்சீவிகளான புத்ர பௌத்ரர்களையும், தேவர்களாலும் மனிதர்களாலு மடைதற்கரிய போக்ய வஸ்துக்களையும் யதேஷ்டமாய்க் கேள்; தரச்சித்தமா யிருக்கிறேன்” என்று கூற, நாசிகேதஸ், “நீண்ட காலம் வாழ்ந்தென்ன? செல்வக்

குவியலைப் போற்றியென்ன? புவியெல்லாங் கட்டி யாண்டென்ன? மனிதன் ஆயுளாலும் செல்வத்தாலும் ஒருக்காலும் திருப்தி யடையவே முடியாது. ஆகையால் அவைகளை நீரே வைத்துக் கொள்ளும். எனக்கு ஆத்மஞானத்தை உபதேசித்தருள வேண்டும்'' என்று மன்றாடினான். ''எனக்கு ஒன்றுந் தேவையில்லை. எல்லாம் என்னுடையதே. நான் பிறப்பிறப்புக் கப்பாற்பட்டவன், ஸ்வதந்திரன்; ஒன்றிலுங் கட்டுப்பட்டவனல்ல'' என்று எப்பொழுது உணர்கிறோமோ அப்பொழுதான் நாம் திருப்தியடைவோம். அதற்கு முன் திருப்தி யடைந்ததாய் நினைப்பது மூடத்தனம்.

நீரில் வசிக்கும் மீனைப் பிடித்து ஓர் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் வைத்து வணங்கினாலும் அது இன்புறுமோ? ''ஐயோ! என்னை ஏன் வருத்துகிறீர்கள். தண்ணீரில் கொண்டுபோய் விடுங்கள்'' என்றல்லவோ கெஞ்சும். அவ்வாறே நாமும் நமது உண்மை நிலையை யுணரும்வரை நீர் விட்டகன்ற மீன்போல் துக்காக்ராந்தர்களாயிருக்கின்றோம்.

''அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி'' யுள்ள பரம்பொருளை அறிந்தோராலும் அறியாதவர்களாலும் ஸதா தேடப்படுவது. ஏனெனில் உபநிஷத்துக்கள் கூறும் வண்ணம் ''பர்த்தாவின் மேல் காமத்தால் பர்த்தா பிரியமாவதில்லை; ஆத்மாவினிடம் காமத்தாலேயே பர்த்தா பிரியமாகிறான். ஸ்திரீயின் மேல் காமத்தால் ஸ்திரீ பிரியமாவதில்லை; ஆத்மாவினிடம் காமத்தாலேயே ஸ்திரீ பிரியமாகிறாள். புத்ரன் மேல் காமத்தால் புத்ரன் பிரியமாவதில்லை. ஆத்மாவினிடம் காமத்தாலேயே புத்ரன் பிரியமாகிறான். செல்வத்தின் மேல் காமத்தால் செல்வம் பிரியமாவதில்லை. ஆத்மாவினிடம் காமத்தாலேயே செல்வம் பிரியமாகிறது. அனைத்தின் மேலுங் காமத்தால் அனைத்தும் பிரியமாவதில்லை; ஆத்மாவினிடம் காமத்தாலேயே அனைத்தும் பிரியமாகிறது.'' நாம் எல்லோரும் நீண்ட ஆயுளையும், அளவிறந்த ஞானத்தையும் அபரிமிதமான ஆனந்தத்தையும் இச்சிக்கின்றோம். அஃது அவைகளின் மேல் காமத்தாலல்ல; ஆத்மாவிடம் காமத்தாலேயே. ஏனெனில் ஸத்-சித்-ஆனந்தமே ஆத்ம ஸ்வரூபம். ''இவ்வுலகனைத்தும் ஆனந்தத்திலிருந்தே உற்பத்தியாகி, ஆனந்தத்திலேயே ஜீவித்து ஆனந்தத்திலேயே லயமடைகின்றது.''

ஸ்வதஸ் ஸித்தமாயுள்ள இந்த ஆனந்த நிலையை யுணராமல் ஜீவன் தவிப்பது ஓர் கோடீசுவரன் தெருவிற் சென்று பைசா பிச்சை கேட்பது போலாம். பிரக்ஞான ரூபமாகிய ஆத்ம சைதன்யம் எப்பொழுது மாயையால் மறைக்கப்பட்டதோ, அப்பொழுதே



துக்கம் பிறந்தது. அப்பொழுதே பிறப்பிறப்பும், ராகத் வேஷங்களும், சோக மோஹங்களும் உற்பத்தியாயின. மாயை மறையும் பொழுதே தோற்றினவாறாய்த் தன் பரிவாரங்களுடன் துக்கமும் மறையும். இதை யுணராதவர்களாய் ''மூடர்கள் தாங்கள் மிக்க புத்திமான்களென எண்ணங் கொண்டவர்களாய் அகங்கார மமகாரங்களில் கட்டுண்டு துக்க ஸாகரத்திற் கிடந்துழல்கின்றனர்.'' வேம்பின் புழு வேப்பன்றி யுண்ணாதாற்போல விஷய சுகங்களையே பரமார்த்தமாய்க் கருதுகின்றனர். ஆனால் புத்திமான்கள், பிரம்மசரியம் பூண்டு, ஸர்வஸங்க பரித்யாகம் செய்து, ஸதாசாரியனை யடைந்து அவரை ஸேவித்து ஆத்ம ஞானத்தை யடைகின்றனர். ''அனாதி அவித்தையில் நித்திரை செய்கிற பாலர்காள்! அஞ்ஞானத் தூக்கத்திலிருந்து எழுந்திருங்கள். விழித்துக் கொள்ளுங்கள், ஸ்ரேஷ்டர்களான குருக்களை யடைந்து ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று வேதமாதா கூறுகின்றாள். ''இந்த ஜன்மத்தில் ஞானத்தைப் பெற்றவனே அமிருதத்வத்தை யடைகிறான். அதைப் பெறாதவன் மகத்தான நஷ்டத்துக் காளாகிறான்.''

உத்தாலக மஹரிஷி தன் புத்ரனாகிய சுவேத கேதுவைப் பார்த்துக் கூறுகின்றார். ''ஹே! ஸோம்ய; ஓர் கந்தார தேசத்துப் புருஷனைத் திருடர்கள் பிடித்துக் கைகால்களைக் கயிற்றால் பிணித்துக் கண்களையும் இறுகக்கட்டி வெகுதூரத்துக் கப்பால் தூக்கிக் கொண்டுபோய் ஓர் நகருக்கருகில் சென்றதும் அவனைப் போட்டுவிட்டு ஓடி விட அவன் கீழ்மேல் நடு என்றும், கிழக்கு மேற்கு என்றும், திக்கு திசை யுணராதவனாய்க் கூவிக்கொண்டிருக்க, ஓர் காருணிகனான வழிப்போக்கன் அவன் பரிதாப நிலையைக் கண்டு இரங்கி, பந்த விமோசனம் செய்து, கந்தாரதேசம் போகும் வழியைக்காட்ட, புத்திசாலியான அந்தப் புருஷன் காட்டப்பட்ட வழியிற்சென்று கிராமத்துக்குக் கிராமம் வழியையும் அடையாளங்களையும் விசாரித்துக்கொண்டு, மலை, நதி, வனம், பட்டணங்கள் முதலியவைகளைக் கடந்து தன் தேசத்தை யடைந்தான். அவ்வாறே விவேகியான புருஷன் தன்பந்த நிவிருத்திக்காக ஆசாரியனை யடைந்து, அவர் காட்டும் வழியில் சிரத்தையுடன் செல்வானாகில் மோக்ஷ ஸம்பத்தை யடைவன்.

ஸ்வாத்ம தத்துவத்தை உணர விரும்புவோனுக்கு நான்கு லட்சணங்கள் அவசியம். அவையாவன : நித்யா நித்ய வஸ்து விவேகம், இஹாமுத்ரார்த்த பலபோக விராகம், ஸமாதிஷட்கம், முமுக்ஷுத்வம்.

பிர்ம்மமே நித்யமானது, ஜகத் அநித்யமானது என்று சுருதி ஸ்மிருதி புராணாதிகளாலும், யுக்தி, அனுபவங்களாலும் உணர்தலே நித்யாநித்ய வஸ்து விவேகம்.

இந்த லோகத்தில் மண், பெண், பொன் முதலியவைகளாலடையக்கூடிய விஷய ஸுகங்களும், ஸ்வர்க்க லோகத்திலடையக்கூடிய போகங்களும் அநித்யமானவை என்றுணர்ந்து அவைகளை வெறுத்தலே இரண்டாவது லட்சணம்.

சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ஸமாதானம், சிரத்தை இவைகளே ஸமாதிஷட்கம். சமமாவது இதர விஷயங்களினின்று மனதைத் திருப்பி ஆத்மா விடத்தில் நிறுத்துவது. தமமாவது ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை யடக்குதல். உபரதியாவது பலத்தில் இச்சையின்றிக் கருமானுஷ்டானம் செய்தல். திதிக்ஷையாவது சீதோஷ்ண சுகதுக்காதிகள் தோன்றி மறைபவை, நிலையற்றவையென்றுணர்ந்து அவைகளைச் சகித்துக் கொள்ளல். ஸமாதானமாவது கிரகிக்கப்பட்டதில் மனதை ஒரு நிலைப்படுத்துவது. சிரத்தையாவது குருவாக்கியத்திலும் ஈசுவர வாக்கியமாகிய வேதத்திலும் விசுவாசம்.

முமுக்ஷுத்வமாவது ஈஷணாத்ரயங்களை உதறித் தள்ளிவிட்டு ஸம்ஸாரமாகிற தாபத்தைப் பரிகரிக்க வேண்டுமென்ற தீவிரமான இச்சை.

மேற்கூறிய நான்கு லக்ஷணங்களும் ஒருங்கே யடைந்தவனே ஆத்ம வித்தைக் கதிகாரியாவான். விவேகத்தால் மட்டுமாவது, வைராக்கியத்தால் மட்டுமாவது மோக்ஷம் கிட்டாது. பாலில் வெண்ணெயிருக்கிற தென்று உணர்ந்த மாத்திரத்தால் வெண்ணெய் கிட்டாது. அதை சிரமப்பட்டுக் கடைந்தே எடுக்கவேண்டியிருப்பதுபோல் ஸமாதிஷட்கமாகிற ஸாதன பரிசிரமத்தாலேயே ஆத்ம ஞானத்தை யடையக்கூடும். எவ்வளவு விக்னங்கள் ஏற்பட்டாலும் அதைரியம், த்வேஷம், பயம் இவைகளுக்கிடங்கொடாமல் விடாமுயற்சி செய்துவர வேண்டும்.

"ஒழுக்கமுடைய ஸ்திரீக்குத் தன் கணவனிடமுள்ள பக்தி, தான் புதைத்துவைத்த பணத்தினிடம் ஒரு லோபிக்கிருக்கும் ஆசை, உலகப் பொருள்களைப் பெறவேண்டு மென்று ஸாமான்யர்கள் கொள்ளும் ஆவல், இந்த மூன்றும் ஒன்று கூடினாற்போன்ற தீவிர இச்சையானது ஆத்ம நிலையைக் காணவேண்டி உன் மனத்தில் உண்டானால் அந்நிலையை வெகு சீக்கிரம் அடையலாம்." என்றருளி யிருக்கின்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸதேவர்.

"கற்றதங் கேட்டதுந் தானே யேதுக்காகக்
கட்டபடவென் றருட்டெற்கோ கல்லாலெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக்கண்டு
குணங்குறியற் றின்பவீட்டை கூடவன்றோ?"

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 6.

## 1883 ௵.

## ஸ்ரீராமகிருஷ்ணருடன் தக்ஷிணேசுவரம் ஆலயத்தில் கழித்த ஒருதினம்

### அத்தியாயம். 1

1883-௵ ஆகஸ்டு மாதம் 19உ கிருஷ்ண பக்ஷத்து பிரதமை. அன்று ஞாயிற்றுக்கிழமை. சிஷ்யர்களனேகரும் ஸாவகாசமாயிருந்தமையால், தமது அன்பார்ந்த குருபகவானைப் பார்ப்பதற்காக தக்ஷிணேசுவரம் காளிகோவிலுக்கு வந்தார்கள். யாவரும் தடையின்றி அவரைப் போய்ப் பார்க்கலாம். வந்தவர்களுடனெல்லாம் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவ்விடத்தில் வந்தவர்கள் ஸந்நியாஸிகள், பரமஹம்ஸர்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், பிரம்ம ஸமாஜத்தினர்கள், சாக்தர்கள், வைஷ்ணவர்கள், சைவர்கள், ஸ்திரீகள், புருஷர்கள்; இவ்விதம் எல்லா வகுப்பினரும் அவரைப் பார்க்க வந்தார்கள். அவ்வவதார புருஷனை ஜனங்கள் தரிசித்து வணங்க வரும் மேன்மை தங்கிய இவ்வாலயத்தைக் கட்டிவைத்த புண்ணியவதியாகிய ராஷ்மணிராணிக்கு சிரேயஸுண்டாகட்டும்.

மத்தியானம், சாலேப்போஜனமான பிறகு பகவான் சிரம பரிஹாரம் செய்து, தன்னறையில் கட்டிலின் மீது உட்கார்ந்திருக்கிறார். அச்சமயத்தில் 'ம—' வந்து அவரது திருவடியில் விழுந்து நமஸ்கரித்தார். பகவான் அவரை உட்காரச் சொல்லி அவரையும், அவரது குடும்பத்தையும் பற்றியும் க்ஷேமம் விசாரித்தார். சிறிது நேரம் சென்றதும் பகவான் அவரோடு வேதாந்தத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ('ம—வைப்பார்த்து):—அஷ்டாவக்கிர ஸம்ஹிதையில் ஆத்ம ஞானத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மஞானிகள், "ஸோஹம்"—நான் தான் அப்பரமாத்மா—என்று சொல்லுகிறார்கள். இதுதான் அத்துவைதிகளாகிய ஸந்நியாஸிகளின் கொள்கை. ஆனால், லௌகிகன் (ஸம்ஸாரி) இவ்விதம் சொல்வது ஸரியன்று. அவன் எல்லாவற்றையும் செய்கிறான். அப்படியிருக்க, கர்மத்துக்கெல்லாம் அதீதமாயிருக்கப்பட்ட பரம் பொருளாகவும் எப்படி யிருக்கக்கூடும்?

ஆத்மா யாதொன்றிலும் பற்றுதலற்றதென்று அத்வைதிகளின் கொள்கை. சுகம், துக்கம், புண்ணியம் பாபம் முதலானவைகள் ஆத்மாவை எவ்விதத்திலும் பாதிக்கா. ஆனால், தேகாத்ம புத்தியையுடையவனை பாதிக்கின்றன.

புகையானது சுவரிற் பட்டு ஆகாசத்துவழியாகச் சென்றும், ஆகாசத்தைக் கறுப்பாக்காமல் சுவரை மட்டும் கறுப்பாக்குகிறது.

கிருஷ்ணகிஷோர் என்று ஒரு பக்தன் இருந்தான். அவன், தான் ஆகாசம் என்று சொல்வதுண்டு; அதாவது, பிரம்ம ஸ்வரூபமென்றர்த்தம். ஆகாசத்தைக் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லமுடியாததுபோல் பிரம்மத்தைப்பற்றியும் ஒன்றும் சொல்ல முடியாததால் பிரம்மத்தை ஆகாசத்துக் கொப்பிடுகிறது. அவன் உண்மையான பக்தனானதலால், அவனுக்கு அவ்விதம் சொல்வதற்குக் கொஞ்சம் அதிகாரமுண்டு. மற்றவர்களுக்கு அவ்விதமான எண்ணங்களைத் தங்கள் வாயினின்றும் வெளிப்படுத்தக் கூடாது.

ஆனால் ஒவ்வொருவருக்கும் 'நான் முக்தன்' என்னும் எண்ணத்தைப் பாராட்டுவது மிகவும் நல்லது. "நான் முக்தன், எனக்கு பந்தமில்லை." என்று ஸதா சொல்லுகிறவன் நிச்சயமாகப் பந்தத்திலிருந்து விடுபடுகிறான். இதற்கு மாறாக, தான் பத்தன் என்று எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பவன் முடிவில் நிச்சயமாக பந்தத்திற்குள்ளாகிறான்.

'நான் பாபி, நான் பாபி,' என்று எப்பொழுதும் சொல்லும் கோழையனமுடையவன் நிச்சயமாக பாபியாகிறான். ஒருவன் "நான் பகவந்நாமத்தை ஸ்மரித்துக் கொண்டிருக்கிறேன், என்னைப் பாபமாவது இவ்வுலக பந்தமாவது எப்படி ஒட்டிக்கொள்ளும்" என்று சொல்ல வேண்டும்.

பகவான் ம—வைப்பார்த்து, "இன்றைக்கு என் மனது ஸரியா யில்லை; ஹிருதயனிடமிருந்து, தான் மிகவும் நோயால் வருந்துவதாக ஸமாசாரம் வந்திருக்கிறது. இவ்விதமான கவலை மாயையினாலோ, அல்லது, தயையினாலோ?

ம— மறுமொழி யாது கூறுவதென்று அறியாமல் பேசாமலிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—மாயை என்பது என்ன தெரியுமா? தன் தந்தை தாய், ஸஹோதரன், ஸஹோதரி, மனைவி, மக்கள், மருமகன், மருமகள் முதலானவர்களிடமிருக்கும் அன்புக்கு மாயையென்று சொல்லப்படும். தயையோ எல்லா உயிர்களிடத்திலுமிருக்கும் அன்பு. இப்பொழுது என் கவலை எதினாலுண்டானது? மாயையினாலோ? அல்லது, தயையினாலோ?

ஆனால் ஹிருதயன் எனக்காக எவ்வளவோ செய்தான். அவன் எனக்கு நிரம்ப சுச்ருஷை செய்தான். எனக்கு எவ்விதமான குற்றேவல் செய்வதற்கும் அவன் எப்பொழுதும் பின் வாங்கினதில்லை. ஆனால் கடைசியில் அவன் மிகவும் தொந்திரவாய் போய் விட்டான். அதினால் ஒரு ஸமயம் நான் கங்கையில் குதித்து இறப்பதற்காகப் போனேன். அது போகட்டும். அவனுக்கு இப்பொழுது கொஞ்சம் பணம் கிடைத்தால் என் மனம் ஸமாதானமடையும்.

இப்பொழுது பணத்திற்காக நான் யாரிடம் கேட்பது? இவ்விஷயத்திற்காக பாபுக்களை (பணக்காரர்களை) யார் போய்க் கேட்பது?

சாயங்காலம் இரண்டு மூன்று மணிக்கு பலராம், —தர், இரண்டு சிஷ்யர்கள் வந்தார்கள். அவர்கள் பகவானை நமஸ்கரித்து உட்கார்ந்தார்கள். அவர்கள் பகவானது க்ஷேமத்தை விசாரிக்க, பகவான், "என் சரீரம் சௌக்கியமாகத் தானிருக்கிறது; ஆனால், என் மனம் சௌக்கியமாயில்லை" என்று பதிலளித்தார். அவர் ஹிருதயனுடைய அசௌக்கியத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.



## அத்தியாயம் 2.

அவர்கள் ஸம்பாஷணையின் மத்தியில் பாரம்ஸாகில் மல்லிக்வம்சத்தார் ஆராதித்துவரும் ஸிம்ஹவாஹனி தேவியைப்பற்றிய பேச்சு வந்தபொழுது பகவான், "ஒருஸமயம் நான் அம்மாளைத் தரிசிக்கச் சென்றேன். கல்கத்தாவில் சசதோ பபாராவில் ஒருவீட்டில் அவள் இருந்தாள். அவ்வீட்டில் குடியேயில்லைபோலிருந்தது. அவர்கள் மிகவும் ஏழைகளாகப் போய்விட்டார்கள். சில விடங்களில் குப்பையும் அழுக்கும் கிடந்தன, சில விடங்களில் பாசி படர்ந்திருந்தது. சுவரின் மீதிருந்து சுண்ணாம்பு, செங்கல்தூலி, மணல் முதலானவை மெதுவாக உதிர்ந்து கொண்டிருந்தன. மல்லிக் வம்சத்தைச் சேர்ந்த மற்ற வீடுகள் மிகவும் செம்மையாகவும், சுத்தமாகவுமிருக்கின்றன. ஆனால் இது அப்படியில்லை" என்றார்.

பின் அவர் 'ம—'வை நோக்கி "இது என்னத்தினாலென்று உன்னால் சொல்லமுடியுமா?" என்றான்.

ம—ஒன்றும் சொல்ல முடியாமல் பேசாமலிருந்தார்.

பகவான்:—என்னவென்றால், ஒவ்வொருவரும் தாங்கள் முன்செய்த வினையின் பலனை அனுபவிக்கவேண்டும்; நமக்கு கர்மத்தில் நம்பிக்கை யிருக்க வேண்டும்.

பகவான், ம—வைப்பார்த்துப் பின்னும் சொல்லுகிறார்; "அப்பாழ்வீட்டில் நான் ஒன்று பார்த்தேன். தேவியின் முகமானது மிகுந்த காந்தியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஈசுவர விக்கிரகங்களில் கடவுள் பிரஸந்நமாயிருக்கிறாரென்பதை நாம் நம்பவேண்டும்.

"நான் விஷ்ணுபுரம் போனேன். அவ்விடத்தில் ராஜாவைச் சேர்ந்த அழகிய ஆலயங்கள் அநேக மிருக்கின்றன. அக்கோவிலுக்கு முன்னால் பெரிய தடாகமொன்றிருக்கிறது. நான் அக்குளத்தருகில் வந்தபொழுது, ஸ்திரீகள் தங்கள் தலையில் வாஸனைக்காக உபயோகப்படுத்தும் ஸுகந்த திரவியத்தின் வாஸனை அக்குளத்திலிருந்து எனக்கு எப்படி யுண்டாயிற்று? அவர்கள் தேவியை வணங்கப்போகும் பொழுது அச்சுகந்த திரவியத்தை அவளுக்குச் சாத்துகிறார்களென்பது எனக்குத் தெரியாது. நான் தேவியின் விக்கிரஹத்தைப் பார்ப்பதற்கு முன்னாலேயே குளத்தருகில் அவளுடைய திவ்விய ஸ்வரூபத்தை இடுப்புவரையில் ஜலத்தில் ஸமாதியில் பார்த்தேன். ஜகன்மாதாவானவள் ஸமாதியில் எனக்கு மிருண்மயியாகத் தோன்றினாள்."

இச்சமயத்தில் வேறு சிஷ்யர்களும் வந்தார்கள். அப்பொழுது சம்பாஷணையானது காபூல் (Kubul) யுத்தத்தைப் பற்றியும், பின்பு உண்டான ஸிவில் யுத்தத்தையும்பற்றி யுண்டாயிற்று. ஒரு பக்தன் யாகுப்கான் சிங்காதனத்தினின்றும் நீக்கப்பட்டான் என்ற ஸமாசாரத்தைச் சொன்னான். அவன், "ஸ்வாமி, யாகுப்கான் ஒரு மஹாபக்தன்" என்றான்.

பகவான்:—ஸுகமும், லாபமும் துக்கமும், ஸந்தோஷமும், வியசனமும் சரீரத்தை விட்டு விலக்கக் கூடாதது. கவிகங்கணனின் சந்தியென்னும் கிரந்தத்தில், மஹாபக்தனாகிய கலுவீரன் ஜயிலில் அடைக்கப்பட்டான். அவன் மார்பில் ஒரு பெரும் பாரமான கல்லைத் தூக்கி வைத்தார்கள் என்று நாம் வாசித்திருக்கிறோம். ஆனால் கலுவோ ஜகன்மாதாவின் விசேஷ அருள்பெற்ற குழந்தை.

ஏனெனில் ஸுகமும் துக்கமும் ஸந்தோஷமும் வியஸனமும் சரீரத்தோடு வருகின்றன.

ஸ்ரீமந்தன் என்ன மஹாபக்தன்! ஜகன் மாதா அவன் தாய் குல்லனாவிடம் என்ன அன்பு பாராட்டினுள்! ஆனுல் அவனுக்கு எவ்வளவு துன்பம் நேரிட்டது? அவனைக் கொல்வதற்காகக் கொலைக்களத்திற்குக்கூட அழைத்துபோனுர்கள்.

மஹாபக்தனுகிய விறகுவெட்டி ஒருவனுக்கு ஜகன் மாதாவைப் பார்க்கும் படியான அதிர்ஷ்டம் கிடைத்தது. தேவி அவனிடம் மிகுந்த அன்பும் அருளும் காண்பித்தாள். ஆயினும், அவன் விறகுவெட்டி விற்றுத்தான் தன் ஜீவனம் செய்யவேண்டி வந்தது.

ஈசுவரனிடத்தில் மிகுந்த பக்தியுடையவன் உலகில் செல்வவானுயிருக்க வேண்டுமென்பதில்லை. அவன் உலகப்பொருளில் ஏழையாயிருந்தபோதிலும் ஆத்மச் செல்வம் நிறைந்திருக்கிருன். தேவகி சிறைச்சாலையில் பகவானை சங்கு சக்கரம் கதை பத்மம் இவைதாங்கிய நான்கு கைகளுடன் புருஷரூபமாகப் பார்த்தாள். ஆனுல் அவள் பகவத்காக்ஷியடைந்தும் சிறையினின்றும் தப்பமுடியவில்லை.

ம—சிறையிருந்து தப்புவதாவது சரீரத்தை விட்டுத் தப்பித்துக்கொள்ள வேண்டியது தான். அதன்றோ காரணம் அவள் துக்கத்துக்கெல்லாம்.

பகவான்:—எப்படியெனில், சரீரமானது முன் செய்த வினையின் பயன். ஆதலால் ஒருவன்தான் செய்த வினையானது தீருமட்டில் அதை ஸகிக்கவேண்டும். ஒரு குருடன் புண்ணிய கங்காதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தன் பாபத்தையெல்லாம் தொலைக்கிருன். ஆனுல் அவன் முன்போலவே குருடனுயிருக்கிருன். அது அவனுடைய முன் ஜன்மத்திய வினைப்பயன்.

ம—வில்லினின்றும் விடுத்த அம்பானது அது போகுமட்டும் போய்த் தான் தீரவேண்டும். அந்த அம்பின் பிடிப்பானது விட்டுப் போய்விட்டது.

பகவான்:—சரீரத்தைப்பற்றின மட்டிலும் ஸுகமாகவோ துக்கமாகவோ இருக்கலாம். ஆனுல் ஆத்மாவைப்பற்றின விஷயத்தில் உண்மையான பக்தன் ஞானமும், ஈசுவர பக்தியும் ஆகிய செல்வம் நிறைந்தவனுயிருப்பான்.

உதாரணமாக, பாண்டவர்களைப் பார். அவர்கள் எவ்வளவு இடையூறுகளும் ஆபத்துக்களும் அடைந்தார்கள்! எவ்வளவு துன்பத்திற்கும் சோதனைக்கும் உள்ளானுர்கள்! இருந்தபோதிலும் அவர்கள் தங்களுக்குப் பகவான் மீதிருக்கும் அன்பையும், பக்தியையும் எப்பொழுதும் விடவில்லை. இவர்களுக்குச் சமானமாக இவ்வளவு ஞானமும் பக்தியும் உள்ளவர்களாக வேறு எவரையாகிலும் சொல்லமுடியுமா?

## அத்தியாயம் 3.

### விவேகாநந்தருடனும் ஸமாதியிலும்

இப்பொழுது நரேந்திரனும் விசுவநாத உபாத்தியாயரும் வந்தார்கள். விசுவநாத உபாத்தியாயர் கல்கத்தாவில் நேபாள ராஜ்யத்தின் காரியஸ்தன். பகவான் அவரை காப்டென் (அதாவது தலைவன்) என்று கூப்பிடுவது வழக்கம். ஆகையினுல் அவரது சிஷ்யர்களும் அவரை அப்படியே அழைப்பார்கள்.



அப்பொழுது நரேந்திரனுக்கு வயது 22. பி. ஏ, (B. A.) கிளாஸில் மேல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அவர் பகவானைப் பார்ப்பதற்கு அடிக்கடி வருவார். ஞாயிற்றுக்கிழமை தோறும் கட்டாயம் வருவார். பகவானை நமஸ்கரித்து நரேந்திரன் உட்கார்ந்தார்.

பகவான் அவரை பாடும்படியாகச் சொன்னுர். அவ்வறையில் மேற்கு பக்கத்தில் சுவரில் தம்பூரா வைத்திருந்தது. நரேந்திரன் அதையெடுத்து, பாபாவுக்கும் தபிலாவுக்கும் ஸரியாக சுருதி ஸரிப்படுத்த ஆரம்பித்தார். யாவரும் அவரது பாடலைக் கேட்பதற்கு அதிக ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பகவான் (புன்னகையுடன் விவேகானந்தரை நோக்கி):—இந்த வாத்தியத்துக்கு முன்போல் நாதமில்லை.

காப்டென்:—அது நிறைந்திருக்கிறது. ஆதலால்தான் அதில் சப்தமில்லை. ஜலம் நிறைந்த குடம்போல்.

பகவான்:—நாரதர் முதலான லோக குருக்களுடைய சரித்திரத்திற்கு என்ன சொல்கிருய்? அவர்கள் பகவானை அடைந்தும் பேசினுர்கள். நிறைகுடமாயிருந்தும் சப்தம் செய்தார்கள்.

காப்டென்:—அவர்கள் லோகத்தின் நன்மைக்காக பேசினுர்கள்.

பகவான்:—ஆம், அப்படித்தான். நாரதரும் சுகதேவரும் மேலான ஸமாதி நிலையினின்றும் கீழிறங்கி வந்தார்கள். ஈசுவரனை யடையாமல் ஸம்ஸார வாழ்க்கையினுல் தளர்ச்சி யடைந்தவர்களுக்காக அவர்கள் மனமிரங்கினுர்கள். அவர்கள் மற்றவர்களின் நன்மைக்காகப் பேசினுர்கள்.

விவேகானந்தர் கீழ்வரும் பாடலைப் பாடுகிருர்:—

**பாடல்**

1. ஏகஸத்திய மூர்த்தியான ஈசனது ஸர்வ கல்யாண காருண்ணிய ஸ்வரூபத்தை, ஹிருதயமாகிய கோவிலில் நாம் எப்பொழுது அடைவோம்? ஸதா அவனையே பார்த்துக் கொண்டு, அந்த திவ்விய அழகெனும் கடலில் நாம் எப்பொழுது மூழ்குவோம?

2. நீ என் ஆத்மாவில் ஞானமாகவும் பிரம்மமாகவும் உற்பவி. அப்பொழுது மயங்கிய மனமானது அதன் அத்தியந்த ஆனந்தத்தினுல் சலித்து உன் பாதங்களில் சரணமடையும். அமிருதமே உருவெடுத்து வந்ததுபோன்ற இனிய ஆனந்தமானது சிதாகாசத்தில் உதயமாகும். அவ்விதம் நீ எங்களுக்குப் பிரஸந்நமாக, சந்திரனைக் கண்டு ஆனந்தத்தினுல் மயங்கும் சகோர பக்ஷிபோல், உன்னைப் பார்த்து நானும் ஆனந்தத்தினுல் மயங்குவேன்.

3. ஆ! அன்பனே! நான் உன் பாதங்களில் என்னுயிரை மாய்த்துக் கொள்வேன். அப்பொழுது என் ஜன்மம் ஸாபல்யமாகும். நீ இரண்டற்ற ஸர்வசாந்த மூர்த்தியும், ஸர்வ காருண்ணிய மூர்த்தியுமாகிய சக்கிரவர்த்தியன்றோ!

4. இவ்விதமாக இந்த ஜன்மத்திலேயே நான் திவ்விய ஆனந்தத்தை அடைவேன். ஆ, என்ன மஹிமையான பேறு! விளக்கின் முன் இருளானது பறந்துபோனது போல், நான் பரிசுத்தமான புண்ணிய ரூபத்தை எப்பொழுது காண்பேன்? நான் பரிசுத்தமான புண்ணிய ரூபத்தை எப்பொழுது காண

பேன்? ஆ! உன் திவ்விய ரூபத்தின் தேஜஸ்ஸின் முன்பு ஸகல மலங்களும் என்னிடமிருந்துபோம்.

5. துருவ நக்ஷத்திரத்தைப்போல் நிலை தவறாது வழிகாட்டும் நீ யென் ஹிருதயத்தில் தீவிர பக்தியை மூட்டிவிடு. ஆ, தீனபந்தோ! என் இவ்வொரு ஆசையை நிறைவேற்று. இவ்விதம் உன் அன்பெனும் அந்தமில்லாத அகாதத்தில் முழுகி, நான் என்னை, முழுதும் மறந்து, இரவும் பகலும் உன்னை எனது சொந்தமாக வைத்துக் கொண்டிருப்பேன். ஆ! அது எப்பொழுது வரும்?

ஸ்ரீராமகிருஷ்ணர், "அமிருதமே உருவெடுத்து வந்ததுபோன்ற இனிய ஆனந்தம்" என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே ஆழ்ந்த ஸமாதியில் மூழ்கினார்! அவர் அவ்விடத்தில் கிழக்கு முகமாகத் திரும்பி கூப்பின கைகளுடன் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார். ஆனந்தமயியாகிய ஜகன் மாதாவின் திவ்விய ஸௌந்தரியக் கடலில் ஆழ்ந்து முழுகினார்! வெளிப்பிரக்ஞையில்லை. மூச்சும் அநேகமாக நின்றது. அவரது அங்கங்களொன்றும் அசையவில்லை! கண்கள் சலனமற்றிருந்தன! எழுதிய சித்திரம்போல் உட்கார்ந்திருந்தார்! இவ்விந்திரிய உலகைவிட்டு வேறெங்கேயோ போயிருந்தார்!

ஸமாதி கலைந்தது. இதற்கிடையில் நரேந்திரன் பகவான் ஸமாதியிலிருப்பதைப் பார்த்து, உடனே அவ்வறையை விட்டு கிழக்குத் தாழ்வாரத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் ஹாஸரா ஒரு கம்பளத்தின்மீது உட்கார்ந்து ஜபமாலை கொண்டு ஜபித்துக் கொண்டிருந்தார். நரேந்திரன் அவருடன் பேச ஆரம்பித்தார்.

பகவானிருக்கும் அறையானது இப்பொழுது பக்தர்களால் நிரம்பப் பெற்றிருக்கிறது. ஸமாதி கலைந்ததும், பகவான் அவ்வறையில் நரேந்திரனெங்கே யென்று பார்த்தார். நரேந்திரன் அவ்விடமிருக்கவில்லை. தம்பூரா தரையில் வைக்கப்பட்டிருந்தது. பக்தர்களனைவரும் பகவானைப் பார்த்த வண்ணமாயிருந்தார்கள்.

பகவான் (நரேந்திரனைக் குறிப்பிட்டு):—அவன் அக்கினியை மூட்டி விட்டான். அவனிப்பொழுது இவ்வறையிலிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி! பிறகு காப்டெனையும், பக்தர்களையும் பார்த்து, "ஏக ஸச்சிதானந்த ரூபியாகிய ஈசுவரனை தியானியுங்கள்; நீங்களும் நித்தியானந்த மடைவீர்கள்" என்றார்.

அந்த ஸச்சிதானந்த வஸ்து இவ்விடத்திலும், எவ்விடத்திலும் எப்பொழுதும் இருக்கிறது. ஆனால் அது அக்ஞானத்தினால் மறைபட்டிருக்கிறது. இந்திரியப்பற்று எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு ஈசுவர பக்தி அதிகரிக்கிறது.

காப்டென்:—கல்கத்தாவிற்கு எவ்வளவுக் கெவ்வளவு அருகில் வருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு காசி தூரப்போகிறது. காசிக்கு ஸமீபம் போகப் போக நமது ஊராகிய கல்கத்தா தூரப்போகிறது.

பகவான்:—ராதை ஸ்ரீகிருஷ்ணனுக்கு அருகில் சென்று கொண்டிருக்கும்பொழுது பரிமளம் அவளை யெட்டியது. ஆம், ஈசுவரனிடம் அதிகமாக நெருங்க நெருங்க அன்பும் அதிகரிக்கிறது. நதியானது ஸமுத்திரத்தினருகிற் செல்லச்செல்ல, ஸமுத்திரத்தின் ஏற்ற இறக்கம் இதற்கும் பாதிக்கிறது.



பகவான்:—ஞானியின் அந்தக்கரணத்தில் ஞானமென்னும் கங்கையானது ஒரு வழியில் தான் பாய்ந்து செல்கிறது. அவனுக்கு இவ்வுலக மனைத்தும் கனவு. அவன் எப்பொழுதும் தன் ஆத்மாவிலேயே லயித்திருக்கிறான். ஆனால் ஒரு பக்தனுடைய ஹிருதயத்தில் அன்பென்னும் கங்கையானது ஒரு வழியில் பாய்வதில்லை. அதற்கு ஏற்றமும் இறக்கமும் உண்டு. பக்தனவன் ஒரு ஸமயம் சிரிக்கிறான்; ஒரு ஸமயம் அழுகிறான்; ஒரு ஸமயம் ஆடுகிறான், ஒரு ஸமயம் பாடுகிறான். அவன் சில சமயம் தன் அன்பனாகிய ஈசனில் லயிக்க விரும்புகிறான். ஜலத்தில் பனிக்கட்டியானது முழுகியெழுந்து ஆடுவதுபோல், பக்தன் தன் ஆனந்தத்தினால் ஈசுவரனில் மூழ்கி யெழுந்து நீந்துகிறான்.

ஆனால் உண்மையில் பிரம்மமும் சக்தியும் ஒரே வஸ்துதான். ஸச்சிதமானந்தமாகிய பிரம்மமே ஸர்வக்ஞையும், சுத்தசித்தும், ஆனந்தமயியும் ஆகிய ஜகன்மாதா. மனத்தினால் மணியிலிருந்து அதன் ஒலியையும், ஒலியிலிருந்து மணியையும் பிரித்து நினைக்க முடியாது.

அகண்ட ஸச்சிதானந்த மூர்த்தியாகிய பிரம்மமானது ஒன்றாகவும்பலவாகவும் பிரிந்திருக்கிறது. அது வெளியில் தோற்றுவித்திருக்கும் சக்திக் கேற்ப அதற்கு பற்பல நாமங்களிடப் பட்டிருக்கின்றன. அவன் பல ரூபங்களுடைத்தாயிருப்பதற்குக் காரணம் இதுவே. ஆகையால் பக்தன், "ஆ, என் ஜகன் மாதாவே! நீயே இதெல்லாம்" என்று பாடியிருக்கிறான். ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களாகிய பிரவிருத்திகளிருக்குமிடத்தில் சித்சக்தி யிருக்கின்றது. ஜலமானது சலித்துக் கொண்டிருந்தாலும், சலனமற்றிருந்தாலும் அது ஜலமே தான். இவ்வுலகை ஸிருஷ்டித்து ரக்ஷித்து ஸம்ஹரிக்கும் சித்சக்தியே அந்த ஏக ஸச்சிதானந்த மூர்த்தி. காப்டெனானவன் சும்மாவிருந்தாலும் அல்லது, பூஜைக்கு வேண்டியது தயார்செய்து கொண்டிருந்தாலும், அல்லது கவர்னர் ஜெனரலைப் பார்க்கப்போனாலும் அவன் அதே காப்டெனாக விருக்கிறான். இதெல்லாம் அவனது பற்பல உபாதிகள்.

காப்டென்:—ஆம், ஸ்வாமி அப்படித்தான்.

பகவான்:—நான் இதை கேசவுக்குச் சொன்னேன்.

காப்டென்:—நல்லது, ஸ்வாமி கேசவ சேனருக்கு நமது ஹிந்துக்களுடைய ஆசாரங்களிலும், நீதி தர்மங்களிலும் மதிப்பு இல்லை. அவரெப்படி உண்மையான ஸாதுவாவார்? அவர் ஒரு லௌகிகர், ஸாதுவன்று.

பகவான் (பக்தர்களை நோக்கிப் புன்னகையுடன்):—நான் கேசவசேனரிடம் போவது காப்டெனுக்கும் எப்பொழுதும் பிரியமில்லை.

காப்டென்:—தேவரீர் போகத்தான் செய்வீர்கள். நான் என்ன செய்வது?

பகவான் (சுருக்கென்று):—நீ கவர்னர் ஜெனரலைப் பார்க்கப் போகவில்லையோ? உன் சாஸ்திரப் பிரகாரம் அவன் மிலேச்சன்தானே? அதுவும் பணத்திற்காக! நான் கேசவ சேனரைப் பார்க்கப்போகக் கூடாதோ? அவன் கடவுளைத் தியானம் செய்கிறான். அவருடைய திருநாமங்களைப் பாடுகிறான்! "ஈசுவரன்தன் ஸிருஷ்டிக்கிரமத்தில் ஜீவனாகவும் ஜகத்தாகவும் பிரித்துத் தோற்றுவிக்கிறார்." என்று அடிக்கடி சொல்பவனான உன் வாயினின்றும் அப்படிவரக் கூடாது. உன் கருத்திலுள்ளதையே சொல்லவேண்டும். நீ யுன் கருத்திலில்லாததைச் சொல்லலாமா?

இவ்விதம் சொல்லி ஸ்ரீராமகிருஷ்ணர் திடீரென்று அவ்வறையை விட்டு வடகிழக்குத் தாழ்வாரத்திற்குச் சென்றார்; காப்டேனும், வேறு சிஷ்யர்களும் பகவானுடைய வரவை யெதிர்பார்த்துக் கொண்டு அவ்வறையிலேயே இருந்தார்கள். ம—மாத்திரம் அவரைத் தொடர்ந்து தாழ்வாரத்திற்குச் சென்றார், அவ்விடத்தில் ஹாஸராவும் நரேந்திரனும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஹாஸரா வெறும் உலர்ந்த அத்வைதியென்று பகவானுக்குத் தெரியும். 'இவ்வுலக மனைத்தும் வெறும் கனவு. எல்லாவித ஆராதனைகளும், பூஜையும், நைவேத்தியமும் சித்தப்பிரமையால் உண்டானவை. கடவுள் ஒன்றே விகாரமற்ற வஸ்து. மனிதன் ஆத்மாவையே தியானிக்க வேண்டும். வேறொன்றையும் கூடாது' என்று இவ்விதமாகச் சொல்வதுண்டு.

பகவான் (சிரித்துக்கொண்டு):—என்ன, நீங்கள் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

நரேந்திரன் (சிரித்துக்கொண்டு):—நாங்கள் ஸாதாரண மனிதர்களுக் கெட்டாத விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

பகவான் (சிரித்துக்கொண்டு),—நீங்கள் என்ன பேசிக்கொண்டாலும் பேசிக்கொள்ளலாம். ஆனால் 'நான்' என்பதற்ற சுத்த பக்தியும் சுத்தஞானமும் ஒன்றென்று தெரிந்து கொள்ளவேண்டும். இவ்விரண்டிற்கும் முடிவும் ஒன்றே. பகவானை அடைவதற்கு பக்திமார்க்கமானது ஸரளமாயும் சுலபமாயுமிருக்கிறது.

நரேந்திரன்:—ஆம், வேதாந்திகளைப் போல் விசாரணை செய்வதில் பிரயோஜனமில்லை. "ஆ, தாயே! உன்மேல் அன்பினால் யோகமடையட்டும்" என்பதே ஸரி.

(ம—வைப்பார்த்து): ஐயா; நான் ஹாமில்டன் வாசித்தேன். அதில் "கற்றறிந்த மௌட்யமானது தத்துவசாஸ்திரத்தின் முடிவும், பக்தி மார்க்கத்தின் ஆரம்பமும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. (இதை இங்கிலீஷில் சொன்னார்).

பகவான் (ம—வைப்பார்த்து):—அதன் அர்த்தமென்ன?

நரேந்திரன் அதை வங்காளியில் விவரித்துச் சொன்னான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டு 'தாங்க் யூ' (Thank you) என்று இங்கிலீஷில் சொன்னார். அதைக்கேட்டு யாவரும் சிரித்தார்கள். ஏனெனில், பகவானுடைய இங்கிலீஷ் ஞானமானது இவ்விதமான ஐந்தாறு வார்த்தைகளுக்குமேல் கிடையாது.

# பரதரது திவ்ய சரித்திரம்

முன்னொரு காலத்தில், பாரத வர்ஷமென்று வழங்கிவரும் நம் நாட்டிற் பரத சக்ரவர்த்தி யென்றோரரசர் சற்றேனும் நீதி நெறி வழுவாமற் செங்கோற் செலுத்தி வந்தார். தெய்வபக்தி, சௌரியம், ஔதாரியம், பிரஜாவாத்ஸல்யம் முதலிய குணங்களினாலிப் பூவுலகுக் கொருதிலகம் போன்று, குடிகளை யாட்கொள்ள வந்த மற்றொரு இராமனென வநேக மன்னர்களைத் தன் பிரேமாதிசயத்தாலடக்கி யாண்டு வந்த யிச்சக்கிரவர்த்திக்குச் சிறிது காலத்திலேயே தன் ராஜ்யம், குடிகள், மனைவி, மக்கள், லௌகிக சுகங்கள் முதலிய வெல்லாவற்றிலும் முற்றிலும் பற்றற்றுப் போய் விட்டது. விதேஹன் எனப்பெயர் வாய்ந்த ஜனகமஹா ராஜனைப்போற் பார்ப்போருக் கிவ்வுலக நடவடிக்கைகளை யனுஸரித்தவராயினும் அவரது இருதயம் ஸதாகாலமும் எவர்க்கும் கர்த்தனான கடவுள் அடிக்கமலங்களிற் பதிந்து அவருக்கு அமோகமான வானந்தத்தைப் புகட்டியது.

இவ்விதமான மனோநிர்ணயத்தை யுடையவராய்ப் பரத மஹா ராஜன் ஸர்வஸங்க பரித்தியாகம் செய்து நிர்மானுஷமானவோர் அடவி சேர்ந்து, சரீர சுகங்களை முற்றுந் தவிர்த்து, இணையற்ற தவத்திலழுந்தி யிருக்க, சமீபத்திலுள்ள வோர் நதியை நோக்கிக் கருத்தரித்த வொரு பெண்மான் சிங்க மொன்றினாற் றுரத்தப்பட்டோடு வதைக் கண்டார். சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட மாத்திரத்தி லம்மான் மிகவுந் திகிலடைந்து பிரவாஹத்திற் றுள்ளிக் குதிப்பதும் அதின் வயிற்றிலுள்ள சிசு தண்ணீரில் விழுவதும் ஒன்றாய் நேர்ந்தன. மானோ அவ்வாற்றைக் கடந்தக்கரை சேர்ந்து தான்கண்ட திகிலினா லுயிரைவிட்டது.

தண்ணீரில் விழுந்த மான்குட்டி பிரவாஹத்தி லடிக்கப்பட்டு உயிர்துறக்க விருக்குந் தறுவாயில் நம்பரதரிஷி யதைக்கண்டு மிகவும் பச்சாத்தாபமடைந் தம்மிருக சாபகத்தைக் காப்பாற்றுவதே, பகவத்தியானம், தவம், விரதம் முதலிய வெல்லாவற்றினும் மிகவும் மேலான தருமமென்று கருத்திலிருத்தி அம்மானைத் தன்னாச்சிரமம் சேர்த்து அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் அபாரமான வாத்ஸல்யத்துடன் வளர்த்து வந்தார். அதுவுமிவர் போகுமிடமெல்லா மிவர்கூடவே போவதும், இவர் மடியிற் படுப்பதும், தோள்களிலும் முது

கிலும் சார்ந்துருய்வதும் இவர்முன் துள்ளிக் குதித்து விளையாடுவதும் ஆகிய இவற்றாலும் மற்றுமுள்ள தன் விலாஸங்களினாலும் முனிச்சிரேஷ்டரின் மனதுக்கு அடங்காச் சந்தோஷத்தையுண்டு பண்ணியது. தவஞ்செய்யுங் காலத்திலும், பூஜை, ஜபம், தியானம் முதலியன செய்யுந்தறுவாயிலு மிவர் மனது தன் முக்கிய உத்தேசத்தைத் தவிர்த்து அம்மானின் யோகக்ஷேமத்தையே யிடைவிடாது கருதியது. பகவத் ஸான்னித்தியத்தையும் தன்னாத்மானந்தத்தையும் அடைவதற்குத் தன் பெண்டு, குமாரர், அரசு முதலியவற்றைப் பெருமிடையூறாய் எவர் நினைத்து அவற்றை முற்றுந் தொலைத்தாரோ அவரே யிப்போதொரு மானைத் தன் மக்களைக் காட்டிலும் மிகவுமருமையாய் வளர்த்துப் பாதுகாத்து வருவது மல்லாது கடவுளையும் மறந்து யோகப்பிரஷ்டராயினார்.

இவ்விதமாகப் பரத மஹாரிஷி தன் காலத்தைக் கழித்து வரச் சில வாண்டுகள் சென்றன. இவரது அவஸான காலம் ஸமீபித்தது. ஆயினும் இவரிருதயத்திற் றன்னருமை மானினுருவமே யமைந்து, அதின் சேஷ்டைகளும், விளையாட்டுகளும், தன்னிடமது பாராட்டி வந்த பெரிய வன்பும் அதனிடந் தனக்குள்ள வாத்ஸல்யமுமே யவர் மனதைக் கொள்ளை கொண்டு பகவத் ஸ்மரணத்தினின்றுமிவரை முற்றிலுந் தவிர்த்து விட்டது. தனக்குப் பிறகு நாதனற்ற வம்மானைப் போஷிப்பவர் எவருமில்லாத தொன்று. எவரேனுமதை யடித்துக்கொன்று விடுவார்களோ அல்லது, புலி, சிங்கம் முதலிய கொடிய மிருகங்களுக்கது இரையாகுமோ வென்னும் பயம் மற்றொன்று. இவ்விரண்டு மிவர் மனதை மிகவுந் தத்தளிக்கச் செய்தன. நொடிப்பொழுதம்மானைப் பிரிய நேர்ந்தாற் றன் பிராணனைவிடச் சித்தமாயிருக்கு மிவருக்கு அதை விட்டுச் செல்லுதற்குக் கிஞ்சித்தேனும் மனந்துணியுமா?

ஆகவே, பரதர் மானைக் குறித்துக் கரைந்துருகியபடியே உயிர் பிரிந்தார். அந்திய காலத்திலெதை நினைத்துயிர்விடுவோமோ அதேயுருவம் நமக்கு மறுபிறவியி லுண்டாகுமென்று ஸ்ரீ கிருஷ்ணன் தன்பிரிய சிஷ்யனான அர்ஜுனனுக்குப் பரமார்த்தோபதேசஞ்செய்ததை யனுஸரித்து நம் பரதர் மறுபிறவியிலோர் மானாய்ப் பிறந்து காலங்கழித்து வந்தார். ஆயினும், முற்பிறப்பிலிவர் ஒரு பெரிய பக்திமானாய் நெடுநாள் தவம் புரிந்ததின் வாசனையினா லிவருக்குக் குக் தன் பூர்வஸ்திதி, மானினிடம் தனக்கிருந்த பிரேமை, தான் யோகநிலை விட்டு நழுவினது, மானையே நினைத்துயிர் விட்டதினாற் றனக்குண்டான மிருக ஜன்மம் முதலியவெல்லாம் மிகவும் ஸ்வச்சமாய் விளங்கின. அதினுடன் சாச்வதமான பகவத் பக்தியும் மறுபடியு மிவருக்குண்டாகியது.



இப்படிச் சில வருஷகாலங் கழிந்த பின்னரித் தபோதனர் தன் பிராரப்த வசத்தினாற் றனக்குண்டான மிருக சரீரத்தை விட்டு ஆங்கிரஸர் என்னும் ஓர் மஹர்ஷியின் குமாரரா யவதரித்து ஜனனமாதியாய் ஹரிபக்தி பாராயணராயும், கர்ம விவசராயும், ஸர்வஸங்கங்களையும் மனதினாற் சன்னியஸித்தவராயுமிருந்து வருங்காலையிவர் தந்தையார் காலக்கிரமத்தினால் மரண மடைந்தார். இவர் தாயுந்தன் மணாளனுடன் சிதையிலேறி யனுகமனஞ் செய்தாள்.

அப்பொழுது, இவர் மாற்றுந்தாய்மக்க ளிவரது மகிமையைக் கொஞ்சமேனு மறியாதவராகையாலும் ஸ்வபாவத்தினால் உலக நடவடிக்கைகளிற் றேர்ந்தவரானமையாலுமிவர் தபோநிஷ்டைக்குப் பங்கம் செய்து அவரிடம் ஸதாகாலமும் பணிகொள்ள வெண்ணித் தங்கள் கிருக கர்மங்களிலிவரை நியமித்ததுமல்லாமல் தங்கள் புலங்களிலிவரையு காவல் வைத்தார்கள்.

இவ்வாறு இவர் காவலிருக்கும்போது ஓர் தினம் அவ்வழியாகத் தன்னூழியர் சிலருடன் போய்க்கொண்டிருந்த வொரு மனிதனிவரைக் கண்டான். அவன் மாகாளிக்கொரு புருஷ பசுவைப் பலிகொடுத்துப் புத்திரப்பேறு பெற எண்ணி யிவரைக் காளி கோயிற் சேர்த்து, இவருக் கப்பியங்கனாதிகள் செய்வித்து, இவர் சிரந்தைச் சேதிக்கயத்தனித்தான் அச்சமயத்தில் பத்திரகாளி தபோதனரின் பிரம தேஜத்தைக் கண்டு நடுநடுங்கி யவரைப் பலிகொடுக்க வந்த மாபாவியினுயிரை மாய்த்து அவன் அடிமைகளையுங்கொன்று, அந்தர்த்தானமாயினாள். ஆயினும், ஆங்கிரஸர் குமாரரோ வென்றாற் றன்னைக் கொல்ல வந்தவனிடத்தும் தன்றலையிலவனால் வைக்கப்பட்ட கட்கத்தினிடத்தும், தன் முன் பிரஸன்னமான காளியினிடத்தும் மற்றெல்லா வஸ்துக்களிடத்தும் பகவத்பாவத்தை நிறுத்திக் கொஞ்சமேனுந் தயங்காமலிருந்தார்.

பின்னரிப் பூஸுரோத்தமர் சண்டிகா கிருகத்தினின்றும் வெளிவந்து மறுபடியும் புலங்காவலி லமர்ந்தார். இப்படிச் சில நாட்சென்ற பின்னர் ஓர் ராசன், கபிலரென்னுமொரு முனிவரைத் தரிசித்து, அவரிடம் தத்துவஞானம் பெறவேண்டுமெனவெண்ணித் தன் பல்லக்கிலேறி யம்முனியாச்சிரமத்தை நோக்கிச் செல்லுங்கால் மார்க்கத்தில் புலங்காவலிருந்த யிப்பெரியோன் பெருமையைச் சற்றேனுமறியாத பல்லக்குப் போயிகளிவரைப் பலாத்காரமாய்ப் பிடித்திழுத்து அப்பல்லக்கைத் தங்களுடன் சுமக்கும்படி செய்தப்படியே முனிவோனுஞ் சிந்தை செய்யாமலதைச் சுமந்து சென்றார். ஆயினுமிவர் மனமிடைவிடாது பகவானைச் சிந்தித்திருப்பதினால் இவர் தன் முன்னுள்ள மேடு பள்ளங்களை யறியாமற் பல்லக்கை யேற்றியுமிறக்கியும் சுமந்து செல்லும்போது அரசனிஃது

ணர்ந்துப் பிராமணோத்தமரை மிகவும் அவமதித்துச் செருக்குடன் சில நிஷ்டூரமான வார்த்தைகளை யவர் செவியிற் புகட்டினான். அப்படி யிருந்தும் முனிவர் கிஞ்சித்தேனுங் கோபங்கொள்ளாமற் றனக்கிந்த ஜன்மம் கடைசியானதென்றறிந்த வராதலின் இப்பிறவியிலஹங்காரமமகாரங்களைமுற்றிலுந் தொலைத்துக் கரைகாணவேண்டுமென்ற எண்ணத்துடன் மௌனம் வகித்துப் பல்லக்கைச் சுமந்து சென்றார். ஆயினும் ரஹோகணனென்னு மவ்வரசனிவரை முன்னிலும் மேலாகத் தூஷித்தவரைத் தண்டிக்கப் பிரயத்தனஞ் செய்யுங்கால் தவசியரிவ்விதம் பேசலுற்றார். "ஓ அரசனே! உனக்கின்னும் ஞானம் வரவில்லை. ஸத்திய மின்னதென்று நீ யின்னுமறிய வில்லை. தண்டனை, பூஷணை, சுகம், துக்கம், ஆரோக்கியம், வியாதி முதலிய யாவுமிச்சரீரத்திற்கே யன்றி எனக்குண்டாக மாட்டா. அவற்றாலெனக் கொருதீங்கும் நேரிடாது. பகவானது கருணையினால் 'நான் வேறு: என் சரீரம் வேறு. சாச்வதானந்தம் எனக்கேயன்றிச் சரீரத்திற்கில்லை' யென்னுமறிவு என்னுள்ளத்திலடிக் கண்டிருக்கிறது" என்று சொல்லிச் சற்றுநேரம் ஸமாதியிலிருந்தார். அரசனிது கண்டு திடுக்கிட்டுப் பல்லக்கினின்றுங் கீழிறங்கி இவர் யாரோ ஒரு மகான். ஒருக்காற் கபிலமுனிதானோ என்று நினைத்துத் தன் தௌஷ்டியத்துக்கு மிகவும் பச்சாத்தாபப்பட்டுத் தன் பூர்வ ஜன்ம ஸுகிருதத்தினால் ஞானமார்க்கம் சற்றவலம்பித்து முனிவர் ஸமாதி கலைந்ததும் அவரடியிற் சாஷ்டாங்கமாய்ப் பிரணமம் செய்துக் கண்ணீர் ததும்பிய கண்களுடன் தன் குற்றத்தைப் பொறுத்துத் தன்னை யாட்கொள்ள வேண்டுமென்று அதிதீனமாய்க் கேட்டுக் கொள்ளலும் முனிவர் வாஸ்தவமாகவே அவனிடம் துவேஷமற்றவராகையால் அவனைக் கருணித்து, அவனுக்கு ஞானோபதேசஞ் செய்து அவனைக் காப்பாற்றி யருளினார்.

ரஹோகணன் பின்னுஞ் சில நாட்கள் அரசுபுரிந்து பின்னர் வனத்திற்குச் சென்று தவம் செய்து வந்தான். பரதர் சிலகாலமிவ்வுடலுடன் கழித்துக் கடையில் மறு பிறப்பற்ற கைவல்ய முக்தியையும் சாச்வதானந்தத்தையும் பெற்றுத் தன் பெயரால் விளங்கி வருமிப்பாரத வர்ஷத்தினரில் சிரேஷ்டர்களி லொருவராய் எண்ணப்பட்டு வருவதுடன் தன்னனுபவங்களை நமக்கும் நாமறியா வண்ணம் புகட்டி வருகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# ஹிந்துமதமும் ஸ்ரீராமகிருஷ்ணரும்

(ஸ்வாமி விவேகானந்தர் எழுதியதினின்று மொழி பெயர்த்தது).

'சாஸ்திரங்கள்' என்ற பதத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லாத வேதமே அர்த்தம். மதசம்பந்தமான கடமைகளைப்பற்றிய விஷயங்களில் வேதமொன்றே தக்க பிரமாணமாகும்.

புராணங்கள் இதர மதவிஷயமான கிரந்தங்கள் ஆகிய எல்லாவற்றையும், 'ஸ்மிருதி' என்ற பதம் குறிக்கும். அவைகளுக்குப் பிரமாணத்வம் வேதங்களை அனுசரித்து அவற்றோடு முரணாமல் இருக்கும் வரைதான்.

உண்மை இரண்டு விதம்:—(1) பஞ்சேந்திரியங்களின் மூலமாய் அறியப்படுவதும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு அனுமானத்தால் அறியப்படுவதும் ஆகிய உண்மை. (2) யோகத்தால் உண்டாகும் சூக்ஷ்மமான விஷயாதீதமான சக்தியைக் கொண்டு அறியப்படும் உண்மை.

முதல் வழியால் பெறப்படும் அறிவுக்கு 'சாஸ்திரம்' என்று பெயர்; இரண்டாவது வழியால் பெறப்படும் அறிவுக்கு 'வேதம்' என்று பெயர்.

ஆதியும் அந்தமும் அற்றதும் வேதங்கள் என்று நாமதேயம் பெற்றதும் ஆய விஷயாதீத உண்மைகளின் தொகுதி முழுமையும் எப்பொழுதும் அழியாதிருக்கும் தன்மை வாய்ந்தன. சிருஷ்டி கர்த்தாவாயிருப்பவரும் இவ்வுண்மைகளின் உதவியைக் கொண்டே பிரபஞ்சத்தை உண்டாக்கியும் பாதுகாத்தும் அழித்தும் வருகிறார். யாரிடத்து இந்த விஷயாதீத சக்தி வெளிப்படுகிறதோ அவரே ரிஷியென்னும் பெயர் பெறுவர். அந்த சக்தியின் மூலமாய் அவர் சாக்ஷாத்கரிக்கும் விஷயாதீத உண்மைகளே வேதமெனப் பெயர் பெறும்.

வேதங்கள் என்னும் உண்மைகளை விஷயாதீத நிலையில் சாக்ஷாத்கரிக்கும் சக்தியாகிய இந்த ரிஷித்வந்தான் உண்மையான மதம். மததீக்ஷை பெற்றவனது வாழ்க்கையில் இந்த சக்தி யுண்டாகாத வரை அவனுக்கு மதம் என்பது அர்த்த மற்ற வெற்றுரையாகும். அவன் அதுவரை மதத்தின் முதற்படியில் கூட அடியெடுத்து வைக்கவில்லை என்று அறிந்துகொள்ள வேண்டும்.

ஸர்வகால ஸர்வதேச ஸகல மனிதர்களிடத்தும் வேதங்களுக்குள்ள பிரமாணத்வம் வியாபித்திருக்கிறது. அதாவது அவ்வேதங்களை உபயோகித்தற்குக் குறிப்பிட்ட தேசம் காலம் மனிதர் என்ற வரையறை கிடையாது.

உலகப் பொதுவான தர்மத்தை (மதத்தை) நன்றாய் அறிவிப்பது வேதங்கள் ஒன்றே.

விஷயாதீதமான உண்மையின் சாக்ஷாத்காரம் ஒரு சிறிது புராண இதிஹாஸங்களிலும் இதர ஜாதியர்களின் மதப் புஸ்தகங்களிடத்தும் காணப் படுமாயினும், ஆரியஜாதியாரால் வேதம் என்று அழைக்கப் பட்டுவரும் நான்கு மதக்கிரந்தங்கள்மட்டுமே, யாவற்றினும் முதன்மையானதும் மிகப் பூர்ணமானதும் விகாரமடையாததுமான மத உண்மைகளின் தொகுதியாயிருப்பது பற்றி இப்பூமியின் கண்ணுள்ள ஸகல ஜாதியார்களினது பஹுமானத்தையும் ஏற்று வரும் ஸகல மதக்கிரந்தங்களுள்ளும் உன்னதஸ்தானத்தை வஹிக்கும் தகுதியையுடையன. அன்றியும் அவ்வேதங்களே அவர்களுடைய தனித்தனிக் கிரந்தங்கள் அனைத்திலும் கூறப்பட்டுள்ளன வற்றிற்குத் தக்க காரணங்களை எடுத்துரைக்கின்றன.

ஆரிய ஜாதியாரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் வேத உண்மைகளின் தொகுதி முழுமையையும் பற்றி இன்னொன்றும் அறியற்பாலது. அதாவது முற்றிலும் லௌகிகமான விஷயங்களைப் பற்றியும் கேவலம் பரம்பரை, சரித்திரம் முதலியவைகளைப் பற்றியும் நமது கடமைகளை வற்புறுத்துவதற்கு ஏற்பட்டிருக்கும் தூண்டுகோல்களாயிருக்கும் விஷயங்களைப் பற்றியும் கூறாத பாகங்கள் எவைகளோ அவைகளே, உண்மையான அர்த்தத்தை யோசிக்குமிடத்து, வேதங்கள் ஆகின்றன.

வேதங்கள் ஞான காண்டம் (ஞானபாகம்) என்றும் கர்ம காண்டம் (கர்மபாகம்) என்றும் இரண்டு பாகுபாடுகளையுடையன. கர்மகாண்டத்திற் கூறப்படும் கிரியைகளும் அவற்றின் பலன்களும் மாயை சம்பந்தப்பட்ட பிரபஞ்சத்தின் எல்லைக்கு உள்ளேயே எப்பொழுதும் அடங்கி நிற்கும். ஆனது பற்றியே, தேசம் காலம் ஜீவன் இவைகளை ஊடுருவிச் சென்று இயக்குவிக்கும் விகிருதி (மாறுதல்) என்னும் சட்டத்தை அனுசரித்து அவைகள் இதுவரை மாறிக் கொண்டே வந்திருக்கின்றன, இன்னும் மாறிக் கொண்டே வருவன.

ஜனஸமூகச் சட்டங்களும் வழக்கங்களும், இதே மாதிரியாகவே கர்ம காண்டத்தை ஆதாரமாகப் பற்றி யிருத்தலின், இதுவரை மாறுதலை யடைந்து வந்திருக்கின்றன. பிற்காலத்தும் மாறுபட்டுக்கொண்டே வருவன. இவையன்றியும், இடையிடையே, 'சில



லரையான ஜன ஸமூகப் பழக்கங்கள், உண்மையான சாஸ்திரங்க,
ளின் தாத்பர்யத்திற்கும் புண்ணிய புருஷர்களாகிய மஹான்களின்,
ஆசரணைக்கும் அனுஷ்டானத்திற்கும் ஒத்திருப்பதாகவும், மதிக்கப்
பட்டும் அங்கீகரிக்கப் பட்டும் வந்திருக்கின்றன. ஆனால் சாஸ்திரங்
களின் தாத்பர்யத்திற்கும் புண்ணிய புருஷர்களான மஹரிஷிக
ளின் ஆசரணைக்கும் முரணாய் அருவருக்கத் தக்கதாயிருக்கும் பழக்
கங்களின் மீது மாத்திரம் குருட்டுத்தனமான விசுவாசத்தை வைத்
திருந்ததே, ஆரிய ஜாதியார் தாழ்ந்த நிலைமையை அடைந்ததற்கு,
முக்கியமான காரணங்களுள் ஒன்றாயிருந்திருக்கின்றது.

மனிதர்கள் மாயையைக் கடந்து சென்று அக்கரை சேரும்
படிச் செய்வதற்கும், யோகம் பக்தி ஞானம் அல்லது சுயநயம் கரு
தாது செய்யும் கர்மம் என்னும் உபாயங்களை அப்யஸித்து அதனால்
அவர்கள் மோக்ஷமடையும்படிச் செய்வதற்கும் சக்தி வாய்ந்தது
என்று எக்காலத்தும் கொண்டாடப்பட்டு வருவது ஞானகாண்டம்
அல்லது வேதாந்தம் என்னும் பாகமாத்திரமே. இந்தப் பாகத்தின்
பலப் பிரதத்வமும் பிரமாணத்வமும் தேசம் காலம் மனிதர்கள்
என்ற வரையறைகளுக்குத் தக்கபடி மாறுபாடடையக் கூடியவைக
ளல்ல வாதலின், மனுஷ்யவர்க்கம் முழுமைக்கும் பொதுவான
தும் ஸநாதனமாயிருப்பதுமான தர்மத்தை நன்கு அறிவிப்பது அது
ஒன்றேயாம்.

மநு முதலான மஹரிஷிகளின் ஸம்ஹிதைகள் கர்மகாண்டத்
தின் போக்கை அனுசரித்துக்கொண்டு, ஜன ஸமூகத்திற்கு நன்மை
பயக்கக் கூடியவையும் தேச கால மனிதர்களின் வேறுபாட்டிற்
குத் தக்கபடி உபயோகிக்கத் தக்கவையுமான ஆசரணைகளையே
முக்கியமாய் விதித்திருக்கின்றன. புராணங்களோ வேதாந்தத்தில்
பொதிந்து கிடக்கும் உண்மைகளைக் கிரஹித்துக் கொண்டு அவதார
புருஷர்களும் இதர புருஷர்களும் ஆகிய மஹான்களினுடைய மேம்
பட்ட ஜீவிய சரித்திர வாயிலாகவும் திவ்ய செயல்கள் வாயிலாகவும்,
விவரமாய் அவ்வுண்மைகளை விளக்கிக்காட்டி யிருக்கின்றன. இதன்
றியும், அவைகள் ஒவ்வொன்றும் பகவானது எண்ணிறந்த கல்யா
ணகுணங்களில் சில அம்சங்களை மாத்திரம் வற்புறுத்திக் கூறி மனி
தர்களுக்குப் போதித்திருக்கின்றன.

ஆனால், காலகதியில், ஆரிய சந்ததியார்கள் உண்மையான ஸ்ரு
யங்களினின்றும் ஆசரணைகளினின்றும் தவறினவர்களாய், வைராக்
ய ரச மற்றவர்களாய், குருட்டுத்தனமாகப் பழையவழக்கங்களைக்
கையாடிக்கொண்டு, அறிவின் வன்மை குன்றியவர்களாய், மந்த மதிக
ளுக்கும் போதிக்கும் பொருட்டே முற்கூறிய புராணங்கள் வேதாந்
தத்தின் உணர்தற்கரிய உண்மைகளை ஸ்தூலரூபமாயும் வெகு விரி

வாயும் கூறிவந்தன என்பதோடுகூட, அவைகள் மேலெழுந்த பார்
வைக்கு ஒன்றுக் கொன்று முரண்பட்டதாகத் தோன்றுவதற்குக்
காரணம், ஒவ்வொன்றும் மதலக்ஷியத்தின் பல அம்சங்களில் குறிப்
பிட்ட சிலவற்றை மாத்திரம் விசேஷமாய் வற்புறுத்திக் கூறுவதே.
என்னும் இந்தப் புராண ரஹஸ்ய ஸாராம்ஸத்தின் அருமையை
உணரும் திறமை இழந்து விட்டவர்களாயினர்.

இதன் பலனாய், ஆர்ய சந்ததியார், மதலக்ஷியத்தின் ஸகல அம்
சங்களையும் ஒருங்கே தொகுத்துக் கம்பீரமாக வேதங்களில் கூறி
யிருக்கும் ஸநாதந தர்மம் என்னும் ஒன்றைச் சின்ன பின்ன
மாக, பரஸ்பரம் சச்சரவுக்கு ஆஸ்பதமான பற்பல சமயங்களாக
உடைத்து, மதவைஷம்யம் ஐக்கமையின்மை யென்னும் நெருப்பில்
ஒன்றை மற்றொன்று வீழ்த்திக் கொல்ல எத்தனித்து, இவ்வாறாக
தர்மம் நடையாடாநின்ற அழகிய பிரதேசமாகிய நம் இந்திய நாட்
டில் குழப்பத்தை யுண்டுபண்ணி, கொடிய நரகமோ என்னலாம்
படியாக்கி விட்டனர்.

இத்தகைய நிலைமையில்தான் ஸ்ரீபகவான் ராமகிருஷ்ண பரம
ஹம்ஸர் இந்தியாவில் அவதாரஞ்செய்து ஆரிய ஜாதியாரின் உண்
மையான தர்மம் எது என்பதை நிரூபித்துக் காட்டியருளினர்.

ஹிந்து மதம் வெளிப் பார்வைக்கு வேறு பட்டிருப்பதாய்த்
தோன்றும் எத்தனையோ பலவித சமயங்களாகப் பிரிவு பட்டிருந்
ததினாலும், அவைகள் ஒன்றோடொன்று போராடிக் கொண்டும்
ஒரு விதத்திலும் சம்பந்த மில்லாத வழக்கங்கள் நிரம்பினவாயும்
இருந்ததினாலும், அம்மதம் நம் நாட்டாருக்கு இன்ன தென்றறிய
ஒட்டாதபடித் தடுமாறச் செய்யும் ஓர் புதிர் போன்றும், அன்னியர்
களுக்கும் தமக்கும் இகழ்ச்சிக்கு ஓர் இலக்காயும் இருந்தது, நமது
ஞாபகத்திற் கெட்டாத அதன் ஆரம்ப கால முதற்கொண்டு அதன்
ஜீவிய சரித்திரத்தில் தேசத்தில் எங்கும் சிதறுண்டு கிடக்கும் நானா
வித உட்பிரிவுகள் சாகைகள் எல்லா வற்றிற்குள்ளும், அவைகள்
எல்லா வற்றையும் உண்மையாகவே ஒன்றுக்கும் பொதுத்தன்மை
எங்கே அமைந்து கிடக்கிறது என்பதை எடுத்துக்காட்டி யருளி
னர் குருதேவர்.

இன்னும், யாவற்றிற்கும் மேலாக, காலக்கிரமத்தில், மறதிக்
கடலில் வெகு நாள் ஆழ்ந்து கிடந்த தர்மத்தின் உலகப் பொது
வான ஸ்வரூபமும் குணமும் நிரம்ப ஊட்டப் பெற்றிருக்கும் தம்
முடைய அதியாச்சரியமான வாழ்க்கையை ஸநாதந தர்மமே உயி
ருற்று ஓர் வடிவெடுத்து வந்ததென இலங்குமாறு மாந்தரது அறி
யாப் பேற்றுக்காக நிதரிசனமாகக் காட்டியும் லோகம் உஜ்ஜீவிக்கும்
படி யருளிச் செய்தார்.

(இன்னும் வரும்)

# அன்னை ஸ்ரீசாரதா தேவியார்

(96-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

முன்போலவே தேவியார் கோயில் நந்தவனத்தில் ஓர் அறை
யில் மாமியாருடன் வாசம்செய்து வந்தனர். அவ்வறை வெகு சிறி
தாயிருந்ததைக் கண்டு சம்பு சந்திரமல்லிக் என்னும் ஒரு பக்தர்
தேவிக்குத் தனியாய்ச் சிறிது விசாலமாய்க் கோவிலுக்கருகில் ஒரு
சாலை யமைத்துக் கொடுத்தனர். இவ்விடத்திலமைதியா யிருந்து
கொண்டு பதி சிசுருஷை செய்து வந்தனர். தினந்தோறும் அமுது
செய்து கணவனுக்குக் கோயிலில் அவர் அறைக்கு எடுத்துக் செல்
வது வழக்கம். ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் சில நாட்கள் தாமே
அங்கு போவார். இரவில் மட்டும் அக்குடிசையில் தங்கமாட்டார்.
ஒரே ஒருநாள் மட்டும் மழையின் கொடுமையால் அக்குடிசையில்
இரவைக் கழித்தார்.

இவ்வாறு ஒரு வருஷம் கழிந்தது. தேகத்தை சரியாய்க் கவ
னியாதலால் தேவியாருக்கு வயிற்றுக் கடுப்புண்டாயிற்று. அவருக்
குத்தக்க சிகிச்சை செய்யும்படி. சம்புமல்லிக் ஏற்பாடு செய்தார்.
சற்று வியாதி குணமானதும் அவர் ஜயராம்பட்டிக்குச் சென்றார்.
அங்கு மறுபடியும் நோய் வலுத்தது. தகப்பனாரும் காலமாய் விட்
டதால் தக்கபடி வியாதிக்கு வைத்தியம் பார்ப்பதும் இங்கே சிறிது
சிரமமாகவே யிருந்தது. நாளாக நாளாக வியாதி மிகக்கடுமையாகி
உயிர்ச்சேதம் நேரிடுமென்று தேவியார் மனதில் தோன்ற அவர்
அக்கிராம தேவதையாகிய சிங்கவாஹனியைக் குறித்துப் பிரார்த்
திக்க அத்தேவி பிரஸாதத்தால் வியாதி சொஸ்தமாயிற்று.

பின்பு தட்சிணேசுவரம் வந்ததும் ஏதோ காரணங்களால் வந்த
தினமே திரும்பி ஜயராம்பட்டி போக நேர்ந்தது. மறுபடி 1881-ம்
வருஷம் கடைசி முறையாக தட்சிணேசுவரம் வந்து ஸ்ரீராமகிரு
ஷ்ண தேவர் காலமாகும்வரை அவரை விட்டுச் சிறிது நேரமும்
பிரியாமலிருந்தனர்.

இக்காலத்தில் நிகழ்ந்த பல செய்திகளில் எமதன்னையாரின்
குணாதிசயங்களைக் காட்டும் இரண்டொன்றை இங்கு கூறுவோம்.
ஒருநாள் ஒரு ஸ்த்ரீ ஸ்ரீராமகிருஷ்ண தேவரிடம் வந்து தன் பந்துக்
களில் ஒருவர் துன்மார்க்கப் பிரவிருத்தராயிருப்பதாயும் அவரை

நல்வழிக்குத் திருப்ப அவர் கையால் ஏதாவது மருந்து கொடுத்தருளவேண்டு மென்றும் பிரார்த்தித்தாள். அவர் தனக்கொன்றுந் தெரியாதென்றும் எதிர்க்குடிசையில் ஒரு ஸித்திபெற்ற ஸ்த்ரீ இருப்பதாயும் அவளுக்கு எல்லா தந்திரங்களும் மந்திரங்களும் தெரியுமென்றுங் கூறியனுப்பினார். தேவியார் பூஜைசெய்து கொண்டிருந்த சமயத்தில் இந்த ஸ்த்ரீ யணுக, பர்த்தாவின் சொற்களின் ஹாஸ்யக்குறிப்பை யுணர்ந்து அதின் ரஸத்தை விருத்தி செய்யும் பொருட்டுத் தன் பர்த்தாவின் மகிமைகளைக்கூறி அவர் எல்லாந் தெரிந்தவரெனத் திரும்பவு மவரிடமே யனுப்ப, அவர் மறுபடி இவளிடமனுப்ப இவ்வாறாய்ப் பன்முறை யலைந்தபின்னர் அவள் கடைசியாக தேவி தன்னைப் பரிசோதிப்பதா யெண்ணி யவர் பாதங்களில் வீழ்ந்து கெஞ்சவுங் கருணைகூர்ந்து ஒரு பில்வதளத்தை யளித்து அஃது துக்க நிவிருத்தியைச் செய்யுமென வருளினார்.

தேவியார் எப்பொழுதும் ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய உள்ளக்குறிப்புக்கு ஒரு சிறிதும் மாறாது நடப்பதே நோன்பாய்க் கொண்டவர். தனக்ரப் பிரியமானதை யொருபொழுதுங் கருதாமல் பர்த்தாவுக்கு எது பிரியமென்றுணர்ந்து அதையே நாடுவார். கங்கைக்கரையில் நடக்கும் பாணிஹதி வைஷ்ணவ உத்ஸவத்திற்கு வருஷந்தோறும் குருதேவர் போவது வழக்கம். ஒரு முறை உத்ஸவத்திற்குத் தானும் அவருடன் வரலாமோவெனக் கேட்டு வரும்படி ஒரு சிஷ்யையை யனுப்பியதற்கு அவர் "நீங்களெல்லோரும் போவீர்களன்றோ? அவளும் இஷ்டமானால் உங்களுடன் வரட்டுமே" என்றார். இதைக் கேட்டு அம்மையார் பர்த்தாவின் உள்ளக்குறிப்பை யுணர்ந்து போகாமல் நின்று விட்டார். ஏனெனில் தான் போக வேண்டியதாயிருந்தால் "ஆம்! அவள் வரத்தான் வேண்டும் என்று கூறியிராரோ? அவ்வாறில்லாததால் அவருக்கு விருப்பமில்லை யென்றுணர்கின்றேன்" என்றனர். அவ்வாறே அன்றிரவு திரும்பிவந்த பின்னர் எமதையன் தேவியாரைக் குறித்துப் பேசத் தொடங்கி "அவள் மிக்க புத்திசாலி. என் கருத்தை யுணர்ந்து நடந்து கொண்டனள். நான் அங்கே பவஸமாதியடைந்தபொழுது எல்லோரும் என்னை உற்றுற்று நோக்கினர். அப்பொழுது அவளும் என்னுடனிருந்திருந்தால் உசிதமாயிருந்திராது" என்றார்.

மற்றோர் சமயத்தில் ஒரு யார்வாரி பக்தன் அவரை யணுகி பக்தர்களுடைய ஆராதனையின் பொருட்டுத் தான் அவருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க விரும்புவதாய்க் கூறினான். அதில் மிக்க வெறுப்புற்று சிறிது கோபமுங் கொண்டவராய் ஜகன்மாதாவைத் தியானித்து "தாயே! என்னை ஏன் இவ்வாறு பரிசோதிக்கிறாய்?" என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டு எமதன்னையார் மனோநிலை



யையும் உணரும்பொருட்டு, "இச்செல்வத்தை பக்தர் ஆராதனைக்காக ஏற்றுக்கொள்ளலாமோ"? என்றார். தேவியார் "அஃதெவ்வாறு? ஜனங்கள் தங்களிடம் ஈஷணாத்ரயங்களின் ஒழிவையே நாடுவதால் பொருளை நாம் எவ்வாற்றானுங் கொள்வது தகாதன்றோ? தாங்கள் அடியாளைக் கேட்பதின் கருத்தறியேன்" என்று கூற தேவர் மிக்க சந்தோஷமடைந்தனர்.

1885-ம் வருஷம் பாணிஹதி உத்ஸவத்துக்குப் போகையில் தேவருக்குக் கண்டத்தில் புண்ணாயிருந்தது. பாடலிலும் ஆடலிலும் உத்ஸவ ஆடம்பரத்தில் அஃது கொடிய கண்டமாலை யென்னும் மரண வியாதியாய் முற்றிவிட்டது. வைத்யர்கள் கல்கத்தாவுக்குப்போய் வைத்தியம் செய்து கொள்ளும்படி கூறியதன்பேரில் அவர் அங்கு சிஷ்யர்களுடன் சென்று சியாமப்புகூரில் ஒரு சிறு அறையில் வசிக்கலானார்.

எமதன்னையார் பர்த்தாவை விட்டுப் பிரிந்தெவ்வாறிருப்பர்? கல்கத்தாவில ஜனநெருக்கத்தில் வாசம்செய்ய அவர் மற்ற சமயங்களில் விரும்பியிராரெனினும் குருதேவர் அங்கு சென்றதால் அதுவே அவருக்கும் அத்யந்தமாய் விரும்பத்தக்க இடமாயிற்று. சியாம்புகூர் வந்ததும் எல்லோரும் எமதன்னையார் விருப்பப்படியே நடந்துகொள்ள வேண்டுமென்று பரமஹம்ஸ தேவர் சிஷ்யர்களுக்காக்ஞாபித்தனர்.

அன்னையார் பர்த்தாவின் நோயைக்கண்டு மிக்க மனம் வருந்தினர். நோய் தேவியாரைத் துன்புறுத்தியதே யொழிய உண்மையில் பகவானைச் சிறிதும் வருத்தியதாய்த் தெரியவில்லை. பகவான் எப்போதும் போலவே தேகத்தைச் சிறிதுங் கவனியாதவராய் ஸதா தியானத்திலும் ஸமாதியிலும் பக்தர்களுக்குபதேசம் செய்தலிலுமே நின்றனர். 'எல்லாம் எம்மையாளும் எமதன்னையின் விருப்பப்படியே நடக்கும். எமக்கென்ன கவலை' என்று அடிக்கடி கூறி ஜகன்மாதாவைத் துதிப்பார். ஜகதீசுவரியின் திருவுளம் அவ்வாறாக 1866-ம் வருஷம் ஆகஸ்டுமீ ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் நிர்விகல்ப ஸமாதியிலாழ்ந்து மானிட உருவை நீத்து விண்ணுலகேகினார்.

"அண்டரண்டம் யாவுநீ கொண்டு நின்ற கோலமே
தொண்டர் கண்டு சொரிகணீர் கண்ட நெஞ்சகரையுமே".

எமதன்னையார் அனாதையாய் விட்டமை பற்றித் தானணிந்திருந்த மங்கல நாணையும் ஆபரணங்களையும் கழற்ற நினைத்ததும் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் அவர் முன் பிரத்யக்ஷமாய்த் தோன்றி "அவ்

வாறு செய்யற்க. நான் முன்னிருந்தவாறே யிருக்கிறேன். என்னிடம் ஒரு மாறுதலுமில்லை. எதற்காக துக்கிக்கின்றாய்? ஏன் அமங்கலக்கோலம் கொள்கிறாய்?" எனக்கூற அவரது திருவுளக் குறிப்புக்கிசைய வழக்கமாய் விதவைகள் கொள்ளும் வேஷத்தைக் கொள்ளாது விடுத்தனர். அவர் உடல் தாங்கி நின்ற காலத்தில் சிசுருஷை செய்து வந்தவாறே அதற்குப் பின்னரும் எல்லாக் காரியங்களையும் அவருடைய பிரீத்தியர்த்தமாகவே செய்துவந்தனர். தான் உண்பதும், உடுப்பதும் உறங்குவதும், பிறரை ஸேவிப்பதும், ஈசுவரனை ஆராதிப்பதும் அவருக்காகவே; அவரன்றோ பிரத்யக்ஷ தெய்வம். முன்போலவே தினமும் வைகறையாமம் துயிலெழுந்து நீராடி அத்யந்த பக்திசிரத்தையுடன் அமுதுசெய்து அவருக்கு அர்ப்பணம் செய்வதையே தன் முதற்கடமையாக் கொண்டுவந்தார். தமது பர்த்தாவை ஜகன்மாதாவின் திருவவதாரமாகவே எமதன்னையார் உணர்ந்தனர். பர்த்தா தேகவியோக மானபொழுதும் "அம்மா! என்னை ஏங்கவிட்டு எங்கொளித்தாய்?" என்றே பிரலாபித்தார். ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் தேவியாரிடத்தில் லோக மாதாவின் அம்சத்தையே கண்டாரெனவும் ஏற்கெனவே கூறியிருக்கின்றோம். இவ்விருவர்க்கு மிசைந்த பொருத்த மென்ன பொருத்தமோ! "உலகிற் பிறர்க்கு மெய்தும் பொருத்த மிந்தப் பொருத்தமோ!"

எமதன்னையாரைக் கண்டதிசயித்து ஸ்ரீ நிவேதிதா தேவிகூறுகின்றார்: "......மழைக்கும் வெயிலுக்கும் அசையாத மலையைப் போல் அவர் துக்கத்திலும் சுகத்திலும் சலிக்காத மனமுடையவர். பதியே தெய்வம் என்றும் அவரிட்டபணியைச் செய்வதே தம் வாழ்க்கைப்பயன் என்றும் தீவிரமான நம்பிக்கையுள்ளவர். பர்த்தாவைப் பற்றி பேசும்பொழுது 'குருதேவ்' என்றே கூறுவர். தேவியாரை முன் அறியாத ஒருவர் அவருடைய சம்பாஷணையினின்று ஸ்ரீராமகிருஷ்ண தேவருக்கும் அவருக்குமுள்ள ஸம்பந்தத்தை யறிய இயலாது. தான் அம்மகானுடைய மனைவி யென்பதை முற்றும் மறந்து தான் அவருடைய சிஷ்யை யென்றும், ஊழியக்காரி யென்றுமே கருதினர்......"

"ஸ்ரீராமகிருஷ்ண தேவர் உபதேசித்தருளிய ஸ்த்ரீ தர்மத்தின் அவதாரமே ஸ்ரீசாரதாதேவியார் என்பது எம் துணிபு. அவர் பழைய பரம்பரையிற் கடைசியிற் றோன்றியவரோ, புதிதாக வளர்ந்தோங்கவிருக்கும் அரிய பரம்பரையின் வித்தோ யாம் அறியோம். ஸாதாரணமாய்ப் பெண்பாலார் அடையக்கூடிய புத்திவன்மைக்கும், அன்பின் மாட்சிமைக்கும், தெய்வத்தன்மைக்கும் அவர் ஓர் அத்தாட்சியாய் விளங்கினர்"



"அவர் பிறரிடம் காட்டும் விசுவாசமும் மரியாதையும் மட்டற்றது. உலக வியவகாரங்களிற் பழக்க மற்றவராயினும் பிறரை ஒரு சொல்லாலுங் குறிப்பாலும் நல் வழிச் செலுத்தும் திறன் வாய்ந்தவர். எந்த விஷயமாயினும் ஐயந்திரிபற விளக்குந்திறனுடையவர். மிக்க சாந்தஸ்வரூபமாயினும் தன்னையாசிரயத் துள்ளவர்களை அடக்கியாளும் சக்தியுள்ளவர். தன் முன்னிலையில் எவராவது கர்வங்கொண்டுள்ளதா யுணர்ந்தால் அவர் முகக்குறிப்பே கர்வபங்கம் செய்யப் போதுமானது. பிறர் குற்றம் செய்யின் அதைக் கண்டிப்பதில் சிறிதுந் தயங்கார். குற்றஞ் செய்யும் சுபாவ முள்ளவர்கள் அவர்முன் செல்லவும் அஞ்சுவார்கள். எனினும் அவர் சிறு குழந்தையைப் போன்றவர். அவர் முன்னிலையில் அமைதியும் அன்புமே நிறைந்து நிற்கும்."

"அவருக்கு எழுதவும் படிக்கவுந் தெரியும். அவர் வழக்கமாய் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பாராயணம் செய்வர். வடநாட்டுப் புண்ணிய ஸ்தலங்களனைத்துக்குஞ் சென்று ஆங்காங்குள்ள ஜனங்களின் நடையுடை பாவனைகளையுங் கற்றறிந்தவர். ஸ்ரீராமகிருஷ்ண தேவரருளால் ஆத்மானுபவத்திலும் முதிர்ந்திருந்தமை பற்றி அவரது ஒவ்வொரு செய்கையும் பரமஹம்ஸரது உபதேசங்களின் உட்கருத்தை விளக்குவதாயிருந்தது......"

இவர் ஸ்த்ரீ தர்மத்துக்கொப்ப, பர்த்தா தேகவியோகமான பின்னர், ஸ்ரீமத் யோகானந்த ஸ்வாமிகளையே தன் தந்தையெனப் பாவித்து. அவர் ஸம்ரக்ஷணையிலும் அவருங்காலமான பின்னர் ஸ்ரீமத் சாரதானந்த ஸ்வாமிகள் ஸம்ரக்ஷணையிலும் இருந்தார்.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளும் இதர சிஷ்யர்களும் குருபத்தினியிடம் அளவிறந்த பக்தியுடையவர்களா யிருந்தனர். ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் கல்கத்தா நகரிலாவது அதற்கருகிலாவது ஸ்திரீகளுக்காக ஓர்மடம் ஸ்தாபித்து, எமதன்னையாரின் பார்வையின் கீழ் பெண்பாலரும் "தியாகம்", "ஸேவை" என்னும் உயர்ந்த லட்சியங்களைக் கைக்கொண்டு முன்னேற்ற மடையத்தக்க ஸாதனங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டார். ஆனால் அவர் ஆயுட் காலத்தில் அதைச் செய்துமுடிக்க அவகாசமில்லாமற் போயிற்று. எனினும் மஹான்களுடைய ஸங்கல்பங்கள் ஒருக்காலும் வீண் போகாவன்றோ? அவருக்குப் பின்னர் அவருடைய ஸகாக்களின் பரிசிரமத்தால் கல்கத்தாவில் தேவியாருக்காக ஒரு ஆசிரமம் அமைக்கப்பட்டு அதற்கருகில் ஸ்ரீநிவேதிதா பாடசாலையுடன் சேர்த்து ஸ்திரீகளுக்காகத் தனிமடமும் ஏற்படுத்தப் பட்டது. இங்கே பெண்மகளிர் ஸநாதன தர்மத்தின் உண்மைகளை உணர்ந்துய்யும் வகையை நாடி நிற்கின்றனர்.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளுக்கு அன்னையாரிடம் உள்ள பக்திக்கும் அவருக்குத் தன் ஞானபுத்ரனிடம் உள்ள அன்புக்கும் அளவுகூற வியலாது. ஸ்வாமிகள் முக்கியமான விஷயங்களில் பிரவேசிக்கு முன்னர் அன்னையின் அனுமதி பெற்றே செல்வர், தர்மப்ரசாரம் செய்யும் பொருட்டு மேனாடுபோக வேண்டிவந்த

பொழுது தான் வெகுவாய் ஆலோசனை செய்தும் ஒரு நிர்மானத்தை யடையாமல் "குருதேவருடைய அம்சம் அன்னையாரிடமே நிலை பெறுகின்றது ஆகையால் இச்சமயம் அவருடைய விருப்பத்தையே யான் உணரல் வேண்டும்" என்று கொண்டு அவருக்குத் தன் மனோபாவங்களைத் தெரிவித்து ஒருகடித மெழுதினார். தான் அவர் உத்தரவுப்படி நடந்து கொள்ளச் சித்தமாயிருப்பதாயும், மேனாடு போகும்படி ஆக்ஞை யேற்பட்டால் தான் அங்கு சென்று விவரமாய்க் கடிதமெழுதும் வரை அதைப்பற்றித் தன் ஸகாக்களுக்குச் சொல்லக் கூடாதென்றும் கூறியிருந்தார். கடிதத்தைக் கண்டதும் அன்னையார் தன் ஞான புத்ரனையே நேரிற் கண்டது போலானந்தித்தனர். குருதேவருடைய பிரிய சிஷ்யரானது பற்றி அவரிடம் அன்னையாருக்கு அத்யந்த ப்ரீதி. அவர் ஊரூராய் அலைவதை நினைத்து 'பெற்றவட்கே தெரியு மந்த வருத்தம்' என்றவாறு எங்கே பனியானனைந்து வெயிலாலுலர்ந்து பசியால் மெலிந்து வருந்துகின்றானோ என்று ஏங்குவர். ஆனால் அஃதல்லவோ குருதேவர் காட்டிய வழி யென்று மனதைத் தேற்றிக் கொள்வர். கடிதத்தைக் கண்டதும் விவேகானந்தரை வெளிநாட்டுக்கனுப்ப தேவியார் மனம் இசையவில்லை. எந்தத் தாய் மகனை தூரதேசத்துக்கனுப்பச் சம்மதிப்பாள். இந்நிலையில் ஸ்ரீராமகிருஷ்ணர் அவர் முன் தோன்றித் தம் உள்ளக்குறிப்பை வெளியிட தேவியாரும் அதற்கிசைந்து விவேகானந்தர் மேனாடு போகவேண்டு மென்பது குருவின் ஆதேசம் என்று தெரிவித்தார். இந்நற்செய்தி கேட்டதும் ஸ்வாமிகள் "இனி யெனக்கொரு இடையூறு உண்டோ? நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நானோ அதற்கு நாயகமே" என்று கூறி ஆனந்தக் கூத்தாடினார்.

இவர் பரிவிராஜகராய் வெளிக்கிளம்பும் முன்னரும் அன்னையாரின் திருவடிகளிற் பணிந்து அனுமதி கேட்க, அவர் "நீ வெளிப்போகுமுன் உன் தாயாரைக் காணவேண்டாமோ?" என்றனர். ஸ்வாமிகள் "நீரே தாயார்; நீரே தெய்வம்" எனக் கூறிவணங்க, அவர் மனோ நிலையை மெச்சி தேவியார் ஆசிகூறி விடையளித்தனர்.

இவ்வாறே எல்லோரிடத்தும் ஸ்ரீசாரதா தேவியார் அன்னைபோல வருண்மிகுத்து விளங்கினர். எல்லோரும் அவருடைய புத்ரர்கள். உலகுக்கெல்லாம் அவர் ஒருதாய்: ஜகன்மாதாவின் அவதாரமாகவன்றோ எமதையன் தேவியாரைக் கண்டார்.

தேவியார் திருவவதாரத்தின் கருத்து முடிவு பெற, சென்ற ரௌத்திரி வருஷம் ஆடிமாதம் 6௳ பரமபதம் அடைந்தனர். கடல்நீர் சூரிய வெப்பத்தால் ஆகாயத்தில் செல்வதால் பூமிக்கு ஓர் நஷ்டமு மேற்படுவதில்லை; ஏனெனில் அஃது மறுபடியும் அதிக இனிமையான மழையாய்ப் பொழிந்து பூமியையே யடைகிறதன்றோ? அதுபோலவே மஹான்கள் மானிட உருவை நீத்தாலும் அவர்களுடைய காருண்யம் இன்ப மழையாயிறங்கி பக்தர்களை என்றென்றும் காத்து நிற்கின்றது.

---

# வர்த்தமானக் குறிப்புகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவரில்லம், மயிலாப்பூர், சென்னை:— இம் மீ 8௳ அக்ஷய திருதியை ஸ்ரீமத் பிரம்மானந்த ஸ்வாமிகளின் முன்னிலையில், ஷை இல்லத்தின் கிருஹப்ரவேசம் நடைபெறும் இச்சிறந்த தருமத்திற்குப் பலவாற்றானும் உதவிபுரிந்த கனவான்களும், இல்லத்தின் வளர்ச்சியில் மகிழும் நண்பர்களும் திருவிழா தினத்தன்று கூடி, முகூர்த்தத்தைச் சிறப்பிப்பார்களென நம்புகிறோம்.

*
* *

சென்ற மீ நாம் தெரிவித்தபடி, ஸ்ரீமத் பிரம்மானந்த ஸ்வாமிகள் இம் மீ 13௳ (25-4-21) சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அவருடன் கல்கத்தா மடத்தைச் சார்ந்த ஸ்ரீமத் சிவானந்த ஸ்வாமிகளும் சில சந்நியாசிகளும் வந்தனர். இவர்கள் நம் தென்னாட்டில் இவ்வருஷம் முழுவதும் தங்கியிருப்பதாக உத்தேசித்திருக்கின்றனர்.

*
* *

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் தலைவரான ஸ்ரீமத் ஸர்வானந்தர் சமீபத்தில் கல்கத்தாவிற்குச் சென்றிருந்தபோது, தற்கால நிலைமையில் வேதாந்தக் கருத்துக்களின் முக்கியத்தை சில உபன்யாஸங்களில் வெகு சிறப்புடன் எடுத்துக் காட்டினார். ஷை உபன்யாஸங்கள் கல்கத்தா விவேகானந்த சங்கத்தின் ஆதரவின் கீழ் நடந்தன.

*
* *

ஸ்ரீமத் ஸ்வாமி விவேகானந்தர் அவ்வப்பொழுது எழுதிய கடிதங்கள் ஆங்கிலத்தில் வெளிவந்திருப்பது நண்பர்களுக்குத் தெரியும். அக்கடிதங்களை தமிழில் எளிய நடையில் மொழிபெயர்த்து சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர் இம் மீ பிரசுரம் செய்திருக்கின்றனர். ஸ்வாமிகளின் பிரசங்கங்களை வாசித்தவர்கள் அனைவரும் அவருடைய கடிதங்களையும் படித்தறியவேண்டுவது அவசியமாதலால், இப்புத்தகத்தை பக்தர்களது கவனத்திற்குக் கொண்டுவரலாயிற்று.

*
* *

ஓர் அறிவிப்பு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தர் முதலிய மஹான்களுடைய ஜீவிய சரித்ரத்தையும் அவர்களுடைய உபதேசமொழிகளையும் அறிந்து, அனுபவத்திற்குக் கொண்டுவர முயலும் சங்கங்கள் பல இத் தென்னாட்டிலுள்ளன. அச்சங்கங்களின் காரியதரிசிகள் மாதந்தோறும் தங்கள் சங்கத்தில் நடைபெறும் விஷயங்களைச் சுருக்கமாய்த் தமிழில் எழுதி அனுப்புவாராகில், அவற்றை நமது விஜயம் மூலமாக வெளிப்படுத்துவோம்.

துன்மதி௵ உத்தராயணம் வஸந்தருது சித்திரை௴
கிறிஸ்துசகம் 1921, ஏப்ரல்-மே௴ பசலி 1330.

| சித்திரை | ஏப்ரல் மே | வார | திதி | நட்சத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 13 | புத | பஞ்-7-23 | மிரு-35-8 | சித்ரவிஷு |
| 2 | 14 | வியா | ஷஷ்-2-16<br>ஸப்-54-12 | திரு-31-25 | சூன்யதிதி |
| 3 | 15 | வெ | அஷ்-50-37 | புன-27-28 | |
| 4 | 16 | சனி | நவ-44-33 | பூச-23-4 | ஸ்ரீராமநவமி |
| 5 | 17 | ஞா | தச-38-45 | ஆயி-19-23 | |
| 6 | 18 | திங் | ஏகா-33-22 | மக-15-43 | ஏகாதசி கரிநாள் |
| 7 | 19 | செவ் | துவா-28-35 | பூர-12-35 | துவாதசி; பிரதோஷம் |
| 8 | 20 | புத | திர-24-41 | உத்-10-8 | |
| 9 | 21 | வியா | சது-21-21 | ஹஸ்-8-32 | திதித்வயம் |
| 10 | 22 | வெ | பௌ-19-17 | சித்-7-56 | சித்ரா பௌர்ணமி |
| 11 | 23 | சனி | பிர-18-23 | சுவா-8-38 | |
| 12 | 24 | ஞாய | துதி-18-48 | விசா-10-31 | |
| 13 | 25 | திங் | திரு-20-27 | அநு-13-38 | |
| 14 | 26 | செவ் | சது-23-16 | கேட்-17-54 | |
| 15 | 27 | புத | பஞ்-27-9 | மூல-23-11 | |
| 16 | 28 | வியா | சஷ்-31-44 | பூரா-29-10 | |
| 17 | 29 | வெ | சப்-36-41 | உத்ரா-35-33 | |
| 18 | 30 | சனி | அஷ்-41-38 | திரு-41-56 | |
| 19 | 1 | ஞா | நவ-46-13 | அவி-47-58 | |
| 20 | 2 | திங் | தச-50-5 | சத-53-18 | |
| 21 | 3 | செவ் | ஏகா-52-55 | பூர-57-38 | ஏகாதசி |
| 22 | 4 | புத | துவா-54-38 | உத்-60-0 | துவாதசி |
| 23 | 5 | வியா | திர-55-3 | உத்-0-49 | பிரதோஷம் |
| 24 | 6 | வெ | சது-54-7 | ரோவ-2-14 | அக்னிநக்ஷத்திரஆரம்பம் |
| 25 | 7 | சனி | அமா-52-1 | அசு-3-24 | அமாவாசை |
| 26 | 8 | ஞா | பிர-48-50 | பர-2-56 | |
| 27 | 9 | திங் | துதி-44-39 | கார்-1-25<br>ரோ-57-35 | கிருத்திகை<br>பரசுராமஜயந்தி |
| 28 | 10 | செவ் | திரு-39-47 | மிரு-55-50 | அக்ஷயதிருதியை |
| 29 | 11 | புத | சது-34-22 | திரு-52-12 | |
| 30 | 12 | வியா | பஞ்-28-33 | புன-48-12 | ஸ்ரீசங்கரஜயந்தி |
| 31 | 13 | வெ | ஷஷ்-22-30 | பூச-45-29 | விருஷபரவி-52-18 |

| | | | |
|---|---|---|---|
| 4 | ரவி-செ<br>சுக்-கே | | |
| | 11-மேஷ-புத<br>13-ரிஷப-செ<br>27-ரிஷ-புத | | குரு<br>சனி |
| | | ரா | |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1.] துன்மதி௵ வைகாசி௴ [பகுதி 5.

உ

## கடவுள் வணக்கம்.

ஆதியாதி யாகிநீ ஓரண்டமாதி யாதலால்
சோதியாத சோதிநீ அதுண்மையில் விளங்கினாய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி ஆயனாய மாயமென்ன மாயமே.

*
* *

சொல்லினால் தொடர்ச்சிநீ சொலப்படும் பொருளுநீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதிநீ
சொல்லினால் படைக்கநீ படைக்கவந்த தோற்றினார்
சொல்லினால் சுருங்கநின் குணங்கள் சொல்லவல்லரே?

உலகுதன்னை நீ படைத்தி உள்ளொடுக்கி வைத்துமீண்டு
உலகுதன்னுளே பிறத்தி ஓரிடத்தை யல்லையால்
உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
உலகில்நின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே?

ஆணினோடு பெண்ணுமாகி அல்லவோடு நல்லவாய்
ஊணொடோசை யூறுமாகி ஒன்றலாத மாயையாய்ப்
பூணிபேணு மாயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்க்
காணிபேணு மாணியாய்க் கரந்து சென்றகள்வனே.

*
* *

பச்சைமாமலை போல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## அத்தியாயம்—4.

சாயுங்காலம் ஸமீபித்து, பக்தர்கள் ஒவ்வொருவராக பகவானிடம் விடை பெற்றுச் சென்றனர். நரேந்திரனும் விடைபெற்றுச் சென்றான்.

ஸந்தியாகாலம் ஆய்விட்டது. ஆலயத்தில் வேலைக்காரர்கள் விளக்குகள் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். காளி கோவில் அர்ச்சகனும் விஷ்ணுகோவில் அர்ச்சகனும், தங்கள் சரீரமும் ஆத்மாவும் சுத்தமாகும்படியாக புண்ணிய கங்கையில் இடுப்பளவு ஜலத்தில் நின்று கொண்டு மந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஸாயுங்கால தீபாராதனை முதலானவைகள் செய்வதற்காக அந்தந்த ஆலயத்திற்குச் சீக்கிரம் போவார்கள். தக்ஷிணேசுவரத்திலிருக்கும் வாலிபர்கள் தங்கள் நண்பர்களுடன் தோட்டத்திலுலாவுவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் கையில் தடிகளுடன் மதிலைச்சுற்றி உலாவிக்கொண்டும், நறுமணமலர்களினின்று வரும் இனிமையான காற்றை வாங்கிக்கொண்டுமிருக்கிறார்கள். மெதுவாக அலைத்து வேகமாகப் பாய்ந்து செல்லும் ஆவணி மாதத்திய கங்கையை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களிலும் ஆழ்ந்த யோசனையுள்ள சிலரைப் புண்ணிய விருக்ஷமாகிய பஞ்சவடிக் கருகில் தனிமையாக உலாவிக் கொண்டிருக்கக் காணலாம். ஸ்ரீராமகிருஷ்ணரும் மேற்குத் தாழ்வாரத்திலிருந்து சிலசமயம் கங்காநதியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஸந்தியாகாலம். அப்பெரிய ஆலயத்தின் தீபங்கள் யாவும் ஏற்றப்பட்டன. வயது சென்ற வேலைக்காரி வந்து ஸ்ரீராமகிருஷ்ணருடைய அறையில் விளக்கேற்றி சாம்பிராணியும் கொளுத்திவைத்தாள். உடனே பன்னிரண்டு சிவாலயங்களிலும் தீபாராதனை ஆரம்பித்தது. பின்பு அம்பாள் கோவிலிலும் விஷ்ணு கோவிலிலும் ஆரம்பித்தது. சாலரி, மணி ஜாலரு முதலானவைகள் ஒன்று சேர்ந்து ஒலிக்க, இனிமையாகவும் கம்பீரமாகவும் வரும் சப்தமானது, கங்கா நதியின் சலசலப்புடன் எதிரொலித்தது.

அன்று பௌர்ணமியான மறுநாளாகையினால் இரவில் சற்று நேரத்திற்கெல்லாம் சந்திரன் உதயமாயிற்று. விசாலமான தோட்டத்து மரங்களின் உச்சிகளும், கோவில் தோட்டமும் அவ்வினிய சந்திரகிரணங்களால் மூடப்பட்டுப் பிரகாசித்தன. சந்திரனுடைய திவ்விய கிரணங்களின் ஸ்பர்சத்தினால் கங்கா நதியின் ஜலமானது வெள்ளிபோல் பிரகாசித்துக்கொண்டு துள்ளி ஆடிச்சென்றது.

சந்தியாகாலமானதும் பகவான் ஜகன்மாதாவை நமஸ்கரித்தார். அவர் கைகளைத் தாளம் போட்டுக்கொண்டு கடவுளுடைய திருநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அவரது அறையில் பகவானுடைய அவதாரங்களின் படமும் மஹாத்மாக்களின் படங்களும் இருந்தன. அவ்விடத்தில் பக்தர்களுடன் பகவானைப்பாடி ஸ்தோத்திரம் செய்யும் கௌரங்க தேவர்படமும் யசோதையுடன் பாலகிருஷ்ணன், ஸரஸ்வதி, காளிதேவி, துருவன், பிரஹ்லாதன், ஸ்ரீராமபட்டாபிஷேகம், ஸ்ரீராதாகிருஷ்ணன் முதலான படங்களுமிருந்தன. அவர் ஒவ்வொரு படத்திற்கும் முன் சென்று அவ்வவற்றிற் காட்டிருக்கும் அவதாரத்தின் பெயரைச் சொல்லி நமஸ்கரித்தார். எல்லாவற்றினும் ஐக்கிய பாவத்தைக் காண்பிக்கும் தனது பிரியவாக்கியங்களைச் சொல்லுகிறார்:—



பிரம்மம்-ஆத்மா-பகவான். (இம்மூன்றும் ஒன்றே.)

பாகவத-பக்த-பகவான் (மூன்றும் ஒன்றே.)

பிரம்மம்சக்தி, சக்தி பிரம்மம். (பிரம்மமும் சக்தியும் ஒன்று.)

வேத, புராண, தந்திரம். (இவற்றின் கருத்தும் ஒன்றே.)

கீதா, காயத்ரீ.

சரணாகத, சரணாகத.

நாஹம், நாஹம். தூஹு, தூஹு. (நானன்று, நானன்று. எல்லாம் நீயே.)

அமியந்திரா, தூமியந்திரீ. (நான் யந்திரம். நீ யந்திரத்தை ஆட்டுகிறவன்.)

இவ்விதமாக ஸ்தோத்திரம் செய்த பிறகு, அவர்கட்டின கைகளுடன் ஜகன்மாதாவைத் தியானம் செய்கிறார்.

பக்தர்களிற் சிலர் தோட்டத்தில் ஸாயங்கால வேளையில் உலாவிவிட்டு, ஆலயத்தில் தீபாராதனையானதும் ஒவ்வொருவராக பகவானுடைய அறைக்கு வந்தனர். பகவான் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறார். ம., அதர், கிஷோரி முதலியவர்கள் கீழே தரையில் பகவானுக்கெதிராக உட்கார்ந்தார்கள்.

பகவான்:—நரேந்திரன், பவநாத், ரக்கல் இவர்கள் நித்திய ஸித்தர்கள். அவர்களுக்கு அப்பியாஸம் வேண்டியதில்லை. அவர்கள் இப்பொழுது செய்து கொண்டு வரும் அப்பியாஸமே வேண்டியதற்கு அதிகம். நரேந்திரனுக்கு எவரும் லக்ஷியமில்லை. அன்றைக்கு அவன் என்னுடன் காப்டெனுடைய வண்டியில் வந்தான். காப்டென் அவனை பூஜ்ய ஸ்தானத்திலிருக்கச் சொல்லிக் கேட்டபொழுது அவன் அதை கவனிக்கவில்லை. மேலும் ஜனங்களுக்கு எதிரில் நான் அவனைப்பற்றி சிலாகிக்காமலிருக்கவேண்டி, அவன் தனக்கு யாதாகிலும் தெரியுமென்பதை எப்பொழுதும் என்னிடம் காண்பிக்கிறதில்லை. அவனிடம் மாயாபந்தம் கிடையாது. அவன் எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபட்டவன்போல் காணப்படுகிறான். அவன் எல்லா விதத்திலும் விநயமாக நடந்துகொள்ளுகிறான். எழுத்துப் படிப்பு, பாட்டு, ஸங்கீத வாத்தியப்பயிற்சி முதலிய அநேக அரியகுணங்கள் அவனொருவனிடமே சேர்ந்து அமைந்திருக்கின்றன. இத்துடன் அவனுக்குத் தன்னிந்திரியங்களை அடக்கத்தெரியும். தான் விவாஹம் செய்து கொள்வதில்லை யென்று சொல்லிவிட்டான். நரேந்திரனும் பவநாதனும் பரஸ்பர ஸம்பந்தமுடையவர்கள். நரேந்திரன் என்னிடம் அடிக்கடி வருவதில்லை. அது நல்லது தான். ஏனெனில் நானவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஸமாதியிலாழ்ந்து விடுகிறேன். யாது செய்வதென்று அறியேன்.

## பிரிவு. 7.

### 1884ஆ பகவான் ஸுரேந்திரனுடைய தோட்டத்தைப் பார்க்கப் போதல்.

## அத்தியாயம்—1.

### பகவான் சிஷ்யர்களுடன் ஆடலும் பாடலும்.

1884-ஆ ஜூன் மாதம் 15வதுக்குச் சரியான ஆனி (ஜேஷ்டா) மாஸம் கிருஷ்ண பக்ஷத்து ஷஷ்டி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீராமகிருஷ்ணர், கல்கத்தாவுக்கருகிலிருக்கும் கங்குர்கச்சியில், தனது மிகவும் அன்பார்ந்த கிருஹ

ஸ்த சிஷ்யருகிய ஸுரேந்திரனுடைய தோட்டத்தின் பங்களாவில் நடந்த ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இவ்விதம் அழைக்கும் சமயங்களெல்லாம், பகவானுடைய சிஷ்யர்களெல்லாரும் வந்து ஒன்று சேருவதற்குற்ற சமயங்கள். இவ்விருந்துகள், உண்மையாக, மிருதங்கம் முதலான வாத்தியங்களோடு பகவந்நாம சங்கீர்த்தனம் செய்யும் உத்ஸவங்கள். அச்சமயங்களிலெல்லாம் பகவான் ஆனந்தத்தினுல் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும், அடிக்கடி பிரம்மானந்தத்தினுல் மெய்ம்மறந்து ஸமாதியிலாழ்ந்து, தன்னுடைய உன்னதமான நிலைமையிலிருப்பார்.

இச்சமயம், பக்திரஸமான பாட்டும் அதினுல் வரும் மனேல்லாஸமும் அடங்கிய பிறகு, பகவான் லோகத்திற்கு ஆத்மஞானம் தரும்படியாகச் செய்யும் தனது அற்புத உபதேசங்களைச் செய்து, அதைக் கேட்கும்படியான அதிர்ஷ்டம் வாய்ந்தவர்களுக்கு என்றைக்கும் எப்பொழுதும் மறவாத ஆனந்தத்தை விளைவித்தார்.

அன்று, முதலில் சங்கீர்த்தனம் நடந்தது. அன்பின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன பதினேரு வயதில் மதுரைக்குச் சென்ற பொழுது, அவனையே நினைந்து வருந்திக்கொண்டிருக்கும் பிருந்தாவனத்து கோபஸதிரீகளின் பிரிவாற்ருமையைக் குறிக்கும் பாடல்களைப் பாடினுர்கள்.

பாடல்களின் மத்தியில் பகவான் அடிக்கடி அந்தர்முகப்பட்டு ஸமாதியடைந்தார்.

அவர்கள் பாடிக்கொண்டிருக்க, பகவான் திடீரென்று எழுந்து நின்று, "ஆ! என் ஸகி! என் அன்பன் கிருஷ்ணனை இங்கு அழைத்துக் கொண்டுவா; அல்லது, அவனிருக்குமிடமதற்கு என்னை அழைத்துச் செல்" என்ருர்.

பகவான் தன்னை மறந்து ராதையாக மாறினுர். தன்னையே ராதையாகப் பாவித்தார்.

இவ்விதம் சொல்லிக்கொண்டு பகவான் பேச்சிழந்து சலனமற்று, கண்கள் பாதிமூடினவைகளாய் மெய்ம்மறந்து நின்ருர். அவர் பிரக்ஞை வந்ததும், "ஆ! என் தோழி! நீ எனக்கு இவ்வுபகாரம் செய்; நானுனக்கு அடிமையாயிருப்பேன். என் அன்பனை நேசிக்கும்படியாகச் செய்ததும் நீயன்றே." என்று கேட்பவர்களுக்கு கண்ணீர் பெருகும்படியாக உரத்த குரலில் சொன்னுர்.

எல்லோரும் சேர்ந்து இன்னும் பாடுகிருர்கள். அந்தப்பாட்டில், "ஆ! நான் யமுனைக்கு ஜலமெடுக்கச் செல்லமாட்டேன். ஏனெனில், நான் கதம்ப விருக்ஷத்தடியருகில் செல்லும் பொழுது என் அன்பனுடைய நினைவு வருகிறது." என்று ராதை சொல்லுகிருள்.

இதைக் கேட்டதும் பகவான் பெருமூச்சு விட்டுக்கொண்டு 'அந்தோ, நான் என் செய்வேன்!' என்ருர். யாவரும் ஒன்று சேர்ந்து பகவந்நாமத்தைப் பாடவும், பகவான் மறுபடியும் எழுந்து நின்று ஸமாதியடைந்தார்.

அவர் பிரக்ஞையடைந்து, 'கிருஷ்ணு, கிருஷ்ணு' என்பதற்கு பதிலாக, 'கிஷ்டோ, கிஷ்டோ' என்று தழதழத்த குரலில் சொன்னுர். ஜயஜய ராதா, ஜயஜய கோவிந்தா' என்று பகவானுல் எடுத்துக் கொடுக்கப்பட்ட பாட்டுடன் சங்கீர்த்தனம் முடிந்தது. பகவான் தன்னைச் சுற்றிலும் வட்டமாக நின்று பாடும் சிஷ்யர்களுடன் நர்த்தனம் செய்கிருர்.



ஸங்கீர்த்தனம் கூடத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது பகவான் அதற்கருகிலிருக்கும் மேற்கு பக்கத்து அறைக்குச் சென்ருர்.

பகவான் சிஷ்யர்களிலொருவரான 'ம' (எம்) வைப்பார்த்து கோபிகைகளைப்பற்றிப் பேசுகிருர்:—"அவர்களுடைய அனுராகம் என்ன ஆச்சரியம்! தமாலவிருக்ஷத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் அன்பின் மிகுதியால் பித்துப் பிடித்துவிடுவார்கள்.'

சிஷ்யன்:—சைதன்ய தேவர்விஷயமும் அப்படித்தான். அவர் வனத்தைப் பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணனிருந்த பிருந்தாவனமே தன்னெதிரிலிருக்கிறதென்று நினைத்தார்.

பகவான்:—ஆ! இவ்வன்பு (பிரேமை) ஒருவனுக்கிருந்தால்! என்ன பக்தி! இந்த பக்தியானது அவர்களுக்கு முழுப்பங்கும், ஒரு ரூபா (16 அணு) மாத்திரமல்ல, அதற்கு மேலும் (ஐந்து அணு கூட) இருந்தது.

ஒருவனுக்கு ராதை, ஸ்ரீ கிருஷ்ணன் இவ்வவதாரங்களில் நம்பிக்கையிருந்தாலும் ஸரி, இல்லாவிட்டாலும் சரி. அப்படியே ஹிந்துக்களையும் கிறிஸ்தவர்களையும்போல் அவதாரத்தில் நம்பிக்கையில்லா விட்டாலும் ஸரி. ஈசுவரனிடத்தில் இவ்வித தீவிரமான அன்பு உண்டாகும்படியாக எல்லோரும் ஆசைப்பட வேண்டும்; அதொன்று தான் அவசியம்.

நீ பித்தனுயிருக்க வேண்டியானுல் இவ்வுலகப் பொருள்களுக்காகப் பித்தனுயிராதே. பகவான்மீதுள்ள அன்பினுல் மாத்திரம் பைத்தியம் பிடிக்கட்டும்.

இப்பொழுது பகவான் சிஷ்யர்கள் பின் தொடர்ந்துவரக் கூடத்துக்கு வந்து உட்கார்ந்தார்.

அவருக்காக திண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவர் அதைத்தொடுமுன் 'ஓம் தத்ஸத்' என்ருர். ஏனெனில், ஸாதாரண உலக விஷயத்தில் பிரவர்த்திக்கப்பட்டவர்களின் ஸ்பரிசத்தினுல் திண்டு அசுத்தமானது; பகவானே பரிசுத்தத்தின் ரூபமே.

நாழிகை ஆய்விட்டது. இன்னும் சாப்பாடு பரிமாறவில்லை. பகவான் குழந்தை போன்று சிறிது அவஸரமாயிருந்தார்.

ஸுரேந்திரன் தான் விருந்தளிப்பவன். அவன் ஸ்ரீராமகிருஷ்ணரது பிரிய சிஷ்யர்களிலொருவன்.

பகவான்:—ஸுரேந்திரனுடைய குணமானது வியக்கத்தக்க விதமாக மாக விருத்தியாயிருக்கிறது. அவன் பரமவெகுளி. எப்பொழுதும் உண்மை பேசுவதற்கு அஞ்சுவதில்லை. இதோடு உதார சீலன். அவனிடத்தில் உதவிக்கு வருபவர்கள் ஒன்றுமில்லாமல் சும்மா திரும்பி வருவதில்லை.

பகவான் (மவைப்பார்த்து):—நீ பகவான் தாஸ் இடம் போயிருந்தாயே, அவன் எப்பேர்ப்பட்டவன்?

— இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணரது சிஷ்யர்களி லொருவனுன வாலிபனுகிய நிரஞ்சனன் வந்தான். பகவான் ஸந்தோஷத்தினுல் எழுந்து நின்று, 'ஆ! வந்தாயா, இப்பொழுதாவது!' என்ருர்.

பகவான் (மவைப்பார்த்து):—இச்சிறுவன் மிகவும் கபடமற்றவன். ஒருவனுக்குக் கபடமற்ற தன்மையானது வாய்க்க முன் ஜன்மங்களில் எவ்வளவோ விசேஷமான தவம் செய்திருக்கவேண்டும்.

துளஸிதாஸரால் பாடப்பட்ட "ஆ! என் ஸகோதரனே! நீ கடவுளை கெட்டியாய் கடைப்பிடித்துக்கொள்" என்ற பேர்போன பாடலில், "சூது வஞ்சனைகளை அகற்று" என்று வருகிறது. கடவுளின் மனிதாவதாரங்களெல்லாவற்றிலும் இக்கபடமற்ற தன்மை நன்றாய் விளங்குகின்றதல்லவா? ஸ்ரீராமனது தந்தையான தசரதனையும் ஸ்ரீ கிருஷ்ணனது தந்தையான நந்தகோபனையும் பார். அவர்கள் முற்றிலும கபடமற்றவர்கள்.

பகவான் (நிரஞ்சனனைப் பார்த்து):—லௌகிக புத்தியுள்ளவர்களைப்போல் நீயும் உத்தியோகம் ஒப்புக்கொண்டு விட்டாய். ஆனால், நீ உன் தாயாருக்காக உழைக்கிறாய். இல்லாவிடில், "வெட்கமில்லை! கடவுள் ஒருவருக்கே நீ சேவை செய்யவேண்டும்" என்று சொல்லியிருப்பேன்.

பகவான் (மணிமல்லிகனைப் பார்த்து):—இச்சிறுவன் மிகவெகுளி; கபடமற்றவன்; ஆனால் இப்பொழுது கொஞ்சம் பொய் பேசுகிறான்; அவ்வளவுதான். அன்று என்னைப்பார்க்க வருவதாகச் சொன்னவன் வரவேயில்லை!

அதே சிஷ்யனைக் குறித்து பகவான் இன்னும் சொல்லுகிறார்:—அவன் முகத்தில் ஒருவித மாறுதல் உண்டாயிருக்கிறது. மாசு படர்ந்தாப்போலிருக்கிறது. இதெல்லாம் உத்தியோகத் தொந்திரவால் தான். எத்தனையோ கணக்கு வழக்குகள் பார்க்கவேண்டி யிருக்குமன்றோ!

பவநாதனென்ற மற்றொரு சிஷ்யன் 'ம—' உடன் பேசிக்கொண்டிருக்கிறான்.

பவநாதன் ('ம—'வினிடம்):—நீங்கள் பகவானிடத்திற்கு வெகு நாளாக வருவதில்லையே. அதைப்பற்றி பகவான் அன்று பேசிக்கொண்டிருந்தார். தன்மேல் உமக்கு அருசி உண்டாய் விட்டதோ வென்று என்னைக் கேட்டார்.

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் 'ம—' வைப்பார்த்து "ஆம், மெய்தான். நீயேன் வரவில்லை?" என்று தயவுடன் கேட்க, பாவம் 'ம—' பதில் சொல்லமுடியாமல், ஏதோ சாக்குகள் திக்கி முணுமுணுத்தார். அப்பொழுது மஹிமன் உள்ளே வந்தார்.

பகவான் (மஹிமனை நோக்கி):—இது எதிர் பாராததான அபூர்வ வரவே! எங்களது இச்சிறு நதியில் ஒரு படகுக்குமேல் நாங்கள் எதிர்பார்ப்பதில்லை. இதோ ஒரு கப்பலே வந்திருக்கிறது! ஆனால் இப்பொழுது மழைக்காலமாயிற்றே! (யாவரும் சிரிக்க.)

பிறகு சம்பாஷணை விருந்திடுதலின் பாரமார்த்திக (அத்தியாத்மிக) பாவத்தைபற்றித்திரும்பிற்று.

பகவான் (மஹிமனைப் பார்த்து):—விருந்தில் எதற்காக ஜனங்களுக்கு சாப்பாடுபோடுகிறது? ஸகல பிராணிகளிலும் அக்கினிமயமாக விருக்கும் பிரமத்திற்கு ஆகுதி செய்வதுபோலன்றோ! ஆனால் ஈசுவர பக்தியில்லாதவர்களுக்கும், தூர்த்தர்கள் முதலான பாபிகளுக்கும் விருந்தளித்தல் கூடாது. அவர்களுடைய பாபங்கள், அவர்கள் இருந்துண்ணும் தரையை அனேக முழ ஆழம் அசுத்தமாக்கிவிடுகின்றன.

ஒரு சமயம், ஹ்ருதயன் ஒருவிருந்து செய்தான், அதில் அழைக்கப்பட்டவர்களில அநேகர் பாபிகள். நான் ஹ்ருதயனைப் பார்த்து "இதோ பார்; நீ இப்பாபிகளுக்கு அன்னமிட்டால் நான் வீட்டை விட்டு உடனே போய் விடுவேன்" என்றேன்.

பகவான் மஹிமனைப் பார்த்து.—நீ முன்னால் அடிக்கடி விருந்து கொடுப்பதுண்டென்று யாரோ சொல்லக்கேட்டேன். உன் வீட்டுச் செலவு முதலியன இப்பொழுது அதிகப்பட்டிருக்கவேண்டும்.

# அஜாமீளன் கதை.

கன்யாகுப்ஜ மென்னுமோர் நகரத்தில் அஜாமீளனென்றோர் பிராஹ்மணனிருந்தான். அவன் மிகவும் நிர்ப்பாக்கியனும், ஹீன விருத்தியை யுடையவனும், மஹா பாதகனுமிருந்தான். ஸதாசாரமென்பதின் லேசமுமறியாதவனாய்ச் சூது, வாது, களவு முதலியவற்றிற்றன் னுயுளைச் செலுத்தித் தன் துன்மார்க்கத்தி லளவிலாதவானந்தத்தை யடைந்து, பாதிவிரத்தியத்திலும், ஸௌந்தரியத்திலு மிணையற்ற தன்னுத்தமப் பத்தினியைத்தள்ளி யொரு நீசஸ்திரீயை ஸ்வீகரித்தவளிட மத்தியந்த பிரேமையைச் செலுத்தி வந்தான். இவர்களிருவருக்குங் காலக்கிரமத்திற் பதின்மர் புத்திரருதித்தனர். அஜாமீளன் றன்னருமைக்காதலியின் மோஹவலையிற் சிக்கி யாசைதீர வவளுடன் சுகமனுபவித்து மவளாற்றான் பெற்ற குமாரரை மிகவும் லாலனை செய்தும், வெகுநாள், பதிதனாய்க் காலங் கழித்துவர, அவனுக்கு வார்த்தக்கியம் வந்துவிட்டது. வயதெண்பத்தெட்டாயிற்று. தலைமயிர் நரைத்தது; அங்கங்களெல்லாந் தளர்ந்தன. இந்திரியங்களின் வலி வொழிந்தது. தலை நடுக்கவாரம்பித்தது. கண்களின் பார்வை மங்கியது. பற்கள் விழுந்தன; கபம், இருமல் முதலிய வியாதிகள் உண்டாயின. சிரம் வலிக்கலுற்றது; மனமுஞ் சிதறியது.

இவ்விதம் முதிமையினால் மிக வருந்தியு மிப்பிராஹ்மணனுக்கு நாராயணனென்னுந் தன்னிளங்குமரனிடத்தில் மாத்திரம் அன்பு கரையின்றிப் பெருகி வந்தது. அச்சிறுவனது இனிய மொழிகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவனது போஜன சயனக்கிரீடா காலங்களிலு மவனைச் சற்றேனும் பிரியாமலதிஜடனாய்த் தனக்கந்திய காலஞ் சித்தியதெனக் கூடவறிந்தானல்லன். அவனது புத்திர வாத்ஸல்ய மிப்பொழுது முன்னிலும் பதின்மடங்கதிக மாயிற்று. தன் குமாரனான நாராயணனை ஸதாகாலமும் தியானித்தவனாகையா லவனாத்மா 'நாராயணா நாராயணா'வென இடைவிடாது பிரலாபிக்கத் தொடங்கியது.

இச்சமயத்திற் சில யமபடர்கள் தங்களது கோரரூபத்துடனிவன் கண் முன் தோன்றினர். விகாரமான முகமும் செம்பட்டை பாய்ந்த கேசமும், மிகக் கருத்த பற்களும், கோபத்தினாற்சிவந்த கண்களும் பொருந்திய அவரது பயங்க ராகாரத்தைக் கண்டமாத்திரத்தில் அஜாமீளன் நடுநடுங்கி யொன்றுந் தெரியாம லொருக்

கணந் தயங்கிக் கொஞ்ச தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த தன் புத்திரன் ஞாபகம் வரவே யவனை யதிஸம்பிரமத்துடன் 'நாராயணா நாராயணா'வென்று கூவி யழைத்தான்.

மரணகாலத்தி லிவன் நாராயண ஸ்மரணஞ் செய்யவே, இதைக் கேட்ட பரமபுருஷராம் பகவானது திருத்தொண்டர்களிற் சிலர் சரேலென்றோடியப் பிராஹ்மணனைப் பாசத்தாற் கட்டியிழுக்குங் கால தூதர்களை யதட்டி யடித்துத் தூரத்தி யவனை யாட்கொண்ட பின்னர்த் தங்கள் பிரயத்தனம் வீணாயதினாற் கோபங்கொண்டு யம படர்கள் விஷ்ணு தூதர்களைப் பார்த்துச் சில வாக்கியங்கள் பேச லுற்றார்.

"ஓ புருஷ சிரேஷ்டர்களே! இந்த மஹா பாபியை யெங்கள் தர்மத்தை யனுஸரித்து நாங்கள் யமபுரத்துக்குக் கொண்டு போக விடாக்க நீங்களேன் அவனை யெங்கள் கையினின்றும் மீட்டுக் காப்பாற்ற யத்தனிக்கிறீர்கள்? இவ்விதமான அதர்மமும் நீங்கள் செய்யத் தகுதியுண்டோ? சொல்லும். ஒருக்காலிவனது விருத்தாந்தமுமக்குத் தெரியாது போலும்; சொல்லுகிறோம். சற்றுச் செவி கொடுத்துக் கேளுங்கள்.

"இவன், பூர்வ ஜன்ம சுகிருதத்தினா லொரு பிராஹ்மணனாய்ப் பிறந்து ஸத்கர்மபரனாய்ச் சாந்தியும் ஆத்மவிசாரமும் படைத்து மிகவும் தர்மிஷ்டனாய் வேதம் வேதாந்தம் முதலியவற்றின் ஸாரத்தை முற்றிலுங் கிரகித்துப் பெற்றோர், பெரியோர், குரு அதிதிகள் இவர்களை யடுத்தவர்க்கதி பக்தியுடன் சுச்ருஷை செய்து வந்தான். மேலும் ஸர்வ பூதங்களினிடத்தும் ஸமபுத்தியை யுடையவனாய் அநேக மந்திர ஸித்திகளைப் பெற்று, ஸத்தியம் பேசுதல் என்பதை யொரு நியமமாய்க் கொண்டு, நித்திய நைமித்திகாதி கர்மங்களை யதாவிதி செய்து, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியம் ஆகிய துர்க்குணங்களை யொழித்து மேலான நற்குணங்களுக் கோரில்லமா யெக்காலத்திலும் ஸதாசார மனுஷ்டித்து, ஒப்பில்லா ஞான ஸித்தியடையுந் தருவாயில், இவனுக்கு யௌவன காலம் ஸம்பிராப்தமாயிற்று.

"யௌவனப்பருவந் தோன்றலும், அதற்குரிய வநேக துர்க்குணங்களு மவனிட மதி சீக்கிரத்திற் றென்பட்டன. காமமே யழியாதவனுக்குக் காம விகாரமதிகமாயுண்டாயிற்று. எல்லோரிடத்தும் மிதுகாறும் பிரேமையும் வினயமும் வகித்து வந்த இவனுள்ளத்தி லிப்போது யௌவன மதமும் கர்வமு மங்குரித்துச் சாகவிருத்தி யுற்றன. இதற்கனுகுணமாய் வஸந்தகாலமும் ஸர்வஜன மனோஹரமாய் ஸகலவன பாதபங்களை யலங்கரித்து நின்றது.



"இப்படியிருக்க, ஒருநாள் அஜாமீளன் தன் பிதாவின் ஆக்ஞானுஸாரமாய் வனத்திற்குச் சென்று தர்ப்பை, ஸமித்து, புஷ்பம், பழம் முதலியவற்றைச் சேகரித்து வீட்டுக்குத் திரும்பும் போது மார்க்கத்தி லொரு போகஸ்திரீயான தாஸியுடன் கலந்து கிரீடித்துக் கொண்டிருந்த ஓர் காமுகனைக் கண்டான். அது முதல் அந்த ஸ்திரீயினிடம் மோஹங்கொண்டு தனக்கு ஸஹஜமான கர்மங்கள், வேத சாஸ்திராத்தியயனம், ஸாது லக்ஷணம், ஸாத்விக குணம் முதலியயாவுந் துறந்து, தன் குலாசார வர்த்தனங்களை நீக்கித் தன் பிதுரார்ஜித தனத்தை யவள்பாற் சேர்த்துச் சௌந்தரிய மூர்த்தியும் பரம ஸாத்விகியுமான தன் மனையாளை விட்டு பந்துக்கள், அநாதைகள், ஸாதுக்கள் இவர்களை ஹிம்ஸித்து வழி மறித்துக் கொள்ளை யடித்த தனத்தை யந்த தாஸிக்குக் கொடுத்து, அவள் கிருபையை யெதிர்பார்த்து அவளிடம் அபாரமான பிரேமையைச் செலுத்திக் காலங்கழித்து வந்தான். இவ்வாறு வெகு காலமாயந்தத் தாஸியையுமவள் புத்திரரையு மதிவாத்ஸல்லியத் துடனுண்டு மஹாபாபங்களைச் செய்துவரும் இக்கொடிய துஷ்டனைக் காலதண்டத்திற் கர்ப்பணஞ் செய்வதே யெவர்க்குங் கடமை" என்று யமதூதர்கள் சொல்லலும் அவர்களை நோக்கி விஷ்ணு தூதர்கள் மிகவும் வினயமாய்ப் பேசலுற்றார்.

"ஆஹா! உங்கள் தர்ம மெவ்வளவு விலக்கத் தக்கது. ஏனெனில் தண்டிக்கத் தகாதவர்களைத் தண்டனைக்குள்ளாக்குகிறீர்கள். நீங்களும் தர்ம தேவதையின் தொண்டர்கள். இப்பூலோகத் தமன் கோடிக்கணக்கான ஜன்மங்களெடுத்துத் தன் பாபஸங்கங்களை யெல்லா மனுபவித்தவற்றைத் தவிர்த்து மிகவும் பிரசஸ்தமான மதியையுடையவனாய் மரண காலத்தில் எவர்க்குங் கிட்டாத ஸ்ரீ ஹரியின் புண்ணிய நாமகீர்த்தனத்தினா லதிசுத்தனாகிக் கைவல்ய முத்திக்கு நாதனாக நிற்கின்றான். பகவானது திருநாம மஹிமையை யறியீர்போலும். பிராஹ்மஹத்தி, குருபத்னீகமனம் முதலிய பஞ்சமஹா பாபங்களையு மொரு நொடியிற் போக்கி ஸதாகாலமும் யோக நிலையில் நின்று ஸமாதியிலழுந்தியிருக்கும் பிராஹ்மாதி தேவருக்குமரிதான நிர்வாண ஸாம்ராஜ்ய போகபாக்கியங்களையு மெளிதில் சேர்ப்பிக்கவல்லதும் வெகு காலஞ்செய்த தவத்தின் பலனையன்றி யுதிக்காததும், ஸர்வ பயங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியவோர் ரக்ஷையாயுமுள்ள கர்த்தனின் திருநாமத்தை யாசிரயித்த விவனுக்குச் சமானமானவரு முலகிலுண்டோ? புத்திரன் மூலியமாயன்றியிவன் மனமீச்வரனைப் பெயர்கொண்டதன்றென வொருக்காற் சொல்லுவீர். அது ஸத்தியம். ஆகிலும் தன் குழந்தைக்குப் பகவானது பெயரை வைத்துக் கூப்பிட்டாகிலும், மிக

வும் சிரமமடைந்தவர் நாமத்தைப் புத்தி பூர்வகமாய் நினைத்தாகிலும். அல்லது அவரைக் கேலி செய்ய வெண்ணியவர் பெயரை ஸ்மரித்தாகிலும், இது முதலான வெந்தபாவத் தோடவர் பெயரைக் கொண்டாலும் நமது பாபங்கள் எல்லாம் நீங்கி நாம் ஐஹிகாமுஷ்டிககங்களுக்குப் பாத்திராகிறோ மென்பதிற் கிஞ்சித்தேனுமையமில்லை. சரீர அசௌக்கியமாயினும் மனோதுக்கமாயினும் ஒருவனைப் பிடிக்குங்கால் அவன் 'ஓ பரமபுருஷா! ஆபத்பந்தோ! அநாதரக்ஷகா! எனக்கூவி யழைக்கிலவ னுபத்திரவம் அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாய்விடும். ஓர் வியாதியை ஸ்வஸ்தஞ் செய்யவல்ல வீரியமுள்ளவோர் மருந்தை ஒருவன் உபயோகிக்குங்கால், அதையவன் புத்தி பூர்வகமாயோ அல்லது அபுத்தி பூர்வகமாயோ எப்படியாயினும் உட்கொண்டாலவன் வியாதி யவசியம் நீங்குவதுபோற் பகவானின் திருநாமத்தை நாம் எவ்விதப் புத்தி நிலையிற் கொண்டாலும் அதின் குணம் நமக்குடனே சித்தமாயுண்டாகிறது. மேலும் பூர்வஜன்ம சுகிருதத்தினாலன்றி யெவருக்கும் அந்தியகாலத்திற் பகவானது பிரசஸ்தமான நாம ஸ்மரணமுண்டாகமாட்டாது. ஆகையா லிப்பூஜ்யனான பூஸுரோத்தமனைத் துன்புறுத்துபவர் அதர்ம தேவதைகளன்றி நியாயகர்த்தர்களான தர்ம தூதர்களல்ல." என்று சொல்லி, அவர்களைத் திருப்பி, அதிகோரமான காலபாசபந்தத்தினாலுண்டான பயத்தினின்றும் அப்பிராஹ்மணனை ரக்ஷித்து நின்றார்கள். அஜாமிளன் மிகவும் ஆனந்தத்துடன் கை கூப்பி யத்திவ்விய புருஷர்களுக்குப் பிரணாமஞ் செய்து நிற்க வவர்களும் அந்தர்த்தியானமாயினர்.

இதுகாறும் விஷ்ணுதூதர்களுக்கும் யமதூதர்களுக்கும் நடந்த பக்த தர்மத்தை முற்றிலும் செவி கொடுத்துக் கேட்டவனாதலின் அவனுக்குடனே ஸ்ரீ நாராயண பதபக்தி யுண்டாகியது. தன் பூர்விக பாபகிருத்தியங்களை நினைத்து மிகவும் பச்சாத்தாபப்பட்டு மனமுருகி மஹாபாபியான தன்னைக் காப்பாற்றி யாட்கொண்ட கருணைக் கடலான பகவானை நோக்கி யஞ்சலிசெய்து தலைவணங்கித் தேகமெங்கும் மயிர்க் கூச்செறியவும், கண்களிலானந்த பாஷ்பஞ் சொரியவும், ஸந்தோஷமும் ஸந்தாபமும் ஒன்று சேர்ந்ததினுண்டான கத்கதஸ்வரத்தோடு அவரைத் தோத்திரித்துத் தேகந்தெரியாமலொரு முகூர்த்தகாலம் பக்தியின் திருமூர்த்தியோவென நின்றார்.

இப்படி. மஹாபாவஸமாதியிற் கொஞ்சகாலமிருந்து தனக்குச் சரீரப் பிரக்ஞை வந்தது மவ்வேதியர்கோன் ஸ்ருஷ்டி. தத்வத்தையும் பகவத் பக்தியின் மஹிமையையு மறிந்தவராய்த் தன் பந்தங்களெல்லாவற்றையுந் துலைத்துக்கங்காதீரஞ் சென்றங்கோர் தேவாலயஞ் சேர்ந்து அவ்விடத்தில் யோகத்திலமர்ந்து அதின் மூலமாய்த் தேஹத்தை விட்டுப் புண்ணிய சரீரம் பெற்றுத் தன்னை முன்னாட் கொண்டருளிய பகவத் பாரிஷதர்களைக் கண்டு அவர்களை யதிப்ரேமையுடனேத்தியவருடன், கபிலர், நாரதர், பீஷ்மர், மனு, பலி, விதேஹர், பிரஹ்லாதர், சுகர், வியாஸர், இவரல்லாதவர்க்கு மிகவுமரியதான பகவத் ஸான்னித்தியத்தையடைந்து, அவர் திருத்தொண்டர்களிலொருவராய் விளங்கினர்.

உ

# குருகுல வாசம்

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் இம்மையில் சுகமும் மறுமையில் அழியா இன்பமும் அடைய விரும்புகின்றனர். அவர்கள் மேற்கூறிய இரண்டையும் பெறுவதற்குத் தகுந்தவர்களாகத் தம்மைச் செய்து கொள்ள வேண்டியது அவசியம். நல்வாழ்க்கையைக் கைப்பற்றுவதினாலும் நற்சிந்தையிலாழ்ந் திருப்பதாலுமே அவர்கள் தகுந்தவர்களாகக் கூடுமாதலால் அவர்கள் குணமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

ஹிந்துமதக் கொள்கைப்படி, பிறப்பெடுக்கும் ஒவ்வொருவனும், பூர்வ ஜன்ம கர்மங்களின் வாசனையால் ஓர் வழியால் செலுத்தப்படுகிறானாயினும், அவன் தன் புத்தி விசேஷத்தால், மேலெழுச்சிக்கு விரோதமாக நிற்கும் வாசனைகளையும் மீறிச்செல்ல முடியும். அப்படி மீறிச் செல்வதற்கு அறிவும் ஸத்ஸங்கமும் அவசியம். அறிவினால் தன் உண்மை நிலையை உணரமுடியும்; ஸத்ஸங்கத்தினால், ஒருவன் பூர்வ வாசனையால் கெட்ட வழிகளில் தூண்டப்பட்டபோதிலும், அவைகளை எதிர்த்துச் செல்ல முடியும். அறிவு பரவுதற்கு இக்காலத்தில் கல்விச்சாலைகள் உதவியாயிருப்பினும் அவை பலவழிகளில் குறைகளுள்ளவை என்பது வெளிப்படை. அச்சாலைகளில் பெறப்படும் ஞானமும் இகத்தில் சுகம்பெறும் வழிகளைக் கூறுகின்றனவே யன்றி பரமசுகத்தைக் கொஞ்சமேனும் கூறுவதில்லை. ஆகையால் அக்கல்வி எத்தகையதென்றும், எவ்விதம் போதிக்கப்பட வேண்டுமென்றும் இங்கு கூறுவோம்.

நம் நாட்டிற்குக் கல்வி அவசியமே. அஃது பரவியபோதே நாடு க்ஷேமமடையும்; க்ஷாமமும் குறையும். ஆனால் முற்காலத்தில் நாம் சாஸ்திரங்களைக் கற்றுவந்தது தற்காலம் போதாது. அவை பெரும்பாலும் பரத்தைப்பற்றியே கூறிவந்தன. அதனால் நாட்டில் ஞானிகள் பலர் தோன்றியிடினும், இகத்திற்கு வேண்டியவைகள் மிகக் குறைந்தன. இதனால் நம் தேசம் மற்ற தேசங்களுக்கு வெளி விஷயங்களில் ஈடுகொடுக்க முடியாது போயிற்று. இக்குறையை நீக்க, பல தொழிற்சாலைகளும், கலாசாலைகளும் ஏற்பட்டது நாமனைவரும் மகிழத்தக்க விஷயமே. ஆனால், இந்த அவசரத்தில் நமது பூர்விக அளவிடற்கரிய ஆனந்தச் செல்வமாகிய ஆத்ம

ஞானம் எங்கு மறைந்து போகின்றதோ என்பதுதான் அறிஞர்களுடைய பயம்.

பூர்விகக் கல்வியையும் இக்காலத்துக் கல்வியையும் கவனிப்போர், தற்காலக் கல்வியைக் கண்டு பயப்படுவதற்கு மற்றொரு காரணமுண்டு. அஃது ஆசிரியர்களைப் பற்றியது. இக்காலத்து ஆசிரியர்கள் மேல்நாட்டு விஷயங்களில் ஞானம் நிறைந்தவர்களே தவிர, பெரும்பாலர் தம் தாய் நாட்டின் இலக்கண இலக்கியங்களை அறிந்தவர்களல்லர். மேலும் ஆசிரியர்கள் எவ்வளவுதான் சிறந்தவர்களா யிருப்பினும்—நம்மவர்கள் பூர்விக ரிஷிகளின் சந்ததியாராதலால், அந்தரிஷிகளினுடைய சூக்ஷ்மதர்சன சக்தியை ஓர் அளவேனும் அடைந்திருப்பார்க ளல்லவா?—அவர்கள் தம் சிஷ்யர்களுடன் கலந்து பழகுவதில்லை.

இதுவே இக்காலத்துக் கல்வி முறையிலுள்ள பெருங்குறை. தற்கால முறைப்படி, ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட வேளைகளில், சிறுவர்கள் கல்விச்சாலையில் ஓர் வகுப்பில் உட்கார, ஆசிரியர் வந்து மற்றோர் ஆசனத்தில் உட்கார்ந்து, தாம் அறிந்தவற்றைப் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கின்றார். குறிப்பிட்ட நேரமானதும், பிள்ளைகள் வேறு ஆசிரியரிடம் செல்கின்றனர். அல்லது பிள்ளைகள் இருக்குமிடத்திற்கு மற்றொரு ஆசிரியர் வருகின்றனர். கடைசி மணியடித்ததும் பிள்ளைகள் தம் மில்லங்களுக்குச் செல்கின்றனர். ஆசிரியர்களும் தம்மில்லங்களுக்குச் செல்கின்றனர். உபாத்தியாயர்கள் கற்றுக்கொடுத்தவைகளை மாணவர்கள் சிரமப்பட்டு வாசித்து, பரீக்ஷைகளில் எழுதி, தேறி உத்யோகஞ் செய்து வருகின்றனர்.

இஃதென்ன விந்தை! அறிவைப் பெறுவது இவ்வழியிலோ? பரீக்ஷைகள் தேறிவிட்டால் கல்வி கற்றதுபோலாகுமோ? உண்மையறிவு எங்ஙனம் விருத்தியாகும்? கல்வி யென்பது மனிதனுக்கு ஈசுவரனது தேஜோமயத்தின் வைபவத்தையும் தன் உயர் நிலையையும் உணர்த்தவேண்டு மன்றோ? பெரியோரிடம் பழகுவதனால், நன்னடத்தை நற்பேச்சு, நற்சிந்தை முதலியவைகள் ஏற்படவேண்டுமன்றோ? ஞானக்களஞ்சியமாகிய குரு, தன்னை யணுகும் சிஷ்யன் ஒவ்வொருவனுக்கும் இகபர வாழ்க்கையின் உண்மைகளைத் தெரிவிக்க வேண்டுமன்றோ? இஃது இக்காலத்தி லெங்குண்டு?

கலாசாலையில் வாசிக்கும் ஒவ்வொருவனும் நற்குணம் நிறைந்தவனாகவிருக்க வேண்டும் என்பதை இக்காலத்துக் கலாசாலை யதிகாரிகள் ஒத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் தம் லக்ஷியத்தை அநுபவத்திற்குக் கொண்டுவர அவர்கள் பற்றும்முறை மிகவும்



எளியது. சிறுவர்கள் ஒன்றுகூடி வாழ்ந்தால் அவர்கள் ஸமுதாய எண்ணங்களைக் கொள்வார்கள் என்று எண்ணி, "ஹாஸ்டல்கள்" ஏற்படுத்தி யிருக்கின்றனர். அவற்றிற்கு மேற்பார்வைக்காக ஆசிரியர்களும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். ஆனால் இவைகள் எல்லாம் அதிகப் பயனுற்றவை என்று கூறுதல் பொருந்தாது. சிற்சில இடங்களில், அன்பு நிறைந்த ஆசிரியர்களும், அவரிடம் பக்தி நிறைந்த சிஷ்யர்களும் உள்ளனர் என்பது உண்மை. ஆனால் அவர்கள் வெகு வெகு சிலரே.

ஹாஸ்டல்களில் குணம்படியாத, ஒருநிலை நிற்காத பிள்ளைகள் இருப்பதால், அவர்கள் தம்மைப்போன்ற சிறுவர்களைக் கண்டு, அவர்களைப்போன்று இருக்க முயல்கிறார்கள் என்பது ஒரு குறை. ஏனெனில், சிறுவயதில், நற்குணம் படியக்கூடிய சிறு வயதில், வயதிலும் குணத்திலும் உயர்ந்தவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியம் என்று அனைவரும் ஒத்துக்கொள்வர். இஃது பற்றியே, முதலில் ஸத்ஸங்கம் அவசியம் என்று கூறினோம். இரண்டாவது இந்த விடுதிகளை மேற்பார்ப்பவர்கள் ஓர் உத்யோகஸ்தரைப் போல விருக்கின்றனரே யன்றி, சிறுவர்கள் பின்பற்றக் கூடியவராயில்லை என்பது.

இவைகளை நீக்குவதற்குத் தகுந்தவழி நம் பூர்விகரால் கையாளப்பட்டு வந்த குருகுலவாஸ மென்பதே. குருகுலவாஸ மென்பதைக் கூறும்போது, சிலர் பழைய காலத்துப் பஞ்சை வழக்கம் என நினைப்பர். ஆனால் அவ்வாறு எண்ணங் கொள்பவர் இம்முறை இக்காலத்திலும் வெகு சிறப்புடன் கையாளப்பட்டு வருகின்றது என்பதை அறியவேண்டும். வடக்கே ஹரித்வாரத்திலுள்ள "குருகுலம்" என்னும் பயிற்சி சாலையிலும், வங்காளத்தில் ஸ்ரீமான் ரவிந்தநாத தாகூரின் சாந்தி நிகேதனத்திலும் இக்குருகுல வாசமே அநுஷ்டிக்கப்படுகிறது என்ற விஷயம் நாமெல்லாரும் அறிந்ததே. இம்முறை கல்வியிலும் தேர்ச்சியிலும் இகபரஞானம் நிறைந்தவர்களால் கையாளப்பட்டு வருவதே, குருகுல வாசமெனும் வழக்கத்திற்குத் தகுந்த ஆதாரமானதால், அதைப்பற்றிச் சிறிது இங்கு கூறுவோம்.

குருகுலவாசம் மேற்றிசையிலுள்ள ஐரோப்பியர்களாலும், அமெரிக்கர்களாலும் இக்காலம் பெரிதும் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இம்முறை அவர்களுக்குப் புதிது. அத்தேசங்களிலுள்ள கலா பண்டிதர்கள் பல பயிற்சி முறைகளை ஆய்ந்தோய்ந்து பார்த்த பின்னரே இம்முறை மிகச் சிறந்தது என்று கண்டார்கள். ஆனால் இஃது ஞானம் நிறைந்த நம்பெரியோர்களால் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னரே கையாளப்பட்டு வந்தது. பரம்பரைப் பயிற்சி

முறையும் குருகுலவாசமே எனக்கொள்ளல் வேண்டும். அக்காலத்துச் சிறுவர்கள் தம் குருவினிடம் கற்பகத்தருவை நாடிச் செல்வோர்கள் போன்றிருந்தனர். கூலிக்கு மாரடிப்பதுபோல் குறிப்பிட்ட நேரங்களில் பாடத்தைக் கூறிச் செல்லும் இக்காலத்து ஆசிரியர்களும், வயிற்றுப் பிழைப்புக்காக (இக்காலம் அதுகூட கிடைப்பது அரிதன்றோ?) பட்டங்களைப் பெறுவதற்கு, கண்ணையவித்துக் காசைச் செலவிட்டு, படிப்பிற்காகச் செலவிட்ட பணம் கூட சம்பாதிக்காமல் தவிக்கும் மாணவர்களும் பூர்விகத்தில் இருந்ததில்லை. தற்காலத்திலிருப்பதைப் போல பணம் நிறைந்தவர்களே இக்கல்வி பெற்றனர் எனமுடியாது. மன்னரது செல்வக் குமாரர்களும், மறையவர்களுடைய அருந்தவப் புதல்வர்களும், பிச்சையெடுத் துண்ணுவோருடைய பிள்ளைகளும் ஓர் குருவினிடமே பயிற்சி பெற்று வந்தனர். நமது புராணங்களில் கூறப்பட்டுள்ள புருஷஸிம்ஹங்களும் வேதாந்திகளும் குருகுலவாசமிருந்து கற்றவர்களே; ஸ்ரீராமரும், அவரது திருத்தம்பிமாரும், ஸ்ரீகிருஷ்ணரும் குசேலரும், பாண்டு புத்திரர்களும் குருகுல வாசம் செய்தவர்கள் என்பது பாமரர்களுக்கும் தெரியும்.

இக்காலத்தில் கல்வி கற்பது நூல்களை வாசித்தலாலேயே கூடும் எனச் சிறுபான்மையோர் கூறினும், கல்வி குருமுகமே கற்றல் அவசியம் எனப் பெரியோர் கூறுவர். குறுகின இடத்தில் பலபொருட்களை அடக்கிவைப்பது போன்று, நூல்கள் பல விஷயங்களை குறிப்பிட்ட சிலபக்கங்களில் அடக்கப்பெற்றிருக்கின்றன. அந்நூல்களுக்குத் தகுந்த பொருள் என்ன வென்றறிய குரு வேண்டியது அவசியம். ஏனெனில் ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது தோன்றும் ஐயம் திரிபு என்னும் குறைகளை நீக்க ஆசிரியர் அருகிலிருத்தல் அவசியம். இது உண்மையே யென்று ஒத்துக் கொண்டு இக்காலத்து ஆசிரியர்களும் இம்முறையையே கையாளுகின்றனர் என்று சிலர் கூறுவர். ஆனால் குறிப்பிட்ட இடத்தில் வந்து சொல்லும் ஆசிரியரிடம் கற்பதைவிட, எப்பொழுதும் அருகிலிருக்கும் குருவினிடம் கற்பது சிறந்த தன்றோ?

மேலும் இகபரத்திற்கு இசைந்த சில விஷயங்களில் ஸ்வானுபூதி பெற்றவர்களிடம் தீக்ஷை பெறுவதற்கு குருகுலவாசம் சிறந்ததா? அல்லது தற்காலப் பயிற்சி சிறந்ததா? என்ற கேள்விக்கு முற்கூறியதே தகுந்தது என அறிஞர் ஒத்துக்கொள்வர்.

உபதேசத்திற்கு மாத்திரம் குருகுலவாசம் சிறந்தது என நாம் எண்ணுவது பெருந்தவறு. ஏனெனில் கல்வியும் பயிற்சியும் உயர் வாழ்க்கைக்கு ஓர் ஸாதனமே யன்றி வேறல்ல. ஆனால், 'உயர்



வாழ்கைக்கு உயர்வாழ்க்கையில் நிற்பதே உபதேசத்தை விட மேலானது'; ஏனெனில், சிறுவர்கள் பிறர் தம்மை நல்வழியில் செலுத்தக் கூறும் உபதேசங்களைக் கொஞ்சமேனும் மனதிற் கொள்வதில்லை. சிற்சில வேளைகளில் கேட்டவைகளுக்கு நேர் விரோதமாகவே நடக்கின்றனர். ஆனால் தமக்கு வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களுடைய நடவடிக்கைகளையே அவர்கள் பின்பற்றுகின்றனர். ஆகையால் அவர்கள் சிறுவயதில் நல்லொழுக்கம் நிறைந்த பெரியோர்களிடமே அல்லும் பகலும் இருத்தல் வேண்டும். இக்காலத்தில் நடப்பதைப்போல கலாசாலைகளில் கற்பதற்கு நேர்விரோதமாக வீட்டிலும் அண்டை அயலிலும் நடப்பதைச் சிறுவன் பார்த்து கலாசாலையில் பெறும் நல்லுபதேசத்தை மறந்து நல்வழியைக் கைவிடுகின்றான். இவ்வுண்மையை அறிந்தே நம்முன்னோர்கள் ஒவ்வொரு சிறுவனும், உபநயனம் நடந்த பின்னர் கிரகஸ்தாச்ரமத்தில் நுழையும்வரை குருகுலவாசம் செய்ய வேண்டும் என்று விதித்தனர். கிரகஸ்தாச்ரமம் அடைவது 20, அல்லது அதற்கு மேற்பட்ட வயதிற்குப் பின்னரே யாதலால், அதற்குள் சிஷ்யர்களுடைய மனம் ஸத்விஷயங்களில் நிலைபெறும் என்பது நிச்சயம். சிறுவயதில், மாணவர்களுக்கு ஸத்ஸங்கத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளைக் கூறமுடியுமோ? பெரியோரிடம் பக்தி, ஜந்துக்களிடம் அன்பு, கல்வியில் சிரத்தை, அடக்கம், முதலிய நற்குணங்கள் குருகுல வாசத்திலன்றி வேறெங்கு முடியும்?

மேற்கூறியதினால் ஏற்படக்கூடிய நன்மைகளோடு, பல சிஷ்யர்கள் சேர்ந்து படிப்பதால் ஜனஸமூக வாழ்க்கை என்னவென்பது, சிறுவர்களுக்குப் போதிக்காமலே விளங்குகின்றது.

குருகுலவாசம் என்பது, ஆசிரியர்களுடைய இல்லத்திலேயே இருந்து கற்றல். ஆதலால், சிறுவர்களுக்குத் தங்கள் இல்லங்களிலிருப்பதுபோலப் போஷணையும் பாதுகாப்பும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. ஆசிரியர்களும் தம் சிஷ்யர்கள் நன்னடத்தையில் தம்மைப் பின்பற்றும் வண்ணம் உயர் நடத்தையைத் தம் சாதாரண வாழ்க்கையில் அநுசரிக்க வேண்டியது அவசியம். இதனால் சிறுவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல வழிகளிலும் நன்மைகள் உண்டாகுமென்பது நிச்சயம்.

“பூர்வ காலத்தில் இம்முறையிலா கல்வி போதிக்கப்பட்டு வந்தது?” என்று கேட்பர் சிலர். “குருகுலவாச மென்பதில் ஒவ்வொரு குருவும் சில சிஷ்யர்களுக்கே கல்வி போதித்து வந்தனர். அதனால் அக்காலத்தில் கல்வி கற்றவர்களும் வெகு சிலரே இம்முறையில் பயின்றிருப்பர். இக்காலத்திலோ ஒவ்வொருவரும் கல்விகற்க வேண்டி

யது நாட்டிற்கு அவசியமாயிருக்க இம்முறையால் கல்வி பரவுதல் தடைபடுமேயன்றி லாபம் வேறில்லை" என்று கூறுபவர் சிலர் இருப்பர். "குருகுல வாசத்திற்கு அவசியமான தனி இடங்களும் தகுந்த ஆசிரியர்களும் இப்போது எங்கே?" என்பார் பலர். "இது வரை கூறியவெல்லாம் ஞானோபதேசம் நாடிவரும் மாணவர்களுக்குப் பயன்படுமேயன்றி தொழில் முறைகளைக் கற்கவேண்டியவர்களுக்குக் குருகுலவாசம் எப்படிப் பயன்படும்?" என ஐயமுறுவர் வேறு சிலர். "இவ்வளவு கஷ்டம் ஏன்? இக்காலமிருக்கும் கல்வியைக் கற்றன்றோ நாம் இவ்வளவாவது முன்னேற்ற மடைந்தது! நமக்கு நன்மை விளைவித்தது நம் பிள்ளைகளுக்கும் பேரன்மார்களுக்கும் போதாதோ!" என இறுமாப்புடன் கூறுவோரும் இருக்கலாம். இனி கடையிற் கூறிய இறுமாப்புக் கேள்வியைச் சற்று விசாரித்துப் பதிற் கூறிவிட்டு மற்ற விஷயங்களைக் கவனிப்போம்.

இக்காலத்துக் கல்வி முறையில் பல குறைகள் உள்ளன என்பதை உண்மைக் கல்வியுடைய எவரும் ஒத்துக் கொள்வர். எதாவது கொஞ்சம் சந்தேகமிருப்பின் சமீபத்தில் கல்கத்தா யூனிவர்ஸிடி கமிஷன் கமிட்டியார் தீர்ந்து ஆலோசனைசெய்து வெளிப்படுத்திய விளம்பரத்தை வாசித்து அவர் அறியவேண்டும். குறை உண்டு என்றறிந்த பிறகு அவற்றை நீக்கவேண்டுவது ஓர் புத்திமானின் கடமையாகுமேயன்றி தான் கல்வி கற்றபோது இருந்த குறைகள் இப்பொழுதும் இருக்கட்டுமென்ன என்று கூறுவது தாமஸிக குணத்தையே தெரிவிக்கும். ஆரம்பத்தில் நாம் கூறியபடி கல்வியானது ஒருவனை ஓர் உண்மை மனிதனாக்கினால் மட்டுமே கல்வியெனக்கருதப்படும். ஆகையால் அவ்வுண்மைக் கல்வி போதிக்கப்படுவதற்கு எது சாதனமோ அதுவே நாம் கையாள வேண்டிய முறை என்பது எமது துணிபு. அறிவிற் சிறந்த ஆசிரியரையும் அறிவு பெற விரும்பும் இளைஞரையும் ஓரிடத்தில் சேர்த்து, பேச்சிலும், நடத்தையிலும், எண்ணத்திலும், நோக்கிலும் சிஷ்யனது அறிவைத் தூண்டி, பெருக்கி, பிரகாசிக்குமாறு செய்து அவனுக்கு உயர் மானிட வாழ்க்கை இத்தன்மையது எனக்காட்டக் கூடியது பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட குருகுல வாசமேயாதலால், அதையே நாம் பின்பற்ற வேண்டும்.

இனி மேற்றிசையிலுள்ள கல்விமான்கள் அனைவரும், "ஒரு ஆசிரியரிடம் பல சிஷ்யர்கள் இருப்பது சிஷ்யர்களுடைய அறிவுவளர்ச்சிக்கும் குணம் படிவதற்கும் பிரதிகூலமே" யென நிர்மாணித்து இக்காலத்துப் பல சிஷ்யர்கள் சேர்ந்த ஓர் வகுப்பு முறையை மிகவும் கண்டித்திருக்கின்றனர். பல இடங்களில் அதிகாரி



கள் ஒவ்வொரு ஆசிரியரிடம் இருக்கும் சிஷ்யர்களின் தொகையைக் குறைத்துக்கொண்டே வருகின்றனர். இதனால் குருகுல வாசத்தில் ஒரு குருவினிடம் மிகச் சில சிஷ்யர்களிருப்பது நன்மை தருமேயன்றி வேறொன்றுமல்லது என்பது விளங்கும். பல சிஷ்யர்களும் பல ஆசிரியர்களும் ஒரு கட்டிடத்திலோ அல்லது வெகு அருகாமையிலுள்ள கட்டிடங்களிலோ இருப்பதால் தனி வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் ஒருங்கே அமையும். இம்முறை இக்காலத்தில் எங்கும் கையாளப்படுமாயின், பிற நாடுகளைப் போலவே இங்கும் ஆசிரியர்கள் தோன்றுவாராதலின் இம்முறையைப் பின்பற்றுவதினால் கல்வி தடைபடுமென்றுவது, ஆசிரியர்கள் அகப்படார் என்றுவது கூறுவதற்கில்லை.

ஞானோபதேசம் பெறுவதற்கே குருகுல வாசம் மிகவும் பயன்படும் என்பது உண்மையே. ஆயினும் ஒருவன் தொழிற்பயிற்சி கற்று நிபுணனான போதிலும் அவன் தன் ஜீவனோபாயத்தைத் தேடுவதோடு ஆத்ம ஞானத்தையும் அறியவேண்டுமாதலால், தொழிற்பயிற்சி செய்யும் மாணவன்கூடச் சிறிது காலமேனும் குருகுலவாசம் செய்ய வேண்டியது அவசியமன்றோ?

எவ்வழி நோக்கினும் குருகுல வாசம் தற்காலத்துக் கல்விச் சாலைகளில் கற்பதாலேற்படும் தீங்குகளை நீக்கும் என்பது திண்ணம். நம் தேசம் பூர்வ காலத்தில் பல விதங்களில் தேர்ச்சியடைந்ததற்கு அக்காலத்திலிருந்த குருகுல வாசங்களே காரணம். ஆராயுமிடத்து, குருகுல வாசத்திற்கும் உண்மை ஸர்வகலா சங்கத்திற்கும் வேறுபாடு கொஞ்சமேனும் இல்லை. இக்காலத்திய கலாசாலைகள் மேற்றிசையாருக்குப் பெரிதும் பயன் செய்யுமாயினும் நம் நாட்டிற்கு வேற்றே கலாசாலைகள். நம் நாட்டிற்கு நலந்தந்து வந்த குருகுலவாச முறையைக் கொஞ்சங் கொஞ்சமாய் மேற்றிசையார் கைக்கொண்டு வருவதை நம்மவர்கள் இனியேனும் அறிந்து தம் நாட்டு முறையை அநுஸரிப்பார்களென நாம் நம்புகிறோம்.

# ஆர்யாசார விளக்கம்.

## ஸ்தூல ஆசாரம்.

ஆசாரம் என்பது வித்யாரூபமாயும், ஆசாரமென்பது மேன்மையான குருமுகூர்த்தமாயும், ஆசாரமே முதன்மையான தர்மமாயும், ஆசாரமே தலைமையான கதியாகவும் இருக்கின்றது. ஆகையால் ஆசாரங்களை அநுஷ்டித்துவரும் காரியங்கள் நழுவாமல் நிலை நிறுத்தப்பட்டால் அவை உத்தமமான நன்மைகளை யளிக்கின்றன என்பது சித்தாந்தம்.

ஆசாரம் என்பது தேகசுத்தம், இந்திரிய சுத்தம், மனோசுத்தம், வாக்சுத்தம், வஸ்திரசுத்தம், வாஸஸ்தானசுத்தம், பாத்திரசுத்தம், ஆகாரசுத்தம், முதலிய சகலத்திலும் சுத்தத்தையே ஸ்தாபிப்பதாகும். ஆர்யர்களால் அநுஷ்டிப்பது ஆர்யாசாரம் என்ப.

## 2. சூக்ஷ்ம ஆசாரம்.

விழுப்பு, மடி, அழுக்கு வெள்ளை என்றவற்றில் தற்கால நாகரீகப்படி விழுப்பு என்றால் அழுக்கு என்றும், மடி என்றால் வெள்ளையென்றும், கொள்ளப்படுகின்றது. ஆசாரம் என்பதின் பொருள் இதுமாத்திரமல்ல. வியாதியுள்ளவர்கள், அசுத்தமான தீட்டு முதலியவையுடையோர்கள், மிகுதியான ரஜோ, தமோகுணங்களுள்ளவர்கள் ஆகிய இவர்களுடைய ஆசனம், சயனம், பாத்திரம் மற்றும் பல அணிகலங்களில் அவ்விதமான அசுத்த அணுக்கூட்டங்கள் தங்கியிருக்குமாகையால் அவை பார்ப்பதற்கு வெள்ளையாக சுத்தம் போல் காணப்படினும் அவைகளை உபயோகப்படுத்தக் கூடாது.

சுத்தமாயும், ஆசாரமாயுமுள்ள சிலர்களே ஒருவருக்கொருவர் தீர்த்த பாத்திர வஸ்திர முதலியவைகளை விரும்பார்கள் என்பதை நேரிலேயும் பார்க்கின்றோம். மனோவிர்த்தியின் அணுக்கூட்டங்கள் அவைகளில் சூழ்ந்திருக்குமென்பதை நமது ஆர்யாசாரம் அறிவுறுத்துகின்றது. நீராடி சுத்தமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொண்டும், தழுவிக்கொண்டும் உறைந்து கொண்டும் இருப்பதில்லை. இவை கூடாதென்பது அறிவுடையார் கொள்கையாகும்.



## 3. லலாடதாரணம்.

அவரவர்கள் மதசம்பிரதாய அநுஷ்டானப்படி தொன்றுதொட்டு வழக்கத்தினால் தெய்வத்தன்மையைத் தருவதாய் எது கொள்ளப்படுகின்றதோ அத்தகைய விபூதி, திருமண், கோபீ முதலான குறிகளை அவரவர்கள் லலாடம் என்கிற உந்நதஸ்தானத்தில் அணிந்து, அக்ஷமாலை, துளபமாலை, ஸ்படிகமாலை, முதலிய பகவத் சின்னங்களைத் தரிப்பதைக் கைவிடாமல் இச்சிறந்த ஆசாரங்களின் உட்கருத்தை உணர்ந்துய்தல் வேண்டும்.

## 4. லலாட தாரணத்திற்குக் காரணம்.

உதாரணமாக சைவர்கள் விபூதியை ஏன் பூசிக்கொள்ளவேண்டும்? விபூதியையணிந்தால் கடவுளைச் சிந்தையில் வைத்ததுவாக வேதம் சொல்லுகின்றது. வேதம் தெய்வத்தைக் காட்டுகின்றது

வைராக்ய சிகாமணியாகிய நம் பட்டினத்தடிகளும்.

"ஐயுந்தொடர்ந்து விழியுஞ் செருகியறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவல்யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந்தொழப் பண்ணியைந் தெழுத்தோதவுங் கற்பியுமே."

என்று திருவாய் மலர்ந்தருளினார். இன்னும் அநேக மகத்துக்கள் இவ்வாறே ஏராளமாகக் கூறியிருக்கிறார்கள். இவ்வாறான அநுபவ மொழிகளைப் பார்த்தோ, கேள்வியுற்றோ அவைகளில்சிரத்தையடைய வேண்டுவது முக்கியமாகும். ஆகையால் ஒவ்வொருவரும் அவ்வாறு அநுபவம் பெற உபாயம் அவைகளை அநுஷ்டிப்பதேயாம். அநுபவப்படிக்கும், மதாசார சம்மதப்படிக்கும் உந்நதஸ்தான லலாடக்குறியானது, அந்த இடம் பிரக்ஞா ஸ்தானம் என்பதையும் அவ்விடத்தில் கவனம் இருக்கவேண்டுமென்பதையுங் காட்டுகின்றது.

ஆகையால் அந்த உத்தமஸ்தானமும், இன்னும் அநேக ஸ்தானங்களும் இப்புண்ணியக்குறிக்கு அமைந்திருப்பதை அன்பர்கள் அறிந்து அநுஷ்டித்துவருமளவில் ஆபாதமஸ்தகம் பகவத் சொரூபம் நிறைந்திருப்பதை உணரலாகும்.

## 5. லலாடதாரணத்தினால் பாரமார்த்திக தேகம் விளங்குகின்றது.

தேகம் விவகார தேகமென்றும் பாரமார்த்திக தேகமென்றும் இரண்டு விதமாய்க் கூறப்படுகின்றது. இப்பொழுது விழிப்பு நிலைமையில் நாமாக எண்ணி அநுபவிக்கிற இந்த ஸ்தூல சரீரமென்கிற வியவகார தேகமானது பஞ்சபூதத்தாலானமைபற்றி இவற்றி

னம்சமான பஞ்சபூத சம்மந்தமான பதார்த்தங்களால் சுத்தமாகவும் காலக்கிரமமாய் ரக்ஷிக்கப்பட்டும் வருவதால் அவசியமாய் இத்தூலதேகம் தெய்வசின்னங்களால் அலங்கரிக்கப்படவேண்டும். இவ்வித அனுஷ்டானத்தினால் பாரமார்த்திக தேகமான ஆறுதாரஸ்தானங்களின் விசாரணை யுண்டாகி அதனால் தத்வங்கள் நன்றாய் விளங்கும்.

6. லலாடதாரணத்தினால் அனாவசியமான பழக்கங்கள் விலகுதல்.

தாரணா பதார்த்தங்கள் வியாதி, பயமுதலிய காலங்களில் பிரசாதரூபமாய் இச்சைகளைப் பூர்த்தி செய்வதாயும், பெரியோர்களால் ஆசீர்வதித்து அளிக்கும் பத்திர புஷ்பங்கள் போல்வதாயும், நெற்றிக்குறியில் கவனத்தை யுண்டாக்கக் கூடியதாயுமுள்ளன. குறியிடும் அப்பாஸத்தினால் சகலவிதமான நன்மைகளும் உண்டாகின்றன. இருபுறமும் நம்மைக் காப்பாற்றும் துணையாளர் போல் நமது அங்கங்களில் குறிக்கப்பட்டிருப்பவை அழியாமல் எப்பொழுதும் குறிப்புடனிருக்க அவ்வவ்விடங்களில் ஞாபகமில்லாமல் கைகள் போகக் கூடாதென்பதும், அடிக்கடி தலையைச் சொறிந்துகொள்வது முதலான அநேக அனர்த்தங்கள் விலகவேண்டுமென்பதும் குறிக்கப் படுகின்றது. கட்டை விரலால் கோடுகளைக் கிழிப்பது, அனாவசியமான ஆடல், பாடல் தாளம் முதலானவைகளை உசிதமில்லாத அவயவங்களில் செய்வது ஆகிய கெட்டவழிகளினின்றும் காப்பாற்றி, மறதியைப் போக்கி கவனத்தோடிருக்கச் செய்யும் பரிசுத்தமான தாரணாக் கிரமமானது நன்மைகளுக்கு அவசியம் என்பதில் என்ன சந்தேகம்?

7 தாரணத்தினால் ஆரோக்யமும் ஜீவகாருண்யமும் பகவத்ஸ்மரணையும்.

சன்மார்க்கம் என்ற பள்ளிக்கூடத்தில் ஆத்மலாப மென்னும் உண்மை யுணவு அளிப்பதான ஆர்யாசாரம் என்ற இந்த அநுஷ்டானக் கிரமமானது, படிப்படியாக தேக ஆரோக்கியத்துக்கும், ஜீவகாருண்யத்துக்கும் பகவத்ஸ்மரணைக்கும் சிறந்த ஸாதனமாயிருக்கின்றது. ஆனது பற்றியே ஸ்நாநம், பூஜை முதலியவைகளில்லாவிடினும் போஜனம் செய்யுமுன் லலாடதாரணமொன்றாவது அவசியம் செய்து கொள்ளவேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர்.

# விவேகானந்த சுவாமிகளது அருள்வாக்கியத் திரட்டு.

(86 வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

கடவுளுடைய அருளையும் அவரது மேன்மை வாய்ந்த புத்திரர்களுடைய கிருபையையும் பெறு. கடவுளை யடையக்கூடிய மார்க்கங்கள் இவை இரண்டேதாம். கடவுளுடைய ஞான புத்திரர்களின் சாங்கத்தியம் கிடைப்பது மிக அரிது. அன்னோர்களிடத்தில் ஒரு ஐந்து நிமிஷம் சாங்கத்திய முண்டாயின், நீ வேறு மனிதனாக ஆய்விடுவாய். உண்மையாக நீ இதை விரும்பினால் அத்தகைய புருஷர் ஒருவர் உன்னிடம் வருவார். கடவுள் நேசிக்கும் புருஷர்களின் சன்னிதானம் அன்னோரிருக்கும் இடத்தைப் பரிசுத்தப் படுத்துகின்றது. கடவுளின் புத்திரர்களுடைய மகிமை அத்தன்மையதாகும். அவர்களைக் கடவுளுக்கு வேறுபட்டவர் என்று மதித்தல் கூடாது. அவர்கள் பேசினால் அவர்களுடைய சொற்கள் வேதவாக்காகும். அவர்களிருந்த இடம் அவர்களுடைய பரிசுத்த தன்மாத்திரைகளால் வியாபக மடைந்தது. அந்த ஸ்தலத்தில் செல்லும் எத்தன்மையருடைய மனதிலும் அத்தன்மாத்திரை புகுந்து அங்கிருக்குமளவாயினும் அவர்கள் மனதில் பரிசுத்த உணர்ச்சியை யுண்டு பண்ணுகிறது. அவர்களுக்குப் புனிதத்தன்மையை யடையும் புத்தியையும் உண்டாக்குகிறது. அவ்விதப் பக்தர்களுக்குச் சாதி, கல்வி, அழகு, பிறப்பு, செல்வம், தொழில் முதலிய வித்தியாசம் கிடையாது; ஏனெனில், யாவும் கடவுளுடையன வென்று ஐயந்திரிபறத் தெரிந்து கொண்டமையின்.

கெட்ட சகவாசத்தை முற்றிலும் விட்டுவிடு. முக்கியமாய் முதலில் இப்படிச் செய்யவேண்டும். உன் மனதைச் சிதறச் செய்யக்கூடிய உலக சகவாசத்தைத் தடு. யான் எனது என்ற யாவற்றையும் விட்டுவிடு. பிரபஞ்சத்தில் தன்னுடையது என்பது ஒன்று மில்லாதவன் எவனோ அவனிடத்தில் தான் கடவுள் வருகிறார். உலக ஆசையாகிய பந்தத்தின் கட்டையவிழ்த்து விடு. சோம்பலை மீறிச்செல். எவ்வாறாக ஆய்விடுவோமோ என்ற கவலையைத் தாண்டிச்செல்லு. நீ செய்த கர்மத்தின் பலனைப்பற்றி ஒரு பொழுதும் சிந்திக்காதே. எல்லாவற்றையும் கடவுளுக்குச் சமர்ப்பித்துவிட்டு உன் வேலையைப்

பார். அதுபற்றி யோசிக்காதே. ஆத்மா முற்றும் தைலதாரை போல இடையறாதுகடவுளிடஞ் செல்லத்ததும்புகிறது. பணம் சம்பாதிக்க நேரமில்லை. பேரும் புகழும் நாடப் பொழுதில்லை. கடவுள் தவிர வேறொன்றையும் சிந்திக்கக் காலமில்லை. இவ்வித உணர்ச்சி எப்பொழுது.உதயமாகிறதோ அந்தத்தருணத்தில் தான் அளவிடப்படாத அதிசயிக்கத்தக்க பிரேமானந்தமானது நமது இருதயத்தில் ஜனிக்கும்; ஒவ்வொரு நிமிஷமும் கடவுள் மேலிருக்கும் பிரேமையானது அதிகரிக்கும். இஃதன்றியும் இந்தப் பிரேமரசமானது தெவிட்டாமல் எக்காலத்தும் புதிதாகவேயிருந்து ஸ்வானுபவத்தில் மாத்திரந்தான் ஓர்ந்துணரக் கூடியதாயிருக்கின்றது. எல்லாவற்றிலும் பிரேமையானது அதிகச்சுலபமானது.அது தருக்கத்திற்காகக் காத்துக்கொண் டிருப்பதில்லை. அது சுபாவசித்தமாயுள்ளது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுவதில்லாதது போல நமக்குருசு வேண்டியதில்லை; அத்தாக்ஷியும் வேண்டியதில்லை. யுக்தி யென்பது யாதாவதொரு வஸ்துவை நமது மனதால் வரையறைக்குட்படுத்துவதாகும். ஒரு வலையைவீசி ஏதோ ஒன்றைப் பிடிக்கிறோம்; பிறகு அதனை விளக்கிக்காட்டியதாகக் கூறுகின்றோம். ஆனால் கடவுளை ஒருவலையில் பிடிக்கக் கூடுமென்பது ஒரு பொழுதும் இயலாத காரியம்! ஒரு பொழுதும் இயலாத காரியம்!

பிரேமையானது யாதொன்றினோடும் பிணைப்பட்டதன்று. நாம் தப்பிதமாய் நேசிக்கும்போதும் அது நிசபக்தியின் தன்மையதாம்; நிச ஆநந்தத் தன்மையு மாகும். நாம் எவ்விதமாக உபயோகித்தபோதிலும் சக்தி ஒன்றே. அதில் என்ன வித்தியாச மிருக்கிறது? சாந்தியும் ஆனந்தமும் பிரேமையின் வடிவாகும். ஒரு கொலையாளி தன் குழந்தையை முத்தமிடும்பொழுது குழந்தையின் மேலிருக்கும் அன்பைத்தவிர மற்றெல்லாவற்றையும் அத்தருணத்தில் முற்றும் மறந்துவிடுகிறான். நான் என்பதை விட்டுவிடு. கோபம் காமம் இவைகளினின்றும் வெளிவந்து விடு. எல்லாவற்றையும் கடவுளுக்குச் சமர்ப்பித்து விடு. 'நானில்லை, நீ உள்ளாய்; கிழமனிதன் முற்றிலும் மறைந்து விட்டான்: நீ தான் உஞ்சி நிற்கின்றாய்; நான் தான் நீ'. ஒருவரையும் நொந்துகொள்ளாதே உனக்குக் கெடுதி சம்பவிக்குமாயின் கடவுள் உன்னுடன் விளையாடுகிறாரென்று தெரிந்துகொண்டு அதிகக் களிப்புடன் இருப்பாயாக. (வரும்).

# வர்த்தமானம்.

---

## ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம் மயிலாப்பூர், சென்னை.

### கிருகப்பிரவேசத் திருவிழா.

சென்ற சித்திரைமீ 28உ (10-5-21) அக்ஷய திருதியை தினத்தன்று மயிலாப்பூர் லஸ்லிவன்ஸ் ரோட்டில் புதிதாய்க்கட்டியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லத்தில் கிருகப்ரவேசத் திருவிழா மிகச் சிறப்பாய் நடைபெற்றது.

காலை எட்டுமணிக்குக் கச்சேரி ரோட்டிலுள்ள பழையகிருகத்திலிருந்து புறப்பட்டு, பூர்ணகும்பம், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது படம், ஸ்ரீஸாளக்ராம சிலை இவைகளை மாணவர்கள் வேத கோஷத்துடனும் கோயில் பிருதுகளுடனும் முன்னெடுத்துச் செல்ல, அன்பர் கூட்டம் மேள வாத்தியங்களுடனும் பஜனைகளுடனும் தொடர திருமயிலை நான்கு வீதிகள் வழியே ஊர்வலம் வந்து, ஒன்பது மணிக்கு சுபமுகூர்த்தத்தில் புதுக்கட்டிடத்தை யணுகினர். அக்காலை ஸ்ரீராமகிருஷ்ணமட சக்கிராதிபதி ஸ்ரீமத் பிர்ம்மானந்தஸ்வாமிகளும், ஸ்ரீமத் சிவானந்தஸ்வாமிகளும் வந்து சேர்ந்து, ஊர்வலத்துக்கு முன்சென்று தங்கள் திருவடிகளால் கட்டிடம் நிற்கும் பூதலத்தை மிதித்துப் பரிசுத்தமாக்கினர். பெங்களூரிலிருந்து ஸ்ரீ நிர்மலானந்தஸ்வாமிகளும் வந்திருந்தனர். பின்னர் அவர்களுடைய பேரருளையும் அன்பர் கோஷ்டியின் ஆசிகளையும் பெற்று மாணவர்கள் மங்களப்பிரவேசம் செய்தனர். உட்புகுந்ததும் ஸ்ரீஸாளக்ராம சிலையையும், பரமஹம்ஸ தேவருடைய படத்தையும் ஆஸனங்களிலமர்த்திக் கைகூப்பிநின்று மனமொருமித்து பக்தர்கள் ஸ்ரீராமகிருஷ்ண தேவஸ்தோத்திரம் பாடி வாழி கூறினர். பின் கிருகம் முழுவதும் புண்ணியாஹவாசன ஜலத்தால் ப்ரோக்ஷிக்கப் பட்டுப்புனித மாக்கப்பட்டது.

இந்நிலையில் ஸ்ரீமத் பிர்ம்மானந்தஸ்வாமிகள் தியானத்திலமர்ந்து வைராக்கிய நிற்க ஸ்ரீமத் சர்வானந்தஸ்வாமிகள் பக்திரஸமும் பின்னர் ஸ்ரீமத் மும் நிறைந்த பற்பல சுலோகங்களைப் பாடினர். செய்து ஹோமமும் சர்வானந்தஸ்வாமிகள் பஞ்சதேவதா பூஜை யில் ஒருபுறம் பிராம் செய்தனர். இவைகள் நடந்து கொண்டிருக்கையிர்களின் வேத பாராமணர்கள் வேதகோஷ்டியும், ஒருபுறம் மாணவர்களின் எங்குபார்த்தாலும் பணமும், மற்றொருபுறம் ஸஹஸ்ரநாமமும் மு-

லும் இந்நூதன கிருஹம் பக்தர் மனத்துள்ள அன்பே உருவெடுத்து வந்ததுபோற் சிறந்து விளங்கியது.

பூஜை முடிந்ததும் வந்திருந்தோர்க்கு பூரி தக்ஷிணை வழங்கி வேதப் பிராமணர்களுக்கு அமுது செய்வித்து ஸன்மானமும் செய்யப்பட்டது. திருமயிலையிலுள்ள கோயில்களில் அபிஷேகத்துடன் ஆராதனம் செய்யப்பட்டது.

மாலையில் ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம் மிகுந்த பக்தியுடன் பாடப்பட்டது. பின்னர் பிரம்ம ஸ்ரீ பஞ்சாப கேசசாஸ்திரிகளின் சிஷ்யர் நல்லூர் ஸ்ரீ விசுவநாதய்யரவர்களால் இனிமையான பாடல்கள் பல பாடப்பட்டன.

இச்சிறந்த வைபவத்திற்கு விஜயம் செய்தவர்களில் பிரமுகர்கள் ஸ்ரீபித்தாபுரம் ராஜா, ஸ்ரீவெங்கடகிரி குமார ராஜா, நீதிபதி ஸதாசிவய்யரும் அவர் மனைவியும், ஸ்ரீமான்கள் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், எஸ். ஆர். எம். ஏ. அண்ணாமலை செட்டியார், டி. ரங்காசாரியார், ராவ்பஹதூர், ஏ. வி. ராமலிங்கய்யர், ராவ்பஹதூர் ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யர், வி. ஸி. சேஷாசாரியார், ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார், என். கோபாலஸ்வாமி அய்யங்கார் ராவ்பஹதூர் எஸ். பாஸ்கரய்யர், மெஸ்ஸர்ஸ் ஸ்டேதம், காலகன், மிஸஸ் டிரைஸ்டேல், மிஸஸ் பெஸண்டு.

இரவு எட்டரைமணிக்கு அன்பர்க்கு விருந்தளிக்கப்பட்டது. பிறகு மாயவரம் ஸ்ரீ ராஜாராமன் என்ற ஓர் பாலகனால் புல்லாங்குழல் வெகு மதுரமாய் வாசிக்கப்பட்டுத் திருநாள் வைபவம் முடிந்தது.

## இல்லத்தின் சரித்திரம்.

இவ்வில்லத்தின் பூர்வ சரித்திரத்தைப் பற்றிச் சிறிது இங்கு கூறுவது மிகையாகாது.

வருஷந்தோறும் நூற்றுக்கணக்கான ஏழைப் பிள்ளைகள் பிச்
சைம... படித்தாவது படிக்கவேண்டுமென்ற தீவிரமான ஆசைகொண்
டு சென்... னப் பட்டணம் வந்துவிடுகிறார்கள். வந்தபிறகு அவர்கள்
படுங்கஷ்ட...ம் இவ்வளவென்று சொல்லி முடியாது. இன்று ஒரு
வீட்டிலும் ந... ளை ஒரு வீட்டிலுமாய் "வாரச்சாப்பாடு" சாப்பிட்டுக்
கொண்டும் கல... சாலைக்கு மாதந்தோறும் கட்டவேண்டிய சம்பளத்
துக்காகப் பலரிட...ம் இரந்தும் தெருத்தெருவாய் இவர்கள் அலைவ
தைப் பார்த்தால் ... கல் நெஞ்சுங் கரையும்.

தவிர இச்சி... வர்களுடைய நடத்தையைக் கவனித்துச் சரி
யான வழியில் நடத்... தப் பெரியோர்களில்லாததாலும், கெட்ட ஸக



வாஸத்தாலும், நன்னடத்தையின் அவசியத்தைச் செவ்வையாய் உணராததாலும் நமது சிறந்த மதாசாரங்களைக் கைவிட்டும், சரியாய்ப் படிக்காமல் காலத்தை வீண்போக்கியும் அநேகம் மாணாக்கர்கள் அநியாயமாய்க் கெட்டுப்போய்விடுகிறார்கள். மிகவும் ஜாக்கிரதையாயிருக்கும் நல்ல பிள்ளைகளுக்குக்கூட ஆஸ்திக்கிய புத்தி விருத்தியடைய இடமேயில்லை.

இதையெல்லாம் சிறிதுகாலம் கவனித்துவந்த காலஞ்சென்ற ஸ்ரீமத் ராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள் மனம் சகிக்கமாட்டாதவராய், இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க நல்வழிக்குக் கைகாட்டிபோல் மிக்க உயர்வான முற்குறிகளைக்கொண்ட ஓர் மார்க்கம் தேடவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு பரமகருணாநிதியான பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் பெயர் பூண்ட இந்த மாணவரில்லத்தை 1905-ம் வருஷம் ஸ்தாபித்தார்.

சென்னை ராஜதானியில் பல ஜில்லாக்களிலிருந்தும், இதரவிடங்களிலிருந்தும் பட்டணத்துக்குப் படிக்கவரும் ஆரியமதத்தைச் சார்ந்த சிறுவர்கள் கல்வியில்மட்டும் சிரத்தையுள்ளவர்களாயின், எந்த ஜாதியாயினும் இவ்வில்லத்தில் உதவிபெறுகிறார்கள். தருமத்திற்கு அன்னமும் வசிக்க இடமும் பெறுவதன்றி, சொந்த வீட்டில் பெற்றோர்களால் பாதுகாக்கப்படுவதைவிட பதின்மடங்கு அதிகமான அருமையுடனும் பொறுப்புடனும் வளர்க்கப்படுகிறார்கள். இவர்கள் ஒரு வருஷமாவது பரீக்ஷைகளில் தவறாமலும் இங்கே இருக்குங்காலம் முழுவதும் பிரம்மசாரிகளாகவும் இருக்க வேண்டிய அவசியம். அவ்வாறிருக்கத் தவறினால் இல்லத்தினின்று நீக்கப்படுவார்கள். இவர்கள் பண்டிதர்களிடமும் இராமகிருஷ்ண மடத்திலுள்ள ஸந்நியாசிகளிடமும் மதவிஷயங்களைக் கற்றுக்கொள்வதோடு சுயநயமின்றிப் பிறர் பொருட்டுழைப்பதிலும் ஸதா பகவத் கைங்கரியத்திலுமே ஊக்கங்கொண்டுள்ள இந்த மகான்களுடன் ஏற்படும் ஸத்ஸங்கத்தால் அடையும் பயன் இவ்வளவென்று சொல்லாமலே விளங்கும். இதுவரை இவ்வில்லத்தைவிட்டு வெளிச்சென்றுள்ள மாணவர்களெல்லாம் பல உத்தியோகங்களிலமர்ந்து இங்கிருக்கும்பொழுது கைக்கொண்ட உயர்வான லட்சியங்களை முற்கொண்டு நடந்துவருகின்றனர்.

ஸ்வல்ப பொருளுதவியைக்கொண்டு 10 மாணவர்களுடன் ஆரம்பித்த இவ்வில்லம் இப்பொழுது தூரதேசங்களிலிருந்துங்கூட உதவிபெறுவதாய் 60 மாணவர்களைப் போஷித்துப் பரிபாலிக்குந் திறமையுடையதாய் ஈசனருளால் ஓங்கி வளர்ந்து வருகின்றது. ஆரம்பத்திலிருந்த ஸ்திதியும் இப்பொழுதிருப்பதும் கீழே குறித்துள்ள எண்களைப் பார்த்தால் நன்கு விளங்கும்.

| வருஷம் | மாணவர் சங்கியை. | | | வருமானம். | செலவு. | சந்தாதார் சங்கியை. |
|---|---|---|---|---|---|---|
| | காலேஜ் | ஹைஸ்கூல். | மொத்தம். | ரூ.அ.பை. | ரூ.அ.பை. | |
| 1905 | 2 | 8 | 10 | 428 9 6 | 390 5 8 | 48 |
| 1920 | 30 | 15 | 45 | 19,846 5 8 | 8,525 2 6 | 414 |

மூலதனம் இல்லாமையால் இதற்குள்ள வருமானம் முழுவதும் பணக்காரர்களையும் ஏழைகளையும் அநேகரை அண்டி வெகு சிரமத்துடன் சேகரிக்கும் பொருளேயாகும். அநேகர் மாதந்தோறுமோ அல்லது வருஷத்துக்கொரு முறையாகவோ தங்கள் சந்தாக்களை அனுப்பிவிடுகிறார்கள். ஏழெட்டுப் பேர்கள் தனித்தனியே ஒவ்வொரு மாணாக்கன் போஷணைக்கு வேண்டிய தொகை சுமார் 150 ரூபாய் வருஷந்தோறும் கொடுப்பதாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தர்மம் சாசுவதமாய் நடந்து வரும்பொருட்டாய்ப் பலர் மூலதனங்கொடுத்துதவி யிருக்கின்றனர். இதுவரை மதராஸ் கவர்ன்மெண்டு ஆபீஸ் சங்கத்தார் ரூ. 23,300; கொளும்பு நகரத்தார் ரூ 15401, ஹானரபில் ராவ்பஹதூர் எஸ். ஆர். எம். எம். அண்ணாமலை செட்டியாரவர்கள் ரூ. 2000. "ஸ்ரீவேதாந்த தேசிகர் தருமம்"—ரூ. 2,000; வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் ஒருவர் ரூ. 1628-3-5; சென்னிமலை தி. கிருஷ்ணன் செட்டியார், ரூ. 1000; ராவ்பஹதூர் எல். பாஸ்கரய்யர் ரூ. 1,000; காலஞ்சென்ற பாரு. நரசிம்மராவ் ரூ. 1,000; கும்பகோணம் மாது ஸ்ரீ கோமளத்தம்மாள் ரூ. 1000; தர்மபுரி மாது ஸ்ரீ அலமேலு அம்மாள் ரூ. 500.

பல கலாசாலைத் தலைவர்களும், சென்னை கல்வி இலாக்காத்தலைவரும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும், அநேக கனதனவான்களும், இவ்வில்லத்தைப் பன்முறை நேரில் வந்து ஆராய்ந்து பார்த்து, இதன் அபிவிருத்தியில் மிகுந்த சிரத்தையையும் மகிழ்ச்சியையும் வெளியிட்டதோடு இப்பேர்க்கொத்த இல்லங்கள் நாடெங்கும் பரவவேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். சென்ற சட்டசபைக் கூட்டத்தில் இதின் அபிவிருத்தியில் நோக்கமுள்ள ஓர் நண்பர் இவ்வில்லத்துக்கு வருஷம் ரூ. 50,000 கவர்ன்மெண்டார் கிராண்டு கொடுத்துதவ வேண்டுமென்று யோசனை கூறியிருக்கின்றார். வித்யா இலாகா மந்திரியும் இவ்வில்லத்தைப் பார்வையிட்டு இதின் நிர்வாகத்தைப்பற்றி மிகவும் சிலாகித்துச்சென்றார்.



புதிய கட்டிடம்.—தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு பகவத் கிருபையை முன்னிட்டும் அன்பர்கள் பேருதவியைக் கொண்டும் புதுக்கட்டிட நிர்மாணம் 1918-ம் வருஷம் தொடங்கப்பட்டது. இதற்கு மூலாதாரம் ஒத்தபாலம் முன்சீபு ம-ா-ா-ஸ்ரீ சருக்கை ஸ்ரீனிவாஸாசாரியாரவர்கள் அன்புடன் முன் வந்து கொடுத்துதவிய 15டனை நிலமே பின்னர் சுற்றிலும் தேவையான மனையும் விளையாட்டுஸ்தலமும் கவர்ன்மெண்டு உதவியால் வாங்கப்பட்டது.

புது கிருஹம் ஓர் அழகிய இரட்டைமாடிக் கட்டிடம். இதன் மத்தியில் ஓர் பெரிய கூடத்தில் புத்தகசாலையும் அதற்கு நேராக மேல் மாடியில் பூஜா மண்டபமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பூஜா மண்டபம் பலவிதமான சித்திரவேலைகளால் சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. அங்கே வெள்ளை சலவைக் கல்லில் ஸரஸ்வதி உருவச்சிலை வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பூஜா மண்டபத்திற்கும் புத்தகசாலைக்கும் பிடிக்குந்தொகை முழுவதையும் கொடுப்பதாய் மிக்க அன்புடன் ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் பெத்நாச்சி செட்டியாரவர்கள் ஏற்றுக்கொண்டு அதை பூர்த்திசெய்து வருகிறார். கட்டிடத்தில் மேற்பார்வை அதிகாரிக்கு ஒரு அறையும், ஆபீஸ் அறை ஒன்றும் மாணவர்களுக்காக 36 அறைகளு ஒரு அறையில் மூவர் வீதம் இங்கே நூற்றெட்டு மாணவர்கள் வாம் இருக்கின்றன. சம் செய்யலாம். இவர்கட்கு வேண்டிய வசதிகளனைத்தும் செவ்வனே யமைக்கப்பட்டுள.

கட்டிட விஷயத்தில் பொருளுதவி செய்தவர்களில் முக்யஸ்தர்கள்: பொப்பிலி மகாராஜா, ராமநாதபுரம் ராஜா, பித்தாபுரம் ராஜா, சிவகிரி ஜமீன்தார், குளும்பேட்டை ஜமீன்தார், ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார், ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், காலஞ்சென்ற எஸ். ஆர். எம். எம். ராமஸ்வாமி செட்டியார், ராவ்ஸாஹிப் எம். ஸி. டி முத்தையா செட்டியார், வி. ஸி. சேஷாசாரியார், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், ராவ்பஹதூர் ஸி. வி. விசுவநாத சாஸ்திரியார், கே. பாலசுப்ரமணிய அய்யர், காலஞ்சென்ற ஆப்ரஹாம் பண்டிதர், புதுக்கோட்டை கே. ஸ்வாமிநாதய்யர், மதுரை ஏ. என். ரங்கய்யர், சென்னிமலை கிருஷ்ணன் செட்டியார், ராம. மெ. சி. த. வைரவன் செட்டியார், ஸ்ரீரங்கம் சிங்கமய்யங்கார், காசி செட்டியாரும் பழனி செட்டியாரும், கோட்டையூர் முத்தையா செட்டியார் கண்டிர மாணிக்கம் பி. எல். எஸ்.பி.எல்; விருதுபட்டி குமாரசாமி நாடார், கோட்டூர் ரங்கஸ்வாமி முதலியார் தர்மம்; தர்மபுரம் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், பி. கே. வெங்கைய செட்டி, கே. பெரியஸாமி அய்யர், தி. சொ. நாச்சியப்ப செட்டியார், ஸ்ரீரங்கம் ரங்கநாத தாதாசாரியார், காலஞ்

சென்ற நீதிபதி பி. ஆர். ஸுந்தரய்யர் குமாரர்கள்; வளவனூர் ஸி. கே. என். ஸன்ஸ், சென்னை கவர்ன்மெண்டாபீஸ் சங்கத்தார். இவர்களெல்லோரும் ஒவ்வொரு ரூம்கட்டுவதற்காக ரூபாய் இரண்டாயிரமோ அல்லது அதிகமோ கொடுத்துதவி யிருக்கின்றனர். கட்டிடத்தின் மதிப்பு ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபாய். இதில் கவர்ன்மெண்டார் பாதி கிரான்டு கொடுத்துதவி யிருக்கின்றனர். 1920-ம் வருஷக்கடைசிவரை இதற்காக வருமானம் மொத்தம் ரூ. 1,62,868-7-10; செலவு ரூ 1,56,891-0-5.

இச்சிறந்த கைங்கரியத்தில் அன்புடனும் ஆதரவுடனும் பொருளுதவி செய்துள்ள பல கனதனவான்களும், ஊக்கத்துடனும் அபிமானத்துடனும் மெய்வருத்தம்பாராமல் உழைத்துள்ள பல நண்பர்களுக்கும் வந்தனம்.

இவ்வில்லம் இன்று விளங்கும்வாறே அன்பின் தூயசுடராய் என்றும் விளங்குக!

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா— நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்."

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

# ஸிருஷ்டி ஜாலம்.

## பஞ்சாங்கம்.

---

பூர்வீகத்தில் ஆரியர்கள் அதிநுட்பமாய் ஆராய்ச்சி செய்த விஷயங்களுள் வானசாஸ்திரம் வெகு முக்கியமானது. வான சாஸ்திரத்தால் காலகதியும் ஜோதிஷ சாஸ்திரத்தால் காலரீதியும் அத்யத்புதமாய் அவர்களால் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. நாம் ஏனைய சாஸ்திரங்களை யிழந்தது போலவே தற்காலத்தில் இவைகளின் பயிற்சியையும் விட்டு அதுபற்றி அவைகளில் நம்பிக்கையையும் சிறுகச் சிறுக இழந்து வருகின்றோம். எனினும் தொன்று தொட்டிவந்துள்ள பழக்க வழக்கங்கள் முற்றும் மலினமடையாம லிருப்பதுவோர் நற்குறியெனவே கொள்ள வேண்டும். இக்காலத்தும் சாஸ்திரமுறைப்படி சுபாசுப காலங்களை நோக்குவதும், ஒவ்வொரு வைதிககாரியமும் ஆரம்பிக்கப்படும் பொழுது ஸங்கல்பத்தில் வருஷம், அயனம், ருது, மாதம், பக்ஷம், வாரம், திதி, நக்ஷத்ரம் இவைகளை ஸ்மரிப்பதும் வழக்கமாயிருந்து வருகின்றது. 'செய்வன திருந்தச் செய்' என்ற முதுமொழிப்படி நாம் செய்யுங் காரியங்களின் அர்த்தத்தை விசாரித்துச் செய்தல் வேண்டும்.

அயனம் : தினந்தோறும் சூரியனுதயமாகு மிடத்தை கவனித்து வந்தால், சில நாட்களில் நேர் கிழக்காகவும், சில நாட்களில் அதற்கு வடக்காகவும், சில நாட்களில் சிறிது தெற்காகவும் உதயமாவதைக் காண்கின்றோம். தவிரவும் அடிவானங்களில் உதயாஸ்தமனம் ஆறுமாத காலம் வடக்கிலிருந்து தெற்காகவும், மற்ற ஆறு மாதம் தெற்கிலிருந்து வடக்காகவும் நகர்வதாகக் காண்கிறோம். வடக்கு நோக்கி நகரும் ஆறுமாதம் உத்தராயண மென்றும், தெற்கு நோக்கி நகரும் ஆறுமாதம் தக்ஷிணாயன மெனவுங் கூறப்படும். இந்நாட்டார்க்கு உத்தராயணம் தக்ஷிணாயனத்தை விடப் பல்வகையிற் சிறந்ததாகும். தைமுதல் ஆடிவரை உத்தராயணம் ஆடிமுதல் தைவரை தக்ஷிணாயனம்.

ருதுக்கள் ஆறு. சித்திரையும் வைகாசியும் வஸந்தருது; இளவேனிற்காலம்; ஆனியும் ஆடியும் கிரீஷ்மருது; முதுவேனிற்காலம். ஆவணியும் புரட்டாசியும் வர்ஷருது; கார்ப்பருவம் அல்லது மழை ஐப்பசியும் கார்த்திகையும் சரத்ருது, குளிர்ப்பருவம், [காலம்

மார்கழியுந் தையும் ஹேமந்தருது; முன் பனிப்பருவம்
மாசியும் பங்குனியும் சசிர்ருது; பின் பனிப்பருவம்.

மாதமாவது சூரியன் ஒரு ராசியைக் (அதாவது சூரியவீதி சக்ரத்தில் பன்னிரண்டில் ஒருபாகம்) கடக்க ஆகுங்காலம். சூரியகதி ஒரே ரீதியாயில்லாததால் சில மாதங்களில் 31 அல்லது 32 நாட்களும் சில மாதங்களில் 29 நாட்களும் இருக்கும்.

ஒரு மாதத்துக்கு இரண்டு பட்சம். அமாவாஸை முதல் பௌர்ணமிவரை சுக்லபட்சம் அல்லது வளர்பிறை; பௌர்ணமி முதல் அமாவாசை வரை கிருஷ்ணபட்சம் அல்லது தேய்பிறை. வளர் பிறையே தேய்பிறையைவிட சிலாக்கியமாகும்.

ஒரு பட்சத்துக்குத் திதிகள் பதினைந்து. அமாவாஸை முதல் பௌர்ணமிவரை சந்திரன் சூரியனைவிட்டு விலகியும் பௌர்ணமி முதல் அமாவாஸைவரை சூரியனை நெருங்கியும் வருகிறது. ஒரு மாதத்தில் ஒருவட்டம் அல்லது 360 பாகை*யளவு நகருவதால் தினம் 12-பாகை நகருகின்றது. 12 பாகை நகரப்பிடிக்கும் காலமே திதி. அமாவாசையிலிருந்து 12 பாகை வித்தியாஸப் படும்வரை பிரதமை, 12-முதல் 24 வரை துவிதியை, அவ்வாறே மற்ற திதிகளும். கதி வித்யாஸத்தால் திதிகளின் பரிமாணம் 53 நாழிகை 56 விநாடிமுதல் 65 நாழிகை 16 விநாடிவரை வித்யாஸப்படும்.

நட்சத்திரங்கள் இருபத்தேழு.— சந்திரன் நட்சத்திரங்களையபேட்சித்து 27-நாட்களுக்கொருமுறை ககோளத்தைச்சுற்றிவருவதால், ககோளசக்ரத்தை 27 பாகமாகப்பிரித்து ஒவ்வொருபாகத்திலுமுள்ள முக்கிய நக்ஷத்திரக்கூட்டங்களால் அவைகளின் நிலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முதல் 13⅓ பாகைப்பிரிவுக்கு அதிலுள்ள நட்சத்திரத்தால் அசுவனியெனவும், இரண்டாவது பிரிவுக்கு பரணியெனவும் அவ்வாறே இதரப்பிரிவுகளுக்கும் பெயராகும். ஒரு பாகத்தில் சந்திரன் நகரவேண்டிய காலமே நக்ஷத்ரமானம். இது 55 நாழிகை 56 வினாடிமுதல், 66 நாழிகை 21 வினாடிவரை வித்யாஸப்படும். சந்திரன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நட்சத்திரத்துடன் கூடிக்காண்பதால், சந்திரனுக்கு 27 மனைவிகளென்றும், ஒவ்வொருவர் கிருகத்திலும் ஒருநாள் தங்குகிறானென்றும் கவிகள் கூறுவர். சந்திரன் கூடியிருக்கும் நட்சத்திரமே தினத்தின் நட்சத்திரமெனப்படும்.

* ஒரு வட்டத்தை 360 பாகமாய்ப்பிரித்தால் ஒருபாகத்துக்கு ஒரு பாகை அல்லது டிகிரி யெனப்பெயர்.



யோகமாவது.— சந்திரன் சூரியனையபேட்சித்து 13⅓ பாகை நகருவதற்கு வேண்டிய காலமாகும். யோகங்கள் 27-க்கு 360 அல்லது ஒருவட்டம் பூர்த்தியாகிறது நட்சத்திரத்தை யபேட்சித்துச் சந்திரகதி நிர்ணயிக்கப்படுவதால், யோகமானத்தால் நட்சத்திரத்தை யபேட்சித்து சூரியனுடைய தினகதியை ஊகிக்கலாம்.

கரணங்கள் பதினொன்று.— கரணம் திதியில் பாதி. சூரியனையபேட்சித்துச் சந்திரன் 6 பாகை விலகுவதற்கு வேண்டியகாலம் ஒரு கரணமெனப்படும்.

வாரம் (கிழமை), திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்துமே காலத்தை நிர்ணயிக்கும் ஐந்து அங்கங்கள். இவைகளின் அட்டவணையே பஞ்சாங்கம் எனப்படும்.

சூரியசந்திரர்களுடைய கதியும் கிரகங்களின் சாரங்களுமே காலப்போக்கை நிர்ணயித்தும் காலரீதியை மாற்றியும் வருகின்றன. சூரியசந்திரர்களே நமக்குப்பிரத்யக்ஷ தெய்வங்கள். நமது வாழ்க்கையில் ஒவ்வொருவிஷயமும் அவர்களாலேயே ஆளப்படுகின்றது. சூரியப்பிரகாசத்தாலேயே ஆயுள் விருத்தியடைகின்றது; ஜீவராசிக்கே சூரியன் தான் பிரத்யக்ஷ காரணம். சந்திரன் மனதுக்கதிபதி. அமாவாஸை, பௌர்ணமி, காலங்களில் பித்தேறியவர்களும், இதர வியாதியுள்ளவர்களும் அதிகமாய்த்துன்புறுவதை நாம் பன்முறை நேரில் கண்டிருக்கின்றோம். இந்த அறிவு வெகுஸ்தூலம். இவ்வாறே நீண்ட ஆராய்ச்சியாலும் அதிநுட்பமான அறிவாலும் அநுபவத்தாலும் பூர்வீக ஆரிய சிரேஷ்டர்கள் வெகு ஸூட்சும மான உண்மைகளை உணர்ந்து ஜோதிஷ சாஸ்திரத்தை யுத்பத்தி செய்திருக்கவேண்டுமென்று தான் நாம் கொள்ளவேண்டும். சிலர் அறியாமையால் கூறும்வண்ணம் இந்த சாஸ்திரத்தில் உண்மையில்லையெனக்கொள்ளல் தவறு; இக்காலத்தில் அதைச்செவ்வையாயறிந்தோரில்லையென்றே நாம் வருந்த வேண்டியிருக்கிறது.

## துன்மதி௵ உத்தராயணம் வஸந்தருது வைகாசி௴

(கிறிஸ்துசகம் 1921, மே-ஜூன்௴)

| மே ஜூன் | வைகாசி | வார | திதி | நட்சத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 14 | 1 | சனி | ஸப்-10-7 | ஆயி-34-25 | |
| 15 | 2 | ஞா | { அஷ்-4-44<br>{ நவ-60-0 | மக-31-16 | |
| 16 | 3 | திங் | தச-56-1 | பூர-28-48 | விவாக முகூர்த்தம் |
| 17 | 4 | செவ் | ஏகா-52-53 | உத்-27-7 | ஸ்மார்த்த ஏகாதசி, பயிரிட |
| 18 | 5 | புத | த்வா-50-35 | ஹஸ்-26-17 | வைஷ்ணவ ஏகாதசி; விவாகமு |
| 19 | 6 | வியா | த்ர-49-13 | சித்-26-20 | பிரதோஷம், பயிரி [கூர்த்தம் |
| 20 | 7 | வெ | சசி-48-50 | சுவா-27-20 | நரசிம்மஜயந்தி-கரிநாள் |
| 21 | 8 | சனி | ○-49-31 | விசா-29-22 | வைசாக பௌர்ணமி |
| 22 | 9 | ஞாய | ப்ர-51-17 | அனு-32-26 | |
| 23 | 10 | திங் | த்வி-54-13 | கேட்-36-37 | விவாக முகூர்த்தம் |
| 24 | 11 | செவ் | த்ரி-58-15 | மூல-41-54 | |
| 25 | 12 | புத | சது-60-0 | பூரா-48-9 | |
| 26 | 13 | வியா | சது-3-14 | உத்ரா-55 7 | கிருகாரம்பம், கிருகப்ரவேச, |
| 27 | 14 | வெ | பஞ்-8-54 | திரு-60 0 | அக்னிநக்ஷத்ரமுடிவு [பயிரிட |
| 28 | 15 | சனி | ஷஷ்-14-51 | திரு-2-28 | |
| 29 | 16 | ஞா | ஸப்-20-37 | அவி-9-43 | கரிநாள் |
| 30 | 17 | திங் | அஷ்-25-38 | சத-16-21 | கரிநாள் |
| 31 | 18 | செவ் | நவ-29-24 | பூ-ட்-21-50 | |
| 1 | 19 | புத | தச-31-30 | உ-ட்-25-45 | |
| 2 | 20 | வியா | ஏகா-31-43 | ரேவ-27-50 | ஏகாதசி |
| 3 | 21 | வெ | த்வா-29-57 | அசு-27-59 | பிரதோஷம் |
| 4 | 22 | சனி | த்ர-26-20 | பர-26-18 | கிருத்திகை |
| 5 | 23 | ஞா | சசி-21-5 | கார்-22-58 | |
| 6 | 24 | திங் | ●-14-30 | ரோ-18-20 | |
| 7 | 25 | செவ் | { ப்ர-6-59<br>{ த்வி-58-55 | மிரு-12-47<br>திரு-6-43 | |
| 8 | 26 | புத | த்ரி-50-44 | { புன-0-36 | |
| 9 | 27 | வியா | சது-42-47 | { பூச-54-48 | |
| 10 | 28 | வெ | பஞ்-35-26 | ஆயி-49-40 | |
| 11 | 29 | சனி | ஷஷ்-28-58 | மக-45-29 | |
| 12 | 30 | ஞா | ஸப்-23-35 | பூர-42-25 | |
| 13 | 31 | திங் | அஷ்-19-26 | உத்-40-38 | |

| | | | |
|---|---|---|---|
| | சுக்ர<br>அ | ரவி-செ<br>புத | |
| | 13-43-29-மிதுபுத<br>25-49-14-மிருசெ | | |
| | | | குரு<br>சனி |
| | | ராகு | |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

இந்தியா, பர்மா, ஸிலோன், பெனங்கு, சிங்கபூர், போர்னியோ முதலிய இடங்களில் பரவிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

தமிழர்களுள்ள இடங்களிலெல்லாம் உலவிவரும் இப்பத்திரிகையில் விளம்பரம் செய்பவர்கள் தகுந்த லாபமடைவார்கள். இதை முன்னேற்றம் கருதும் வியாபாரிகள் கவனிக்க வேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | வருஷம் ஒன்றுக்கு | | அரை வருஷம் | | மூன்று மாதங்கள் | | தனிப் பிரசுரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | ரூ. | அ. | ரூ. | அ. | ரூ. | அ. |
| முழுப் பக்கம் | ... | 90 | 0 | 48 | 0 | 25 | 0 | 10 | 0 |
| அரைப் பக்கம் | ... | 48 | 0 | 25 | 0 | 13 | 0 | 5 | 0 |
| கால் பக்கம் | ... | 25 | 0 | 15 | 0 | 8 | 0 | 3 | 0 |

1. விளம்பர விகிதம் முன்பணமாகக் கட்டப்படவேண்டும்.

2. வெளிப்பக்க விளம்பரங்களுக்கு மேற்கூறிய கட்டணங்களில் 100-க்கு 50 வீதம் அதிகமாகக் கட்டவேண்டும்.

3. ஆங்கிலத்திலுள்ள விளம்பரங்களை இலவசமாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்படும்.

மானேஜர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், மயிலாப்பூர்.

சந்தாதாரர்களுக்கு:—

1. நம் பத்திரிகையைத் தாங்கள் வாசிப்பதுடன் நமது நண்பர்களுக்குக் காண்பித்து அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேரத் தூண்டும்படி வேண்டுகிறோம்.

2. விலாஸம் மாற்றப்படவேண்டுமாயின், புது விலாசத்தைத் தெளிவாய் எழுதவேண்டும். எவ்விஷயத்தைப்பற்றியாவது மானேஜருக்கு எழுதும்போது சந்தாதாரர்கள் தமது சந்தா நெம்பரைத் தெரிவிக்கவேண்டும்.

## அதாக்ஷ மதுரபாபு அவர்களின் சக்தி ஔஷதாலயம்.

தலை ஆபீஸ்:—டக்கா.

கிளை ஆபீஸ்கள்—கல்கத்தா, காசி, சென்னை.

1901 ஹு௵த்தில் ஏற்படுத்தப்பட்ட இவ்வௌஷதசாலை பூர்விக ஆயுர்வேத சாஸ்திரங்களில் விதித்தபடி மிகச் சிறந்ததும், வியாதிகளைக் கண்டிப்பதுமான பல ஸித்த ஔஷதங்களைச் செய்து, பொதுஜனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றது.

பிரமுகர்களான பல வைத்தியர்களும், கனவான்களும் நமது ஔஷதங்களை உபயோகித்து குணமடைந்ததாக நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மாக்ஷிமை தங்கிய வங்காள கவர்னர் பின்வருமாறு நமது ஔஷதாலயத்தைப் பற்றிக் கூறுகிறார்:—

சென்னை ஜூலை௴ 17௳ நான் சக்தி ஔஷதாலயத்தைப் பார்வையிட்டேன்; ஆலயத்தின் சொந்தக்காரரான பாபு மதுரமோஹன சக்ரவர்த்தி B, A, அங்குள்ள எல்லாவற்றையும் எனக்குக் காட்டினார். அங்குள்ளவைகள் எல்லாம் எனக்கு மிகவும் திருப்தியைத்தந்தன; ஔஷதங்கள் இவ்வளவு அதிகமாகச் செய்யப்படும் ஆலயம் ஒன்றிருப்பதைப் பார்த்து நான் மிகவும் ஆச்சரிய மடைந்தேன். அபூர்வமான பல உலோகங்களி லிருந்தும் மூலிகைகளிலிருந்தும் மருந்துகள் பல நான் சென்றபோது தயார் செய்யப்பட்டிருந்தன; பல வைத்ய நிபுணர்கள் முறைகளைக் கவனித்து வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர். பொதுஜனங்கள் அனைவரும் தம் மருந்துகளை வாங்கி யுபயோகிக்கவேண்டு மென்பது சொந்தக்காரரின் எண்ணமாதலால், மருந்துகளைக் கூடியவரையில் குறைந்த விலையில் விற்பனை செய்கிறார். ஔஷதாலயத்தைச் சேர்ந்த ஓர் பள்ளிக்கூடத்தில் இருபது பிள்ளைகள் இலவசமாக உணவும், தங்கஇடமும் பெற்று, தத்வசாஸ்திரமும் ஆயுர்வேதமும் கற்கின்றனர்.

பூர்விக சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள விதிப்படி ஔஷதங்களைத் தயார் செய்வதை, பாபு மதுரமோஹன, சக்ரவர்த்தியவர்கள் மிகவும் மேலான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்; நாளுக்குநாள் அவருடைய ஔஷதாலயம் ஓங்கி வளருமென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

ஸ்ரீமத் ப்ரஹ்மானந்த ஸ்வாமிகள், ஸர் ஹென்றி வீலர், கனம் பொருந்திய மஹா ராஜாதிராஜ பர்ட்வான் மஹாராஜா அவர்கள், வங்காள சட்டசபையின் தலைவரான நவாப் ஸர் ஸையத் ஷம்ஸுல் ஹுடா, முதலிய பல கனவான்கள் நமது ஔஷதாலயத்தைப் பார்வையிட்டு, மிகவும் சிலாகித்துக் கூறியிருக்கிறார்கள்.

### சில ஔஷதங்கள்.

ஸரிபாத்யரிஷ்ட:—ரக்த சுத்திக்கும் தாதுபுஷ்டிக்கும் கைகண்ட மருந்து:—சேர் 1-க்கு விலை ரூ. மூன்று.

அம்ருதாரிஷ்ட:—மலேரியா முதலிய கடுஞ்சுரங்களுக்குத் தகுந்த ஔஷதம்:—சேர் 1-க்கு ரூ. மூன்று.

ச்யவனப்ராசம்:—இருமல், கபம், பலக்குறைவு முதலிய ரோகங்களுக்கு-விலை ஒரு சேருக்கு மூன்று ரூபாய்.

மகரத்வஜம்:—(ஸர்வரோக நிவாரணி) தோலா ஒன்றுக்கு ரூபாய் நான்கு.

தசன ஸம்ஸ்கார சூர்ணம்:—டப்பி ஒன்றுக்கு அணா மூன்று.

மஹா ப்ருங்கராஜ தைலம்:—சிறந்த ஆயுர்வேத தைலம். சேர் ஒன்றுக்கு விலை ரூபாய். ஆறு.

சென்னை ஆபீஸ்:—22, பிராட்வே, சென்னை.


# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.


தொகுதி 1] துன்மதி௵ ஆனி௴ [பகுதி 6


உ

## கடவுள் வணக்கம்.

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினொ டுருகி விழிநீ
ராறாக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத் தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்கள்
தொழுதருகில்வீற் றிருப்பச்
சொல்லரியநெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபானுபூதி காட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

---

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிங் காட்டினோமே.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 7: அத்தியாயம் 2.

### கர்மத்தைப்பற்றிய ஐரோப்பிய அபிப்பிராயம்.

பிரம்மஸமாஜத்து அங்கத்தினரான பிரதாபசந்திர மஜூம்தார் அங்கு வந்து பகவானை வணங்கினார். பகவானும், தமது வழக்கமான வினயத்துடன் தாழ்மையாகத் திரும்பி வணங்கினார்.

பிரதாப்:—ஸ்வாமி, நான் ஸமீபத்தில் டார்ஜீலிங்குக்குப் போயிருந்தேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—அதினால் உமக்கு விசேஷமான குணம் ஏற்பட்டதாகத் தெரியவில்லையே. என்ன உடம்புக்கு?

பிரதாப்:—அவருக்கு (கேசவசந்திரசேனர்) வந்த வியாதியேதான். கேசவரின் சரித்திரத்தைப் பற்றிப் பேச்சுண்டாகிறது. பிரதாப் இதில் கலந்து சொல்லுகிறார்:—"கேசவருக்கு பாலியத்திலேயே வைராக்கியம் உண்டாயிருந்தது. சிரிப்பும் விளையாட்டும் அவரிடம் இல்லை. ஹிந்து காலேஜில் படிக்கும்பொழுது "எஸ்—" உடன் மிகவும் சிநேகமானார். அதினால்தான் "எஸ்—" உடைய தகப்பனாரும் மகாபூஜ்யருமான தேவேந்திரநாத் தாகூரது பிரியம் ஏற்பட்டது..........கேசவர் பக்தியும் தியானமும் இரண்டும் அப்பியாசம் செய்தார். பக்தி மிகுதியால் பிரக்ஞையற்றுப் போவதுண்டு. ஆனால் அவ்வழக்கத்தை அடக்கி வைத்துக் கொண்டிருந்தார். அத்தியாத்ம தர்மத்தை கிரஹஸ்தனுக் கெட்டும்படிச் செய்வதுதான் தன் வாழ்நாளின் கருத்தாக எண்ணினார்."

பிறகு ஒரு மஹாராஷ்டிர சீமாட்டியைப்பற்றி பேச்சுண்டாயிற்று. அவள் இங்கிலாந்துக்குப்போய் கிறிஸ்து மதத்தைத் தழுவினதாக பிரதாப் சொன்னார். அவளைப் பற்றிக் கேள்வியுற்றதுண்டா வென்று பகவானைக் கேட்டார். பகவான் அதற்கு "இல்லை; நான் இப்பொழுது கேட்டதிலிருந்து அவள் தனக்கு பேர் சம்பாதிப்பதிலேயே நோக்கமுள்ளவளென்று தோன்றுகிறது" என்றார்.

சுற்றி யிருந்தவர்களைப் பார்த்துச் சொல்கிறார். இவ்வித அஹங்காரம் திரஸ்கரிக்கத் தக்கது. கீர்த்தியை நாடுபவர்கள் மோஹத்தினால் மயங்கி யிருக்கிறார்கள். ஸகலமும் ஸர்வலோக நியந்தாவான பரம்பொருளினது ஆக்ஞைக்குள்பட்டு நடக்கிறதென்பதையும், எல்லாக் கீர்த்தியும் அவனதே யன்றி வேறல்ல வென்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஞானிகள் "பிரபோ! நீயே! நீயே!" என்று எப்பொழுதும் சொல்கிறார்கள். மூடர்களான அஞ்ஞானிகளோ "நான், நான்" என்கிறார்கள்.

கன்றுக்குட்டி "ஹம்மா, அஹம்." என்கிறது. இப்படி "அஹம், நான்" என்று சொல்வதினால் அதற்கு வரும் ஆபத்துகளைப் பாருங்கள். அதை அடிக்கடி வயலில் கொண்டுபோய் ஏரில் கட்டியடித்து, நாள் முழுவதும் வெயிலிலும் மழையிலும் வேலை வாங்குகிறார்கள். இது போதாதென்று பெரும்பான்மையும் கசாப்புக்கடைக்காரன் கையினால் கொல்லப்படுகிறது. அதன் மாமிசத்தைப்



புசித்துவிட்டு அதன் தோலைச் செருப்பாக்கி காலில்போட்டு வீதியெல்லாம் தேய்ப்பதோடு, மத்தளங்களுக்குப் போட்டு அதைத் தயவின்றி கையினாலும் கோலினாலும் மொத்துகிறார்கள். தோலாக அது படும்பாட்டைச் சொல்லி முடியாது. அதின் குடலிலிருந்து நரம்புத் தந்திகள் செய்து பஞ்சடிப்பவர்களின் வில்லுக்குப் போட்டபிறகு தான் அதின் துக்கம் ஒருவாறு ஓய்கிறது. அது ஏனெனில் அப்பொழுது 'ஹம்ம' (நான்) 'ஹம்ம' (நான்) என்று சொல்லுகிறதில்லை. 'தூஹூம்' 'தூஹூம்' (பிரபோ! நீதான்! நீதான்!) என்கிறது.

எல்லாம் இறைவன் அருளால் வருகிறதே யென்றுணர்ந்து 'நான்' 'என்னை' 'எனது' என்பதை முற்றிலும் விட்டு தன்னை யவன்வசம் எவன் ஒப்புவிக்கிறானோ அவனுக்குத்தான் முக்தி சித்திக்கும்.

கடவுளைப் பார்த்தவன்தான் உண்மையான ஞானி. அவன் குழந்தையைப்போலாய் விடுகிறான். குழந்தைக்கும் ஒரு தனிவியக்தி யிருப்பதுபோல் தோற்றுவது வாஸ்தவமே. ஆயினும் அது தோற்றமே யொழிய உண்மையாயில்லை. குழந்தையின் அஹங்காரம் வயதானவர்களது அஹங்காரம் போலன்று.

பகவானைப் பார்த்ததினால் முற்றும் மாறுதலை யடைகிறான்.

எஃகினாற்செய்த வாளானது மாயக்கல்லின் ஸ்பர்சம்பட்ட வுடனே ஸ்வர்ணமாக மாறிவிடுகிறது. வாளின் ஸ்வரூபத்தை யிழக்கவில்லை. ஆனால் எவருக்கும் தீங்கிழைக்கும் தன்மையை யிழந்துவிட்டது. நமது அஹங்காரம் ஈசுவர தரிசனத்தால் சுத்தி செய்யப்பட்ட பிறகு ஒருவருக்கும் தீங்கிழைக்காது.

இன்னும், குழந்தையின் அஹங்காரம் கண்ணாடியில் பிரதிபிம்பிக்கும் முகம்போல். பிரதிபிம்பம் முகம்போலவே யிருக்கிறது. ஆனால் அது ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாது.

ஈசுவர தரிசனமடைந்தவனுடைய அடையாளங்களாவன:—அவன் குழந்தையைப்போல் நடந்து கொள்வான். சிலசமயம் பேய்போல் தோற்றுவான்; தன் சரீரத்தைக் கவனிக்கமாட்டான்; சுசிக்கும் அசுசிக்கும் வித்தியாசம் தெரியாதவன் போலிருப்பான்; ஏனெனில் ஒவ்வொன்றிலும் அவன் கடவுளைப் பார்க்கிறான். ஒரு ஸமயம் சிரித்துக்கொண்டும், ஒரு ஸமயம் அழுதுகொண்டும், மறுஸமயம் தனக்குத்தானே பேசிக்கொண்டும்; ஒரு ஸமயம் கனவானைப்போல் உடைதரித்துக்கொண்டும், மறுஸமயம் தன் ஒரே வஸ்திரத்தைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு நிர்வாணமாயும், இப்படிப் பைத்தியக்காரனைப்போ லிருப்பான். கடைசியில் கேவலம் ஜடத்தைப்போலாவான்.

பகவான் (பிரதாபசந்திர மஜூம்தாரைப்பார்த்து):—நீர் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போயிருந்தீரே. அங்கே நீர் பார்த்ததைச் சொல்ல வேண்டும்.

பிரதாபர்:—ஸ்வாமி! இங்கிலீஷ்காரருடைய ஜாதிசுபாவத்தை ஒரு வார்த்தையில் திரட்டிச் சொல்லலாம். அதாவது, தாங்கள் 'காஞ்சன' மென்று சொல்லும் வஸ்துவின் வழிபாடே. ஆயினும் இதற்குமாறாக சிலாக்கியமான குணவான்களும் சிலர் இருப்பதை நான் சொல்லவேண்டும். சாதாரணமாக எங்கும் ரஜஸ்—லௌகீக விஷயங்களில், உத்யோகம்—தான் காணலாம். அமெரிக்காவிலும் அப்படியே.

## ஸ்ரீராமகிருஷ்ணர் கர்மயோகத்தைப்பற்றிச் சொன்னது.

அதற்கு பகவான் சொல்லுகிறார்:—இங்கிலீஷ்காரருக்கும் அமெரிக்கா ஜனங்களுக்கும் முக்கிய குணமாக நீர் சொன்ன கர்மஸங்கம்—கர்மவிச்சை—எல்லா மனித ஜாதியாருக்கும் உள்ளது. ஆனால் அது ஜீவதசையின் தாழ்மையைக் குறிக்கிறது. செல்வம், மரியாதை, கீர்த்தி முதலிய இஹ நன்மைக்காக ஒருவன் செய்யும் கர்மம் இழிவானது. இவ்விதமான ரஜோகுணப் பிரவர்த்தி, தமஸாகிய அஞ்ஞானத்தை அதிகரிக்கத்தான் செய்யும். கடவுளை மறக்கவும், காமினீ காஞ்சனத்தை—பெண்ணையும், பொன்னையும்—பற்றவும் செய்யும். ஆகையினால் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், காணப்படும் கர்மவிச்சை ஆத்ம நாசத்தை விளைவிப்பதால் தள்ளத்தக்கது.

ஆனால் கர்மத்தை விட்டொழிக்கவும் முடியாது; ஏனெனில் பிரகிருதியானது உன்னைக் கர்மத்திலேயே முயலச் செய்யும். அப்படியிருப்பதினால், காமமெல்லாவற்றையும் எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்யவேண்டும். அபிமானமின்றி கருமஞ் செய்யப்பட்டால், அது கடவுளையடையச் செய்யும். அப்படிச் செய்யப்பட்ட கர்மம் கடவுளையடைய ஒரு சாதகமாகிறது.

அபிமானமற்றுக் கர்மம் செய்வதாவது, வெகுமதியடையும் ஆசையும், தண்டனையின் பயமும் இன்றி வேலை செய்வதே.

ஆனால் பற்றற்றுக் கர்மம் செய்தல் இக்கலியுகத்தில் மிகவும் கஷ்டம். ஏனெனில் அதற்கு ஞானமாவது, பக்தியாவது வேண்டும். உத்தமபதவியடைந்தவர்களுக்குத் தான் பற்றுதலற்றுக் கர்மம் செய்து வாழ முடியும். மற்றவர்கள் தெரியாமலே எளிதில் விஷயப்பற்றுதலை யடைகிறார்கள்.

ஆகையினால் பக்குவமடையாத நாம், நமது உயர் வாழ்வின் உத்தேசமாகிய கடவுளையடைய இலகுவான வழியைக் கண்டு பிடிக்க வேண்டியது நமது கடமை. நமக்கு அவசியம் வரும் கடமைகளைச் செய்யவேண்டும். நமது கர்மத்தை உருக்கமான பக்தியினாலும், ஆத்மத்தியாகத்தினாலும் எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவும் குறைக்கவேண்டும்.

இக்காலத்தில் பற்றற்று கர்மம் செய்வது கடினமாகையால், நாரதரால் சொல்லப்பட்ட பிரேமை, சிரத்தை இவைகளாலடையும் பக்தியோகமே கர்மயோகத்தையும் ஞானயோகத்தையும் விடச்சிறந்தது.

மற்றயோகங்களைவிட பக்தியோகத்தினால் கடவுளை எளிதில் பார்க்கலாம்.

ஆயினும் ஒருவனாலும் கர்மத்தை விலக்கமுடியாது. ஒவ்வொரு எண்ணமும் காமமே. 'நான் உணர்கிறேன்' 'நான் நினைக்கிறேன்' என்னலும், உணர்வும் காமமே. பக்தி மார்க்கத்திலிருந்து செய்யும் கர்மம் பிரேமையினால் இலகுவாய் விடுகிறது.

முதலில், பக்தனது மனது பரமபுருஷார்த்தமாகிய கடவுளின் மீதே நாடியிருப்பதால் அவன் செய்யும் வேலை தானாகவே குறைந்துவிடுகிறது. இரண்டாவது, பற்றற்று வேலைசெய்யச் சாதகமாயிருக்கிறது. ஏனெனில், கடவுளிடத்து பிரியத்தை வைத்தவன், தனம், சிற்றின்பம், கீர்த்தி, அதிகாரம், இவைகளிலும் பிரியத்தைச் செலுத்தமுடியாது. சர்க்கரைக்கண்டினால் செய்த ஷர்பத்தைச் சாப்பிட்டு ருசிகண்ட ஒருவன் வெல்லத்தினால் செய்த பானகத்தைத் தேடமாட்டான்.



கர்மத்தையே பரம புருஷார்த்தமாகக் கருதுவதைவிட அதிகமான பிசகு கிடையாது. மனுஷ்ய ஜன்மமாகிய நூலுக்கு கர்மம் முதல் அத்தியாயமே; ஈசுவரன் தான் முடிவு.

ஒரு ஸமயம் சம்புவென்கிற கிரஹஸ்தன் என்னிடம் "ஆஸ்பத்திரிகளும் ஔஷத சாலைகளும், ரஸ்தா இல்லாத விடங்களில் ரஸ்தாக்களும், ஜலவரக்ஷியான காலத்தில் ஜன உபயோகத்திற்காகக் கிணறுகளும், பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் என்னால் கட்ட முடிந்தால் நான் பாக்கியசாலிதான்," என்றான். அதற்கு நான், "நீ இக்காரியங்களையெல்லாம் செய்வது நல்லதுதான். ஆனால், அவற்றைப்பற்றற்றுச் செய்யமுடியுமா? முடியுமானால் பகவானை யடையலாம்; இல்லாவிட்டால் முடியாது. பற்றற்றுக் கருமம் செய்வது மிகக்கடினம். எதற்கும் கருவியைக் காரியமாக நினைத்து விடாதே. கர்மம் பற்றற்றுச் செய்தல் ஒரு கருவி. ஈசுவரனை அடைவதே இச்சன்மத்தின் காரியம். மறுபடியும் சொல்லுகிறேன்: கருவியைக் காரியமாக நினைத்துவிடாதே; முதற்கெடியையே பயணத்தின் முடிவாக நினைத்து விடாதே" என்றேன்.

"ஆம்; கர்மத்தையே பரமபுருஷார்த்தமாக நினைத்துவிடக் கூடாது. பக்தி வரும்படி ஈசுவரனைப் பிரார்த்தி. கடவுளைத் தரிசிக்கும்படியான பாக்கியம் உனக்குக்கிடைத்ததென்றுவைத்துக்கொள்வோம். அப்பொழுது கடவுளை நீயென்ன பிரார்த்தித்துக் கேட்பாய்? ஆஸ்பத்திரிகளும், குளங்களும், கிணறுகளும், சாலைகளும், சத்திரங்களும் வேண்டுமென்று கேட்பாயா? ஒரு நாளும் மாட்டாய். நாம் கடவுளைப் பாராதிருக்கும்வரை இவைகள் நமக்கு உண்மையாக விருக்கின்றன. அத்திவ்யதரிசனம் கண்ணெதிரில்பட்டதும், இவைகள் உண்மையில், கனவு போல் நிலையற்றவையாகத் தென்படுகின்றன. கேவலம் மனுஷயஸ்திதியிலிருந்து விடுபட்டு நித்தியஸச்சிதானந்த மயமான அப்பரம்பொருளின் குழந்தையாக நம்மைப் பாவிக்கும்படியான அன்பும் அறிவும் கொடுக்கும்படி பிரார்த்திப்போம்."

"ஆகையால் நான் இப்பொழுது குறிப்பித்த மனுஷ்யஜன்ம உத்தேசத்தை, பரமபுருஷார்த்தத்தை மறந்து விடக்கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு கதை சொல்லுகிறேன்: கேளுங்கள்:—

ஒருவன் ஒருகாட்டில் விறகு வெட்டிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனை ஒரு நைஷ்டிகப் பிரம்மசாரி பார்த்து "மேலே போ" என்று சொன்னான். அவ்விறகுவெட்டி தன்விறகு சுமையை யெடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது அம்முனிவர் எதற்காக மேலே போகச் சொன்னார் என்று வியந்தான். சில நாட்கள் சென்றன. ஒருநாள் அவனுக்கு அம்மஹானது வார்த்தைகள் ஞாபகத்துக்குவர, இன்னும் கொஞ்சதூரம் தள்ளிப்போய் விறகு வெட்டலாமென்று தீர்மானித்தான். போகவே அந்தப்பக்கத்துக்காடெல்லாம் சந்தன மரங்களடர்ந்து இருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தான்; வண்டிவண்டியாக இம்மரங்களைக்கொண்டுபோய் விற்றுமிகவும் பணக்காரனானான். இப்படி கொஞ்சநாள் சென்றபிறகு "மேலே போ" என்று பெரியவர் தனக்கிட்டகட்டளை நினைவுவர, காட்டிற்குள் இன்னும் தூரம்சென்று பார்க்கவேண்டுமென்று தீர்மானித்தான். போகவும், ஒருநதியின் பள்ளத்தாக்கில் ஒரு வெள்ளிச் சுரங்கத்தைப்பார்த்து ஆச்சரியம் கொண்டான். இது அவன் கனவிலும் நினைத்திரான். சுரங்கத்தை வெட்டி வேலைசெய்து, ஏராளமான வெள்ளிகொண்டுவந்து விற்பனை செய்து

கோடீசுவரனானென்பது சொல்லவும் வேண்டுமோ? சிலவருஷங்களுப்பிறகு அப்பெரியவருடைய வார்த்தை திரும்பியும் ஞாபகத்துக்கு வர அவன், "அம்மஹான் என்னை மேல் போகச்சொன்னார். வெள்ளி சுரங்கத்தோடு நிற்கச்சொல்லவில்லையே." என்று நினைத்துக்கொண்டு அவ்வாற்றைக் கடந்து சென்றான். அங்கு ஒரு தங்கச் சுரங்கத்தையும், பின் ஒருவைரச் சுரங்கத்தையும் கண்டான். குபேரனைப்போல் தனிகனானான் என்று சொல்லவேண்டியதனாவசியம்.

ஆகையால் குழந்தைகளே! நீங்களும் மேலேசெல்லுங்கள். பரமபுருஷார்த்தத்தை மறந்து விடாதேயுங்கள். கடைசிஸ்தானம்சேருகிறவரையில் தங்காமற் செல்லுங்கள்.

கர்மம் இப்பயணத்தின் முதற்கெடியே. பற்றுதலற்று கர்மம் செய்வது மிகவும் கஷ்டமென்பதையும், இக்காலத்திற்கு பக்தி மார்க்கமே சிறந்ததென்பதையும், பற்றுதலற்றுச் செய்தபோதிலும் கர்மம் ஜன்ம ஸாபல்யத்தையடைய ஒரு கருவியேயன்றி, அதுவே பலனல்லவென்பதையும் மனதில் உறுதியாகக் கொள்ளவேண்டும்.

ஆகையால், கடவுளைக் காண்பதாகிய மனுஷ்ய ஜன்மத்தின் பரமபுருஷார்த்தத்தை அடைகிறவரையில், தயங்காமல் மேல் நடந்து செல்லுங்கள்.

---

அவதார புருஷர்கள் ஈசுவரப்ரதிநிதிகள். தன் தேசத்தில் ஏதாவதொரு பாகத்தில் குழப்பம் நேரிட்டால் அதையடக்க அரசன் தன் பிரதிநிதியையனுப்புவதுபோல், தருமம் க்ஷீணதசையடைந்து அதருமம் ஏற்றமடையும் போதெல்லாம் இந்நிலையைச்சீர்திருத்தி நல்லோரைப் பாதுகாத்தற்கும் தீயன செய்தோரை முற்றும் ஒழித்தற்கும் தருமத்தை நிலைநாட்டுதற்கும், அவதார புருஷனையவர் அனுப்புவிக்கிறார்.

ஸ்ரீராமர், கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்து இவர்போன்ற அவதார புருஷர்களுக்கும் பரம்பொருளுக்கு முள்ள சம்பந்தம் சமுத்திரத்துக்கும் அதன் அலைக்கு முள்ளதைப்போன்றது.

—ஸ்ரீராமகிருஷ்ண தேவர்.

* * *

ஈசுவரன் மனிதனையதின் கருத்து: மனிதன் ஈசுவரனாக வேண்டு மென்பதே.

—மேஸ்டர் எகார்ட்.

* * *

பிறவாதவனானாலும், குறைவிலாத்தன்மையனானாலும், பூதங்களுக்கு ஈசுவரனானாலும், யான் என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்மாயையினால் அவதரிக்கின்றேன்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா-பகவத்கீதை.

உ

# துன்பவாள்

"நீரணிந்திருந்த ரோஜாமாலையின்மேற் கார்முற்று அதைக் கேட்கலாமென்று பன்முறை யாரம்பித்தேன். ஆனால் நாவெழவில்லை; பொழுதும் விடியுந் தருணமாயிற்று. நீரும் என்னை விட்டகன்றீர். படுக்கையில் இரண்டொரு இதழ்களாவது உதிர்ந்திராவோ வென்று தேடினேன்.

"என்ன புதுமை! உம்மன்பின் அறிகுறி யிதுவோ? புஷ்பமில்லை; சந்தனமில்லை; பரிமளப் பன்னீரில்லை; வஜ்ராயுதத்தைப்போல் விளங்கும் உம்முடையவாள்!

"சாளரத்தின் வழிவரும் சூரிய கிரணங்கள் மஞ்சத்தின்மேற் பரவுகின்றன. வெளியிலுள்ள பட்சியினங்கள், 'பெண்ணே நினக்கென்ன கிடைத்தது?' எனக் கேட்கின்றன. 'புஷ்பமில்லை, சந்தனமில்லை, பரிமளப் பன்னீரில்லை; வஜ்ராயுதத்தைப்போல் விளங்கும் உம்முடைய பயங்கரமான வாள்!'

"நான் உட்கார்ந்து இப்புதுமையைப்பற்றிச் சிந்திக்கின்றேன். இதையொளித்து வைக்கவும் ஓரிடங்காணேன். எனக்கு வெட்கமாயிருக்கிறது. வாளைக் கைவிடவும் மனமில்லை; அதைத்தரித்துக்கொள்ளவுந் திறனில்லை. அதை மார்போடு கட்டியணைத்துக்கொள்ளுகிறேன்; அதனால் நோவுண்டாகிறது. எனினும் இத்துன்பவாளை என்னிருதயத்தில் ஸதா தாங்கிச்செல்வேன்.

"இதுமுதல் இவ்வுலகில் எனக்கு பயமில்லை. எந்தப்போரில் சென்றாலும் நீரே ஜயமடைவீர். யமன் தான் நீரெனக்குக்காட்டிய தோழன். அவனுக்கு என் வாழ்வைப் பரிசளிப்பேன். என் பந்தங்களைச் சிதைக்க நீர் கொடுத்த வாளிருக்க எனக்கோரிடையூறுண்டோ ?

"இனியெனக்கெதற்குச் சிற்றலங்காரம்? என் இருதய கமலத்தில் வீற்றிருக்கும் பிராண நாதா! மூலைகளில் ஒளிந்து வெட்கிநிற்றலும், நின் பிரிவாற்றாமையால் கண்ணீர் விடுதலும், உம்வரவை நோக்கி வழிபார்த்து நிற்றலும் இனி யெனக்கில்லை. எனக்கினி நீரளித்த துன்பவாளே பூஷணம். மரப்பாவைக்கொத்த அலங்காரத்தையெல்லாம் வெறுத்தேன், விடுத்தேன்."

—கீதாஞ்சலி - ரவீந்திர நாத தாகூர்.

மேற்கூறிய மங்கை தன் நாதன் அணிந்திருந்த ரோஜாமாலையை யடைய விரும்பி சயனக்கிருகத்தில் அதைத் தேடவாரம்பித்ததின் பயனாய் பயங்கரமான வாளையடைந்ததின் உட்கருத்தாவது ஜீவாத்மா ஸச்சிதானந்தத்தை விரும்பி இவ்வுலக விஷய சுகங்களில் அதைத் தேடவாரம்பித்து அதன் பயனாய் பயங்கரமான வாள்போன்றுள்ள துன்பத்தையேபெறுகின்றதென்பதாம்,விவேகி

இத்துன்பத்தையும் ஈசுவரப்பிரஸாதமென வுணர்ந்து அதன் உட்கருத்தை யாராய்ந்து, துன்பவாளால் தன் பந்தங் களைந்து, அஃது இன்பநிலையடையுமாறு பரமகாருணிகனான ஸர்வலோக நாயகனால் கொடுக்கப்பட்டதெனக் கண்டுகொண்டு அதன் உதவியால் ஈடேற முயல்கின்றான்.

பெரியோர்களுடைய சரித்ரங்களை யாராய்வோமாயின் அவர்கள் பட்ட கஷ்டங்கள் அளவிறந்தன வென்பதும், அவர்கள் துன்பங்களை ஒருக்காலும் வெறுக்காமல் அவைகளையே தங்கள் முன்னேற்றத்துக்குற்ற நண்பர்களாகக் கொண்டனரென்பதும் தெள்ளென விளங்கும். துன்பம் வந்தக்காலே மனம் தூய எண்ணங்களில் செல்லுகின்றது; விஷய சுகங்கள் அற்பமென்பதையுணர்ந்து வைராக்கியத்தை யடைகின்றது. ஆனதுபற்றியே இயேசுகிறிஸ்வும் 'துன்புற்றவர் பாக்கிய சாலிகள்; ஏனெனில் அவர்கள் சீக்கிரமே இன்புறுவர்' என்றும் ஆகையால் 'துன்பத்தை வெறுக்காதீர்' என்றும் கூறியுள்ளார்.

சர்வேசுவரனிடம் பூரணவிசுவாசத்துடன் 'அவனன்றியோரணுவுமசையாது' அவனே ஆக்கியளித்துத்துடைப்பவன். அவன் செயலன்றி யொன்றில்லை யென்றுணர்ந்தவனாய்,'வருவன வெல்லாம் வருக, வாராதெல்லாம் ஒழிக' என்றிருக்கக் கடவன். இதுவே பக்தர்களுடைய மனோபாவனை. அவர்கள் இன்பத்தை விரும்புவதும் துன்பத்தை வெறுப்பதும் இல்லை. இதை ஜனங்களுக்கு விளக்கும் பொருட்டே கிறிஸ்து நாதர் "ஒருவன் உன் இடது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் வலது கன்னத்தையுங்காட்டு; ஒருவன் உன்னுடன் சண்டையிட்டு உன் வஸ்திரங்களிலொன்றைப் பிடுங்கிக்கொண்டால் அவனுக்கு மற்றொரு வஸ்திரத்தையுங் கொடுத்துவிடு" என்று கூறினார். பக்தர்கள் தமக்குத் தீங்கு செய்வோரையும் சிறந்த நண்பர்களாகவே கொள்கின்றனர்.

> சார்ந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
> யார்ந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
> குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
> மறைக்குமாங் கண்டீர் மரம்.

வாழ்க்கைப்பயனை உணரும் மார்க்கத்தில் துன்பமோர் சிறந்த துணை யென்பது பெரியோர் கொள்கை. "ரோஜாச் செடியின் வேரின்மீது பனித்துளிகள் விழும் பொருட்டு, சிற்சில வேளைகளில் தோட்டக்காரன் அவ்வேரைத் திறந்துவைக்கிறான். சிற்சில வேளைகளில் புஷ்பங்கள் பெரியனவாக வளரவேண்டி, அவ்வேர்களில் சிலவற்றை அவன் கத்தரித்துவிடுகிறான். அது போலவே நமது நிலைக்



குத்தக்கவாறு ஈசுவராக்ஞையால் நமது வாழ்க்கையில் ஸுகதுக்கங்கள் நிகழ்கின்றன என்று ஸ்ரீராமகிருஷ்ண தேவர் கூறுகின்றார். நோயால் வருந்தும் குழந்தைக்குத் தாய் தக்கமருந்தளிப்பதுபோல், பவநோயால் வருந்தும் ஜீவர்களுக்கு ஸர்வலோகமாதா அன்புடன், தக்க சிகித்ஸை செய்கின்றாள். தாயின் அன்பை உணராது குழந்தை மருந்தின் கைப்பை ருசித்துக் கதறுவதுபோல், ஜீவன் ஈசுவர காருண்ணியத்தை அறிய மாட்டாதவனாய்த் துன்பத்தின் அனுபவத்தால் வருந்துகின்றான். மருந்தின் குணத்தையறிந்த நோயாளி, மருந்து வாய்க்கு ருசியாயில்லாவிடினும், தன் க்ஷேமத்தைக் கருதி அதை வியாதி தீரும்வரை உண்ண விரும்புவதுபோல், விவேகியானவன் துன்பத்தையே மேன்மேலும் விரும்புகின்றான். ஆனதுபற்றியே குந்திதேவி, பாரதயுத்த முடிவில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை வணங்கி "ஹிருஷீகேச! துஷ்டனாகிய கம்சனால் இம்சிக்கப்பட்டவளும், வெகுகாலம் துக்கமடைந்தவளுமாகிய தேவகியை விடுவித்ததுபோல, நாதனாகிய நீர் என்னையும் விடுவித்தீர். என்னை என் புத்திரர்களுடன் அநேக ஆபத்துகளினின்றும் பலமுறையும் விடுவித்தீர். விஷத்தினின்றும், பெருந்தீயினின்றும், (அரக்குமாளிகை) இராட்சச தரிசனத்தினின்றும்(இடும்பன் முதலியவர்கள்) சூதாடும் சபையினின்றும், வனவாச கஷ்டத்தினின்றும், ஒவ்வொரு யுத்தத்திலும் அநேக மகாரதர்கள் பிரயோகித்த அஸ்திரங்களினின்றும் அசுவத்தாமன் பிரயோகித்த பிரம்மாஸ்திரத்தினின்றும் ஹே! கிருஷ்ணா! நாங்கள் உம்மால் ரக்ஷிக்கப்பட்டோம்.

ஜகத் குருவே! ஆபத்துக்கள் அடிக்கடி ஏற்படட்டும். ஏனெனில் அந்தந்த கஷ்ட காலங்களில் ஜனன மரண ரூபமாகிய ஸம்சாரத்தை நீக்கும் உம்முடைய தரிசனம் மறுபடியும் கிடைக்கு மல்லவா?

ஜன்மம், பிரபுத்தன்மை, வேத சாஸ்திர சிரவணம், தனம் இவைகளில் மேன்மையடைந்து கர்வங்கொண்ட மானிடன் தீனரக்ஷகனாகிய உம்மைக் கிருஷ்ணா, கோவிந்தா என்று சொல்லவும் மாட்டான்.

ஹே! தீனரக்ஷகா! நமஸ்காரம் நமஸ்காரம்" என்று பிரார்த்தித்தனள்.

ஸ்ரீமத் பகவத் கீதையில் பகவானும் "துயருற்றோர், உண்மையை நாடுவோர், பொருளை விரும்புவோர், ஞானி என நால்வகை ஜனங்கள் என்னைத் தொழுகிறார்கள்" என்று கூறியிருக்கின்றார். இந்நால்வருள் துன்புற்று ஈசுவரனை நாடுபவன் கீழ்ப்படியிலுள்ளவனாயினும் பகவத் ஸ்மரணத்தாலேயே ஞானியடையும் உத்தம லாபத்தையும் எளிதில் அடைகின்றான். மிருகஜாதியைச் சார்ந்த யானையும் துன்பமுற்றக்கால் மனம் ஒருமித்து 'ஆதி மூலமே' என்று

அலறியபொழுது பல்லாயிரம் ஆண்டுகள் கொடிய தவம்புரியும் ரிஷிசிரேஷ்டர்களும் காண்டற்கரிய பகவான் நொடிப் பொழுதில் தோன்றி ரட்சிக்கவில்லையா? திரௌபதி தேவியை ஸபையில் அவமானம் செய்ய துர்யோதனாதிகள் துணிந்தபொழுது, 'ஆபத்பாந்தவா' என்று மனத்தால் நினைத்த மாத்திரத்தில் அவள் துகில் அக்ஷயமாய் வளரும்படி யவர் அருளவில்லையா? ஆகையால் பகவானுடைய கருணைக்கு நம்மை எளிதில் உரித்தாக்கும் துன்பஸம்பவமும் நாம் விரும்பத்தக்கதேயாம்.

மனது துன்பத்தால் வருந்துங்காலமே ஞானோதயமுண்டாகின்றது. பகவான் கீதாசாஸ்திரத்தைப் போதிப்பதற்கு அர்ஜுனன் போர்க்களத்தில் மனந்தளர்ந்து நின்ற ஸமயத்தைக் கைக்கொண்டதொன்றே இதற்குப்போதுமான அத்தாட்சி. அர்ஜுனன் "கிருஷ்ணா! என் அவயவங்கள் சோர்கின்றன; வாயும் உலர்கின்றது, என் உடம்பில் நடுக்கமும் மயிர்க்கூச்சும் உண்டாகின்றன; காண்டிவமும் கையினின்று நழுவுகின்றது; என்மனமும் மயங்குகின்றது" என்று சோகத்தாற் பதைத்த மனத்தினனாய் நின்ற அவஸரத்தில் பகவான் ஞானோபதேசம் செய்வதால், எல்லோருடைய ஹிருதயத்திலும் வாசம் செய்யும் பரமாத்மா இப்பேர்க்கொத்த ஸமயங்களிலேயே நம்மைத் தடுத்தாட் கொள்ளுகிறாரென்பது உணரப்படும்.

ஏனெனில் துன்ப நுகர்ச்சியாலேயே அகங்காரம் நாசமடைகின்றது. அகங்காரம் அழியும்பொழுதே ஆத்மஸ்வரூபம் விளங்கும். இந்நிலையே ஸுகதுக்கங்களுக்கப்பாற் பட்ட ஆனந்தநிலை. இந்நிலையையே ஒவ்வொரு ஜீவனும் ஸதா நாடி நிற்கின்றான்.

இந்திரியங்களாலாவது மனத்தாலாவது இஃது உரைத்தக்கதுமல்ல, அனுபவிக்கத்தக்கதுமல்ல. மனிதன் இந்திரியங்களுக்கும் மனதுக்கும் அடிமைப் பட்டிருக்கும்வரை இந்நிலையையடையவியலாது. ஆனதுபற்றியே எல்லாசாஸ்திரங்களும் இந்திரிய நிக்ரகமும் மனோநிக்ரஹமும் அத்யாவசியம் எனக் கூறுகின்றன. மனம் போன போக்கெல்லாம் போய்க்கொண்டு, மனோரதங்களை யெல்லாம் பூர்த்திசெய்து மனதை வசப்படுத்த முயல்வது வீண்காரியம். இதுவே நாம் செய்துவருவது. இஃது நெய்யை விட்டு அக்னியை அவிக்க முயல்வதுபோலாம். ஆகவே ஸாதாரணமாய் இன்பமாய்க் கருதப்படும் விஷய சுகங்களில் வெறுப்புக்கொண்டு, ஸாதன மார்க்கத்தில் ஸுகத்தைவிட துக்கமே சிறந்த துணையெனக் கண்டு கொண்டு, துன்பம் என்னும் கூரியவாளை யேந்தி அதனால் காமக்குரோதாதி ராக்ஷதக் கூட்டங்களை யொருங்கே மாய்த்து, விவேகியானவன் இன்பநிலை யெய்துகின்றான்.

துன்பக் கடலிற் றுளைந்ததெல்லாந் தீர்ந்ததே
யின்பக் கடலி லிருமென்ன—வன்பிற்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரு மானந் தமே.

---

# அயுதர் கதை.

அமித தபோதனரான அகஸ்தியமஹா முனிவருக்குக் குருஸதிருசரான வாயிரம் சிஷ்யரிருந்தனர். அவர்களுள் ப்ரயுதரென்னுமொரு ரிஷியின் தனயர்களான அயுதர், நியுதர் என்னு மிருவர் குருசிச்ருஷையிலும் தபோநிஷ்டையிலும் இணையற்றவராய்த் தமதாசாரியரின் பிரேமைக்குப் பாத்திரராயிருந்தனர். இவ்விருவரும் அன்னபான வஸ்திராதிகள் ஹீனமாயினும் அதைச்சற்றேனும் மதியார். சரீர சிரமத்தையும் பாரார். அதிகாலை தொட்டு நடுநிசிவரையிலும் அப்பிரமத்தராய்த் தம் விரதத்தைச் செவ்வனே யனுஷ்டித்து வருவதுடன் தமது குருவினிட மத்தியந்த விசுவாஸமிருத்தி யவர்க்குத் தொண்டுபுரிந்து வருவார்.

இப்பேர்க்கொத்த வுத்தம சிஷ்யரிடத்தில் அம்முனிகுல சிகாமணியான வகஸ்தியர்க்கு அளவிலாவனுராக முண்டாகியது. 'என்னிடம் அபாரமான பிரேமையைச் செலுத்தி வருகிற இவ்விருவருக்கும் சுபமுண்டாகவருள் செய்யவேண்டும். இவர்களுக்குத் தக்க பெண்மணிகள் இப்பூவுலகிலிரார். பிரம்மதேவரது கிருகத்தில் நிருபமான லாவண்ணியவதிகள் இரண்டு கன்னிகைகளிருப்பதாய்க் கேள்வியுற்றேன். அவர்களை யிவர்க்குப் பாணிக்கிரகணம் செய்விப்பேனாக' என்று மனோநிச்சயங்கொண்டு அப்படியே யச்சுந்தரிகளைத் தன்னாச்சிரமத்துக்குத் தருவித்து அவர்களை முறையே வரிக்கும்படித் தன்னிருசிஷ்யர்களை வேண்டலும் அவர்களில் மூத்தவரான அயுதர் என்பவர் இதற்குடன் படவில்லை. அவருக்குக் கிரகஸ்தாசிரமத்திற் சற்றேனும் பற்றில்லை. ஆகவே, அகஸ்தியர் அத்தையல்களிருவரையும் நியுதருக்கு மணஞ்செய்வித்ததுமல்லாமற் றன் வாக்கியங்களை யாதரியாமற்றள்ளிவிட்ட அயுதரிடங் கடுஞ்சினங்கொண்டு அவரை மிகவேசித் தன்னாசிரமத்தினின்றுந் துரத்திவிட்டார்.

நியுதரோ வென்றால், தான்வரித்த மங்கையருடன் வெகுகாலங் கிருஹஸ்த தர்மத்திற் கழித்தும் அத்தருமத்தின் முக்கிய வுத்தேசத்தை மறவாது, இல்லறங் கைக்கொண்டும் பற்பல கால் மனத்துறவுபூண்டு, மோக்ஷமார்க்கத்தில் ஸதாகாலமும் திருஷ்டிவைத்து, இல்லறத்தை யதற்கொருசாதனமாக்கிச் சிற்றின்பமனுபவித்தும் பேரின்ப அனுபவநிலை தவறாது, தனக்குரிய கர்மானுஷ்டானங்களை யீச்வரார்ப்பணமா யாசரித்து வந்தார்.

அயுதரோ, தன் குருவினிடம் மனவருத்தம் கொண்டு வேறோரடவிக்கேகி யாங்கு பிரம்மசரிய விரதம் பூண்டுச் சரீர சுகங்களை வெறுத்துக் காமம், குரோதம் முதலியவற்றை யோட்டி, இந்திரியங்களைப் பந்தித்துக் கொடூரமான தவம்புரியலுற்றார். இவ்விதமிவர் வெகுகால மதிகடினமாகத் தவஞ்செய்ய இவர் நிஷ்டைக்கு இடையூறு செய்ய வெண்ணி யிந்திரனானவன் ஓர் விருத்தப் பிராம்மணர் வடிவங்கொண்டு அநேக சிஷ்யர்கள் புடைசூழ தன் மனையாளு மதிவார்த் தக்கியத்தினாற் றடமாடிக்கூட நடந்துவரவும் தமக்குப் பின்னாற்றங்கி மெள்ள மெள்ள நகர்ந்து வரும் ஓர் கன்றுடன் கூடிய பசுவையோர் சிறுவன் ஓட்டிவரவும் அயுதரின் ஆசிரமத்தை நோக்கி வருங்கால் சூரியாஸ்தமன காலமாகியது. அயுதரும் மாலைக்கிரியை முடிக்க வருகிலுள்ளவோர் நதிக்கேகு முத்தேசத்துடன் ஆசிரமத்தினின்றும் வெளிவர இருவரும் ஸந்தித்தனர். அயுதர் அக்கிழவரை யழைத்துச்சென்று அவர்க்கு ஆஸனமளித்து அர்க்கிய பாத்தியாதிகளா லவரையுபசரித்து அவர் விஜயஞ்செய்த காரணம் கேட்கலும் அவர் அயுதரை நோக்கிச் சொல்லலுற்றார்.

“ஓ பூஸுரோத்தமரே! என் வாசஸ்தானம் ஹிமாசலம். அமராவதியின்கணுள்ள நந்தனவனம் போன்ற என்னாச்சிரமத்தில் அநேகமாயிரம் பிரிய சிஷ்யர்கள் சிச்ரூஷை செய்ய தேவேந்திர விபவத்துடன் இந்த என் மனையாளோடு நான் வெகு காலமாயில்லற தர்ம மனுஷ்டித்து வருகிறேன். தற்காலம் தீர்த்த யாத்திரை செல்லும் மார்க்கத்தில் மஹனீயரான உமது தரிசனம் எனக்குப் பூர்வ ஜன்மசுகிருதத்தினால் வாய்த்தது. ஆயினும் எனக்கோர் ஸந்தேகம் மனத்திலங்குரித்தது. நீரேன் அகோரமாய்த் தவஞ்செய்து வருகிறீர்? எல்லாத் தருமங்களிலுங் கிருகஸ்த தருமம் மிகவும் உத்தமமானது. அதை விட்டு நீரிக்கடின நிஷ்டையிலிருப்பதின் காரணமென்ன?” எனவினவலும் அயுதர் தன் விருத்தாந்தமெல்லாவற்றையு மவருக்குச் சவிஸ்தரமாய்ச் சொல்லி, “விஷத்துக் கொப்பான விஷய சுகங்களைத் தவிர்த்துப் பிரம்மசரிய விரதத்தை அவலம்பித்து மோக்ஷத்தில் ஆகாம்க்ஷையுடையவனாய்க் கொடிய தவஞ்செய்கின்றேன்” என்று சொல்லக்கேட்டு அக்கபட விருத்தர் மந்தஹாஸம் செய்து தலையசைத்துச் சொல்லுற்றார்.

“உமது தந்தையரான பிரயுதர் என் அரிய தோழர்களிற் சிரேஷ்டர். ஆஹா! ‘ஒருவன் தானே தன் புத்திரனாய்ப் பிறக்கின்றான்’ என்னும் சுருதி மொழிப்படி நீர் பிரயுதரேயல்லாது வேறல்ல. உம்மைப் பார்க்க எனக்குண்டாகு மானந்தத்திற்களவில்லை. ஆயினும் உம் தர்மம் அவர் தருமத்துக்கு விருத்தமாயிருப்பது



என் மனதுக்கத்தியந்த கேதத்தை யுண்டுபண்ணுகிறது. நீர் மஹா அபராதத்திற்குப் பாத்திரரானீர். அய்யோ! குலதர்மத்தை யொழித்துத் தன் பிரிய குருவினாணைமீறி, நண்பர், ஸகோதரர், உற்றார், உறவினர் முதலிய எல்லோரையும் விட்டு, நாடுநகரங்களைத் துறந்து இந்த மஹாரணியத்தில் விருதாவாகக் கஷ்டப்படுகிறீர். நீரோ! அதிபாலியர். ஞானத்தை யனுஸந்திக்கும் வல்லமையுமக்கெவ்வண விருந்தபோதிலும் சிற்றின்ப சுகத்துக் கும்மைப்போன்ற சிறுவர் எக்காலாகிலு மாளாவது ஸஹஜம். அப்படியாகில் நீர் அதோகதியையடைவீர். விசுவாமித்திரர், பராசரர் முதலியவர்க்கும் வெல்லவரிய காமத்தை நீரெவ்விதம் மாய்ப்பீர். இதுவன்றியும் எல்லாத் தருமங்களையும் முறையேயனுஷ்டித்தாலன்றி யிகபரஞானங்களுமக் கெவ்வாறு கைக்கூடும்? கிருகஸ்த தர்மத்தையெவர் அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்கு மோக்ஷமும் அவசியம் கிட்டும். பதிவிரதையான மனையாள் தனக்கனுகூலமாயிருப்பின், தான் பெற்ற குமாரர் தன்னாணைமீறாராகில், ஸகோதரர் தன்னிடமதி வினயத்துடன் நடப்பாராகில், மருமகள் பொறுமை வஹித்துத் தன்னை மதிப்பாளாகில், தன் வயிற்றிலுதித்த பெண்மணிகள் தன்னைப் பெருமை செய்யில் கடனெனும் பிசாசந்தன்னை யணுகாதாகில், நிந்தை பராதீனம், இவை தன்னைக்கிட்டாவாயின், தர்மமார்க்கத்திற் செல்வம் தன்னை மேவியதினாற்றானுந் தன்னவர்களும் பிறருஞ் சந்தோஷத்துடன் சுகங்களைப் பொசிப்பாராகில், உசிதமான ஆசாரம், ஒழுக்கம் முதலியவை தன்னிடமமருமாகில் பிரம்மதேஜம் தன்னைவிட்டகலாதாகில் கிருகமேதியின் தர்மத்துக்குச் சமமான தருமமு முலகிலுண்டோ?”

எனலும், அயுதர், “ஸ்வாமீ! உம்மைப் போன்ற கற்றறிந்த பெரியோர் எப்பக்ஷத்தையுஞ் சிந்தாந்தஞ் செய்யவல்லவர்கள். ஆயினும் உம்வசனங்கள் யுக்தமல்ல. மமகாரம் விட்டவனுக்குச் சிநேகிதர், மனையாள், ஸகோதரர் இவர்களின் பந்தம் ஏது? அத்தியந்த மோக்ஷாஸக்தியுடையவர்கள் விஷயத்தில் நீருரைத்தனவெல்லாம் விபலமாகும். அவர்களை மன்மதன் அணுகமாட்டான். இல்லறம் நிறைவேற்றியும் முக்திபெற்ற ஜனகருக்கு நீர் ஸமமாவீரோவெனில், அந்த ஜனகரைப் போன்றவர்கள் எத்தனை பெயரிவ்வுலகின் கணிருக்கின்றனர்? அவர்களது ஸங்கியை மிகவும் அல்பம். சாம்பருக்குச் சமமாய்ச் சாரமற்ற கிருகஸ்த தர்மத்தைப் பலகாற் கொண்டாடுகிறீர். மேலும், தனமில்லாதவருக்குக் கிருஹஸ்த தர்மங்கள் நடக்கமாட்டா. தனமோ பூர்வ ஜன்ம ஸுகிருதத்தினாலல்லது கிட்டாது. அப்படியல்லாமற் கிட்டியும் எப்பேர்க்கொத்த மஹான்களையுங் காமத்தின் வசமாக்கி யவராது ஆத்துமா

வையும் கொல்லுவிக்கும். சிற்றின்பமும் பேரின்பத்துக் கிணையாமோ? சுந்தரிகளான மாதர்களினந்தம் முதிமையின் முன் வெல்லுமோ? ஆகையால், நான் பவம்வேண்டேன்."

என்று, அயுதர் ஒரே மனதாய்ச் சொல்லக்கேட்டு அம்மாயா பிராமணனாயிந்திரன் தன் காமதேனுவின் ஸகாயத்தினாற்றன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வெண்ணித்தன் பசுவையு மதின் கன்றையுமங்கேயே விட்டுச் சென்றான். மறுநாட் காலையில், அயுதர் தன்னாச்சிரமத்திற் கருகாமையிற் படுத்திருக்கும் அப்பசுவைப்பார்த்து "ஓஹோ! இது நேற்று நம்பால் வந்த கிழவரின் ஹோமதேனு. இதையவர் இங்கே விட்டுச் சென்றார் போலும்" என்று நினைத்தருகிற் சென்றதை நோக்குமளவில் அது மிகவும் துர்ப்பலமாயிருப்பதாய்த் தென்பட்டது. வாயிலிருக்கும் புல்லைத் தின்னாமலும், சரீரமாத்தியந்தம் புண்கள் நிறைந்ததினாலதைத் தொந்தரவு செய்யும் ஈக்களையுங் காகங்களையும் கூட ஓட்டவல்லமையற்றதும், வெகு சிரமத்துடன் சற்றெழுந்தும் உடனே கீழே விழுவதும், பால் கறக்கும் வேளைவரத் தன் கன்றினால் மிகவும் பிடிக்கப்பட்டதும், கண்களில் ஸந்தததாரையாய் நீர் சொரிவதும் மிகவும் தீனமான பார்வையையுடையதுமான அப்பசுவைப்பார்த்து மிகவும் ஸந்தாபமடைந்து நேற்று, இன்றைக்குள் இத்தேனு இவ்விதமாகக் காரணமென்ன வென்றறியாதவராய் அதைத் தன்னாச்சிரமம் சேர்த்து அதை யதிக சிரத்தையுடன் போஷித்து வந்தார். தன் ஸம்ரக்ஷணையை யிடைவிடாது கோரிய அப்பசுவின் மூலமாய்வர் தவம், அனுஷ்டானம் முதலிய கர்மங்களுக்கு எண்ணற்ற விகாதங்கள் சேர்ந்தன. ஜடபாதரைப்போற் சம்சாரத்தை முற்றிலுந் தியஜித்தும் அஃதிவரை விட்டகலவில்லை.

சிற்சில நாட்களில், அப்பசுவின் ஜாட்டியம் எல்லாம் நீங்கியதும் அது தன் ஸ்வபாவபலத்தை யடைந்துச் சூல் தரித்து மிகவும் செருக்குடனக் காட்டிலிங்கு மங்குந் திரிய வாரம்பித்தது. காட்டிலுள்ள தவசியர்கள் பயிர்களைச் சதாகாலமும் மேய்வதும் அவர்கள் ஆஹாரார்த்தமாய் விருத்தி செய்யும் கந்த மூலங்களையடியோடழிப்பதும், அவர்கள் கர்மங்களுக்கு அத்தியாவசியமான தர்ப்பையை நிர்மூலமாக்குவதும், அவர்கள் ஆசிரமத்துக் கலங்காரமாய் வளர்க்கிற மான்களின் கர்ப்பங்களைத் தன் கர்ஜனையினாலக் கணமே வெளியாக்குவதும் அப்பசுவின் ஸஹஜ கிருத்தியமாயிருந்தது. ஆகவே தன் விரதானுஷ்டானங்களை முற்றிலும் விபலமாக்கி மற்றத் தவசிகளுக்கும் பெருந்துன்பத்தை விளைவிக்கும் அவ்வாவைக் கன்றுடன் அக்காட்டினின்றுந் துரத்த வெண்ணி அயுதர் அதையாச்சிரமத்தை விட்டு வெளிப்படுத்தி யோட்டிச் செல்லும்போது



அவ்விந்திரன் தேனு மார்க்கத்தில் புற்று நிறைந்தவோர் உயர்ந்த மண்மேடேறி யதைத் தன் குளம்புகளாலும் கொம்புகளாலும் பெயர்க்க வாரம்பித்த மாத்திரத்தில் அதினுள்ளிருந்து ஓர் முனிச்சிரேஷ்டர் தன் ஸமாதி கலைந்ததினாலுண்டான கடுஞ்சினத்தை நிரூபிக்கும் சிவந்த கண்களுடன் வெளிவந்து அயுதரைப் பார்த்து "ஓ துராத்மா! ரூபம், யௌவனம் இவற்றின் செருக்கினால் என் தவத்தின் கௌரவத்தை வீணாக்கிய நீ அந்த மழிந்து ஓர் துச்சமான தவளையாகக் கடவாய்" என்று சபிக்க, அயுதர் அவருக்குப் பிரணாமம் செய்து தன்னிடம் யாதொரு குற்றமுமில்லாததினாற் றன்னை யனுக்கிரகிக்கும்படிப் பலகாலும் வேண்டிக் கொண்டார். அம்முனிவரும் தன் யோக திருஷ்டியினால் விஷயங்களையுள்ளபடி யறிந்து தன்னைப்போன்றவோர் மஹானைத்தான் வீணாகச் சபித்ததற்கு மிகவும் பச்சாத்தாபமடைந்து அயுதரைப் பார்த்திவ்விதம் சொல்லுற்றார்.

"ஓ அயுதரே, நான் உம்மை வியர்த்தமாய்ச் சபித்துவிட்டேன். அதுவும் நடவாமல் நிற்காது. ஆயினும் நீர் நான் சொல்லும் விதமாய் நடப்பீராகில் சீக்கிர காலத்தில் உமக்குச் சாபவிமோசனமாகும். உடனே மோக்ஷத்தையடைவீர். அஃதெனெனில் புண்டரீகமென்னும் க்ஷேத்திரத்தில் இரணியனைக் கொன்று தன் பக்தர்களை யாட்கொள்ள வந்த நாரசிங்கர் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார். உமக்குத் தவளையுருவம் வந்த பொழுதும் ஈசுவர பக்தியும் தபோமஹிமையும் எப்பொதும் போலவே யிருக்கும். பூர்வ ஜன்மக்ஞாபகமுங் குன்றாது. சிலகாலம் பேகரூபத்துடன் நரஸிம்மாது அடியருகினுள்ள வோர் வளையில் வசித்துத் தினந்தோறும் அண்டையிலுள்ள பீமரதீ நதியில் ஸ்நானஞ்செய்து அவரைச் சேவித்திருக்க ஒருக்கால் கன்யாகுப்ஜநகராத்தரசன் புதல்வி, அந்நதிக்குத் தீர்த்தமாட வருபவள் தவளையான வும்மைப்பிடித்து விளையாட்டா யோர் தவஸியின் மேலெறியவவராது சாபத்தினாலவளுமொரு தவளையாக, அவளை நீர் வரித்து அவளாற் சந்தானம் பெற்றுப் பிதுர்க்கடனை யொழித்துப் பேகரூபத்தையுந் துலைத்து, உடனே ஸாயுஜ்ய பதவியடைவீர். உமக்கிப்போதிச் சங்கடம் தெய்வகதியால் நேர்ந்த விதத்தைச் சொல்லுகிறேன்கேளும். எல்லா ஆசிரமங்களிலும் கிருஹஸ்தாசிரமம் மிக்வும் பிரசஸ்தமானது. ஏனெனில் இவ்வாசிரமத்தைக் கைக்கொண்டவன்பிறருக் கபீஷ்டங்களைக் கொடுக்க வல்லவோர் கற்பக விருக்ஷம் போன்றவன். ஸர்வ பூதங்களையுந் திருப்திசெய்யும் சக்தியுடையவன். பிதுர்க்களையுந் தன்னாசார தருமங்களினால் திவ்யலோகஞ் சேர்ப்பவன். தவத்துளரையுந் துறவிகளையுமன்ன பானாதிகளா லுபசரித்தவர்

தர்மத்துக் கிடையூறுவாராம லவரைக்காப்பவன். இவ்வித கிருஹஸ்தனது தர்மத்தை அலக்ஷியம் செய்ததின் பலனை யிக்கதியை நீரடைந்தீர். ஆயினும் சில காலம் தவளையாக இல்லறம் நடத்திப் பிறகு முக்தியையடைவீர்" என்று வாதூல முனி சொல்லி முடித்தார்.

அயுதரு மவரிடம் விடைபெற்றுக்கொண்டு அக்கணமே புண்டரீக க்ஷேத்திரஞ்சென்று தவளையுருவம் பெற்றுப் பிரதிதினமும் நதியில் தீர்த்த மாடி, நரஹரியின் பாதகமலத்தில் வாஸஞ்செய்து அவரைச் சேவித்து வருகையில் ஓர்தின மரசன் புத்திரியாற் பிடிபட்டு அவளும் பேகமாகவவளுடன் சுகித்துப் புத்திரப் பேறுபெற்றுப் பேகதேகத்தை விட்டந்தக்ஷணமே மறுஜன்ம மற்ற கைவல்ய பதவியை யடைந்தார். ஆகையால், பகவானிடத்தில் பக்திசெய்து விவேகமுடையவர்களாய் ஆசையையடக்கிக் கிடைத்த வஸ்துக்களால் திருப்தியடைந்து பிறருக்கு மனத்திலுந் தீங்கு நினையாது, ஸர்வமும் பகவதர்ப்பணமாய்ச் செய்து வருபவர் கிருஹஸ்தராயினும் ஜனகாதிகளுக்கு மரிய பதவியையடைந்து சாச்வதானந்த மனுபவிப்பாரென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

பேதைமை யென்பது யாதென வினவி
னோதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதில்.

(மணிமேகலை.)

கற்றும் பலபலகேள்விகள் கேட்டுங் கறங் கெனவே,
சுற்றுந் தொழில் கற்றுச்சிற் றின்பத்தூடு சுழலிலென்னாம்,
குற்றங்குறைந்து குண மேலிடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந்துணை யென நம்பு கண்டாய் சுத்த மூடநெஞ்சே

(தாயுமானவர்.)

நீ பாபஞ் செய்தோர் எல்லோரையும் பார்க்கிலும்
அதிக பாபஞ் செய்தவனானாலும், ஞானமாகிய
தெப்பத்தினாலே ஸகல பாபங்களையுங் கடந்திடுவாய்

(ஸ்ரீமத் பகவத்கீதை.)

---

# விவேகாநந்த சுவாமிகளின் அருள்வாக்கியத்திரட்டு.

ஒவ்வொரு சுகத்தின் பின்னும் துக்கம் வருகிறது. இவைகள் ஒன்றன்பின் ஒன்றாகவாவது உடனுக்குடனாவது அல்லது நெடுங்காலம்பொறுத்தாவது வரக்கூடும். ஒரு புருஷன் எவ்வளவு பரிபக்குவதசையை யடைந்திருக்கின்றனனோ அவ்வளவு சீக்கிரமாகச் சுகமும் துக்கமும் ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடர்ந்துவரும். நமக்கு வேண்டியது சுகமுமல்ல, துக்கமுமல்ல; இவ்விரண்டும் நமது சுவரூபத்தை மறைக்கின்றன. இவ்விரண்டும் விலங்குகளேயாம். ஒன்று இரும்பு விலங்கு, மற்றொன்று பொன்னாலாய விலங்கு. இவை இரண்டிற்கும் அதிஷ்டானமாகத் துக்கம் இன்னதென்றும் சுகமின்னதென்றும் உணராத ஆத்மா இருக்கிறது. சுகமும் துக்கமும் நிலைகளாகும். நிலைகள் எப்பொழுதும் மாறிக்கொண்டே யிருக்கவேண்டும். ஆனால் ஆத்மாவின் ஸ்வரூபமோ ஆநந்தம்; மாறாச் சாந்த வடிவமாகும். நாம் அதை எங்கிருந்தோ அடையவேண்டியதில்லை; நம்மிடத்திலேயே யிருக்கிறது. அழுக்கை மாத்திரம் அலம்பி அதைப் பார்ப்போமாக.

நாம் சிருஷ்டியில் பிரவேசிக்கிறோம். அது நமக்கு உயிருடன் இருப்பதுபோலாய் விடுகிறது. பொருள்கள் தம்மில் உயிரில்லாதனவாகும். அவைகளுக்கு நாம் தாம் உயிர் கொடுக்கிறோம். இப்படி உயிர் கொடுத்த பிறகு முட்டாள்களைப் போல அவைகளைத் திரும்பிப் பார்த்துப்பயத்தை அடைகிறோம், அல்லது போகத்தை இச்சிக்கிறோம். கடையிலிருந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில், மழைவர, அதிலகப்பட்டுக்கொண்டு ஒரு புஷ்பத்தோட்டக்காரன் வீட்டில் அடைக்கலம் புகுந்த செம்படவ ஸ்திரீகளைப் போல இராதயுங்கள். புஷ்பங்களின் பரிமளம் நிறைந்த தோட்டத்தின் பக்கத்திலிருந்த ஒரு அறை இந்தச்செம்படவ ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்டது. பரிமளம் நிறைந்த வீடுகிட்டியும் அந்த வலைச்சியர்களுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை; அவர்கள் என்னென்னவோ செய்து பார்த்தார்கள். நித்திரை வரவில்லை. கடைசியில் அவர்களுள் ஒருத்தி ஓர் உபாயம் சொன்னாள். அவ்வுபாயத்தின்படி ஒவ்வொருத்தியும் தன் தன் மீன் கூடையைத் தன் தன் தலை மாட்டில் வைத்துக்கொண்டனள். பிறகு எல்லோருக்கும் நல்ல தூக்கம் வந்துவிட்டது.

இவ்வுலகம் நமது மீன் கூடையாகும். நமது சுகத்துக்காக உலகத்தை எதிர்பார்க்கக்கூடாது. அப்படி உலகத்தின் மேல் சார்வோர் தாமசிகர்கள் அல்லது பத்தர் எனப்படுவர்; எப்பொழுது பார்த்தாலும் 'நான் நான்' என்று தற்புகழ்ச்சி செய்துகொண்டிருப்போர் இராஜசிகர்கள் எனப்படுவர். இவர்கள் ஒரு வேளை சத்கருமங்களைச் செய்து ஆத்மஞானத்தை யடையலாம். உள்விழிப்பார்வையுடையோராகித் தம்மில் தாமே இரமித்துக்கொண்டிருப்போர் சாத்விகர்களென்று இயம்பப்படுவர். அன்னோர் யாவரினு முத்தமமாவர். தாமஸம், இராஜஸம், சாத்விகம் என்னும் முக்குணங்களும் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கின்றன. பற்பல காலங்களில் இவைகளில் ஒவ்வொரு குணம் மற்றவைகளைவிட ஓங்கி நிற்கும்.

சிருஷ்டி என்பது ஏதோ ஒன்றை உண்டுபண்ணுவதல்ல; சில சடைத்துண்டுகள் தண்ணீரில் போடப்படுமாயின் அவை தனிமையாகவோ அல்லது கும்பல் கும்பல்களாகவோ மேலே விரைந்து கிளம்பி வருவதுபோல நாம் இழந்த சமத்வ நிலையைத் திரும்பப் பெறவேண்டிச் செய்யும் போராட்டமே சிருஷ்டி எனப்படும். உயிர் வாழ்க்கை பாபத்தால் பின்தொடரப் படுகிறது. பின்தொடரப் பட்டுத் தான் வரவேண்டும். உயிர் வாழ்க்கைக்கு ஹேது கொஞ்சம் பாபமாகும். உலகத்தில் கொஞ்சம் அக்கிரம மிருப்பது மிகவும் நல்லதாகும்; ஏனெனில் சமத்வத்தை யடைந்த பிறகு உலகம் முடிவு பெறும். எங்ஙனமெனில் ஒரு படிக்காயிருத்தலும் நாசமுறுதலும் வேறல்ல. இந்த உலகம் அழியும்பொழுது நன்மை தீமை இவை இரண்டும் போய்விடும். ஆனால் இந்த உலகத்தை நாம் அதிக்கிரமித்துச் செல்லுவோமானால் அப்பொழுது நன்மை தீமையாகிய இவ்விரண்டையும் ஒழித்துப் பரமானந்தத்தை யடைவோம்.

இந்தச் சமநிலையை யடையவேண்டின் தமோ குணத்தை இராஜோ குணத்தாலும், பின்னர் இராஜோ குணத்தைச் சாத்விககுணத்தாலும் வெல்லவேண்டும். இவ்வாறு சித்திக்கும் அமரிக்கையான சிங்கார நிலையானது மெள்ள அதிகரித்து மற்றெல்லாவற்றையும் கவளீகரிக்கும். பந்தத்தை விட்டுவிடு. புத்திரனாக ஆய்விடு. பந்தமதில் அப்பொழுது இயேசு கிறிஸ்து கண்டவண்ணம் பிதாவைக் காணக்கூடும். அளவில்லாப் பராக்கிரமமே சமயமும் (Religion) கடவுளுமாகும். தீனத்தன்மைக்கும் அடிமைத் தன்மைக்கும் இடங்கொடுக்காதே. நீ எந்த க்ஷணம் பந்தமற்றவனாக ஓர்கின்றனையோ அந்த க்ஷணமே நீ ஆத்மா தவிர வேறன்று. நீ எந்த க்ஷணம் பந்தமற்றவனென்று ஓர்கின்றனையோ அந்த க்ஷணமே உனக்கு இறவாத் தன்மை சித்திக்கின்றது. பந்தமற்றவனென்று ஏற்படில் கடவுளிருப்பது சித்திக்கும்.

(வரும்)

# ஸ்ரீ புத்த தேவர் சரித்திரம்

"எங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பல்கதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன்"

—மணிமேகலை.

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தில் உத்தரகோசல தேசத்தில் (நேபாளம்), உரோகிணி (கொகோனு) நதிக்கரையிலுள்ள, கபிலவாஸ்து (கொஹோலா) என்னும் நகரத்தில், இற்றைக்கு சுமார் இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னர், இக்ஷ்வாகு பரம்பரையிலுதித்துச் சுத்தோதனன் எனப் பெயர் பெற்ற ஓரரசனிருந்தான். அவனுடைய முன்னோர் இமயமலைச் சாரலில் சாகத வனத்திலிருந்தமைபற்றிச் சாக்கிய ரென்றும், கோதமரென்பவரது மரபிலுதித்தமைபற்றிக் கௌதமரென்றுஞ் சொல்லப்படுவர்.

இவன் கோலிய தேசத்ததிபதியாகிய அஞ்சன னென்பானுடைய மகளிரான மாயாதேவியையும் கௌதமியையும் மணஞ்செய்து கொண்டான். மூத்தவளான மாயாதேவி பேரழகுவாய்ந்தவள்; மிக்க குணவதி. அரசன் அவளையே பட்டமஹிஷியாகக் கொண்டு அவளிடத்து மிகுந்த வேட்கையுடையவனாயிருந்தான். அவளை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்கச்சகியான்; அவளருகிலிருக்கப் பிரிதொன்றும் வேண்டான்.

இவ்வாறாய் இன்புற்று இல்லறம் நடாத்திவரும் நாளில் மற்றெல்லாப் பாக்கியங்களும் குறைவற நிறையப் பெற்றுந் தம்மரபு விளங்கப் புத்திரப் பேறில்லாமை பற்றி அரசன் மிக்க மனோவியாகூல்முற்றிருந்தான். ஓர் நாள் மாயாதேவி அரசனை நோக்கி "எனதாருயிர்க்காதல! இவ்வுலகனைத்தையும் ஆக்கியளித்துத்துடைக்கும் சர்வலோக சரண்யனான பகவானைப் பஜிப்போமானால் நமது குறை நீங்கு"மெனக் கூறினள். இதுகேட்டு அரசன் மட்டிலா மகிழ்ச்சிகொண்டு அவ்வாறே பக்திசிரத்தையுடன் ஈசுவரனை யுபாசிக்க, அவர் திருவுளமிரங்கி, ஓர் நாள் மாயாதேவி சுத்தோதனன் இருவர் கனவிலும் தோன்றித் தாம் அவர்களுக்குப் புத்திரராயவதரிக்கப்போ

வதை யுணர்த்தியருளி, ஓர் ஷட்கோணநக்ஷத்திர ரூபமாய் மாயா
தேவியின் கர்ப்பத்திற் பிரவேசித்தனர். அப்பொழுது அவளுக்குப்
பிராயம் நாற்பத்தைந்து.

மாயாதேவி மட்டுங் கருப்பிணியாயினளே யென்று பொறாமை
கொண்டு கௌதமி அவளுயிரை மாய்க்கப் பன்முறை முயன்றனள்.
அது சிறிதும் பயன்படவில்லை. பின்னர் தன் செய்கையை நினை
ந்து தானே வருந்துவாளாகி சகோதரியிடம் அன்புடன் நடந்து
கொள்ளலாயினள்.

மாயாதேவியின் கர்ப்பம் பூர்ணமாகிக் கருவுயிர்க்குந் தருணம்
நெருங்கியது. உலகத்தில் கருவுற்ற மங்கையர் விரும்புமவாறே
இவளுந் தன் தாய் வீடு செல்ல விரும்பி யரசனுடைய அனுமதி
யைப்பெற்றுப் பலவித பரிசாரங்கள் சூழப் பிரயாணமாயினள்.
வழியில் உலும்பினி யென்னும் பூஞ்சோலையிற்றங்கி அங்கே ஒரு
அசோகமர நிழலில் சிரம பரிகாரஞ் செய்து கொண்டிருந்தனள்.
அப்போது ஆகாயம் மேகத்தால் மூடுதலின்றித் தூய்மையுற்று
விளங்கியது; விலங்குகளும் பறவைகளுந் தம்முட் பகையின்றி
அன்பு பயின்றன; இன்னும் பற்பல நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன.
அத்தருவாயில் சிறிதும் நோயுண்டு பண்ணாமல் மானிடரின் மன
விருள் நீக்கவந்த ஞானசூரியன் போன்ற மகவொன்றவதரித்தது.
அந்த தினம் வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாக நக்ஷத்ரமுங்
கூடிய வெள்ளிக்கிழமை யென்பர்.

இந்த மங்களச் செய்தி கேட்டதும் அரசன் அளவிலா வானந்
தங் கொண்டவனாய் நகரத்தார் 'நம்மரசனுக்குப் புத்திரன் பிறந்
தான்' என்று மகிழ்ந்து பின் தொடர முன்னும் பின்னும் மங்கள
வாத்தியங்களுடனும் ஆடல் பாடல்களுடனும் மாயாதேவி யிருப்
பிடஞ் சென்று அவளையும் மகவையும் அரண்மனைக் கழைத்து வந்த
னன். இதுவரைத் தாமரையில்லாத் தடாகம்போலும், புட்பமில்
லாப் பூஞ்சோலை போலும், அழகு குன்றியிருந்த ராஜக்கிருஹம்
புத்திரப்பேற்றால் எல்லா மங்களங்களும் நிறையப் பெற்றதாயது.
அரசன் அகமகிழ்ந்து செய்யவேண்டியன வெல்லாஞ் செய்து, சோ
திடவல்லவரைக் கொண்டு ஜாதகரண நாமகரணங்களுஞ் செய்வித்
தார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியமைபற்றிக் குழந்
தைக்கு ஸித்தார்த்தன் எனப்பெயரிட்டு, கௌதமனென்னுங்
குலப்பெயராலழைத்து வந்தனர். ஹஸ்ரார சக்ரரேகை முத
லிய ஸாமுத்ரிக லக்ஷணங்கள் பலவும் அவர் பாலுளதை யறிந்து,
இவர் தேவாம்சமாக வவதரித்தாரென்றும் அனைத்துலகையுமாள
வல்ல நரேந்திரனாக நிலவுவர் என்றுங் கூறக்கேட்டுப் பெற்றோரெய்
திய மகிழ்ச்சியை யென்னென்பேம்.



மாயாதேவி கருவுயிர்த்த ஏழாநாள் ஆனந்தாதிசயத்தாலிறந்த
னள். பின் கௌதமி மிக்க அன்புடனும் ஆதரவுடனுங் குழந்தை
யைத் தான் ஈன்றெடுத்த மகவே போல் பாராட்ட, அவன் நாளொ
ருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர் பிறைச் சந்திரன்
போல் வளர்ந்து வந்தான்.

உரியகாலத்தில் வித்யாரம்பம் செய்விக்கப்பெற்று மித்ரரென்
னும் ஒரு அந்தண சிரேஷ்டனிடம் பலகலைகளையும் நன்குகற்று வல்
லவனாயினன். ஜீவகாருண்ணியம், உண்மை, அன்பு, பொறுமை,
அடக்கம் முதலிய நற்குணங்களும் வளர்ச்சியுற்று விளங்கின. அந்
நாளில் அஸிதரென்னு மொருமுனிவர் வந்து கௌதமரைக்கண்டு
பரிபூர்ண சந்தோஷமடைந்து "மானிடராகிய மரத்தில் பல நூற்
றாண்டுகளுக் கொருமுறையே மலரு மலர் இக்குழந்தை; உமது
குலப்பெருமையை என்னென்று சொல்லுவேன்; இவன் துறவு
பூண்டு லோக ரக்ஷகனாக இருப்பான்" என்று அரசனுக்குக் கூறி
னர். அரசன் "துறப்பது எப்பொழுது?" என்ன, அவர் "அஃது
இப்பொழுது அறிவிக்கற்பாலதன்று" என்று சொல்லித் தம்மிடஞ்
சென்றனர்.

இது கேட்டு அரசன் கவலைகொண்டு, தன் செல்வப் புதல்வ
னது உள்ளத்தை உலக வழியிற் புகுத்தக் கருதிப் பலவாறாய்
இடைவிடா முயற்சி செய்து அவனுக்குப் பதினைந்து பிராயமான
தும் இளவரசாக நியமித்து அதற்குரிய சிறப்போடிருக்கும்படி
செய்வித்தான்.

கௌதமன் இளமைப் பருவந்தொட்டே விளையாட்டு வேடிக்
கைகளில் பிரியமற்றவனாய் தனித்திருத்தலையே மிகுதியும் விரும்பி
வந்தான். ஓர் நாள் தோட்டத்தில் உலாவப்போய் ஓர் மரத்தடியி
லுட்கார்ந்து உலக பிரக்ஞையின்றி சிந்தனையிலாழ்ந்தான். வெகு
நேரமாகியுங் காணாமல் அரசனே கவலைகொண்டு பரிஜனங்களுடன்
தேடிவர அவ்வாரவாரத்தால் தியானங்கலைந்து தன் முன் தந்தை
யே நிற்கக் கண்டு சிறிது வெட்கி யொன்றும் பேசாது இல்லமே
கினன்.

இதையெல்லாங் கவலையுடன் கவனித்து வந்த அரசன், இவ
னுக்கு விவாகம் செய்வித்தால் மனம் உலக வாழ்க்கையிற் பற்றடை
யுமென்று நினைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாயி
னன். மகனுடைய அபிப்பிராயத்தையும் அறிந்துவரச் சொல்லித்
தன் பிரதம மந்திரியை யனுப்பினன். இளவரசன் தந்தை விருப்
பத்தை யுணர்ந்து ஏழாநாள் பதில் சொல்வதாய் மந்திரியிடங் கூறி
யனுப்பினர். ஆறு நாட்கள் தீர ஆலோசித்து, "எல்லாவற்றையுந்

துறந்துவிட்டுச் செல்லுதல் தான்மேல்; உலக வாழ்க்கையினின்று உண்மை யுணர்தல் துர்லபம்; எனினும் தந்தை விருப்பப்படி கிருகஸ்தாசிரமத்தினின்றே அப்யாஸம் செய்து வருவேன்" என்று நிர்யாணித்தார். ஆகவே ஏழாநாள் மந்திரியிடம் "யான் மணந்து கொள்ளச் சம்மதித்ததாக அரசனிடம் தெரிவிக்கலாம். எக்குடிப் பிறந்தோளாயினும் நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவளாயும், பொறாமையற்றவளாயும், உண்மையே பேசுபவளாயும், மிக்க அழகுவாய்ந்தும் கர்வமற்றவளாயும், பெற்றோரிடத்தும் பந்துக்களிடத்து மிக்க மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொள்பவளாயும், தர்ம சிந்தையுள்ளவளாயும், அடக்கம், பொறுமை, சாந்தம், தயை முதலிய ஐசுவரியங்கள் படைத்தவளாயும், வீண்வார்த்தைகள் பேசாதவளாயும் சாஸ்திரங் கற்றறிந்து அதன்படி ஒழுகுபவளாயும் உள்ள கன்னியையே கொள்வே னென்பதையும் அவரிடம் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று கூறினர்.

இது கேட்டு அரசன் மகிழ்ந்து தனயன் விருப்பத்துக்கியைந்த கன்னிகையைத் தேடிவருமாறு அந்தண சிரேஷ்டர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்புவித்தான். ஒவ்வொருவருந் தாந்தாம் பார்த்த பெண்ணைச் சிறப்பித்துக்கூற அரசன் எதைக் கொள்வதென்றறிய மாட்டாதவனாய் ஓர் யுக்தி செய்தான். அவன் ராஜ்யத்துள்ள கன்னிகைகளனைவரையும் ஓர் சுபதினத்தி லழைத்து இளவரசன் பொன் வெள்ளி நிறைந்த குடங்களைத் தானம் செய்வானெனப் பறையறைவித்தான். குறிப்பிட்ட தினத்தில் அவ்வாறே கூடிய பெண்களனைவரும் ஸித்தார்த்தனிடம் பரிசுபெற்றுச் சென்றனர். கடைசியாக இவன் மாமன் சுப்ரபோதனுடைய பெண் யசோதரை யென்பாள் வந்தனள். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்றவாறு, இவளது மாசற்ற சுந்தர வதனத்தைக் கண்டதும் ஸித்தார்த்தன் மனது அவள் பால் அன்பிற் பெருகியது. சரேலெனத் தான் கையிலணிந்திருந்த ஒப்புயர்வற்ற கணையாழியை அவள் கையிலிட்டனன்.

இது செய்தி கேட்டு அரசன் அகமகிழ்ந்து விவாகச் சடங்குகளை வெகு விமரிசையாய் நடத்தி யானந்தித்தனன். ஸித்தார்த்தனுக்கு இப்பொழுது பத்தொன்பது பிராயம். யசோதரை பால் காதல் கூர்ந்து வேறொன்றையு மறியாது அவள் போகத்திலே சுமார் பத்து வருஷகாலம் அழுந்திக் கிடந்தனன்.

எனினும் அரசன் மனம் அமைதி பெறவில்லை. முனிவர் கூறியவாறு எப்பொழுது துறவியாவனோ என்றே கவலை யுற்றிருந்தார். ஓர் சிங்கார வனமமைத்து அதில் வேனிற்காலம், மழைகாலம், பனி



காலங்களில் முறையே தங்கி யநுபவிக்க வழகிய மாளிகைகள் கட்டுவித்து, அவ்வனத்துள் அருவருக்கத்தக்க பொருள்கள் ஒன்றுந் தோன்றாவண்ணம் காவலமைத்து கௌதமரை அதிற் றங்கி யின்பநுகரும்படி யேற்பாடு செய்தான்.

அப்படியிருக்கையில் ஒருநாள் அரசனைக்காண நினைந்து தர்மிருக்கும் அரணின் கீழ்வாயில் வழியே ரதமேறிச் சென்றனர். அங்கு தம்மெதிரே ஒரு பிணியாளன் நோயின் மிகுதியால் வருந்திக் கொண்டிருக்கக் கண்டு சந்தகனென்னும் ஸாரதியை நோக்கி 'இவன் ஏன் இவ்வாறு வருந்துகின்றனன்' என, சந்தகன் 'ஐயா அவன் ஒரு கொடுமையான நோயால் பீடிக்கப் பட்டிருக்கிறான். மனிதராய்ப் பிறந்தோர் இவ்வாறு வருந்துறுவது சகஜம்' என்று விடையளித்தான். மற்றொருநாள் அங்ஙனம் செல்லுங்கால், மிகத் தளர்ந்து, மயிர் நரைத்து, முதுகு கூனிக், கோலூன்றித் தள்ளாடி நடந்துவரும் ஒரு கிழவன் எதிர்ப்பட, "இப்படியும் மனிதருளரோ? இவ்வாறு நான் இதுவரை கண்டதில்லையே" யென்ன, "அவன் மிக்க வயது சென்றமையால் மூப்பால் பீடிக்கப் பட்டிருக்கிறான். நாமும் மற்ற எல்லோரும் காலகதியில் இத்தன்மையை அடையத் தக்கவர்களே" யென்று சந்தகன் தெரிவித்தனன். வேறொருநாள் மேலை வாயில் வழி போகுங்கால் ஒருசவத்தை நால்வர்தூக்கிச் செல்லக்கண்டு சந்தகனை விளிக்க, அவன் 'எல்லோரும் உயிர் துறந்து அவ்வாறு ஒருநாள் கட்டைபோல் நீண்டு கிடக்க வேண்டியவர்களே' யென்றனன். இவற்றை யெல்லாங் காணுந்தோறும் ஸித்தார்த்தன் அநித்தியமானதும் துன்பம் நிறைந்ததுமான உலக வாழ்வில் அருவருப்புற்றுத் பிணிமூப்பு சாக்காடு என்னுந் துன்பங்களை யொழிக்க மார்க்க முண்டோவென ஆழ்ந்து சிந்திக்கலாயினன்.

பின் பொருநாள் குதிரையேறித் தோட்டம் பார்க்கப்போனபொழுது, வயலில் எருதுகளும் உழவர்களும் உழைத்தலையும் அவர்கள் வருந்துதலையுங் கண்டு மனம் நொந்து அங்கே ஒரு நாவல் மரத்தடியில் சிந்தாக்கிராந்தனாய் நெடுங்காலம் அசைவற் றுட்கார்ந்திருந்தனன். அப்பொழுது, காவி வஸ்திரந்தரித்து தண்டு கமண்டலு கையிலேந்தி சாந்த ஸ்வரூபியான ஓர் துறவி அங்கு வந்துசேர அவரை வணங்கி, அவரிடம் தன் மனக்குறைகளைக் கூறினன். அவர் துக்க நிவிருத்தியைப் பெறவேண்டுமாயின், துறவுபூண்டு, உயிரைப் பாதுகாத்தற்கு வேண்டியவளவு ஆகாரம் பிச்சை புகுந்துண்டு ஐம்புலன்களை யடக்கி ஊருக்கு வெளியிலிருந்து ஸமாதி நிலையை நாடவேண்டுமெனக் கூறி மறைந்தார்.

இவ்வுபதேச மொழி அவர் மனத்திற் புகைந்து கொண்டிருந்த வைராக்ய மென்னுந் தீயில்விட்ட நெய் போலாயிற்று. எல்

லாப் பற்றுகளையும் விட்டுத் தக்ஷணமே துறவு பூண நிச்சயித்தாரெனினுந் தந்தையிடம் விடைபெற்றுச் செல்லக் கருதி யவரையணுகித் தன் விருப்பத்தைத் தெரிவித்தனர். அவர் நடு நடுங்கி 'நீ யேன் துறத்தல் வேண்டும்? நீ குபேரனைப்போல் ஐசுவரியம் படைத்தவன். தேவ கன்னிகைகளைப் பழிக்கும் கட்டழகிகள் ஆடல்பாடல்களால் உன்னைக் களிக்கச்செய்து உனக்குப் பணிசெய்யக் காத்துக் கொண்டிருக்கின்றனர். உன் மனைவி யசோதரையோ உன் மனமகிழ் தொழுகுநீராள்; உன்மேல் மட்டற்ற காதல் கொண்டவள். அவளையும் நீ எவ்வாறு விட்டகலத் துணிந்தாய்? மேலும் வயது சென்ற இப்பருவத்தில் என்னைத் தனியே தவிக்கவிட்டு நீ தவஞ்செய்யப் போதலும் உனக்கழகாமோ? நீ என் தவப்பேருயிற்றே. உன் சுந்தர வதனத்தைக் கண்டன்றோ, உன் அன்னையிறந்த துக்கத்தையும் மறந்து உயிர் தரித்திருக்கின்றேன். நீ என்னை விட்டகன்றால் நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்? என்று பிரலாபித்தான். இதைக் கேட்டு ஸித்தார்த்தன் 'தந்தையே! நீர் பிணிமூப்பு சாக்காடாகிய துன்பங்களினின்றும் விலகவழி காட்டவல்லீராயின் உம்மை விட்டொரு போதுமகலேன்' என்று விடையளித்தனன். அரசன் 'இத்துன்பங்கள் மானிடராய்ப் பிறந்தோரனைவருக்கும் சகஜமாயிருக்க, அவைகளை மீறுவதெங்ஙனம்! முடியாத காரியத்தை யெண்ணி வீணில் சிரமப்படுவதேனோ!' என்ன, கௌதமன் 'துன்பங்களை யொழித்தற்குரிய வழியை யறிந்தாலன்றி இங்கு நில்லேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டுத் தன்னிருப்பிட மேகினான்.

இது நிகழ்ந்த மறுநாள் யசோதரை ஓர் ஆண்மகவீந்தனள். இது கேட்டதும் கௌதமன், 'அவன் என் மதியை விழுங்கவந்த ராகுவோ?' எனக் கூறினனென்றும், அதனாலக் குழந்தைக்கு 'இராகுலன்' என்னும் பெயரமைந்ததென்றுங் கூறுவர். அரசனுக்குப் பௌத்திரன் பிறந்தானென நாடெங்கும் உத்ஸவங் கொண்டாடப்பட்டது.

இஃதொன்றையுஞ் சிறிதுங் கவனியாமல் தன் லட்சியத்தின் மேலேயே கவனமுள்ளவனாயிருந்த ஸித்தார்த்தன் அன்றிரவு நடுயாமத்தில் எழுந்து தன் வீடு தீப்பற்றிக் கொண்டதை யறிந்தவொருவன் தான் ஆபத்தினின்று நீங்க எவ்வளவு பரபரப்புடன் ஓடுவானோ அவ்வாறே ஸம்ஸாரமென்னுங் கடுந்தீயினின்று மகல யத்தனித்தான. தன்னைச் சூழ்ந்து தாறுமாறாகச் சயனித்துக் கொண்டிருந்த மாதர் கூட்டத்தைத் தாண்டி வெளிப்போந்தனன். அங்கே தற்செயலாய்ச் சந்தகனெதிர்ப்படக் கண்டகம் என்னுந் தன் குதிரையை விரைவிற் கொண்டு வரும்படி கட்டளையிட்டனன். இச்



சமயத்திலும் முற்றும் ஆசை நீங்காதவனாய்த் தன் குழந்தையை மட்டும் ஒருமுறை காண விரும்பி அந்தப்புரமேகி யசோதரை சயனித்திருந்த அரையின் கதவை மெல்லத் திறந்தார். அங்கே குழந்தை தாயால் அணைப்புண்டு துயலுவதைக் கண்டு 'அருகிற் சென்றால், யசோதரை விழித்துக் கொள்வாள்; அது நமக்குப் பெருந் தடையாகும்' என்று எண்ணியவராய் வாசற்படியிலேயே சிறிது நேரம் நின்று உற்று நோக்கிவிட்டு அவ்விடம் விட்டகன்றார். வெளியே சந்தகன் குதிரையுடன் காத்துக் கொண்டிருக்க அதன் மேலேறிக் கொண்டுச் சந்தகனும் பின்தொடர விரைந்து சென்றார்.

சூரியோதயத்துக்கு முன் அநோமநதிக் கரையிலுள்ள பார்க்கவமுனியாசிரமத்தை யடைந்தனர். அங்கே குதிரை தானாகவே நின்றுவிட அதை நன்னிமித்தமாகக் கொண்டு, ஸித்தார்த்தர் சந்தகனை நோக்கி 'பல நாளாய் அடையவேண்டுமென்று விரும்பிய விடத்தை நான் இப்பொழுதடைந்தேன். நம்முறவு இன்றோடு முடிவு பெற்றது' என்று கூறித் தன் கழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக் கழற்றி அவனுக்கு நன்கொடையாக இன்சொல்லோடு கொடுத்தார். பின்பு தம் முடிமணியை யெடுத்து அவன் கையில் வைத்து 'இதை நான் அன்புடன் கொடுத்ததாகச் சொல்லி அரசனிடங் கொடுத்து, என்னிடமுள்ள காதலை மறக்கும் படிக்கும், இல்வாழ்க்கையின் வழியாகத் துன்பக்கடலை நீந்துதற்குரிய தெப்பம் எனக்குக் கிட்டாமையினாலேயே நான் பிரிந்தேனென்றும் விண்ணப்பஞ் செய்' என்று கூறினர். இதைக் கேட்டுச் சந்தகன் மனம் வருந்தி 'இப்பொழுது துறத்தல் தக்கதன்று' என்று பலவாறாக மறுத்துக் கூறியும் பயன்படாமல், நானும் உடன்வருவேன்' என்றான். கௌதமர் அதற்கும் இணங்காமல் குதிரையைத் தட்டிக் கொடுத்து இனிய வார்த்தைகளைச் சொல்லி விட்டுக் குதிரையைக் கொண்டு செல்லும்படி வற்புறுத்திக் கூறி அவனுக்கு விடை கொடுத்தார்.

அவன் சென்றதும், கௌதமர் தம் உடைவாளால் மயிர் முடியை அறுத்தெறிந்து விட்டு அநோமநதியின் மணலிற்றங்கிச் சிந்தனையி லிருக்கையில் துவராடையுடுத்த ஓர் வேடன் அங்குவர, அவனிடம் தம் பட்டாடையைக் கொடுத்து விட்டுத் துவராடையை வாங்கி யுடுத்துக்கொண்டு உண்மையைப் புகட்டவல்ல நல்லாசிரியரைத் தேடப் புகுந்தார்.

(தொடரும்)

# ஈச்வரப்ரேமை

(ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தர்)

ஏழ்மைத்தனம் மட்டுமே ஈச்வர பக்திக்குக் காரணமாகிறதில்லை. ஏழை மனிதன் நல்ல வஸ்திரம் கிடைக்காதலால் கிழிந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளுகிறான். ஆனால், ஸந்நியாஸியோ நல்லவஸ்திரங்களில் அபேக்ஷையில்லாமையால், ஸாதாரணமான ஆடையை அணிந்துகொள்ளுகிறார். ஏன்? ஏழையின் லக்ஷ்யம் கடவுளையடைய வேண்டு மென்பதல்ல; தனவந்தனாக வேண்டுமென்பதே; அவனுடைய விருப்பம் போக்ய வஸ்துக்களை மேன்மேலும் அநுபவிக்கவேண்டு மென்பதே ஒழிய, அவற்றை விட்டுவிடவேண்டு மென்பதல்ல. நாம் கரும்பிலுள்ள சார் முழுமையும் சாப்பிட்ட பிறகே, சக்கையைத் துப்புகிறோம்; அதுபோலவே, லோகத்தில் கிருஹஸ்தாச்ரமத்தைக் கடைப்பிடித்தொழுகி, ஸம்சாரத்தாலுண்டாகும் சுகம் ஸாரமற்றதென்றுணர்ந்த பிறகு லோகத்திலுள்ள தன் பற்றை மனிதன் விட்டுவிடுகிறான். ஆதலாலல்லவோ நமது பெரியோர், "முதலில் போகம் (லோக விஷயங்களை அநுபவித்தல்); பிறகு யோகம் (ஈச்வரனுடன் ஒன்றுபட்டிருத்தல்)" என்றருளியிருக்கின்றனர்.

பகவான் கீதாசாரியர்.—"அநேக ஆயிரவர்களுள் ஒருவன்தான் என் நிஜஸ்வரூபத்தை அறிய முயல்கிறான்; அப்படி. முயலும் அநேக ஆயிரவர்களுள் ஒருவன்தான் என்னை அறிகிறான்"

என்று திருவாய் மலர்ந்தருளியபடி, ஈச்வரனுடன் ஒன்றுபட்டிருத்தல், ஒரு புத்தருக்கோ, அல்லது இயேசுநாதருக்கோ அல்லது ராமகிருஷ்ணருக்கோ தான் ஸாத்தியமாகும். அனேக ஆயிர வருஷங்களுக்கு ஒரு முறைதான் அப்பேர்ப்பட்ட ஒரு புண்ணிய புருஷர் அவதரிக்கிறார். ஸாதாரணமான மனிதர்கள் அனேக ஜன்மங்களுக்குப்பிறகு தான் ஈச்வரஸ்வரூபத்தை யறியமுடியும். இருந்தபோதிலும், நாம் ஈச்வரனை அடையவேண்டி முயற்சிக்காமலிருக்கக்கூடாது. ஆகாசத்தை இலக்குவைத்துக் கல்லெறிந்தால் மரவுயரமாவது எறிய சாத்தியமாகு மல்லவா?

ஈச்வரனுடன் ஒன்றுபட்டிருத்தலையடைய மனிதன் இந்திரியங்களை ஜயித்தவனாக வேண்டும். இந்திரியங்களை ஜயித்தல் வேடிக்கையல்ல.



இந்திரியஸுகத்தைவிட சாசுவதமான ஸுகத்தையடைந்தாலொழிய இந்திரிய போகத்தைவிடுதல் ஸாத்தியமாகாது. இந்திரியங்களாலுண்டாகும் ஸுகத்தை அபேக்ஷிக்காமலிருத்தல், மனிதன் ஒரு சாசுவதமான ஸுகமளிக்கும் வஸ்துவைக்கண்டு கொண்டதற்கு அடையாளமாகின்றது. நாம் இந்திரிய ஸுகத்தை விட்டுவிட முயற்சித்தலானது, நாம் அந்த ஸுகத்தின் ஸாரமின்மையை நன்றாயறிந்துகொள்ள வில்லை யென்றும் காட்டுகின்றது. இந்திரியங்களை ஜயித்துவிட்டால் கடவுளையடையும் மார்க்கமும் ஸுலபமாகின்றது. கடவுளையடையும் பொருட்டு மனிதன் வேறொன்றையும் அபேக்ஷியாமல் அவரொருவரையே விரும்பி, மனத்தால் தியானம் செய்துவரவேண்டும். அதாவது, நமக்கு ஈச்வரப்பிரேமை யிருக்கவேண்டும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்கு இந்த ஈச்வரப்ரேமை யிருந்தது. தன்னுடைய தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளாமலும், பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணமில்லாமலும் ஸூர்யோதயமானதும் அஸ்தமனமானதும் கூடத் தெரியாமலும் பன்னிரண்டு வருஷகாலமாய் வெறுந்தரையில் புரண்டுகொண்டு, லோகமாதாவைத் தவிர வேறொன்றையும் எண்ணாமல் தவம் செய்தார். "நான் ஸமாதியிலிருக்கும்பொழுது என் தேகத்தை யார் காப்பாற்றுவார்கள்" என்னும் எண்ணம் அவருக்கிருந்ததில்லை. அவரைப்போல் யார் இந்தச் சரீரம் தன்னுடையதல்ல வென்றறிந்து இந்ததேகத்தை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு அவரையே ஸர்வலோக நாயகனென்று உணர்கின்றானோ, அவனே ஞானவான்; ஏனெனில், இந்தச்சரீரம் நம்முடையதென்று நாம் எவ்விதம் சொல்லமுடியும்? நாம் சாப்பிடும் அன்னம் நம்முடைய யத்தனத்தினாலா எலும்பாகவும், மாம்ஸமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றது? இல்லை; இவற்றையெல்லாம் செய்கிறவர் கடவுளே யாதலால் இச்சரீரம் அவருக்குச் சொந்தமான தென்றுணர்ந்து அவரே இச்சரீரத்தைப் பாதுகாத்துக்கொள்ளட்டு மென்று நம்முடைய சரீரத்திலுள்ள பற்றுதலை ஒழிக்கவேண்டுவது நம்முடைய கடமை.

"ஸ்ரீராமகிருஷ்ண தேவர் கடவுளை எல்லா ஜீவராசிகளிலும்கண்டார்; ஈச்வரனைக்கண்டு அவருடன் ஸம்பாஷித்திருக்கிறார். அவர் மனிதன்; நானும் மனிதன். அவரைப்போல் எல்லாவற்றிலும் ஈச்வரனைக் கண்டு அவருடன் ஸம்பாஷிப்பதற்கு எனக்கு ஐச்வரியமும் கல்வியும் வேண்டியதில்லை. ஏனெனில், பரமஹம்ஸதேவருக்குக் கல்வியுமில்லை; ஐச்வரியமுமிருந்ததில்லை. எல்லாவிதத்திலும் நான் அவரை ஒத்திருக்கிறேன். ஆனால் நான் ஏன் ஸர்வஜீவ ராசிகளிலும் ஈச்வர பாவத்தைக் கண்டு கொள்ளவில்லை? நான் அவரைப்

போல் ஈச்வரனையே ஸதா எண்ணிக்கொண்டிருக்க வில்லை; நான் இனிமேலாவது தீவிரமாக ஈச்வரத்தியானம் செய்யப்போகிறேன்'' என்று தனக்குள்ளேயே ஒவ்வொருவனும் சொல்லிக்கொள்ள வேண்டும். ஆனால் அவ்விதம் அனுஷ்டிப்பது நமக்குக் கடினமாகும். நமக்கு தனம் வேண்டியிருக்கின்றது; அதற்காக ஒரு உத்தியோகம் வேண்டியிருக்கின்றது; இவற்றை யடைந்த பிறகு தான் நாம் கடவுளை விரும்புகிறோம். ஆதலாற்றான் நாம் ஈச்வரஸ்வரூபத்தை யறிந்துகொள்ளவில்லை. ஆனால், நாம் அவரைத்தவிர வேறொன்றையும் வேண்டாமல் அவரிடத்து பக்திபூண்டு வருவோமாகில், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்குப் பிரஸன்னமானது போல் நமக்கும் அவர் பிரஸன்னராவார். ''ஹே! ஸர்வலோகநாயகா! உம்மை யறிந்துகொள்ளக் குப்பையை ஆகாரம் செய்யவேண்டியிருப்பினும், நான் அவ்விதமே செய்யத் தயாராயிருக்கிறேன். உம்மையடைந்தாற்போதும்; எனக்கு வேறொன்றும் வேண்டாம்'' என்றெவ்விதம் ஸ்ரீ விவேகானந்தஸ்வாமிகள் சொன்னாரோ, அவ்விதமே நாமும் சொல்லிக்கொண்டு அநுஷ்டிக்கவும் தயாராயிருப்போமாக!

நாம் கடவுளைத்தவிர வேறுபலன்களை யபேக்ஷித்து பலரைஸ்தோத்திரம் செய்வது நம்மிடம் பரிதபிக்கத்தகுந்தது. நம் தேகத்தைக் காப்பாற்றுமாறு வைத்தியரையும், போஷணைக்கு வேண்டிய உணவுபொருள்களைக் கொடுக்கும்படி கடைக்காரனையும், பக்தியும் ஞானமும் கொடுக்கும்படி ஈச்வரனையும் வேண்டிக் கொள்கிறோம். இவ்வாறன்றி ஈச்வரனை மட்டுமே, நமக்குத் தத்துவ ஞானத்தையளிக்கும் பொருட்டுத் தீவிரமாக ஸ்தோத்திரம் செய்வோமேயாகில் அவர் நமக்குக் கிருபை செய்வாரென்பதில் சந்தேகமென்ன?

"தேவர்களிடத்து விரதம் பூண்டவர் தேவர்களையடைகின்றனர்;
பிதிருக்களிடத்து விரதத்தைக் கொண்டவர் பிருதிக்களையடைகின்றனர்;
பூதங்களைப் பூஜிப்பவர் பூதங்களை யடைகின்றனர்;
(ஸர்வலோக நாயகனாகிய) என்னைப் பூஜிப்பவர் என்னையே யடைகின்ற[னர்.

(பகவான் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா—ஸ்ரீமத் பகவத்கீதை IX 25.

# கிருஹஸ்த தர்மம்

(மஹா நிர்வாண தந்திரத்திலிருந்து ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளால் எடுத்துக்கூறப்பட்டது.)

"கிருஹஸ்தன் தெய்வபக்தியுள்ளவனாயிருக்கவேண்டும்; எல்லா வற்றுள்ளும், எல்லாவாற்றாலும் ஈசுவரனை உணர்தலே அவனுடைய முக்கியநோக்கமாயிருக்க வேண்டும்; எப்பொழுதும் கருமங்களைச் செய்துமுடிப்பதில் சிரத்தையும் ஊக்கமும் உள்ளவனாயிருக்கவேண்டும்; கருமபலன்களனைத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்ய வேண்டும்."

ஒருவருடைய நன்றியை எதிர்பாராமல் ஒருவர்க்குதவி செய்தலும், பெயர், கீர்த்தி, மற்றொருவிதமான பலனையும் கருதாமல் நற்காரியங்கள் செய்தலும், போன்ற நிஷ்காமகருமம் செய்தல் மிக்கக்கடினம். உலகிற் பலர் புகழ வாரம்பித்தால் ஒன்றுக்குமுதவாதபேடியும் தைரியசாலியாகின்றான். பலருடைய ஆரவாரிப்பைக் கண்டு முட்டாளும் வீரச்செயல்களைச் செய்கின்றான். ஆனால் பிறர் புகழை எதிர்பாராமல் எப்பொழுதும் செய்யப்படும் ஸத்கருமமானது மிக்க உயர்ந்த யக்ஞமாகும்.

திரவியந்தேட வேண்டியது கிருகஸ்தனுடைய முக்கியகருமங்களுள் ஒன்றாயினும், "அவன், பொய், பிரட்டு, பிறரை மோசம் செய்தல் முதலியவாற்றால் அதையடையாமல் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். ஜன்மம் பரோபகாரத்திலும், பகவத்கைங்கரியத்திலும் செலவிடப் படவேண்டுமென்பதை இவன் மறக்கலாகாது."

"அன்னையும் பிதாவும் பிரத்யக்ஷதெய்வங்களென்று உணர்ந்தவனாய், கிருகஸ்தன் எவ்வாற்றாலும் அவர்களைப் பிரீதிசெய்யவேண்டும். எவனிடத்தில் தாய்தந்தையர் ஸந்துஷ்டியடைகின்றனரோ அவன் ஈசுவரனுடைய கருணைக்குரியதாகிறான்."

"பெற்றோர் முன்னிலையில் கடுஞ்சொல் பேசாத புத்ரனே ஸத்புத்ரன்."

"வெறுக்கத்தக்க வேடிக்கை வார்த்தைகளும், படபடப்பு, கோபம் முதலியவைகளும் பெற்றோர் முன்னிலையில் தவிர்க்கப்பட வேண்டும்."

"தாயாரையாவது, தந்தையையாவது கண்டால் நமஸ்கரித்து அவர்கள் உட்காரச்சொல்லும்வரை நின்று கொண்டிருக்கவேண்டும்."

"எந்த கிருஹஸ்தன், தன் தாய், தந்தை, சகோதரர், குழந்தைகள், பத்னி, ஏழைகள் இவர்களுக்கு அன்னபான வஸ்திரங்களளிக்காமல் தான் அனுபவிக்கிறானோ, அவன் பாபியாகிறான்."

"இவ்வுடலத்துக்குத் தாய்தந்தையர் காரணபூதராதலால் அவர்களை சந்தோஷிப்பதற்காக ஆயிரங்கஷ்டங்களாயினும் படவேண்டும்."

மனைவியிடமும் அவ்வாறே :— "ஒருமனிதனும் தன்மனைவியைத்திட்டக்கூடாது; ஆனால் தன் தாயைப்போல நடத்தவேண்டும். பிரமாதமான கஷ்டநிஷ்டூரங்கள் வந்த காலத்தும் ஒருவன் தன் மனைவியை விட்டுப்பிரியக்கூடாது."

"தன்மனைவி ஜீவித்திருக்கையில் எவனொருவன் வேறு ஸ்திரீயை நினைக்கிறானோ அல்லது தூரெண்ணத்துடன் ஸ்பர்சிக்கிறானோ அவன் அந்தகாரமான நரகத்தையடைகிறான்."

"புத்திசாலியான மனிதன் எவனும் வேறு ஸ்திரீயுடன் தனித்திருக்கவாவது, அவளுடன் ஒரேபடுக்கையில் சயனிக்கவாவது, தகாத வார்த்தைகள் பேசவாவது, தன்சக்திகளைப் பற்றிப்புகழவாவது கூடாது."

"கிருஹஸ்தன், தனம், ஆபரணம், அன்பு, நம்பிக்கை, அமிருதம் போன்ற சொல் இவைகளால் தன்மனைவியை சந்தோஷப்படுத்தவேண்டும்; ஒருபொழுதும் அவள் மனம் வருந்தும்படி நடந்துகொள்ளக்கூடாது."

"கற்புள்ள மனைவியின் அன்புக்குப்பாத்திரமான மனிதனுக்கு ஸுலபத்தில் புண்ணிய கர்மபலன்கள் ஸித்திப்பதன்றி, சர்வேசுவரியினுடைய கருணையும் உண்டாகின்றது."

கீழ்வருவன மக்கட்குச் செய்யவேண்டுவன:—

"நான்குவயதுவரை புத்ரனை நன்கு போஷித்துக் காப்பாற்றி, பின்பு பதினாறுவயதுவரை கல்விகற்பித்து அதன்மேல் இருபதுவரை ஸம்ஸாரகாரியங்களை நடத்துவதில் பயிலச்செய்யவேண்டும்; பின்பு தகப்பனால் அன்புடன் நடத்தப்பட்டுத் தனக்கு சமமானவன்போல் பாராட்டப்படவேண்டும்."

(இன்னும் வரும்).

# வர்த்தமானம்.

ஸ்ரீமத் பிரம்மானந்த ஸ்வாமிகள்.—சென்ற மீ 31௳ (13-6-21) சென்னை விட்டுப் பெங்களூருக்குச் சென்றார். சீக்கிரமே திருவனந்தபுரஞ் சென்று அங்கே புதிதாய்க்கட்டியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமத்தில் மங்களாசாஸனம் செய்விப்பாரென்றும் பின்னர் தென்னாட்டிலுள்ள விசேஷ ஸ்தலங்களுக்குச் செல்வாரென்று மறிகிறோம். நவராத்திரிக்கு முன்பாகத் திரும்பவும் இந்நகருக்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

திருப்புவனம் 'சாரதா சன்மார்க்க சங்கம்' :— இராமனாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த திருப்புவனம் என்னும் கிராமத்தில் சென்ற தைமீ 16௳ 'சாரதா சன்மார்க்க சங்கம்' என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, தினந்தோறும் சாயுங்காலம் 4-மணிமுதல் 6-மணிவரை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்', முதலான பத்திரிகைகள் வாசிப்பதற்கும், வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7-மணிமுதல் 11-மணிவரை மதவிஷயமான பிரஸங்கங்கள் நடைபெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன வெனக்கேட்டு மகிழ்கின்றோம். இம்மாதிரி சங்கங்கள் நாடெங்கும் ஏற்பட்டு மதாபிவிருத்திக்காக உழைக்கவேண்டு மென்பது எம் பிரார்த்தனை.

* * *

சென்னை ஸ்ரீ கௌரங்க சமாஜம்:— ஸ்ரீபாபா பிரேமானந்த பாரதியின் ஸ்ரீகௌரங்க ஸமாஜத்தின் ஆறுவது ஸம்வத்ஸர பிருந்தாவன மஹோத்ஸவம் வருஷா வருஷம் நடந்து கொண்டு வருகிற பிரகாரம், சென்னை கோமளேசுவரன்பேட்டையிலுள்ள ஷை சபையில் சென்றமீ 15௳ (28-5-21) மிக்கவிமரிசையாய் நடைபெற்றது. இரவு பகவத்பஜனையும், மறுநாள் காலை ஸ்ரீகிருஷ்ண சைதன்யரை எழுந்தருளவித்த திருவீதிபுறப்பாடு உத்ஸவமும், பின்பு நடைபெற்ற பிருந்தாவன மஹோத்ஸவமும், மாலை காலக்ஷேபமும் ஒன்றைவிட ஒன்று வியக்கத்தக்கவாறு பக்திகோஷ்டிகளால் கொண்டாடப்பட்டது.

* * *

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண பாலிகாபாடசாலை:— பரமகாருணிகரான, காலஞ்சென்ற ஸ்ரீமத் ராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகளால் பதினைந்து வருஷங்களுக்கு முன் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண பாலிகாபாடசாலை இதுவரை அருகிலுள்ள ஜனங்களால் நடத்தப்பட்டு வந்தது. சென்ற வைகாசி மாதம் முதல் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தார் அதன் மேற்பார்வையை ஏற்றுக்கொண்டு அதைச்சீர்திருத்தி முதற்றரமான நிலைக்குக்கொண்டுவர ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

துன்மதி௵ உத்தராயணம் க்ரீஷ்மருது, ஆனி௴

(கிறிஸ்துசகம் 1921, ஜூன்-ஜூலை.)

| ஆனி | ஜூன் ஜூலை | வார | திதி | நட்சத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 14 | செவ் | நவ-16-33 | ஹஸ்-40-8 | மிதுனரவி 11-15 கரிநாள் |
| 2 | 15 | புத | தச-14-58 | சித்-40-51 | பயிரிட, கிணறு |
| 3 | 16 | வியா | ஏகா-14-32 | சுவா-42-41 | ஏகாதசி, விவாக, உபநயன, சீமந் |
| 4 | 17 | வெ | த்வா-15-13 | விசா-45-34 | பிரதோஷம், கிருகப்ரவேசம் |
| 5 | 18 | சனி | த்ர-16-55 | அனு-49-22 | |
| 6 | 19 | ஞா | சது-19-32 | கேட்-54-5 | கரிநாள் |
| 7 | 20 | திங் | ○ பௌ-23-3 | மூல-59-36 | விவாகம், கிருகப்ரவேசம் |
| 8 | 21 | செவ் | ப்ர-27-22 | பூரா-60-0 | |
| 9 | 22 | புத | த்வி-32-26 | பூரா-5-53 | விவாகம், உபநயனம், ஸீமந்தம் |
| 10 | 23 | வியா | த்ர-38-6 | உ-ம்-12-58 | விவாக, கிருகப்ர, ஸீமந்தம் |
| 11 | 24 | வெ | சது-44-6 | திரு-20-10 | சங்கட சதுர்த்தி |
| 12 | 25 | சனி | பஞ்-50-5 | அவி-27-38 | |
| 13 | 26 | ஞா | ஷஷ்-55-38 | சத-34-50 | சுக்ர ... து; ரவி-செ புத |
| 14 | 27 | திங் | ஸப்-60-0 | பூ-தி-41-14 | |
| 15 | 28 | செவ் | ஸப்-0-11 | உ-தி-46 23 | 17-35-10-ரிஷ சுக்ரன். |
| 16 | 29 | புத | அஷ்-3-17 | ரேவ-49-50 | குரு, ச |
| 17 | 30 | வியா | நவ-4-34 | அசு-51-21 | ராகு |
| 18 | 1 | வெ | தச-3-48 | பர-50-43 | ஸ்மார்த்த ஏகாதசி, பயிரிட |
| 19 | 2 | சனி | ஏகா-0-55 / த்வா-56-5 | கார்-48-7 | வைஷ்ணவ ஏகாதசி, கிருத்தி |
| 20 | 3 | ஞா | த்ர-49-29 | ரோ-43-44 | பிரதோஷம் [கை |
| 21 | 4 | திங் | சது-41-32 | மிரு-37-57 | போதாயன அமாவாசை |
| 22 | 5 | செவ் | ● அ-32-39 | திரு-31-10 | |
| 23 | 6 | புத | ப்ர-23-18 | புன-23-53 | |
| 24 | 7 | வியா | த்வி-13-55 | பூச-16-38 | பயிரிட, கிணறுவெட்ட |
| 25 | 8 | வெ | த்ர-4-57 / சது-56-48 | ஆயி-9-47 | |
| 26 | 9 | சனி | பஞ்-49-52 | மக-3-39 / பூர-59-7 | |
| 27 | 10 | ஞா | ஷஷ்-44-22 | உத்-55-53 | ஆனியுத்திரம் |
| 28 | 11 | திங் | ஸப்-40-32 | ஹஸ்-54-20 | விவாக, உபநயன, ஸீமந், கிண |
| 29 | 12 | செ | அஷ்-38-22 | சித்-54-26 | [று வெட்ட, |
| 30 | 13 | புத | நவ-37-50 | சுவா-56-6 | |
| 31 | 14 | வியா | தச-38-49 | விசா-59-12 | [ணயன புண்யகாலம் |
| 32 | 15 | வெ | ஏகா-41-4 | அனு-60-0 | கடகரவி 38-16. ஏகாதசி தக்ஷி |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு— திருக்குறள்.

தொகுதி 1] துன்மதி௵ ஆடி௴ [பகுதி 7

## கடவுள் வணக்கம்.

அத்தனாகி யன்னையாகி ஆளுமெம் பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப் பொழித்துநம்மை யாட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்துநம் உள்ளமேவினார்.
எத்தினால் இடர்க்கடல் கடத்தி? ஏழைநெஞ்சமே!

பொன்னிசூ ழரங்கமேய பூவைவண்ண! மாய! கேள்!
என்னதாவி யென்னும்வல் வினையினுட் கொழுந்தெழுந்து
உன்னபாத மென்னநின்ற ஒண்சுடர்க் கொழுமலர்.
மன்னவந்து பூண்டுவாட்ட மின்றியெங்கும் நின்றதே.

இயக்கறாத பல்பிறப்பில் என்னைமாற்றி இன்றுவந்து
உயக்கொள்மேக வண்ணன்நண்ணி என்னிலாய தன்னுளே
மயக்கினான்தன் மன்னுசோதி ஆதலால்என் னாவிதான்
இயக்கெலா மறுத்தறாத இன்பவீடு பெற்றதே.

ஆயுங்கலையுஞ் சுருதியுங் காண்டற் கரியவுனைத்
தோயும்படிக்குக் கருணைசெய்வாய்! சுகவான் பொருளே!
தாயும்பிதாவுந் தமருங் குருவுந் தனிமுதலு
நீயும்பரையு மென்றேயுணர்ந் தேனிது நிச்சயமே.

உள்ளத்தி னுள்ளேயொளித் தென்னையாட் டுகின்ற
கள்ளக் கருணையையான் காணுந்தர மாமோ
வெள்ளத்தை மாற்றிவிடக் குண்பார் நஞ்சூட்டும்
பள்ளத்தின் மீன்போற் பதைத்தேன் பராபரமே.

உ

சிவமயம்

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் வரலாறு.

கணபதி துணை

## பாயிரம்

திரைகடல் சூழ்ந்த பெருநில வரைப்பும்
உரையினுக் கடங்கா வுலகின் றொகுதியும்
தொல்லை ஞாலத்துத் தோன்றிநின் றழியும்
பல்லுயிர்க் கூட்டமும் பண்புறப் படைத்த
பகவதி காளி பார்ப்பதி மனோன்மணி
திரிபுர சுந்தரி பரிபுர மலர்த்தாள்
உள்ளத் திருத்திய உத்தம புருஷனும்
ஸ்ரீராமக் கிருஷ்ண தேவர்சற் சரிதையை
அல்லும் பகலு மனைவரு மோதித்
தொல்லைப் பிறப்பைத் தொலைக்கு மாறு
கரிமா முகத்தோன் கருணை வேண்டிப்
பரிவுட னிதனைப் பகரு வாமே.

## நூல்

அற்புத வடிவா மம்பிகா பதியின்
திருவரு ளாலே திரைகடல் கடந்து
குணபாற் பரிதி குடபால் நடந்தென
அமெரிக்கா சென் றங்கு நிகழ்ந்த
சர்வ சமய சற்சபை தன்னிற்
சந்திர வதன தரிசன மளித்தும்
இந்து மதவுண்மை யியல்பினை விளக்கியுஞ்
சச்சி தானந்தத் தன்மை காட்டியு
மிச்சையா லெவரு மிலகுவி னுணர
மாமறைப் பொருளை மழையெனப் பொழிந்தும்
வைதிக நெறியை வளர்த்த விவேக
ஆநந்த சுவாமிக் கனுக்கிர கித்த
சீரருட் குரவன் றிவ்விய சரிதையை
யன்புடன் கேண்மின்! அவனி வாசிகளே!



"அறமது குன்றி மறமது பெருகுங்
காலந் தனில்யா னவதரித் திடுவேன்"
என்று கண்ணபிரா னியம்பினர் கீதையில்.
இத்திரு மொழியி னியல்பினை யுணர்த்தி
யநாதி நித்தியத் தருமா மறையி
னெழுதொணாப் பெருமையை யெடுத்தே யுரைக்க
வந்தவ தரித்தநல் வரனே யெங்கள்
இள்ளைசீ ராமக் கிருஷ்ண தேவர் !
கலியு காப்தங் கணிக்கு நாலாயிரத்
தொன்பா னூற்றொடு முப்பத் தைந்தாம்
நந்தன வருடம் நயம்பெறு மாசியிற்
சுக்கில பக்கத் துவிதியை யாகும்
பதினொராந் தேதிப் புதன்வா ரத்தினிற்
புண்ணிய பூமியாம் பரதகண் டத்தில்
வங்காள நாட்டில் வளர் குக்கிலியற்
றிகழ்கமார் புகுரெனுந் திருநக ராகிய
கர்மகார புஷ்க் கரமெனு மூரில்
ஓரில்ல மென்ன வொளிரா நின்ற
விப்பிர குலத்து விளங்குந் திலகமாஞ்
சுதிராம் சட்டோ பாத்தியா யர்க்குக்
கருணைக் கடலாங் கதாதர மூர்த்தி *
தாமே மகவாய்த் தங்குவ ரென்று
காயா யாத்திரை காணுநன் னெறியிற்
சொப்பனந் தன்னிற் சொல்லிய முறையே
யவர்தன் புடை யருமனை யாட்டி
சற்குணச் செல்வியாஞ் சந்திர மணியின்
றிருவயிற் றுதித்த சிறுவர் கதாதரர் †
பாலியம் முதல்மண் பதுமைகள்செய்தும்
அவற்றை யென்று மாரா தித்தும்
வளர்காய் பிஞ்சிற் றெரியுமென் பதுபோ
லருஞ்சிறு பிராயத் தாடல் புரிந்தனர்,
அவரா யமைத்த வற்புதப் பதுமையின்
சித்திரச் சிறப்பைச் சிற்பவல் லுநரும்
பக்தி செய்து பாராட் டிடுவார்;
நிலைகுலைந் திருந்த நிர்மல வுருவ
மெல்லா வற்றையு மெடுத்தினி தவற்றைச்
சிறப்புறு வண்ணஞ் சீர்செய் திடுவார்;

* திருமால் † பிள்ளைத்திருநாமம்.

சிற்சில வேளையிற் சிவச்சிலை சமைத்துச்
சிவ பிரானைச் சிந்தித் திருப்பர்.
இலையோ னுபவிவ் விராமக் கிருஷ்ணர்க்
கிருசகோ தாரு மிருசகோ தரிகளு
மில்லந் தன்னி லின்புற் றிருந்தனர்.
கற்றவர் திகழுங் காளி கோட் டத்தினில்
வடமொழிக் கழக மொன்றினை வகுத்து
அங்ஙனம் பலர்க்கவ் வருமொழி புகட்டி
யின்புற் றிடவாழ் இராம குமார
சட்டோ பாத்தி யாயர் கதாதரர்
தமயனு ராகுந் தவமுடை யோரே.
கங்கைக் கரையிற் றக்கிணே சுரத்தி
லாயிரத் தெண்ணூற் றைம்பத்து மூன்றில்
இராணி ராசமணி யம்மா ளிரத்தினக்
கல்லினுற் கட்டிய கண்ணுறை மணியாங்
காளிகா தேவியின் கனகா லயத்திற்
பூசனை புரிந்த புண்ணிய சீலன்
நங்கதா தரரின் நற்றம யனுமால்.
தந்தை தயாநிதி தண்ணருட் சீலன்
சுந்தர சுகிர்த சுவர்க்க சஞ்சாரஞ்
செய்வான் செல்லச் செல்வச் சோதரர்
தங்களைத் தம்பிதா தாமெனக் காணுநம்
மிளவலோ தம்மரு மிளம்பரு வத்தை
வேண்டுவார் வேண்டும் மேலக மீந்து
பக்தி வலையிற் படுவோ னுன
வருமறை முதல்வற் கர்ப்பணஞ் செய்தனர்.
பத்துட னுறெனப் பகராண்டு தன்னி
லுபநய னம்பெற் றுத்தம ரானநம்
மண்ணலாம் பாலனீ ராண்டின் பின்றை
முன்னவன் றேகம் மெலிவுற் றிடலு
மன்னவன் வேண்டுத லாலே பின்னவன் †
றேவியினு லயஞ் சென்றங் கிருந்து
அருச்சக ராகி யளவிலா வன்பொடு
அம்பிகா தேவியை யாரா தித்தனர்.
ஈசுர தரிசன மிரட்சைக்கு வேண்டு
மெனுஞ்சத் தியமே யெங்குரு பரனுக்
கல்லும் பகலு மகத்தி லிருந்தது.

* கல்கத்தா. † கதாதரர். பின்னவன்-தம்பி.



பரமேஸ் வரியின் பாதார விந்தமே
பற்றெனப் பழுத்துப் பயின்றவ ராகி
ஊரையும் பேரையு மூணையும் வெறுத்து
இரவும் பகலு மிறைவியை யிறைஞ்சி
"அருமைத் தாயே! அருமைத் தாயே!
அம்பிகே ! யெந்த னுருயி ரன்னையே!
நீர்க்குமிழி யன்ன நிலையிலா வாழ்க்கையி
லொருதினம் வீணி லொழிந்து விட்டது !
காலங் கழிந்தது ! காளிகா தேவியே!
காலன் வருமுன் கருணை புரிந்து
காட்சித் தருளுன் கருணை ரூபத்தை!
உன்னிரு தாளலா லொன்றும் வேண்டிலேன்.
எண்ணுத வெண்ண மெண்ணியென் நெஞ்சம்
புண்ணு கின்றதே புவனேஸ் வரியே!
அன்னையே! நின்னையே யடிபணிந் தனமே,
என்னையுன் தாஸனு யேற்றரு ளுதியால்"
என்றிவ் வாறு யேகன் றேவியை
யேத்தி யேத்தி யிறைஞ்சிப் புலம்புவர்.

---

நீயே நானென்று நினைப்பு மறப்பு மறத்
தாயேயனைய வருள் தந்தாய் பராபரமே

* *
*

வாடு முகங்கண்டென்னை வாடாமலே காத்த
நீடுங் கருணை நிறைவே பராபரமே.

* *
*

மண்ணீர்மையாலே மயங்காதுன் கையாலென்
கண்ணீர்துடைக்கவு நான் கண்டேன் பராபரமே.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 7. அத்தியாயம் 3.

### ஸ்ரீராமகிருஷ்ணரும், பிரம்மஸமாஜமும்:

**'ஒன்றுதான் அவசியம்'**

*பிறகு கேசவசந்திரஸேனரின் ஆத்மா, இவ்வுலகை விட்டுச் சென்ற பிறகு பிரம்ம ஸமாஜத்திலேற்பட்ட பிரிவினையைப் பற்றிப் பேசத்தொடங்கினார்கள்.*

*பகவான் (பிரதாபரைப் பார்த்து).—உமக்கும், உமது ஸமாஜத்து மற்ற அங்கத்தினர்க்கும் ஏதோ வித்தியாச மேற்பட்டதாகக் கேள்விப்பட்டேன். உமது எதிரிகளில், எனக்குத் தெரிந்தவரைக்கும் அநேகர் சாதாரண மனிதர்களாயிருக்கிறார்கள். (ஹொாகீர், பல்ல, பஞ்ச.)*

*முகத்தை திவ்விய தேஜஸுடன் பிரகாசிக்கச் செய்யும் தனது அதிமனோஹரமான புன்சிரிப்புடன் பகவான் பிரதாபரைச் சுட்டிக்காட்டி பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்துச் சொல்கிறார்: "பிரதாபன், அமிருதன் முதலிய சங்குகள் மிகவும் பலமான நாதத்தையுடையன. சங்குகள் எல்லாம் ஒன்று போலவா! எத்தனையோ சங்குகள் சப்தமே கொடுப்பதில்லை."*

*அங்கிருந்தவர்களெல்லோரும் குலுங்க நகைத்தார்கள்.*

*பிரம்மஸமாஜம், ஹரிஸபை முதலியஸங்கத்தின் அங்கத்தினர் கொடுக்கும் பிரசங்கங்களைப் பற்றி பகவான் சொல்கிறார். "ஒருவன் செய்யும் உபந்யாசத்திலிருந்து அவனுடைய ஞானத்தை அறியலாம். 'எஸ்—' ஒரு ஹரி ஸபையில் உபந்யாஸம் செய்துகொண்டிருந்தான். உபந்யாசத்தின் மத்தியில் பின்வருமாறு சொன்னான்: "பகவானுக்கு மாதுரியமில்லை. ஆகையால் நம் ஸ்வபாவத்தின் மாதுரியத்திலிருந்து கொஞ்சம் அவருக்குக் கொடுத்து அவரை மதுரமாகச் செய்யவேண்டும்," அருள் அன்புமுதலிய ஈசுவர குணங்களுக்கு மாதுரியம் என்றான். இதைக் கேட்டதும் தன் மாமன் வீட்டில் நிரம்பக் குதிரைகளிருப்பதாகச் சொன்ன ஒரு பையனுடைய ஞாபகம் வந்தது. இதைப் பற்றி கேட்பவர்களுக்கு நம்பிக்கை வருவதற்காக, ஒரு மாட்டுத் தொழுவம் நிறைய குதிரைகளிருந்தன என்றான். குதிரைகள் கட்டுவது மாட்டுத்தொழுவமல்லவாதலால், பையன் பொய் சொல்லுகிறானென்றும், அவனுக்கு குதிரைகளைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றும், கேட்பவர்கள், யுக்தியாலறிந்து கொள்ளலாம். கடவுள் அன்பு, ஆனந்தம் முதலிய மாதுரிய குணங்களற்றவரென்று சொல்வதின் அஸம்பாவிதத்திலிருந்து, உபந்யாஸகனுக்கு தான் உபந்யஸிக்கும் விஷயத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றும், அவன், சிதானந்தமயனும், பரம கருணாநிதியுமான பரம்பொருளை அறியவேயில்லையென்றும் விளங்குகிறது."*

*திடீரென்று கம்பீரத்துடன் பிரதாபரைப்பார்த்துச் சொல்லுகிறார்:— "நீர் படித்தவர்; புத்திசாலி. உமக்கு விளையாட்டுப் புத்தியில்லை. கம்பீர சுபாவத்தை யுடையவர். கேசவனும் நீரும் கௌரரும் நிதேயும் (சைதன்னிய தேவரும் நித்தியானந்தரும்) போல ஸகோதரபாவத்துடனிருந்தீர்கள். பிர*



*சங்கங்கள், வாதங்கள், பிரிவினைகள் முதலிய பிரபஞ்ச விஷயங்கள் உமக்குப் போதாதா? உமது ஜீவன் இவைகளால் இப்பொழுது களைப்படைந்திருக்க வேண்டும். பகவானையே உத்தேசித்து உமது முழுமனதையும் செலுத்தி அவனது அந்தமில்லாத அப்பெனும் கடலில் முழுகச்சமயம் ஆய்விட்டதே.'*

*மஜூம்தார்.—ஆம், ஸ்வாமீ; அதொன்றுதான் அவசியம். சந்தேகமில்லை. நான் தேடுவதெல்லாம் கேசவர் ஆரம்பித்த வேலையை மயங்காமல் நடத்தி வருவதுதான்.*

*பகவான் (புன்சிரிப்புடன்).—கேசவனது வேலையை நடத்திக்கொண்டு வரத்தேடுகிறேனென்று நீர் சொல்லுகிறீர். நீர் சிலநாள் பொறும்; வேறு விஷயமாக நினைப்பீர்.*

*ஒருவன் ஒரு பாறையில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு சுகமாக வசித்தான். அக்குடிசையைக் கட்ட மிருந்த பாடுபட்டான். சிலநாளுக்குப் பிறகு ஒரு பயங்கரமான புசல் அடித்தது. அக்குடிசை அஸ்திவாரத்தோடு அசைந்தாற்போல் தோன்றிற்று. அதைக்காப்பாற்றும் ஆவலுடன் அவன் வாயு பகவானைக் குறித்து "பகவானே! எனது குடிசையை விழச்செய்யாதேயுங்கள்" என்று பிரார்த்தித்தான். வாயுபகவான் அவன் பிரார்த்தனையைக் கேட்கவில்லை. குடிசை அடியோடு இடிந்துவிழும்போலத் தோன்றிற்று. ஹனுமான் வாயுபகவானது பிள்ளையாயிற்றே என்று அவனுக்கு ஞாபகம்வர, "தந்தையே! குடிசையைக் கீழே தள்ளாதேயுங்கள்! அது உமது மகனாகிய ஹனுமானுடையதே" என்று கதறினான். புசல் கொஞ்சமேனும் குறைவதாகக் காணவில்லை. "இது ஹனுமானுடைய சொந்தவீடு! ஹனுமானுடைய சொந்தமே!" திரும்பித்திரும்பிக்கூவியும் பிரயோஜனமில்லை. வேறொரு விதமாகப் பார்ப்போமென்று "இது லக்ஷ்மணனுடைய குடிசை! பகவானே! காப்பாற்று" என்றான். லக்ஷ்மணனுடைய பேரும் ஹனுமானுடைய பேரைவிட பிரயோஜனமில்லாமல் போகவே, கடைசியாக, "இது ராமனுடைய வீடு. வாயுபகவானே! காப்பாற்றவேண்டும். இது ராமனுடையவீடு!" என்று கூவினான்.*

*வாயுபகவான் கொஞ்சமும் கவனிக்கவில்லை. குடிசை கொஞ்சம் கீழே விழ ஆரம்பித்து விட்டது. தனது பிரார்த்தனையெல்லாம் வீணாய்ப்போகவே அவன் "இது பிசாசினுடைய குடிசை! என்று சபித்துக்கொண்டு வெளியே ஓடினான். (யாவரும் சிரிக்கின்றனர்)*

*நீர் கேசவனுடைய பெயரைக்காப்பாற்ற ஆவலுள்ளவராயிருக்கலாம். ஆனால், கடவுளுடைய இச்சை அவ்விதம் இருந்ததினால்தான் அவர் பெயருக்குச் சம்பந்தப்பட்ட மத ஸமாஜம் ஏற்பட்டதென்பதையும், அச்சமாஜத்தினுடைய காலம் சென்றுவிட்டதாயிருக்குமானால் அதுவும் கடவுளது திருவுளமே யென்பதையும் மனதில் தரித்துக்கொள். ஆகையினால் கடலில் ஆழ முழுகும்.*

பகவான் பாடுகிறார்:—

**ஆழ்ந்துமுழுகு.**

1. *என்மனமே! ஆழ்ந்துமுழுகு; சௌந்தரியக்கடலில்*
 *ஆழ்ந்துமுழுகு, ஆழ்ந்துமுழுகு.*
 *சமுத்திரத்தின் ஆழமான பிரதேசங்களில் தேடிப்பார்!*
 *பிரேமையென்னும் செல்வமணியை அடைவாய்.*

2. உன் ஹிருதயத்தினுள்ளே பிருந்தாவனமிருக்கிறது.
தேடிப்பார், தேடிப்பார், தேடிப்பார், நீயதைக்காண்பாய்,
அப்பொழுது பிரபஞ்சமாகிற தீபம் அணையாமல் எரியும்.
3. தரையில்—கெட்டித்தரையில்—பட்கோட்டும்—அப்பரம்
பொருள்யார் ?

"கேள், கேள், கேள், பரமகுருவாகிய பகவானது திருவடிகளைத் தியானி" என்று கபீர் சொல்லுகிறார்.

பயப்படாதே. அது அமிர்தக்கடல். நான் ஒருஸமயம் நரேந்திரனிடம் சொன்னேன்.

முஜூம்தார் (குறுக்கிட்டு) :—இந்த நரேந்திரன் யார் ?

பகவான்:— ஓ! அப்பெயருள்ள ஒரு வாலிபனிருக்கிறான். நான் நரேந்திரனிடம். "கடவுள் ஒரு தேன்கடல்போல். அக்கடலிலுள் முழுக ஆசைப்படமாட்டாயா ? அகன்ற வாயையுடைய ஒரு பாத்திரத்தில் நிறைய ஸர்பத்து வைத்திருக்கிறதென்று வைத்துக்கொள். நீ ஒரு ஈ யென்றும் வைத்துக்கொள். நீ அந்த மதுரமான ரசத்தைப்பருக ஆவலுடனிருக்கிறாய். நீ எங்கிருந்து அதைக் குடிப்பாய் ?" என்று கேட்டேன். நரேந்திரன் அதற்கு, "பாத்திரத்தின் ஓரத்திலிருந்து குடிப்பேன்; என்நிலைக்குமேல் ஆழமான இடத்திற்கு வந்தால் முழுகியிறந்துபோவேன்" என்றான். அதற்கு நான் அவனைப்பார்த்து "பையா! கடவுளாகிய ஆநந்தஸாகரத்தில் மூழுகுவதினால் மரணத்தையாவது, வேறு எந்தவித அபாயத்தையாவது பற்றிப் பயப்பட வேண்டியதில்லை யென்பதை மறந்துவிடுகிறாய். இது அமிருதக் கடல் (மரணமில்லாத கடல்) என்பது ஞாபகமிருக்கட்டும். இக்கடலிலுள்ள சர்பத்து மரணஹேதுவாவதில்லை; ஆனால் நித்தியவாழ்வைக் கொடுக்கிறது. சில பைத்தியக்காரர்களைப்போல், கடவுளிடம் பக்தி அதிகமாய்விடப் போகிறதே என்று பயப்படாதே" என்றேன்.

மாயையால் உண்டாகும் அன்பிற்கும், தயையால் உண்டாகும் அன்பிற்கும் என்ன வித்தியாசம் ? தயையால் உண்டாகும் அன்பு தன்னோடும், தன் குடும்பத்தோடும், தன் மதத்தோடும், தன் தேசத்தோடும் நிற்காது ஸகல ஜீவர்களுக்கும் செல்கிறது. மாயையாலுண்டாகும் அன்போ, தன்னோடும், தன்குடும்பத்தோடும் தன் மதத்தோடும், தன் தேசத்தோடும் நிற்கிறது. முதற் சொன்னது, சிரேயஸைக்கொடுத்து கடவுளிடம் கொண்டு சேர்ப்பதால், அதைக்காத்து வளர்க்கவேண்டும். மாயையாலுண்டான அன்போ நம்மைத் தாழ்த்தி ஆத்ம நாசத்தை விளைவிக்கும்.

மேலான ஞானம் எது ? பகவான்! நீ ஒருவனே அகில ஜன்மத்திற்கும் கர்த்தன்; நான் உன் கையில் தாழ்ந்த கருவி. இன்னும், எனதென்பதொன்றுமில்லை. எல்லாம் உனதே. நானும், என்குடும்பமும், என்பொருளும், என் சற்குணங்களும் எல்லாம் உனதே என்று ஞானி சொல்லுகிறான்.

'நீ,' 'உனது' என்பதுதான் மெய்ஞ்ஞானம். 'நான்' 'எனது' என்பது தான் அஞ்ஞானம்.

இந்தயுகத்தில் ஈசுவரபக்தியில்லாத கர்மம் நிலைக்க ஹேதுவில்லை. அது மணலில்போடும் அஸ்திவாரம் போன்றது. முதலில் பக்தியை விர்த்திசெய்; பள்ளிக்கூடங்கள் ஆஸ்பத்திரிகள் முதலிய மற்றவையெல்லாம் பின்பு உனக்கு



வரும். முதல் முதல் பக்தி, பின் கர்மம். ஈசுவரபக்தியை ஒழித்த கர்மம் ஆசிரயமற்றது; நிற்காது.

பிரதாபர், சிஷ்யர்களைப்பற்றி விசாரித்தார். பகவானை அண்டிவருபவர் நாளுக்கு நாள் ஆத்மவிஷயங்களில் விருத்தியடைந்து வருகிறார்களா வென்று கேட்டார்.

அதற்கு பகவான்:—உலகத்திலிருந்து வாழ்வதற்கு ஒரு தாதியின் மனோபாவத்தை யடையவேண்டுமென்று காண்பித்து வருகிறேன்.

தாதியானவள் தன் எஜமானனது வீட்டைப்பற்றிப் பேசும்போது "இது எங்கள் வீடு" என்கிறாள். ஆயினும் அது தன் சொந்தவீடல்ல வென்றும், தன் வீடு தூரத்தில் ஒரு கிராமத்தில் இருக்கிறதென்றும் அவளுக்கு நன்றாகத்தெரியும்; அவளுடைய நினைவெல்லாம் அந்த கிராமத்திலுள்ள வீட்டிலேயேயிருக்கும். மேலும், தன்கையிலிருக்கும் தன் எஜமானனது குழந்தையைப்பார்த்து "என் ஹரி (குழந்தையின் பெயர்)க்கு முரண்டு அதிகமாய்ப் பூட்டது" அல்லது, "என் ஹரிக்கு இப்பண்டம் பிரியம்" என்று இவ்விதமெல்லாம் சொல்லுகிறாள். அப்படிச்சொல்லும்பொழுதெல்லாம் ஹரி தன் சொந்தக்குழந்தை யல்லவென்று அவளுக்கு நிச்சயமாய்த்தெரியும். என்னிடம் வருபவர்களுக்கு இத்தாதியைப் போல் பற்றற்று வாழும்படிச் சொல்லுகிறேன். உலகத்திலிருந்தபோதிலும், அதில் பற்றற்று மனதைத் தனது சொந்தமானகிருஹமாகிய ஈசுவரனிடத்தில் நிறுத்தும்படி அவர்களுக்குச் சொல்லுகிறேன், இவ்விதம் வாழ்வதற்கு உதவியாயிருக்கிற பக்தியுண்டாகக் கடவுளைப்பிரார்த்திக்கும்படி அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

பிறிதுநேரத்திற் கெல்லாம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள நாஸ்திகவாதத்தைப் பற்றிப்பேச்சுண்டாயிற்று. முஜூம்தார் "மேல்நாட்டார் என்ன அபிப்பிராயத்தை வெளியிட்டபோதிலும் அவர்கள் ஒருவரும் அந்தரங்கத்தில் நாஸ்திகர்களல்ல வென்று எனக்குத்தோன்றுகிறது. ஐரோப்பிய பண்டிதர்கள் ஜகத்துக்குள் ஒரு அஞ்ஞாதமான (மறைவான) சக்தி யிருப்பதாக ஒத்துக்கொள்கிறார்கள்" என்றார்.

பகவான்:—சரி; பிரபஞ்சத்தையாவும் சக்தியை நம்பினால் போதுமே.

முஜூம்தார்.—ஜகத்து நியாயானுஸாரமாய் நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் நம்புகிறேன்,

முஜூம்தார் பகவானிடம் விடைபெற்றுக்கொள்ள எழுந்திருக்க பகவான் அவரைப்பார்த்துச் சொல்லுகிறார்.—"நான் என்ன சொல்லுகிறது? நீர் இவைகளையெல்லாம் (பேதங்கள், வாதங்கள் முதலியனவற்றை) விட்டொழிப்பதே மேல்.

ஸர்வஸங்கபரித்தியாகம் (கடைசிப்பிரார்த்தனை.)

காமினீ காஞ்சனங்கள் மனிதர்களை ஸம்ஸாரவாழ்வில் அமிழ்த்திவைத்துக் கொண்டு; கடவுளிடமிருந்து அவர்கள் மனதைத் திருப்பிவைக்கின்றன வென்பதை மறவாதே. நல்லவளாயினும், சாமான்னியமானவளாயினும் தன் மனைவியைப்பற்றி ஒவ்வொருவனும் புகழ்ச்சியே செய்வது ஆச்சரியம்,"

இத்தருணத்தில் முஜூம்தார் புறப்பட்டுப் போய்விட்டார்.

# பக்தன்.

(ஸ்ரீமத் ராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள்).

நாம் ஏன் ஈச்வரனைப் பூஜிக்கவேண்டும்? நாம் ஏன் அவரொருவரிடம் மட்டுமே பற்றுக்கொள்ள வேண்டும்? ஏனெனில் அவரொருவரை மட்டுமே ஸதாஸேவித்து வந்தாற்றான் அவருடைய நிஜஸ்வரூபத்தை யறிவது நமக்கு ஸாத்தியமாகும். நமக்கு அவரிடம் பக்தியுண்டாவதற்கும் அதுவே வழி. குருநாதர் பரமஹம்ஸ தேவர் நம்மைச் செம்படவஸ்த்ரீகளுக்கு ஒப்பிடுவது வழக்கம். ஒருக்கால் சில செம்படவஸ்த்ரீகள் கசாப்புக்கடையிலிருந்து தத்தம் வீடுகளுக்குத் திரும்புங்கால் ஒரு புயற்காற்று வீசவாரம்பித்தது. ஆதலால் அவர்கள் வழியிலிருந்த ஒரு புஷ்பக் கடைக்காரனுடைய வீட்டில் தங்க நேர்ந்தது. அந்த புஷ்பக்கடைக்காரன் அந்த ஸ்த்ரீகளிடம் பரிதாபங்கொண்டு புஷ்பங்களின் ஸுகந்தம் நிரம்பப்பெற்ற ஓரறையில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுசெய்து கொடுத்தான். அன்றிரவு அந்தஸ்த்ரீகள் தூங்குவதற்குத் தங்களாலான மட்டும் முயற்சி செய்தும், அவர்களுடைய பிரயத்தனங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போலாயின. ஏனெனில் அவர்களால் அந்த ஸுகந்தத்தைப் பொறுக்க முடியவில்லை; கடைசியில் அவர்கள் தங்களுடைய மீன் சுமக்கும் கூடைகளை ஜலத்தால் நனைத்து தங்கள் மூக்குகளினருகாமையில் வைத்துக்கொண்ட பிறகு தான் அவர்களுக்குத்தூக்கம் வந்தது. வெகுகாலமாய் மீன் நாற்றத்திலேயே அவர்கள் பழகிவந்ததுதான் இதற்குக் காரணம். மீன்நாற்றம் அவர்களுக்கு ஸஹஜம். புஷ்பங்களின் நறுமணமோ அவர்களுக்குப் புதிதானமையால், அதை அவர்கள் ஸஹிக்கமுடியவில்லை. நம்முடைய நிலைமையும் அந்த ஸ்த்ரீகளின் ஸ்திதியைப் போன்றதே. நாம் இந்த ஸம்ஸார ஸாகரத்திலேயே மூழ்கினவர்களா யிருக்கிறோம். நமக்கு ஸம்ஸாரத்தாலுண்டாகும் ஸுகங்களும் துக்கங்களும் ஸகஜமாய் விட்டன. ஈச்வரருடைய திருநாம உச்சாரணத்திலுங்கூட நம்மில் சிலருக்கு அருவருப்பு உண்டாகின்றது. அவரை யறிந்து அவரைப்பற்றிய ஞானத்தை யடையவேண்டு மென்னு மாவலும் நமக்கில்லை. கடவுளைப்பற்றிய சிந்தனையற்றவர்களாய், லோக விஷயங்களையே மனத்திற் கொண்டவர்களா யிருக்கிறோம். அவரை யறியவேண்டு மென்னும்ஆவல் உண்டாகும்பொருட்டுத் தான் நாம் வேதங்களையும் உபநிடதங்களையுங் கற்பது.



ஈச்வரர் ஸர்வவ்யாபி; அவர் நம்முடைய ஹ்ருதய கமலத்தில் வீற்றிருந்து எப்பொழுது நமக்கு அவரை யறியவேண்டு மென்ற ஆவலுண்டாகின்றதென்று அறிந்துகொள்ளுகிறார். ஸர்வ வேதாந்த ஸங்கிரகமாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில் "என்னைப்பற்றிக் கிஞ்சித்தேனுமறிய ஆவல்கொண்டு பக்தியுடன் என்னை மனிதன் எப்பொழுது அடைகின்றானோ, அப்பொழுதே நான் அவனிடம் வந்து அவனுடைய மனத்தை வருத்தும் ஸகல துக்கங்களையும் நாசம் செய்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளியது போல் நம்முடைய துக்கங்களை நிவர்த்திக்கின்றனர். அவர் பக்ஷபாதமில்லாதவர். எல்லோரையும் ஸமமாக பாவிக்கிறார். ஆனால் அவர் தன்னை ஆச்ரயித்த மனிதர்களுக்கு மட்டுந்தான் அநுக்ரஹம் செய்கிறார். தன்னைவிட்டு விலகிய மனதுடன் கூடிய மனிதனுக்கு அனுக்ரஹம் செய்வதில்லை.

பகவான் ஸ்ரீராமக்ருஷ்ண தேவர் நம்மைக் கப்பல்களுக்கு ஒப்பிடுவது வழக்கம். ஈச்வர கடாக்ஷம், ஸதா வீசிக்கொண்டிருக்கும் காற்றைப் போல் எல்லோரும் அடைவதற்கு ஸாத்தியமானது. காற்றைப் பெறும்பொருட்டு விரிக்கப்பட்ட பாய்களோடு கூடிய கப்பல்களைப் போல் ஈச்வரனிடம் செலுத்தப்பட்ட மனத்தோடு கூடிய சிலர் அவருடைய அன்புக்குரித்தாகித் தங்களுடைய பிரயாசையால் மேன்மேலும் அவருடைய கடாக்ஷத்தைப் பெறுகின்றனர். லோக விஷயங்களினநுபவத்தில் திருப்பப்பட்ட மனதுடன் கூடிய வேறு சிலர் விரிக்கப்படாத பாய்களோடு கூடிய கப்பல்கள் எவ்வாறு காற்றைப் பெறுவதில்லையோ அம்மாதிரியே ஈச்வர கடாக்ஷத்தைப் பெறுவதில்லை. அவர்கள் "ஈச்வரன் கருணையில்லாதவர். இல்லாவிடின் நம்மைத் தவிக்க விட்டிருப்பாரா? என்று கூறுவர். ஈச்வரர் பக்ஷபாத மற்றவர்; காற்று எல்லாக் கப்பல்களுக்கும் அடைதற்கெளிதானது போல், அவருடைய அநுக்ரஹம் எல்லோரும் அடைதற்கு ஸாத்தியமானதென்றுணராதது அவர்களுடைய பேதைமை என்று அவர்கள் உணர்கிறதில்லை.

பகவான் சங்கராசாரியார் ஈச்வர கடாக்ஷத்தை அக்நிக்கு ஒப்பிடுகின்றனர். நெருப்பினருகிலுள்ள மனிதன் குளிர் நீங்கப் பெறுகின்றான். சிறிது தூரத்திலுள்ள மற்றொரு மனிதன் குளிர்ச்சியால் வருந்துகின்றான். இது அக்நியின் குற்றமாகுமா? மனிதன் அக்நியிலிருந்து தூரத்திலிருக்கும் குற்றமே இதற்குக் காரணமாகும். அதேமாதிரி ஈச்வர கடாக்ஷத்தை நாம் பெறாதது அவருடைய குற்றமாகுமா? அவரிடத்து ப்ரேமை நமக்கில்லாததே அதற்குக் காரணம். ஈச்வரன் பரம காருணிகர்; எல்லோருக்கும் ஸுகத்தை யளிப்பவர். கொடுங்கோலைக் கையிற்கொண்டவரல்லர்.

ஆனால், கொடுமையான ஸ்வபாவமுடைய சிலர், "ஈச்வரர் குரூரமானவர், அவருக்குக் கருணையில்லை" என்று கூறுகின்றனர். குரூரமான மனிதன் மற்றுமுள்ள மனிதர்களைச் சாந்தமாகச் செய்யும் பொருட்டு ஈச்வரனிடம் பயமுண்டாகச் செய்கிறான் போலும். ஈச்வரனிடம் கிஞ்சித்தேனும் குரூரமுண்டா? தன்னுடைய பக்தனாகும் பொருட்டு ஒரு மனிதன் விரும்புகிறானென்றுணர்ந்த நிமிஷமே அவனிடம் தான் ஓடிச் செல்கின்றனர். அவர் தன்னுடைய பக்தர்களிடம் ஸதா ஓடிக்கொண்டேயிருக்கிறார்; ஆனால் சிலர் "எனக்கு வேறு நண்பரிருக்கின்றனர்; உம்முடைய ஸ்நேஹம் எனக்கு வேண்டாம்" என்று கூறுகின்றவர் போல் ஈச்வரனிடம் நடந்து கொள்ளுகின்றனர். அவருடைய ஸ்நேஹத்தையும் அனுக்ரஹத்தையும் பெற விரும்பும் மனிதனுடைய அஞ்ஞானத்தையும், துக்கத்தையும் அவர் சீக்கிரமாகவே போக்கடிக்கிறார். அப்பேர்ப்பட்ட மனிதன் ஞானோபதேசம் பெற்றவனாய், தன்னுடைய மனத்தின் தூய்மையையும் மேலான ஸ்திதியையும் கண்டு கொள்கிறான். ஞானம்பெற்ற பிறகு, ஈச்வரனுடைய ஸ்வரூபத்தை எங்கும் பார்க்கிறான்; ஆதலால் வேறொன்றையும் ஞானி வேண்டுகிறதில்லை. கோடீச்வரன் நமக்கு ஆப்த நண்பனாயிருந்தால் நம்மை ஏதாவது வேண்டுமென்றலைய விட்டிருப்பானா? கிழிந்த வஸ்திரத்துடனிருக்கக் கண்டால் உடனே புதிய வேஷ்டி வாங்கிக்கொடுக்க மாட்டானா? நாம் பசியாயிருப்பதாய்த் தெரிந்தால் நமக்கு ராஜபோஜனம் செய்து வைக்கத் தயாராயிருக்க மாட்டானா? அதேமாதிரி ஈச்வரனுடைய ப்ரீதிக்கு நாம் பாத்திரராய் விட்டோமாயின், நமக்கு ஆயுளுக்கும், ஞானத்திற்கும், ஆநந்தத்திற்கும் குறைவென்ன? எல்லோருக்கும் ஆயுளை யளிப்பவராயும், ஆநந்த ஸ்வரூபியாயும், ஞானத்திற்கெல்லாமிருப்பிடமாயுமுள்ள அவர் நமக்கு ஸச்சிதாநந்தத்தை யளிப்பாரென்பதற்கையமென்ன? ஆதலால் அவர் நமக்கு எதைத்தான் கொடுக்க மாட்டார்? தான் எவற்றிற்குச் சொந்தக்காரரோ, அவற்றையெல்லாம் தன்னுடைய பக்தர்களுக்கும் கொடுக்க ஸித்தமாயிருக்கிறார். "எனக்கும் என்னுடைய பக்தனுக்கும் வித்தியாஸமில்லை; என்னுடைய ஞானமே அவனுக்கு ஞானம்; என்னுடைய ஜீவனும் அவனுடைய ஜீவனும் ஒன்றே; என்னுடைய சுகம் அவனுக்கும் ஸுகமே" என்பது அவருடைய திருவாக்கு.

ஈச்வர கடாக்ஷத்தைப் பெற்ற பக்தனுடைய மனது அவரைத் தவிர வேறொன்றையும் நினைப்பதில்லை, முன்பு தான் சூட்டிக் கொள்ள புஷ்பம்பறித்த அவனுடைய கைகள் இப்பொழுது ஈச்வரார்ச்சனைக்காகப் புஷ்பம் பறிக்கின்றன. முன்பு தான் செய்த எல்லாக் காரியங்களையும் இப்பொழுதும் செய்கிறான்; ஆனால் முன்பு தனக்காகச் செய்தான்; இப்பொழுதோ ஈச்வரனுக்காகச் செய்கிறான். அவன் தொண்டு செய்வது பிறருக்கல்ல, தனக்குமல்ல; ஈச்வரனுக்கே. ஈச்வரனுடைய குழந்தைகள் கஷ்டப்படுகிறார்களே யென்ற நினைவுடன் அவன் தர்மம் செய்கிறான்; அவன் செய்கின்ற கிரியைகளெல்லாம் ஈச்வரனிடம் அவனுக்குள்ள அன்பின் செய்கைகளே யல்லாது வேறல்ல. இதுதான் "பக்தி" யென்று புகழ்ந்து கூறப்பட்டுள்ள செய்கையாகும். அவனுடைய ஞாபகமெல்லாம் ஈசுவரனைப் பற்றியதே. அவன் தனக்கென்று ஒன்றையும் செய்து கொள்ள இயலுவதில்லை: ஏனெனில் அவனுடைய முழுமனதும் ஈச்வரனிடம் செல்லுகின்றதே யல்லாது, வேறொன்றாலும் கவரப்பட முடியாதது.

"எல்லா பூதங்களிடமும் நான் ஸமபாவத்தையுடையவன்; எனக்கு த்வேஷியும் இல்லை, ப்ரியனும் இல்லை. ஆனால் என்னை எவர்கள் பக்தியோடு பஜிக்கின்றனரோ அவர்கள் என்னிடத்து (இருக்கிறார்கள்); யானும் அவர்களிடம் (இருக்கிறேன்).

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா—பகவத்கீதை (IX—29)

---

ஸ்ரீ சைதன்யஸ்வாமி, தக்ஷிண தேசத்தில் தீர்த்த யாத்திரை செய்தபோது, ஒரு பண்டிதர் கீதை வாசிக்கும் பொழுதெல்லாம் கண்ணும் கண்ணீருமாக இருந்த பக்தன் ஒருவனைக் கண்டார். இந்த பக்தனுக்கு எழுத்து வாசனையே தெரியாது. கீதையில் ஒரு ச்லோகத்தின் அர்த்தத்தைக்கூட அறிய மாட்டான். அப்படி இருக்க ஏன் கண்ணும் கண்ணீருமாயிருக்கிறாயென்று கேட்டதற்கு, அவன், "எனக்குக் கீதையில் ஒருவார்த்தைகூடத் தெரியாது; என்றாலும் அது படிக்கப்படும் போதெல்லாம், குருக்ஷேத்திர யுத்தகளத்தில், ரதத்தில் அர்ஜுனனுக்கு முன்னால் வீற்றிருந்து, கீதையென்று சொல்லப்படும் காம்பீர்யமான அபிப்பிராயங்களை வெளியிட்ட எனது பிரபுவான கிருஷ்ண பரமாத்மாவின் சௌந்தர்யரூபம் என் மனக்கண் முன்னால் தோன்றியவண்ணமாகவே இருக்கிறது. இதனால் தான் என் மனக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருகுகின்றது," என்றான்.

எழுத்து வாசனையே இல்லாத இவனுக்குப் பூர்ண ஞானமிருந்தது; ஏனெனில், இவனிடம் வாஸ்தவமான ஈச்வரப்ரேமை இருந்தது. அவ்வீசுவரனைத் தெரிந்து கொள்ளக் கூடியவனாகவுமிருந்தான்.

---

# விவேகானந்த சுவாமிகளின் அருள் வாக்கியத்திரட்டு.

(178-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

என்னுடைய ஆசாரியர் சொல்லுவார்: "சர்வமும் கடவுள்
தான். ஆனால் புலியுருவந்தாங்கிய கடவுளை நிராகரிக்கவேண்டும்.
எல்லா ஜலமும் ஜலந்தான். ஆனால் பானம் பண்ணுவதற்கு
அழுக்கு ஜலத்தை விலக்கவேண்டும்."

வான்முகடு முழுவதும் கடவுளின் ஆபகவசமாகும். சூரிய
சந்திரர்கள் தீபங்களாவார்கள். வேறென்ன ஆலயம் வேண்டியது.
எல்லாக் கண்களும் உம்முடையவே (கடவுளுடையவே); அப்படி
யிருந்தும் உமக்கு (கடவுளுக்கு) ஒரு கண்ணுகிலும் கிடையாது.
எல்லாருடைய கைகளும் உமது (கடவுளுடைய) கைகளே; அப்
படியிருந்தும் உமக்கு (கடவுளுக்கு) ஒருகையும் கிடையாது.

ஒன்று வேண்டுமென்று தேடிச்செல்லாதே; வேண்டா
மென்று விலக்காதே; எது எதிர்ப்படுகிறதோ அதை அங்கீகரி.
ஒன்றினாலும் தாக்கப்படாமலிருப்பதையே சுவதந்திரமெனலாகும்.
திதிக்ஷையை வகித்திருப்பது மல்லாமல் தாக்கற்றுமிரு. எருதின்
கதையை கவனத்தில் வை. ஒரு எருதின் கொம்புமேல் ஒரு
கொசுகு நெடுநேரம் உட்கார்ந்திருந்தது. பிறகு அந்த கொசுகு
எருதைநோக்கிச் சொன்னதாவது "ஐயா, நான் இங்கே வெகு
நேரமாய் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். ஒருவேளை உமக்கு
நான் இடைஞ்சலாயிருக்கலாம். எனக்கு அது வருத்தமாயிருக்
கிறது. இதோநான் போய்விடுகிறேன்" அதற்கு அந்த ரிஷபம்
மறுமொழி உரைத்ததாவது "ஓ, இல்லை; நீ அப்படி சற்றேனும்
எண்ணங் கொள்ளாதே. நீ மாத்திரமன்று, உன்குடும்பமுழுமையும்
கொண்டுவந்து என்னுடைய கொம்பின்பேரில் வசிக்கலாம். உங்க
ளால் எனக்கு என்னசெய்ய இயலும்?"

நாம் எப்பொழுது ஜீவபோதத்தை யொழித்து ஒரு காரியத்
தைச்செய்கிறோமோ அந்த காரியந்தான் எல்லாவற்றிலும் சிறந்தது.
அக்காலத்தில் நம்மால் பிறருக்கு விளையும் அநுகூலமும்மிகச்சிறந்த
தாகும். எல்லாச்சிறந்த விவேகிகளும் ஓர்ந்துள்ளார். காரியகர்த்தரா
கிய பரம்பொருளுக்கு நாம் தற்பரராயிருந்து அப்பரம்பொருளையே
கிர்த்தியங்களைப் புரியும்படி பிரார்த்தித்து நாம் சுதந்தரமற்று

ஒன்றுஞ் செய்யாமல் இருப்போமாக. "ஓ அர்ச்சுனா! இப்புவனத்
தில் எனக்கென ஒரு கடமையும் கிடையாது" என்று ஸ்ரீகிருஷ்ண
பரமாத்மா திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். நீ முற்றிலும்
கடவுள் ஆதீனமாயிரு, பராமுகமாயுமிரு. அப்பொழுது தான் உன்
னால் சாசுவதமான காரியம் செய்யமுடியும். நாம் காரியங்களை
மாத்திரம் பார்க்கிறோம். அவைகளின் காரணங்களை உள்ளவாறு
உணர சாமானியரால் அசாத்தியமாம். ஜீவபோதத்தைத் தள்ளி
வை, அதைக் கைசோர விட்டுவிடு, அதனை அறவே மறந்துவிடு.
கிர்த்தியங்களைக் கடவுள் புரியட்டும். அது அவர் காரியமாகும். நாம்
செய்வது ஒன்றுமில்லை யென்று நாம் ஒதுங்கியே நிற்கவேண்டும்.
கடவுள் கிர்த்தியங்களைச் செய்யட்டும். எவ்வளவுக் கெவ்வளவு
நாம் நமது ஜீவபோதத்தை ஒழிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்
வளவு கடவுள் நம்முள் பிரவேசிப்பார். (அந்தக்கரணத்தை
நானென்றகங்கரித்திருக்கும்) சிறிய நான் என்பதை நிர்மூலப்
படுத்தி (சச்சிதானந்த வடிவமாகிய) பெரிய நான் என்பதை
உயிர்த்திருக்க விடுவாயாக.

நம் எண்ணம்போல் நாம் ஆகின்றோம். ஆகையினால் நீ நினைக்
கும் விஷயங்களைப்பற்றி சாக்கிரதையாயிரு. சொற்கள் அவ்வளவு
முக்கியமானவையல்ல. எண்ணங்கள் வெகுதூரம் சென்று நிலை
யூன்றி நிற்கும். நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணத்திலும் நமது
குணாதிசயங்கள் படிந்திருக்கும். இது காரணத்தைப்பற்றி மனத்
தூய்மையுடைய ஒருவன் கூறுஞ் சொற்கள் பரிகாசச் சொற்க
ளாகவிருப்பினும் நன்மையை விளைவிக்கும்.

ஆசையற்றிரு; கடவுளைச் சிந்தித்திரு; கைம்மாறு உகவாதே.
ஆசையற்றோரிடத்திருந்தே மகத்தான காரியங்கள் விளைகின்றன.
பிச்சை ஏற்குந் துறவிகள் வீடேறிச்சென்று மதபோதனை செய்
கின்றனர். தாங்கள் ஒன்றும் செய்வதில்லை என்று நினைப்
பதுமன்றி எதைடம் தங்களுடையதென்று உரிமை பாராட்டுவ
தில்லை. தங்களுக்குத் தெரியாமலே இத்துறவிகள் மகத்தான காரி
யங்களை இவ்வுலகத்தில் செய்துகொண்டு வருகின்றனர். அவர்
கள் விஞ்ஞானமென்னும் (அதாவது ஐம்புலன் வாயிலாகவரும்
விஷயஞானம்) விருக்ஷத்தின் கனியை புசிப்பார்களேயானால் அகங்
கார கிரந்திகளாகத் திரிந்துவிடுவார்கள். அவர்கள் செய்யும் நன்மை
யாவும் பறந்தோடிப்போம். "நான்" என்று அகங்கரிக்கும்
அக்கணம் முதற்கொண்டு நாம் மோசம்போனவர்களாகி அதை
ஞானமென்று அழைக்கின்றோம். ஆனால் அது ஞானமன்று.
பிறகு எதைப்போலென்றால், ஒரு மரத்திற்கட்டிய மாடு மரத்தைச்
சுற்றிச் சுற்றிப்போவது போலாம். கடவுள் தன்னை நன்றாய்

மறைத்துக் கொண்டிருக்கிறார். அதனால் அவருடைய லீலைகள் மிக உன்னதமாகவிருக்கின்றன. ஆதலின் எவனொருவன் தன்னை அதிக நன்றாக மறைத்துக்கொள்ளுகிறானோ அதாவது, யான் எனது என்னும் அகங்காரத்தோற்றத்தை யோங்கவிடாது நடக்கின்றனனோ அவனே சத்தியகர்மங்களை முற்றுறச் செய்யக்கூடிய ஆற்றலுடையவனாகிறான். நீ உன்னை வெற்றி கொண்டால் (அதாவது அகங்காரநாசஞ்செய்தால், சராசரமுழுவதும் உன்னாதீனமாய்விடும்.

சத்வகுணஸ்திதியில் வஸ்துக்களின் நிஜஸ்வபாவத்தை அறிந்துகொள்ளுகிறோம். புலன்களுக்கும் புத்திக்கும் அப்பாற் செல்லுகின்றோம். நமது நிஜஸ்வரூபத்தை ஓங்கவிடாது நம்மை உள்ளே அமிழ்த்திவைத்திருக்கும் தகர்க்கரிய சுவர் எதுவெனில் நமது அஞ்ஞானரூபமான அகங்காரமேயாகும். "இதை நான் செய்கிறேன், அதை நான்செய்கிறேன், ஏனையவைகளையும் செய்வது நான்தான்" என்று இவ்வாறாகச் சொல்லி எல்லாவற்றிற்கும் நம்மையே காரணகர்த்தர்களாகக் கூறிக்கொள்ளுகிறோம். இந்த சிறிய அற்ப "நான், நான்" என்பதைத் தொலைத்துவிடு. நம்முள்குடிகொண்டிருக்கும் இந்தப் பேய்த்தனத்தை அதாவது தருமலோபத்வத்தை நாசஞ் செய்துவிடு, "நான் ஒன்றுமில்லை எல்லாம் நீயே (கடவுளே)" என்றுகூறு. உணர்ந்து அவ்வழி நில்லு. ஜீவச்செயலாலாய உலகத்தை நாம் தியாகஞ் செய்யும்வரை மோக்ஷ உலகம்புக நம்மால் ஒருபொழுதும் முடியாது. இந்த தியாகமின்றி ஒருவரும் மோக்ஷமடைந்ததில்லை. அடையப்போவது மில்லை. உலகத்தை தியாகஞ் செய்வது சீவபோதத்தை மறப்பதாவதுமன்றி, உலகம் இன்னதென்பது தெரியாமல் அதில் வசித்தும் அதன் வயமாகாமல் உயிர் வாழ்தலாகும். இந்த சண்டாள ஜீவபோதத்தை வேரோடு களைதல் வேண்டும். உன்னை யாராகிலும் தூஷித்தால் அவர்களை ஆசிர்வாதம் செய். அவர்கள் உனக்கு எவ்வளவுநன்மை செய்கிறார்கள் என்று யோசித்துப்பார். அன்னோர் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக்கொள்கின்றனர். உன்னைப் பகைக்கிற ஜனங்களிடத்திற்குப் போ, உன் அகங்காரத்தை வெறுத்துத் தள்ளட்டும். அப்பொழுது நீ கடவுளின் சாமீப்ய பதவியை முன்னிலும் சற்று கிட்டே நெருங்கினவனாவாய். தாய்க்குரங்கைப் போல நாம் உலகமாகிய சிசுவை நம்மால் பொறுக்கமுடியும் வரையில் வயிற்றில் அணைத்து வைத்துக் கொள்ளுகிறோம். ஆனால் உலக இம்சையைப் பொறுக்க முடியாதகாலத்தில் அந்த உலசமாகிய சிசுவை நம் காற்கீழ்ப்படுத்தி மிதிக்கும்படி நேரிடுகிறது. அப்பொழுது கடவுள் பாதத்தையடைய சித்தமாயிருக்கிறோம். தர்மத்தின் நிமித்தம்



இடுக்கண்ணுக் கஞ்சாதிருப்பவரே அருள்பெற்றோராவர். நமக்கு வாசிக்கத்தெரியாதிருப்பதே கடவுள் ஆசீர்வாதமென மதிக்கவேண்டும். ஏனெனில் கடவுளிடத்திலிருந்து நம்மைப்பிரிக்கக்கூடியவைகள் அவ்வளவுக்குக் குறைவுபடும்.

விஷயபோகம் எத்தன்மையதெனில் நம் காற்கீழ்ப்படுத்தி மிதிக்கவேண்டிய அனேகதலைகளுடைய சர்ப்பமாகும். நாம் ஒவ்வொன்றையும் செய்துகொண்டே போவோமானால் நமக்கு ஒன்றும் சித்திக்காமல் ஏக்கத்தால் பீடிக்கப்படுவோம். அப்பொழுதும் அவதைரியமடையாமல் திடமாய் நிற்கவேண்டும். உலகமானது ஒரு பேய். அஞ்ஞான வயத்தனான இந்த அற்பசீவன் அரசாளும் இராஜ்ஜியமாகும் இவ்வுலகம். அதைத்தள்ளி உறுதியாய் நில்லு. பெண்டிராசையையும், ஐசுவரியத்தையும், கீர்த்தியையும் தியாகஞ் செய்து கடவுளை உறுதியாகப்பற்று. இப்படி செய்வாயானால் கடைசியில் உபேக்ஷை என்னும் நிலையையடைவாய். ஐம்புலன் அவாவைத் திருப்திசெய்வது ஆனந்தம் என்னும் நினைப்பானது கொச்சமான லோகாயதமாகும் (Materialism). லோகாயதத்தில் ஒரு அணுசுகங்கூட கிடையாது. அதில் ஜனிக்கும் அற்பசுகமுற்றும் (ஆத்ம தரிசனத்தால் விளையக்கூடிய) ஆனந்தத்தின் சாயையாகும். உண்மையான சுகமல்ல. (தொடரும்.)

---

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே.

* *
*

ஆண்டு பலவுங் கழிந்தன வப்பனைப்
பூண்டு கொண்டாரும் புகுந்தறி வாரிலை
நீண்டன காலங்க ளீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே.

---

# ஸ்ரீ புத்த தேவர் சரித்திரம்

(185-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

"இன்னார்க்கு மினியனா யிறந்தார்க்கு மின்றீம்பால்
குன்றாமற் பொழிந்திட்ட குன்றாய குணத்தினன்."

பெரியோரைத் தேடிச் சென்ற கௌதமர் காற்றும் சுத்த நீரும் கந்த மூல பலாதிகளுமே உணவாகக் கொண்டும், குளிர் காலங்களில் நதிகளிடை மூழ்கியும், கோடைகாலங்களில் தீயினிடை நின்றுங் கொடுந்தவம்புரியும் முனிவர் பலரைக்கண்டு ஒவ்வொருவரிடமும் சிற்சில நாட்கள் தங்கியிருந்து அவரொருவரு மிவர் மனதுக்கிசைந்த வழிகாட்டாமையால் அவர் கூட்டத்தை விட்டகன்று, முடிவில் அராளராமர் என்னும் ஒருமுனிவரிடஞ் சென்று யோகாப்பியாஸஞ் செய்யத் தொடங்கினார்.

இவர் இவ்வாறிருக்கையில் கபில வாஸ்துவில் கௌதமர் போனவிடந் தெரியாமலனைவருந் திகைத்து எங்குந் தேடுவாராயினர். அப்பொழுது சந்தகன் குதிரையுடன் நகர்க்குமீள, நிகழ்ந்த வற்றையறிந்து அனைவருந் துக்கக்கடலிலாழ்ந்தனர். இராஜ புரோகிதர் அரசனையும் அரண்மனையிலுள்ள மற்றோரையுந் தேற்றி 'இளவரசனை நான் விரைவிற் கொணர்வேன்' என்று கூறி ஒரு மந்திரியுடன் புறப்பட்டுப் பல விடங்களிலுந் தேடி வருகையில் அராளராம முனிவரதாசிரமத்தில் கௌதமரைச் சந்தித்து, அரசன் முதலியோர்படும் பாட்டை விரித்துரைத்து அவரை வருந்தியழைத்தனர். அதற்கவர் 'இராஜ்ய போகங்களும், பந்துவர்க்கங்களும் விஷய ஸுகங்களும் எனக்கு விஷத்துக்கொப்பானவை. அவைகளை யான் வேண்டேன். உண்மையுணர்ச்சியொன்றே யான் நாடத்தக்கது' என்றுமறுத்துக்கூற, அவ்விருவரும் முன்னினுந்துயரதிகரித்தமனத்தினராய் நகர்க்குத்திரும்பினர்.

அவர்கள் போன பின்பு கௌதமர் தான் தேடி வந்த பொருளையடையத் தீவ்ரமான முயற்சி செய்து வந்தார். எவ்வுயிருந்தன்னுயிர் போலெண்ணி யிரங்கி நிற்கவும் "கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க' எல்லார்க்குஞ் சொல்லவுமே இவர் பெரிதும் அவாவினார். ஒருநாள் ராஜக்ருஹ நகருக்கு பிக்ஷைக்குச் சென்ற பொழுது அந்நகர்க்கரசன் பிம்பஸாரனென்பான் பலபசுக்களைக் கொன்று யாகஞ் செய்யப்போவதாய்க் கேள்வியுற்று யாகசாலையையணுகி 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்னும் சிறந்த நீதியை அவனுக்கு



மனதிற் பதியும்படி எடுத்துப்போதித்து,யாகத்திலுங்கூட பசுஹிம்ஸை கூடாதென்று காட்டி அவனைத்தடுத்தாட் கொண்டார். அரசனும் அவரைப் பன்முறை வணங்கித் தன் நகரிலேயே இருக்க வேண்டுமென்று கெஞ்சினான். ஆனால் அவர் உண்மை யுணர்வு பெற்ற பின்னர் வருவதாய்க்கூறிவிட்டுத் திரும்பக் கானகமேகினார்.

வனஞ் சென்று அராள ராம ருபதேசித்த மார்க்கத்தில் வெகுநாளொழுகியும் உண்மை புலப்படாமையால் அவ்வாசிரமம் விட்டகன்று வேறு ஆசிரியரைத் தேடிச்சென்றார். உருத்ரக ரென்னும் ஒரு முனிவரையடைந்து அவரிடமும் பல நாளமர்ந்திருந்தும் முயற்சி பயன் படாமல் மனம் வருந்தி ஞானாரண்ணியத்தை நோக்கிச் சென்றார். அங்கே தவஞ் செய்து கொண்டிருந்த ஐந்து முனிவர்களைச் சந்தித்து அவர்களுடன் சேர்ந்து பலவிரதங்களனுஷ்டித்து வந்தார். பலநாட்கள் ஆகாரமே கொள்ளாமலிருந்து வருகையில் ஒருநாள் பசியின் கொடுமை பொறுக்கமாட்டாதவராய் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தனர். களைப்புத் தெளிந்ததும், 'உடலை வாட்டுவதால் பயனில்லை; உணவால் உடம்பும், உடம்பால் உணர்வும் ஆகும்' என்று கண்டு கொண்டு உணவு கொள்ளலாயினர். இதைக்கண்ட ஐந்து முனிவர்களும் இவர் விரதம் பங்கமாயிற்றென அவரை அவமதித்து அவரை விட்டகன்றனர்.

இவ்வாறு ஆறுவருஷங்கள் கழிந்து விட்டன. புத்தர் இதன் பிறகு வேறொருவரைத் தேடிச் செல்வதையொழித்துத் தாமொருவராய் நைரஞ்சரை நதிக்கரை சென்று தியானத்திலமர்ந்தார். ஆற்றில் ஒரு நாள் நீராடுகையில் தாளொன்று மிதந்து வந்ததென்றும், அதில் 'தோன்றுவன வெல்லாம் நிலையற்றன; அவை பிறப்பிறப்புக் குட்பட்டவை;எக்காலத்துப் பிறப்பிறப்பு நீங்குமோ அக்காலத்தே ஆனந்தங் காணப்படும்' என்று எழுதப்பட்டிருந்த தென்றுங் கூறுவர். அதைக் கண்டதும் கௌதமர் உண்மையைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அதையுணரும்பொருட்டு ஒருநாள் ஓர் அரசமரத்தடியிலமர்ந்து "உடல் உலர்ந்தாலும் சரி; உயிர் பிரிந்தாலுஞ்சரி; உண்மையுணர்வு பெறாமல் இவ்விடம் விட்டகலேன்" என்று தீவிரமான ஸங்கல்பத்துடன் அஹோராத்திரம் அயிலுதலுந் துயிலுதலுமின்றி உண்மையாராய்ச்சி செய்யப் புகுந்தார். முதல் ஏழுநாட்கள் நிச்சலமான தியானத்திலிருந்தாரென்றும், பின்னேழு நாட்கள் காமம், வெகுளி, மயக்கம் இவை ஒருசிறிது அவர் மனதைச் சலிக்கச் செய்தன வென்றும், மூன்றாவது ஏழுநாட்களில் துக்க ஹேதுவாகிய இவ்வெதிரிகளை முற்றும் வென்றன ரென்றும், நான்காவது ஏழுநாட்களில் தூய்மையான ஸமாதியிலாழ்ந்தன ரென்றுங் கூறுவர். இவ்

வாறாக இருபத்தெட்டு நாட்கள் கழிந்த பின்னர் இருபத்தொன்பதா நாளிரவு அகவிருள் முற்று நீங்கி முதல் யாமத்தில் பழம் பிறப்பின் உணர்ச்சியும், இரண்டாம் யாமத்தில் நிகழ்கால வுணர்ச்சியும், மூன்றாம் யாமத்தில் ஹேது நிகழ்ச்சியும் நான்காம் யாமத்தில் சூரியனுதியாநிற்கையில் ஸத்திய சதுஷ்டய தத்துவமும் சித்திக்கப் பெற்று ஞான சூரியன் போல் விளங்கினார். சோதிடவல்லவர்கள் கூறியவாறே புவிராஜர் போற்றுந் தவராசராயினார்.

"அரசர்கள் மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை யென்னுந் தசாங்கத்துடன், வெண் கொற்றக் குடை, நவமணிமுடி, சிம்மாஸனம் என்னும் சிறப்படையாளங்களையும் உடையராதல் போலப் புத்ததேவரும், அவா வின்மை, மெய்யுணர்வு, துறவாதிய குணம் என்னும் மலையும், நித்தியானந்தம் என்னும் நதியும், வேதமுதலிய கலைகளாலும் அறிதற்கரிய சிற்சத்தித்தானம் ஆகிய நாடும், அநுபூதி என்னுஞ் சுத்தப் பெருவளமுடைய ஊரும், விஷய வழிச் செல்லாமல் நிறுத்தித் தன் வயமாக்கும் அருள் என்னும் மாலையும், எவ்வெப்பொருளினிடத்தும் விரைந்து சென்று அவ்வப்பொருளாய் நிற்கும் வியாபகத்துவம் என்னுங் குதிரையும், வினைக்கட்டறுத்துப் பாசப்பகையை யெறிந்து ஆனந்தத் தேனையளிக்கும் ஞானம் என்னும் யானையும், பெரும்பயனை விளக்கித் துன்பச்சுமையை நீக்குவதற் கேதுவாய தருமம் என்னும் வெற்றிக்கொடியும், எங்கெங்குஞ் செய்யும் பிரஸங்கமாகிய முரசும், ஆன்மாக்களுக்கு அறிவித்தல் என்னும் ஆணையும் ஆகிய தசாங்கங்களுடன், பேரறிவு என்னும் ஒரு பெருஞ் சுடர் முடியும், பிறவி வாதனையைப்போக்கித் தன்னடிக்குள் வைத்துப் பேரின்ப நிழலைச்செய்யும் அந்தண்மை யென்னும் வெண் கொற்றக்குடையும், ஸமாதி யென்னும் ஸிம்மாஸனமும் உடையராய் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் சதுரங்கசேனைகளும் தம் மேவல் கேட்டடங்கிநிற்க, மும்மண்டலத்திலுந் தங்கிள்ளாக்குச் செல்லத்தவராசராய் விளங்கினார்."

ஞானோதய மான காலை நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். கௌதமர் 'நான் விருர்பியதை யடைந்தேன்' என்று களிப்புற்றனர். மஹாப்பிர்ம்மா அவர்முன் தோன்றி 'துக்கக்கடலிலாழ்ந்து வருந்தும் மனிதர் மேலிரங்கி அவர்களுக்குத்தருமோபதேசஞ் செய்து அவர்களைக் கரையேற்று' என்று கூறினார்.

அத்தருவாயில் அருகேயுள்ள ஒரு கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த ஸுஜாதையென்னு மொருபெண் இவரைக் கண்டதிசயித்துத் தன் தெய்வத்துக்குச் சமைத்து நிவேதனமாய்க் கொணர்ந்திருந்த பாலன்னத்தை யவர்க்கூட்ட, அவரும் அதை யுண்டு அப் பெண்ணரசியை வாழ்த்தினார்.



மஹா போதிஸத்துவமடைந்தது முதல் கௌதமருக்குப் புத்தர், ததாகதர், ஜினர், ஸாக்ய ஸிம்ஹம், என்னும் பல காரணப் பெயர்கள் வழங்குவனவாயின. எந்த மரத்தடியி லிவரமர்ந்தாரோ அந்த அரசமரமும் போதி விருக்ஷமெனப் பெயர்பெற்று எல்லோராலுந் தெய்வத்தன்மை வாய்ந்ததாய்க் கொண்டாடப்பட்டது.

புத்தர் உணர்ந்த ஸத்திய சதுஷ்டயமாவன: துக்கம், துக்கோத்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பன.

"துன்பந் தோற்றம் பற்றே காரண
மின்பம் வீடே பற்றிலி காரண
மொன்றிய வுரையே வாய்மை நான்காவது"

"துக்கமாவது; பிறவிதுன்பம்; பிணி துன்பம்; மூப்புதுன்பம்; இறப்புதுன்பம்; அன்பிலாரோடு தொடர்புதுன்பம்; அன்புள்ளாரிடத்தினின்றும் பிரிவுதுன்பம்; விரும்பியதைப் பெறாமைதுன்பம். சுருங்கச்சொல்லின் ஐம்புலப்பற்றுந் துன்பமேயாம்"

துக்கோத்பத்தியாவது: காமம், வெகுளி, மயக்கம், லோபம் இவைகளுடன் கூடிய அவித்தையே. இதுவே பிறப்பிறப்புக்கும் அதை யனுசரித்து வரும் துக்கத்துக்கும் வித்து.

துக்க நிவாரணமாவது பேதைமை நீக்குதலேயாம்.

'பேதைமை மீளச் செய்கை மீளுஞ்
செய்கை மீள வுணர்ச்சி மீளு
முணர்ச்சி மீள வருவுரு மீளு
மருவுரு மீள வாயின் மீளும்
வாயின் மீள ஊறு மீளு
மூறு மீள நுகர்ச்சி மீளு
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளுங் கருமத் தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்
பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்கா டவல மரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்ப
மெல்லா மீளுமிவ் வகையான் மீட்சி"

துக்கநிவாரண அஷ்டாங்க மார்க்கமாவது 'நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுணர்த்து ஓர் தலைப்பாடு' என்பன.

இவவாறாய்த் தாம் அறிந்துகொண்ட தருமமாகிய சக்கிரத்தை எங்கெங்கும் உருட்டி உயிர்களை நல்வழிப்படுத்த நினைந்து, முதலில் ஞானாரண்ணியத்தில் தன்னுடன் தவம்புரிந்த ஐவரைத் தேடிச் சென்றனர். அவர்கள் வாராணசிக்கருகில் மிருகதாவ வனத்தி

விருந்ததா யறிந்து அவ்வனத்துட் புகுந்தார். இவரை தூரத்திற் கண்டதும், அவர்கள் 'இவர் விரதபங்க மடைந்தவர். இவரோடு நாம் உரையாடலாகாது' என்றெண்ணினார்கள். ஆனால் அவர் அணுகியதும், அகத்தொளி முகத்திற் பொலியக்கண்டு தங்களையுமறியாமல் மெய்ம்மறந்து கைகூப்பிச் சேவித்து நின்றனர். ததாகதர் அவர்களுக்கு ஸத்திய சதுஷ்டயத்தைப் போதித்து அவர்களைத் தம்முடைய முதற் சிஷ்யர்களாகக் கொண்டார்.

பின்பு அவ்வனத்திலேயே யிருந்துகொண்டு சாதிவேற்றுமை பாராட்டாமலும், ஆண், பெண் என்று கருதாமலும், பகைவர் நட்பினர் என்று வேற்றுமை செய்யாமலும், இல்லறத்தோர் துறவறத்தோர் என்றுங் கருதாமலும் தம்மை நாடியவரனைவருக்குந் தருமோபதேசம் செய்வாராய் ஐந்து மாதங்களுக்குள்ளாக அறுபது சிஷ்யர்களைச் சேர்த்துக் கொண்டனர். இவர்களனைவரையும் ஒன்று சேர்த்துப் 'பௌத்தசங்கம்' என்று வழங்கும் சிஷ்ய கோஷ்டியை யேற்படுத்தினர். இவர்களைப் பலவிடங்களுக்கு மனுப்பித் தம் தருமத்தை யெல்லோருக்கும் போதிக்கும்படி செய்தார். மழை காலங்களில் இவர்களை வருவித்துத் தம்முடனிருக்கச் செய்வதும், மற்றைக் காலங்களில் அவர்களைப் பல விடங்களுக்கு யனுப்புவதும் வழக்கமாக விருந்தன.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தபின் ஞானாரண்ணியஞ் சென்று அங்கே அக்கினி காசியபரென்னுமொரு முனிசிரேஷ்டராசிரமஞ்சென்று அவர் உபாஸித்துவந்த அக்கினியை யநித்தமாகக் காட்டி ஞானாக்கினியை வளர்க்கும்படி யுபதேசித்து அவரையும் அவருடைய சிஷ்யர்கள் ஐந்நூற்றுவரையும் பௌத்தர்களாக்கிச் சங்கத்திற் சேர்த்துக் கொண்டார்.

அவ்விடமிருந்து, பிம்பஸாரனுக்குத் தாம் முன்னளித்த வாக்கை நிறைவேற்றும் பொருட்டு இராஜக்கிருஹ நகரஞ் சென்றார். ஆசிரிய சிரேஷ்டரெனப் புகழ்பெற்ற காசியபரையே சிஷ்யராய்க் கொண்ட புத்தர் பெருமையை மிகவும் பாராட்டிப் பிம்பஸாரன் தன் நகரத்தார் பலருடன் அவரைச் சரணடைந்தான். ததாகதரும் ஜீவகாருண்ணியத்தைக் குறித்தொரு பிரஸங்கஞ் செய்து பிறப்பிறப்பைக் கடக்கும் மார்க்கத்தையும் உபதேசித்தருளினார். அரசன் தன்னகர்க்கருகில் ஸங்கத்தார்க்கு வாசஸ்தானமாக ஓர் விஹாரங் கட்டுவித்துக் கொடுத்து அவ்விடத்திற் சிறிது காலந் தங்கியிருக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ள, அவ்வாறே யமர்ந்து ததாகதரும் அங்கு வருவோர்க்கு தருமோபதேசம் செய்து வரலாயினர்.



இங்கேயிருக்கையில் சங்கத்தில் பிக்ஷுக்களாய்ச் (சந்நியாஸிகளாய்ச்) சேர்ந்தவர்கள் தொள்ளாயிரவரென்றும், உபாஸகரானோர் (இல்லறத்துள்ள பௌத்தர்) மிகப் பலரென்றுங் கூறுவர். இத்தருவாயிலேயே புத்தருடைய முக்கிய சிஷ்யர்கள் பதின்மரில் முதன்மை பெற்ற சாரீபுத்ரனும், மௌத்கல்யானனும் சங்கத்திற் சேர்ந்தனர். சங்கத்தில் புத்தர் இவர்களுக்கு முதன்மை யளித்ததைக் கண்டு பொறாமையால் ஏனையோர் கலகம் விளைக்க, புத்தர் அதை யடக்கிச் சங்கத்தார் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிகளை யேற்படுத்திச் சங்கத்துக்கு 'ஸேவக ஸந்நிபாதம்' (அடியவர்களின் கூட்டம்) என்னும் பெயரையு மளித்தார்.

புத்த தேவருடைய புகழ் நாடெங்கும் பரவியபொழுது சுத்தோதனனுங் கேட்டதிசயித்து அவரைக்காண அவாக்கொண்டு அவரைக் கபிலவாஸ்துவுக்கு வரவேண்டுமென்று வருந்தி யழைத்துத் தூதனுப்பினான். இவரும் அவ்வேண்டுகோளுக் கிணங்கி கபிலவாஸ்துவுக்குச் செல்ல, அரசனால் எதிர்கொண்டழைத்துபசரிக்கப் பட்டார். இவருடைய பந்துக்களும் நகரத்தாரும் இவர் பெருமையை உணரமாட்டாதவராய் இவரை வணங்காமலும் உபசரிக்காமலும் இறுமாப்புற்றிருந்தனர். இவர் அரண்மனைக்குப் போகாமல் முதலில் ஒரு பிரபுவின் வீட்டிலும், பின்பு தன் தாயை அடக்கஞ் செய்யப்பட்ட ஆலயத்திலும் தங்கியிருந்து நகரிற்சென்று சிஷ்யர்களுடன் பிக்ஷையெடுத்துண்டு வந்தார். அரசன் இதைக்கண்டு வெட்கமடைந்தவனாய் 'தாங்கள் இவ்வாறு ஏன் எங்களை அவமதித்தல் வேண்டும்? தங்களுக்கும் தங்கள் ஸங்கத்தாருக்கும் பிக்ஷை செய்விக்க என்னாலாகாதோ? தாங்கள் ஏன் ஓட்டையேந்தி பிக்ஷைக்குபோகவேண்டும்?' என்றுகூற, அவர் 'எம்மரபைச் சார்ந்தோருக்கு இரந்து புசிப்பதே இயல்பு' என்று தம் வழியேகினர்.

ஒருநாள் அரண்மனைக்குப் பிக்ஷைக்குப் போனபொழுது, எல்லோரும் வந்து அவரை வணங்க, அவர்களுக்குத் தம்மாற்றல் புலப்படும் வண்ணம் பல செய்கைகளைக் காட்டித் தருமோபதேசமுஞ் செய்தனர். அவர்கள் முதலில் அவர் பெருமையை உணராது அவமதித்ததற்குப் பெரிதும் வருந்துவாராயினர். யசோதரை மட்டும் மற்றவர்களுடன் அவரைக்காண வராமல், "என்னை அவர் குணவதியென்றிருப்பின் தாமே வந்தாட் கொள்ளுவார்" என்றிருந்தனள். அவ்வாறே அவளைக் காணுமாறு புத்தர், இரண்டு பிக்ஷுக்களுடன் அவளிருப்பிடஞ் சென்று அவள் துயரெல்லாம் போகும் வண்ணம் தருமோபதேசஞ் செய்தருளினார். பின்னர் யசோதரை எட்டு வயது பாலகனாகிய இராகுலனை யழைத்து "இவரே உன் தந்தை; இவரிடமிருந்து உனக்குச் சேரவேண்டிய சொத்தைப் பெற்றுக் கொள்' என்று கூற அவனும் அவரைப்பின் தொடர்ந்தான். புத்த தேவர், "எல்லோரும் மக்களுக்குத் தேடிவைக்கும் பொருள் அழிவடைவது; நான் கொடுக்கப்போவது அழிவற்ற நிதி" என்று சொல்லி, அவனையும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். பின்பு கௌதமியின் புதல்வனாகிய நந்தனும் உபதேசம் பெற்று பிக்ஷுவானான். அரசு செய்வதற்குரிய புதல்வனும், பேரனுந் துறவு பூண்

டதை யறிந்து சுத்தோதனன் மிக வருந்திப் பிறரும் இவ்வாறு மக்களைப் பிரிந்து வருந்தலாகாதென் றெண்ணியவனாய்ப் பிள்ளைகளைப் பெற்றோரனுமதி யின்றிப் பிக்ஷுக்களாக்கக் கூடாதென்று விதியேற்படுத்தினான்.

ததாகதர் அதற்குமேல் அந்நகர் விட்டு ஸ்ராவஸ்திநகரஞ் சென்று பிரஸேனஜித் என்னும் அரசனுக்குப் பௌத்த தருமத்தைப் போதித்துவிட்டு வைசாலிநகரஞ் சென்று அதற்கருகிலுள்ள மஹா வனத்திற்றங்கி தருமப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். அங்கிருக்கையில் கோலியர்களுக்கும் சாக்கியர்களுக்கும் கபிலவாஸ்துவுக்கருகில் ஒரு பெரிய கலகமுண்டா யிருப்பதாய்க் கேள்விப்பட்டு அங்குசென்று அவர்களைச் சமாதானப்படுத்தி விட்டு வந்தார். சில நாட்களுக்கெல்லாம் சுத்தோதனன் இறுதிக் காலங்கிட்டிய தென்றுணர்ந்து, மறுபடியுங் கபிலவாஸ்துவுக்கு சென்று, அவனிறக்குந் தருவாயிலுடனிருந்து பின்னர் உத்தரக் கிரியைகளைச் செய்து முடித்துவிட்டு, கௌதமி, யசோதரை முதலிய பல மாதர்கள் பின்தொடர மஹாவனம் சேர்ந்தார். இந்த ஸ்திரீகள் இல்வாழ்க்கையை வெறுத்துப் பிக்ஷுணிகளாக விரும்பினமையால் இவர்களும் சங்கத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதன் பின்னரே ஸ்திரீகளையுஞ் சங்கத்திற் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. இதைக் கண்ட விரோதிகள் ததாகதர்மேற் பலவிதமான அபவாதங்களைக் கற்பிக்க முயன்றனர். ஒரு சமயத்தில் ஒரு துஷ்டமங்கையை ஏவித் ததாகதர் தன்னை விரும்பிக் கூடியதாய்க் கூறும்படி தூண்டினார்கள். இந்த வீண் வார்த்தைகள் சூரியன் முன்பனிபோல் அவர் முன்னிலையில் தலைகாட்டவும் வலியற்றன வென்பதைப் பிறர்க்கொருவர் கூறவும் வேண்டுமோ?

இதற்குச் சில காலத்துக்குப்பின் பின் மௌத்கலியானனால் சங்கத்தில் ஒரு பெரிய கலகம் உண்டாயிற்று. புத்ததேவர் தன்னாலானவரை முயன்றும் அதை அடக்க முடியவில்லை. அதனால் சங்கத்தின் மேல் வெறுப்புற்று எல்லோரையும் விட்டுத் தனியே ஓர் வனத்தை யடைந்து அங்கே ஒரு குடிசையில் வசித்து வந்தார். கலகம் முடிவுபெற்றதும், சிஷ்யர்கள் தங்கள் குற்றத்திற்கு அநுதாபப்பட்டு, குருதேவருடைய பிரிவாற்றாமையால் வருந்தி, அவரைத் தேடிச் சரணடைந்து

"ஆதிநீ யமலநீ யயனுநீ யரியுநீ
சோதிநீ நாதனீ துறைவநீ யிறைவனீ
யருளுநீ பொருளுநீ யறவனீ யக்கனீ
தெருளுநீ திருவுநீ செறிவுநீ செம்மனீ."

யென்று பலவாறாய்த் துதித்து 'எங்கள் குற்றங்களைப் பொறுத்தருள்க' என்று பிரார்த்திக்க, அவ்வாறே பொறுத்துக்கொண்டு அவர்களுக்கு மனோவமைதி யுண்டாகும் வண்ணம் உபதேசம் செய்தருளினார்.

---

# கிருஹஸ்த தர்மம்

(190-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

"புத்திரியும் இவ்வாறே வளர்க்கப்பட்டு மிகுந்த ஜாக்ரதையுடன் கல்வி கற்பிக்கப் படவேண்டும். அவளுக்குக் கலியாண காலத்தில் தகப்பன் ஆபரணங்களும் சக்திக்குத் தக்கபடி கொடுக்க வேண்டும்.

"பின் தன் சகோதர சகோதரிகளுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், ஏழைப்பட்ட தன் உறவினர்களுக்கும், சிநேகிதர், வேலைக்காரர் முதலியோருக்கும் ஒருவன் உதவி செய்யக் கடமைப் பட்டிருக்கிறான். பின் தன் கிராமவாசிகளுக்கும், ஏழைகளுக்கும், தன்னிடம் உதவியை ஆசிப்போருக்கும் செய்ய வேண்டிய கடமை யுண்டு. செல்வவர்தனா யிருந்தும் எந்த கிருஹஸ்தன் மேற்கூறியவாறு உதவிசெய்ய வில்லையோ, அவனை மிருகப் பிராயத்திலிருப்பவனாயும், மனிதனல்ல வென்றும் அறியவேண்டும்.

"ஆகாரத்திலும், உடையிலும், சயநயத்திலும், தேகத்தை அலங்கரித்துக் கொள்ளுவதிலும், கூந்தலை வாரிக் கொள்வதிலும் மிக்க கவலைகொள்ளக் கூடாது. கிருஹஸ்தன் ஹிருதயத்தில் கல்மிஷமின்றியும் தேகத்தில் சுத்தமாயும், எப்பொழுதும் சுறுசுறுப்பாயும் வேலைக்கு ஆயத்தமாயு மிருக்க வேண்டும்."

"எதிரிகள் முன்னிலையில் கிருஹஸ்தன் வீரனாயிருக்க வேண்டும். எதிரியுடன் யுத்தம் செய்ய வேண்டும்." மூலையில் உட்கார்ந்துகொண்டு அழுவதும், பொறுமையைப் பற்றிப் பிதற்றுதலுங் கூடாது. எதிரிகளிடத்தில் வீரத்தன்மை காட்டாவிடில் அவன் தன் கடமையைச் செய்யாதவனாவான். "தன் சிநேகிதர்களிடத்தும், பந்துக்களிடத்தும் தான் மரியாதை செய்யத் தக்கவர்களிடத்தும், கிருஹஸ்தன் பசுவைப்போல் சாந்தமாயிருக்க வேண்டும்."

"மூர்க்கர்களை மதியாதிருத்தல் கிருஹஸ்தன் கடமை. ஏனெனில் மூர்க்கர்களை மதிப்பது தீமைக்கிடங் கொடுப்பதாகும். மேலும் நல்லோரையும், மரியாதை செய்யத் தகுந்தவர்களையும் அவமதித்தல் பெருந்தவறு. எல்லா விடத்திலும் எல்லோரிடத்திலும் சிநேகம் பாராட்டக்கூடாது; முதலில் தான் ஸ்நேகம் பாராட்டக் கூடியவர்களுடைய நடவடிக்கைகளையும், குணாகுணங்களையும் கவனித்துப் பின் தீரயோசித்து சிநேகம் செய்ய வேண்டும்."

"தன் பேர், புகழ், தனம், சக்தி இவற்றைப் பற்றியும் ரகஸ்யமாகத் தான் கேட்டவற்றையும் கிருஹஸ்தன் பஹிரங்கமாகப் பேசக் கூடாது.

"ஏதாவது தவறு செய்தாலாவது, முடிக்கக் கூடாத காரியமொன்றில் தலையிட்டுக் கொள்ள நேரிட்டாலாவது, பெரியதாயினும், சிறியதாயினும் இவைகளைப் பஹிரங்கம் செய்யக்கூடாது." ஒருவனுடைய தவறுதல்களைப்பற்றி பிறரிடம் கூறுவதில் என்ன பிரயோஜனம்? செய்தானவற்றின் பலனை யனுபவிக்கச் செய்தவன் சித்தமாயிருக்க வேண்டும்; பின் செய்யவேண்டுவனவற்றைப்பற்றி யோசிக்கவும் வேண்டும். வலியோர்களையும் சக்தியுள்ளோர்களையுமே லோகம் உதவி செய்கின்றது. ஆகையால் தான் ஏழையென்றும், அல்லது பணம் படைத்தவனானால் பணக்காரனென்றும் எல்லோரிடமும் போய்ச் சொல்லிக் கொள்ளலாகாது. தன் வியாபாரங்களைத் தானே யோசித்துக்கொள்ள வேண்டும். இஃது லௌகிக தர்மம் மட்டுமல்ல; இப்படிச் செய்யாதவன் மதாசாரப்படி தனக்கு விதிக்கப்பட்ட தர்மத்தைச் செய்யாதவனாவான்.

கிருஹஸ்தனே ஜனசமூகத்தில் முக்யஸ்தன்; அவனே அர்த்தங்களைத் தேடுபவன். ஏழைகள், பலஹீனர்கள், குழந்தைகள், பெண்டிர், வேலை செய்ய இயலாதவர் ஒவ்வொருவரும் இவனுடைய உழைப்பாலேயே ஜீவிக்கின்றனர். இவன் செய்ய வேண்டிய கடமைகள் சிலவேற்பட்டிருக்கின்றன; இவற்றைச் சரிவரச் செய்வதே இவனுடைய முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும். எக்காரியமும் செய்யத்தக்கது தன் அந்தஸ்துக்கீனமாகாதென்றுணர்ந்து வீரத் தன்மையுடன் செய்ய வேண்டும். தான் ஏதாவது தவறுதல் செய்துவிட்டாலும், ஏற்றுக்கொண்ட காரியத்தில் அபஜயம் வருவதாயிருந்தாலும், இவைகளைப்பற்றி பஹிரங்கமாய்ப் பேசக்கூடாது. இம்மாதிரி தன்னைத்தானே காட்டிக் கொள்ளுதல் அனாவசியமாவதுந்தவிர, மனோவலியையு மழித்து, அவன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாதபடி பலஹீனனாகச் செய்துவிடும். தவிரவும், "முதலாக வித்தையும், இரண்டாவதாகச் செல்வமும் தேடவேண்டியது கிருஹஸ்தனுடைய முக்கிய கடமை." இவ்வாறு அவனுக்கேற்பட்ட கருமத்தைச் செய்யாவிடில் அவன் கிருஹஸ்தனேயல்ல. திரவியந்தேடாத கிருஹஸ்தன் அநீதனாகக் கருதப்படுவான். தன்னையாசிரயித்து நூற்றுக் கணக்கானவரிருக்க சோம்பித் திரியும் கிருஹஸ்தன் பாபி. அவன் பொருள் சம்பாதித்தால் அதனால் நூற்றுக் கணக்கானவர் உதவி பெறுவர். நூற்றுக்கணக்கான ஜனங்கள் திரவியம் தேடி செல்வ வந்தராயிராவிட்டால் இந்நகரத்துள்ள நாகரீகமும், வளர்ச்சியும், தர்மசாலைகளும் எங்ஙனம்? ஆகையால் கிருஹஸ்தன் செல்வந்தேடுவது தவறன்று; ஏனெனில் அச்செல்வம் ஜனசமூகத்தின் சௌகரியங்களுக்காகவே செலவிடப்படுகிறதன்றோ? நல்வழியிற் பொருள் சேகரித்துச் செலவிடுவதே அவன் செய்யும் ஈசுவராராதனை. குகை மத்தியி லமர்ந்து தவம் செய்யும் யோகியும் லௌகிக வியாபாரத்தி லாழ்ந்து ஸத்வழியில் பொருள் தேடி ஸத்விஷயத்தில் செலவிடும் கிருஹஸ்தனும் ஒரே நிலையிலேயே யிருக்கின்றனர். ஈசுவர பக்தியாலும், ஈசுவர சிருஷ்டியிலுள்ள அன்பாலும் தூண்டப்பெற்றே இருவரும் தம்மை மறந்தவராய்ச் சிறந்த ஆத்ம யக்ஞத்தைச் செய்கின்றனர்.



"எவ்வாற்றானும் நல்ல பெயரெடுக்க வேண்டியது கிருஹஸ்தன் கடமை; அவன் சூதாடக்கூடாது; கெட்டவருடன் சகவாஸம் செய்யலாகாது; பொய் சொல்வதும் பிறரை உபத்ரவம் செய்தலும் கூடாது."

ஜனங்கள் தங்கள் சக்திக்கு மீறின காரியங்களில் பிரவிருத்தித்து அவைகளை ஸாதிக்கும் பொருட்டு பொய் பிரட்டுகளைச் செய்கின்றனர். மேலும் எவ்விஷயத்திலும் சமயமும் கவனிக்கப்பட வேண்டும். ஒரு சமயத்தில் அபஜெயத்தை யடையும் காரியம், மற்றோர் சமயத்தில் முற்றும் ஜயமாகலாம். "ஆகையால் கிருஹஸ்தன் உசிதமான சமயத்தை கவனித்துத் தன் காரியங்களை ஸாதிக்க வேண்டும்."

"கிருஹஸ்தன் உண்மையே பேசவேண்டும்; அதுவும் ஹிதத்தையே பேசவேண்டும்; பிறர்க்கு நன்மையற்றதும் அப்பிரியமானதுமான வசனங்களைக் பேசலாகாது. தன் பராக்ரமங்களைப் பற்றியும், பிறருடைய விஷயங்களைப் பற்றியும் பேசக்கூடாது."

"தடாகங்கள் கட்டிவைத்தும், ஜனங்கள் நடக்கும் மார்க்கங்களில் மரங்கள் வைத்தும், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தங்குமிடங்களும் சத்திரங்களும் கட்டுவித்தும், சாலைகளும், பாலங்களும் உண்டாக்கியும், கிருஹஸ்தன் மூன்று லோகங்களையுங் கடந்து மகா யோகிகள் அடையும் உயர் நிலையை யடைகின்றான்."

---

# சிருஷ்டி ஜாலம்

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"— திருக்குறள்.

## 1. பூமியின் உற்பத்தி.

இந்திரியங்களுக்குப் பொருளாகும் பதார்த்தங்களனைத்தும் ஆதியும் அந்தமும் உடையனவென்பது நமது கொள்கை. ஆகையால் நாம் வசிக்கும் இப்பூகோளமும், சூரியமண்டலமும், கிரகங்களும், நக்ஷத்திரங்களும் ஒருகாலத்தில் உண்டாயிருக்கவேண்டுமென்பதும் ஒவ்வொன்றும் மற்றோர் காலத்தில் அழிவடையத்தக்கதென்பதும் சுலபமாய் ஊகிக்கத்தக்கது. எனினும், இப்பூமியே இல்லாமலிருந்தகாலம் ஒன்றுண்டோ? சூரிய, சந்திர, நக்ஷத்திர மண்டலங்கள் ஒரு காலத்தில் உற்பத்தியானவைதானோ? அழிவுடையவைதானோ? என்றென்றும் சாசுவதமாயுள்ளவையன்றோ? என்று சாமான்ய ஜனங்கள் சங்கிக்கலாம். இவையனைத்தும் ஓர்காலத்தில் தோன்றியவை தானென்பதற்குத் தகுந்த முகாந்தரங்கள் உண்டென்று பௌதிக சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

சூரியனிடமிருந்து நமக்கு வரும் ஜோதிக்கிரணங்களை ஸ்பெக்ட்ராஸ்கோப் என்னும் கருவியால் பரிசோதிக்குங்கால், பூமியில்காணப்படும் உலோகங்களும் இதரப்பொருள்களும் அங்கும் உள்ளதாக வெளியாகின்றது. தவிரவும் பூமியைப்போன்று சூரியனைச் சுற்றிவரும் இதர கிரகங்களிலும் இதே பொருள்கள் உள்ளனவென்றுந் தெரியவருகின்றது. இவையனைத்தும் இவ்வாறு ஒரேமாதிரியான பொருட்களால் ஆக்கப்பட்டிருப்பின், முதன் முதலில் ஒன்றாயிருந்திருக்கலாமென்றும், பின்பு காரணாந்தரங்களால் பிரிந்து போயிருக்கக் கூடுமென்றும் ஊகிப்பது தவறாகாது. பல்லாயிரம் வருஷங்களுக்குமுன், பூமியும் ஏனைய கிரகங்களும் சூரியனுடன் ஒன்றாயிருந்திருக்க வேண்டும். அப்பொழுது சூரியன் இப்பொழுதிருப்பதைவிடமிக்க அதிக உஷ்ணமுள்ளதாயும் உருண்டை வடிவமும் அடையாமல் ஆவிரூபமாய்ச் சுழன்றும் நின்றிருக்க வேண்டும்.

தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆகாய வெளியைப் பரிசோதிக்குங்கால், இப்பேர்க்கொத்த ஆவிக்கூட்டங்கள் எண்ணிறந்தவை பலகோடி மைல்களுக்கப்பால் காணப்படுகின்றன. இவைகளுக்கு நேபுலா எனப் பெயர். இவைகள் நாளாவட்டத்தில் குளிர்ந்து இறுகி, பல சூரியமண்டலங்களுக்கும் உற்பத்திஸ்தானமாகும்.



நமது சூரியனும் கிரகங்களும் இவ்வாறே ஓர் 'நேபுலா' வினின்று உண்டாயிருக்குமென்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது. வெளியில் அலைந்து திரியும் சூரியர்கள் மோதிக்கொள்ள நேர்ந்தால் அது காரணமாயுண்டாகும் உஷ்ணத்தால் ஆவிரூபமாய் மாறி 'நேபுலா' உண்டாகின்றதென்பது சிலர் கொள்கை.

முதன்முதலில் இப்பூமி, காய்ந்தெரியும் கற்குழம்பாயும், பின் சூரியனைச் சுற்றுவதாலும் குளிர்ச்சியால் இறுகுவதாலும் உருண்டைவடிவம் பெற்றும் இருக்கவேண்டும். உற்பத்திகாலத்திற்குப் பல்லாயிரம் வருஷங்களுக்குப் பின்னரே இதன் வடிவம் ஓர் நிலையையடைந்திருக்கும். சூரியனைவிட்டுப் பிரிந்தபின் வெகு காலம் வரை அதைவிட்டு விலகிச் செல்வதில் கழிந்திருக்கும். சூரியனுக் கருகாமையிலிருந்தபொழுது மிக்க, உக்கிரமான எரிமலைகள் எங்கும் நிரம்பியதாயும் இடைவிடாத பூகம்பங்கள் உடையதாயும் அவைகளின் அதிர்ச்சியால் சின்னாபின்னப்படுத்தப்பட்டுமிருக்கும். இந்த ஸ்திதியிலிருந்தபொழுதுதான் சந்திரனும் பூமியினின்று உற்பத்தியாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர். ஓர் காலத்தில் சூரியனுடைய ஆகருஷண சக்தி வேகத்தால் பூகோளம் வெடித்து அதினின்று ஓர் பாகம் பிரித்திழுக்கப்பட்டிருக்குமென்றும், சுழன்றுகொண்டிருந்த பூமியினின்று கிளம்பியதால் இது பூமியைச்சுற்றிச் செல்ல ஆரம்பித்ததென்றும் கூறப்படும். இதுவே நமக்கு இரவில் குளிர்ந்த நிலாவைக் கொடுக்கும் சந்திரன். கிரகங்கள் சூரியனிடமிருந்து உண்டானதுபோலவே சந்திரனும் பூமியினிடமிருந்து உண்டாகி பூப்பிரதக்ஷிணம் செய்து வருகின்றது. இவ்வாறு ஓர்பாகம் பெயர்ந்து போனதால் பூமியிலுண்டான பள்ளமே பின் மகா சமுத்திரங்களுக்கு ஸ்தானமாயிற்றென்பது சிலர் கருத்து.

பூகம்பங்களாலும், எரிமலைகளாலும், குளிர் வெப்பத்தாலும், இன்னும் பல காரணங்களாலும், நாளாவட்டத்தில் பூமியின் மேல்பாகம் மேடுபள்ளங்கள் நிறைந்ததாயிற்று. பூமியைச் சூழ்ந்து நின்ற நீராவி குளிர்ந்தபொழுது ஜலரூபமாய்ப் பள்ளத்தாக்குகளில் நிறைந்து சமுத்திரங்களுக்குக் காரணமாயிற்று. மேடுகள் மலைகளாயின. முதலில் உண்டான மேடு பள்ளங்கள் ஸ்திரமாயிருக்கவில்லை. அடிக்கடி சமுத்திரங்களில் மலைகளும் இதர பூபாகங்களும் மூழ்குவதும், வேறு சிலவிடங்களில் பூபாகங்கள் சமுத்திர மட்டத்துக்குமேல் கிளம்புவதுமாயிருந்தன.

இதையெல்லாம் ஆலோசிக்குங்கால், பூமி இப்பேர்க்கொத்த நிலையில் எவ்வளவு காலத்துக்கு முன்னிருந்ததென்பதையறிய ஹேதுவில்லையோ வென்றையமுண்டாகின்றது. பூமியின் வயதை நிர்ணயிக்கப் பல வித்வான்கள் முயன்றிருக்கின்றனர். முதன் முதலில் பூமியின் அமைப்பை ஆராய்ந்த சிலர், பூமியின் மேலோடு, ஒன்றின்மேலொன்றாய் வெவ்வேறு குணபேதங்களுள்ளதாயிருக்கும் பல அடுக்குகளாயமைக்கப்பட்டிருக்கிறதென்றுணர்ந்து, ஒவ்வொரு அடுக்கும் உள்ளபடி அமையப் பல கோடிவருஷங்களாயிருக்க

வேண்டுமென்று கூற அவைகளிலேயே தகுந்த சாக்ஷியங்கள் காணப்படுகின்றனவென்றும் கூறினார்கள். இதற்குமுன் பூமியின் வயது கோடிக்கணக்கான வருஷங்களாயிருக்குமென்று பேனட்டார் உணரவில்லையென்று தோன்றுகின்றது. இதன் பின்னர் இதரவிதங்களாலும் இதனுண்மையைப் பரிசோதிக்கப் பலர் யத்தனித்தனர்.

கேல்வின் பிரபு என்னும் ஓர் கணித சாஸ்திரி சூரியனைப் போன்ற உஷ்ணதசையிலிருந்து பூமி இப்பொழுதுள்ள குளிர்ச்சியையடைய எவ்வளவு காலம் சென்றிருக்க வேண்டுமென்பதைப் பௌதிகசாஸ்திர முறைப்படி கணக்கிட்டு, இரண்டுகோடி வருஷமென மதித்தார். பூகோளசாஸ்திரிகள் இது மிகவும் குறைவான மதிப்பென்று வாதாடுகின்றனர். மற்றொரு வித்வான் சமுத்திரஜலம்,சீராவிகுளிர்ந்துண்டானதுபற்றி,முதன் முதலில் உப்பற்றதென்றும், பின் நாளடைவில் மலைகளினின்றும் ஆறுகளால் கொண்டுவரப்பட்டிருக்குமென்றும், இவ்வாறே தற்காலத்திலும் சமுத்திர ஜலம் அதிக உப்பாய் வருவதாயும் ஊகித்தார். இப்பொழுது சமுத்திரத்தில் நூற்றில் மூன்றுபங்கு உப்பு இருக்கின்றது. வருஷந்தோறும் உலகத்திலுள்ள ஆறுகளெல்லாம் சுமார் 16 கோடி டன் நிறையுள்ள உப்பை சமுத்திரங் கொண்டுபோய்ச் சேர்க்குமென்று இவர் மதிப்பிட்டார். சமுத்திரத்திலுள்ளதைக் கணக்கிட்டால் இதைப்போல் 9 கோடி மடங்காவது இருக்குமென்பது வெளியாகிறது. ஆகையால் பூமியின் வயது 9 கோடி வருஷமென்று இவர் மதித்தார். இன்னொரு விதமாயும் பூமியின் வயது கணக்கிடப்படும். சந்திரன் பூமியிலிருந்து உற்பத்தியான காலத்தில் வெகுவேகமாய், பூமியுடனேயே கூடச் செல்ல முயன்றிருக்கும். முதன் முதலில் பூமியைத் தினமொருமுறை சுற்றிப், பௌர்ணமியும், அமாவாசையும் தினந்தோறும் பன்னிரண்டு மணிக்கொருமுறை மாறி மாறி வந்திருக்கும். பின்பு சக்தி குறைந்து பூமியுடன் ஓடமுடியாமல் பூமியை விட்டகன்றும் சென்றது. கடைசியில் 2,50,000 மைலுக்கப்பால் சென்று 29 நாளுக் கொருமுறை பூப்ரதக்ஷிணம் செய்தது. மறுபடியும் பூமியை நெருங்கிவருகிறது. இப்பொழுது 2,40,000 மைல் தூரத்தினின்று 27 நாட்களுக்கொருமுறை சுற்றுகிறது. இம்மாதிரியான சந்திரகதியைக் கவனித்த வான சாஸ்திரிகள் பூமியின் வயது 5½ கோடி வருஷமென நிர்ணயிக்கின்றனர்.

பூமி உற்பத்தியாகிக் கோடிக்கணக்கான வருஷங்களாகியும் அதைப்பற்றியும் அதன் ஜனங்களைப்பற்றியும் தேசசரித்திரங்கள் கூறுவதெல்லாங் கடைசி மூன்று அல்லது நாலாயிரம் வருஷங்களைப்பற்றியதே. அதற்கு முன்னர் மனிதர்களும், மிருகங்களும், இதர ஜீவகோடிகளும் பூமியில் தோன்றி எவ்வளவு காலமாயிற்றென்பதையும், அக்காலத்தில் ஜீவராசிகளின் வாழ்க்கை எத்தன்மையதென்பதையும் அறிய, மனம் மிக்க அவாவுகின்றது.

---

# வர்த்தமானம்.

ஸ்ரீராமகிருஷ்ண பாலிகா பாடசாலை:—பதிவிரதா சிரோமணிகளான ஸீதை, ஸாவித்ரி, தமயந்தி முதலியவர்களைப் பெற்றெடுத்த இப்புண்ய பூமியில் இனிமேலும் கற்பின் சிறந்த பெண்மணிகளை அடைவதற்குப் பெண் கல்வி அவசியம். தற்காலம் ஸ்திரீ ஜனங்களுக்காக ஏற்பட்ட பாடசாலைகள் வெகு சில. இப்பாடசாலைகளும் ஹிந்துமதத்திற் பிறந்து, நம் மதாசாரங்களைக் கற்றனுஷ்டித்து வருபவர்களால் நடத்தப்படாது பிறமதத்தாரால் ஏற்படுத்தப்பட்டு, நம்மதத்தின்மீது வெறுப்பேயன்றி விருப்பமில்லாதவர்களால் கல்விபோதிக்கப்பட்டு வருகிறது நாம் விசனிக்கத்தக்க விஷயம். இக்குறையை நீக்கவெண்ணி சில வருஷங்களுக்கு முன் சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடத்தின் தலைவராயிருந்த ஸ்ரீராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள் ஓர் பாலிகாபாடசாலையை சென்னையில் ஏற்படுத்தினார். ஹிந்துமதத்தினர் வசிக்கும் கிருஷ்ணப்ப நாய்க்கன் அக்ரஹாரத்தில் பாடசாலை சென்ற 15-வருஷங்களாக வெகு சிரமத்துடன் நடத்தப்பட்டு, நம்மவர்க்கு நன்மை புரிந்து வந்தது. ஆனால், பாடசாலையை நடத்துவதற்குப் போதுமான பணமின்மையால், அங்குள்ளவர்கள், ஸ்ரீராமகிருஷ்ணமடத்து சென்னைத் தலைவரிடம் பாடசாலையை ஒப்பித்து விட்டனர். ஸ்வாமிகள் மகிழ்ச்சியுடன், அப்பாடசாலையை நடத்தும் பொறுப்பை ஒத்துக்கொண்டதுடன். நம் நாட்டுக்கல்வி தேசிய முறையில் போதிக்கப்படுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். லோகமாதாவின் அவதார ரூபங்களான நம் பாலிகைகளின் கல்வியின் பொருட்டுச் செலவிடும் பணம் பகவத்கைங்கர்யமே யாதலால், இப்பாடசாலைக்கு தம்மாலான உதவியை நம் சகோதரர்கள் செய்யவேண்டுமென வேண்டிக் கொள்கிறோம்.

*
* *

ஸ்ரீராமகிருஷ்ணமடத்து தர்மவைத்தியசாலை—புவனேச்வரம்.

இவ்வைத்தியசாலை 1919ஞ் ஜூன்மீ முதல் 1920ஞ் டிசம்பர்மீ வரையில் 1911 பிணியாளிகளுக்கு மருந்துகள் ஈந்து அவர்களை குணமாக்கியது. பிரபல வைத்தியர்கள் இலவசமாக ஔஷதங்கள் கொடுத்துதவுகிறார்கள். பல பக்தர்கள் பணவுதவி செய்கின்றனர். வைத்தியசாலைக்குச் சொந்தக் கட்டடமில்லாமையை நீக்கக்கருதி ஸ்ரீமான் மன்மதநாத மித்ரரின் மனைவியார் ரூ.1,500 நன்கொடை யளித்திருக்கிறார். இவ்வித தர்மங்கள் நம்மால் ஆதரிக்கப்படவேண்டியது அவசியம்.

*
* *

ஒரு விளம்பரம்:—இம்மாதச் சஞ்சிகையுடன் அனுப்பப்பட்டிருக்கும் விளம்பரத் துண்டிலிருந்து, நம்மவர்களுக்குப் பணவுதவி செய்வதற்கு மைஸூரில் ஒரு திரவிய ஸகாயநிதி ஏற்பட்டிருப்பது தெரியவரும். சந்தாத் தொகை மிகக்குறைவாயிருப்பதோடு, நமது பத்திரிகை சந்தாதார்களுக்குக் குறைந்த சந்தா முதலிய அனுகூலங்கள் ஏற்படுவதாக நாம் அறிவதால், அவ்விளம்பரத்தை நம் நேயர்கள் கவனத்துடன் வாசிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*
* *

துன்மதி௵ தக்ஷிணாயனம் க்ரீஷ்மருது, ஆடி௴
(கிறிஸ்துசகம் 1921, ஜுலை-ஆகஸ்டு.)

| ஆடி | ஜுலை ஆகஸ்டு | வார | திதி நா. வி. | நட்சத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | சனி | த்வா-44-21 | அனு-3-28 | சாந்திர துவாதசி, சாதுர்மாஸ் |
| 2 | 17 | ஞா | த்ர-48-34 | கே-843- | பிரதோஷம் [ய விரதாரம்பம் |
| 3 | 18 | திங் | சது-53-27 | மூல-14-42 | |
| 4 | 19 | செவ் | ○பௌ-58-50 | பூரா-21-18 | வியாஸபூர்ணிமை |
| 5 | 20 | புத | ப்ர-60-0 | உத்ரா-28-20 | |
| 6 | 21 | வியா | ப்ர-4-38 | திரு-35-41 | |
| 7 | 22 | வெ | த்வி-10-38 | அவி-43-11 | |
| 8 | 23 | சனி | த்ரி-16-40 | சத-50-30 | |
| 9 | 24 | ஞா | சது-22-22 | பூட் 57-22 | |
| 10 | 25 | திங் | பஞ்-27-24 | உ-ட்-60-0 | |
| 11 | 26 | செவ் | ஷஷ்-31-19 | உட்-3-21 | |
| 12 | 27 | புத | ஸப்-33-42 | ரே-8-4 | |
| 13 | 28 | வியா | அஷ்-34-18 | அச்-11-5 | |
| 14 | 29 | வெ | நவ-32-51 | பர-12-11 | |
| 15 | 30 | சனி | தச-29-20 | க்ரு-11-14 | கிருத்திகை |
| 16 | 31 | ஞா | ஏகா-23-53 | ரோ-8-18 | ஏகாதசி |
| 17 | 1 | திங் | த்வா-16-45 | {ம்ரு-3-36 {திரு-57-26 | பிரதோஷம் |
| 18 | 2 | செவ் | {த்ர-8-17 {சது-58-55 | புன-50-17 | |
| 19 | 3 | புத | ● அ-49-7 | பூச-42-37 | அமாவாசை தர்ப்பணம் |
| 20 | 4 | வியா | ப்ர-39-20 | ஆயி-34-53 | கரிநாள் |
| 21 | 5 | வெ | த்வி-30-3 | மக-27-38 | |
| 22 | 6 | சனி | த்ரி-21-43 | பூரம்-21-19 | ஆடிப்பூரம் |
| 23 | 7 | ஞா | சது-14-41 | உத்ர-16-18 | |
| 24 | 8 | திங் | பஞ்-9-15 | ஹஸ்-12-55 | |
| 25 | 9 | செவ் | ஷஷ்-5-41 | சித்-11-24 | |
| 26 | 10 | புத | ஸப்-4-3 | சுவா-11-46 | |
| 27 | 11 | வியா | அஷ்-5-16 | விசா-13-57 | |
| 28 | 12 | வெ | நவ-6-11 | அனு-17-45 | வரலக்ஷ்மீ விரதம் |
| 29 | 13 | சனி | தச-9-33 | கேட்-22-54 | |
| 30 | 14 | ஞா | ஏகா-14-2 | மூல-29-4 | ஸர்வ ஏகாதசி |
| 31 | 15 | திங் | த்வா-19-17 | பூரா35-54 | பிரதோஷம் சிம்மரவி 59-2. |

| | சே. | சுக் | செ-புத |
|---|---|---|---|
| | 1-38 கன்-ராகு மீன-கேது. 8-0 கட-செ. 14-50 மிது-சு. 19-41 கட-புத. 22-38 கன்-சனி. | | ரவி / குரு,ச |
| | | ராகு | |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1] துன்மதி௵ ஆவணி௴ [பகுதி 8

உ

## கடவுள் வணக்கம்.

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பி யூற்ற
லூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்

படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த் தெழுந்து

மடலவிழ் மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானேய வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்

கடன்மடை திறந்தனைய வன்பரன்புக் கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தாற் பெருந்துயரிடம் பையிற்பிறந்து
கூடினேன் கூடியிளையவர் தம்மோடவர்தருங் கலவியேகருதி
ஓடினே னோடியுய்வதோர் பொருளாலுணர்வெனும் பெரும்பதந்தெரிந்து
நாடினேன் நாடிநான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்,

உ
சிவமயம்

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் வரலாறு.

கணபதி துணை

(197-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

இவரது நன்னிலை யிவ்வித மாகத்
தாய்சகோ தார்கம் தன்னருட் டிருவை
மன்றல் புரிவரேல் மன்னு ஞானத்தை
யொழிப்பரென்றெண்ணி யோர் நற்றினத்தில்,
இராமச் சந்திர ரிறைவிபெற் றெடுத்த
சாரதா மணியெனுஞ் சரஸ்வதி யன்ன
வைந்து வயதுள வருட்பா லிகையைப்
பால்யகல் யாணம் பான்மையின் முடித்தனர்.
தனது தாயருந் தமயன் மாருந்
தனக்கு நன்மணஞ் செய்ய வெண்ணி
நன்று யகியினை நாடிச் செல்வதை
யுணர்ந்த வெங்கள் உத்தம சிலர்,
"இராமச் சந்திர ரிறைவி பயந்த
சத்துவ குணமுடைச் சற்புத் திரியைத்
தனக்குத் துணைவியாய்த் தருவா" ரென்றும்
அவரோ வம்மையி னம்ச மென்றும்
பலரு மறியப் பகர்ந்தனர் முன்னதாய்.
சாரதா மணியைச் சார்ந்த பின்னர்
முன்னினு மதிகமாய் முக்தி மார்க்கமாம்
பக்தி நெறியைப் பயின்று வந்தனராய்
மாணிக்க வாசகர் வழுத்திய வாறு
"தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்



கசிவது பெருகிக் கடலென மறுகி
பகங்குழைந் தனுகூல் மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிப்"
பரிந்து பரிந்து பன்முறை யாகக்
கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியாம்
பார்வதி தேவியைப் பரிந்து வரினுந்
தாயோ தனக்குத் தரிசனந் தரவிலை
யென்ப துன்னி யேங்கி யலறித்
தாமோ தயரைத் தாங்கொ ணுமற்
பிராணத் தியாகம் புரிய வேண்டி
யெத்தனித் திருக்கு மப்பொழு தத்திற்
றரிசன மான தயாபரி தன்னைக்
கண்டு களித்தார் கதாதர ஞானி.
பகவா னிவ்விதம் பற்பல வேளையி
லம்மை தரிசன மன்பொடு கண்டனர்.

தாச னொருநாள், தேவியை நோக்கி
"இற்றைநாள் வரையு மிவ்வா லயத்தினைக்
கண்டு களிப்புறுக் கற்பக வல்லியா
மிராணிரா சமணியி னிருசிறு செல்வக
ளிந்நொடிப் பொழுதே யிங்குநின் றெளிரு
மால மரத்தி னருகே தோன்றிப்
பன்முறை யென்னொடு பகருவா ராயின்
தாயே யுன்றன் தரிசனம் யாவும்
சத்திய மென்னச் சாற்றி நிற்பனே"
என்றது மெங்குரு வீந்தனள் தாயும்.
பக்தர் விருப்பைப் பணிவுடன் புரியும்
புவனேஸ் வரியின் புண்ணிய வருளா
லவ்விட நின்றநல் லாலின் நீழலில்
தாயி னனுமதி தாங்கனே பெற்று
உடனே தோன்றிய வுத்தம புதல்விகள்,
"அஞ்சேல் அஞ்சேல் அஞ்சேல் அஞ்சேல்!!
அருள்மிக நிறைந்த வற்புத வமிழ்தாந்
தூயவள் நினக்குத் தோன்றிய துண்மையே"
யென்று விளம்பி யேகின ரிருவரும்.
பார்ப்பதி யருளைப் பலவிதம் பெற்றுப்
பகவா னுய்கம் பரம ஹம்ஸர்

பக்தி யோகம் பயின்ற பின்னர்
பன்னீ ராண்டு பலதவம் புரிந்தனர்.
இங்ஙன மாக விருக்குங் காலையில்,
அரம்பை யரன்ன வன்ன நடையின
ளிளம்பிறை நுதலா ளினிமொழிக் குயிலாள்
மாமறைப் பொருளை மகிழ்வுறக் கேட்டுச்
சித்தந் தன்னிலே சீரா யிருத்தித்
தெய்வப் பொருளைத் தெளியுமாற் றலினள்
மூவுல கத்தையும் முற்றத் துறந்து
பற்றற் றேவாழ் பத்தினி திலகம்
பொன்னிறச் சேலையே பொலியப் பெற்றவள்,
பண்டிதை யானவோர் பார்ப்பன மாது
பகவா னில்லம் பரிவுட னடைந்து
அன்னையின் றாசற் கருமறை யூட்டிப்
பலகலை களையும் பண்புறப் புகட்டி
நிருமல ஞானம் நிறைவுறச் செய்து
நித்தியா னந்த நிறைவினை யளிக்கும்
நிருவிகற்ப சமாதி யில்நிறுத் தினள்.
அக்கா லத்தினி லருள்பொழிந் திலங்கிய
தோதாபுரி யெனுமோர் தொண்ட சிகாமணி
அசரீரி வாக்கி னுஞ்ஞை யினாலே
தக்கி ணேசுரந் தன்னை யடைந்து
கதாதர ஞானியைக் கண்டே யவற்கு
ஓரும்வே தாந்தத் துட்பொரு ளுணர்த்தி
இராமக் கிருஷ்ணர் எனுந்திருப் பெயரைச்
சூட்டிச் சின்னாட் சென்றபின் சென்றனர்.
சாதுரத் தினமாஞ் சாரதா மணியெனும்
பத்தினி வயது பதினெட் டாயபின்
தனக்கு வரித்த தங்கணா யகனை
ஞானி யெனவே ஞாலம் புகழ்வதைக்
கேட்டலுங் காணும் நாட்ட முடையளாய்
கண்டு களிப்பான் கருதித் தன்னருந்
தாயி னனுமதி தானுடன் பெற்றுப்
பக்திநீர் சொரியப் பாதசா ரணியா
யெண்கா ததூர மேகிநா யகனைக்
கண்டு சிஷ்யையாய்க் கழல்பணிந் திருந்தனள்.
இத்திரு மாதுதன் னிறைவனைப் பிரிந்தபின்
முப்பான் னான்கு முழுவரு டங்களா



யிந்நிலந் தன்னி லின்புற் றிருந்து
பற்பல க்ஷேத்திரம் பணிவுடன் யாத்திரை
சாலவே செய்து சந்நியா ஸினியா
யடியார் பலர்க்கு மருளமு தூட்டி
யிரௌத்திரி வருட மிறைவ னடியினைச்
சேர்வான் கருதிச் சென்றடைந் தனளே.
அன்னை காளியி னன்பினால் வாழ்ந்த
வற்புத மணியா மருமறைச் செல்வன்
புண்ணிய பூமியாம் பாதகண் டத்திற்
பொலிந்து விளங்கும் பற்பல வாலயம்
பக்தியுடனே யுற்றுப் பணிந்தனர்.
இவர தாயுளி லின்புறு நாட்களா
யாண்டு நாம்பது மாண்டு போயபின்
ஜகத்தைக் காக்க ஜனித்த பகவான்
இவரென வுணர்ந்த தவமுடை யோர்சிலர்
இவரைத் தஞ்சமென் றிறைஞ்சுவா ராயினர்.

---

பக்தி:— சரியானமார்க்கந்தெரியாத ஒருவனுக்கு ஈசுவரபக்தியும் அவ்வீசுவரனைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலுமிருக்கலாம். அப்படிப்பட்டவன் கேவலம் பக்தியினாலேயே ஈசுவரனை யடைவான். ஜகந்நாத க்ஷேத்திரத்தைத் தரிசிக்கவேண்டுமென்று விரும்பிய பக்தன் ஒருவன், அந்த நகரத்துக்கு எந்த வழியாகப் போகிறதென்பதை யறியாதவனானபடியால் அதிற்கு எதிர்ப்புறமான வழியில் புறப்பட்டுப்போனான். கொஞ்சதூரம் சென்றதும், வழியில் போவாரைநோக்கி, "இதுதானா ஜகந்நாதத்துக்குப் போகும்வழி?" என்று ஆவலோடு கேட்டான். அவர்கள் "இது வழியன்று, அதுவழி" என்று காட்டிப்போயினர். கடைசியில் பக்தன் ஜகந்நாதத்தையடைந்து இஷ்டபூர்த்தி செய்து கொண்டான். அதுபோல ஒருவனுக்கு வழிதெரியாமலிருந்தாலும், மனம் மட்டும் இருக்குமானால், வழியைக் காட்டக்கூடியவர் நிச்சயமாக வருவார். முதலில் அவனுக்குத்தவறுதல் ஏற்படக்கூடும்; ஆனால் கடைசியில் சரியான பாதைக்குவந்து விடுவான்.

—ஸ்ரீராம கிருஷ்ணதேவர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு-8.

### 1884-ஞு

### உபந்நியாஸம் செய்யும் ஒரு பண்டிதரைப் பார்க்கப்போதல்.

இடம்—கல்கத்தா—காலேஜ் ஸ்த்தெரு

தேதி—1884ஞு ஜுன் (ஆஷாட) மாதம் 25உ

*சுக்கிலபட்சத்து துவிதீயை; ரதோற்சவம்.*

*சாயுங்காலம் 4 மணி முதல் 6½ மணி வரை.*

பகவான் ஸமாதியிலிருத்தல்.

*சசிதர பண்டிதர் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்துச் செல்லவந்த வண்டியில் பகவான் ஏறினதும் மறுபடியும் ஸமாதியிலாழ்ந்தார். ஐம்புலன்களின் உணர்விழந்து அதற்கு மேல்பட்ட உணர்ச்சியோடு யோகியானவன் கடவுளையறியும் ஆனந்தமயமான அச்சாந்தி நிலையை பகவான் தனது ஆவேசமென்று சொல்லுவார்.*

*அப்பொழுது சாயுங்காலம். சுமார் 4-மணி. ஈசனது வீட்டிலிருந்து அவர் புறப்படும் பொழுது கொஞ்சம் மழை தூறிக்கொண்டிருந்தது. பாதைகள் சேறாயிருந்தன. சிஷ்யர்கள் கால் நடையாக வண்டிக்குப் பின் சென்றார்கள். சேரப்போகும் கோஷ்டி ஸ்வாரஸ்யமாயிருக்குமென்று எதிர் பார்த்தவர்களாய், அக்கோஷ்டியில் சேர ஆவலுடன் சென்றார்கள். அன்று ரதோற்சவமாதலால், வழியில் குழந்தைகள் ஓலையாற் செய்த ரதங்களை ரதிவீதியாடிக் கொண்டிருந்தார்கள். பகவானது வண்டி வீட்டு வாசலில் நின்றதும் வீட்டெஜமானும், அவன் ஜனங்களும் அவரை எதிர்கொண்டு உபசரித்தார்கள்.*

*மாடிமேல் வந்ததும் பகவான் தன்னை நோக்கி வரும் சசாதரரைப் பார்த்தார். அவர் நடுப்பிராயமுள்ளவராகத் தோற்றினார். சிவப்பு நிறமுள்ளவராய்க் கழுத்தில் ருத்திராக்ஷ மாலை யணிந்திருந்தார். அவர் பவ்வியத்துடன் எதிர் வந்து பகவானை வணங்கி, பகவானது வரவுக்காக ஏற்படுத்தியிருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். சிஷ்யர்களும் மற்றவர்களும் அவர் பின் சென்று இயன்றவரை அவர் ஸமீபத்தில் உட்கார்ந்தார்கள்.*

*நரேந்திரன், ம—, ரக்கல், ராம் இவர்கள் வேறு அனேக சிஷ்யர்களுடன் அங்கு வந்திருந்தார்கள்.*

பகவான் *(அரைப்பிரக்ஞையுடன் புன்னகைசெய்து பண்டிதரை உற்சாகப் படுத்துபவர்போல்):—நல்லது! நல்லது! எவ்விதமான உபந்நியாசங்கள் செய்து கொண்டு வருகிறீர்?*

*சசாதரர்:—ஸ்வாமி! நமது சாஸ்திரங்களில் கூறியிருக்கும் உண்மைகளை விளக்கிக்காட்ட முயலுகிறேன்.*



*பகவான்:—இந்தக் கலியுகத்திற்கு நாரதீய பக்திதான் ஏற்பட்டிருக்கிறது. அதாவது நாரதரால் அப்பியசிக்கப்பட்ட பிரேமையும், சிரத்தையும், ஆத்ம பரித்தியாகமுமே. நமது சாஸ்திரங்களில் விதித்திருக்கும் கர்மங்களைச்செய்ய சாவகாசம் கிடையாது.*

*தசமூலிகா பாசனமென்ற கஷாயம் இக்காலத்திய ஜ்வரங்களுக்குத் தகுந்ததன்றென்று தெரியவில்லையா? மருந்து பிடிப்பதற்குள் நோயாளி மரித்துவிடக் கூடும். ஆகையால் ஜ்வரத்திராவகம் தான் இக்காலத்திய மருந்து.*

*வேண்டுமானால் கர்மத்தைப் போதியும். ஆனால், மீனிலிருந்து அனாவசியமான வாலையும் தலையையும் எடுத்து விடுவதுபோல, அனாவசியமானதைத் தள்ளி விடுங்கள். சந்தியா வந்தனம் செய்வதில், முழுவதையும் செய்யவேண்டியதில்லை யென்றும், காயத்ரீயை மாத்திரம் ஜபித்தால் போதுமென்றும் நான் ஜனங்களுக்குச் சொல்கிறேன்.*

*ஈசனைப்போன்ற கர்மிகள் அபூர்வம். வேண்டுமென்றால் அப்பேர்க்கொத்தவர்களிடம் சாஸ்திரத்தில் விதித்திருக்கும் கர்மவிதிகளைப் பற்றிப் பேசலாம்.*

*ஸம்ஸாரத்தில் அழுந்தியிருப்பவர்களுடைய மனதில் ஸாதாரண உபந்நியாஸங்கள் கொஞ்சமேனும் பதிவதில்லை.*

*கல்லின்மீது ஆணி அடிக்க முடியுமா? அப்படிச் செய்யப் பிரயத்தனப்பட்டால் ஆணி முறியுமே யல்லது கல்லில் கொஞ்சமேனும் பதியாது.*

*முதலையின் தோலில் வாளாவது ஈட்டியாவது யாதொருகாயமும்செய்யாது.*

*பேய்ச்சுரைக்காயினால் செய்த ஒரு கமண்டலம், சந்நியாசியுடன் இக்கண்டத்தின் நான்கு மூலைகளிலும் சென்றிருந்தாலும் அதின் கசப்பு மாறுவதில்லை.*

*ஆகையினால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு, தங்கள் உபந்நியாசங்களால் ஒரு பிரயோஜனமுமிராது. கேட்டபின்னரும், முன்போலவே பிரபஞ்ச இச்சையுடையவர்களாகத் தானிருப்பார்கள்.*

*உமக்கு அனுபவம் அதிகரிக்கும்பொழுது இதை யெல்லாம் இன்னும் நன்றாக அறிவீர். கன்றுக்குட்டி ஈன்றவுடன் எழுந்து நிற்பதில்லை. எழுந்து நிற்கப் பார்க்கும் பொழுதெல்லாம் விழுகிறது. அப்படி விழுந்து விழுந்து தான் நடக்கக் கற்றுக்கொள்ளுகிறது.*

*ஸம்ஸாரிகளையும் பக்தர்களையும் பகுத்தறிய முடியாதது உமது பிசகில்லை. பெருங்காற்று வீசும்பொழுது, புழுதியைக்கிளப்பி, புளிய மரத்திற்கும் மாமரத்திற்கும் வித்தியாஸம் தெரியாமல் பண்ணி விடுகிறது. உம்மிடத்தில் இப்பொழுது அனுராகம் (பிரேமை—பக்தி) ஆகிய பெருங்காற்று வீச ஆரம்பித்திருக்கிறது. ஸம்ஸாரிகளையும், பக்தர்களையும் பிரித்தறிய உம்மால் முடியாது. எல்லாரும் உமக்கு ஒன்றே.*

*ஆனால் பகவானை அனுபவத்தில் கண்டறிந்தவர்களுக்குத் தான் கர்மத்தை முற்றிலும் விடமுடியும்.*

*எதுவரை கர்மத்தை அனுஷ்டித்து வரவேண்டும்? ஈசுவரனுடைய நாமத்தைச் சொல்லும் மாத்திரத்திலேயே கண்களில் நீர் ததும்பி, உடல் புளகாங்கிதமாமானால், கர்மத்தின் முடிவு வந்து விட்டதென்று சொல்லலாம்.*

*'ஓம் ராம்' என்று சொல்லும் பொழுதே உன் கண்ணில் நீர்ததும்பினால், நீ கர்மம் செய்யவேண்டிய காலம் சென்று விட்டதென்று நிச்சயமாக அறிந்து*

கொள்ளலாம். அப்பொழுது நீ நித்திய கர்மானுஷ்டானங்களை விட்டு விடலாம். நீ கர்மத்துக்குமேல் சென்று விட்டாய். காய் முற்றும் பொழுது பூ தானாகவே விழுந்து விடுகிறது. பழுத்து பகவானையடையும் பக்திதான் காய். கர்மந் தான் பூ.

நாட்டுப்பெண் கர்ப்பமாயிருக்கிறாளென்று தெரிந்ததும், மாமியார் அவளுக்கு முன்போல வேலை கொடுக்காமல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வருகிறாள். பத்தாவது மாதமாகும் பொழுது அவள் ஒரு வேலையும் செய்வதில்லை.

ஸந்தியாவானது காயத்ரீயில் அடங்குகிறது. காயத்ரீ பிரணவத்தில் அடங்குகிறது. பிரணவம் ஸமாதியில் அடங்கிவிடுகிறது.

மேற்சொன்ன ஸ்திதிகளை மணியோசை குறித்துக் காட்டுகிறது. 'டாங்' என்னுமோசை மெதுவாக ஓங்காரத்தை யடைந்து, அநந்தாகாசத்தில் லயிக்கிறது. நாதரூபமான வேதங்கள் பிரம்மத்தினிடமிருந்து கிளம்பி, பிரம்மத்தில் லயிப்பதாக யோகியானவன் நேரில் அறியும் உண்மையை இது குறிப்பிடுகிறது.

அப்படியே கர்மம் கடைசியாக ஸமாதியில் லயமடைகிறது. ஈசுவரனை அடைவதால் கர்மம் நசிக்கிறது.

பகவான் ஸமாதி நிலையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவரது பாவம் மாறுகிறது. அவரது அழகான பிரகாசமுள்ள முகத்தில் ஒரு திவ்ய தேஜஸ் உண்டாகிறது. வெளியுணர்வை யிழக்கிறார். இந்த நிலையில் சிறிது நேரமிருந்து, பிறகு, வழக்கம்போல் "கொஞ்சம் தீர்த்தம் கொடுங்கள்" என்றார்.

பகவான் தண்ணீர்கேட்பது அவர் இந்திரிய கோசர உணர்ச்சியை யடைந்தாரென்பதற்கு அடையாளம்.

பிறகு சொல்லுகிறார்—"அம்மா! ஈசுவர வித்தியாஸாகரரை எனக்குக் காண்பிக்கத் திருவுளம் கொண்டாய். 'அம்மா! எனக்கு ஒருபண்டிதரைப் பார்க்க வேணும்' என்று மறுபடியும் நான் உன்னை இப்பொழுது கேட்க என் பிரார்த்தனையைக் கேட்டாய்."

சசாதரரைப் பார்த்து பகவான் சொல்கிறார்:—"அப்பனே, இன்னும் கொஞ்சம் பலம் ஸம்பாதித்துக்கொள். இன்னும் கொஞ்ச காலம்கூட ஸாதனை செய். மரத்தில் ஏறினுயோ இல்லையோ அதற்குள் அதிலுள்ள பெரிய பழக் கொத்தைப் பறிக்கப் பார்க்கிறாய்! ஆனால் பிறர்க்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற சிலாக்கியமான எண்ணத்துடன் இவ்விதம் செய்வதினால் அதின் குற்றம் ஒருவாறு நீங்குகிறது."

இப்படிச் சொல்லி பகவான் சசாதரரை வணங்கி, மேலும் சொல்லுகிறார்: நான் முதலில் உமது பெயரைக் கேட்டபொழுது பண்டிதர் கேவலம் படித்தவரா, விவேகமடைந்தவரா என்று ஜனங்களை விசாரித்தேன்.

பிரபஞ்சம் நிஷ்பலமென்னும் அறிவையடையாத பண்டிதன் ஒருபிரயோஜனமுமில்லை.

பகவானிடமிருந்து தர்மங்களைப் போதிக்கும்படியான ஆதேசம் (உத்திரவு) பெற்றிருந்தால் உபந்நியாசம் செய்வதினால் கெடுதலில்லை,



அப்படி ஆதேசபலம் பெற்ற உபந்நியாசிகளை ஒருவராலும் ஜயிக்கமுடியாது.

ஞானரூபியான என் ஜகன்மாதாவிடமிருந்து வரும் ஒரு ஜ்யோதிக் கிரணத்துக்கு முன்பு மஹா பண்டிதர்களும் மண்ணுண்ணிப்பூச்சிபோலாய் விடுவார்கள்.

மழைக்காலத்தில் விளக்கேற்றினால் பூச்சிகளை உள்ளே வரவழைக்க வேண்டியதில்லை. ஒருவரும் அழைக்காமலே விளக்கின் ஜ்வாலையில் வந்து விழுகின்றன.

பகவானிடம் ஆதேசம் பெற்றவன், தன்னைக் கேட்க ஜனங்களைத்தேட வேண்டியதில்லை. அவனைத் தேடி ஜனங்கள் செல்கிறார்கள். அப்பேர்ப்பட்டவன் உபந்நியாச சங்கம் சேர்க்க வேண்டியதில்லை. ஜனங்கள் தாமாகவே அவனை நாடிச்செல்கிறார்கள். அவனது வசீகரசக்தியை ஒருவராலும் தடுக்க முடியாது. பின் ராஜாக்களும் பிரபுக்களும் அவனைக் கூட்டமாகச் சுற்றிக் கொண்டு "பகவன்! தங்களுக்கு யாதுவேண்டும்? இந்த மாம்பழம் வேண்டுமா? இந்த மிட்டாய் வேண்டுமா? இந்த ஆபரணங்கள் வேண்டுமா? இந்த சால்வை வேண்டுமா?" என்று இவ்விதமாகக் கேட்கிறார்கள். அதற்கு அவன், "நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்த்துப் போங்கள். எனக்கொன்றும் தேவையில்லை" யென்கிறான்.

காந்தம் இரும்புத் துண்டுகளை அழைக்க வேண்டுமோ? அவைகள் தம் வசமின்றியே அதைப் பார்த்து விரைந்து செல்கின்றன. அப்படிப்பட்ட குரு படித்தவனாக இல்லையென்று யோசிப்பாயோ? அவன் பண்டிதனாக இல்லாவிட்டாலென்? ஆத்ம ஞானத்தில் கொஞ்சமும் குறைவுபடான். கேவலம் சாஸ்திர ஞானத்திற்கு மேலான அபரோக்ஷ (நேரே உணர்ந்தறிந்த) அளவற்ற பிரம்ம ஞானம் அவனிடமிருக்கிறது. நான் வளர்ந்த தேசத்தில் ஜனங்கள் குவியலாகக் குவிக்கப்பட்ட தானியத்தை அளப்பதைப் பார்க்கலாம். ஒருவன் படியால் அளந்துகொண்டே யிருப்பான்; மற்றொருவன் அவன் கைக்கெட்டும்படியாகத் தானியத்தைத் தள்ளிக் கொடுத்துக் கொண்டிருப்பான். அது போலவே ஈசுவரனை நேரே அறிந்த பரம குருவுக்கும், ஸகல ஞானத்திற்கும் இருப்பிடமாகிய ஜகன்மாதாவிடமிருந்து தெளிந்த உண்மை ஞானமானது வந்துகொண்டே யிருக்கும். அந்தக் களஞ்சியம் எப்பொழுதும் குறைவதில்லை.

பகவானது அருட்கடைக்கண் பார்வை ஒருதரமேனும் கிடைக்கும்படியான அரிய பாக்கியம் ஒருவனுக்குண்டானால், அவனுக்கு வேண்டியதற்குமேல் திவ்யஞானம் உண்டாகிறது.

ஆகையினால்தான் ஈசுவரனிடமிருந்து உனக்கு ஆதேசம் ஏதாவது கிடைத்திருக்கிறதா என்று கேட்கிறேன்.

ஹாஸ்ரன் (பண்டிதனைப் பார்த்து):—அவ்விதம் ஏதாகிலும் இருக்கத்தான் வேண்டும். அல்லவா?

பண்டிதர்:—அவ்விதமான தொன்றுமில்லையே.

வீட்டு எஜமானன்:—ஆதேசமொன்று மில்லை. தான் செய்யவேண்டிய கடமையாக நினைத்து பிரசங்கம் செய்து வருகிறார்.

பகவான்:— ஒருவனுக்கு ஈசுவர ஆக்ஞையினுடைய ஆதார பலமில்லாவிட்டால் உபந்நியாஸத்தால் என்னபிரயோஜனம்? ஒருவன் தன்னுடைய பிரசங்கத்தின் மத்தியில் "ஸகோதரர்களே! நான் முன்னால் குடிப்பதுண்டு" என்று

சொன்னான். இவன் அவ்விதம் சொன்னதினால் அவனுக்கு முன்னிருந்த மதிப்பும் போய்விட்டது. அதைக் கேட்டவர்கள் "இவனைப் பார்! தன் குடியைப் பற்றி எதற்காக இவன் சொல்லுகிறான்" என்று இகழ்ச்சியாகப் பேசிக்கொண்டார்கள். ஒருசமயம் பாரிஸாவிலிருந்து பென்ஷன் வாங்கின ஸப்ஜட்ஜி ஒருவர் என்னைப் பார்த்து "ஸ்வாமி, தாங்கள் பிரஸங்கம் செய்வதுண்டா? அப்படியானால் நானும் அவ்விதமே செய்ய ஸந்நத்தனாகிறேன்" என்றார். நானவரிடம் "ஐயா, ஒரு கதை சொல்லுகிறேன் கேளும். காமர்புகூரில் ஹலதார்புகூர் என்ற ஒரு குளமிருக்கிறது. ஜனங்கள் அந்தக்குளத்தின் கரையோரத்திலெல்லாம் ஆபாஸம் செய்து வந்தார்கள். இப்படி அசுசிசெய்து வந்தவர்களை மற்றவர்கள் பிரதிதினமும் காலையில் வைவார்கள். ஆனால் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. மறுநாளும் அப்படியே நடந்துவந்தது. கடைசியாக முனிசிபாலிடியைச்சேர்ந்த ஒரு சேவகன் "இனிமேல் ஒருவரும் அவ்விதம் செய்யக்கூடாது" என்று ஒரு விளம்பரத்தைக்கொண்டு வந்து" அவ்விடம் மாட்டினான். இந்த விளம்பரத்தின் பலன் அற்புதமாயிருந்தது. அதன்பின் ஒருவனும் ஆபாஸம் செய்யவில்லை என்றேன்.

ஆகையால் நமது உபந்யாசகன் ஸாதாரண மனுஷ்யனாயிருந்தால் போதாது. அவன் பரமாத்மாவின் ஆக்ஞையாகிய அதிகாரப் பத்திரத்தையுடையவனாயிருக்கவேண்டும்.

ஜனங்களுக்கு உபதேசம் செய்ய விரும்புபவன் விசேஷமான ஞானசக்தியுடையவனாயிருக்கவேண்டும். கல்கத்தாவிலிருக்கும் ஹனுமான் முதலிய பயில்வான்களுடன் குஸ்தி செய்ய எவ்வளவு சரீரபலம் வேண்டுமோ, அதற்குச்சரியான ஆத்மபல முள்ளவனாயிருக்கவேண்டும். வெறும் கற்றுக்குட்டிகளுடன் குஸ்தி செய்யும் பலம் போதாது.

சைதந்யதேவர் ஈசுவர அவதாரமென்பது நமக்குத் தெரியும். ஆயினும் அவர் செய்ததெல்லாம் இப்பொழுது என்னவாயிருக்கிறது? அதுவே அப்படியிருக்க பகவதாக்ஞையினாலுண்டான ஆத்மபலமில்லாத ஒருவன் செய்யும் காரியங்களின் ப்ரயோஜனம் என்னமாயிருக்கும்? ஆனபடியால் நான் சொல்லுவதென்னவெனில்.—

[என்று பகவான் பிரேமானந்தத்தினால் மயங்கிப் பின்வரும் பாடலைப்பாடுகிறார்.—]

பாடல்.

ஆழ்ந்தமுழுகு.

ஆழ்ந்தமுழுகு! மனமே! அவனழகெனும் கடலில்
ஆழ்ந்தமுழுகு, ஆழ்ந்தமுழுகு.
அச்கடலின் கீழ்ப்பிரதேசங்களில் தேடிப்பார்- அங்கு
பிரேமமென்னும் இரத்தினத்தை அடைவாய்.
உன் ஹிருதயத்தினுள்ளே பிருந்தாவனமிருக்கிறது:
தேடிப்பார், தேடிப்பார், தேடிப்பார், நீ அதைக்காண்பாய்.
அப்பொழுது பிரபஞ்சமாகிற தீபம் அணையாமல் எரியும்
தரையில்—கெட்டித்தரையில்—படகோட்டும் அப்பரம்பொருள் யார்?

'கேள், கேள், கேள், பரமகுருவாகிய பகவானுடைய திருவடிகளைத் திடானி' என்று கபீர் சொல்லுகிறார்.

(—தொடரும்)

# ஹிந்து மதமும் ஸ்ரீராமகிருஷ்ணரும்.

(120-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிருஷ்டிகர்த்தா தமது தொழிலாகிய சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்தை நடாத்தி வருவதற்குக் கருவிகளாயமைந்து அவருடன் எப்போதும் இருந்துவரும் வேத உண்மைகள், உலகப்பற்றுக்களின் வாசனைகளற்றுச் சுத்தமடைந்திருக்கும் ரிஷிகளின் மனத்தின்கண் ஸ்வயமாகவே தரிசனமாகின்றன என்பதை (உலகத்திற்குக்) காட்டும் பொருட்டும், சாஸ்திரீக உண்மைகளை அவ்வாறு ருசுப்படுத்துதலும் ஸ்திரப்படுத்துதலும் (ஸநாதன) தர்மத்தை மீண்டும் உத்தாரணம் பண்ணுவதற்கும் ஸ்தாபிப்பதற்கும் பரவச் செய்வதற்கும் அனுகூலமாயிருக்கும் என்னும் காரணம் பற்றியும், பகவான் வேதஸ்வரூபியே யாயினும், இந்த அவரது புதிய திருவவதாரத்தில் (ராமகிருஷ்ண அவதாரத்தில்) கல்வி யறிவுக்குப் புறச்சின்னங்களாயிருப்பவற்றை யெல்லாம் முற்றும் ஒழித்திருக்கிறார்.

வேதங்களையும் உண்மையான தர்மத்தையும் அத்தர்மானுஷ்டான உபாத்யாயத்வமாகிய பிராமணத்வத்தையும் ரக்ஷிக்கும் பொருட்டுப் பகவான் மீண்டும் மீண்டும் மனுஷ்ய ரூபத்தோடு அவதரிக்கிறார் என்னும் கொள்கை புராணங்களில் நன்கு நிலைநாட்டப்பட்டிருக்கின்றது.

ஆற்று நீர் சிகரத்தினின்று கீழே விழும்போது அதிகவேகத்தைப் பெறுகின்றது; தாழ்ந்தபின் மேலே கிளம்பும் அலை அதிகமாய் உயர்கின்றது; அம்மாதிரியே, ஆரிய ஜனசமூகமும் க்ஷீணதிசையடைந்து மயங்கிக்கிடக்கும் ஒவ்வொரு தடவைக்குப்பின்னும், இறைவனது கருணையால், ஸகல அனர்த்தங்களும் நீங்கப்பெற்றுத் தெளிந்து, முன்னினும் அதிக மாட்சிமையோடும் சக்தியோடும் எழுந்து உன்னததிசையை யடைந்திருக்கிறது. தேசசரித்திரமே இதற்குச் சான்றாம்.

தாழ்ந்த நிலைநீங்கி உன்னத நிலையை அடைந்த பின்னர், ஒவ்வொருதடவையிலும், பூர்வபோதத்தோடெழுந்த நமது ஜனசமூகம், தன்னிடத்து அந்தர்க்கதயாயிருக்கும் அனாதிபூர்ணத்வத்தை அதிகமாய் வெளிக்காட்டி வருகின்றது; அதே போன்று எங்கும் நிறைந்துள்ள இறைவனும் தனது அவதாரத்தொடர்ச்சியில் வரவர முன்னினும் அதிகமாய்த் தன் ஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கிறார்.

மீண்டும் மீண்டும் நமது பாரதவர்ஷம் மூர்ச்சையுற்றுக் கிடப்பதுபோல் இருந்திராநின்றது; மீண்டும் மீண்டும் இந்திய தேசத்

துக்கு அதிதேவதையான பகவான் தம் ஸ்வரூபத்தை வெளியில் பிரகாசிக்கும்படிச் செய்து, அவ்விந்தியமாதை உயிர்ப்பித்திருக்கிறார். ஆனால் தற்காலம் எங்கும் நிறைந்திருக்கும் இந்நள்ளிருளினும் அதிகமாய், இதற்குமுன் ஒருநாளும் இந்த நமது புண்ணிய பூமியில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டதில்லை. (அவ்விருளும் தற்சமயம் கிட்டத்தட்ட அகன்றுவிட்டது;) ஆயினும் இக்காலத்து அடைந்திருக்கும் தாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், இதற்கு முன் அடைந்த தாழ்வெல்லாம், ஆழ்ந்த பள்ளத்தின் முன் பசுவின் குளம்பின் தடம்போல் தோன்றுகின்றது.

ஆகையால், துயில் நீங்கி இப்போது புதிதாய்க் கண் விழித்திருக்கும் இவ்வவஸ்தையின் பிரகாசத்தின் முன், இந்துதேச சரித்திரத்தில் இதற்கு முன் தூங்கிக் கண்விழித்ததாகத் துலங்கும் அவஸ்தா விசேஷங்கள் எல்லாவற்றினுடைய மேன்மையனைத்தும், உதயமாகும் சூரியன் முன்புள்ள நக்ஷத்திரங்கள் போன்று ஒளிமழுங்கும். இப்போது புதிதாய் அபரிமிதமாய் வெளிக்கிளம்பியிருக்கும் சக்தியோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், இதற்குமுன் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் உண்டாயிருக்கும் புதுக்கிளர்ச்சிகளெல்லாம் பால்ய விளையாட்டே அனையவாகும்.

ஸநாதன தர்மம் நிலைகுலைந்திருக்கும் தற்கால நிலைமையில் ஏகமாயிருக்கும் அத்தர்மத்தில் அடங்கியிருக்கும் பற்பல மதலக்ஷியங்கள், அவற்றை ஸ்வானுபூதிக்குக் கொண்டுவரும் அதிகார புருஷர்கள் இன்மையால், இங்குமங்கும் பலவாறாய்ச் சிதறுண்டுகிடந்தும், அவற்றுள் சில சில்லரை மதஸ்தர்களால் பரிபாலிக்கப்பட்டும், இன்னும் சில முழுமையும் அழிந்துபோயும், இவ்வாறான நிலைமையிலிருக்கின்றன.

ஆனால், பரமார்த்திக விஷயமாய் இப்போது உண்டாயிருக்கும் இப்புதுக்கிளர்ச்சியின் சக்தியின் உதவியால் வலியடைந்த மாந்தர்கள், இனி இவ்வாறு சிதறப்பட்டும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டும் கிடக்கும் மதலக்ஷியங்களையெல்லாம் ஒருங்கு கூட்டி, ஒழுங்குபடுத்தவும், பின்னர் அவற்றின் ஸ்வரூபங்களை நன்கறிந்து தங்களது வாழ்க்கையிலேயே அவற்றை அப்பியசிக்கவும், அழிந்துபோனவற்றை மறதியினின்றும்மீட்டிடவும்,திறமைவாய்ந்தவர்களாவார்கள். இத்தகைய மாட்சிமை தங்கிய காலம் இனிவருவது ஸித்தம் என்பதற்கு நிச்சயமான அறிகுறியாகக் கிருபாவள்ளலாகிய பகவான் முன் கூறியபடியே, தற்காலத்தில் ஓர் அவதாரபுருஷராகத் திருவடிவம் தாங்கினார். அந்த அவதாரமோ, தத்வதர்சனப் பூர்த்தியிலும் எல்லா மத லக்ஷியங்களையும் ஒருங்குகூட்டி அவற்றின் ஐக்கியத்தன்மையை எடுத்துக்காட்டும் தன்மையிலும் ஞானப்பயிற்சி



யின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் விருத்திபண்ணும் குணத்திலும் முந்திய அவதாரங்களைக் காட்டிலும் மேம்பட்டதாயிருக்கின்றது.

ஆகையால் இந்த உத்கிருஷ்டமான நற்காலம் உதயமாகும் தருணத்திலேயே, மதஸித்தாந்தம் வைதீக ஆராதனம் இவைகளின் ஸகல லக்ஷியங்களுக்கும் அம்சங்களுக்கும் உள்ள ஸமன்வயம் பறையறையப்படுகின்றது; எல்லையற்றதும் ஸர்வத்தையும் தழுவிக்கொள்வதுமாகிய இந்த எண்ணம் (அதாவது தர்மஸமன்வயம்) ஸநாதன தர்மத்திலும் அதை விவரிக்கும் ஸகல மதக்கிரந்தங்களிலும் அந்தர்க்கதமாயிருந்தது; ஆனால் இத்தனை காலமாய் மறைவாய்க் கிடந்த. இவ்வெண்ணம் இப்போது திரும்பக் கண்டுபிடிக்கப்பட்டு, கம்பீரமான வாக்கினால் மனுஷ்யவர்க்கம் முழுமைக்கும் கூறப்படுகின்றது.

இக்காலத்துத் தலைப்பட்டிருக்கும் இப்புதிய பகவத் ஆக்ஞையின் மூலமாய் உலகமுழுமைக்கும் முக்கியமாய் இந்தியாவுக்கும் பெருத்த நன்மை விளையும்.இந்த பகவத்ஸங்கல்பத்திற்கு ஊக்கத்தை உண்டு பண்ணியவரான பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், இதற்கு முன் மதஸ்தாபனம் பண்ணியிருக்கும் அவதார புருஷர்கள் அனைவரும் சீர்திருத்தம் பெற்றுப் புதிதாய் (காலத்துக்கு அனுகுணமாய்) அமைக்கப்பட்ட ஒரேவியக்தியிலேயேதோன்றியதிருவவதாரம். ஓ! மனிதனே, இதில் விசுவாசம் வைத்து இதை மனதில் பதியும்படிச் செய்வாயாக.

இறந்துபோனவன் மீண்டெழுந்து வருவதில்லை; ஓ மனிதனே, கழிந்துபோன இரவு திரும்பவும் வருவதில்லை. அலைபோல் உள்ளத்தின்கண் எழுந்து தீர்ந்துபோன மனோவிருத்தி வேகம் முன் போன்று ஊக்கத்தோடு மறுபடியும் கிளம்புவதில்லை; அம்மாதிரியே மனிதனும் அதே சரீரத்தைத் திரும்ப அடைவதும் என்றுமில்லை. இறந்துபோனகாலத்தை ஆராதிப்பதை விட்டு விட்டு உயிருடன் வாழும் நிகழ்காலத்தைஆராதிக்க உம்மைஅழைக்கின்றோம். கழிந்துபோனவற்றிற்காகக் கம்பலையும் கண்ணீருமாய்க் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதை விட்டு விட்டுத் தாத்காலிக முயற்சிகளைச் செய்யுமாறு உம்மை அழைக்கின்றோம்; புல்லெழுந்தொழிந்ததும் அழிந்ததுமான பழைய மார்க்கங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் வீணே சக்தியைச் செலவுசெய்வதை விட்டு விட்டு, விசாலமாயும் சமீபமாயுமுள்ளதும் புதிதாய்ப் போடப்பட்டிருப்பதுமான மார்க்கங்களிற் செல்ல உம்மை அழைக்கின்றோம். ஞானமுடையோன் எவனோ அவன் உணர்ந்து கொள்ளட்டும்.

எந்தச் சக்தியானது தன் பிரதமப்பிரவிருத்தி மாத்திரத்தாலேயே லோகமுழுமையும் நாலாதிக்குகளிலும் வெகுதூரம்வரை

எதிரொலியை உண்டாக்கிற்றோ, அந்தச்சக்தி பூர்ணமாய் வெளிப்படுங்காலத்து எத்தன்மையதாயிருக்கும் என்பதை உங்கள் மனதில் சிந்தித்துப்பாருங்கள்! பின், அடிமைத்தனத்திற்கே ஆளாயிருக்கும் ஜனங்களுக்கு லக்ஷணங்களான வீணான அவநம்பிக்கையையும் தௌர்ப்பல்யத்தையும் பொறாமையையும் உதறித்தள்ளிவிட்டு, இப்புதிய பகவத் ஆக்ஞாசக்கரத்தைச் சுழற்றுவதற்குக் கூடவந்து உதவிசெய்யுங்கள்.

நாம் அனைவரும் பகவானுக்குக் குற்றேவல் செய்வோர். அவருடைய குழந்தைகள், அவரது ஸங்கல்பங்கள் நிறைவேறும் போது நமக்கும் அதில் சப்பந்தம் ஏற்படுகின்றது என்னும் நிச்சய ஞானம் சித்தத்தில் வேரூன்றி நிலைபெறச்செய்துகொண்டு வேலைசெய்யும் களத்திற் பிரவேசியுங்கள்.

(முற்றுப்பெற்றது)

---

# கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

போத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் ஓர் கிராமம் உண்டு. அவ்வூரில் ஓர் காலத்தில் வேடுவர் நிறைந்திருந்தனர். அவர்களுக்குள் நாகன் என்ற தலைவன் இருந்தான். அவன் மனைவியாள் பெயர் தத்தை. அவ்விருவரும் நெடுநாள் புத்திரபாக்கியமில்லாமற் றங்கள் குலதெய்வமான சுப்பிரம்மண்ய சுவாமியையேத்தியவருக்குத் தினந்தோறும் அன்புடன் தொண்டு புரிந்து வருகையில் அவரருளால் ஓர் ஆண்மகவுதித்தது. அதற்குத் திண்ணனெனத் திருநாம மளித்தனர். திண்ணனார் நாளுக்கு நாள் வளர்ந்து தம் குலாசாரத்தை யனுசரித்து வில்வித்தை கற்றுத் தேர்ச்சியடைந்து பிரதிதினமும் அநேக வேடுவர்கள் புடைசூழ அடவிசேர்ந்து களைப்படையும்வரையில் வேட்டையாடித் திருப்பி வீடு சேருவார்.

இவ்விதம் நடந்துவர, ஒருதினம் திண்ணனார் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் அதிவேகமாய் ஓடித் தப்பித்துக் கொள்ள முயலும் ஓர் பன்றியைக்கண்டு அதைவிடாமற்றுரத்திச் சென்றார். இவரைப் பின்பற்றி மற்றவரும் அப்பன்றியைக் கொல்லும் எண்ணத்துடன் விரைந்தோடினர். ஆயினும் சிறிதுநேரத்தில் திண்ணனார், நாணன், காடன் என்னு மிம்மூவர் தவிர மற்றவர் சோர்ந்துப் பின்தங்கிவிட்டனர். இவர்களோ வெகுதூரஞ் சென்று



கடைசியில் அப்பன்றியைப் பாணத்தினாலடித்து அதைக் கையிலெடுத்துக்கொண்டுக் கொஞ்சதூரத்திலுள்ள பொன்முகலியாற்றை நோக்கிச் சென்றார்கள்.

இப்படிச் செல்லுங்கால் இவர்களுக்கு அரைக்காத வழிக்கப்பால் ஒரு மலை தென்பட்டது. எவ்விதமாகவோ திண்ணனார் மனத்திலளவிலாத ஸந்தோஷமுண்டாகியது. அவர் கவலைகளெல்லாம் ஒழிந்தன. தரிசன மாத்திரத்தினா லிவ்வளவு ஆனந்தத்தை விளைவிக்கும் இம்மலை யாதெனத் திண்ணனார் கேட்க, நாணன் "சுவாமி! அதைத் திருக்காளத்திமலையெனச் சொல்லுவார்கள். அம்மலையின் மேல் ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்கிறார் என்று கேள்வி' என்று விடை பகர்ந்தான். திண்ணனாருக்குச் சுவாமி தரிசனம் செய்ய வேணுமென்ற பேரவாவுதித்தது. ஆகவே, காடனை யவ்விடத்திலேயே தீயுண்டாக்கிப் பன்றியின் மாம்ஸத்தைப் பதமாகப் பாகஞ்செய்ய நியமித்து மற்றிருவரும் ஆற்றைக்கடந்து மலையை நோக்கிச் சென்றார்கள். திண்ணனாருக்குச் சீக்கிரத்தில் மலையையடைய வேணுமென்ற தீவிரமான விருப்பம் உண்டாகியது. சிறிது தூரமதிவேகமாய் நடப்பார். சிறிதுதூரம் ஓடுவார். பிறகு சிரமம் மேலிட்டுச் சற்றுத் தயங்கி நிற்பார். மறுபடியும் சிறிது மெள்ள நடப்பார், பின்னர் விரைவாயோடுவார்.

இவ்விதம் அதி ஸம்பிரமத்துடன் சென்று மலையேறியதும் அங்கோர் சிவலிங்கத்தைக் கண்டார். உடனே இவரது குணங்களெல்லாம் முற்றிலும் மாறிவிட்டன. தன்குல விருத்தியில் விருப்பற்றது. அந்த லிங்கத்தினிடம் அதிகப் பிரேமையுண்டாகி யவர் மனதையுருக்கியது. வெகுகாலம் மகவைப் பிரிந்த தாய் அதை மீண்டும் பெற்றால் எவ்வளவு குதூஹலத்தை யடைவாளோ அவ்வளவு அன்பு இவர்க்கு அந்தச் சிவலிங்கத்தினிடம் உண்டாகியது. திண்ணனார் ஸந்தோஷத்தினால் ஆரவாரம் செய்துகொண்டு ஓடிவந்து சிவனை யிறுகத் தழுவி முகர்ந்து முத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்சுவிட்டுக் கொண்டு நின்றார். சரீரமாத்தியந்தம் மயிர்க்கூச்செறிய கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் ஸந்ததாரையாய்ச் சொரிய "ஐயனே! இன்றும்மை நான் கண்டபேறு என்னபேறு" என்று சொல்லுவார். "ஐயோ! துணையில்லாமல் இக்காட்டில் இருக்கின்றீரே. புலி, சிங்கம், முதலிய துஷ்டமிருகங்கள் உம்மைக் கொன்றுவிடுமே" என்று சற்றுத் துக்கிப்பார். பரவசத்தினாலங்கம் மறந்து வில்லம்புகளைக் கைசோரவிட்டுச் சிவனார் திருவுருவையுற்று நோக்கி 'ஸ்வாமி! உமது முடிக்கபிஷேகம் செய்து பச்சிலையும் பூவையுமிட்டவர் யார்? என்னையனே! இவையெல்லாம் உமக்குப் பிரீதியாகிய செய்கைகள் போலும். நிர்ஜனமான இக்காட்டில் உமக்கு ஆஹா

ரார்த்தம் இறைச்சி கொடுப்பவர் யார்? எத்தனை தினமாய்ப் பட்டினி கிடக்கிறீரோ அறியேனே. நான் ஓடிப்போய் ஒரு நொடியிலிறைச்சி கொண்டுவரலாமென்று நினைத்தால் உம்மை யரைக்கணமும் பிரிய மனமில்லையே! ஆயினும் செல்லுவேன்' என்று சற்று தூரம் போவார். பிரிவாற்றாமல், மறுபடியும் திரும்பிவருவார். அப்பனைக் கட்டித்தழுவுவார், மறுபடியும் போவார்; திரும்பிச் சுவாமியைப்பார்த்து அத்தியந்தவாசையோடு நிற்பார். மீண்டும் தன் நாதன் பசியால் மெலிந்திருக்கிறார் என்னும் எண்ணமும் நல்ல இறைச்சிகொண்டுவரத் தானேசெல்லவேணு மென்ற எண்ணமும் முடிவில் அவ்விடத்தை விட்டேகும்படிச் செய்தன; ஆயினும் "ஐயோ! நீர்தனியாயிருக்கிறீரே. என்னசெய்வேன்" என்று கண்ணீர்விட்டு ஒருவாறு தெளிந்து சுவாமியைக் கும்பிட்டு அவரைப் பிரியமாட்டாமற் பிரிந்து நாணனுடன் முகலியாற்றைக் கடந்து ஓர் சோலையிற் புகுந்தார். காடன் தீயுண்டாக்கித் திண்ணனார் வரவை யெதிர்பார்த்திருந்தான். திண்ணனார் சரேலென்றோடிப் பன்றி மாமிசத்தைக் கைப்பற்றித் துண்டுதுண்டாக்கித் தீயிற் பக்குவமாய் வேக வைத்து, ஒவ்வொன்றையும் வாயிற்போட்டுக் கடித்துச் சுவை பார்த்து மிகவும் ருசியாயுள்ளவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு மிகுந்தவற்றைப் புறமெறிந்து, நாணன், காடன், இவர்களைப்பற்றி முற்றிலும் மறந்து 'சுவாமி தனியாயிருக்கின்றாரே: அவர்க்கென்ன ஆபத்து நேருமோ' என்னும் கவலை மிக மலையைநோக்கி விரைந்தோடினார். நாணனும் காடனும் இவருக்குத் தெய்வப்பைத்தியம் பிடித்திருக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு இவரது தாய் தந்தைகளாலன்றி யிவரை யிதினின்று திருப்பமுடியாதென்று ஊர் சேர்ந்து விருத்தாந்தமெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

திண்ணனார் கன்னையனைப்பார்க்க விரைந்தோடுவாராய் ஆற்றிலிறங்கிச் சுவாமியின் திருமஞ்சனத்தின் பொருட்டுப் பாத்திரமில்லாமையால் தன்வாய் கொண்டமட்டும் ஆற்றுநீரை முகந்துகொண்டு பூக்களைக் கொய்து தலைமயிரிலே சொருகி ஒரு கையில் வில்லும் அம்பும் மற்றொரு கையில் இறைச்சியும் எடுத்துக்கொண்டு 'என்னுயிர்த்துணை நாதர் பசியால் ஏங்கியிளைத்தாரோ' எனப்பதைபதைத்து ஏங்கியோடியவரை யடைந்தார். உடனே கர்த்தன் திருமுடிமேலுள்ள பூக்களைத் தன் செருப்புக்காலால் தள்ளித் தன்வாய் நீரை யவர்மேல் உமிழ்ந்து தம் தலையிலுள்ள மலர்களை யவர் தலையில் மிகவும் அன்புடன் சாத்தி யிறைச்சியை யவர்முன் வைத்து 'ஐயனே! இவை மிகவும் ருசியுள்ளவை: இவற்றைச்சாப்பிடும்' என்று வேண்டக் கடவுளும் இவரது மெய்யன்பிற்கு மகிழ்ந்துஇறைச்சியை யுண்டார். இப்போது சூரியாஸ்தமனமாகியது. திண்ணனார் வில்லும் அம்பும் கைக்கொண்டு சுவாமியைக்கொடியமிருகங்கள் துன்புறுத்தா



வண்ணம் அவர் பக்கத்தில் மிக்க ஜாக்கிரதையுடன் கண்ணிமையும் கொட்டாமல் நின்று காத்திருந்தார். மறுநாட்காலையில் மறுபடியும் கர்த்தனுக்காகாரம் ஸம்பாதிக்கும் எண்ணத்துடன் அவரைப் பிரிந்து வெளியிற் போயினார்.

இஃதிப்படியிருக்க, அக்காட்டிலோர்புறத்தில் ஒரு பர்ணசாலையில் சிவகோசரியார் என்றொரு முனிவர் வாசஞ்செய்து கொண்டிருந்தார். சிவபக்தர்களில் அவருக்குச் சமானமானவர்கள் மிகவு மருமை. அவர் தினந்தோறும் விடியற்காலத்தில் ஸ்நானம்செய்து வேதோக்தமாயுள்ள கர்மங்களைச் செய்து திண்ணனார் கர்த்தனை சுவாமியினிடம் சென்று பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து அவருக்குச் சாஸ்திரப்பிரகாரம் அபிஷேகம் செய்வித்து அவருக்கு மலர்களைச்சூடி வெகுநேரந் தோத்தரித்து, அதி பக்தியினால் அவரை மிகவு மருமையாய்ப் பிரிந்து தன்னாச்சிரமம் சேருவது வழக்கம்.

அங்ஙனமே இத்தினமும் சிவகோசரியார் ஸ்நானம் முதலிய கர்மங்களை நிவர்த்தித்துப் பகவத்தரிசனார்த்தமாய் வந்தார். வந்ததும் சுவாமியின் அருகே, வெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு நடுநடுங்கி, கடவுள் ஸன்னிதியில் இவ்வித அநுசிதத்தை யாரோ துஷ்டர்கள் செய்திருக்கிறார்கள் என்று கோபமும் விசனமுமடைந்து மனதையொருவிதமாய்த் தேற்றிக்கொண்டு இறைச்சியையும் எலும்பையும் எடுத்தப்புறமெறிந்து, மந்திரத்தினால் ஸ்தல சுத்திசெய்து மறுபடியும், ஸ்நானம் செய்துவந்து, விதிப்படி ஈசருக்குத் திருமஞ்சனம் செய்வித்துப் புஷ்பங்களாலர்ச்சித்துத் தான் கொண்டுவந்த கந்தமூலபலாதிகளை யவர்க் கர்ப்பணம் செய்து அவரைத்துதிசெய்து "இனியொரு முறையாயினும் இவ்வித அநுசிதங்களை யாரும் உம்பாற் செய்யாமலிருக்கும் வண்ணம் அநுக்கிரகிக்க வேண்டும்" என்று வேண்டிச் சன்னிதியை விட்டாச்சிரமத்திற்குச் சென்றார்.

இது நிற்க, வேட்டையாடச் சென்ற திண்ணனார் பக்குவஞ் செய்த இனிய யிறைச்சியிற் கொம்புத் தேன் பிழிந்து கலந்து அதையோர் கையிலேந்தி முன்போலவே வாயில் நீர் முகந்து கொண்டு தலைமயிரில் மலர்களைச் சொருகிச் சுவாமி ஸன்னிதானம் சேர்ந்தார். உடனே வாய் நீரால் அவர்க்கு அபிஷேகம் செய்து மயிரிலுள்ள புஷ்பங்களை யவர் தலையிற்சாத்தி யிறைச்சியை யுண்பித்துப் பக்கத்தில் அதிக அன்புடன் பிரியாமல் நின்றார். அஸ்தமித்ததும் வில்லும் அம்பும் கைப்பற்றிக் காவலிலமர்ந்தார்.

இவ்விதம் திண்ணனார் பிரதி தினமும் செய்து வந்தார். சிவகோசரியரும் தினந்தோறும் வந்து மனங்கசிந்து இறைச்சியை யெடுத்தெறிந்து ஸ்தல சுத்திசெய்து சைவாகமப்படி ஈசனை யர்ச்

சித்து 'இந்த அனுசிதம் இனி நிகழாமல் அருளல் வேண்டும்' என்று பிரார்த்தித்து வந்தார். இப்படி ஐந்துநாட்கள் கழிந்தன. ஐந்தாநாளிரவில் சிவகோசரியர் மனத்துயரை நீக்கும் எண்ணத்துடன் அவர் முன் சுவாமி ஸ்வப்னத்தில் தோன்றி 'குழந்தாய்! நீ எவனிடம் மனங்கசிந்திருக்கிறாயோ அவன் என் அன்பின் ஓர் உருவம். அவனுக்கு என்னிடமிருக்கும் பிரேமைக்கு ஈடெவ்வுலகிலுமில்லை. அவன் சரியைகள் எல்லாம் எமக்கு இதமானவையே. பூக்களை நீக்க எம்தலையில் அவன் வைக்கும் செருப்படி நம் குமாரன் சுப்பிரம்ஹண்யனது அடியைக் காட்டிலும் அதிக வானந்தத்தை எனக்குண்டாக்குகிறது. அவன் உமிழும் நீர் அவன் அன்பின் பெருக்கு. கங்கை முதலிய தீர்த்தங்களும் அதற்குச் சமமாக மாட்டா. அவன் தன் மயிரிலே சொருகிவந்து எனக்குச் சாத்தும் புஷ்பங்களின் மணம் வேறெவற்றிற்கு மிராது. என்னிடமவனுக்கிருக்கு மன்பினாலிறைச்சியை யவன் முதலில் சுவைபார்த்து இனியதைமட்டும் நமக்குக்கொடுப்பது யாகங்களில் ஆஹுதி செய்யப்படும் ஹவிஸ்ஸிலும் அதிக பலனுடையது. அவன் என்முன் நின்று அந்தஃகரணசுத்தியாய் அளவிலாத அன்புடன் பேசும்பேச்சுகள் ஸாமகானத்திலும் இனியவை. நாளையதினம் நீ என் பின் மறைந்திருந்தால் அவன் ஸ்வபாவகுணங்களை நன்றாய் அறிவாய்' என்று சொல்லி மறைந்தார்.

சிவகோசரியரும், 'ஈசுவரன் கிருபை எவர்க்கிருக்கின்றதோ அவரே தன்யர். எனக்கு யாதொரு யோக்கியதையுமில்லை' என்று ஆச்சரியமும் விசனமுமடைந்து மறுநாள் எப்போதும்போல் காளத்தீசனையர்ச்சித்து அவர்பின் மறைந்திருந்தார். திண்ணனார், இறைச்சி, நீர், புஷ்பம் முதலியவை எடுத்துக்கொண்டு மலையேறவும் சில துர்ச்சகுனங்களைக் கண்டு "ஆ கெட்டேன். என் கண்மணியான சுவாமிக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ" என்று மனங்கலங்கி வெகு வேகமாயோடிவந்தார். இச்சமயத்தில் திண்ணனாருடைய அன்பு முழுதும் சிவகோசரியருக்குக்காட்ட எண்ணங்கொண்டு காளத்தீசர் தமது வலக்கண்ணினின்றும் இரத்தம் சொரியப்பண்ணினார். இதைக் கண்ட திண்ணனார் வாய் நீர் சிந்த, கையிறைச்சி நழுவ, அம்பும் வில்லும் கீழேவிழ, தலைமயிரிலுள்ள மலர்கள் அலையப் பதைபதைத்துக்கண்ணீர் விட்டுக்கொண்டு 'ஹா' என்றலறிக் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தார். மூர்ச்சைதெளிந்து சுவாமியினருகிற்போய்க் கண்ணினின்றும் பெருகும் இரத்தத்தைப் பலமுறைதுடைத்தும் பெருக்கு நிற்காமைகண்டு செய்வதொன்று மறியாமல் பெருமூச்செறிந்து இத்துன்பத்தை விளைவித்தது 'யாரோ துஷ்டர்களோ அல்லது துஷ்டமிருகங்களோ! அவர்களையும் மிருகங்களையும் இக்கணமே துண்டம் துண்டமாக்குவேன்' என்று காடெங்கும் சுற்றி



யலைந்து எவரையும் காணாமலிருக்கையில் பெருகும் உதிரத்தை நிறுத்தும் பச்சிலைகளைத் தெரிந்தெடுத்துச் சுவாமி சன்னிதானம் சேர்ந்து அவற்றின் சாற்றை யவர்கண்ணிற் பிழிந்தும் ரக்தப்பிரவாஹம் நிற்காமையைக் கண்டு அடக்கமுடியாத விசனத்துடன் ஈசனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிந்து வாய்விட்டழுவார்.

இவ்விதம் இவர் தயங்கி நிற்கும்போது 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' என்னும் பழமொழி அவருக்கு ஞாபகம் வந்தது. உடனே 'என் கண்ணை நோண்டிச் சுவாமியின் கண்ணிலப்பி இரத்தத்தை நிறுத்துவேன்' என்று தன்னொரு கண்ணை யம்பினால் பெயர்த்துச் சுவாமியின் கண்ணில் அமிழ்த்தியதும் இரத்தம் உடனே நின்றுவிட்டது. திண்ணனாருக்குண்டாகிய ஸந்தோஷ மிவ்வளவென்று சொல்லிமுடியாது. இப்படியிருக்க இவர் அன்பை யின்னமும் நன்றாய்ப் பஹிரங்கப்படுத்த வேணுமென்று நினைத்துத் திருக்காளத்தீசர் தன் இடக்கண்ணினின்றும் இரத்தம் பெருகும்படி செய்தார். இதைக்கண்ட திண்ணனார் துன்பக்கடலிலழுந்தியும் சற்றுதெளிந்து நான் "மருந்து கண்டுகொண்டேன். ஏன் ஏங்கவேணுமென்று உத்ஸாஹத்துடன் எழும்பிக் குதித்துத் தன் மற்றொரு கண்ணையும் நோண்டிச் சுவாமி கண்ணில் அப்ப நினைத்து, அவ்விதம் செய்த பிறகு சுவாமியின்கண் இவ்விடத்தில் இருக்கின்றது என்று தெரியும் பொருட்டு ஒரு செருப்புக்காலை அவர் கண்ணின் அருகிலே ஊன்றிக்கொண்டு தன் மற்றொரு கண்ணையம்பினால் பெயர்க்க யத்தனிக்கும்பொழுது கருணைக்கடலான ஈசன் அதைச் சகிக்காதவராய் வாய் திறந்து "கண்ணப்பா! வேண்டாம்! ஸாஹஸம் வேண்டாம்" என்று அவர் கையைப் பிடித்து அவரைத்தழுவியாட்கொண்டதைப்பார்த்த சிவகோசரியர் அத்தியந்த ஆச்சரியமடைந்து பகவானையும் கண்ணப்பரையும் ஏத்தி வணங்கி நின்றார்.

அநேகமாயிரம் ஸாதனங்களினால் பார்க்க அரிய பரமபுருஷனை நம் கண்ணப்பர் ஆறு நாளுக்குள்ளே பெருகிய அன்பினாலே தன் உயிர்த்தோழனாய்ப் பெற்றுத் தன் நிஷ்களங்க பக்தியினால் அவர் பிரேமைக்குப் பாத்திரராய் ஈசனது வலப்பக்கத்தில் நின்று அவரைத்தொழும் பாக்கியம் பெற்றார். ஈசனிடம் பிரேமையென்பது இது வல்லவா?

# ஸ்திரீ தர்மம்.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் மேனாட்டு நாகரிகம் நம் தேசத்தில் பரவி வருவதன் பயனாக நம்மவரில் அனேகர் மேனாட்டாரைப்போல் நடை உடை பாவனைகளை அனுஸரிக்கலாயினர். இஃது இதுவரையில் புருஷர்களிடமே காணப்பட்டதாயினும் சிலகாலமாக நம் ஸ்திரீகளிடமும் தோன்றலாயிற்று. அதன் பலனாக, பலர், ஸ்திரீகளும் திரவியம் ஸம்பாதிக்க வேண்டுமென்றும், சட்ட சபைகளில் அங்கத்தினராகவும், நியாய ஸ்தலங்களில் நியாயவாதிகளாகவும் இருக்க வேண்டுமென்றும் நம் நாட்டில் பல இடங்களிலும் பிரசங்கங்கள் செய்வதுடன், அவை நடைபெறும் பொருட்டு துரைத்தனத்தார் தக்க சட்டங்கள் ஏற்படுத்தும்படி வற்புறுத்தவும் ஆரம்பித்து விட்டனர். சென்ற ஜுலை மாதத்துக் கடைசியில் பம்பாய் சட்ட நிரூபண சபையில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் தேசாய் என்பவர் ஸ்திரீகளுக்குச் சட்ட சபை அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமை வேண்டுமென்று ஒரு பிரேரேபணை கொண்டு வந்தார். ஸ்திரீகளுக்கு அளவு கடந்த சுதந்திரம் கொடுத்திருக்கும், அங்கிலேய மெம்பர்களே மேற்படி பிரேரேபணையை எதிர்த்துப் பேசினர்; ஆயின் நம்மவரில் அனேகர் மேற்கூறிய பிரேரேபணையை அங்கீகரித்துப் பேசியதே நம் நாட்டில் ஸ்திரீ தர்ம விஷயத்தில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபிப்ராயத்தைத் தெரிவிக்கின்றது. இவ்விஷயத்தைத் நிரவிசாரிக்குமிடத்து, இம்மாதிரி விஷயங்கள் நம் தேசம் தற்காலத்தை விடத் தாழ்ந்த ஸ்திதியடைவதற்கு வழிகளே தவிர முன்னேற்றமடையும் மார்க்கங்களைக் காட்டவில்லை என்பது தெளிவாகின்றது. இதற்குத் திருஷ்டாந்தமாக, ஆண்பெண் இருபால்ருக்கும் ஸமத்வம் கிடைத்திருக்கும் ஐரோப்பாவின் தற்கால க்ஷீண தசையை ஒருவாறு காட்டலாம். அங்கு ஏற்பட்டிருக்கும் ஸமத்வ உணர்ச்சியால் உண்டாயிருக்கும் கெடுதிகள் பல. இருபாலருக்கும் இருக்க வேண்டிய இயற்கைக் குணங்களும், தர்ம நிலையும் குலைந்து விட்டதனால், ஒருவர்மீது ஒருவருக்கு வெறுப்பும், போட்டியும், உயர்வு தாழ்வு என்பதைப் பற்றின தர்க்கமும் குதர்க்கமும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இச்சச்சரவில் தம் ஸ்வதர்மம் எதுவென்பதை இருவரும் மறந்து, இருவரும் மனமொத்து நடத்த வேண்டிய இல்லற தருமத்தை அறவே கைவிட்டனர். இவ்வித நிலைமைக்குக் காரணம் அவர்களது கல்வியும், கல்வி முறையுமேயாகும்.

ஆனால் நம் ஸ்திரீகளுக்குக் கல்வி அநாவசியமென்று கூற நாம் முன் வரவில்லை. ஸ்திரீகளுக்குக் கல்வி மிகவு மவசியம். அன்றேல் நாடு தாழ்மையடையுமேயன்றி மேன்மையடையாது. ஆனால் அக்கல்வி நன்மை புரிவதாயிருக்கவேண்டும். ஸ்வதர்மங்களைச் செய்ய உதவுபவையா யிருக்கவேண்டும். ஸ்திரீக்கு இயற்கையாலும், பெரியோர் அனுஷ்டான முறையாலும் ஏற்பட்ட கடமைகளான குழந்தைகளைத் தகுந்த வழியில் செலுத்தல், வாழ்க்கையின் லக்ஷியங்களை எடுத்துக் காட்டல், இல்லற தருமத்தை நடத்தல், ஸத்விஷயங்களில் தனது புருஷனுக்குத் தக்க உயிர்த்துணைவியா யிருத்தல், பகவத் பக்திகொண்டு இருவரும் மோக்ஷஸாம்ராஜ்யத்தை யடைவதற்குத் தகுந்த வழியைத்தேடல் ஆகிய இவைகளுக்குக், காரணமாயும் உதவியாயும் இருக்கவேண்டும்.

மேலும் ஐரோப்பாவில், ஸமூக ஸேவை—அதாவது ஜனங்களுக்கு உதவிசெய்வது—துரைத்தனத்தாராலேயே செய்யப்படுகின்றது. ஆனால் நம் தேசத்திலோ ஒவ்வொரு இல்லத்திலும் ஸ்திரீகளே ஏழைகளுக்கு அன்னமிடுகின்றனர்; தாகத்திற்கு நீர் மோர் முதலியன கொடுக்கின்றனர்; வஸ்திரம் பண்டம்முதலியவைகளைத் தானஞ் செய்கின்றனர். இவை தொன்று தொட்டு வழங்கி வந்ததோடு இக்காலத்திலும் நடைபெறுவதை நாம் காணலாம். சுயநலம் பாராட்டுவதே பெரிதாகக் கொண்டாடப்படும் இக்காலத்திலேயே நம் ஸ்திரீகள் இவ்வளவு நன்மை புரிவாராயின், முற்காலங்களில் தான தர்மங்கள் எவ்வளவு சிறப்புடன் ஸ்திரீகளால் நடத்தப்பெற்றிருக்கும் என்பது நாம் கூறாமலே விளங்கும். மேலும், பெண்மணிகளுக்கிருக்கும் குணங்களுக்கெல்லாம் மிகவும் மேலானதாய் விளங்கும் பதிசிச்ருஷை இத்தேசத்தில் விளங்கியதுபோல் வேறெங்கும் அனுஸரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. குடும்பத்தில் ஸகிக்கமுடியாத கஷ்டங்கள் எவ்வளவிருந்தாலும், புருஷன் பரமதரித்திரனாயிருப்பினும், தீராத நோயால் துன்பப்படுபவனாயிருந்தாலும் அவனுக்கு ஸேவை புரிவதுதான் உத்தம ஸ்திரீயின் கடமை என்பது நம் தேசத்தில் தான் சிறுமிகளுக்கு நேரிடையாகப் போதிக்கப்படுகின்றது. ஜனகனது புத்ரீயான ஸீதாதேவி, அசோகவனத்தில் ராக்ஷஸிகளின் நடுவில் அவர்களுடைய கடுஞ் சொற்களைக் கேட்டுச் செவிநொந்து, மனந்துடித்து, கண்களில் நீர் சொரியக் கூறிய வார்த்தைகளை அறியாதாரும் உண்டோ? ராவணனது ஏவலால் ஸீதையைத் துன்பப்படுத்திவந்த அந்த ராக்ஷஸிகள், தம்மரசனை மணம் புரியும்படி ஸீதாதேவியை ஸாம பேத தான தண்டமென்னும் சதுர்வித உபாயங்களாலும் முயன்றபோதும், பதிபக்தி குன்றாது, அவ்வரக்கிகளை நோக்கி, "ஹே பாதகிகளே! என்னுடைய புருஷர்

தரித்திரரும், ராஜ்யத்தை யிழந்தவருமாய் இருப்பதால் நான் அவரைக் கைவிட வேண்டுமென்று நீங்கள் போதித்தீர்களல்லவா? என் வார்த்தைகளைக் கேளுங்கள்: என்னை மணம் புரிந்தவர் தரித்ரராயினும் துர்ப்பலராயினும் ராஜ்யம் இழந்த துர்ப்பாக்கியராயினும் அவரே நான் பூஜிக்கத் தகுந்த ஸத்குரு; ஏழையாயினும் அவரே எனக்குப் பிராணபந்து; குரூபியாயினும் அவரே எனக்கு மன்மதன்; ஆகையால் சூர்யனைத் தொடருகிற சுவர்ச்சலா தேவிபோல் நான் எனக்கு மாலையிட்ட ஸ்ரீமானைப் பின்தொடருவேன். அவரே எனக்குப் பூஜ்யர். அவரே எனக்குக் குலதெய்வம்; அவரைத் தவிர வேறெவரையும் மனத்திலும் ஸ்மரியேன். ஆகையால் உங்கள் அரசன் மூன்று லோகங்களையும் ஆள்பவனாயினும் நான் அவனுக்குப் பத்னியாகேன்" என்று கம்பீரமாய் உரைத்தனள்.

மேலும் ஸீதாபிராட்டியார் ராக்ஷஸிகளுடைய ஹிம்ஸையால் அன்ன பானமின்றி நித்ரையில்லாது அவஸ்தைப்படும் ஸமயத்தில் ராமதூதனாகவந்த ஹனுமார் அவளைக்கண்டு ஸ்ரீராமனது ஆக்ஞைப்படி அவளிடம் எல்லாம் கூறி, கடைசியில் வினயமாக, "அம்மணி, தாங்கள் என் முதுகின் மேல் ஏறிக்கொள்ளுங்கள். நானிப்போதே தேவரீரை ஸ்ரீராமபிரான் ஸன்னிதியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்று சொன்ன ஸமயத்தில், அது தகாதென்று, லோகமாதாவான ஜானகி பல காரணங்களை எடுத்துக்காட்டி, "நான் என் நாதனான ஸ்ரீராமனது சரீரத்தைத் தவிர அன்னிய புருஷன் எவனுடைய சரீரத்தையும் ஸ்பர்சியேன்" என்று கூறிய மொழிகள் ஸ்ரீமத் ராமாயணம் வாசித்தோர் அனைவருக்கும் நன்கு தெரியும். இப்பேர்ப்பட்ட பதிவ்ரதா தர்மத்தில் திடசித்தமும், கஷ்டகாலங்களில் பொறுமையும் புண்யபூமியாகிய இத்தேசத்திலின்றி வேறெத்தேசத்திலுண்டு? பாக்யவதிகளான சசி, அருந்ததி, லோபாமுத்ரை, ஸுகன்யை, ஸாவித்ரி, ஸ்ரீமதி, சேசினி, தமயந்தி, இந்துமதி முதலிய பதிவிரதா உத்தமிகள் தங்கள் தங்கள் பர்த்தாக்களை அனுஸரித்து அழியாப்புகழை நிலைநாட்டினதை அனைவரும் அறிவர்.

இந்தியா தேசத்தில் ஸ்திரீகள் அடிமைகளைப் போல் நடத்தப்படுத்துகின்றனர் என்றுசொல்வாரும் உண்டாகையால் அவர்கள் கூறுவது எவ்வளவு உண்மை என்பதைச் சற்றுக் கவனிப்போம். நம் சாஸ்திரங்களில் கூறப்பட்டபடி ஸதிபதிகள் ஈருடலும் ஒருயிரும் பெற்றவர்கள்; இல்வாழ்க்கையில் செய்யப்படும் ஸகல கார்யங்களையும் இருவரும் ஒன்று சேர்ந்துதான் செய்யவேண்டும். கிருகஸ்த தர்மத்தில் இருவருக்கும் ஸமபாகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு காலமும் அவர்கள் அடிமைத்தனத்திற் குட்பட்டவர்களன்று,



வேதங்களில் தேர்ந்த ஞானமுற்றவர்களான கார்க்கி, மைத்ரேயி முதலியஸ்திரீகள் வேத சாஸ்திரத்தை முற்றிலும் உணர்ந்தறிந்தவர்கள். ஜகத்குருவா யவதரித்த ஸ்ரீமத் சங்கராசாரியருக்கும் மண்டன மிசிரருக்கும் தர்க்கம் நடந்தபொழுது மத்பஸ்தமாக இருந்து வாதங்களை நடத்தியது ஓர் ஸ்திரீயன்றோ? அப்படியிருக்க ஸ்திரீகள் புருஷர்களுக்கு அடிமைகள் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? நம் தேசத்திற்கு இக்காலத்தில் அவதார புருஷராய் விளங்கின ஸ்ரீராமகிருஷ்ணருக்கு உபதேசித்தருளியதும் ஒரு ஸ்திரீ தானே! பின்னும் கூறுமிடத்து ஜனகனென்னும் ராஜனுடைய ஸபையில் ஸுலபை என்னும் நாரீமணி யோகசாஸ்திரத்தில் சிறந்தவளாய் இருந்தாளென்பது மகாபாரதத்திலிருந்து தெளிவாய் விளங்குகிறது. மேற் கூறியவைகளிலன்றி ராஜ்யாதிகாரம் நடத்தி, ஜனங்களைப் பாதுகாப்பதிலும் சிறந்தவர்களாய் ஸ்திரீகள் விளங்கினர் என்பதற்கு ஈசுவர பக்தியிலும், அடக்கத்திலும் சிறந்த அஹல்யாபாய் என்னும் மஹாராஷ்ட்ரதேசத்து அரசியின் வாழ்க்கையே ஓர் நிதரிசனமாகும். இவ்வம்மணி, தமது அரசாட்சியையும் ஜீவியத்தையும் சிலாகித்து எழுதிய நூலை ஓர் பண்டிதர் கொண்டுவர, அந்நூலைக் கண்ணெடுத்துக் கூடப்பாராது கிழித்தெறிந்தனர். இதுவன்றோ உண்மை யடக்கம்!

இத்தகைய நற்குண நற்செய்கைகளில் சிறந்து விளங்கும் ஸ்திரீ ரத்னங்களே நம் தாய் நாட்டை என்றென்றும் அலங்கரிக்க வேண்டு மென்பதே நமது பிரார்த்தனையாயிருத்தல் வேண்டும். ஆகையால் விட்டில் பூச்சிகள் போல மேனாட்டு நாகரிகத்தில் விழுந்தழியாமல், நமது சிறந்த ஸநாதன தர்மத்தைப் பின்பற்றுவோமாக.

(தொடரும்).

# ஞானிகளும் அவதார புருஷர்களும்.

ஸ்ரீமத் ராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள்.

(சென்னை ராமகிருஷ்ண மடத்தில் நடந்த ஸம்பாஷணை.)

சிஷ்யர்:—வேதங்களை யெழுதியவர்கள் ஈச்வர அவதாரங்களா ?

ஸ்வாமி:—அவர்கள் ஈச்வர ஸ்வரூபத்தை யுணர்ந்தவர்கள். ஈச்வர ஸ்வரூபத்தை யறிந்தவன் ஈச்வரனே யாதலால்; அவர்கள் ஈச்வரரூபிகளே. அவர்கள் பரிசுத்தமே உரு வெடுத்தவர்கள்; ஆதலாற்றான் தத்துவத்தை யவர்கள் உணர்ந்தார்கள்.

சிஷ்யர்:—ஈச்வரன் செய்யவேண்டிய உபதேசம் செய்யப்பட்டு விட்டதாலும், பூலோகவாஸிகளுக்குத் திரும்பவும் உபதேசிக்க வேண்டிய அவசியம் இல்லை யென்பதாலுமா முன்காலத்து த்ரிகாலஞானிகளைப் போன்றவர்கள் இக்காலத்திலில்லை.

ஸ்வாமி:—ஈச்வரன் எப்பொழுதும் தான் சொல்லவேண்டியவற்றை வெளியிட்டுக்கொண்டே யிருக்கிறார். ஆனால் அவற்றைக்கேட்பவரொருவருமில்லை. நாம் சுவர்களைப் போலிருக்கிறோம். யாராவது சுவர்களுடன் பேசுவார்களா? அதேமாதிரி தமஸ்ஸினால் ஆக்ரமிக்கப்பட்டு ஞானமிழந்திருக்கும் நம்முடன் ஈச்வரன் பேசுவதில்லை. அவருடைய உபதேசங்களை யுணரும் சக்தியைப் பெறுவோமாகில், அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறாரென்பது நமக்கு விளங்கும்.

முற்காலத்து ரிஷிகளின் ஆச்ரமவாஸம் மிகவும் விந்தையை யுண்டாக்குகின்றது. அவர்களின் ஆச்ரமங்கள் காடுகளினிடுக்குகளிலிருந்தன. கிராமங்களிலும் அநேகர் வஸித்தனர். அவர்கள் உயர்ந்த நிலையிலிருந்தனர். சிறுகுழந்தைகளும் கூட ஆத்மஞானம் பெற்றவைகளாயிருந்தன. சாப்பாட்டுக் கவலையே அவர்களுக்குக் கிடையாது. தேசவரும்படியில் ஆறில் ஒருபாகம் இவர்களின் போஷணைக்காகச் செலவிடப்பட்டுவந்தது. அரசன் பணமாயளிக்காமல், தானியமாகக் கொடுப்பது வழக்கம். ஆகையால் தங்களுடைய முழுநேரத்தையும் அவர்கள் தியானத்திலேயே செலவிட்டு வந்தனர்.

ரிஷிபத்தினிகளோ, தங்கள் புருஷர்களுக்குச் சமமான ஞானம் பெற்றவர்களா யிருந்தனர். யுவகர்கள் ஸாமான்யஸுகம் பெற அநுமதி பெற்றிருந்தனர். ஆனால், அவர்களும் குறிப்பிட்ட



சில வேலைகளைச் செய்யவேண்டியவர்களா யிருந்தனர். அவர்களுக்குத் தேவையான பொருள்கள் வெகு சிலவே. இப்பேர்ப்பட்ட ஞானிகள் ராஜஸபைக்கு எழுந்தருளினால், அரசன் உடனே அவரை எதிர்கொண்டழைத்து, தூசிபடிந்த அவருடைய பாதங்களைச் சிரமேல் வைத்துக்கொண்டு, அவரிடம் உபதேசம் பெறுவது வழக்கம். அக்காலத்தில் அவர்களுக்கு அவ்வளவு கௌரவமிருந்தது.

சிஷ்யர்.—ஈச்வரனுடன் ஒன்றுபட்ட இந்த ரிஷிகளுக்கும் ஈச்வரனின் அவதாரங்களுக்கும் வித்யாஸமென்ன?

ஸ்வாமி:—ரிஷிகள் தூய்மையின் அவதாரங்களே. அவர்கள் தத்துவத்தை யறியும் பொருட்டு எல்லாவற்றையும் துறந்த ஸந்நியாஸிகள். எல்லோரையும் ஸந்நியாஸிகளாகும்படி உபதேசிப்பார்கள். ஆனால் அவதாரபுருஷரோ,சிலர் மட்டுமே ஸந்நியாஸிகளாகத் தகுந்தவர் என்று கண்டுகொள்வார். அதேமாதிரி, கிருஹஸ்தனாயிருக்கத் தகுந்தவனை கிருஹஸ்தாச்ரமத்தைக் கைப்பிடித்தொழுகும்படி சொல்வார். அனேகவாயிரம் கிருஹஸ்தர்களில் ஒருவேளை ஒன்றல்லது இரண்டு பேர்களைத் தான் ஸந்நியாசியாகும்படி தூண்டுவார். ஒவ்வொரு மனுஷனும் எந்தெந்த ஆச்ரமத்தை யநுஸரிக்க வேண்டியவனென்று கண்டுகொள்ளும் சக்தியவருக்குண்டு. அவதாரபுருஷர்கள் தத்துவமான பரம்பொருளே. அவர்களுடைய பாதத்தில் விழுந்து அவர்களிடம் உபதேசம் பெறுவதே தத்துவத்தையறிய ஸாதனமாகும்.

எல்லா மதங்களும் ஸந்நியாஸத்தையே உபதேசிக்கின்றன. ஸந்நியாஸியாகவேண்டுமென்பதே அவைகளின் முக்கிய உபதேசம். "எல்லாவற்றையும் துறந்து என்னைப் பின்பற்று" என்று இயேசுநாதர் கூறுகின்றார். "அல்லாமட்டுமே கடவுள். அவரை மட்டுமே பஜி" என்று முஹமத் கூறுகிறார். ஸ்ரீபுத்தபகவான் "எல்லாக்கர்மத்தையும் ஒழி; அது ஒன்றுமட்டுமே மோக்ஷத்திற்கு ஸாதனம்" என்று கூறியுள்ளார் "கேடேயாகிய அஹ்ரிமானைவிட்டு ஸத்தாகிய அஹுரமஸ்டாவைக் கைப்பற்று" என்று ஸொராஸ்டர் சொல்லுகிறார். உபநிஷதங்களும் இதையே கூறுகின்றன. மோக்ஷத்தை யடைய ஸகலத்தையும் விட்டுவிடவேண்டும். ஸந்நியாஸமே வேதாந்தத்தின் ஆரம்பம்.

வேதங்கள் வெறும் பாட்டுகளல்ல. ரிஷிகள் கண்டும் அனுபவித்தும் அறிந்த வஸ்துக்களின் விவரமேயல்லாது வேறல்ல. உபநிஷத்துக்களை விட ஆச்சரியத்தை யுண்டாக்குகின்ற புஸ்தகங்கள் கிடையா. அவைகளைப்படிப்பதற்கு மட்டுமாவது ஸம்ஸ்கிருதத்தைக் கற்கவேண்டும். ப்ரபஞ்சத்தின் உண்மைகளை அவை தெரிவிக்கின்றன. ஒவ்வொரு ச்லோகமும் ஒரு ரிஷியின் அநுபவத்தாலுண்டானது.

மேனாட்டில், ஜனஸமூகத்தின் முன் பேசுவதே மதமாகக் கொள்ளப்படுகின்றது. நம் நாட்டிலோ, ஒரு புருஷர் மற்றொருவர் காதில் சில வார்த்தைகளை யுபதேசிக்கின்றார். இந்த வார்த்தைகளே ஹிந்துவுக்கு மதமாகின்றது. மனிதன் மந்திரத்தின் மூலமாய் ஆஸ்திகனாகிறான். மந்திரத்தினாற்றான் ஞானமுண்டாகின்றது. ஒருவனுக்குபதேசிக்கப்பட்ட மந்திரம் பிறருக்குச் சொல்லக்கூடாத ரஹஸ்யமாகும். புருஷன் தன்மனைவிக்காவது, மனைவி தன் புருஷனுக்காவது வெளியிடக் கூடாதது அந்த மந்திரம். மனிதனுக்கு ஸொந்தமான பொருள் அது வொன்றே. இந்தக்காரணத்தை முன்னிட்டுத் தான் ஸ்வாமி விவேகாநந்தரும் எவ்வளவு மனிதரிருக்கின்றனரோ, அவ்வளவு மதங்களிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அவருடைய திருவாக்கு உண்மையானதே. ஒரே சொக்காய் இருவருக்கு ஸரிப்படாததுபோல, ஈச்வரனின் ஒரு ரூபம் எல்லோருக்கும் இஷ்டமானதாயிருக்காது. கடவுளின் ஒரு ரூபத்தைமட்டுமே எல்லோரும் வணங்கவேண்டு மென்பது மேனாட்டுக் கொள்கை. தனக்குப்ரியமான தேவதையை மனிதன் நம்நாட்டில் பூஜிக்கிறான். ஆதலாற்றான் நாம் முப்பத்து முக்கோடி தேவதைகளிருக்கின்றன ரென்று சொல்லுகிறோம். ஈச்வரனின் எந்த ரூபம் தன் சிஷ்யனுக்குத் தகுந்ததென்று கண்டு, அந்த ரூபத்தோடு கூடிய ஈச்வரனைத் தன் சிஷ்யனுக்களிப்பவர் ஸத்குருவேயாவர்.

# சிருஷ்டி ஜாலம்

## பூமியின் உருவும் கதியும்.

> எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு—திருக்குறள்.

பூமி பந்துபோல் உருண்டை வடிவமுள்ள தென்பதைத் தற்காலத்தில் ஒவ்வொரு சிறுவனும் அறிவான். மேதாவிகள் உலக தத்துவத்தை ஆராய்ந்துணர்ந்து போதித்த பின்னர், அவைகளைக் கிரகிப்பது நமக்கு எளிதாய்த் தோற்றுவதால் அவ்வுண்மைகளை முதலில் கண்டுபிடிப்பதும் அவ்வளவு எளிதா யிருந்திருக்குமென்றெண்ணுவது தவறாகும். தவிரவும் பிறர் கூறக் கேட்டதாலேயே உண்மைகளைச் சரிவர உணர்ந்து விட்டதா யெண்ணுவதும் தவறு. இவ்வுண்மைகளை முதன் முதலில் ஆராய்ந்தறிந்த மகான்களுக்குண்டான பேரானந்தம் நமக்கேன் அவைகளைக் கற்கும் பொழுதுண்டாவதில்லை? நாம் அவைகளைச்சரியாய் அறியாததே காரணம். வாழ்க்கையின் பயன் ஈசுவர சிருஷ்டியின் பெருமையை உணர்ந்துய்வதேயாம். ஆனதுபற்றி நாம் உண்மையை உயிரைப்போல் நேசித்து, அதன் பெருமையை இடைவிடாது ஆராய்ந்து, அதைப் பற்றிய சிந்தையி லாழ்ந்து, அதனாலுண்டாகும் ஆனந்த நிலையை அடையக் கருதவேண்டும். இப்பேரானந்தத்தில் ஆழ்ந்தோரே மேலோர்.

பண்டைகாலத்தில் பூமி தட்டையானதென்று அநேக ஜனங்கள் நம்பிவந்ததாய்த் தெரிகின்றது. இப்பொழுதும், கற்றறியாமாந்தர் பலர் அவ்வாறே நினைக்கின்றனர். ஏனெனில் மந்த புத்தியுள்ளவர்கள் தங்கள் இந்திரிய உணர்ச்சிகளை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு தோற்றங்களையே உண்மைகளாய்ப் பாவிக்கின்றனர். ஆனால் சிறிது யோசித்தால் உண்மை விளங்கும்.

கடற்கரை யோரத்தில் நின்று நம்மை விட்டகலும் ஓர் கப்பலை நோக்குவோமானால், முதலில் அடிப்பாகமும் பின்பு சிறிதுசிறிதாய்ப் பாய்மரமும் மறைவதைக் காண்கின்றோம். பூமி உருண்டிருந்தால் தான் எல்லாவிடங்களிலும் இதே தோற்ற முண்டாகக் கூடு மென்று நிர்ணயிக்கலாம்.

நம்மைச்சுற்றிலும் வானம் சிறிது தூரத்துக்கப்பால் பூமியைத் தொடுவதாய்ப் புலப்படுகின்றது. இவ்வட்டத்துக்குள்ளுள்ள பொருள்கள் மட்டுமே நமக்குத் தெரிகின்றன, அப்பாலுள்ளவை தெரிய

வில்லை. ஆனால் ஓர் குன்றின்மேற் செல்வோமானால் அப்பாலுள்ள பொருள்களும் தென்படுகின்றன. முற்கூறிய பிரகாரம் பூமி உருண்டையாயிருந்தாற்றான் இவ்வாறிருக்க முடியும்.

நாம் வடதேசங்களுக்குச் செல்வோமானால் துருவ நக்ஷத்திரம் உயர ஏறித்தோற்றுகின்றது. மத்திய ரேகைக்கருகில் வரவரக் கீழிறங்கிவந்து, மத்திய ரேகைக்குக் கீழ்ச்சென்றால் மறைந்தும் போகின்றது. துருவ நக்ஷத்திரம் அசைவற்றிருந்தும் நமக்கு அவ்வாறு இடம் மாறிக் காண்பதற்குக் காரணம் பூமி வட்டமாயிருப்பதே.

பூமி தட்டையாயிருந்தால் பூமண்டலம் முழுவதும் ஒரே காலத்தில் இரவு பகல்கள் ஏற்படவேண்டும். நமக்குப் பகலாயிருக்கும்பொழுது, அமெரிக்காவில் இரவாயிருக்கிறதென்பதை உணர்வோம். பூமி உருண்டையாயிருப்பதாலேயே சூர்யோதயம் மேல் கிழக்காகயுள்ள இடங்களுக்கு வெவ்வேறான காலங்களில் உண்டாகின்றது.

சந்திர கிரகண காலத்தில் சந்திரன் மேலுறையும் பூமியின் நிழல் வடிவம் வட்டமாயிருப்பதாலும் பூமி உருண்டையெனப் புலப்படும்.

பூமி உருண்டை வடிவமென்றாலும் துருவ தேசத்தில் சிறிதளவு தட்டையாயிருப்பதால், பூமி கிச்சிலிப்பழம் போன்ற உருவமுள்ளதென்று சிலர் கூறுவர். அது சரியல்ல. துருவத்துக்குத் துருவம் 7899 மைலும், மத்தியப்ரதேசத்தில் 7926 மைலும் பூமியின் குறுக்களவு. இந்த 27 மைல் குறைவு, பூமியின் கனத்தை நோக்கும்பொழுது ஒரு பொருட்டாகாது. ஆகையால் பூமி, டென்னிஸ் பந்துபோல் உருண்டையானது என்பது தவறாகாது.

இப்பந்துபோன்ற பூமி ஆகாயவெளியில் தங்க இடமின்றி நிற்க நேரமின்றி ஓயாது பம்பரம்போல் சுற்றுகின்றது. எவர் இப்படி இப்பிரமாண்டத்தை ஓய்வின்றி ஆட்டிவைப்பது? பூமி ஆகாயத்தில் ஓடித்திரிகின்றதெனபதும், ஸ்திரமாய் ஓரிடத்தில் நிற்பதில்லையென்பதும் நாம் சிறுவயது முதல் கேள்விப்பட்டுள்ளோமாயினும், சில நூற்றாண்டுகளுக்கு முன் பூமி அசைவற்றதென்றும் சூரியனும், பலலாயிரம் நட்சத்திரங்களும், பூப்ரதக்ஷிணம் தினந்தோறும் செய்வனவென்றுமே எல்லோருங் கருதிவந்தனர். இதற்குக் காரணம் பூமி சுழல்வதை நாம் நேரில் காண இயலாததேயாம். ஐரோப்பாவில் முதன் முதல் இவ்வுண்மையை உணர்ந்து தெளிவாய் ஜனங்களுக்கு எடுத்துக் கூறியவர் கேலில்யோ என்னும் வானசாஸ்திரி. இவ்வுண்மை, மதத்துக்கு விரோதமான கொள்கையென்று அக்காலத்துப் பண்டிதர்களால் கருதப்பட்டது. இது



பற்றி இவரை மதத்துவேஷியென்று பிராணஹிம்ஸை செய்தனர். "மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், ......கருமமே கண்ணாயினர்" என்றவாறு இவர் உண்மையை நிலைநிறுத்த உயிரையும் இழக்கத் துணிந்தார். இதனால் ஜன சமூகத்தில் தோற்றங்களை நீக்கி உண்மைகளை ஸ்தாபிப்பது எவ்வளவு கடினமானதென்பது நன்கு விளங்குகின்றது. பூமி சுழல்கின்றதென்பதற்கு இப்பொழுது பல முகாந்திரங்கள் கூறப்படும்.

நாம் புகைவண்டியிற் செல்லும்பொழுது, வெளியிலுள்ள மரம் செடிகள் எதிர்மார்க்கமாய் ஓடுவதாய்த் தோற்றமுண்டாகின்றது. இது எவ்வாறு பொய்யோ, அது போலவே சூரியனும் நக்ஷத்திரங்களும் தினந்தோறும் பூமியைச் சுற்றுவதாய்த் தோற்றுவதும் பொய். பூமியைவிட கோடானுகோடி மடங்கதிகமான நக்ஷத்திரங்கள் அனைத்தும் பூமியைச்சுற்றுவது துர்லபம் என்பது யோசிக்குங்கால் நன்கு விளங்கவில்லையா? யானைக்கூட்டங்கள் பூனையை ஆசிரயித்து நிற்குமா? ஆகையால் பூமி மேல் கிழக்காய்ச் சுற்றுவதாலேயே மற்றனைத்தும் கீழ்மேலாய் ஓடுவதாய்த் தோன்றுகிறது என ஊகிக்க வேண்டியிருக்கிறது. மேலும் சூரியனையும் இதர கிரகங்களையும் ஆராய்வோமானால் அவைகளின் வட்டவடிவமும், அவைகள் சுழல்வதும் வெளியாகின்றது. இதைக்கொண்டு பூமியும் சுழலவேண்டுமென்று ஊகிக்கலாம். பூமி துருவப்பிரதேசத்தில் தட்டையாயிருப்பதும் இவ்வாறு சுழல்வதாலேயே உண்டாயிருக்கக் கூடுமென்றும் நிர்ணயிக்கலாம். பூமி தன்னைத் தானே சுற்றாமல் சூரியனைமட்டும் சுற்றிவருவதாய்ச் சொல்வோமென்றால், அவ்வாறிருப்பின் வருஷத்துக்கொரு பகலும் ஒரு இரவுமே இருக்கும். பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவருவதற்குள் தன்னைத்தானே 365 தடவை சுற்றிக்கொள்வதாலேயே வருஷமொன்றுக்கு 365 இரவு பகல்கள் உண்டாகின்றன.

பூமி பம்பரம்போன்று வெகு வேகமாய்ச் சுற்றுவதாய்ச் சொன்னோம். சிறு பம்பரம் நிமிஷத்துக்குப் பன்முறை சுற்றுங்கால், இது ஒருமுறை சுற்ற 24-மணி நேரமாகின்றது. இதை எப்படி அதிவேகமெனக் கூறலாமென்றால், பூமத்திய ரேகையின் மேலுள்ள ஒரு வஸ்துவை கவனிப்போமானால் இது நன்கு விளங்கும். பூமியின் சுற்றளவு இருபத்தையாயிரம் மைல் ஆவதால், பூமத்திய ரேகையின் ஒவ்வொருஸ்தானமும், மணியொன்றுக்கு ஆயிரம் மைலுக்கு மேற்பட்ட வேகத்துடன் ஓடுவதாய் ஏற்படுகிறது. இது அதிகவேகமல்லவா? இவ்வாறு தன்னைத்தானே சுற்றுவதுமன்றி

ஒரு செகண்டுக்குப் பதினெட்டு மைல் வீதம் சூரியனைச் சுற்றியோடுகின்றது. இதன் வேகம் மனதால் இவ்வாறென்று எண்ண முடியாததாயிருக்கின்றது. புகைவண்டியல்லவோ நாம் மிக்க வேகமென்று கூறுவது? பூமியோ புகைவண்டியைப்போல் மூவாயிரம் மடங்கதிகமான வேகத்துடன் ஓடுகின்றது.

தாம் தாமிருக்குமிடத்தை உண்மையிலறிந்தோர் வெகு சிலர். நாம் வசிக்கும் உலகின் இயல்பு இவ்வாறென்று அறிதல் எளிதல்ல. ஆகாயக்கப்பலேறிச் செல்வதைத் தற்காலத்தில் பெரிய ஸாகஸமாய்க் கருதுகின்றோம். எல்லாம்படைத்த எம்பெருமானால் ஏவப்பட்டு மணியொன்றுக்கு 70,000 மைல் பறந்து செல்லும் பூமண்டலத்தில் ஏறி நாம் பறக்கும் அதிசயம் என்னே!

---

# வர்த்தமானம்.

கல்கத்தா ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம்.

அறம் பொருள் இன்பம் ஆகிய இம்மூன்றுக்கும் ஆதாரமான கல்வியை, பொருளில்லாரும் அடையுமாறு செய்யப்படும் தருமம் மிகச் சிறந்தது. மேலும் இக்காலத்து மேனாட்டுக் கல்வியுடன், நம் நாட்டுப்புராதனப் பயிற்சியையடையும்படி செய்வது பெரும் புண்யம். இவ்வெண்ணத்துடனே சென்னையில் ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம் இருப்பது போல கல்கத்தாவிலும் ஓரில்லம் சென்ற ஐந்து வருஷங்களாக நடத்தப்பட்டு வருவதையறிய சந்தோஷமடைகிறோம். அவ்வில்லத்தில் தற்காலம் ஏழு ஏழைமாணவர்கள், உண்ண உணவும் தங்க இடமும் பெற்றுவருகிறார்கள். இவர்கள் கல்கத்தாவிலுள்ள காலேஜுகளில் படிப்பவர்கள். இல்லத்தில் நம் சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். இவ்வில்லம் நடத்தப்படும் முறை மிகவும் சிலாகிக்கும்படியாக இருத்தலால் ஒரு மாணவன் அதை மிக்கவிரும்பி, பணம்கொடுத்துப் படித்து வருவதாக அறிகிறோம். மேற்படி இல்லத்திற்குச் சென்ற வருஷத்தில் வரும்படி ரூ. 3,937—7—0; செலவு ரூ. 2,560—15—6 கையிருப்பு ரூ. 1,376—7—6 ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஆதரவின் கீழ் நடத்தப்படும் இவ்வில்லத்திற்குதவி செய்வது நம்மவர் கடமையாகும்.



ஸ்ரீராமகிருஷ்ண சேவாசிரமம், ரங்கூன்:—பிணி, மூப்பு, சாக்காடுகளால் வருந்தும் அனாதைகளுக்கு உதவி புரிவதே சேவாசிரமத்தின் முக்கிய நோக்கம். கருணைவள்ளலாகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரது சிஷ்யகோஷ்டிகள் காசி, ஸஹாரம்பூர், பிருந்தாவனம் (மதுரை) முதலிய க்ஷேத்திரங்களில் சேவாசிரமங்கள் ஸ்தாபித்து மதபேதம் ஜாதிபேதம் பாராட்டாமல் நோயால் வருந்தும் அனாதைகளைப் போஷித்துத் தக்க மருந்துகள் கொடுத்துக் காப்பாற்றிச் சுகாதார அறிவும் புகட்டிவருகின்றனர். இதேபோல ரங்கூன் நகரத்திலும் ஸ்ரீமத் சியாமானந்த ஸ்வாமிகள் தியானானந்த ஸ்வாமிகள் இருவராலும் ஒரு வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டு சென்ற எட்டுமாதங்களாய் நடத்தப்பட்டு வருகிறது.

சென்ற ஜனவரிமாதம் ஆரம்பித்தது முதல் ஜூன்மாதம் முடிய 6 மாதங்களுக்கு ரிபோர்ட்டு வரப்பெற்றோம். இந்த ஆறுமாதங்களில் 6000 நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்து உதவப்பட்டிருக்கிறது. இதற்குப்பல கனதனவான்கள் ஐரோப்பியர்களும், பர்மியர்களும் பொருளுதவி புரிந்து வருகின்றனர். மேற்கண்ட ஆறுமாதங்களில் மொத்த வருமானம் ரூ. 10,009—10—0; செலவு ரூ. 8,929—8—3. இத்தர்மத்தை சாசுவதமாய் ஸ்தாபிக்க 24படுக்கைகளடங்கிய ஒரு ஆஸ்பத்திரியும், தினந்தோறும் வருவோரை கவனிக்க ஒரு சிறு வைத்தியசாலையும் கட்டும் பொருட்டு பொது ஜனங்களுடைய பொருளுதவியை நாடி ஸ்ரீமத் சியாமானந்த ஸ்வாமிகள் ஓர் வேண்டுகோள் பிரசுரித்திருக்கின்றனர். இத்தகைய தர்மங்கள் எல்லோராலும் ஆதரிக்கப்படவேண்டுமென்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

*
* *

ஸ்ரீராமகிருஷ்ணதேவரின் சிஷ்யர்களில் ஒருவராகிய ஸாது பூபிநாத் என்னும் பக்தசிரேஷ்டர் சென்ற ஜூன்மீ 5ௗ பரகதியடைந்தாரெனக் கேட்க வருந்துகின்றோம். அவர் இறுதிக்காலம்வரை ஜபத்திலும் தியானத்திலும் கழித்து பகவந்நாமாவை ஸ்மரித்துக் கொண்டே முழுப்பிரக்ஞையுடன் மஹாஸமாதியிலாழ்ந்தார். இப்படிப்பட்ட மரணமே எல்லார்க்கும் கிட்டுவதன்று.

*
* *

சென்ற மார்ச்சுமீ 13ௗ ஸ்ரீராமகிருஷ்ணதேவர் திருநாள் மஹோத்ஸவம் வெகு சிறப்பாய் அமெரிக்காவில் ஸான்பிரான்ஸிஸ்கோ இந்து ஆலயத்தில் கொண்டாடப்பட்டதெனச் செய்திவந்திருக்கிறது. ஸ்ரீமத் பிரகாசானந்த ஸ்வாமிகளும் அபேதானந்த ஸ்வாமிகளும் நமது ஸநாதன தர்மத்தின் சிறப்பை மேனாட்டாருக்கு மிகுந்த ஊக்கத்துடன் எடுத்துக்காட்டி வருகின்றனர்.

துன்மதி௵ தக்ஷிணாயனம் க்ரீஷ்மருது, ஆவணி௴
(கிறிஸ்துசகம் 1921, ஆகஸ்டு-ஸெப்டம்பர்.)

| ஆவணி | ஆகஸ்டு ஸெப்ட | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | செவ் | த்ர-25-2 | உத்ரா-43-7 | |
| 2 | 17 | புத | சதி-31-0 | திரு-50-32 | ருக்வேத உபாகர்மம் கரிநாள் |
| 3 | 18 | வியா | ○பௌ-37-1 | அவி-57-53 | யஜுர் உபாகர்மம் |
| 4 | 19 | வெ | ப்ர-42-51 | சத-60-0 | காயத்திரீ ஜபம் |
| 5 | 20 | சனி | த்வி-48-20 | சத-5-2 | |
| 6 | 21 | ஞா | த்ரி-53-12 | பூ-ட் 11-46 | |
| 7 | 22 | திங் | சது-57-12 | உ-ட்-17-49 | |
| 8 | 23 | செவ் | பஞ்-60-0 | ரே-22-55 | |
| 9 | 24 | புத | பஞ்-0-4 | அச்-26-48 | |
| 10 | 25 | வியா | ஷஷ்-1-29 | பர-2ɩ-23 | கிருத்திகை |
| 11 | 26 | வெ | ஸப்-1-15<br>அஷ்-59-14 | க்ரு-26-52 | கோகுலாஷ்டமி |
| 12 | 27 | சனி | நவ-55-24 | ரோ-28-45 | ஸ்ரீஜயந்தி |
| 13 | 28 | ஞா | தச-49-52 | ம்ரு-25-54 | |
| 14 | 29 | திங் | ஏகா-42-53 | திரு-21-27 | ஏகாதசி |
| 15 | 30 | செவ் | த்வா-34-43 | புன-15-42 | பிரதோஷம் |
| 16 | 31 | புத | த்ர-25-47 | பூச-9-1 | |
| 17 | 1 | வியா | சதி-16-28 | ஆயி-1-48<br>மக-54-31 | அமாவாசை |
| 18 | 2 | வெ | ● அ-7-13<br>ப்ர-58-27 | பூரம்-47-38 | |
| 19 | 3 | சனி | த்வி-50-37 | உத்ர-41-35 | |
| 20 | 4 | ஞா | த்ரி-44-5 | ஹஸ்-36-48 | |
| 21 | 5 | திங் | சது-39-10 | சித்-33-35 | ஸாமஉபாகர்மம் |
| 22 | 6 | செவ் | பஞ்-36-8 | சுவா-32-12 | விநாயக சதுர்த்தி |
| 23 | 7 | புத | ஷஷ்-35-3 | விசா-32-45 | ரிஷிபஞ்சமி |
| 24 | 8 | வியா | ஸப்-35-57 | அனு35--13 | கே … சுக் |
| 25 | 9 | வெ | அஷ்-35-36 | கேட்-39-25 | 4-50 சிம்-செ<br>7-6 கன்-குரு … செ |
| 26 | 10 | சனி | நவ-42-45 | மூல-45-2 | 10-31 கட-சுக் … புத |
| 27 | 11 | ஞா | தச-47-59 | பூரா51-41 | 20-42 கன்-பு … ரவி |
| 28 | 12 | திங் | ஏகா-53-52 | உ-ரா-58-56 | 23-13 சிம்-செவ் … குரு<br>சனி, ரா |
| 29 | 13 | செவ் | த்வா-59-59 | திரு-60-0 | |
| 30 | 14 | புத | த்ர-60-0 | திரு-6-23 | வாமன ஜயந்தி, பிரதோஷம் |
| 31 | 15 | வியா | த்ர-6-2 | அவி-13-43 | கன்யாரவி 58-44 |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு— திருக்குறள்.

தொகுதி 1] துன்மதி௵ புரட்டாசி௴ [பகுதி 9

உ

## கடவுள் வணக்கம்.

அன்பின்வழி யறியாத வென்னைத்தொடர்ந் தென்னை
யறியாத பக்குவத்தே
யாசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்
அற்றே னலந்தேனென
வென்புல மயங்கவே பித்தேற்றி விட்டாய்
இரங்கியொரு வழியாயினும்
இன்பவெள மாக வந் துள்ளங் களிக்கவே
யெனைநீ கலந்ததுண்டோ?
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்குமுண்டோ?
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத
தன்மையாற் றனியிருந்து
துன்பமுறி னெங்ஙனே யழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கு முரையாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே!

அல்லும் பகலுமுனக்கே யபய மபய மென்று
சொல்லுஞ்சொ லின்னந் தெரிந்ததன்றே துதிப்பார்கண்மனக்
கல்லுங்கரைக்கு மௌனவுனது கருணை யென்பாற்
செல்லும்பொழு தல்லவோ செல்லுவேனந்தச் சிற்சுகத்தே.

—தாயுமானவர்.

# ஸ்ரீராமகிருஷ்ண தேவர் வரலாறு.

(229-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மலரச்செய்யும் மாமல ரிடத்துள
தேனைப் பருகத் தேனீகள் செல்வ
தியற்கை" யென் றிவரி யம்பிய வாறு,
பகவா னுனவிப் பதும மலரைப்
பார்த்துப் பணியப் பலருங் குழுமினர்.
பகவா னதுநற் பக்தராய் விளங்கி
நவவி தானமதை நாட்டா நின்ற
கேசவ சந்திர சேன னென்போர்
பலரு மறியப் பகவான் பெருமையை
யேக மனத்துட னெடுத்தே யுரைத்தனர்.
சந்திர சேனனின் ஞானச கோதரன்
பிரதாப சந்திர பிரம முசம்தராம்
கிறிஸ்தவ பக்தன் சாற்றிய கிரந்தம்
பரிபூ ரணனைப் பலர்க்கும் பகர்ந்தது.
ஜர்மன் தேச சாஸ்திரி யான
மாக்ஸ் முலரென் னும் மாப்பெரும் புலவர்
பவானி தாஸன் பகர்ந்த ஞானத்தைப்
பாரினி லெங்கும் பரவச் செய்தனர்.
இணையிலாப் பக்தரி ராமக் கிருஷ்ணர்க்
கிச்சக முழுமையு மிருந்தன ரனேகர்.
அன்றியும் ஞானியி னருகினி லிருந்தே
யமிர்த வசன மருந்திய சீட
ரிருபதின்ம ரென்றி யம்புவர் பெரியோர்.
சர்வசற் சீடரும் சாஸ்திரம் பலவொடு
வடமொழி யாங்கிலம் வளரும் வங்காள
மாதியாம் மொழிகளை யறிந்தருள் பெற்றோர்
குருபர பக்தி குன்றா தவராய்
இருப தின்மரு மின்புற வாழ்ந்தனர்.
அஞ்ஞா னவிரு ளகற்றப் பெற்று
மெய்ஞ்ஞா னத்தை முழுமையு முணர்ந்த
சிஷ்ய ரோடு சிறப்பொடு வாழ்ந்து
சமாதி யடையச் சித்தங் கொண்டு



ஆயிரத் தெண்ணூற் றெண்பத் தாறி
லாவணி மாச மாறேடு பதுசேர்
தேதி தன்னில் தேவர் புகழிராப்
பத்துநா ழிகையிற் பரனை நினைந்து:—

சிஷ்யர் புலம்பல்

"கண்ணே! மணியே! கற்பகத் தருவே!
தாயே! கோவே! தர்ம நாயகமே!
நினைவே! யுருவே! நின்மல தேவே!
அருளே! பொருளே! அன்பர்க் கரசே!
எருகின் றாயோ எங்களை விட்டே!"
யென்ன வலறி யேங்கித் தேங்கிக்
கற்றா மனமெனக் கதறிப் பதறிய
அன்புறு சிஷ்யர்க் காறுதல் கூறி
யவர்களை, விவேகா நந்தன் கரத்தினில்
விடுத்துத், தாமும் நுழைவதா யியம்பிக்
காளிகா தேவியின் கருணை யாலே
சிந்தையை யடக்கிச் சிவத்தை நினைந்து
சும்மா விருந்து சமாதி யாயினர்.
பரம ஹம்ஸர் பரனை யடைந்த
செய்தியை யறிந்த சிவபக் தர்கள்
கோவை யகன்ற கன்று போலக்
கதறிக் கதறிக் கலங்கி னார்கள்.
சிஷ்ய சிரோரத் தினமாய்ச் சிறந்த
விமலன் சுவாமி விவேகா நந்தர்
துன்புறு சிஷ்யரின் துயரை நீக்கிப்
"பகவான் பார்ப்பதி பாத மடைந்தனர்
பக்தரே! வாரும்! பரனைப் போற்றிக்
குருபர பக்தி குன்றா தவராய்
எழுந்து விழித்து எண்ணிய கருமம்
உயர்வடை யும்வரை யுழைப்பவ ராகி
உற்றார் பெற்றா ரூரா ருள்ளோர்
வேற்றார் வாழ்வோர் மேலோ ரெனவே
விகற்ப மொழிகளை விளம்பா தவரா
யூரையும் பேரையு மூனையும் பதியையுஞ்
சீரையுங் கதியையுந் திருவையும் வெறுத்து
எங்குரு பரனை யிதயத் திருத்திக்
குவலயத் தோரைக் காத்து ரட்சிப்போம்!
என்று விளம்பி யேகனைத் தொழுது

பரிபூ ரணியைப் பரிந்து போற்றிப்
பரித்தி யாகிகளாய்ப் பரிவி ராஜகராய்
அங்கு மிங்கு மெங்கு மலைந்தே
யடியா ரிட்ட வமுதினை யுண்டு
பனிமலை கடந்து பக்குவ மடைந்து
பராயண முடையராய்ப் பாரெலாஞ் சென்று
ஞாலத் தார்க்கு ஞான மோதினர்.
வித்தை விளங்கு விவேகா நந்தரை
உத்தம குருவென வுணர்ந்த சிஷ்யர்
இவரே குருவென இறைஞ்சுவா ராயினர்.
சுவாமிகள் வழுத்திய சுவைதரு மொழிகளைப்
பகவான் மொழியெனப் பரிவுட னேற்று
அருமா மறையை யன்பர்க் குரைத்து
வைராக்கி யத்தோடு வாழ்வா ராயினர்
விமலராய் விளங்கும் வித்தக சிஷ்யர்.

வாழி

பரத கண்டமும் பரம ஹம்ஸரும்
அடியா ரான அநந்தர் களும்
அவர்க ளமைத்த அமரிக்கா லயமும்
மைலாப் பூரில் மலியுநன்மடமும்
இமய கிரியில் இனிது விளங்கும்
அத்வை தாசிரம மமைத்த நாதனும்
மாதவா நந்தரும் மறைநூல் யாவும்
செந்தமி ழணங்குஞ் சிவபா சுரங்களும்
பல்லுயிர் யாவும் பாரையாழ் வோரும்
விஜயமென் னும் விமல சஞ்சிகையும்
ஓங்கார வொலியு மோங்கி
வாழி ! வாழி ! நீடூழி வாழியவே

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

திரு இராமகிருஷ்ண பிரான் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 8.

(234ம் பக்கத் தொடர்ச்சி)

பாடல் முடிந்ததும் பகவான் சொல்கிறார்: ஸமுத்திரத்தில் முழுகச் சொல்லுகிறேனே யென்று பயப்படவேண்டாம். அது அமிருதஸாகரம். ஆகையால் பயம் வேண்டியதில்லை.

இதோ இருக்கும் நரேந்திரனைப் பார்த்து ஒரு ஸமயம் நான் "பகவான் ஒரு தேன்கடல். நீ அக்கடலில் முழுகமாட்டாயா? ஒரு அகன்றவாயுள்ள பாத்திரத்தில் கற்கண்டுப் பாகுவைத்திருக்கிறதாக நினைத்துக்கொள். நீ அப் பாகை அருந்துவதற்கு ஆவலுள்ள ஒரு ஈ யென்று நினைத்துக்கொள். நீ எங் கிருந்து அதைக்குடிப்பாய்?" என்று கேட்டேன். அதற்கு நரேந்திரன் "நான் அப்பாத்திரத்தின் ஓரத்திலிருந்து தான் குடிப்பேன். ஏனெனில் உள்ளே யிறங்கினால் என்னுடைய நிலைக்கு அதிகமான ஆழத்தில் முழுகி இறந்துவிடு வேன்" என்றான். அதன்பேரில் நான் "குழந்தாய்! இந்த ஸச்சிதானந்தக்கடல் அமிருத ஸாகரம் என்பதை மறந்து விட்டாயோ? இக்கடலின் ஜலம் ஒரு பொழுதும் மரணத்தை விளைக்காது. நித்திய வாழ்வையே தரும். சில பைத் தியக்காரர்களைப்போல் பக்தி அதிகமாகப் பேராய் விடுமோ என்று பயப்படாதே" என்றேன்.

இந்த அமிருத ஸாகரத்திலுண்டாகும் சிதானந்த ரஸத்தைப்பருகு.

ஆம், முதலில் பகவானை இவ்விதம் பார்த்தறி. அப்பொழுது அவரது திவ்யவாக்கைக் கேட்பாய். அவர் உன்னிடம் பேசுவார். சித்தமிருந்தால் அவரது ஆக்ஞையும் உனக்கு அளிப்பார்.

இவ்வமிருத ஸாகரத்திற்குப் போகும் வழிகள் அநந்தம். இக்கடலில் எவ்விதம் சென்றாலும் ஸரி.

ஒரு தேன் நிறைந்த குளமிருப்பதாக வைத்துக்கொள். அதின் கரையில் எப்பக்கத்திலிருந்தாயினும் அதிலிறங்கி அதைப்பருகலாம். எவ்விதம் அருந்தி னாலும் நித்திய வாழ்வேயுண்டாகும். மேலும், அதில் தானாகக் குதித்தா லென்ன, வேறொருவன் தள்ளினாலென்ன? இரண்டுக்கும் பலமொன்றுதான். அமிருதமாகிய தேனை யுண்டு நித்யஸௌக்யத்தை அடைகிறாய்.

இப்படி வழிகளனந்த மிருப்பதால் ஞானம், கர்மம், பக்தி இவைகளெல் லாம் கடவுளையே சேர்ப்பிக்கின்றன.

யோகம் மூன்று விதம்: ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம்.

1. ஞானயோகம்:—இது ஞானத்தினால் கடவுளை யடைவதே. ஞானி யின் கருத்து பரப்பிரம்மத்தை யடைவதே. அவன் 'நேதி, நேதி' (இதல்ல இதல்ல) என்று விசாரணை செய்து ஒவ்வொன்றாய்த் தள்ளுகிறான். இப்படி ஒவ்வொன்றாகத் தள்ளி விசாரிக்கும் பொழுது கடைசியில் அவனது மனமா

னது இவ்விசாரணைக் கெல்லாம் அப்பாலுள்ள மெய்ப்பொருளை எட்டி ஸமாதியில் பரப்பிரம்மத்தில் லயிக்கிறது.

2. கர்மயோகம்—கர்மத்தினால் ஈசுவரனையடைவது. இதுதான் நீங்கள் உபதேசிப்பது.

அஷ்டாங்கயோகம், அல்லது ராஜயோகமும் பற்றுதலற்று அப்பியஸித்து வந்தால் கர்மயோகமே. இதில் ஏகாக்ரத்தியானத்தினால் பகவானை யடையலாம்.

பகவத் கைங்கர்யார்த்தம் கர்மத்தில் பற்றுதலின்றி கிரகஸ்தாசிரம தர்மங்களைச் செய்வதும் கர்மயோகமாகும்.

இன்னும் சாஸ்திரப் பிரகாரம் செய்யும் பூஜை ஜபம் முதலிய கர்மங்களும் பகவத் கைங்கர்யார்த்தம் பற்றுதலின்றிச் செய்தால் கர்மயோகமே.

கர்மயோகமும் ஸகுணப்பிரம்மத்தையோ, நிர்க்குணப் பிரம்மத்தையோ, அல்லது, இரண்டையுமோ அடையச் செய்கிறது.

3. பக்தியோகம்—இது பிரேமையினாலும் ஆத்ம பரித்தியாகத்தினாலும் பகவானை அடைவது. இதுவே கலியுக தர்மத்துக்கேற்றது.

நான் முன் சொன்னபடி கர்மயோகத்தை அனுஷ்டிப்பது மிகவும் கடினம்.

முதலாவது, நான் முன் சொல்லியபடி சாஸ்திரங்களில் விதித்திருக்கும் கர்மங்களைச் செய்வதற்கு ஸாவகாசமே இல்லை. இரண்டாவது, இஹபரபலாபேக்ஷையின்றி கர்மம் செய்வதாக ஒருவன் மனதில் ஸங்கல்பம் செய்துகொள்ளலாம். ஆனால், அவன் வித்தனாயிருந்தாலொழிய அனேகமாக தெரிந்தோ தெரியாமலோ கர்ம பலனில் பற்றுதலை யடைவான்.

ஞானமார்க்கமும் இந்தயுகத்தில் மிகவும் கடினம். முதல் முதல், இந்த யுகத்தில் நமது பிராணன் ஆஹாரத்தினால் நிலைத்திருக்கிறது. (அன்னகதப் பிராண:)

இரண்டாவது, இந்த யுகத்தில் மனித ஆயுள் மிகவும் சொற்பம். இந்த மார்க்கத்தை அனுஷ்டிப்பதற்கு ஸாவகாசம் போதாது.

மூன்றாவது, இந்த யுகத்தில் தேகாத்ம புத்தியை யொழிப்பது முடியாது. ஞானியோ "நான் ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரமில்லை. நான் ஆத்மா. நானே பிரம்மம். இந்த சரீரத்தினுடைய உபாதிகளாகிய பசி, தாகம், பிறப்பு, இறப்பு, பிணி, துக்கம், ஸுகம், நோவு முதலியவை எனக்கில்லை" என்னும் நிச்சயத்தை யடையவேண்டும்.

சரீரத்தைச் சேர்ந்த இவ்வித பாதைகளுக்குட் பட்ட ஒருவன் தன்னை ஞானியென்று சொல்லிக்கொள்வது, முள்ளினால் கையெல்லாம் கிழிக்கப்பட்டு இரத்தம் பெருக 'என் கையில் காயமொன்றுமில்லை' என்று சொல்பவனைப் போலாவான்.

ஆகையினால் பக்திமார்க்கமே எல்லாவற்றிலும் ஸுலபமானது. அது கர்மத்தை மிகவும் சுருக்கிவிடுகிறது. ஓய்வில்லாமல் பகவானைப் பிரார்த்திப்பதே இதன் முக்கிய அவசியம். இந்த யுகத்தில் பகவானை அடைய இதுதான் எல்லாவற்றிலும் கிட்டிய குறுக்குவழி.



இது வரையில் சொன்னதின் கருத்தென்னவெனில் பகவானை அடைவதற்கு இந்த யுகத்தில் பக்தியை விட ஞானவிசாரமும் கர்மமும் கஷ்டமானது என்பதுதான். ஆனால் இவைகளின் உத்தேசம் வேறல்ல.

ஞானயோகியின் உத்தேசம் நிர்க்குணப் பிரம்மத்தை அடைவது தான். ஆயினும் அவனும் பக்தி மார்க்கத்தை அனுஸரிப்பதுதான் மேலானது. அவன் ஈசுவரனை அன்புடன் நேசித்தும், பிரார்த்தித்தும் தன்னை முற்றிலும் தியாகம் செய்வானானால், பக்தவத்ஸலனான (பக்தர்களிடத்தில் பிரியமுள்ள) பகவான் அவனுக்கு அவன் மிகுந்த ஆவலுடன் வேண்டுகிற நிர்க்குணப் பிரம்மத்தியானத்தையும் அளிப்பார்.

ஆகையினால் இந்த யுகத்தில் பக்தி மார்க்கத்தை அனுஸரிப்பானானால் ஞானியும் ஸகுண நிர்க்குணப்பிரமம் இரண்டையும் அடைகிறான்.

ஆனால் பக்தியோகிக்கோ ஸகுணப் பிரம்மத்தை யடைந்தால் போதும், ஆயினும் பகவான் அவனுக்குத் தனது அனந்தவைபவங்களைக் காண்பித்தருளி ஸகுண நிர்க்குணப் பிரம்ம ஞானத்தையும் அளிக்கிறார். அவனுக்கு ஞானமும் பக்தியும் இவ்விரண்டும் கிடைக்கிறது.

ஏனெனில் கல்கத்தாவை யடைந்த ஒருவன் அவ்விடத்தின் மைதானம், ம்யூஸியம் (museum) முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளாமலிருப்பானா? கல்கத்தாவுக்கு வருவதுதான் முக்கியமானது.

என் ஜகன்மாதாவை மாத்திரம் அடைந்தாயானால் உனக்கு பக்தியுடன் ஞானமும், ஞானத்துடன் பக்தியும் கிடைக்கும். அவளை ஸமாதியில் திவ்ய (ஸாகார) ரூபங்களுடன் பார்ப்பதுமன்றி நிர்விகல்ப ஸமாதியில் அவளை நிர்விகார பரம்பொருளாக, தான் என்பதை யிழந்து பார்ப்பாய்.

உண்மையான பக்தன் "பகவன்! கர்மம் ஆபத்கரமானதென்று அறிகிறேன். ஏனெனில், ஒருவன் தான் விதைப்பதற்குத் தக்கபடி பலனையடைகிறான். பற்றற்ற (நிஷ்காம்ய) கர்மமோ மிகவும் கஷ்டமானது. பிரபோ! என்னைக் கர்மத்திலிருந்து விடுவிக்கவேண்டும்; இல்லாவிடில் நானுன்னை மறந்துவிடுவேன். என்று கர்மத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சுருக்கிக் கடைசியாக உனது திருவருளால் உன்னை யடைந்து கர்மத்தை விட்டொழிக்கக் கிருபைபுரியவேண்டும். அது வரை எனக்கு அதிக அவசியமான பக்தியும் பிரேமையும் ஆத்ம பரித்தியாகமும் உண்டாகும்படி அருள்புரிவாயாக. உனது அருளினால் மேலும் மேலும் சுருங்கிக் குறைந்த சிறிது கர்மத்தைப் பற்றற்றுச் செய்யும்படி மனோதிடம் தந்தருள்வாயாக. ஆனால் எனக்கு, உனது திவ்ய தரிசனம் கிடைத்து ஜன்மஸாபல்யமாகும் வரை எனது மனம் உனது ஆக்ஞையால் உன் பொருட்டுச் செய்யும் கர்மம் தவிர, வேறு எவ்வித கர்மத்தையும் பற்றுதலின்றி நாடாமலிருக்கும்படி அருள்புரிவாயாக" என்று பிரார்த்திக்கிறான்.

---

# ஸ்ரீ துர்க்காசரண நாக மஹாசயரின் திவ்ய சரித்திரம்.

[ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் முக்ய கிருஹஸ்த சிஷ்யர்களுள் ஒருவராகிய ஸ்ரீ துர்க்காசரண நாக மகாசயரின் திவ்யசரித்ரம், பக்தி பூரிதமாய்ச் செய்யப்படும் பகவந்நாமஸ்மரணமும், அடியவர்களின் ஸேவையுமே, இக்கலியில் நேரான மோக்ஷ ஸாதனங்கள் என்னும் உண்மையை விளக்கும் தீபம் போன்றது.]

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே.

—தாயுமானவர்

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே, வடநாடுகள் பலவற்றினுஞ் சிறந்து விளங்குவதாகிய வங்காள நாட்டின் கீழ்ப்பாகத்திலே, நாராயணகஞ்ஜ் என்னுந் துறைமுகத்துக் கருகிலமைந்த தேவபாக் என்னும் ஒரு சிறிய கிராமத்திலே, சுமார் எண்பது வருஷங்களுக்கு முன்னே, தீனதயாளு எனப்பெயர் வாய்ந்த ஒரு ஏழை உத்தியோகஸ்தரிருந்தார். அவர் கல்கத்தா நகரத்தில் ஹரிசரணபால் என்பவருடைய வர்த்தக சாலையில் வேலை செய்து அதிற் கிடைத்த அற்ப சம்பளத்தாலேயே ஜீவனஞ்செய்து வந்தார். இவர் மனைவி திரிபுரஸுந்தரி எனப்பெயர் வாய்ந்த உத்தமி. இவர்கள் தெய்வபக்தி பூண்டு தங்கள் நிலைக்கேற்ற கருமங்களை வழுவறச் செய்து இல்லறம் நடத்தி வரும் நாளில் கி. பி 1846-ம் வருஷம் ஆகஸ்டுமீ 21வ சுக்கிலபட்சப்பிரதமை தினம் சுபவேளையில் ஈசன் திருவருளால் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது கண்டு மகிழ்ந்து அக்குழந்தைக்கு துர்க்காசரண நாக மஹாசயன் எனப்பெயரிட்டனர். அருமைப் புதல்வன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரவும், உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் முதலிய நற்குணங்களும் அவனுடனேயே வளரக்கண்டு அளவிலா வானந்தங் கொண்டனர்.

ஸ்ரீமதி திரிபுரஸுந்தரி தேவி இக்குழந்தைக்குப்பின் இரண்டு பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் பெற்றனள். ஆண் குழந்தையை ஈன்ற தருணத்தில் பிரஸவ நோயால் இவள் இவ்வுலகை நீத்து ஈசனடியை யடைந்தனள்.



பின்னர் தீனதயாளுவின் சகோதரி பாகவதி யென்பவள் குழந்தைகளை யெடுத்துத் தான் பெற்றெடுத்த குழந்தைகளைப் போல் பரிவுடன் வளர்த்து வந்தாள். இவளுக்கு நாகமஹாசயனிடமிருந்த அன்பிற்கு அளவில்லை. இதைப்பற்றிச் சிந்தித்து அவர் பிற்காலத்தில் 'இந்த ஜன்மத்தில் எனக்கு அத்தையாய் வாய்த்தவள் முன் பிறப்பில் என் சொந்தத் தாயாயிருந்திருக்க வேண்டும்' என்று கூறுவார். இவ்வம்மணி இறக்குந் தறுவாயில் இவருக்குக் கூறிச் சென்றதாவது. 'உன் மனம் எப்பொழுதும் பகவான் பாதார விந்தத்திலேயே நிலைத்திருக்கட்டும்" என்பதே. இதனாலேயே இவ்வுத்தமியின் அனுசரணையால் சின்னஞ் சிறு வயதில் துர்க்காசரணனுக் கேற்பட்ட மனோபரிபாவம் எப்படிப்பட்ட தென்பது விளங்கும்.

தக்க காலத்தில் வித்தியாப்பியாஸம் செய்விக்கப்பெற்று துர்க்காசரணன் நாராயணகஞ்ஜிலுள்ள பள்ளிக்கூடம் சென்று படித்து வந்தான். அங்கே மூன்றாவது வகுப்பு வரைமட்டுமே யிருந்ததால், படிப்பு சீக்கிரம் முடிந்து விட்டது. மேல் படிக்க வேண்டுமென்று தீவிரமான ஆசைகொண்ட நாகமஹாசயனும் இன்னது செய்வதென்றறியாமல் வருந்துவானாயினன். எப்படியாவது தன்னைப்படிக்கக் கல்கத்தாவுக்கு அனுப்ப வேணடுமென்று தன் தகப்பனாரை அடிக்கடி கெஞ்சிக் கேட்கலானான். ஆனால் தீனதயாளுவோ தன் சொற்ப சம்பளத்தால் ஜீவனம் செய்வதே கஷ்டமாயிருந்ததால் எவ்வாறு மேற்படிப்புக்குப் பணங் கொடுப்பது என்று வருத்தத்துடன் கூறக் குமாரன் துக்கத்திலாழ்ந்தான். சில நாட்களுக்குப் பின்னர் பத்து மைலுக்கப்பால் டக்காவில் அநேகம் பாடசாலைகளுள்ளன வென்று கேள்விப்பட்டு அங்கே சென்று நேரில் பார்த்து அவ்விடத்தில் எவ்வாறாவது சிரமப்பட்டுக் கல்விகற்க வேண்டுமென்று தீர்மானித்தான். அவன் அத்தையும் மற்றோரும் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. ஒருவருமறியாமல் டக்கா சென்று தானாகவே தக்க பாடசாலையைத் தேர்ந்து நிச்சயம் செய்துகொண்டு வீடு திரும்பினான். அத்தையை நோக்கி "அம்மா! நாளை முதல் நான் பள்ளிக்கூடம் போக அனுமதி தரவேண்டும். மறுக்கக்கூடாது. காலை எட்டு மணிக்குள் எப்படியாவது சமையல் செய்து எனக்கு சாப்பாடு போடவேண்டும்" என்று கூறினான். அவனுக்குப் படிப்பிலுள்ள ஊக்கத்தைக்கண்டு அவ்வம்மணியும் "உன்னை ஈசன் காப்பாராக. உன் மனோரதம் நிறைவேறும்படி யருள்புரிவாராக" என்று ஆசீர்வதித்தாள்.

அடுத்த நாள் முதல் வேறொரு கவலையின்றிப் பள்ளிக்கூடம் சென்று படித்து வருவானாயினான். அங்கே படித்த பதினைந்து

மாதங்களில் வெயிலிலும் மழையிலும் தினந்தோறும் முன்னும் பின்னும் இருபது மைல்கள் நடக்கவேண்டியிருந்தும், மத்தியான வேளையில் சிறிது அவலேயே ஆகாரஞ் செய்ய வேண்டியிருந்தும் ஒன்றையும் பாராட்டாமல் 'மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார் ......கருமமே கண்ணாயினார்' என்றபடி இவர் கல்வியின் மேலேயே கவனமுள்ளவரா யிருந்து, தன் தாய்ப் பாஷையை நன்றாய்க் கற்றனர்.

பின்னர் தகப்பனார் தம் மகனுக்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்தார். இதையறிந்து துர்க்காசரணன் தனக்கு விவாகத்தில் விருப்பமின்மையைக் கூறியுங்கேட்காமல் தந்தையும் அத்தையும் வற்புறுத்தியதின் பேரில் விவாகத்துக் கிசைந்தார். விக்ரமபுரம் என்னும் ஊரிலிருந்த ஸ்ரீ ஜகந்நாததாஸ் என்பவருடைய புத்திரி ஸ்ரீமதி பிரஸந்ந குமாரி என்று பெயர் வாய்ந்த பதினொரு வயது கன்னிகையை மணம் செய்வித்தார்கள்.

இதற்குப் பின் தன் தகப்பனாருடன் துர்க்காசரணனர் கல்கத்தாவிலேயே வாசம் செய்யலானார். இக்காலத்தில் அந்நகரிலுள்ள ஒரு வைத்திய பாடசாலையிற் சேர்ந்து வைத்திய சாஸ்திரத்தைப் படித்துப்பின் பீஹாரிலால் பஹாதூரி என்று பெயர் பெற்ற ஒரு நிபுணரிடமும் சாஸ்திரத்தை நன்கப்பியஸித்தார்.

இத்தருணத்தில் விஷபேதி கண்டு இவர் மனைவி திடீரென இறந்தாள். இதனால் மனம் வருந்ாதவராய் 'எல்லாம் எனையாளு மீசன் செயல். என்னை உலகுடன் பந்தப்படுத்திய வலிய கயிறு நீங்கியது' என்றவராய் மனோவமைதி யெய்தினார்.

பின் இவருக்கு வைத்திய சாஸ்திரத்திலிருந்த ருசியும் குறைந்தது. ஸதா ஸர்வேசுவரனைப் பற்றிச் சிந்திக்கலானார். இவர் மனோ மாறுதலைக்கண்டு தந்தை மனம் நொந்து இவருக்கு மறு விவாகம் செய்ய யத்தனித்தார். இதையறிந்து நாகமஹாசயர் 'ஒரு பெண்ணை மணந்தேன் அவள் உயிர் துறந்தாள்; இன்னும் பார் பெண்ணை யமனுக்கிரையாக்க வேண்டுமென்பது உம் கருத்து' என்று சீற்றத்துடன் கூறத் தகப்பன் "உன்னைப் பெற்றெடுத்த என் சொல்லை மீறி நடந்தால் நீ எவ்வாற்றானும் விருத்தியடைய மாட்டாய்" என்று பதில் கூறினார். முடிவில் தகப்பனார் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தன்னெண்ணங்களுக்கு மாறாகப் புனர் விவாகத்துக் கிசைந்து தேவபாகிலிருந்த ராமதாயாளு என்பவர் புத்ரி ஸ்ரீமதி சாரதா குமாரியென்னுங் கன்னியை மணந்தார்.

'உண்மையில் பிரஜைக்காக மட்டும் உத்தேசித்து விவாகம் செய்து கொள்ளுதல் மனிதனை அசுத்தப்படுத்தாது. பண்டைக் காலத்து ரிஷிசிரேஷ்டர்களே அப்பேர்க்கொத்த வழியில் நடக்கும் திறமை பெற்றிருந்தனர். அவர் நீண்டகாலப் பிரம்மசரிய விரதத்தில் நின்று பின் பிரஜையை யபேக்ஷித்துக் குருவின் அனுமதி பெற்று விவாகம் செய்துகொண்டு, வியாஸர், சுகதேவர், ஸநகர், ஸநத்குமாரர் முதலியோர் போன்ற புத்ர சிரேஷ்டர்களைப் பெற்று, உலக வாழ்க்கையைத் துறந்து வனஞ்சென்று ஈசுவரனை நாடி நின்றனர். இக்கலியில் அஃதெவ்வாறு முடியும்? காமமே இப்பொழுது பிரதானமாய் நிற்கின்றது. ஆகையால் ஸத் பிரஜைகள் குறைந்து உலகில் தர்மம் நிலைகுலைந்து போகின்றது' என்று நாகமஹாசயர் அடிக்கடி கூறுவார்.



இவர் விவாகத்துக்குச் சில நாட்களுக்குப் பின் இவருடைய அத்தையின் அந்திய காலங் கிட்டியது. அவள் இறக்குந் தருணத்தில் அருகிற் சென்றிருந்து எல்லாச் சடங்குகளையும் சரிவரச் செய்து முடித்துப் பின் கல்கத்தாவுக்குத் திரும்பினார். இறக்கு முன் அத்தை அவரை அன்புடன் அருகிலழைத்து, "உன் மனம் எப்பொழுதும் ஈசன் பாதாரவிந்தங்களில் நிலைத்திருக்கட்டும்" என்று சொன்னது மட்டும் எப்பொழுதும் இவர் மனத்தில் பிரதிபலித்துக்கொண்டே யிருந்தது.

பின் நாகமஹாசயர் தகப்பனாருடைய வேண்டுகோளுக்கிணங்கிக் கல்கத்தாவில் வைத்தியம் செய்யத் தொடங்கினார். அவர் நோயாளிகளிடம் பணத்தைத் தானாக ஒரு பொழுதும் அபேக்ஷிக்க மாட்டார். அவர்கள் அன்புடன் கொடுக்கும் சிறிதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாரெனினும், தனக்குச் சேரவேண்டிய அளவுக்கு மேல் ஒரு பைசாவுங் கொள்ளமாட்டார். அதிகமாய்க் கொடுத்தால் திருப்பிக் கொடுத்துவிடுவது வழக்கம். இவருடைய குணங்களை மெச்சிப் பலர் இவரை நாடினார்கள். இவர் தகப்பனாரிருந்த வர்த்தகசாலையின் எஜமானர் 'ஹரிசரணபால்' என்பவரும் இவரையே தமக்கும் வைத்தியராய்க் கோரினார். ஒரு முறை அவர் வீட்டில் ஒரு ஸ்திரீக்குக்காலரா நோய் கண்டு எல்லோருங்கைவிட்ட சமயத்தில் இவர் அவளுயிரைத் தக்க மருந்து கொடுத்துக் காப்பாற்றினார். அதற்காக அவர்கள் பணம் நிறைந்த ஒரு வெள்ளிக்கிண்ணியைக் கொடுக்க, இவர் அதை மறுத்து 'எனக்குச் சேரவேண்டியது ரூபாய் இருபதுக்கு மேலில்லை' என்று சொல்லி அந்தத் தொகையை எடுத்துக் கொண்டு மீதியைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இதையறிந்து இவர் தகப்பனார் 'அப்பா! நீ இம்மாதிரி நடந்தால் ஒருக்காலும் உலகில் விருத்தியடையமாட்டாய்' என்று கோபிக்க, மகன் 'நான் என்ன செய்வது? எது சரியோ அதைத் தானே நான் செய்யவேண்டும். தப்பான வழியில் ஒருக்காலும் நான் போகேன். ஈசுவரனே ஸத்தியம் என்று நம்பி, நல்வழியில்

நடக்க வேண்டுமென்று நீங்கள் எனக்குப் பலமுறை போதித்திருக்கிறீர்களே. மருந்தின் விலை ரூபாய் ஆறு, ஏழு நாட்களுக்கு எனக்கு ரூபாய் பதினான்கு. அப்படியிருக்க நான் அதிகம் எப்படி பெற்றுக்கொள்வது?' என்றார்.

நோயாளி ஏழையாயின் அவனுக்குச் சிகித்சை செய்ய மைல் கணக்காகவாயினுந் தன் சிரமத்தை கவனிக்காமல் போவார். பொருளுதவி தேவையென்று தெரிந்தால் தன் கையிலுள்ள பணத்தையும் கொடுத்துதவுவார். பாதையோரங்களில் வருந்துபவர்களைக் கண்டால் அவர்களை அன்புடன் வீடழைத்துச் சென்று சொஸ்தமாக்கி யனுப்புவார். ஒரு தடவை ஒரு குடிசையில் ஏழைக் குடியானவன் ஒருவன் படுந்துயரைக்கண்டு தன்வீடு சென்று தன் படுக்கைகளை யவனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து, அன்புடன் உதவினார். மற்றொருமுறை ஓர் குளிர்ந்த இரவில் நோயாளியொருவனைக்கண்டு அவனுக்குத் தன் போர்வையைக் கொடுத்து இரவெல்லாம் அவனருகிலிருந்து அவன் கஷ்டங்களைப் போக்கினார். தம்மைப்பற்றி யொருபொழுதும் அவருக்குக்கவலையே கிடையாது.

கல்கத்தாவில் 'பிளேக்' என்னும் பெருவாரிநோய் மிகவுங் கடுமையாய்ப் பரவிய காலத்தில் இவர் வியாதியால் பிடிக்கப்பட்ட பலரை யணுகித் தன்னாலியன்ற உதவி செய்தார். அவர்களுள் ஒரு வேலைக்காரன் தன் வியாதி குணமாகா தென்றுணர்ந்து தான் கங்கைக்கரையிலுயிர் துறக்க விரும்பியதாய்த் தெரிவித்ததும், அவனை அவ்வாறேகங்கைக்கரையில் தூக்கிப்போய்விட்டு, உயிர் நீங்கும்வரை யருகிலிருந்து முடிவில் தகனம் செய்துவிட்டுச் சென்றார்.

பிறர் கஷ்டநிஷ்டூரங்களைக் கண்டு சிறிதும் மனம் சகிக்கமாட்டார்; தன் கஷ்டங்களைப் பாராட்டார். ஒரு சமயத்தில் வெளியூரிலிருந்து கல்கத்தாவுக்குப் போவதற்காக ஒரு போர்வையை மேலே போர்த்துக்கொண்டு வழிச்செலவுக்கு எட்டுரூபாயுடன் ஸ்டேஷனுக்கு வந்தவர், டிக்கெட்டுவாங்குமிடத்தில் சதகந்தலை யிடுப்பில் சுற்றிக்கொண்டு பசியால் வருந்தும் ஐந்து குழந்தைகள் சூழ ஒருஸ்திரீ நிற்பதைக்கண்டு, உடனே தம் கையிலிருந்த பணத்தையுங் கம்பளியையும் அவளிடங் கொடுத்துவிட்டுக் கல்கத்தாவை நோக்கிக் கால்நடையாய்ப் புறப்பட்டார். நடையால் மெலிந்து, பசிகண்டபொழுது இரந்துண்டு இருபத்தொன்பது நாட்கள் இங்குமங்குமலைந்து கல்கத்தாவையடைந்தார்.

இம்மஹானுடைய காருண்ணியம் ஏழைகளும் அநாதைகளுமான மனிதர்களிடம் மட்டு மன்றி பசுபட்சிகளிடத்தும், ஸகல ஜீவராசிகளிடத்தும் ஒப்பப் பூர்ணமாயிருந்தது. ஒரு சிறு புழு



காலில்பட்டுத் துடிக்கக் கண்டால் இவர் கண்ணில் நீர்ததும்பும். இவர் வீட்டில் ஒரு தூணின்மேல் கரையான் புத்துவைக்க அதைக் கலைத்துக் கரையானை ஹிம்ஸிக்க மனமில்லாதவராய்த் தூண் அரிக்கப்பட்டுக் கீழே சாயும்படி விட்டுவிட்டார். தெருவில் யாராவது மீன் கூடைக்காரரைக் கண்டால், கூடையுடன் வாங்கி உயிருள்ளவை பிழைத்துப்போம்படி பரபரப்புடன் அருகிலுள்ள குளங்குட்டைகளில் கொண்டுபோய் விடுவார். ஒரு முறை வேட்டைக்காக தேவபாக் கிராமத்திற்குச் சில ஐரோப்பியர்கள் சென்றார்கள். அவர்களுடைய துப்பாக்கி வெடிகளின் சப்தத்தைக் கேட்டவுடன் விரைந்தோடி அவர்கள்முன் கைகூப்பிநின்று ஜீவஹிம்ஸையைத் தவிர்க்க வேண்டுமென்று மன்றாடினார். அவர்கள் 'இவன் ஒரு பைத்தியக்காரன்' என்று கூறி அலட்சியமாய்த் தம்முடைய குரூரத்தொழிலை நடத்தவாரம்பித்தனர். உடனே இவர் ஆவேசங்கொண்டவர்போல் அவர்கள்மேல் தாவிவிழுந்து துப்பாக்கிகளைப் பிடுங்கிக்கொண்டு வெகுவேகமாய் வீட்டுக்கு ஓடி அவைகளை ஒளித்துவைத்தார். இதனால் மிகுந்த கோபங்கொண்ட ஐரோப்பியர்கள் இவரை நியாயஸ்தலத்தில் தண்டனைக்குள்ளாக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கையில், ஒரு உத்தியோகஸ்தர் மூலமாய் இவருடைய தெய்வத்தன்மையைக் கேள்விப்பட்டுத் தங்களுடைய தவறுதலை யுணர்ந்து துப்பாக்கிகளை மட்டும் பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றனர்.

கொடிய விஷஜந்துவாகிய நாகஸர்ப்பத்தினிடமும் இவருக்குப் பரமப்ரீதி. ஒருநாள் இவர் தோட்டத்தில் ஒரு ஸர்ப்பம் சீறிச் செல்வதைக்கண்டு இவர் மனைவி அதைக்கொல்லும்படி இவரை வேண்ட, மனைவியைக்கடிந்து "நமக்குத் தீங்குசெய்வது காட்டிலுள்ள பாம்பன்று; நமது மனமாகிய வீட்டிலுள்ள பாம்பே நம்மைக் கொல்லுகிறது" என்று கூறிப் பாம்பை அத்யந்தப்ரீதியுடன் அழைத்துச் செல்வதுபோல் பாவனைசெய்ய, அதுவும் இவரைப் பின்தொடர்ந்து இவர் காட்டிய ஓர் புதருள் மறைந்தது. இவர் திரும்பிவந்து "இவ்வுலகம் நம்மனதின் பிரதிபலனமே. நாம் ஒரு கண்ணாடியின் முன் நின்றுகொண்டு முகத்தைக் கோணினால் பிரதிபலனமும் அவ்வாறே தோன்றுகிறது. நாம் செய்யும் நன்மை தீமைகளை உலகம் நம்மிடமே திருப்பிக்காட்டும். ஆகையால் நாம் எல்லோருக்கும் நன்மையே கோரினால்தான் நமக்கு நன்மையுண்டாகும்" என்று உபதேசித்தருளினார்.

(தொடரும்.)

# விவேகாநந்த சுவாமிகளின் அருள்வாக்கியத் திரட்டு.

(209-ம் பக்கத்தொடர்ச்சி.)

விஷய போகமானது நாம் நம்முடைய காலின்கீழ் மிதிக்க வேண்டிய பல தலைகளுள்ள சர்ப்பமாகும். நாம் தியாகஞ் செய்து கொண்டேபோய் சுகம் ஒன்றையும் காணாது நம்பிக்கை யின்மைத் தருவாயை அடைகிறோம். அக்காலத்திலுங்கூட நீ கொண்ட வைராக்கியத்தைப் பற்றி நில். உலகம் ஒரு பிசாசாகும். இந்த அற்ப அகங்காரக்கிரந்தியான என்னை அரசனாயுள்ள இராச்சியமாகும் இவ்வுலகம். அதை உதயித்தள்ளி ஊன்றி நிற்பாயாக. கீர்த்தியையும், பொன்னையும், பெண்டீராசையையும் தியாகஞ் செய்து கடவுளை உறுதியாகப் பற்றுவோமானால் பூர்ண உதாசீன நிலையை கடைசியில் அடைவோம். புலன்களின் அவாவைத் தீர்த்தல் ஆனந்தமாகுமென்று நினைத்தல் உலகாயதமாகும் (materialistic). அவ்விடத்தில் நிஜவானந்தம் எள்ளுமூக்கு நுனி அளவுங்கிடையாது. அவ்விடத்தில் தோன்றும் சந்தோஷமானது நிஜ ஆனந்தத்தின் பிரதி பலனமாகும்.

“நீ ஒரு(அலரிப்)புஷ்பத்தைப்போல் இருக்குமிடத்திலேயிருந்து உன் இதழ்களை விரிப்பாயானால் (அப்பூவிலிருக்கும் மகரந்தத்தை யுண்ண) தேனீக்கள் அழைக்காமலே கிட்டிவரும்.” ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும், கேசவ சந்திரஸேனர் என்பவருக்கும் ஓர் எதிர் உவமை பொருந்தியவர்கள் இவ்வுலகின்கண் பாவமும், துக்கமும் உண்டென்பதையாகிலும் அல்லது நாம் போராடுவதற்கு தீமை உண்டென்பதை யாகிலும் அங்கீகரித்தாரில்லை. சந்திரஸேனர் பிரம்ம சமாஜத்தை ஸ்தாபித்தவர். அவர் நீதி நெறி சீர்திருத்தக் காரராக இருந்தது மல்லாமல் பிரம்ம சமாஜத்தாருக்கு வழிகாட்டியராகவுமிருந்தார். தக்ஷிணேசுவரத்து தீர்க்கதரிசியாகிய ஸ்ரீராமகிருஷ்ணர் பல்லோரறியாது தனிமையுற்று 12 வருஷம் பொறுத்து இந்தியாவில் மாத்திர மல்லாமல் உலக முற்றிலும் பரிவர்த்தனம் (அபிப்பிராய மாறுதலை) விளைவித்தனர். (உபகார மன்றி வேறொன்றியக்கா நிர்க்குணக் கடலாக) இருந்து ஜீவித்து யாவரிடத்தும் அன்புபாராட்டிப் பிறகு தங்கள் ஜீவபோதத்தை ஒளித்துக்கொள்ளும் மௌனிகளிடத்தில் தான் மேற்கண்ட சக்தி நிலய மதாயிருக்கும். அன்னோர், யான் எனது என்று ஒரு



பொழுதுங் கூறுவதில்லை. கருவிகளாக இருத்தலினாலேயே அப்பேர்ப்பட்ட மனிதர்கள் ஜீவபோதத்துடன் ஒன்றுஞ் செய்யாது ஒன்றும் விரும்பாமலும் சத்தாமாத்திரமாயுமிருந்து பரம்பொருளுடன் ஐக்கியபாவப் பட்டு சிரஞ்சீவிகளாயிருந்து புத்தர்களையும் கிறிஸ்துக்களையும் சிருஷ்டிக்கும் கர்த்தாக்களாயிருந்து வருகின்றனர். உலகத்தைநடத்திக்கொண்டுவரும் உண்மை புருஷர்கள் அவர்களேயாவர். அவர்களே ஜீவன் முக்தர்கள். அவர்களே அகம்பாவத்தை முற்றிலும் துடைத்தவர்கள். தான் ஒரு மனிதன் என்கிற எண்ணத்தைச் சூறையாடினவர்கள். அவர்கள் தர்ம வடிவினரேயன்றி பூத பௌதிக பிரக்யாதி உருவுடைய வரன்று.

விஞ்ஞானம் வியவகாரதிசையைப் பொருந்தியது. நாம் கடவுளாய் இருக்கக்கூடும். ஆனால் அவரை நம்மால் அறியவொண்ணாது. விஞ்ஞானம் கீழ்ப்படியைச் சார்ந்தது. ஆடம் (Adam) கீழ்நிலைக்கு வந்து அவர் விஞ்ஞானத்தை (அதாவது விஷய ஞானத்தை) எய்தியதற்குமுன் அவர் பரிசுத்த வடிவினராயிருந்தார், சத்திய ரூபியாயிருந்தார், கடவுளாயிருந்தார். நம்முடைய முகத்தை நாம் எப்படிப் பார்க்க முடியும். பிரதி பிம்பத்தைத்தான் காணலாம். ஏனெனில் நாமும் நம்முடைய முகமும் வேறன்று. நாம் அன்பே வடிவமானவர்கள். அவ்வன்பைப்பற்றி எண்ணமிடும் பொழுது மனத்தோற்றத்தைக்கொண்டு அவ்வாறு செய்ய வேண்டியதாயிருக்கிறது. இதில் நின்று நமக்கு நிதர்சனமாவது யாதெனில் பிரகிருதியானது வெளியில் உருக்கொண்ட எண்ணமன்றி வேறல்ல என்பதுதான்.

நிவிர்த்தி என்பது உலகத்துக்கு விமுகமாயிருத்தல். முதல் முதல் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகிய சனக, சனந்தன, சனாதன, சனத்குமாரர்களாகிய நால்வரும் ஆவிர்ப்பவம் இரண்டாவதென்று அன்னத்தால் (கடவுளால்) எச்சரிக்கை செய்யப்பட்டமையின் அந்நால்வரும் சிருஷ்டித்தொழிலை மேற்கொள்ளாது தங்களுள் தாங்களே சுகித்திருந்தனர். இதன் கருத்து என்னவெனில் பேச்சானது இழிதலாகும். ஏனெனில் வாக்கிறந்த பூரணப் பொருளை உரைக்கவேண்டில் எழுத்தைக் கொண்டுதான் இயலும். அப்பொழுது எழுத்து அப்பூரணப் பொருளை முற்றிலும் தெரிவிக்க சக்தியற்றதாகி அதனை மறைத்து விடுகிறது. என்றாலும் அப்பரம்பொருள் பிராகிருதபோர்வையை வகித்தே தீரவேண்டும். இது இவ்விருள் தந்தான் என்று நமக்கு பின்விளங்கியபோதிலும் அப்பிராகிருத போர்வையால், பரம்பொருள் அதிருஷ்டமாய் விடும். ஒவ்வொரு உண்மையான போதகரும் இந்த இரகசியத்தை ஓர்ந்துள்ளார். இந்தக்

காரணத்தைப்பற்றிதான் தீர்க்கதரிசிகள் ஒருவர் பின் ஒருவராக விடாது வந்து அப்பரம்பொருளுக்கு காலத்துக்குத்தக்க போர்வையையிட்டு அதனை விளக்கிக் காட்டவேண்டியதாயிருக்கிறது. மதம் ஒன்று என்று எனது ஆசாரியர் கற்பித்தார். எல்லாப் போதகர்களும் இதனையே தான் கூறினர். நாமரூபத்தால் அப்பரம்பொருளை எடுத்துக் காட்டலாமேயொழிய வேறுவிதமில்லை. ஆகையால் தீர்க்கதரிசிகள் என்ன செய்கிறார்களென்றால் ஈசனது பழைய நாமரூபங்களைக் களைந்து புதிய நாமரூபங்களால் அவனை நமக்கு எடுத்துக்காட்டுகின்றனர். நாம் நம்மை நாமரூபங்களினின்றும், முக்கியமாய்த்தேகத்தினின்றும், வியதிரேகிப்போமாகில் நல்ல வுடலோகெட்டவுடலோ எதுவும் வேண்டாமல் இருக்கக்கூடுமாகில் அப்பொழுதுதான் நாம் பந்தத்திலிருந்து விடுபட்டவராவோம். முடிவற்றகதி (போக்கு) முடிவற்ற பந்தமாகும். ரூபநாசமே விரும்பத்தக்கது. உடலினின்றும் விடுபடவேண்டும். நல்ல உடலானாலும் அதினின்று விடுதலையடைய வேண்டும். கடவுள் ஒருவரே சத்தாமாத்திரமாயிருப்பவர். இரண்டு சத்துக்களிருக்க இடமில்லை. இருப்பது ஒரே ஒரு ஆத்மா. அது நான். சத்கருமங்கள், விடுதலைக்கு விலையுயர்ந்த ஹேதுக்களாயிருக்கின்றன. சத்கருமங்கள், செய்தவனுக்கு நன்மையை விளைவிக்குமேயன்றி வேறொருவனுக்கும் ஒருக்காலும் நன்மையைக்கொடா.

விஞ்ஞானம் தரம் பிரித்தலென சொலத்தகும். ஒரே விதமான பொருள்களின் கூட்டத்திற்கு ஒரு பெயரிட்டு நாம் திருப்தியடைகிறோம். நடைபெறுங் காரியங்களை நாம் கண்டு பிடிக்கிறோமேயொழிய அவைகள் ஏன் அவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தகாரமாகிய அகன்ற வயலில் சுற்று விசாரணை செய்து நமக்கு ஏதோ தெரிந்து விட்டதென்று என்னுகிறோம். ஏன், என்கிற கேள்விக்கு இவ்வுலகத்தில் உத்தரம் கிடைக்காது. அதற்குக் கடவுளண்டைதான் செல்ல வேண்டும்; அறிவோன் உரைக்கப்பாற்பட்டவன். சமுத்திரத்தில் ஒருகல் உப்பு விழுந்தால் எத்தன்மையதாகுமோ அத்தன்மையதாகும் அவன்நிலை, சமுத்திரத்தின் (பரப் பிரமத்தில்) இரண்டறக் கலந்து விடுவான்.

பிரிவுபாடடையுந் தன்மையினால், சிருஷ்டி உண்டாகின்றது சமத்துவம் கடவுளாகும். பிரிவுபாட்டுக்கப்பாற் செல்வாயானால் உயிர் வாழ்க்கையும் மரணத்தையும் ஜயித்து எக்காலத்தும் ஒருபடித்தான தன்மையை யடைந்து கடவுளில் நிலைத்திருப்பாய். கடவுளை ஆவாய் உயிருக்கு ஹானிவரினுங்கூட மோக்ஷத்தைப்பெறுவாய். ஒரு புத்தகத்துக்கு அதனுள்ளிருக்கும் ஏடுகள் எத்தன்



மையனவோ அத்தன்மையனவாகும் நமக்கு நமது பிறவிகள். ஆனால் நாம் மாத்திரம் மாறாது சாக்ஷிமாத்திரமாய் இருந்துகொண்டு வருகிறோம். ஒரு கொள்ளிக்கட்டையை விசையாகச் சுற்றினால் எப்படி ஒரு வட்டவடிவமானத் தீபம் கண்ணுக்குத் தோன்றுகின்றதோ அவ்விதமான தடிப்பேறியுள்ள ஆத்மா நாமாகிறோம். எல்லாப் பிறவிகளுள்ளும் உள்ளீடாயிருந்து வருவது ஆத்மா. ஏனெனில் ஆத்மாவானது விகாரமற்றது. சாசுவதமானது. அசையாதுள்ளது, அதுதான் கடவுள்.

அது உயிரன்று. உயிராகத் திரிபடைந்துள்ளது. அது சுகமல்ல. ஆனால் சுகமாக ஆக்குவிக்கப் பட்டிருக்கிறது.

பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் நித்திரையை வென்றவனாகிய அர்ச்சுனன், அல்லது குடகேசனிடத்தில் சொல்லுகிறார். தர்மபூமி (யுத்தகளம்) இவ்வுலகமாகும். (நீதியைக்குறிக்கும்) பஞ்சபாண்டவர்கள் (நாம் நேசித்தும் விரோதிக்க வேண்டுவனவுமாகிய) நூறு சகோதரர்களாகிய கௌரவர்களுடன் யுத்தம் செய்கின்றனர். (அஞ்ஞானத்தை அகற்றி விழிப்படைந்துள்ள ஆத்மாவாகிய) அதிவீரத்தன்மையுள்ள அர்ச்சுனன்தான் தளகர்த்தன். இந்திரியங்கள் மூலமாய் வரும் சுகங்கள் எல்லாவற்றுடனும் நமக்கு எவைகளிடத்தில் அதிகப்பற்றுள்ளதோ அவைகளுடனும் நாம் போர்புரிந்து அவைகளைக் கொல்லவேண்டும் நாம் எவற்றுடனும் சம்பந்தமின்றி தனிமையாய் நிற்றல் வேண்டும். நாம் பரப்பிரமம். ஏனைய எண்ணங்கள் யாவற்றையும் இதனுள் அமிழச் செய்யவேண்டும்.

கிருஷ்ணபகவான் யாதொரு பற்றுமின்றி எல்லாவற்றையும் செய்தார். அவர் உலகத்திலிருந்தும் உலக வசப்பட்டவரல்லர்.

பற்றின்றி எல்லாக் கருமத்தையும் புரிவாயாக. கருமத்தை கருமத்தின்பொருட்டே செய்தல் வேண்டுமேயொழிய உன்பொருட்டு ஒருபொழுதும் செய்யக்கூடாது.

“இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு”

# சிருஷ்டி ஜாலம்

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு—திருக்குறள்

## பூமியின் அமைப்பு.

நாம் வசிக்கும் பூமியின் அமைப்பு எத்தன்மையது? இதன் உட்பாகம் எவ்வாறிருக்கின்றது? என்னும் கேள்விகளுக்கு விடை கூறப் பல தத்துவசாஸ்திரிகள் முயன்றிருக்கின்றனர். எனினும் திருப்திகரமான விடை ஒருவராலும் இதுவரை கூறப்படவில்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. நேரில் பூமியின் உட்பிரதேசம் சென்று பரீக்ஷிக்க ஹேதுவில்லாமைபற்றிப் பலர் பலவிதமாய்த் தத்தம் மனோபாவத்துக்குத் தக்கவாறு ஊகிக்கின்றனர்.

பண்டைக்காலத்தில், பூமி தேங்காயோட்டைப் போன்றதென்றும், அதன் மேற்புறத்துள்ளவாறு உட்புறத்தும் ஜீவராசிகள் உண்டென்றும், உட்பிரதேசம் செல்ல துருவ தேசத்தில் வழிகளுண்டென்றும் பலர் நம்பிவந்தனர். பின்னர் எரிமலைகள், வெந்நீரூற்றுக்கள் இவைபோன்ற விஷயங்களால் பூமியின் உட்பாகம் அத்யுஷ்ண தசையிலிருந்தவேண்டுமென்றும், மேல் பாகம் மட்டுமே ஓடுபோன்றிறுகி விட்டதென்றும் ஊகிக்கலாயினர். சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் 'க்ராகடோவா' என்னும் தீவில் ஓர் எரிமலை பிளவுபட்டு கற்குழம்பை நாற்றிசையிலும் வாரியிறைத்தது அநேகருக்கு ஞாபகமிருக்கக்கூடும். இதிற் கிளம்பிய கற்களும், புகையும், சாம்பலும் பல்லாயிரம் மைல்களுக்குச் சுற்றிப் பரவின. இதனால் அதன்பின் மூன்று வருஷ காலம் சூரியரஸ்மி குறைந்து காணப்பட்டதென்றும், சிறிது சிவந்த வர்ணமுள்ளதாயிருந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். அக்காலத்தில் ஓர் பூதத்துவ சாஸ்திரி, பூமி ஓர் முட்டையைப் போன்றதென்றும், அதன் பரிமாணத்துடன் ஒத்து நோக்குமிடத்து பூமியின் மேலோடு முட்டையோட்டைப் போல் மெல்லியதேயென்றும், உள்ளே பொங்கிக்கிடக்கும் கற்குழம்பின் அலைகளால் எளிதாக உடைக்கப்படக்கூடியதென்றும் பிரசங்கம் செய்திருக்கின்றார். அதுவும் உண்மையல்ல. பூமத்தியில் உஷ்ணம் அதிகமென்பது உண்மையாயினும், கல்லையும் உருக்கும்படியான அவ்வளவு சூடு இல்லையென்பதும், அங்கேயுள்ள பதார்த்தங்களும் கடின நிலையை ஏற்கெனவே அடைந்திருக்க வேண்டுமென்பதும்



நவீன சாஸ்திரிகளின் ஸித்தாந்தம். பூமத்தியில் அவ்வளவு உஷ்ணமில்லாதபொழுது எரிமலை கக்கும் கற்குழம்பு எங்ஙனமெனில், சிற்சில விடங்களில் மட்டும் அஃதிருக்கிறதென்றும், இவ்வுஷ்ணத்துக்கு இதர காரணங்களுண்டென்றுங் கூறுகின்றனர்.

ஒருவரும் ஒருமைல் ஆழத்துக்குக் கீழ் பூமிக்குள் இதுவரைச் சென்றதில்லை. அதற்குக் கீழுள்ள அமைப்பிற்குப் பிரத்யக்ஷ ஆதாரம் எரிமலை கக்கும் கற்குழம்பு ஒன்றுதான் நமக்குத்தெரியும். பூமியின் உட்பாகமும் மேலோடு போன்றதே யெனக்கொண்டு, பூமியின் அமைப்பிலுள்ள முக்கிய பதார்த்தங்களின் அளவு நிர்ணயிக்கப்படும். முக்கியமான மூலப்பொருள்கள் பூமியில் ரஸாயன முறைப்படி எட்டாம். இவ்வெட்டே பூமியில் ஆயிரத்தில் 995 பங்காகிறது. மற்றெல்லாப் பொருள்களும் ஆயிரத்தில் ஐந்து பாகமேயாவன. பூமியிலுள்ள லோகங்களில் எது ஏராளமானது என்று யாரையாவது கேட்டால் இரும்பு என்றே கூறுவார்கள். ஆனால் உண்மையில் பூமியின் மேல்பாகத்தில் அலுமினியமே அபரிமிதமாய்க் கிடக்கின்றது. இவ்வளவு அபரிமிதமான பொருள் ஒருவருக்கும் விளங்காமல் வெகுகாலம் மறைந்து கிடந்தது ஆச்சரியம். 1828-ம் வருஷம் ஓர் ஜர்மானிய சாஸ்திரி இதைக் கண்டுபிடித்த பின்னரே இவ்வதிசயம் விளங்கிற்று. இன்னொரு விஷயம் இதைவிட வியக்கத்தக்கது. பூமி மூலப்பொருள்களாய்ப் பிரிக்கப்படுமானால் பாதிபாகம் பிராணவாயு வென்பது காணப்படும். கடின பூமியில் இஃது சரிபாதியும், நாம் குடிக்கும் தண்ணீரில் ஒன்பதில் எட்டு பங்கும், சுவாசிக்கும் ஆகாயத்தில் ஐந்தில் ஒருபங்குமாய் எங்கும் நிறைந்து கிடக்கின்றது. இதுவே பிராணாதாரம். நம்மைச் சூழ்ந்துள்ள ஆகாயத்தின் கனம் 5500, கோடி கோடி டன்; இதில் ஆயிரம் கோடி கோடிடன் நிறை பிராணவாயு. சமுத்திர ஜலமெல்லாம் எண்பது கோடி கோடிடன். இதில் எழுநூற்றிருபது கோடி கோடிடன் பிராணவாயு. பூமி ஆறு கோடி கோடி, கோடிடன் நிறை; இதில் மொத்தத்தில் மூன்றுகோடி கோடி கோடி, பிராணவாயு. அடுத்தபடியில் வருவது 'ஸிலிகான்' என்பது. இதைத் தனியாய்ப் பலர் கண்டிலராயினும், கல்லிலும், களிமண்ணிலும், மணலிலும் அபரிமிதமாய் இது மறைந்து நிற்கின்றது. இது நூற்றில் முப்பது பாகமென மதிக்கப்படும். இதை 1823-ம் வருஷம் ஒருஸ்வீடன் தேசத்து ரஸாயன சாஸ்திரி கண்டுபிடித்தார். மூன்றாவதாக வருவது 'அலுமினியம்'. இஃது நூற்றுக்கு எட்டுபாகமாகும். இது தனியாய் எங்குங் காணப்படுவதில்லையாயினும், களிமண்ணிலும், ரத்தினங்களிலும், கண்ணாடிகளிலும், இருக்கின்றது. உலோகங்களுள் ஒன்றாயிருந்தும் மிக்க லேசாயிருப்பது பற்றி ஆகாயக்கப்பலிலும், பலவிதமான

சமையல் பாத்திரங்களிலும் இப்பொழுது ஏராளமாய் உபயோகப்படுகின்றது. நான்காவது அயம் அல்லது இரும்பு. இஃது பூமியில் நூற்றில் ஆறுபங்கு. இவ்வுலோகம் எல்லோருக்கும் வெகுகாலமாய்த் தெரிந்தது. ஐந்தாவது 'கால்ஷியம்' என்பது இது நூற்றில் மூன்றுபங்கு. இது தனியாய்க் காணப்படாவிடினும், சுண்ணாம்பு, சுக்கான்கல், கிளிஞ்சல்கள், சிலைக்கற்கள் இவைகளில் நிறைந்திருக்கிறது. அடுத்தபடியில் வருவன, 'மெக்னீஷியம்', 'ஸோடியம்' என்பவை. இவை நூற்றிலிரண்டு பங்கு. உப்பில் முக்கிய வஸ்து ஸோடியமே. எட்டாவது 'பொடேஸியம்'. இது எல்லா குணங்களிலும் ஸோடியத்தை யொத்தது. இது நூற்றுக்கு ஒன்றரை பாகமாகும்.

இவ்வெட்டுமே முக்கியமானவை. நமக்குத் தெரிந்த தங்கம், வெள்ளி, தாமிரம், ஈயம், துத்தநாகம், கரி, ரஸம், ஜலவாயு, உப்புவாயு இவையெல்லாஞ் சேர்ந்தும் பாக்கியுள்ள ஆயிரத்தில் ஐந்து பாகத்துக்குள்ளடங்குகின்றன. ஆனால் இப்பொழுது டாக்டர் ஆரினியஸ் என்னும் ஸ்வீடன் தேசத்து ரஸாயன சாஸ்திரி இது தவறென்றும் பூமியின் உள்ளமைப்பு மேலோடு போன்றதல்லவென்றும் அதிக கனமான லோகங்கள் பூமியின் ஆகர்ஷண சக்தியால் கவரப்பட்டு உள்ளே பொதிந்து கிடக்கின்றனவென்றும் கூறுகின்றனர். இவை அத்யுஷ்ண நிலையிலிருக்கலாமென்றும் இவர் அபிப்பிராயம். இதற்கும் அநேக ஆதாரங்களுண்டு. முதலாவதாக 'ஸேஸ்மோகிராப்' என்னும் கருவியைக்கொண்டு பூகம்பங்களின் ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. அக்கருவி பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உண்டாகும் சிறு அதிர்ச்சிகளையும் எளிதில் உணர்கின்றது. அதன் மேல் தாக்கும் நுண்ணிய அலைகளின் வேகத்தையும் அது உணர முடியும். பூகம்பத்தின் அலைகள் ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்லுங்கால் கடின பதார்த்தங்கள்வழியாய் விரைவில் செல்வதும், திரவங்கள் வழியாய் மெதுவாய்ச் செல்வதும் வெளியாகின்றது. கடினமான உலோகங்கள் மூலமாய்ச் செல்லுகையில் வேகம் அதிகரிக்கின்றது. பூமியில் இவ்வலைகள் எண்ணூறு அல்லது தொள்ளாயிரம் மைல்களுக்கு மேற்பட்ட ஆழத்தில் பாயும்பொழுது இரண்டு மடங்கு வேகம் அதிகரிக்கிறதென்பது 'ஸேஸ்மோகிராப்'பால் தெரியவருகிறது. அப்படியாயின் பூமியின் எண்ணாயிரம் மைல் குறுக்களவில், சுற்றிலும் சுமார் ஆயிரம் மைல் மேலோடு போன்றதென்றும் உள்ளே கடினமான லோகங்களிருக்கலாமென்றும் ஊகிப்பது தவறாகாது.

தவிரவும் பூமியின் பரிமாணமும் கனமும் பலவகைகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உற்று நோக்குங்கால், பூகோளம் தன்னளவுள்ள ஓர் நீர்கோளத்தைப்போல் ஐந்தரை மடங்கு



கனமானதென்பது விளங்குகின்றது. ஆயிரம் மைல் வரை பரவும் மேலோடோ தன்னளவு நீரைப்போல் மூன்று மடங்கு கனத்துக்கே குறைவாயிருக்கின்றது. இந்த ஆதாரங்களைக் கொண்டு கணித்துப் பார்த்தால், ஆயிரம் மைல் ஆழத்துக்குக்கீழ் அளவுக்களவு தண்ணீரைப்போல் எட்டு மடங்கு கனமான வஸ்து நிறைந்திருக்கவேண்டுமென்றாகிறது. இந்த கனமுடைய வஸ்து இரும்பேயாகும். மேலும் பூமியில் நாம் காண்பதற்கு மாறாக அபரிமிதமான இரும்பு இருக்கவேண்டுமெனக்கூற இதர முகாந்தரங்களும் உண்டு. எரிமலைகள் கக்கும் கற்குழம்பில் இரும்பு நிறைந்திருக்கின்றது. வானத்திலிருந்து அடிக்கடி பூமியில் விழும் உல்கங்களிலும் இரும்பு அதிகமாயிருக்கின்றது. 'ஸ்பெக்ட்ராஸ்கோப்' பரீக்ஷையால் சூரியன், நக்ஷத்திரங்கள் இவைகளிலும் இரும்பு நிறைந்திருக்கின்றதென்று வெளியாகிறது.

மேலும் பூமி ஓர் பிரம்மாண்டமான காந்தத்தை யொத்திருப்பதை யெல்லோரும் அறிவர். காந்த சக்தி இரும்பிலேயே நிலைபெறுகின்றது. ஆகையால் அற்புதமான காந்தசக்தி வாய்ந்த பூமி இரும்பாலாயதோர் கோளமென்றும், மற்ற பதார்த்தங்கள் மேற்கூறியதற்கு மாறாக அளவில் வெகு குறைவென்பதும் இவர் அபிப்பிராயம்.

இவ்வபிப்பிராயத்துக்குக் கியாதிபெற்ற நியூடன்கூட இடங்கொடுத்திருக்கின்றார். பூமி ஓர் காலத்தில் அத்யுஷ்ண நிலையிலிருந்து குளிர்ச்சியால் இறுகி இப்போதுள்ள நிலையடைந்ததென்று ஒப்புக்கொள்வோமானால், அஃது திரவநிலையிலிருந்தக்கால், தண்ணீரில் எண்ணெய் மிதப்பதுபோல், தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய கனபதார்த்தங்கள் வரிசைக்கிரமமாய் பூமத்திக்கு ஆகர்ஷிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், மேலே லேசான பதார்த்தங்களை மிதந்து நின்றிருக்க வேண்டுமென்றும் இவ்வாறேபின் இறுகியிருக்குமென்றும் கூறியிருக்கின்றார்.

இவையெல்லாம் யோசிக்குமிடத்து, நாம் மேலே தற்கால ஸித்தாந்தமெனக் காட்டியது இன்னும் வெகுகாலம் நிலைபெறுமெனத் தோன்றுகிறது. உண்மை எதுவோ? அதைச் சரிவர அறியும்வரை பலவிதமான கொள்கைகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தலையெடுத்துத் தத்தம் காலமானபின் மறைவது இயல்பே.

# ஆத்ம வஞ்சனை.

—:—

உண்டோ நம்மைப்போல வஞ்சர் பல
பொறித்ததுர்பு முடலை மெய்யென்று
கொண்டோ பிழைப்பதிங்கையோ அருட்
கோலத்தை மெய்யென்று கொள்ளவேண்டாவோ
சங்கர சங்கர சம்பு.

—தாயுமானவர்.

நமதுடலைப் போஷித்து அலங்கரித்துக் காப்பாற்றுவதை 'ஆத்ம ஸம்ரக்ஷணம்' என்றும், சரிவர உண்ணுமலும் உடுக்காமலு மிருப்பதை 'ஆத்ம வஞ்சனை' யென்றும் வழங்கி வருகிறோம். இக்கொள்கைப்படி ஆத்ம வஞ்சனை செய்வோர் மூன்று வகைப்படுவர். முதலாவது, ஏராளமான பொருள்படைத்தும் அதைத் தாமும் அனுபவியாமல் பிறர்க்குங் கொடாமல் புதைத்துவைப்போர் பலர். இவர்களைப்பற்றிப் பட்டினத்தடிகள்

"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொண்டோ வதில்லை இடைநடுவே
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்வேன் கச்சி ஏகம்பனே"

என்று வருந்துகிறார். இரண்டாவது, ஏழைகளோ வெனில் பொருளின்மையால் தக்க உணவும் உடையுமின்றித் தம் தேகத்தைச் சரிவரப் பாதுகாக்குந் திறனற்றிருக்கின்றனர். மூன்றாவது வகுப்பினர் அழியுந்தன்மையுள்ள பொருட்களெல்லாவற்றையும் வெறுத்துத் தங்கள் தேகத்தையுங் கவனியாமல் தங்களுடையதென்று ஒரு பொருளிலும் உரிமை பாராட்டாதவர்களாய் உலகிலுள்ளோரனைவரும் பந்துவர்க்கமெனக் கொண்டும், வான்முகடே கூரையாகவுள்ள அகண்டவெளியே வீடாகக்கொண்டும், யதேச்சையாகக் கிடைப்பதே உணவாகக் கொண்டும், ஒரு கோவணமே ஆடையாகக் கொண்டும் நின்றவிடம் நிற்காமல் அலைந்து திரிகின்றனர்.

இம்முத்திறத்தாரிலும் கடைசியிற் கூறப்பட்டவர்களே உண்மையறிவு பெற்றவர்கள். இவர்கள் தங்கள் நடக்கை 'ஆத்ம வஞ்சனை' யல்லவென்றும் 'ஆத்மஸம்ரக்ஷணம்' என்றுங் கூறுவர். அவர்கள் செய்வது 'தேக வஞ்சனை' என்னலாம். இந்திரியங்கள் தங்களை வஞ்சித்து அடிமைகொள்ள யத்தனிக்கதைக்கண்டு, இவர்கள் அவைகளுடன் போர்புரிந்து அவைகளை வஞ்சித்து அடக்கியாளப்



புகுகின்றனர். தங்களுண்மையான ஆனந்த நிலையை யிழந்து இந்திரியவய மயங்கித் தவிக்கும் மானிடர்களைக்கண்டு இவர்கள் பரிதபப்படுகின்றனர்; ஆத்ம நிலையை யடைய முயலாதவனே தனக்குரிய பொருளையனுபவியாத மகாலோபி என்று இவர்கள் கூறுகின்றனர்.

மோகத்திலாழ்ந்துள்ள ஜனங்களின் நிலையை விளக்க ஒரு சிறு கதை கூறப்படும். ஒரு ஆட்டுமந்தைக்குள் இரைக்காகப் பாய்ந்த ஒரு பெண்சிங்கம் அவ்விடத்தில் குட்டிகளை ஈன்று உயிர் துறந்தது. அச்சிங்கக் குட்டிகள் ஆடுகளுடனேயே வளர்ந்து வந்தன. இவைகள் தாங்களும் ஆடுகள் எனவே நினைந்து 'மே! மே!' என்றுக் கத்திக்கொண்டும் புல் தழைகளைத்தின்றுகொண்டும், ஆட்டுமந்தையில் வெகு சாந்தமாயிருந்தன. ஒருநாள் ஒரு சிம்மம் இவைகளைக்கண்டு அதிசயித்து அருகில்வர ஆடுகளுடன் சிங்கக்குட்டிகளும் பயந்து ஓடின. சிங்கம் பின்தொடர்ந்து அவைகளை வழிமடக்கி அவை ஆடல்லவென்றும் தன்னைப்போன்ற சிங்கம் என்றுங் கூறிற்று. ஆனால் சிங்கக்குட்டிகள் நம்பாமல் நடுநடுங்கி நின்றன. பின் அருகிலிருந்த குளத்தில் அவைகளுடைய பிரதிபிம்பத்தைப் பார்க்கும்படி செய்ய, உடனே தங்கள் கம்பீரமான ரூபத்தைக் கண்டு பயம் முற்றும் நீங்கி அவைகள் வனம் அதிரும்படி கர்ஜிக்கவாரம்பித்தன.

இந்தச் சிங்கக்குட்டி போல் நாம் ஸச்சிதானந்த ஸிம்ஹங்கள். ஆனால் நாம் ஆட்டுமந்தைபோன்ற இவ்வுலகிலகப்பட்டு ஸ்வரூபஞானத்தை யிழந்து வருந்துகின்றோம். புருஷஸிம்ஹம் எனப்படும் ஞானி யெதிர்ப்படின் அக்கருணைவள்ளல் உண்மை யுணர்வு புகட்டி நமக்கு ஆனந்தநிலையை யளிப்பார்.

இதையடைய முயலாமல் 'தேகமே ஆத்மா' என்று நம்பிப் இறப்பதற்கே பிறந்தும் பிறப்பதற்கே இறந்தும் ஸம்சாரசக்கிரத்தில் கிடந்துழலும் மானிடர்களே 'ஆத்ம வஞ்சகர்கள்' எனப்படுவர். இவர் படும்பாட்டுக் களவில்லை. உலகவியல்பு இன்னதென்றுணராமல் வழிதெரியாத வனத்தில் கண்ணைக்கட்டி விடப்பட்டவன் போல துக்கம், பயம், சோகம் முதலியன நிறைந்த மனதையுடையவனாயும், பிணி மூப்பு சாக்காடுகளால் வருந்துந் தேகமுடையவனாயும், காற்றிலகப்பட்டுச் சுழலும் தூசுபோன்று இங்குமங்குமலைக்கப்படுபவனாயு மிருக்கின்றான். உலகவாழ்க்கை துக்கம் நிறைந்ததென்றுணர்ந்திருந்தும் மோகத்தால் கானலில் நீரைக்காணுவது போல இதிலும் ஜீவன் சுகமிருப்பதாய் நினைக்கின்றான். "நாள்தோறும் பலர் யமலோகம் போவதைக் கண்டிருந்தும், மற்றவர்கள் தாங்கள் சாசுவதமென்றெண்ணுகிறார்களே, இதைவிட வேறென்ன ஆச்

சரியம்!" என்று தர்மபுத்திர கூறுகிறார். இந்த அற்பவாழ்வை சுகமென்றிருத்தல், ஒரு புலி துரத்திவர ஓடி ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து அதனடியில் சீறும் ஒரு நாகஸர்ப்பத்தைக் கண்டு நடுங்கி நடுவில் ஒரு புற்கொடியைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுகையில் ஒரு சொட்டுத்தேன் மேலே ஒருதேன்கூட்டிலிருந்துவிழ அதில் நாக்கை நீட்டி ருசித்துத் 'தேன் வெகு நன்றாயிருக்கிறது' என்று ஆனந்தித்ததை யொக்கும். வேம்பின் புழும் வேம்பன்றி மற்றெதையும் விரும்பாததுபோல ஜீவர்கள் துக்கத்தையே சுகமாய்க் கருதுகின்றனர்.

இஃதிப்படியிருக்க 'உலகில் துக்கமே கிடையாது; எல்லாம் ஆனந்தமயமாயிருக்கிறது' என்று சில வஞ்சகர்கள் கூறுவார்கள். இவர்கள் வேதாந்தம் 'வயிறுநிறைந்த வேதாந்தம்!' வயிறு நிறைய உண்டு அழகிய மெத்தைகளில் வயிற்றுக் கிருபுறமும் பஞ்சணைகள் வைத்துக்கொண்டு கைகட்டி நிற்கும் சேவகர்களை யதட்டிக்கொண்டு இருக்கும் சில பாக்கியசாலிகளே இவ்வாறு பேசத்துணிவர். இவர்கள் வேதாந்தம் 'எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' ஊற்றைச்சடலத்தையே சதமென நம்பி அதைப் போஷித்துப் பரிபாலிப்பதிலேயே காலமெல்லாஞ் செலவிட்டும், திருப்தி பெறுவதில்லை. இவர்களை 'ஆத்ம காதகர்கள்' என வேதமாதா கூறுகிறாள். இவர்கள் ஆத்மாவைச் சிறைப்படுத்திச் சுற்றிலும் பெரிய மதிலெழுப்பி உள்ளே காற்றும் வெளிச்சமும் கூடச் செல்லவழியின்றி நாள்தோறும் இந்தச் சுவற்றுக்கு மண் அப்புவதே தொழிலாயிருக்கின்றனர். ஆத்ம ஹத்தியைவிடக் கொடிய பாபம் வேறில்லை. அதனைப்பற்றியே இது 'மஹதீ விநஷ்டி:' என்று உபநிஷத்துக் கூறுகிறது.

இந்த மகாபாதகத்திலிருந்து தப்புவதற்கு வழி தன்னைக் கொல்லவந்த காமாதி ராக்ஷஸப் பேய்களைக் கொல்லத் துணிவதே. நாம் ஆத்மா என்று உபசாரமாய்க் கூறும் தேகமாகிய போலியாத்மாவைப் பலியிடவேண்டும். இயேசுநாதர் சிலுவையில் அறையப் பெற்றதால் உலகுக்குப் புகட்டிய உணர்வு இதுவே. நாம் இந்திரிய வயமயங்கி யில்லாமல் அவைகளை யடக்கியாளவேண்டும். "ஆத்மாவை இரதத்திற்கு யஜமானனாயும், சரீரத்தை இரதமாயும் அறி. ஏனெனில் இரதத்திற் கட்டப்பட்ட குதிரைகள் இரதத்தை இழுத்துக்கொண்டுபோவது போல் இந்திரியங்களால் சரீரம் இழுக்கப்படுகின்றது. குதிரைகள் மார்க்கங்களிற் போவதுபோல் இந்திரியங்கள் விஷயங்களிற் பிரவிருத்திக்கிற படியால் விஷயங்களை மார்க்கங்களாக அறி. புத்தி யென்னும் சாரதி விவேகமின்றி யிருந்தால் கெட்ட குதிரைகள் சாரதியின் வசத்தில் அடங்காதது போல இந்திரியங்கள் வசப்படுகிறதில்லை. எந்த ஸாரதி மனதை நிக்ரஹித்து



எப்போதும் விவேகத்துடன் கூடியிருக்கிறானோ அவனுக்கு இந்திரியங்கள் எளிதில் ஸ்வாதீனமாகின்றன. இவன் ஏகாக்ர சித்தத்துடன் கூடிப் பரிசுத்தனாகி வாசுதேவனென்ற பெயருள்ள பரப்பிரம்மத்தின் உத்கிருஷ்டமான பதத்தை அடைந்து ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகின்றான்" என்று கடோபநிஷத்துக் கூறுகிறது.

சிரவணம் (கேட்டல்) மனனம் (சிந்தித்தல்) நிதித்தியாஸனாதிகளால் (தெளிதல்) தெளிந்த புத்தியின் வலிமையால் மனத்தை யடக்கினால் இந்திரிய வியாபாரங்கள் ஒழிந்துவிடும். 'இந்திரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் மேலாகவும், விஷயங்களை விட மனம் மேலாகவும் மனதைக் காட்டிலும் புத்தி மேலாகவும்' இருக்கின்றமையால், புத்தியுள் மனமும் மனத்துள் இந்திரியங்களும் கிரமமாய் ஒடுங்கும். மனோநிக்ரஹமில்லாதவிடத்து இந்திரிய நிக்ரஹம் பயன்படாது. இதுபற்றியே தாயுமானஸ்வாமிகளும்

'சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே'

என்று கூறினார்.

"எவன் கர்மேந்திரியங்களை யடக்கி இந்திரிய விஷயங்களை மனத்தில் நினைத்துக்கொண்டு மனம் மயங்கி இருக்கிறானோ அவன் 'ஆசாரக்கள்ளன்' எனப்படுகிறான். மற்று எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கி கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப் பற்றற்றவனாய் அனுஷ்டிக்கிறானோ அவன் மேலாகின்றான்" என்று பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கின்றது.

இம்மனோ நிக்ரஹம் அப்யாஸத்தாலும் வைராக்யத்தாலும் ஸாது ஸங்கத்தாலும் ஸாத்தியமாகின்றது. "மனதை வலியக் கவர்ந்து செல்லும் ஆசாபாசங்கள் உலகத்தையும் உலகவிஷயங்களையும் பற்றி மட்டும் இருக்கும்வரை சத்துருக்களாகத்தானிருக்கும். அவைகள் ஈசுவர விஷயமாகமாறினால் மனிதனுக்கு நற்றுணைகளாகும். ஏனெனில் அவைகள் அவனை ஈசுவரனிடம் அழைத்துச்செல்கின்றன. உலகவிஷயங்களிலுள்ள ஆசையைக் கடவுளிடம் பிரேமையாக மாற்றவேண்டும். இம்மாதிரியே எல்லா ஆசைகளையுந் திருத்துவதே ஸாதன மார்க்கம். ஆசைகளை அழிக்க முடியாது. ஆனால் அவைகளை அடக்கமுடியும்" என்று ஸ்ரீராமகிருஷ்ண தேவர் அருளியிருக்கின்றார்.

இவ்வாற்றால் மனக்குரங்கு அடங்குமாயின் ஞானோதயம் உடனே உண்டாகின்றது. ஸ்ரீமத் அத்தியாத்ம ராமாயணத்தில் இந்த ஆத்ம வித்தையின் ரஹஸ்யம் விரிவாய் எடுத்துரைக்கப்படுகின்றது. ஸ்ரீராமபிரான் பரமாத்மா; ஸீதாதேவி ஜீவாத்மா. இவைகளைப்

பிரிப்பது மாய யான். இந்நிலையில் ஜீவாத்மாவை அபகரிப்பவன் காமம் என்னும் ராக்ஷஸன். அபகரிக்கப்பட்ட ஜீவாத்மா அசோகவனத்தில் (துக்கமில்லாதவனத்தில்) சிறையிடப்படுகின்றது. வஞ்சித்துப் பிரிக்கப்பட்டதால் துக்கத்திலாழ்ந்திருக்குஞ் ஜீவாத்மாவுக்கு நற்செய்தியுடன் தூது செல்வது மனக்குரங்கு. இக்குரங்கின் உதவியாலேயே ஸ்ரீராமபிரான் ராக்ஷஸவதம் செய்து ஸீதாபிராட்டியாரை ரக்ஷித்ததுபோல் நாம் மனக்குரங்கை வசம் செய்துகொண்டு காமக்குரோதாதி ராக்ஷஸர்களைக் கொன்று ஆத்ம உத்தாரணம் செய்துகொள்ள வேண்டும்.

---

# சிந்தனை மொழிகள்.

"குணநாடிக் குற்றமுநாடி, யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்"

அறிஞர்க் கழகு. ஆதலின் ஒவ்வொருவரும் பிறரைப் பற்றிப் பேசும்போதும், யோசிக்கும்போதும் அவர்களுடைய குணாகுணங்களை அறிந்து, அவற்றில் நல்லவற்றைச் சிறப்பித்து அக்குணங்களைத் தாமும் அடைய விரும்ப வேண்டும். குற்றங்களை ஆராய்ந்து, அவற்றிற்குக் காரணமென்ன வென்பதை யாலோசித்து அக்குற்றங்கள் தம்மிடம் இல்லாதிருக்கும் வழியைத் தேடவேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் அயலாரைக் காண்பதும் அவர்களிடமுள்ள குணாகுணங்களைப் பற்றி யோசிப்பதும், பிறரிடம் பேசுவதும் சகஜம். அப்பொழுது நாம் நற்குணங்களைத் தேடி அவற்றை யுடையவர்களைக் கொண்டாட வேண்டியது நமது நன்மைக்கே யாதலால் நாயனார் மேலே குறித்துள்ள குறளை அருளியுள்ளார்.

* * *

இவ்வுலகில் பிறந்த மானிடர் அனைவரிடமும் குணங்களும் குற்றங்களும் இருப்பது ஸகஜம். பகவானது அவதாரங்களும், மும்மலத்தையு மொழித்த ஞானிகளுமே யாதொரு களங்கமுமின்றி யுள்ளவர்கள். அவர்களுக்குக் கீழானோர் சிலர் பல காரணங்கள் பற்றி, இவ்வுலகில் பிறந்து, பல புண்ணிய கர்மங்களாலும், எம்பெருமானது திருவடியைச் சார்ந்து பக்தி செய்வதாலும் முக்தி நிலையடைய முயலும் அடியவர்களாவர். பிறர் எல்லாரும் கர்மத்திலீடுபட்டு, ஸம்ஸார சக்கரத்திற் சுழன்று, எம்பெருமானது திருவடியை யடைய வழி தெரியாது திகைக்கும் ஜனங்களாவர். இவர்கள் முக்தியடைய வேண்டுமென்பது எம்பெருமானின் திருவுள்ளக்



கருத்தாதலின், அவர் பலமுறையும் திருவவதாரஞ் செய்து, பாமர ஜனங்கள் தம் உண்மை உருவத்தை அறியும் வண்ணம், அவர் இருக்க வேண்டியவாற்றை நடந்து காட்டியுள்ளார். பித்ரு வாக்கிய பரிபாலனம் புத்ரனின் கடமை என்பதையும், தன் தர்ம பத்தினியின் பொருட்டு மிக்க கஷ்டமடைந்தும் அவளைத் துன்பத்தினின்றும் நீக்கி ஏகபத்னி விரதனாயிருக்க வேண்டுமென்றும், அரசன் என்பவன், பிரஜைகள் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் பற்றிப்பழுது கூறவியலாதபடி அரசுசெய்ய வேண்டும் என்பதையும் விளக்கவன்றோ எம்பெருமானார், ஸ்ரீராமனாக அவதரித்தனர்!

இதனாலன்றோ, பெரியோரது சரித்ரங்களைக் கேட்டல் ஓர் புண்ணிய கருமம் என்றும், அதனால் விளையும் பலன்கள் பல என்பதையும் நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு பெரியோரது சரித்திரங்களைக் கேட்பதால் நம்மனது, அவைகளிலேயே ஈடுபட்டு, அவர் வாழ்ந்தவாறே நாமும் நடக்கவேண்டுமெனத் தூண்டுகின்றது. அவர்களது வாழ்க்கையைப் பற்றி நாம் நினைக்குந்தோறும், நம் மனதிலுள்ள, கெட்ட எண்ணங்கள் தோன்றுதற்கு இடமில்லாது போகின்றது. நல்லெண்ணங்கள் பதிகின்றன. வாழ்க்கையின் உண்மையும் அழியாவின்பம் பெறுவதற்குரிய வழியும் நம்மனதில் தோன்றி, கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலம் பெறுகின்றது.

* * *

மனம் வாக்கு காயம்—அதாவது மனது, பேச்சு; உடல் ஆகிய மூன்றும் ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டவை. நம்மனதில் எந்த எண்ணம் பூர்ணமாய் நிற்கின்றதோ, அது நமது பேச்சாலும் செய்கையாலும் வெளிப்படுகின்றது. எதைப்பற்றி நாம் இடைவிடாது பேசுகின்றோமோ அதுவே நம்மனதில் பதிந்துவிடுகின்றது. நாம் பகவானது திருநாமத்தை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டே யிருக்கவேண்டு மென்பது மேற்கூறிய உண்மையினால் தான். பகவானது திருநாமத்தை ஒருவன் அடிக்கடி உச்சரிப்பானாயின், அது அவனறியாமலே அவன் மனத்தில் நிறைந்து பிற விஷயங்களைப் பேசவொட்டாது செய்கின்றது. மேலும் சிறு குழந்தைகள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவைகளை மனப்பாடம் செய்வது நாமறிந்த விஷயம். அவர்கள்தாம் மனப்பாடம் செய்யும் செய்யுட்களின் முழுப்பொருளையும் முதலில் அறிந்து கொள்ளாவிடினும், வயது முதிர்ந்த பின்னர் அறிந்து கொள்கின்றனர். அதனால்தான் நாம் சிறுவர்களுக்கு அவர்களுடைய இளமைப் பருவத்திலேயேஈசுவர நாமங்களை ஸ்தோத்திரஞ் செய்யக்கற்பிக்கவேண்டும். அதனால் அவர்கள் ஒருபலனையும் அடைவதாகநமக்குத் தோற்றாவிடினும் அவர்கள் வயதுவந்த பிறகு பக்திநிறைந்து

விளங்குகின்றனர். ஈசுவரனது திருநாமம் நம்மனதில் ஸாத்விக உணர்ச்சியைத் தோற்றுவித்து, பக்தி யுண்டாக்குவதை யுத்தேசித்தே நம் பெரியோர், சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் எம்பெருமானது திருநாமங்களையே பெயரிட்டழைக்கின்றனர். இவ்விஷயத்தில் நம் முன்னோர் அறிவையும், மற்ற மதத்தினர் ஈசுவர நாமமற்ற பலபெயர்களை வைக்கும் வழக்கத்தையும் நாம் கவனிக்க வேண்டும்.

* * *

நற்சொல் நல்லாரிடமே பெறப்படு மாதலால், நாம் நல்லார் சேர்க்கையை நாடவேண்டும். அப்பொழுது; பக்தி மிகும் நடத்தை நல்நடத்தை யாகும்; வாழ்க்கை உயர்வாழ்க்கை யாகும். அதுபற்றியே பஜகோவிந்தத்தில் ஸத்ஸங்கத்தினால், ஸங்கத்தைத் தேடாதிருப்பதும், ஸங்கத்தைத் தேடாதிருப்பதினால், பொருட்களின் மேலுள்ள ஆசையின் குறைவும், ஆசையின்மையால், சாந்தியும், சாந்தியினால் ஜீவன் முக்தியும் உண்டாகுமென ஆசாரியர் அருளியிருக்கின்றனர்.

* * *

ஒருவன் தன் மனதில் நல்லெண்ணங் கொண்டும், நற்சொற்கள் வசனித்துக்கொண்டு மிருப்பது நல்லதாயினும், அவை நற்காரியங்களால் பின் தொடரப்பட வேண்டும். ஸாதாரணமாய் ஒருவன் தன் மனதிலிருப்பதையே வெளியிற் கூறுவதும், அப்படியே தன் செய்கைகளால் தம்மனதி லிருப்பதையே விளக்குவதையும் நாம் காண்கிறோம். ஆகையினால், ஒருவன் பெரியாருடைய சரித்திரங்களைப் பற்றிப் பேசுவதாலும், பகவந்நாமத்தைத் தியானிப்பதாலும் தம்மனதை உயர்வாழ்வுக்கனுகுணமாகக் கொண்டு வருதல்போல, அவன் நற்காரியங்களைச் செய்வதாலும் தம்மனதை உயர் நிலைக்குக் கொண்டு வருதல் கூடும். ஏனெனில், நாம் எக்காரியத்தைச் செய்தாலும், அதைப்பற்றியோசிக்கவேண்டி யிருக்கின்றது. அதைப் பற்றி தன்னைச் சார்ந்தவர்களிடம் பேசவேண்டி யிருக்கின்றது. ஆகவே கருமத்தில் வாக்கும் மனமும் சம்பந்தப்பட்டு நிற்கின்றன. இதுபற்றியே அடியவர்க்குப் பணிசெய்தல் 'அதிதி பூஜை' முதலியவை அவசியமென நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனாலேயே தாயுமானவர்: " அன்பர் பணிசெய்யவென்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."
என்று நெஞ்சம் புளகிப்பக் கூறியுள்ளார்.

* * *

# ஸ்வதர்மம்.

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்கும் தெய்வம்
இலை முகப்பைம் பூண்இறை."—நீதிநெறி விளக்கம்

முன் ஒரு காலத்தில் கௌசிகர் என்னும் ஓர் அந்தண சிரேஷ்டர் கடுந்தவம் புரிந்து தாம் எண்ணியவாறே சகலமும் கைகூடும்படியான சக்தியைப் பெற்றார். ஒருநாள் அவர் ஓர் ஆலமரத்தடியி லுட்கார்ந்து தவம் செய்து கொண்டிருக்கையில் காக மொன்று அவர்தலையில் எச்சமிட்டது. அது கண்ட அம்முனிவர் மிக்க கோபமடைந்து அக்காகத்தை அண்ணாந்து பார்த்தார். அவர் அப்படிப் பார்த்தக்ஷணமே அக்காகம் எரிந்து சாம்பலாய்க் கீழே விழுந்துவிட்டது. பிற்பாடு மத்யானகாலம் நெருங்கியதும் அப்பிராமணர் பிக்ஷான்னம் கொண்டுவரும் பொருட்டு வெளிக்கிளம்பினார். அவர் ஒரு வீட்டிற்குச் சென்றதும் அங்கேயிருந்த பெண்மணி யொருவள் அவருக்குப் பிக்ஷான்னம் கொடுப்பதற்காக ஒரு பாத்திரத்தைக் கழுவிக் கொண்டிருக்கையில் அவள் புருஷன் மிகுந்த பசியால் களைத்துப்போய் வீட்டிற்குள்ளே நுழைந்தார். உடனே அவள் பிராமணரைக் கொஞ்சம் காத்திருக்கச் சொல்லிவிட்டுத் தன் கணவருக்குச் சிசுரூஷை செய்தாள். அவள் தன்கணவனைத் தெய்வமெனக் கருதும் பதிவிரதா சிரோமணி ஆகையால் அவரை மிகுந்த ஊக்கத்துடன் உபசரித்துக் கொண்டிருக்கையில் அவள் பிராமணரையும் மறந்து விட்டாள். பின்பு அவளுக்கு அவரைக் காத்துக்கொண்டிருக்கச் சொல்லியது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அவள் வெட்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் பிக்ஷான்னத்துடன் கௌசிகர் முன் தோன்றவே, பிராமணர் கோபத்துடன் அவளை நோக்கி, "நீ என்னைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு, இந்நேரம் வரை கவனியாத காரணமென்ன?" என்றார். அதற்கு அவள், "ஸ்வாமி, தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். எனக்கு என் பர்த்தா தான் குலதெய்வம். அவர் பசியால் களைத்து வந்தார். ஆகையால் நான் அவருக்குச் சிசுரூஷை செய்துகொண்டிருந்தேன்" என்றாள். அதைக் கேட்டதும் அவர், "பிராமணர் கோபத்திற்குப் பயந்து தேவர்களெல்லோரும் அவர்களை ஸ்தோத்

திரம் செய்ய, நீ மாத்திரம் அவர்களை உன் கணவனைவிடத் தாழ்மையாகப் பேசுகிறாயே. இது உனக்குத் தர்மமா?" என்றார். அதற்கு அவள் "பிராமணோத்தமராகிய உமக்கு இவ்வளவு கோபம் தகாது. நீர் உமது கோபத்தீயினால் மரத்தின்மே லுட்கார்ந்திருந்த காகத்தை யெரித்ததுபோல் என்னையும் எரிக்கமுடியாது. பர்த்தாவுக்குச் சிசுருஷை செய்வதுதான் எனது ஸ்வதர்மம். அவரையே நான் எல்லாத் தெய்வங்களிலும் உயர்ந்தவராக நினைக்கின்றேன். ஆகையால் அவருக்குச் செய்யவேண்டிய சிசுருஷைகளைச் செய்து முடித்தபின்பு உமக்கு பிக்ஷான்னம் கொண்டுவந்திருக்கிறேன். அதனால் தாங்கள் என்மீது கோபிக்கக் கூடாது. கோபமானது மனிதனுக்கு எல்லாவிதச் சத்துருவைக் காட்டிலும் பெரிய சத்துரு; தவிர காமக்குரோதங்களை யடக்கி எப்பொழுதும் சத்தியம் தவறாமலும், தீங்கிழைத்தவருக்குந் தீங்கிழையாமலும் வேதங்களைச் சரிவரக் கற்றும் இருப்பவனே உண்மையான பிராமணன்" என்றாள். உடனே கௌசிகர் திடுக்கிட்டு, "காகத்தைக் கொன்ற சமாசாரத்தை வீட்டிற்குள்ளிருந்த நீர் எவ்வாறு அறிந்தீர்?" என்றார். அதற்கு அவள், "நீர் காகத்தைக் கொன்ற சமாசாரம் எனக்குத் தெரியவந்ததின் காரணத்தை மிதிலாபுரியில் தருமநெறி தவறாது நடந்து மாம்ஸ வியாபாரம் செய்துவரும் தர்ம வியாதன் என்பவனைக் கேட்டால் தெரியும்" என்று சொல்லியனுப்பினாள்.

அவ்வாறே கௌசிகமுனிவர் மிதிலாபுரியிலுள்ள அம்மாம்ஸ வியாபாரியினிடத்திற் சென்றபொழுது, அவன் இவரைக் கவனியாது மாம்ஸம் வெட்டி வியாபாரம் செய்துகொண்டிருந்தான். அந்தணரும் வெகு நேரம் ஆச்சரியத்துடன் நின்றுகொண்டிருந்தனர். அம்மாம்ஸ வியாபாரியின் வேலைமுடிந்த பிறகு அவன் அந்தணரை வரவேற்று, "அந்தணரே, உம்மைப் பக்கத்தூரிலுள்ள பெண்மணியொருவள் இவ்விடத்திற்கு அனுப்பினளோ?" என்று கேட்டான். இதைக் கேட்டவுடனே கௌசிகர், மாம்ஸவியாபாரி அப்பெண் சொன்னதை யெவ்வாறு அறிந்தானென்று தெரியாமல் இன்னும் அதிக ஆச்சரியப்பட்டார். ஆனால் ஒன்றும் பேசாமல் அந்த மாம்ஸ வியாபாரியினுடன் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். அங்கு சென்றதும் அவன் அந்தணரைக் கவனியாமல் தன் பெற்றோருக்குச் சிசுருஷை செய்துகொண்டிருந்தான். அது முடிந்ததும் அந்தணனிடத்திற் சென்று அவரை யுபசரித்தான். அப்பொழுது அந்தணர் மாம்ஸ வியாபாரியை நோக்கி அவன் எவ்வாறு வேறிடங்களில் நடக்கும் சமாசாரத்தை யறியத்தக்க மேன்மையான சக்தியை யடைந்தானெனக் கேட்க, "ஸ்வாமி, நான் பெற்றோருக்குப் பணிவிடை செய்தலாகிய எனது ஸ்வதர்மத்தை



யனுஷ்டித்து வந்ததின் பலனாக இந்த மேன்மையான பதவியையடைந்தேன்" என்றான். மறுபடியும் கௌசிகர், "நீ ஏன் மாம்ஸ வியாபாரம் செய்யவேண்டு" மெனக் கேட்க, அவன் "நான் முன் ஜன்மத்தில் செய்த கர்மாவின் பயனால் இவ்வாறு வியாபாரம் செய்ய ஏற்பட்டது. இதில் வரும் லாபத்தைக் கொண்டுதான் எனக்கு ஜீவனம். நான் மிருகங்களைக் கொல்லாமல் இதர மனிதர்கள் கொன்ற மிருகங்களின் மாம்ஸத்தைத்தான் வியாபாரம் செய்கிறேன்; ஆனால் நான் மாம்ஸம் புசிப்பதில்லை. மாம்ஸ வியாபாரியாக இருந்தபோதிலும் நான் சத்தியந் தவறாமல், பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்தும் பெரியோர்களை வணங்கியும் சன்மார்க்கத்திலேயே ஒழுகிவருகிறேன். தவிர எந்தத் தொழிலிலும் கொஞ்சமேனும் கொடுமையிருக்கிறது" —என்று சொல்லிவிட்டுப் பெரியோர்கள் யாரென்பதைப் பற்றியும், முன் ஜன்மத்தின் கர்மப்பயனாக இப்பொழுது துக்கம் அனுபவிக்கவே வேண்டும்; ஆனால் இப்பொழுது ஸ்வதர்மத்தைக் கைவிடாமல் நன்னெறியைக் கடைப் பிடிப்போமாயின் இனிமேலாவது நற்கதியை அடையமுடியுமென்பதைப் பற்றியும், ஆத்மா சாசுவதமானது என்பதைப் பற்றியும், பூமி, நீர், அக்னி, வாயு, ஆகாயம், முதலியவற்றின் குணங்களைப்பற்றியும், இன்னும் இவைகளைப் போன்ற அநேக விஷயங்களைப்பற்றியும் கௌசிகருக்குச் சொன்னான். உடனே பிராமணர் "உனக்குச் சகலசாஸ்திரமும் நன்றாகத் தெரியும்" என்று சொல்லவே, அவன் "பெற்றோர்களையும், அக்னியையும் ஆத்மாவையும், குருவையும் பூஜிப்பவர்களுக்கு எல்லா சாஸ்திரங்களும் தெரியவரு"மென்று சொன்னான். பிற்பாடு அவன் கௌசிகரை அழைத்துச் சென்று தன் பெற்றோர்களைக் காட்டி இவைகளெல்லாவற்றையும் அவர் அறியும் பொருட்டுத்தான் அப்பெண் அவரை அவனிடம் அனுப்பினாளென்றும் சொன்னான். பிறகு கௌசிகரைநோக்கி "நீர் உமது பெற்றோர்களின் உத்தரவில்லாமல் வீட்டைவிட்டு வந்து விட்டீர். அவர்கள் குருடராய் உமது பிரிவைச் சகியாதவர்களாகி வருத்தப்படுகின்றனர். நீர் போய் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வீராகில் உன்னத கதி கிடைக்கும்" என்று சொல்லித் தான் முன் ஜன்மத்தில் சிரேஷ்டமான பிராமணராக இருந்ததாகவும், தான் ஒரு ரிஷியின் சாபத்தினால் மாம்ஸ வியாபாரியாகப் பிறந்த வரலாற்றையும் சொன்னான். உடனே கௌசிக முனிவருக்கு ஞானோதயமாயிற்று. அவர் திரும்பிச் சென்று பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்தலாகிய தன் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து நற்கதியை அடைந்தார். ஆகவே ஒவ்வொருவரும் தங்களுடைய ஸ்வதர்மத்தைக் கைவிடாது செய்வார்களாயின் அவர்கள் எல்லாத் தர்மங்களிலும் மேன்மையான தர்மங்களைச் செய்தவர்களாய் மோக்ஷத்தையடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

துன்மதி௵ தக்ஷிணாயனம் வர்ஷருது, புரட்டாசி௴
(கிறிஸ்துசகம் 1921, ஸெப்டம்பர்-அக்டோபர்.)

| புரட்டாசி | ஸெப்டம்பர் | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | வெ | சஷி-1140 | சத-20-37 | |
| 2 | 17 | சனி | ○பௌ-16-41 | பூட் 26-54 | அனந்த விரதம் |
| 3 | 18 | ஞா | ப்ர-20-55 | உட்-32-26 | மகாளய பக்ஷாரம்பம் |
| 4 | 19 | திங் | த்வி-24-15 | ரே-37-3 | |
| 5 | 20 | செவ் | த்ரி-26-33 | அசு-4?-39 | |
| 6 | 21 | புத | சது-27-42 | பர-43-7 | |
| 7 | 22 | வியா | பஞ்-27-37 | கார்-44-21 | மகாபரணி |
| 8 | 23 | வெ | ஷஷ்-26-14 | ரோ-44-16 | கிருத்திகை |
| 9 | 24 | சனி | ஸப்-23-2? | மிரு-42-52 | |
| 10 | 25 | ஞா | அஷ்-19-24 | திரு-40-9 | |
| 11 | 26 | திங் | நவ-14-5 | புன-36-17 | |
| 12 | 27 | செவ் | தச-7-13 | பூச-31-26 | |
| 13 | 28 | புத | ஏகா-0-30<br>த்வா-52-43 | ஆயி-25-51 | ஸ்மார்த்த ஏகாதசி<br>வைஷ்ணவ ஏகாதசி |
| 14 | 29 | வியா | த்ர-44-13 | மக-19-53 | |
| 15 | 30 | வெ | சஷி-36-51 | பூரம்-13-51 | பிரதோஷம்<br>போதாயன அமாவாசை |
| 16 | 1 | சனி | ● அ-28-27 | உத்ர-8-8 | |
| 17 | 2 | ஞா | ப்ர-22-56 | ஹஸ்-3-8<br>சித்-59-13 | மகாளய அமாதர்ப்பணம்<br>நவராத்திரி ஆரம்பம் |
| 18 | 3 | திங் | த்வி-17-36 | சுவா-56-41 | |
| 19 | 4 | செவ் | த்ரி-13-47 | விசா-55-50 | கே |
| 20 | 5 | புத | சது-11-42 | அனு-56-47 | |
| 21 | 6 | வியா | பஞ்-11-31 | கேட்-59-34 | 4-19 சிம்—சுக்<br>9-0 துலா-பு<br>29-41 கன்-சுக் ; சுக் |
| 22 | 7 | வெ | ஷஷ்-13-11 | மூல-60-0 | செ |
| 23 | 8 | சனி | ஸப்-11-36 | மூல-4-5 | |
| 24 | 9 | ஞா | அஷ்-21-25 | பூரா10-0 | ரவி-புத |
| 25 | 10 | திங் | நவ-27-11 | உ-ரா-16-54 | கு-ச-ரா |
| 26 | 11 | செவ் | தச-33-24 | திரு-24-19 | சரஸ்வதி பூஜை |
| 27 | 12 | புத | ஏகா-39-32 | அவி-31-43 | விஜயதசமி |
| 28 | 13 | வியா | த்வா-45-8 | சத-38-38 | |
| 29 | 14 | வெ | த்ர-49-50 | பூட்-4?-44 | |
| 30 | 15 | சனி | சஷி-53-26 | உட்-49-47 | |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1] துன்மதி௵ ஐப்பசி௴ [பகுதி 10

உ

## கடவுள் வணக்கம்.

தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி.
என்னுடலாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுனமுத் திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயை கனவெனக் காட்டி
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னடியிணை யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி.

—நற்கீரதேவர்,

# குருதேவர் வாக்கியம்.

(99-ம் பக்கத் தொடர்ச்சி.)

## மாயையினியல்பு.

மைந்த! மாயையின் றன்மையை யுணர்தியோ?
மன்னுநீர் குளத்தின்மேல்
வந்த பாசியை யகற்றினு லகன்றிடு
மறுகணந் தொன்றுகும்
இந்த நீர்மையே சாதுசங் கத்தினல்
இயன்றநல் விசாரத்தாற்
சிந்தை தூய்மையாங் கணத்தினி லவாவிருட்
டிரைமறைத் திடுமென்றே.

மாயையின் இயற்கை என்னவென்று வினவுகிறாய்? அது ஒரு குளத்தில் மிதந்து கொண்டிருக்கும் நாணற் புற்களைப்போன்றது. வேண்டியபோது அப்புற்களை நீக்கிவிடலாம்; ஆனால் (நாம் கை எடுத்தவுடனே) அவை மறுபடியும் அந்த இடத்தை மறைத்துக் கொள்ளும். அதைப்போலவே, நீ சிந்தனை செய்து ஸத்ஸங்கம் செய்யும் வரையிலும் (இவ்வுலகத்தைப் பற்றின) உண்மை விளங்கும். ஆனால், அவைகளை விட்டு நீங்கினவுடனே இம்மண்ணுலக ஆசைகள் மாயை யென்னும் திரையால் உண்மையை மறைத்து விடும்.

பல்லிலே கொடு விடமமைந் திருப்பினும்
பாம்புக்கோர் குறையில்லைக்
கொல்லு நீர்மைய தேனைய வுயிர்க்கிந்தக்
கொள்கைபோற் சகத்தோற்றம்
புல்லு மீசர்பா லென்னினும் புறத்தனுய்ப்
பொருவிலான்றனி யிற்பான்
சொல்ல மின்றபொய்ச் சகமுள பொருளெனத்
தோற்றுவ தெமக்காமே.

பாம்பின் பற்களில் விஷமிருந்த போதிலும் அப்பாம்பு கொஞ்சமேனும் தீங்கடைவதில்லை; அது இறப்பதுமில்லை. ஆனால் பாம்பு எதையேனும் தீண்டினால், தீண்டப்பட்டதற்கு அந்த விஷம் கெடுதி செய்கிறது. இதைப்போலவே இம்மாய உலகம் ஈசுவரனிடம் நிலை நிற்கின்றது. ஈசுவரனே இவ்வுலகத்திற் கப்பாலும் உள்ளும் அடங்கி இருக்கிறார். நமக்குத்தான் மாயமான இப்பிரபஞ்சம் நிலைத்திருப்பதாகத் தோன்றுகிறது. 2

மாயை யென்பதுந் தயையென மொழிவதும்
வகுத்துரைத்திடின் மாயை



தாயர் தந்தையர் மனைமகார் சோதரார்
தமரெனுமிவர் மீது
போய சிந்தையாம் இறையெங்கு முளனெனும்
பொருவில்ஞானத்தால்வந்
தேயு மெவ்வுயிர் மீதினுஞ் சென்றிடும்
இயல்பது தயையாமே.

மாயை (பாசம்) என்பதற்கும் தயை என்பதற்கு முள்ள வேற்றுமையென்ன? பெற்றோர், உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரிடம் இருக்கும் பந்தமும் அன்புமே மாயை எனப்படும். எல்லா ஜீவர்களிடமும் ஸமமாய்த் தோன்றும் அன்பு, தயை எனப்படும். ஈசுவரன் ஸர்வாந்தர்யாமி என்ற அறிவிலிருந்தே இந்தத் தயை உண்டாகிறது. 3

பேய்பிடித்தவன் றன்னைப் பேய் பிடித்திடும்
பெற்றியை யுணரிற்பேய்
போயகன்றிடு மொருகணப் பொழுதினிற்
புரையுறு மிருவாதை
மேயசீவனு மாயைபற் றியதென
மெய்யுணர் வெய்துங்கால்
மாயை சென்றிடத் தூயனுய் நின்றிடு
மரபுமிங்கிது போலும்.

பேய் பிடித்தவனுக்குத் தன்னை ஓர் பேய் பிடித்துக் கொண்டது என்ற அறிவு தோன்றினால் உடனே அந்தப் பேய் அவனை விட்டு விலகுகின்றது. அதைப்போல் மாயையால் பீடிக்கப்பட்ட ஜீவன், தான் ஏமாந்ததை அறிந்தவுடனே மாயையிலிருந்து விடுபடுகிறான். 4

அன்னை ஜானகி யிடைநிற்பி னிலக்குவ
னண்ணலைக் காணும்
பின்னை யங்கவள் விலகிடிற் காண்பனிப்
பெற்றியிற் சீவான்மா
பன்னு மாயையாந் திரையிடைகது விடிற்
பரமனைக் காணுதாம்
முன்னர் நின்றவத்திரை யகன்றிட்டபின்
முதல்வனைக்காண் கும்மே.

மாயை யென்னும் திரையானது நம்பார்வையிலிருந்து ஈசுவரனை மறைத்து வைக்கின்றது. இந்தத் திரை நீங்கும் வரையிலும் பரமாத்மனை நாம் அறிய முடியாது. உதாரணமாக ஸ்ரீராமர், லக்ஷ்மணருக்கு இரண்டு மூன்றடிகள் முன் செல்வதாகவும் இவ்விருவருக்கும் நடுவில் சீதாபிராட்டியார் போவதாகவும் வைத்துக் கொள்வோம். இதன்படி ஸ்ரீராமரே, பரமாத்மன், லக்ஷ்மணரே ஜீவன், ஸீதைதான் மாயை. ஜானகி பிராட்டியார் இருவருக்கும் நடுவிலும் இருக்கும் வரையில் ஸ்ரீராமரை லக்ஷ்மணரால் பார்க்க முடியாது. எமதன்னை ஸீதா தேவியார், கொஞ்சம் வழிவிட்டு நின்றால் தான் லக்ஷ்மணர் ஸ்ரீராமரைப் பார்க்க முடியும். 5

# த்யானம்.

(ஸ்ரீமத் ராமக்ருஷ்ணாநந்த ஸ்வாமிகள்)

தன்னை முற்றிலும் மறந்திருக்கும் நிலையே த்யானமெனப்படும். ‘நான்’ என்னும் அஹங்காரத்தை யொழித்தவனொருவனுக்கு பட்டுமே த்யானம் பண்ணுவது ஸாத்தியமாகும். மிகவும் புகழ்பெற்ற வஸ்துவின் முன் சிறிதுமட்டுமே புகழ்பெற்ற வஸ்துக்கள் இருந்தவிடங்கூடத் தெரியாமற் போய்விடுகின்றன; உதாரணமாக ஸூர்யன் உதயமாகும்பொழுது நக்ஷத்திரங்களெல்லாம் மறைந்துவிடுகின்றன. அதேமாதிரியாக, தேஜோமயமான ஈச்வரன் முன்னிலையில் அற்பமான அஹங்காரம் அழிந்துவிடுகின்றது. எப்பொழுது மனிதன் ஸகல வஸ்துக்களையும் துறந்துவிட்டுத் தன்னுடைய நிர்பாக்கியஸ்திதியை யுணர்கிறானோ அப்பொழுதுதான் அவனுக்கு ஈச்வர ஸ்வரூபம் தெரியவரும். அப்பேர்ப்பட்ட ஸ்திதியையடைந்து, அந்த நிலையிலேயே கொஞ்சநேரமாவது நிலைத்திருந்தால், ஈச்வரனைப்பற்றிய எண்ணங்கள் எவ்வளவு சீக்கிரமாக உண்டாகின்றனவென்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஸதா அப்பேர்ப்பட்ட நிலையிலேயே யிருந்துவிட்டால், எப்பொழுதும் ஈச்வர ஸ்வரூபம் விளங்கிக்கொண்டேயிருக்கும்.

"நான் இந்தக் கண்களால் அவரைப் பார்க்க முடியவில்லை; இந்தக் காதுகளால் அவர் பேசுவதைக் கேட்க முடியவில்லை; என்னுடைய கைகளால் அவரை ஸ்பர்சிக்க இயலவில்லை; ஆதலால் நான் எவ்விதம் அவரை யறியமுடியும்?" என்று சொல்பவன் ஈச்வரனை யுணரமுடியாதென்றே சொல்லவேண்டும். ஸிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களை யுணரும் பொருட்டே, இந்திரியங்களெல்லாம் உண்டாக்கப்பட்டிருக்கின்றன; ஸிருஷ்டி கர்த்தாவாகிய ஈச்வரனை யுணரும் பொருட்டல்ல. நாம் ஈச்வரனை யறியவேண்டுமானால், ஸிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களிடம் நம்மை யெடுத்துச் செல்லும் இந்திரியங்களின் உதவியை விலக்கித் தள்ளவேண்டும். இந்திரியங்களையும் மனஸையும் உதவிக்காக எதிர்பார்க்கக்கூடாது. இவைகளின் உதவியை யெதிர்பார்க்கும் வரையில், அஹங்காரம் முற்றியிருக்கின்றதென்பதும், த்யானம் செய்வது ஸாத்தியமாகாதென்பதும் நிச்சயம். ஆதலால் இவற்றின் வேலைகளை நிறுத்தவேண்டும். அஹங்காரத்தை யொழித்து, இந்திரியங்களுக்கும் மனதுக்கும் அப்பாற் சென்றுவிடுவோமேயானால், தியானிக்கும் சக்தி தானாகவே நமக்கு ஏற்படும்.



"நான் கர்த்தாவல்ல, நானல்ல, நீரே" என்று சொல்லி அப்பியாஸம் செய்வதே அந்நிலையை யடைவதற்கு மிகவும் ஸுலபமான மார்க்கமாகும்.

ஈச்வரன் எல்லோருடைய ஹ்ருதய கமலத்திலும் வஸிக்கிறார்; ஆதலால் அவர் நம்மில் ஒவ்வொருவனுக்கும் மிகவும் கிட்டியவராயிருக்கிறார். ஆனால், வெகுகாலமாய் உலக விஷயங்களால் கவரப்பட்டிருந்த நம்முடைய மனஸைத் திரும்பவும் நம்மிடம் கொண்டுவருவது மிகவும் கஷ்டமான காரியமாயிருக்கின்றது. ஆதலால் ஞானமாகிய கத்தியினால் லோக விஷயங்களிடமுள்ள பற்றை யறுத்துவிடவேண்டும். "என்னுடைய மனஸையடக்கி ஒரு நிலைப்படுத்துவது எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கின்றது; என்னுடைய உத்தியோகத்தையும், வீட்டுவேலைகளையுமே ஸதா அது நாடுகின்றது; ஈச்வரனிடம் அதை நிலைநிறுத்த என்னால் முடியவில்லை; காரணமோ தெரியவில்லை" என்று அநேகர் என்னிடம் முறையிடுகின்றனர். "அப்பேர்ப்பட்ட மனிதனுடைய மனஸ் அவனுக்குரிமையான பொருளல்ல; அதையவன் தன்னுடைய உத்தியோகத்திற்கும், வீட்டு வேலைகளுக்கும் விற்றுவிட்டான்; ஆதலால் அவன் எவ்விதம் அவனுடைய மனஸைத் தன்னிஷ்டப்படி நடக்கும்படி செய்யமுடியும்?" என்பதே என்னுடைய ஸமாதானம். பலவிஷயங்களால் கவரப்பட்ட மனஸைக்கொண்டு, தத்வத்தையுணர அத்யாவசியமாயிருக்கும் ஒரு நிலைப்படுத்தும் சக்தியையும், த்யானம் செய்யும் சக்தியையும் அடைவது மிகவும் அஸாத்யமாகும். இயேசுகிறிஸ்துநாதர் பரிசுத்தமான ஹ்ருதயத்தை யுடையவர்கள் மட்டுமே ஈச்வரனைக் காணமுடியும் என்று கூறியிருக்கின்றனர். நிஷ்களமானதும், மாறுதலில்லாததாயுமிருக்கும் வஸ்துவே பரிசுத்தமானதென்று சொல்லப்படும். ஆதலால், ஒரே விஷயத்தில் செல்லும் மனதுதான் பரிசுத்தமானதென்று கொள்ளப்படவேண்டும். நமக்குத் தெரிந்தவரையில், மனஸ் ஆசைகளால் கவரப்பட்டது; ஆசைகளாலானது. ஸ்வயநலத்தைப்பற்றிய ஆசைகளை விட்டொழித்தபின், பரமாத்ம ஸ்வரூபத்தைத்தவிர வேறொன்றும் நிற்பதில்லை. களங்கமற்ற மனஸிற்கும், ஆத்மாவிற்கும் ஒரு வித்தியாஸமுமில்லை. ஆதலால், ஈச்வரனைக்காண விரும்பும் ஒவ்வொருவனும், தன்னைப்பற்றிய விஷயங்களின் பற்றையொழித்து மனஸை ஒரே விஷயத்தில் செலுத்த அப்யஸிக்கவேண்டும். ஏனெனில், இயேசுநாதர் அருளியபடி, ஒரே விஷயத்தில் திருஷ்டியுடையவன், ஞானத்தினால் பிரகாசிக்கிறான்.

மனஸையும் இந்திரியங்களையும் அடக்கியாள்வதற்கு அநேக வழிகளையனுசரிக்கலாம். ஆனால், இந்த மார்க்கங்களெல்லாம், அப்யாஸத்தையே முக்கியமாய்க் கொண்டவைகளாயிருக்கின்றன. உன்

னுடைய ஹ்ருதயத்தைப் பக்தியால் நிரப்பிக்கொள்; அப்பொழுது தான் உன் மனஸ் ஈச்வரனைநாடும். ஏனெனில், நாம் விரும்பும் வஸ்துவைத்தான், நாம் சிந்திக்கின்றோம். நம்மில் ஒவ்வொருவனும், ஸச்சிதானந்த ஸ்வரூபியாகிய ஈச்வரனை நினைத்தவண்ணமாகவேயிருக்கிறான்: ஏனெனில் ஒவ்வொருவனும், நீண்ட ஆயுஸ்ஸையும், ஞானத்தையும், இடைவிடா ஆனந்த நிலையையும் விரும்புகின்றான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மாம்பழத்தைப் பார்க்காமலேயே, அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஒரு மனிதன், தனக்குப் பிறர் சொல்லும் வரையில் தான் சாப்பிடுவது மாம்பழமென்று தெரியாமலே எவ்விதம் அதைப் புசித்துக்கொண்டிருப்பானோ, அதேமாதிரியாக நாம் அறிந்துகொள்ளாமலேயே நாம் ஈச்வரனை நினைத்துக் கொண்டிருக்கிறோம். பிறர் நமக்குச் சொல்லும்வரையில் நாம் அவரை நினைத்துக்கொண்டிருக்கிறோமென்பதை யுணர்வதில்லை. இந்தப் பூகோலத்தில் நாம் ஸதா விரும்புவது ஈச்வரனேயென்று நாம் தெரிந்துகொண்டோமானால், அவரை யுபாஸிப்பது கஷ்டமான கார்யமாகாது. அப்பொழுது நம்முடைய சித்தம் முழுவதும் ஒரே தாரையாக அவரை நோக்கிப் பிரவஹிக்கும். த்யானம் செய்வதும் மிகவும் ஸுலபமாகும்.

---

# ஸ்ரீ துர்க்காசரண நாக மஹாசயரின் திவ்யசரித்திரம்.

(289-ம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்காசரணருக்கு ஸுரேசன் என்று அத்யந்த நண்பரொருவருண்டு; இவருடன் மஹாசயர் அடிக்கடி கங்கைக்கரை சென்று நீண்ட நேரம் தியானத்திலும் பகவந்நாம ஸங்கீர்த்தனத்திலுங் கழித்து வருவது வழக்கம். சில சமயங்களில் இருவருஞ் சேர்ந்து பாகவதம் பாரதம் முதலிய சிறந்த நூல்களைப் பக்தி சிரத்தையுடன் படித்தானந்திப்பார்கள். ஜடபரதர் கதையைப் படித்தபொழுது, ஒரு மானின் மேற்கொண்ட சிறுபற்றால் அம்மஹானே பிரமையடைய வேண்டி நேர்ந்திருக்க, ஸாதாரண மனிதர்கள் எவ்வாறு உலகப் பற்றுடன் மோக்ஷத்தையடைய முடியுமென்று இவர் சிந்தித்தார். தன்னைப்பற்றி நினைக்குந்தோறுந் தனக்கு விவாகமென்னுங் கால் கட்டேற்பட்டிருப்பதாயும் தான் பணம் சம்பாதிப்பதால் மதி மயங்கிருப்பதாயும், நாளுக்கு நாள் பந்தங்கள் அதிகரிப்பதாயும் நினைத்து இவைகளைக்கடந்து செல்லவேண்டுமென்ற தீவிரமான அவாக் கொள்ளலானார்.



இந்த நிலையில் இவரொரு ஸாதுவை ஸந்திக்க, அவர் "அப்பா! நீ மஹாபக்தன்; சீக்கிரமே ஸத்குருவையடைந்து அவரிடம் ஞானோபதேசம் பெற்று மேலானபதவியை யடைவாய். குருஸேவையாலன்றி ஆத்மதத்துவம் விளங்காதன்றோ?" என்று கூறக்கேட்டு, அந்நாள் முதல் தனக்குத்தக்க வழிகாட்ட குருமூர்த்தமாயெழுந்தருள வேண்டுமென்று ஜகன் மாதாவைக்குறித்து இடைவிடாது பிரார்த்திக்கலானார். கங்கைக் கரையிலுட்கார்ந்துகொண்டு காலை மாலைகளில் ஸ்நாநத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் வரும் பிராம்மணர்களையெல்லாம் பார்த்து, இவரில் எவரேனும் தனக்குபதேசம் செய்யுங் குருவாயிருக்கலாகாதா? என்றேங்குவார். இவ்வாறு பல நாட் கழிந்த பின் ஒருநாட் காலை இவர் ஆற்றில் ஸ்நாநம் செய்து கொண்டிருக்கையில் தானிருக்குமிடத்தை நோக்கி ஒரு படகு வருவதைக் கண்டார். அது அருகில்வந்ததும் அதிலுள்ளவர் தம் குலகுருவாகிய ஸ்ரீ கைலாச சந்திர பட்டாசாரியரெனக் கண்டு மகிழ்ந்து அவரை வணங்கி யுபசரித்துக் கல்கத்தாவுக்கு வந்த காரணத்தை வினயத்துடன் அறிய விரும்பினார். அந்த பூஜ்யர் 'அப்பா! ஜகன்மாதாவின் கட்டளையால் உனக்கு உபதேசம் செய்யத்தான் இங்குவந்தேன்' என்று கூறக் கேட்டு துர்க்கா சரணர் எய்திய மகிழ்ச்சியை நாமென்னென்போம்.

உடனே பரபரப்புடன் குலகுருவைத் தன் வீடழைத்துச் சென்று அவருக்கு சிரமபரிகாரஞ் செய்வித்து, மறுநாட்காலை விதிப்படி தன் தர்ம பத்னியுடன் 'சக்தி மந்த்ரம்' உபதேசிக்கப்பெற்றார்.

பின்னர் நாள் முழுவதையும் துர்க்காசரணர் தியானத்திலும் ஜபத்திலும் விரதத்திலும் உபவாசத்திலும் கழிக்கத் தொடங்கினார். இரவில் வீட்டிற் றங்காமல் கங்கைக்கரை சென்றுவிடுவார். கிருஹஸ்தாசிரமத்தைத் துறந்து எல்லாப்பற்றையும் விட்டுத் தனியே கானகஞ் செல்ல அவாவினார். இதையுணர்ந்த அவர் மனைவி, அவரை வணங்கி "ஸ்திரீகட்குக் கணவனைத்தவிர வேறு கடவுளுண்டோ? நீர் கானகஞ் செல்வீராயின் நானென்ன செய்வது? தங்களுக்கு இதுவரை ஒரு பிழையும் செய்திலனே? தாங்கள் ஏன் என்னை விட்டகலவேண்டும். தங்களுக்கு சிசுருஷை செய்துகொண்டு தங்களருகிலிருக்க அனுமதிதரவேண்டும்." என்று தழுதழுத்து மொழிந்தாள். நாகமஹாசயர் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இந்த ளத்தை உடலில் பக்திசெய்து என்னபயன்? ஜகன் மாதாவையே சரணடை. அதனாலேயே முக்திபெறலாம்," என்றுபதேசித்தார். மனைவியுங் கணவன் விருப்பத்துக்கிசைய நடந்துகொண்டு, வயது கடந்த மாமனாருக்குங் கணவனுக்கும் சிசுருஷை செய்வதை பகவத் கைங்கரியமாய்ப் பாவித்துவந்தாள்.

இதையெல்லாம் மிகுந்த கவலையுடன் கவனித்துவந்த தீனதயாளுவுக்கும் மூப்பு மேலிட்டது, ஆகவே துர்க்காசரணர், அவரை எல்லாக் கவலைகளையும் விட்டு தேவபாக்குக்குப் போகும்படிச் செய்து தன்மனைவியையும் அவருக்கு சிசுருஷை செய்வதற்காக அனுப்புவித்தார்.

பின்னர் துர்க்காசரணர் தன்னந்தனியாகவும், சில சமயங்களில் ஸுரேசனுடனும் பகவத் ஸ்மரணையிலேயே காலங்கழித்துவந்தார். இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஸுரேசர் கல்கத்தாவுக் கருகில் கங்கைக்கரையிலுள்ள தக்ஷிணேசுவராலயத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் என்று, ஓர் மஹானிருப்பதாயும் அவர் தம்மைச்சரணடைந்தோரை ஸம்ஸாரஸாகரத்தினின்று கரையேற்றுங்கருணாநிதி யென்றும் பிரம்மஸமாஜத்தலைவரான கேசவசந்திர ஸேனர் கூறக்கேட்டு, கேட்டது கேட்டவாறு துர்க்காசரணரிடம் கூறினர். துர்க்காசரணரும் அம்மஹானுடைய பிரபாவத்தைக் கேட்டதும் அவரைக் காலதாமதமின்றியில் சென்று தரிசிக்க வேண்டுமென்று, உடனே தட்சிணேசுவரத்தை நோக்கிப்புறப்பட்டனர், நடுமத்தியானக் கடுவெயிலாயிருந்தும். ஆவல் மேலிட்ட மனத்தராய் வழிநடந்தனர். பகல் இரண்டு மணிக்குக் களைப்பால் கைகால்கள் சோர தட்சிணேசுவராலயத்தை யணுகினர். உட்புகுந்து ஸ்ரீராமகிருஷ்ண தேவருடைய அறைக்கருகிற் சென்று அங்கு வெளியே நின்ற ஒருவரைப்பார்த்து 'பரமஹம்ஸ தேவரைக் காணலாமோ?' வென, 'அவர் சந்திரநாகூர் போயிருக்கின்றார்' எனக் கூறக்கேட்டுத் துயரக்கடலிலாழ்ந்து முகம்வாடி நின்றனர். அத்தருணத்தில் அறைக்குள்ளிருந்து ஒரு பெரியவர் தங்களை உள்ளே வரும்படியழைக்கக் கண்டு, அவரே தாங்கள் காணவந்த மஹான் என நிச்சயித்துக் கொண்டு உடனே உள் சென்று பகவானுடைய பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்துக் கைகூப்பி நின்றனர். அவர் எதிரிலிருந்த ஆஸனத்திலுட்காரும்படி யாக்ஞாபிக்க அவ்வாறே உட்கார்ந்தனர். நாகமஹாசயர் பகவானுடைய பாததூளியை எடுத்துச் சிரசில் தரித்துக் கொள்ள விரும்பி நெருங்கிய பொழுது பகவான் கால்களை எடுத்துக்கொண்டு அவர் தொடாமல் தடுத்துவிட்டார். இதனால் மஹாசயர் மிக்கவருத்தமுற்றுத் தான் 'அவரை ஸ்பர்சிக்க அருகனல்லவென்றே பகவான் அவ்வாறு செய்தாரென நினைத்தார்.

பகவான் 'அறைவாசலில் நின்று உங்களிடம் பொய்யுரைத்தவன் சிறிது பித்துப்பிடித்தவன்' என்று சமாதானம் சொல்லி விட்டு அவர்களுடைய வரலாற்றை விசாரித்தபின் "நீங்கள் பங்கல மென்னும் மீனைப் போன்றிவ்வுலகிலிருங்கள். கிருஹஸ்தனாயிருப்பது



தவறல்ல. பங்கல மீன் சேற்றில் வசித்தாலும், அதன் மேல் சேறு ஒட்டுவதில்லை. அதுபோலவே நீங்களும் மனம் அழுக்கடையப் பெறாமல் வீட்டிற்றங்கியிருங்கள்" என்று உபதேசித்தருளினர். நெடுநாளாய் ஸந்நியாஸியாக வேண்டுமெனச் சிந்தித்துக் கொண்டிருந்த மஹாசயர் தன்மனோ வியாதியறிந்து மருந்து கொடுத்த பகவானை ஆனந்தாதிசயத்தாலுற்று நோக்கினர். இதைக் கண்டு பகவான் 'ஏன் என்னை அவ்வாறுற்றுப் பார்க்கிறாய்?' என, மஹாசயர் "தேவரீரைக் கண்டகண்கள் வேறொன்றைக்காண மனமில்லாதனவாய்ப் பதிந்து நிற்கின்றன' என்றனர். சிறிது நேரங்கழித்து பகவான் அவர்களைப் பஞ்சவடிக்குச் சென்று சிறிது தியானத்திலிருக்கும்படி யாக்ஞாபித்தார். அவ்வாறே தியானம் செய்துவிட்டுத் திரும்பியபின் பகவான் அவர்களை யழைத்துப்போய் அங்குள்ள பல ஆலயங்களிலும் தர்சனம் செய்வித்தருளினர். மாலை ஐந்து மணிக்கு ஸுரேசரும் மஹாசயரும் பகவானிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தங்களிருப்பிடமேகினர்கள். பகவான் அவர்களை யடிக்கடி வரும்படி அன்புடன் சொல்லியனுப்பினர்.

துர்க்காசரணர் பகவானை விட்டகன்றாலும் அவர் மனம் இடைவிடாமல் பகவானிடமே நின்றது. அவர் பித்துப்பிடித்தவர்போல் தனக்குத்தானே பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் ஆகாரம் நித்திரை முதலியவைகளைப் பற்றிச் சிந்தியாமலும், பிறருடன் பேசாமலும் ஸ்ரீராமகிருஷ்ண தேவரையே ஸ்மரித்துக்கொண்டிருந்தார்.

அடுத்தவாரம் நண்பர்களிருவரும் மறுபடி பகவானைப் பார்க்கச் சென்றனர். பகவான் துர்க்காசரணரைக் கண்டமாத்திரத்தில் ஆனந்தித்து 'உங்கள் வரவையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்' என்று கூறி, அவரைத்தனக்கருகிலுட்காரச் சொல்லி மிகுந்த அன்புடனும் ஆதரவுடனும் "குழந்தாய்! பயப்படாதே! நீ அடைந்திருக்கும் நிலை மிக்க உன்னதமானது. இன்னும் மேலான நிலையையும் அடையப்போகிறாய்" என்று கூறினர். பின்னர் முன் போலவே பஞ்சவடி சென்று தியானத்திற் சிறிது நேரமிருக்கும்படி பகவான் கட்டளையிட அவ்வாறேயிருந்து விட்டு வந்ததும், ஸுரேசனைப் பார்த்து பகவான் 'துர்க்காசரணன் ஓர் கொழுந்துவிட்டெரியும் தீ' என்று சொன்னர். பின் மஹாசயருக்குப் பகவான் தீர்த்தங் கொண்டு வருவதும் வஸ்திரம் எடுத்துக் கொடுப்பதும் போன்ற சிறு வேலைகளிட, அவர்காலா லிட்டதைத் தலையால் செய்து களித்தார். எனினும் முதல் நாள் நடந்த விஷயத்தாலுண்டான வருத்தம் மாறவில்லை.

மற்றொரு நாள் பகவான் ஏகாந்தமாயிருக்கையில் மஹாசயர்

தனியே சென்று ஸேவித்தார். பகவான் அவரை நோக்கி "நீ வைத்தியனாயிற்றே! என் காலில் என்ன விருக்கிறதென்று பரிசோதித்துப் பார்" என்றார். அவ்வாறே பார்த்துவிட்டு மஹாசயர் "ஒன்றுமில்லை" யென்ன பகவான் "மறுபடியும் கவனித்துப்பார்" என்றார். பின் அவர் பாதங்களை இறுகத்தழுவித் தன் தலைமேலும் மார்மேலும் வைத்துக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

மற்றொரு நாள் பகவான் ஒரு பக்தனுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில், "வக்கீல்களும், வியாபாரிகளும் வைத்தியர்களும் கடவுளை நாடுவது வெகுசிரமம்" என்றும், வைத்தியர்களைக் குறித்து "அவர்கள் மனம் எப்பொழுதும் மருந்துத் துளிகளின் மேலிருப்பதால் இந்த பிரம்மாண்டத்தை அறிய அவகாசமெங்கே?" என்றுங் கூறினார். இக்காலத்தில் தியானத்தில் மஹாசயர் முன் நோயாளிகளின் நினைவும் உருவும் அடிக்கடி தோன்றிற்று. ஆகையால் பகவான் கூறியது தனக்கே யென நினைத்து வீட்டுக்குச் சென்றதும் மருந்து சீசாக்களையும் புஸ்தகங்களையுங் கொண்டுபோய்க் கங்கையிலெறிந்து மூழ்கிவிட்டுத் திரும்பினார்.

இச்செய்தி தீனதயாளுவின் செவிக்கெட்டியது. உடனே அந்த வயோதிகர் கல்கத்தாவுக்கு வந்து ஹரிசரணபாலைக் கண்டு தம் குமாரனை அவர்கள் கடையில் உத்யோகத்திலெடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவர் சம்மதித்து துர்க்காசரணரை யெடுத்துக் கொண்டார். மஹாசயர் தகப்பனாரைத் திருப்தி செய்வதற்காக உத்யோகம் செய்து வந்தார்.

இந்நிலையில் ஒரு நாள் எல்லாவற்றையும் விட்டொழித்து ஸந்நியாஸங்கொள்ள வேண்டுமென்று எண்ணி பகவானிட அனுமதி பெறுவதற்காகச் சென்றார். அதைக் கேட்டு பகவான் 'கிருஹஸ்தனாயிருப்பதால் என்ன தீங்கு? உன்மனம் மட்டும் ஈசுவரனிடமிருக்கட்டும். கிருஹஸ்தன் கோட்டைக்குள் நின்று யுத்தம் செய்யும் வீரனைப் போன்றவன். உலகிலுள்ள கிருஹஸ்தர்களுக்கு நீ ஒரு தீபம்போலிருப்பாய்' என்றுபதேசித்தார்.

மஹாசயர் பகவான் ஆக்ஞைப்படியே நடந்து கொண்டார். ஆனால் அவர் மனம் ஈசுவரனையே ஸதா நாடியதால் ஹரிசரணரிடம் தாம் ஒப்புக்கொண்ட வேலையைச் செய்ய அசக்தராயிருந்தார். எனினும் நீண்டகாலம் தீனதயாளு ஹரிசரணரிடம் வேலையிலிருந்தமை பற்றி அவருடைய அன்னவஸ்திரங்களுக்குத் தேவையான பொருளனுப்ப ஹரிசரணர் ஏற்பாடு செய்தார்.

இவ்வாறாக மஹாசயர் ஸ்ரீராமகிருஷ்ண தேவரைச் சந்தித்தது முதல் நான்கு வருஷங்கள் கழிந்தன. குருதேவருடைய இறுதி



யும் நெருங்கியது. பகவான் நோயால் வருந்துவதைக் காணச் சகியாராதலால் மஹாசயர் அவர் முன்னிலையிலும் போகவியலாமல் துக்கித்தார்.

கடைசிமுறை பகவானைக்காணச் சென்றபொழுது பகவான் "எனக்கு நெல்லிக்கனியின் மேல் விருப்பமாயிருக்கிறது. அஃது எங்கேயாவது கிடைக்குமோ?" என அங்கு நின்ற ஒரு பக்தர் "இது நெல்லிக்கனிக்குத் தருணமன்றே, கிடைக்காதே" என்றார். மஹாசயரோ பகவான் விரும்பிய பொருள் கிடையாமற் போகாதென்ற திடநம்பிக்கையுடன் உடனே புறப்பட்டு கல்கத்தாவிலுள்ள தோட்டந் துறவுகளிலெல்லாந் தேடியலைந்து, நகர்க்கப்புறமும் சுற்றிப் பார்த்துக்கடைசியாய் மூன்றாநாள், கையில் ஒரு பெரிய நெல்லிக் கனியுடனும் பரந்த முகத்துடனும் பகவான் முன் தோன்றினார். பகவான் மட்டிலா மகிழ்ச்சிகொண்டு "உன் பக்தியின் பெருமையை என்னென்பேன்" என்று கூறி ஆசீர்வதித்தார்.

இதற்கு நாலைந்து நாட்களுக்குப் பிறகு (1886 ஆகஸ்டு 31உ) பரமஹம்ஸர் மஹாஸமாதியிலாழ்ந்து மானிடவுருவை நீத்தார். மஹாசயர் செய்தி கேட்டுச் சுடுகாடு சென்றனர். அங்கிருந்து திரும்பி ஆகாரமின்றித் தரையில் நாள் முழுவதும் வீழ்ந்து கிடந்தார். இதை யறிந்த விவேகானந்தஸ்வாமியும் மற்றுஞ் சிலரும் அவர் வீட்டுக்குச் சென்று வெகுசிரமப்பட்டு சிறிதுணவை அவர் அங்கீகரிக்கும்படிசெய்தனர்.

சிலநாட்களுக்குப் பிறகு பலராமவஸு என்னும் ஒரு பக்தர் மஹாசயரைப் பூரிஜகந்நாதக்ஷேத்திரத்தில் வாசம் செய்ய வேண்டுமென்றும், ஹரிசரண பால் நவத்வீபத்தில் தங்கியிருக்க வேண்டுமென்றுங் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் மஹாசயர் "பகவான் என்னை என் வீட்டிலிருக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்திருக்கிறார். அவர் சொல்லை ஒரு சிறிதும் மீறி நடக்கமாட்டேன்" என்று கூறிவிட்டுத் தேவபாக்குக்குத் திரும்பிச் சென்று அங்கே வயோதிகரான தந்தைக்கு சிசுருஷை செய்து கொண்டும், கிருகத்துக்கு வரும் பக்தர்களுக்கு ஊழியம் செய்து கொண்டும், ஸதா ஸத்காரிய பரராயிருந்தார்.

(தொடரும்)

# அனுஷ்டான வேதாந்தம்.

(ஸ்வாமி விவேகானந்தர்)

வேதாந்தத் தத்துவஞானத்தின் அனுஷ்டான முறையை விளக்கிக் காட்டுமாறு என்னை இன்று கேட்டுக்கொண்டார்கள். நான் முன்பு சொன்னவாறு, வாதிக்க எவ்விஷயமும் நன்றே; ஆனால் அதை எவ்வாறு அனுஷ்டிப்பது? அனுஷ்டிக்க முடியாவிட்டால், எவ்வித ஊஹமும் புத்திக்கூர்மையை விளக்குவதைத் தவிர வேறு விதமான பிரயோஜனமில்லை. ஆகையால் வேதாந்தமொரு மதமாயின் அனுஷ்டானத்திற்கு கொண்டுவரத்தக்கதாயிருக்கவேண்டும். நமது ஆயுள் காலத்தில், எச்சமயமும் அனுஷ்டிக்க வல்லதாயிருத்தல் வேண்டும். இதுவல்லாமல் மேலும் மதக்கொள்கைகளுக்கும், உலக வாழ்க்கைக்குமுள்ள வித்தியாஸத் தோற்றங்கள் மறைய வேண்டும்; ஏனெனில் வேதாந்தம் ஒற்றுமையையே எடுத்துக்காட்டுகிறது—எக்காலத்தும் அதன்போக்கு ஒரே விதமானது. மதக்கொள்கைகளின் நோக்கம் நமது வாழ்க்கை முழுமையும் பரவியிருப்பதுடன், நமது எண்ணங்களிலும் உட்புகுந்து மேலும் மேலும் அப்பியஸிக்க வல்லதாயிருத்தல் வேண்டும். நான் போகப்போக அனுஷ்டான முறையைப் பற்றி விளக்கமாகவெடுத்துக்காட்டுகிறேன். ஆனால் பின்வரும் உபந்நியாஸங்கள், வேதாந்த விஷயத்தைப்பூர்த்தியாயறிய ஓர் அஸ்திவாரம் போன்றவை. ஆகையால், எண்ணங்கள் எவ்வாறுனைவ்கனென்றும், அவைகள் காட்டுக் குகைகளினின்று, ஜனநெருக்கமுள்ள நகரங்கள்வரை எவ்வாறு உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டனவென்றும் அறிவதவசியம். இவைகளின் ஒரு விசேஷகுண மென்னவென்றால், பெரும்பான்மையான நீதிகள் நகரத்தில் வாழ்ந்த மானிடர்களிடமிருந்து வெளிக்கிளம்பியதாக அறிகிறோம்— அவர்களிற் பெரும்பான்மையோர் அரசர்கள்.

கீழ்வரும் கதை அதை விளக்கிக்காட்டும்.

மனுஷ சஞ்சாரமில்லாத காட்டில் வசித்துக்கொண்டிருந்த அருணி என்ற தபசிக்கோர் புத்திரன் இருந்தான். அவன் பெயர் சுவேதகேது. அவன் காட்டிலேயே வளர்க்கப்பட்டு பாஞ்சால அரசனை பிரவஹன செயவாலி என்பவனிடம் போய்ச் சேர்ந்தான். அரசன் அவனை நோக்கி "சாவிற்குப் பிறகு ஜீவராசிகள் எங்கு



செல்கின்றன?" வென்று கேட்டான். "நான் அறிகிலேன்" என்று விடையளித்தனன். "அவைகள் எவ்வாறு இங்கு திரும்பி வருகின்றன?" "அதுவும் தெரியாது". "பிதிரு மார்க்கத்தையும் தேவமார்க்கத்தையும் நீ, அறிவாயோ?" "இல்லை"

பிறகு அவ்வரசன் கேட்ட சில கேள்விகளுக்கும் விடை அளிக்காமையினால் அரசன் தனக்கும் ஒன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டான். ஆகையால் சுவேதகேது தன் தகப்பனிடம் சென்று இக்கேள்விகளுக்குப்பதில் கேட்க அவரும் தமக்குத் தெரியாதென்றார். தம் புத்திரனுக்கு இவைகளை எடுத்துக் காட்டக் கூடாதென்ற நோக்கத்தினாலல்ல. வாஸ்தவமாகவே அவருக்கு இவைகளைப்பற்றி ஒன்றும் தெரியா. ஆகையால் சுவேதகேதுவும் அவன் தகப்பனும், திரும்ப அரசனிடம் வந்து இச்சூக்ஷ்மங்களை எடுத்துக் காட்டவேண்டினார்கள். அதற்கு அரசன், இதுகாறும் இவைகள் அரசர்களுக்குமட்டுமே தெரியுமென்று சொல்லி, விளக்கிக்காட்டினான்.

இதனால் நாம் அறிவதென்னவென்றால் வேதாந்த ஞானத்தில் சில சிறந்தபாகங்கள், காடுகளில் கொடுந்தபசுபுரிந்த முனிவர்களாலே அல்லாமல், நகரங்களில், குடும்பத்தில் மூழ்கியிருந்தவர்களாலும் அறியப்பட்டனவென்று, அறிகிறோம். பல உபநிஷத்துக்களும் அவ்வாறே கூறுகின்றன. லக்ஷக்கணக்கான ஜனங்களைப் பாதுகாத்துவந்த அரசர்களைவிட, வேறு எவரும் அவ்வளவு வேலைத் தொந்தரவுள்ளவர்களாயிருப்பதரிது. ஆனாலும் அவ்வாறுள்ள வேந்தர்களிற் சிலர் மிக்க ஆழ்ந்த யோசனைக்காரர்கள்.

எல்லாவற்றினாலும் இத்தத்துவஞானம் மிகவும் அனுஷ்டிக்கக்கூடியதென்றே விளங்குகின்றது. இதன் பிறகு பகவத்கீதைக் காலத்திற்கு வந்தால்—நீங்கள் அனேகர், வேதாந்தத்திற்கு முக்கிய வியாக்கியானமான இந்நூலை வாசித்திருப்பீர்கள்—ஸ்ரீகிருஷ்ணபகவான் யுத்தகளத்தின் மத்தியில், அர்ஜுனனுக்கு பகவத்கீதை உபதேசம் செய்தது வியக்கத்தக்கதே; மேலும் கீதையின் சாரம், நிஷ்காமகர்மமே. இதுதான் கர்மத்தின் சூக்ஷ்மம். அதை அடைவதே வேதாந்தத்தின் நோக்கம். சுருசுருப்பில்லாத கார்யாதிகளைப்பற்றி வேதாந்தம் எடுத்துக்காட்டவில்லை. அவ்வாறானால் நம்மைச்சுற்றியுள்ள சுவர்கள் ஞானிகளாகிவிடும். மேலும், மோகங்கலந்த காரியங்கள் கர்மங்களாகா. வேதாந்தத்தின் நோக்கமான உண்மைக் கருமம், எவ்வித கஷ்டசுகத்தினாலும் அசைக்கப்படாததும், சாந்தத்தை அளிக்கக்கூடியதுமாகும். மேலும் நமது அனுபவத்தினால் அவ்வாறுள்ள கருமமே மேம்பட்டதென்றறிகிறோம்.

ஆசையில்லாவிட்டால், நாம் எவ்வாறு கர்மம் செய்வதென்று என்னைப் பலர் அடிக்கடி கேட்கின்றனர். நானும் ஒருகாலத்திலவ்வாறே நினைத்தேன். ஆனால் எனக்கு வயது முதிர அநுபவத்தினால் அது பொய்யென்றேற்படுகின்றது. எவ்வளவுக்கெவ்வளவு ஆசை குறைந்திருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கர்மங்கள் மேன்மையாகச் செய்யமுடியும். சாந்தமாகவிருந்தால், மிகநேர்மையாய் கருமங்கள் முடியும். மேலும் நமக்கு நன்மையே தரும். நமது உணர்ச்சிகளை அடக்கியாளாவிட்டால், நாம் அறிவிழந்து, மனோவியாகூலமடைந்து, கருமங்களை பூர்த்திசெய்ய சக்தியற்றவர்களாகின்றோம். கருமங்களுக்கு வேண்டிய சக்தியை, காமக்குரோதாதிகளில் செலுத்தி வீணாக்குகின்றோம். மனம் சாந்தநிலைமையுடன், அதற்குண்டாகிய சக்தி முழுமையும், நல்ல கருமங்களில் செலுத்தினால் நன்மையுண்டாகும். மேலும் உலகத்தில் பிரகாசித்து விளங்கிய பெரியோர்களின் சரித்திரங்களைவாசித்துப் பார்த்தால்அவர்கள் வியக்கத்தக்க சாந்தகுணமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். எக்காரணங்கொண்டும், அவர்கள் மனம் சஞ்சலப்படா. அது காரணம் பற்றியே கோபகுணமுள்ளவர் எவ்விதகருமமும் செய்யமுடியாமலிருக்கின்றனர். கோபமற்றவரோ, எடுத்த கர்மங்களை எளிதில் செய்து முடிக்கின்றனர். கோபம், பேராசை, வெறுப்பு முதலிய கெட்ட குணங்களுடைய மனிதன் கருமங்கள் செய்ய முடியாமல், தன்னைப் பிரயோஜனமில்லாத மரத்துண்டுகள் போலாக்கிக் கொள்ளுகின்றான். பொறுமை, கருணை முதலிய நற்குணங்களுடைய மனிதன், தன் மனதை அடக்கியாண்டு நற்கருமங்கள் செய்து முக்தி பெறுகின்றான்.

வேதாந்தம் இந்த நோக்கத்தையே எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் நோக்கத்திற்கும் அநுஷ்டானத்திலுள்ளவைகளுக்கும், வெகு தூரமென்று நமக்குத் தெரியும். நமது நடவடிக்கைகளில் இரண்டு விதமான போக்குகளுண்டு. ஒன்று, நமது லட்சியங்களை நம் வாழ்க்கை நிலைக்குத்தாழ்த்த முயல்வது. மற்றொன்று நம் வாழ்க்கையை லட்சியத்துக்கொப்ப உயர்த்த முயல்வது. இவ்விஷயத்தை நாம் முக்கியமாக அறியவேண்டும். ஏனெனில், முன்சொல்லியது நம் தூண்டுதலாலுண்டாயது. நான் ஒருவிதமான கருமங்களையே செய்ய முடியுமென்று எனக்குத் தோன்றுகிறது. அநேகமாக அவைகள் கெட்டநடத்தையாக விருக்கலாம்: கோபம், காமம் முதலிய குணங்களால் தூண்டப்பட்டவைகளாக விருக்கலாம். ஆகையால் நான் வேதாந்தத்தின் பிரகாரம் நடக்கவேண்டுமானால், முதலில் அக்குணங்களை விட்டொழிக்கவேண்டும். அது சாத்தியமில்லையென்று எனக்குத் தோன்றுகின்றது. ஆனால் ஒருவன், இக்குணங்களை விடாமலே, நாம் வேதாந்த நோக்கங்களை வாழ்க்கையில் சாதிக்கலாமெனச் சொன்னால், மிகவுமானந்தமடைந்து துள்ளிக் குதிக்கின்றோம். இதுதான் என் நோக்கம்.

(தொடரும்)

# கஜேந்திர மோக்ஷம்.

"ஆதித் தனிக்கோலமானான் அடியவர்க்காச்
சோதித் திருத்தூணிற்றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழம்முதலே எனவழைப்ப
என்னேன்றான் எங்கட்கிறை"

நீர்வளம் நிலவளம் நிறைந்த செந்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை மாநகரில் இந்திரத்யும்னன் என்னும் அரசன் முன்னொரு காலத்தில், செங்கோல் வழுவாது அரசு செலுத்தி வந்தான். இவ்வரசன் சிறந்த விஷ்ணு பக்தன். வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவன். மிகுந்த சிரத்தையுடன் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள விரதங்களைத் தவறாது அனுஷ்டிப்பவன். இவ்வரசனது ஆட்சியில் ஜனங்கள் யாதொரு குறைவுமின்றி வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் இந்த்ரத்யும்னனுக்குப் பகவானை ஏகாந்தமான ஓரிடத்தில் ஆராதனை செய்ய வேண்டுமென ஆசையுண்டாயிற்று. அவ்வாசையைப் பூர்த்திசெய்ய வெண்ணி மலயபர்வதத்தின் சாரலில் ஓர் ஆசிரமமமைத்து, அங்குத் தனியே சென்று பூஜைசெய்யத் தொடங்கினான். ஜடைகளைத் தரித்து மௌன விரதங்கொண்டு உக்கிர தபஸ்செய்ய வாரம்பித்து ஈசுவரரும் அழிவில்லாதவருமான பகவானது திருவுருவை மனதிலே நிறுத்தி அவரைப்பற்றித் தியானஞ் செய்யத்தொடங்கினார்.

இவ்வாறு இவன் தவம் பல நாட்கள் செய்து கொண்டிருக்கும்போது, தவசிரேஷ்டரும் தமிழ்மொழி வளர்த்தவருமான அகஸ்திய முனிவர் தமது சிஷ்யகோஷ்டிகளோடு அவ்விடம் வந்து சேர்ந்தார். ஸாதாரண நாட்களில் பகவத்பக்தர்களையும் முனிவர்களையும் வேதாகமப்படி உபசரித்து வரும் அவ்வரசன், நிஷ்டையிலாழ்ந்திருந்தமையால் அகஸ்தியரைக்காணவில்லை. அவன் புறக்கண் திறந்திருந்தபோதிலும், அது வெளி விஷயங்களைக் காணாது, அகக்கண் நோக்குவதையே தானும் உற்று நோக்குவதே போலத்தோன்றிற்று. வெகு ஆவலுடன் அவ்விடம் வந்த முனிவர் அரசன் தன்னைச் சற்றேனும் கவனிக்காததைக் கண்டு

இந்த கஜேந்திர மோக்ஷம் என்னும் மகிமைவாய்ந்த உபாக்யானம் பாகவதத்தில் 8-வது ஸ்கந்தத்தில் 4-வது அத்தியாயத்தில் வெகு விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

கோபம் கொண்டார். பரமசிவனது அருளுக்குப் பாத்திரராய் நின்ற தம்மை, ஒரு அற்ப அரசன் அவமதிக்கவாவது என்று அவருக்குச் சினம் பொங்கி யெழுந்தது. தம் வெளிக்கண்ணால் அவர் அரசனைக் கண்டாரேயன்றி, அகக்கண்ணைச் செலுத்தி அரசனது அந்தரங்க நிலைமையை உணரவில்லை. ஆகவே அவர் அரசனைப்பார்த்தபடியே "இவன் துஷ்டன், ஸாதுக்களான ப்ராம்மணர்களை அவமதிக்கிறான். மந்த புத்தியையுடைய யானையைப் போன்றது இவன் அறிவு. தக்கோருக்குத் தகுந்த மரியாதை செய்யாத இவன் யானை ரூபமடையக்கடவன்" எனச்சபித்து விட்டுத் தம் பரிவாரங்களுடன் அவ்விடத்தை விட்டுச்சென்றார்.

நிஷ்டையினின் றெழுந்ததும் இந்த்ரத்யும்னன் நடந்தவற்றை யறிந்து, "இது ஊழ்வலியால் வந்தது; தெய்வ ஸங்கல்பத்தை யாரால் தடுக்க முடியும்" என்று நினைத்தான். முனிவரின் சாபப்படி அவன் உடல் யானையினுடைய உடலாக மாறியது. ஆயினும் விஷ்ணு பக்தனாதலால் உருவம் மாறியபோதிலும் பூர்வ ஞானம் முற்றிலுமிருந்தது.

கஜ ரூபமடைந்த இந்தரத்யுமனன் மலையபர்வதத்திலுள்ள யானைகளுடன் சஞ்சரித்து காலம் கழித்து வந்தான். அரச வம்சத்தவனாதலால், அவன் யானை ரூபத்திலும் தன்னுடைய பலத்தினாலும், புத்தி சாதுரியத்தினாலும் மற்ற யானைகளுக்குத் தலைவனாகி, கஜேந்திரன் எனப்பெயர் கொண்டு, அக்கஜங்களை ஆண்டு வந்தான். இவ்விதம் இருக்கும் காலையில் ஓர் நாள் கஜேந்திரன், பல ஆண்யானைகளும் பெண்யானைகளும் புடை சூழ, பல விருக்ஷங்களும் கொடிகளும் நிறைந்து அவைகளால் அலங்கரிக்கப்பெற்று, அருவிகள் நிறைந்தும், மந்தாகம், பாரிஜாதம், சந்தனம், பில்வம் முதலிய பல விருக்ஷங்களால் சூழப்பெற்று, சித்தர், சாரணர், கந்தர்வர், அப்ஸரஸ்திரீகள் முதலியவர்கள் வசிக்கும் குகைகள் நிறைய பெற்ற தாழ்வரைகளில் விளையாடிக் கொண்டு திரிந்தது. இப்படித் திரிந்ததினால் கஜேந்திரனுக்கும் அதன் பரிவாரங்களுக்கும் நீர்வேட்கை யெடுக்கவே அக்காட்டிலுள்ள ஓர் தடாகத்தைத் தேடிச்சென்றது. இக்குளம் தாமரைப் புஷ்பங்கள் நிறைந்தது; ஹம்ஸம், சக்ரவாகம் முதலிய பறவைகள் வசிக்கப்பெற்றது, பல முதலைகளும் அங்கே ஜீவித்திருந்தன. அக்குளத்தைச் சுற்றி நீல விருக்ஷம், அசோகம், புன்னாகம் முதலிய உயர்ந்த ஜாதி புஷ்பங்கள் பல ஓங்கி வளர்ந்து அவ்விடம் குளிர்ந்த காற்று வீசும்படியும் அழகுடன் சோபிக்கும்படியும் செய்தன. வெயிலில் அலைந்து திரிவோரை அன்புடன் அழைத்து, "இங்கு இளைப்பாருங்கள்; இத்தடாகத்துத் தீர்த்தத்தைப் பானம் செய்து மகிழ்வுறுங்கள்" என்று



கூறுவது போற்றோன்றின. அவ்விடத்தை நாடி கஜேந்திரன் சென்றது. போகும் போது வழியிலுள்ள மூங்கில்களையும் பிரம்புகளையும் விஸ்தாரமான கொடி முதலிய அடர்ந்த குகைகளையும் வெகு கம்பீரத்துடன் பரிவார சகிதமாய்த் தாண்டிப் போகும் போது, அக்காட்டிலுள்ள சிங்கம், புலி, கரடி, முதலிய துஷ்ட ஜந்துக்கள், கஜேந்திரனுடைய தொனியைக் கேட்டு நடுங்கியோடின.

கடைசியில் தடாகத்தினருகில் வந்து அதிலிறங்கி, ஜலத்தைக் குடித்து தாகத்தை சாந்தி செய்து கொண்ட பிறகு, ஜலத்தில் தன் பரிவாரங்களுடன் மூழ்கி, நீரைத் தன் துதிக்கையாலெடுத்து, கிருஹஸ்தன் புண்ணிய காலங்களில், மந்திரிக்கப்பட்ட ஜலத்தைப் பக்கத்திலுள்ள தன் ஜனங்களின்மேல் ப்ரோக்ஷிப்பது போல், மற்ற யானைகளின்மீது தெளித்து, அவைகளையும் ஸ்நானஞ் செய்வித்தது. ஸ்நானபானம் செய்து சுத்தமான ஜலத்தை முகர்ந்து மிகவும் குதூகலத்துடன் கஜேந்திரன் வெகு நேரம் நீரில் விளையாடியது.

மகாபலமுள்ள ஒரு முதலையானது, தானிருந்த குளத்தில் தனக்கு ஸௌகர்யக் குறைவு இந்த யானைகளால் உண்டானதைக் கண்டு கோபித்து, பூர்வஜன்ம விசேஷத்தால், கஜேந்திரன் காலைக் கௌவிக்கொண்டது; மகாபலசாலியான அந்த யானைக்கரசன் தப்பித்துக்கொள்ள முயன்றும் கொஞ்சமேனும் முடியவில்லை. கஜேந்திரன் இவ்வாறு கஷ்டப்படுவதைக் கண்ட பெண்யானைகள் மனம் நொந்து தீனமான குரலில் 'ஓ' என்றலறின. இக்கூக்குரலைக் கேட்ட களிறுகள் கஜேந்திரனிடம் வந்து அதைத் தப்புவிக்க முயன்றும் அவர்கள் முயற்சியும் பலிக்கவில்லை. இதனால் கஜேந்திரனும், முதலையும் வெகு நேரம் போராடி நின்றன. கஜேந்திரனைத் தன்னியற்கைக்கொத்த நீருக்குள் கொஞ்ச தூரம் முதலை இழுக்கும்; கஜேந்திரன், வெகு சிரமத்துடன் முதலையைச் சிறிது கரை மேலிழுக்கும். இவ்வாறு பல நாட்கள் சென்ற போதிலும் யுத்த முடிந்த பாடில்லை. இவ்விதம் இரு பிராணிகள் சண்டையிடுவதைக் கண்டவைகள் எல்லாம் "இது விசித்திரம்; அதிசயம்" என்று எண்ணின. முடிவில் கஜசிரேஷ்டத்திற்கு உத்ஸாகமும் பலமும் மிகவும் குறைந்தன. முதலையைக் கரைமேலிழுக்க முடியவில்லை. ஆனால் முதலைக்கோ மேன்மேலும் உத்ஸாகமும், யானைக்குப் பலம் குறைந்ததை யுணர்ந்ததால் தைரியமும் உண்டாக,

(இம்முதலை முன்னொரு காலத்தில் தேவல முனிவரால் சாபம் பெற்ற ஹூஹூ என்னும் கந்தர்வனின் மாறு ரூபம்).

யானையைக் கொஞ்சங் கொஞ்சமாக நீருக்குள் இழுக்க வாரம்பித்தது.

இம்மாதிரியாகப் பிராண சங்கடம் அடைந்த அந்த யானை தன்னை தப்பித்துக் கொள்ள முயன்று பின் வருமாறு ஆலோசனை செய்ய வாரம்பித்தது. "ஒரு முதலையால் பிடிக்கப்பட்டிருக்கும் என்னை இந்த யானைகளால் விடுவிக்க முடியவில்லை. அவர்கள் எவ்வளவுதான் முயன்று பார்த்த போதிலும் போதுமான சக்தியில்லை. ஆண் யானைகளாலேயே முடியாதபோது பெண்யானைகளால் என்ன செய்ய முடியும்? ஊழ்வினையானது முதலை ரூபமாக என்னைச் சூழ்ந்திருப்பதால், நான் ஒன்றும் செய்ய முடியாது திண்டாடுகிறேன். இனி பகவானைத்தவிர வேறு எவர் எனக்கு உதவி செய்யமுடியும். தேவர்களுக்கு ஆசிரியனும் யமனாகிய ஸர்ப்பத்தினிடம் பயந்து சரணம் புகுந்தவர்களை ரக்ஷிக்கிறவனும், எவனுக்குப் பயந்து யமன் ஓடுகிறானோ, அந்த விஷ்ணுவை நான் சரண மடைகிறேன்." இப்படிப் பகவானைச் சரணமடைந்து, மனதைத் திடப்படுத்தி ஏகாக்கிர சித்தத்துடன், முன் ஜன்மத்தில் அனுஷ்டித்த விரதங்கள் ஜபங்களின் பலனாய், தான் அக்காலங்களில் ஜபித்த சிரேஷ்டமான ஸ்தோத்ரங்களை மனதில் ஜபித்தது. "எந்த பகவானால் இந்த பிரபஞ்சம் உண்டாகிறதோ, எவன் காரணத்திற்கும், காரியத்திற்கும் புறம்பானவனோ அவனை நான் சரணமடைகிறேன். எந்த பகவானால் இந்திரியங்களுக்குப் பிரகாசம் கிடைக்கிறதோ, அந்த ஈசன் என்னை ரக்ஷிக்கட்டும். எவனுடைய ஸ்வரூபத்தை தேவர்களும் ருஷிகளும் அறியார்களோ, அந்த அறிய முடியாத பகவான் என்னை ரக்ஷிக்கட்டும். எந்த பகவானுடைய ஸ்வரூபத்தைப் பார்க்க ஸாதுக்களெல்லாம், பற்றுதலற்று, சிறந்த தவறுதலில்லாத ப்ரம்மசர்யம் முதலிய விரதங்களை அனுஷ்டிக்கிறார்களோ அந்த ஸ்வரூபமான பகவான் எனக்குக் கதியாகட்டும். எந்த பகவானுக்கு ஜன்மமும் கர்மமும் தோஷமு மில்லையோ, எவன் ரூபமில்லாதவனும் அனேக ரூபங்களை யுடையவனும், ஆச்சர்யமான செய்கைகளையுடையவனுமானவனோ அந்தப் பரமேச்வரனுக்கு நமஸ்காரம். வாக்கிற்கும் மனதிற்கும் சித்தவிருத்திக்கும் வெகு தூரத்திலிருப்பவனான வாஸுதேவனுக்கு நமஸ்காரம். ஸந்யாஸத்தால் அடையத்தக்கவனாயும், கைவல்ய நாதனும், மோக்ஷானந்தரூபனுமான முகுந்தனுக்கு நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் பிரபுவும் குணங்களின் தர்மங்களை அனுபவிப்பவனுமான அச்சுதனுக்கு நமஸ்காரம். பூர்ணனும், க்ஷேத்திரக்ஞர்களுக்கு மூலமானவனும், புத்திக்குக் காரணமுமாகிய ஹே! பரம்பொருளே! உமக்கு நமஸ்காரம். ஆகமங்களுக்கும் வேதங்களுக்கும் இருப்பிடமான பெரும்



ஸமுத்திரம் போன்றவரும் மோக்ஷ ரூபரும் எல்லாவற்றிற்கும் காரணமானவரும் முனிவர்களுக்கு ஆச்ரயருமான உமக்கு நமஸ்காரம். சரணமடைந்த என்னைப்போன்ற ஜந்துவின் அஞ்ஞானத்தை நீக்குபவரும் மிகுந்த கருணையுள்ளவரும் மகானுமாகிய உமக்கு நமஸ்காரம். தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் இவைகளை இச்சிப்பவர்கள் எந்த ஈசுவரனை அர்ச்சித்துப் பலனை அடைகிறார்களோ, எவர் நன்மைகளையும், அழிவில்லாத தேகத்தையும் கொடுக்கிறாரோ அவர் எனக்கு இந்த கஷ்டத்திலிருந்து விமோசனம் செய்யட்டும். இந்திரியங்களை அதிக்ரமித்திருப்பவரும் சூக்ஷ்மம்போல் வெகு தூரத்திலிருந்துகொண்டு எல்லாவற்றையும் செய்ய வல்லவருமான அந்த அனந்தரை நான் ஸ்தோத்திரம் செய்கிறேன். அந்த ஈசர் தேவனுமல்ல, மனுஷ்யனுமல்ல; புருஷனுமல்ல; மற்றெந்தப் பிராணியுமல்ல; ஸத்துமன்று அஸத்து மன்று. இவ்வித அநந்தகல்யாண குணங்களையுடைய அந்த ஈசுவரன் எனக்குத் தரிசனம் தந்தருள வேண்டும்.

"நான் உயிருடனிருக்க விரும்பவில்லை. இந்த யானை ரூபத்துடனிருப்பதனால் என்ன பயன்? ஆனால் அஞ்ஞானத்தின் விமோசனத்தை விரும்புகிறேன். ஆதலால் உலகிற்கு ஆத்மாவும் பிறப்பில்லாதவனும், எல்லாராலும் அடையத்தக்கவரும் பிரம்மமுமாகிய ஈசுவரனை நான் நமஸ்கரிக்கிறேன்" என்று இவ்வாறு ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்தது. எல்லாப் பொருள்களுக்கும் உள் நிறைந்து நிற்கும் பரம்பொருளுக்குத் தெரியாதிருக்குமோ? அவர் கஜேந்திரனது தீனமான குரலைக்கேட்டு, சக்கிரத்தை ஆயுதமாகக் கொண்டு, கஜேந்திரன் இருக்குமிடத்திற்கு வெகு வேகமாய் வந்தார். ஆகாயத்தில் கருடன் மீது சங்குசக்கிராயுதராய் எழுந்தருளிய பகவான் ஸ்ரீஹரியைப் பார்த்து, கஜேந்திரன், தாமரை மலரொன்றைத் துதிக்கையால் தூக்கி யெடுத்து, மிகுந்த கஷ்டத்துடன் "ஹே! நாராயணா, நாராயணா, உன்னை நமஸ்கரிக்கிறேன்" என்ற சொற்கள் தோன்றும்படி மிகுந்த வருத்தத்துடன் தொனித்தது. தீனரக்ஷகனான பரமாத்மா, ஸகல தேவதைகளும் பார்க்கும் போதே, தமது திவ்விய சக்கிரத்தால் முதலையின் வாயைப் பிளந்து கஜேந்திரனைக் கருணையுடன் தூக்கினார். இந்தப்பரம காருண்யமான செய்கையைக்கண்டு அனைவரும் ஸ்ரீவைகுண்ட நாதனைக் கொண்டாடினார்கள், சாபத்தால் முதலை ரூபமெடுத்து, அச்சாபம் விடுவிக்கப்பெற்ற கந்தர்வனும், நிஜரூபம் பெற்றுத் தன் லோகம் சென்றான். கஜமும் பகவான் ஸ்பர்சத்தால் அஞ்ஞான பந்தத்தினின்றும் விடுபட்டு; நற்பதவியடைந்தது.

# சிந்தனை மொழிகள்

எம்பெருமானிடம் நாம் பக்தி செய்வதற்குள்ள வழிகள் பலவாயினும், அனைவரும் பின்பற்றக் கூடியவைகளில் சிலவற்றை இங்கு விவரிப்போம்.

எல்லாவற்றினும் மிகச் சாதாரணமான ஸத்ஸங்கம் நம்மவரில் அநேகருக்குக் கிடைக்கக்கூடும். ஸத்ஸங்கம் என்பது அறிவிற் பெரியவரும், பக்தியிற் சிறந்தவருமாயிருப்பவரது கூட்டத்தை நாடி அவருடன் பழகி இருந்து, நாமும் அவரது நிலையை அடைய முயற்சி செய்வதைக் குறிக்கும். மேற்கூறிய சங்கத்தார் அறிவிற் பெரியாரும், பக்தியிற் சிறந்தவருமாயிருக்க வேண்டுமெனக் கூறினமையால் அவ்விரண்டு முடையவர்களை, நாம் சென்று உடன் வாழ்தற்குத் தகுந்தவர். அறிவென்பது பெரும்பாலும் வயது முதிர்ந்தோரிடம்—அவர்கள் வெகுகாலம் வாழ்ந்து அநுபவம் பெற்றவர்களாதலால்— காணப்படுமாதலால் அவருடன் இருத்தல் நலம். ஆனால் நம்மில் வயதிற் சிறியவர் பலர், நம்மினும் அறிவிற் பெரியாராய் இருக்கலாம். அப்பொழுது வயது என்பது நாம் கவனிக்க முடியாததாய் விடும். அப்பொழுது, நாம் ஸந்தோஷங்கொண்டு உருவத்திலும் வயதிலும் நம்மிற் சிறியவர்களாயிருப்பினும், அறிவு முதிர்ந்தவருடைய நட்பை நாட வேண்டும் என்பது வெளிப்படை. இஃது வெளித்தோற்றத்தில் விருப்ப முடையார்க்கு வெறுக்கத் தக்கதாகத் தோன்றினும், ஞானத்தை வேண்டுபவன், தன்மனோ நிலையைக் கவனிப்பானேயன்றி, பிறருடைய எண்ணங்களைக் கவனிக்கமாட்டானாகையால், அவன் தன் உள்ளறிவு செலுத்தும் வழியே நடத்தல் வேண்டும்.

'பக்தியிற் சிறந்தார்' என்று கூறியது, பக்தியையே நாம் மூலாதாரமாகக் கவனிக்கவேண்டுமே யன்றி, வேறொன்றையும் கவனித்தல் அவசியமன்று என்பது தெளிவாகின்றது. பக்தியென்னும் விசேஷம் மானிடராய்ப் பிறந்தார் எவரிடமும் இருக்கலாம். அதற்கு நாடு எதுவென்றும், காலம் எதுவென்றும், ஜாதி, மதம் எதுவென்றும் கூறுதல் இயலாது. ஈசுவரன் ஒருவன் உளன். அவன் உள்ளக் கருத்து எது என்று, அறிந்து நடத்தல் வேண்டும் என்னும் எண்ணம் ஒரு சிறிதேனும் இருப்பின், அது போதும்.



அவ்வண்ணம்,

"தெள்ளியவாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணி தேர்ப்புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே"

என்று கூறப்பட்டவாறு, சிறிது சிறிதாக வளர்ந்து, முடிவில் ஈசுவர சிருஷ்டியனைத்தையும் தன் பரப்பிற்குள் அடக்கி முக்தி நிலை தரும். இது பற்றியே அடியாரிற் சிறந்தவர் ஒருவரும்,

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லேம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்;
அங்கமெல்லாங் குறைந்து அழுகு தொழு நோயராய்,
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்,
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

எனவும் கூறியிருக்கிறார்.

* * *

இவ்விதமாயின், பக்தர்களை நாம் எங்கும் காண முடியும் என்று சொல்லலும் அரிது. எச்சாதியிலும், எத்தேசத்திலும் உண்மைப் பக்தர்கள் உளர். ஆயினும், நாம் போலி பக்தர்களைக் கண்டு ஏமாறுதல் சுலபம். அவ்விதம் மோசம் போகாது இருத்தல் நம் கடமையாகும். உண்மைப் பக்தன் தன் வெளிவேஷத்தாலன்றி, உண்மை நடத்தையினாலேயே வெளிப்படுகின்றான். நடை உடைகளை அவரவர் குல ஆசாரப்படி தரிப்பதால், மனம் களங்கமற்றிருத்தல் சுலபம். இவ்வெளி வேஷம் போடுதல் சுலபமாயினும், நாம் அவற்றில் அதிகமாக உறுதி வைக்காது உண்மை நடத்தையுள்ள பெரியோரை அடிபணிய முயலுதல் வேண்டும், வாய்ப் பேச்சு, போலி பக்தர்க்கு எளிதாதலின் அதையும் நீக்கி, ஆழ்ந்து அறிந்து உண்மைப் பெரியாரின் உறவை அடைதல் வேண்டும். பக்தரிற் சிலர், சமயாசார முறையைக் கைப்பற்றி நடந்து வருவர். வேறு சிலர், அவற்றை யெல்லாம் வெறுத்தோ, அல்லது அவை களைத்தரிக்கும் நிலையைத் தாண்டியோ இருத்தலால், பார்வைக்கு உன்மத்தர் போலவும், ஆசாரஹீனர்களைப் போலவும் தோன்றுவர். ஆகவே உண்மைப் பக்தர் யாரென அறிதல் எளிதன்று. அவர்கள் தாம் யாரெனவும் வெளிச் சொல்லார்.

உண்மைப்பக்தரது உறவு ஏற்படின் அவருடன் கூடிப்பழகி அவரது மனோ நிலையை அறிந்து, சிச்ருஷை புரிந்து அவரது அநுக்கிரகம் பெற முயலுதல் வேண்டும். அடியார் செய்கை

களின் உண்மைக்கருத்தையும் செயல்களின் பொருளையும் நம்மால் அறிய முடியாதாயினும் அவற்றை அறியும் காலம் எப்போதோ எனக்காத்திருத்தல் வேண்டும். இவ்வித அடியாருடைய தரிசனம் கிடைத்தல் அருமையன்றோ?

***

இவ்வாறு கழிக்கப்படும் காலம் கடைசியிற் பலன் தருவதாயினும் முதலில் வெகு கஷ்டமானதாயிருக்கும். பித்தனை நாடியலைந்து திரிகிறானென நம்மைச் சார்ந்தார் கூறுவர். கூறுவதோடு நிற்காது, நம்மைப் பல முறைகளில் தடுக்க முயலுவர். வேறு சிலர் நம்மை ஏளனம் செய்து, நால்வர் நம்மைக் கண்டதும் நகைக்கும் படிச் செய்வர். மண்ணாசை பெண்ணாசை முதலியவைகளால் நம் மனதைத் திருப்ப முயலுவர். இவற்றிற்கும் மேலாய் நமக்கு உயிர் வைத்திருக்க அவசியமாகும் சிறிது உணவைக் கூட நமக்குக் கிடைக்கவொட்டாது செய்வர். இவ்விதக் கஷ்டங்களைப் பொறுத்து, நாம் பின்பற்றும் குரு நாதரே நமக்குக்கதி என்று செல்பவனே உண்மைச் சீடனாவான். அவனுக்கே உண்மை கடைசியில் வெளிப் படும்.

***

அயலாரிடமிருந்து கஷ்டம்வரின் பொறுத்துக் கொள்வது சிலருக்கு முடியும். ஆனால் நமது சிற்றறிவினாலோ, அல்லது குரு நாதர் நமது திடபுத்தியை பரீக்ஷிக்க எண்ணுவதாலோ, நாம் பின் பற்றும் குருநாதனது நடத்தை மிகவும் அருவருக்கத் தக்கதாகத் தோற்றலாம். அக்காலந்தான் நமக்கு மிகவும் கஷ்டமானது. உடல் பொருள் ஆவி மூன்றையும் துறப்பதற்குத் தயாராயிருக்கும்போது இவற்றிற் கெல்லாம் காரணமானவரே நாம் எண்ணியதற்கு நேர் விரோதமாக நடப்பின் என் செய்வது?......இதுவரையில் பெரியாரை நாடி அவரைப் பின் தொடர்ந்து வந்த பலர் அவரைக் கை விடுவர். ஆனால் இக்காலத்திலும் மனந்தளராது எம்பெருமான் திருவிளையாடல்களே இவை யெல்லாமும் என்று எண்ணி நடப்பவன் உத்தம பக்தனாவன். இவ்வித பரீக்ஷா காலம், வெகு கடூரமானதாயினும் மிகக் குறைந்த காலமானதே எனக் கொள்ளலாம்.

***

உலகிற் பிறந்த மானிடர் அனைவருள்ளும் ஈசன் இருப்பது உண்மை. ஆனால் அவர் எல்லாரிடத்தும் ஒரே அளவிற் றேன்றாது, அவரவர் பக்திக்குத் தக்கவாறும் அவரை அடையமுயலும் அளவிற்குத் தக்கவாறுமே தோன்றுகின்றார். ஆகையினால் ஈசனை யடைய நாடும் உண்மை பக்தன், அதற்கு வழிகாட்டும்படி ஓர் குருவை எவ்வளவு ஆர்வத்துடன் அடைந்து அவரைப் பின் பற்றுகிறானோ அவ்வளவிற் கவ்வளவு, அவனிடம் உண்மை பக்தி தோன்றுகிறது. இவ்வுண்மையை அறிந்தோன், பக்தி மார்க் கத்திலடையும் கஷ்டங்களை ஸந்தோஷத்துடன் சகிப்பானேயன்றி எவரையும் நோகான்.

நாக ராஜன் அல்லது

# மானிடன் மனக்கோட்டை.

## 1.

சென்னைக்கடுத்த சைதாப் பேட்டையிலிருக்கும் உபாத்தியாயர் கலாசாலையைச் சார்ந்த 'ஹாஸ்டல்'லில் ஓர் அறை. நாகராஜன் சென்னை 'யூனிவர்ஸிடி'யில் பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷை தேறினவன். பரீக்ஷை தேறினதும் என்ன செய்வதென்று யோசனையுண்டாயிற்று. நம்மில் எத்தனை பெயருக்கு அவ்வெண்ணம் தோன்றவில்லை? நம்மவனோ ஏழை. பி. எல் பரீக்ஷை படிக்க ஆசையிருந்த பொழுதிலும் பணமில்லை. அவன் பெற்றவர்களுக்கு மூத்த மகனாகையால் எல்லாரும் அவனை நம்பினார்கள். ஆதலால் அவன் சீக்கிரமே வேலைக்குப் போக வேண்டியது அவசியமாயிற்று. சில வக்கீல்கள் தங்கள் பெண்ணை விவாகம் செய்து கொள்ளும் படிக்கும், பி. எல் பரீக்ஷைக்குப் போதுமான பணம் கொடுப்பதாயும் கூறினர். ஆனால் பெற்றோரையும் தம்பிகளையும் தங்கையையும் காப்பாற்றுவது எப்படி? அதற்குத்தன் மாமனாரைக் கேட்பதா? சை! வக்கீல் வேலை வேண்டாம் என்று நாகராஜன் தீர்மானித்தான். கடைசியாய் உபாத்திமையே தகுந்ததென்று தோன்றியது. எல். டி. பரீக்ஷையானதும் எங்கேயாவது ஆரம்பத்தில் ரூ. 80. கொடுப்பார்கள். பிறகு அதிர்ஷ்டமிருந்தால் எங்கேயாவது புரொபஸராகப் போனால் ரூ. 100 முதல் 150 வரையில் கிடைக்கும்; மேலேயும் கிடைக்கலாம். இந்த யோசனையின் தீர்ப்பாகத்தான் நாகராஜன் சைதாப் பேட்டை டீசர்ஸ் காலேஜைச் சேர்ந்தான்.

நாகராஜனுக்கு வக்கீல் வேலையில் கொஞ்சம் ஆசை உண்டு என்று முன் சொன்னேனல்லவா? அது தவறு. வேறொரு ஆசையும் உண்டு. அது தான் முந்தியதைவிட அதிக வேகமானது—மானிடர்களின் அறிவை விருத்தி செய்து, மனதிற்கு உத்ஸாகம் தந்து நல்வழி காட்டும் நூல்களை நன்கு அச்சிடவேண்டுமென்பதும் உயர் நூல்களின் ஆசிரியராகவேண்டு மென்பதுதான். நந்தமிழ் நாட்டில் உயர்ந்த செய்யுள் நூல்கள் பலவிருப்பினும் அவைகள் சுத்தப் பதிப்பானவையல்ல என்பது அனைவரும் அறிந்த விஷயம். அந்நூல்களைச் செவ்வனே பதிப்பிட்டு, கலைமகளுக்கு அர்ப்பணம் செய்து, தன் பெயரும் தமிழின் கீர்த்தியும் விளங்கவேண்டு மென்பது நாகராஜனின் பேரவா.

நாகராஜன் தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றி சிற்சில வியாசங்கள் எழுதியிருந்தான். அவைகள் 'விவேகபோதினி,' 'ஜனோபிமானி,' 'தேசபக்தன்,' 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தன. பலர் அவற்றைப் பற்றி பேசவும் ஆரம்பிக்கவே, நாகராஜனுக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஆனாலதனுடன் துக்கமும் கலந்திருந்தது. 'ஆஹா! நமக்குப் பத்தாயிரம் ரூபாயிருந்தால், ஓர் அச்சாலை ஏற்படுத்தி என்னவேலை செய்யலாம்' என்னும் எண்ணமே துக்கத்திற்குக் காரணம்.

முடவனுக்குக் கொம்புத்தேன் மீது ஆசையுண்டாகிறது. அவனுக்குத் தன்முயற்சியினாலேயே தேன் கிடைப்பது துர்லபம் எனத் தோன்றினாலும் ஆசை மாத்திரம் போவதில்லை. அவ்வித ஆசை கொள்வது சரியா, தப்பா என்பதைக் கூறவும் நமக்கதிகாரம் கிடையாது. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். தன்னை முடவனாகச் சிருஷ்டித்த அல்லது அந்நிலைமையிலிருக்கச் செய்த கடவுளையவன் வைகிறான். வேறென்ன அவன் செய்வது?

நாகராஜன் இந்நிலைமையிலிருந்தான். அவன் ஆசையெல்லாம் பணமின்மை—தரித்திரம்—என்பதால் கட்டுண்டிருந்தன. அவன் மனம் சாந்தமடைய ஓர் வழியுமில்லை.

அன்றைய தினம் அவன் வருத்தப் பட்டதற்கு காரணமிருந்தது. காலையில் போட்மெயில் வந்ததும் அவன் தாயார் பணத்திற்காக எழுதின கடிதம் வந்தது. நாகராஜனிடம் பணமில்லை. ஊரில் தன் பெற்றோர் படும் கஷ்டம் அவனுக்குத் தெரியும். சைதாப்பேட்டையில் வாசிப்பதற்குக் கொடுக்கும் பணமோ 20 ரூபாய். ஹாஸ்டலில் மாதம் கொடுக்க வேண்டியது 25 ரூபாயாகிறது. ஏதாவது பத்திரிகைகளுக்கு எழுதுவதால் கிடைக்கும் ஸ்வல்பகூலியைச்சேர்த்து ஹாஸ்டலிற்குக் கொடுத்து காலங்கழித்து வந்தான். ஆனால் வந்த கடிதத்திற்கு பதில் என்ன எழுதுவது? சும்மா இருப்பதா? தன் கஷ்டங்களைக் கூறி, கடனாவது வாங்கி அனுப்பலாமென நினைத்து, அவ்வூர் போஸ்டாபீசில் 10 ரூபாய் சம்பளத்திலிருந்த கோவிந்த முதலியிடம் சென்றான்.

கோவிந்த முதலியும் நாகராஜனும் பால்யசிநேகிதர்கள். மெற்றிகுலேஷன் (ஸ்கூல் பைனல்) பரீக்ஷையோடு கோவிந்த முதலி நின்று விட்டான். ஆனாலவனுக்கும் நாகராஜனுக்குமுள்ள ஸ்நேக பாவம் விடவில்லை. வேளாவேளைகளில் அவன் தான் நாகராஜனுக்கு உதவி செய்துவந்தான்.

நாகராஜன் தன் தாயாரிடமிருந்து வந்த கடிதத்தைக் காட்டி, தன்னாசைகளையும் அவை ஈடேறாமலிருப்பதையுங் கூறினான். கோவிந்தன் உடனே ரூபாய் 15 எடுத்துக்கொடுத்து 'இதை அம்மா



விற்கு அனுப்பு. நீ புஸ்தகம் எழுதினால் போதும். அச்சாபீஸ் வைத்து வேலை நடத்த வேண்டுமென்ற ஆசையை விட்டுவிடு. உன் குணத்திற்கு உபாத்தியாயர் வேலை தான் சிறந்தது. வியாபாரத்தில் இறங்கினால் உன்பாடு கஷ்டம், என் வார்த்தையைக் கேள்.'

கோவிந்தன் சொன்னபோதிலும் நாராசம் போலிருந்தன இவ்வார்த்தைகள். பணத்தை ஊருக்கனுப்பிவிட்டு, சற்று உலாவி வரும்பொழுது இருட்டி விட்டது. அறைக்கு வந்த பிறகும் அவன் மனசஞ்சலம் ஓய்ந்தபாடில்லை. அவ்வறையில் சிறு மேஜையொன்றும், அதன்மீது சில புத்தகங்களும், மசிக்கூடும், பேனாவுமிருந்தன. "ஆறணா" கண்ணாடித்தீபமொன்று மேஜையின் மீது எரிந்து கொண்டிருந்தது. ஆனால் காற்று ஜன்னல் வழியாய் வீசும் போதெல்லாம், தீபம் அலண்டு, நித்ய கண்டம் பூர்ணாயுஸ் என்பதைப் போல எப்பொழுது அணையுமோ என்றிருந்த போதிலும், அணையாமலிருந்தது. அறையின் ஒரு ஓரத்தில் சிறு படுக்கையுமிருந்தன. ஆகட்டும். 'விதியை என்னால் வெல்ல முடியுமா? எனப் பார்க்கிறேன். என்விதி யென்னவென்றுயார் கண்டார்கள்? அதிர்ஷ்டமிருந்தால் என்னதான் நடவாது' என்று பல எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின, அவ்வாறே வெகுநேரம் சென்றது. நாகராஜன் மேஜையின்மேல் சாய்ந்துகொண்டு யோசிக்கலானான்.

## 2.

வெளியே மற்ற அறைகளில் தன் நண்பர்கள் பேசும் சப்தம் கேட்டது. நாகராஜன் கண்விழித்தான். பொழுது புலர்ந்து, சூரியவெளிச்சம் ஜன்னல் வழியாய் உள்ளே பிரகாசித்தது. "ராத்திரி நல்ல தூக்கம். நாற்காலியிலிருந்தே தூங்கிவிட்டேன்" என்று தனக்குள் பேசிக் கொண்டே எழுந்து காலைக் கடன்களை முடிக்க, டீசர்ஸ் காலேஜிலுள்ள கிணற்றிற்குச் சென்றான்.

திரும்பிவரும் போது எட்டு மணியிருக்கும். தன்னறைக்கு வெளியே இருவர் நின்று கொண்டிருப்பதையும், பக்கத்தறையிலிருந்த ஸுந்தரம் தன்னைச் சுட்டிக் காண்பிப்பதையும் கண்டான். யார் அவர்கள் இருவரும் என உற்றுப்பார்த்தான். தனக்குத் தெரிந்தவர்களாகத் தோன்றவில்லை. ஒருவர் பெரியவர்; சுமார் 40 அல்லது 42 வயதிருக்கலாம். அவர் தரித்த உடையும் முகத்தோற்றமும் பெரிய குலத்திற் பிறந்த செல்வந்தர்போலத் தோன்றியது. கூடவந்தவருக்கு 35 வயதிருக்கும். விசால புத்தியும், தைரியமனதும் உள்ளவர் எனவிளங்கியது. "ஸரி எல்லாம் தானாக வெளிவரும்" என்று நினைத்துக் கொண்டே தன்னறையைத் திறந்து, ஈரவஸ்திரத்தைக் களைந்து உலர்ந்த வஸ்திரம் உடுத்துக் கொண்டான்.

"ஸார், நாங்கள் உள்ளே வரலாமா?" என்று சிறியவர் கேட்க, "ஏன் வாருங்கள்" என்று அழைத்துப் பக்கத்தறையிலிருந்து ஒரு முக்காலியும், ஓர் நாற்காலியும் போட்டு (ஸைதாப் பேட்டையில் எல். டி. படிக்கும் உபாத்தியாயர்களுக்கு சாய்ந்து உட்காரமுடியாத

மொட்டை நாற்காலிகள் தான் உண்டு) "தாங்கள் யாரோதெரிய வில்லையே!" என்றான்.

"ஆம் தங்களுக்கு நாங்கள் புதியவர்தான். நான்— ஊரில் மிராசுதார். என்னுடன் கூடவந்திருப்பவர் இவ்வூரில் ஓர் ஹைகோர்ட்டு வக்கீல்—ராமச்சந்திரய்யர் என்று பெயர்—என் நண்பர்" என்றார்.

"ரொம்ப ஸந்தோஷம். என்னைத் தாங்கள் தேடிவர வேண்டிய காரணம் என்னவோ?"

"எங்கள் கார்யமாகத்தான் வந்தோம். விவேகபோதினி தேசபக்தன் முதலிய பத்திரிகைகளில் தமிழ் நூல்களின் அருமையைப் பற்றியும் அவைகள் ஸரியாக அச்சிடவேண்டியதைப் பற்றியும் நாகராஜன் எனக் கையொப்பமிட்டு எழுதினது தாங்கள் தானே!"

"ஆம். தாங்கள் அதை வாசித்தீர்களோ?"

"நான் வாசித்துப் பார்த்தேன். மிகவும் ஸ்வாரஸ்யமாயிருந்தது. அதனால்தான் தங்களிடம் வர நேர்ந்தது."

"என்னால் தங்களுக்கு ஆகவேண்டிய கார்யம் எதுவாயிருந்தாலும் செய்வதற்குத் தடையில்லை."

"ரொம்பஸந்தோஷம். அம்மாதிரி தமிழ் நூல்களைத் தாங்களே பதிப்பிடக் கூடாதோ?"

நாகராஜன் திடுக்கிட்டான்! "அதற்கு ஏராளமாய்ப் பணம் வேண்டுமன்றோ?'

"அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. நான் கொடுக்கிறேன்."

"நான் புதியவனாயிற்றே! தாங்கள் என்னை எப்படி நம்பலாம். ஆயிரக்கணக்காய்ப் பணம் வேண்டுமே!"

"நீங்கள் எனக்குப் புதிதல்ல. தங்களுடைய குடும்ப விஷயங்களைப்பற்றி யெல்லாம் எனக்குத் தெரியும். ஆதலால் தங்களிடம் பூர்ண நம்பிக்கையுண்டு. ஆகையால் தா—"

"ஆனாலும்—"

"நீங்கள் கொஞ்ச மேனும் யோசனை செய்ய வேண்டாம். தங்களால் எனக்காக வேண்டிய கார்ய மொன்றிருக்கிறது. அதனால் தான் இவ்வளவு சிரமமும் தங்களுக்கு—"

"அது என்னவோ?"

"எனக்கு ஏக புத்திரியுண்டு. அவளுக்கு இப்பொழுது 12 வயதாகிறது. 5 வது வயதில் அவளுக்குப் பெரியம்மை போட்டி கால் முடமாய் விட்டது. அது முதல் அவள் அறையை விட்டு வெளிச் செல்வதில்லை—"

நாகராஜனுக்கு இன்னம் கல்யாண மாகவில்லை. ஏது தன் பெண்ணை விவாகஞ் செய்து கொள்ளச் சொல்கிறாரோ என்ற



ஐயம் உண்டாயிற்று. வந்தவர் அதை அறிந்தவர் போல, "தங்களை மணம் செய்து கொள்ளச் சொல்கிறேனோ வென்று நினைக்கிறீர்களா? அஃதொன்று மில்லை. லக்ஷ்மிக்கு அவ்வெண்ணம் சிறிது மில்லை. என்னிடம் வந்தவர்களுக்கும் அவளிஷ்டப்பட்டால் தான் முடியும் என்று சொல்லிவிட்டேன்."

"ஏன் தங்கள் புத்திரிக்கு இஷ்டமில்லை."

"தன்னை மணப்பவன், முடமான தன்னைப்பணத்திற்காக மணப்பானே தவிர, அன்பினால் விவாகஞ் செய்து கொள்வானா என்ற ஸந்தேகம் ஒன்று மற்றொன்று அவள் ஆசை ஒன்று பூர்த்தியாக வேண்டுமாம்."

"அதென்னவோ?"

"வீட்டிலேயே என்னாலானவரை தமிழ் தெலுங்கு இங்கிலீஷில் நல்ல ஆசிரியர்களைக் கொண்டு கல்வி சொல்லி வைத்திருக்கிறேன். ஸங்கீதத்தில் அவளுக்கு அதிகப்ரியம், ஆதலால் அதிலும் தேர்ச்சியடைந்திருக்கிறாள். ஸ்ரீ தியாகராஜர் கீர்த்தனைகள், தேவாரம் முதலியன நன்றாய்ப் பாடுவாள். அவர்களைப்போலவே எழுத வேண்டுமென்று அவளுக்கும் ஆசை உண்டாயிற்று."

"இச்சிறுவயதிலா?"

"ஆம். அவள் சில கீதங்களும் பாக்களும் இயற்றியிருக்கிறாள். அவற்றைத்தக்கபடி அச்சிடவேண்டு மென்பது அவள் பேராவல். எனக்கும் அப்படியே!"

"செலவு அதிகமாகுமே?"

"அதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. அவள் திருப்தியடைய (50,000) ஐம்பதினாயிரம் முதல் லக்ஷம் ரூபாய் வரையில் செலவிட எனக்கு ஸர்வஸம்மதம்."

நாகராஜன் ஆச்சர்ய மடைந்தான்.

"உங்களுக்கு இது ஆச்சர்யமாயிருக்கலாம். எனக்கு 15 லக்ஷம் ரூபாய் பெறுமான ஆஸ்தியிருக்கிறது, அவளும் ஒரே பெண். அவள் ஸந்தோஷமானால் போதுமானது."

"என்னால் இவ்விஷயத்தில் தங்களுக்கு என்ன செய்ய முடியும்?"

"தாங்கள் அவள் எழுதியவற்றைத் தகுந்தபடி அச்சிட்டுப் பலரும் வாசிக்கும்படி உதவி செய்ய வேண்டியது தான். நீங்கள் மாட்டேனென்று சொல்லக்கூடாது. அவளுக்காகத் தான் நான் வாழ்ந்து வருகிறேன்."

"இப்பொழுது எல். டி. க்குப்படிக்கவேண்டுமே!"

"நீங்கள் இன்றையதினமே விட்டு விடலாம். செலவிற்கு வேண்டிய பணம் தருகிறேன். மற்ற விஷயங்களைப் பற்றித் தகுந்த ஏற்பாடுகள் தங்கள் ஸௌகர்யப்படி செய்யலாம்."

'ஸரி.' அவனையறியாமலே நாகராஜனிடமிருந்து இவ்வார்த்தைகள் வெளி வந்தன.

"தங்கள் சொந்த செலவிற்காக மாதம் 200 ரூபாயும் தங்கள் ஊருக்கு 100 ரூபாயும் மாதம் மாதம் 1உவந்து விடும். உடனே ஓர் அச்சாபீஸ் ஏற்படுத்துவதற்கு 20,000 ரூபாய் செக் எழுதித் தருகிறேன். அவ்வப்போது வேண்டிய பணம் ராமச்சந்திரய்யரிடம் தாங்கள் பெற்றுக் கொள்ளலாம்."

"கணக்கு"

"அதெல்லாம் உங்களை ஒருவரும் கேட்கமாட்டார்கள். ஐரோப்பா, அமெரிக்கா போனாலும் என் செலவிலேயே போகவேண்டும். 2 வருஷத்திற்குள்ளோ மூன்று வருஷத்திற்குள்ளோ புத்தகம் அச்சிட்டு முடிந்த பிறகு ராமசந்திரய்யரிடம் சொல்லி யனுப்பினால் வருகிறேன்."

"அதற்கு முன் ஸந்தேகமிருந்தால்"

"தங்களிஷ்டம் போல் செய்யலாம். இவ்விடத்தை விட்டுப் போன பிறகு 3 வருஷத்திற்கு நான் யாரென்றும், எங்கிருக்கிறேனென்றும் தாங்கள் தேடக் கூடாது. தேடியும் கண்டு பிடிக்க முடியாது. ராமசந்திரய்யரும் சொல்ல மாட்டார்"

"நான் தங்களை மோசஞ் செய்தால்—"

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. உங்கள் குணம் எனக்குத் தெரியும்.— ஏன் ராமசந்திரா! போகலாமா?" என்றார். "அதற்கென்ன 9 மணி வண்டியில் போகலாம். 10 நிமிஷ மிருக்கிறது" என்று சொல்லி விட்டு 1,000 ரூபாய்க்கு ஒரு செக் நாகராஜன் பேருக்கு எழுதிக்கொடுத்துவிட்டு, அவனைகைகுலுக்கிவிட்டு விடைபெற்றுச்சென்றனர்.

இந்தியன் பாங்கி சென்னை.

"ஸ்ரீமான் நாகராஜனுக்கு 1,000 ரூபாய் இது கண்டதும் கொடுக்கவும்.

ராமசந்திரய்யர்."

என்று எழுதிய செக்கைப்பார்த்த வண்ணம் நாகராஜன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

—(தொடரும்.)

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்

## பிரிவு 8.

(263-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர்:—ஸ்வாமி! தாங்கள் எங்கெல்லாம் ஸ்தல யாத்திரை போயிருக்கிறீர்கள்?

பகவான் (புன்னகையுடன்):—ஏதோ சில விடங்களுக்குப் போயிருக்கிறேன். ஹஸரன் என்னைவிட இன்னும் வெகுதூரம், ஹிமயமலையின் சிகரத்திலிருக்கும் ரிஷிகேசத்துக்கும் போயிருக்கிறான். நான் அவ்வளவு தூரமாவது அவ்வளவு உயரமாவது செல்லவில்லை.

கழுகும் பருந்தும் வெகு உயரத்தில் பறக்கின்றன வாயினும் அவைகளின் பார்வை யெல்லாம் கீழே பூமியிலிருக்கும் பிணக்குழியின் மீதுதானே.

உனக்கு பக்தி வந்து விட்டால் ஸ்தலயாத்திரை எதற்கு? என்னுடைய யாத்திரையில் நான் காசிக்குப்போயிருந்த பொழுது அங்கும் இம்மாதிரியே புல் முளைத்திருப்பதையும், புளியமரங்கள் இதே மாதிரி இலைகளுடனிருப்பதையும் கண்டேன்.

ஈசுவரனிடத்தில் பக்தியில்லாமல் ஸ்தலயாத்திரை செய்வதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. மனதில் பக்தியிருந்தால் நீ ஸ்தலயாத்திரை செய்ய வேண்டிய அவசியமுமில்லை. நீயிருந்த விடத்திலிருப்பதே போதுமானது பக்தி யொன்றே அவசியம்.

காமினி காஞ்சனம்—பெண் பொன்—ஆகிய இவ்வுலகம் தான்பிணக்குழி.

பெரிதாகப்பேசி சாஸ்திரங்களில் விதித்திருக்கும் கர்மங்களைச் செய்வதினால் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறவர்கள் பருந்து. அவர்களுடைய மனது பணம், புகழ், சிற்றின்பம் முதலிய உலக விஷயங்களிலேயே பற்றி நிற்கிறது.

பண்டிதர்:—ஸ்வாமின்! தாங்கள் சொல்வது உண்மையே. அவ்வித ஸ்தல யாத்திரை, மஹாவிஷ்ணுவினது மார்பிலணிந்திருக்கும் கௌஸ்துப ஆபரணம் கையிலிருக்க, அதையிகழ்ந்து வேறணிகளைத்தேடிச் செல்வதுபோலவே.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—உமது உபந்யாஸம் பலிப்பதற்குக் காலம் வர வேண்டும். ஒவ்வொருவனிடத்திலும் உபதேசம் செய்த பிறகு அதன் பலனைப் பார்க்க சிறிது காலம் காத்திருக்க வேண்டும். அவ்விதம் காத்திருக்காவிடில் உபதேசம் பிரயோஜனப்படாது.

உமது உபதேசத்தைக் கேட்பவர்கள் தங்களுக்கு பக்குவகாலம் வந்தாலொழிய உபதேசத்தின் பலனை உடனே அடையமாட்டார்கள்.

ஞானோதயம் காலக்கிரமத்தில் தானுண்டாகும். அதற்கு குரு செய்வதெல்லாம் சிறிது ஸஹாயம்தான்.

மூன்று விதமான வைத்தியர்களிருக்கிறார்கள்:—ஒரு வைத்தியன் நோயாளியைப் பார்த்து நாடியைப் பரீக்ஷித்து வேண்டிய மருந்துகளை எழுதிக்

கொடுத்து, சாப்பிடச் சொல்லுகிறான். நோயாளி மருந்து சாப்பிட மறுத்து விட்டால், வைத்தியன் அதைப் பற்றி வேறு ஒரு சிரமமும் எடுத்துக்கொள்வதில்லை. இவன்தான் எல்லாவற்றிலும் தாழ்ந்த வகுப்பு வைத்தியன். இவனைப் போல் சில குருக்கள் தாங்கள் செய்த உபதேசம் ஸரியாகப் பதிந்ததா, அதின் பிரகாரம் சிஷ்யன் அனுஸரித்து வருகிறானா என்பதைப்பற்றி கவனிப்பதில்லை.

இரண்டாவது வகுப்பு வைத்தியன், நோயாளியை மருந்து சாப்பிடச் சொல்வதோடு, அவன் அதற்கு உடன்படாவிடில், அவனுக்கு நியாயம் சொல்லி அவனைச் சாப்பிடச் செய்கிறான். இவனைப்போல் ஜனங்களை அனுநயமான வார்த்தைகளால் தர்மத்திலும் ஸத்தியத்திலும் பிரவர்த்திக்கும்படி ஸகலவிதமான பிரயாசை எடுத்துக்கொள்ளுகிற குருக்கள் முன் சொன்னவர்களைவிட மேலானவர்கள்.

மூன்றாவது.—எல்லாவற்றிற்கும் மேலான—வைத்தியன், நயவார்த்தைகளினால் நோயாளியை மருந்து சாப்பிடச் செய்ய முடியாவிடில் பலவந்தமாயாவது மருந்தைப் புகட்டுவான். நோயாளியின் மார்பில் தன்முழங்காலை ஊன்றிக்கொண்டு மருந்தைத் தொண்டைக்குள் செலுத்துவதற்குக் கூடப் பின் வாங்கான். (யாவரும் சிரித்தல்)

அது போலவே சில குருக்கள் தமது சிஷ்யர்களை ஈசுவரனிடம் திருப்புவதற்காக, அவசியமாயிருந்தால் பலவந்தம் கூடச்செய்வார்கள். இவர்கள் எல்லோரிலும் மேலானவர்கள்.

பண்டிதர்:—ஓஹோ ? டாக்டர்களைப்போல மேலான குருக்களும் இருக்கிறார்கள். அப்படியானால் தாங்கள் ஏன் காலக்கிரமம் வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

பகவான்:—மேலான டாக்டர்களிருப்பது உண்மைதான், ஆனால் அவர்கள் மருந்து வயிற்றில் போய்ச் சேராவிட்டால் டாக்டர்களின் முயற்சியினாலென்ன பயன் ?

பாத்திரமறிந்து ஞானம் உபதேசம் செய்யவேண்டும். நான் என்னிடம் வருபவர்களை, 'உன்னை ஸம்ரக்ஷிப்பதற்கு யாராகிலு மிருக்கிறார்களா? என்று முதலில் கேட்கிறேன். ஏன் ? தகப்பனார் கடன் வைத்து விட்டுப் போனதாக வைத்துக்கொள்வோம். அல்லது அவனை இரக்ஷிக்க இவ்வுலகில் ஒருவருமில்லை யென்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட சிஷ்யனுக்கு மனதை ஈசுவரனிடம் நிறுத்துவது முடியாத காரியம். அப்பா நான் சொல்வதைக் கவனிக்கிறாயா ?

பண்டிதர்:—ஸ்வாமின்! தாங்கள் சொல்வதிலேயே கவனமாயிருக்கிறேன்.

பிறகு ஸம்பாஷணையானது கடவுளின் கிருபையைப் பற்றித் திரும்பிற்று.

பகவான்:—ஒரு ஸமயத்தில் சிலக்கர் சிப்பாய்கள் கோவிலுக்கு வந்தார்கள். அவர்கள் என்னுடன் ஜகன்மாதாவின் ஆலயத்தின் முன்பாகக் கூடிப்பேசினார்கள், அவர்கள் 'கடவுள் பரமகிருபாநிதி' என்றார்கள். நான் புன்சிரிப்புடன், 'அது அப்படியா? என்றேன்' அதற்கு அவர்கள் 'ஏன் ஸ்வாமி, கடவுள் தன்சிருஷ்டி கோடிகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் அளிக்கவில்லையா ?' என்று சொன்னார்கள். அதற்கு நான் 'பகவான் எல்லாவற்றிற்கும் பிதா, அவரே தான் சிருஷ்டித்த தன்குழந்தை



களைப் பாதுகாக்கவேண்டும். அவரின்றி வேறு யார் பாதுகாப்பார்கள்? கடவுளின் சொந்தக் குழந்தைகளுக்கு அமுதூட்ட வேறு ஊரிலிருந்து யாராவது வருவார்களோ ?' என்றேன்.

நரேந்திரன்:—அப்படியாயின் கடவுள் கிருபா நிதியல்லவோ?

பகவான்:—அப்படி அவரைச் சொல்லக்கூடாதென்று நான் தடுக்கவில்லை. நீ தாராளமாய் அந்தப் பெயரை வைத்தழைக்கலாம். பகவான் நமது சொந்தம் என்பதே என் கருத்து.

பண்டிதர்:—என்ன விலை மதிக்க முடியாத வார்த்தைகள்!

பகவான் (தனிமையில் ஒருசிஷ்யனிடம்):—நீ பாடினாய், ஆனால் இன்றைய தினம் எனக்கு அதைக்கேட்க அவ்வளவு பிடிக்கவில்லை. உப்பில்லாச் சோறுபோல் சிறிது ருசியற்றிருந்தது. ஒரு வீட்டு எஜமானனுடைய சிபார்சின் பேரில் ஒரு உத்தியோகத்தை எதிர்ப்பார்க்கிறவனுடைய நிலைமையில் நீ யிருந்தாய். ஆதலால் அந்தப்பாட்டுகளைக் கேட்டு கொண்டிருக்க முடியாமல் வெளியே வந்துவிட்டேன்.

சிஷ்யன் முகம் வெட்கத்தினால் சிவந்தது. அப்பொழுது பகவான் கொஞ்சம் தீர்த்தம் கேட்டார். முன் கொண்டு வந்திருந்த ஜலத்தை அவர் சாப்பிடவில்லை; கெட்ட நடத்தையுள்ள ஒருவன் தீண்டி அதை அசுத்தம் பண்ணினதால் பகவான் அதைத் தன்னுள்ளிருக்கும் பிரம்மத்திற்கு நிவேதனம் செய்யத் தகுதியற்றதாக நினைத்தாற்போலிருக்கிறது.

பண்டிதர் (ஹரஸ்ரனைப்பார்த்து):—பகவானுடைய ஸமீபத்தில் எப்பொழுது மிருக்கும் நீங்களெல்லோரும் ஸதா ஆனந்தத்தில் மூழ்கினவர்களாயிருக்கவேண்டும்!

பகவான் (புன்சிரிப்புடன்);—இளம்பிறைச் (சுக்கில பக்ஷத்து துவிதியை) சந்திரனைப்பார்க்கும்படியான அபூர்வ ஸந்தோஷம் எனக்கின்று கிடைத்தது; இளம்பிறைச் சந்திரனென்று ஒரு விசேஷ அர்த்தத்துடன் சொல்கிறேன்.

ஸீதை இராவணனைப் பார்த்து "நீபூர்ண சந்திரன்; எனது இராமச்சந்திரன் இளம்பிறைச்சந்திரன்" என்றாள். இதைக்கேட்டதும் இராவணனுக்கு வெகு ஸந்தோஷம். பிற்பாடு அதன் அர்த்தம் அவனுக்கு விவரிக்கப்பட்டது. ஸீதையின் கருத்து யாதெனில், இராவணனது செல்வம் பூர்ணஸ்திதியை அடைந்தாய் விட்டது. இனிமேல் பூர்ண சந்திரனைப்போல் குறையவேண்டியதுதான். ஆனால் இராமச்சந்திரனது செல்வமோ இப்பொழுதுதான் மூன்றாம் பிறையினது வளர்ச்சியை அடைந்திருக்கிறது. இனிமேல் அது நாளுக்கு நாள் வளர்ச்சியடையுமேயொழியக் குறையாது. இராமச்சந்திரனது செல்வம் வளரவும், இராவணனது செல்வம் குறையவும் வேண்டும் என்பதே ஸீதை கூறியதின் கருத்து.

இப்பொழுது பகவான் போவதற்காக எழுந்திருக்க, பண்டிதரும் அவர் சிநேகிதர்களும் வணங்கினார்கள். பிறகு பகவான் தம் சிஷ்யர்களுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

துன்மதி௵ தக்ஷிணாயனம் சரத்ருது, ஐப்பசி௴
(கி. பி. 1921௵ அக்டோபர்-நவம்பர்௴.)

| ஐப்பசி | நவம்பர் | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞா | ○பௌ-55-50 | ரேவ-53-40 | சந்திர கிரஹணம் |
| 2 | 17 | திங் | பிர-56-59 | அசு-56-22 | |
| 3 | 18 | செவ் | துவி-56-57 | பர-57-54 | |
| 4 | 19 | புத | திரி-55-49 | கா்-58-22 | கிருத்திகை |
| 5 | 20 | வியா | சது-53-39 | ரோ-57-49 | நரக சதுர்த்தி |
| 6 | 21 | வெ | பஞ்-50-35 | மிரு-56-34 | |
| 7 | 22 | சனி | ஷஷ்-46-44 | திரு-54-11 | |
| 8 | 23 | ஞா | ஸப்-42-9 | புன-51-18 | |
| 9 | 24 | திங் | அஷ்-36-59 | பூச-47-50 | காலாஷ்டமி |
| 10 | 25 | செவ் | நவ-31-21 | ஆயி-43-55 | |
| 11 | 26 | புத | தச-25-23 | மக-39-42 | |
| 12 | 27 | வியா | ஏகா-19-14 | பூர-35-23 | துவா-திதி |
| 13 | 28 | வெ | துவா-14-7 | உத்ர-31-8 | பிரதோஷம் |
| 14 | 29 | சனி | திர-7-16 | ஹஸ்-27-15 | தீபாவளி ஸ்நானம் |
| 15 | 30 | ஞா | சதி-1-55 ●-57-23 | சித்-23-58 | |
| 16 | 31 | திங் | பிர-53-55 | சுவா-21-34 | ஸ்கந்தஷஷ்டி பூஜாரம்பம் |
| 17 | 1 | செவ் | துவி-51-46 | விசா-20-20 | |
| 18 | 2 | புத | திரி-51-11 | அனு-20-30 | |
| 19 | 3 | வியா | சது-52-15 | கேட்-22-16 | சதுர்த்தி விரதம் |
| 20 | 4 | வெ | பஞ்-55-3 | மூல-25-39 | |
| 21 | 5 | சனி | ஷஷ்-59-22 | பூரா-30-37 | ஷஷ்டியுபவாசம், ஸ்கந்தஷ |
| 22 | 6 | ஞா | ஸப்-60-0 | உரா-36-53 | [ஷ்டி |
| 23 | 7 | திங் | ஸப்-4-54 | திரு-44-2 | |
| 24 | 8 | செவ் | அஷ்-11-7 | அவி-51-31 | |
| 25 | 9 | புத | நவ-17-27 | சத-58-46 | |
| 26 | 10 | வியா | தச-23-18 | பூட்-60-0 | |
| 27 | 11 | வெ | ஏகா-28-8 | பூட் 5-12 | |
| 28 | 12 | சனி | துவா-31-33 | உட்-10-27 | |
| 29 | 13 | ஞா | திர-33-22 | ரேவ-14-10 | |
| 30 | 14 | திங் | சதி-33-33 | அசு-16-19 | |

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 10-37 கன்செ- 23-54 துலா-சுக் | | செ |
| | | ரவி-புத | கு-ச-ரா சுக் |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1] துன்மதி௵ கார்த்திகை௴ [பகுதி 11

உ

## கடவுள் வணக்கம்.

நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவ னீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தக னீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி உயர்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாதபித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்தொரா நூற்று நாற்பத்தெண்
மேலாம்வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திரனேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ ரணியும் விமலன் புதல்வா
பெண்ணு முமையாள் பெற்றிடுந் தேவே
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்.

நற்கீரதேவர்,

# குருதேவர் வாக்கியம்.

## மாயையினியல்பு

வித்தைமாயையு மவித்தை மாயையுமென
விளம்பிரண்டிதில் வித்தை
சித்தத்தால்விடல் விவேகமாய் விமலர்பாற்
சிவனைப் புகுவிக்கும்
வைத்தகாமமே லோப்மோ கம்மதம்
வெகுளிமாச் சரியம்மாய்
மித்தையா முலகினிற் றளையவித்தையும்
வித்தையா லகல்வாமே.

[மாயை இருவகைப்படும்.—வித்யாமாயை என்பது நம்மை ஈசுவரனிடம் அழைத்துச் செல்வது; அவித்யா மாயை யென்பது நம்மை ஈசுவரனிடமிருந்து பிரிப்பது. வித்தை, விவேகம், வைராக்கியம் என இருவகை. அவித்தை, காமம், (ஆசை), குரோதம் (கோபம்), லோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) என ஆறுவகைப்படும். இதுவே நம்மை இப்பொய்யுலகில் பந்தப்படுத்தும் சங்கிலிபோன்றது. இந்த அவித்தை வித்தையால் நாசமடைகின்றது.] (6)

கலங்கனீரிலே கதிரவன் மதியுருக்
காட்டினுந் தெளிவாகப்
புலங்கொளற் கரிதாகிய தன்மைபோற்
புத்தியி னென்றும்
இலங்குமிப் பொருளென தென்றுமியம்பிடும்
எண்ணமாகிய மாயை
விலங்கு சூழ்ந்திடலிறையருட் பிரபையாம்
விளக்கமுங் குறைவாமே.

[கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியர்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாய்க் காணமுடியாததுபோல 'நான், எனது' என்னும் மாயையால் கலங்கியிருக்கும் புத்தியிலும் ஈசுவரனுடைய அருட்பிரகாசத்தைச் சரியாய் உணர முடியாது.] (7)

பரிதிவானவ னுலகினுக் கொளியினைப்
பரப்புவன் சிறுமேகம்
மருவிமுன்வரில் மறைபொரு ளாவனிம்
மரபினிலுல கெங்கும்
விரவுநீர்மையிற் சச்சிதா நந்தமாய்
விளங்குமெய்ப் பொருளாய்ப்
பரனும்புல்லிய மாயையாந் திரையினுற்
பார்க்கரும் பொருளாவன்.

[உலகனைத்துக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியன் சிறு மேகத்தால் மறைக்கப்படுவதுபோல, எங்கும் நிறைந்து ஆனந்தமயமாய் விளங்கும் பரம்பொருளும் துச்சமான மாயையாகிய திரையால் மறைக்கப்படுகிறது.] (8)

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## பிரிவு 9.

### 1884

### தக்ஷிணேசுவரம் கோவிலில் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

இடம்—தக்ஷிணேசுவரம் கோவிலில் பகவானுடைய அறை.
காலம்—ஆகஸ்டு மாதம் 3-ம் தேதி, மத்தியானம், 2-மணி முதல் 9-30 வரையில்.

### அத்தியாயம்—1.

பலராம், ம—, ரக்கல், சிவபுரியிலிருந்து வந்திருக்கும் பௌளிகள் (பக்தர்கள்) பவானிபூரிலிருந்து பகவானைப் பார்க்க வந்த சிலர், ஹஸ்ரன், ஆதார், ராமசத்தர்ஜி முதலியவர்கள் இருக்கின்றனர்.

பகவான் வழக்கம்போல் ஸோபாவில் வடக்கு முகமாக உட்கார்ந்திருக்கிறார். அவரது அறையின் மேற்கு வடக்கு வாசல்களினின்று கங்காநதியின் புண்ணிய தீர்த்தத்தைக் காணலாம். சிவபுரியிலிருந்து வந்திருப்பவர்கள் அறையில் கீழே விரிக்கப்பட்டிருக்கும் பாயின்மீது உட்கார்ந்திருக்கிறார்கள். 'கோபியந்திரம்' என்ற ஒற்றைத்தந்தி தம்பூர் முதலிய வாத்தியங்களுடன் அவர்கள் கீர்த்தனைகள் பாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் மேற்கு முகமாக பகவானைப்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். மற்றவர்கள் பகவானுக்கெதிராக, அதாவது தெற்கு முகமாக உட்கார்ந்திருக்கிறார்கள்.

அவர்கள் பாடின பாட்டில் யோகமுறையிலுள்ள ஷட்சக்கிரத்தைப் பற்றிச்சொல்லப்பட்டிருந்தது.

பாடல் முடிந்ததும் பகவான் சொல்லுகிறார்:—

தந்திர சாஸ்திரத்தின் யோக முறைகளில் சொல்லப்பட்டிருக்கும் ஷட்சக்கிரங்களும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸப்தபூமிகளும் ஒன்றே. மனம் பிரபஞ்சவாழ்வில் மூழ்கியிருக்கும்பொழுது, அதன் ஸ்தானம் முதலில் குஹ்யத்திலும், இரண்டாவது லிங்கத்திலும், மூன்றாவது நாபியிலு மிருக்கிறது.

நான்காவது நிலை ஹிருதயத்தில்; மனது நான்காவது நிலைமைக்கு வரும்பொழுது அவன் மனக்கண்ணுக்கு ஜ்யோதிஸ் ஒன்று தென்பட, 'இதென்ன, இதென்ன!' என்று ஆச்சரியமடைகிறான்.

ஐந்தாவது நிலை கண்டத்தில்; பக்தன் இந்நிலைக்கு வரும்பொழுது கடவுளைப்பற்றி மாத்திரம்தான் பேச விரும்புகிறான். வேறெதாகிலும் பேச்சு நடந்தால் அதை ஸஹிப்பதில்லை.

ஆறாவது நிலையில் புருவங்களுக்கு மத்தியிலிருக்கிறது. அப்பொழுது பக்தன் கடவுளை நேராகப்பார்க்கிறான். அவனுக்கும் கடவுளுக்கும் மத்தியில் ஒரு கண்ணாடி போன்ற தடை தானிருக்கிறது. அதாவது, கடவுள் அவனுக்கு லாந்தருக்குள்ளிருக்கும் தீபம்போலவும், கண்ணாடிக்குப் பின்னிருக்கும்

படம் போலவும் தென்படுகிறார். அவரது திவ்யஸ்வரூபத்தைத் தொடப் பார்க்கிறான். ஆனால் அது முடியவில்லை. அவனுடைய ஞானம் பூர்ண அனுபவமாக முற்றவில்லை; ஏனெனில் நான் (அஹம்) என்பது கொஞ்சமிருக்கிறது.

ஏழாவது நிலையில் மனது பூர்ணஸமாதியை அடைகிறது. அப்பொழுது இந்திரியப்ரக்ஞை முற்றிலும்போய் ஆத்மப்ரக்ஞை மாத்திரம் நிற்கிறது. இந்நிலையை அடைந்த பக்தனுடைய உயிர் இருபத்தொரு நாளிருந்து பின்போய் விடுகிறது. அப்பொழுது அவன் ஆகாரமொன்றும் உட்கொள்ளான். அவன் வாயில் பால் விட்டால் உட்செல்லாது வெளியில் வழிந்துவிடும்.

பகவான் மேலும் சொல்லுகிறார்:—

இக்கடைசியாகிய ஏழாவது நிலையையடைந்து பிரம்மத்தில் லயித்த சிலர், அவ்வுந்நத ஸ்திதியிலிருந்து, அதற்குத் தாழ்ந்த நிலைக்குவர, லோக நன்மையின் பொருட்டு திருவுள்ளம் கொள்ளுகிறார்கள்.

அப்பொழுது அவர்கள் வித்தையாகிய—ஞானமாகிய—அஹங்காரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இவ்வஹங்காரம் ஜலத்தில் கிழித்தகோடு போல் தோற்றமாத்திரமே யொழியவேறல்ல.

ஹனுமான் பகவானை ஸாகாரமாகவும் (ரூபத்துடனும்) நிராகாரமாகவும் (ரூபமின்றியும்) அறியும்படியான பாக்யம் பெற்றிருந்தான். ஆயினும் பகவத் ஸேவையாகிய அஹங்காரத்தை வைத்துக்கொண்டிருந்தான்.

அப்படியே தான் நாரதர், ஸனகர், ஸனந்தனர், ஸனத்குமாரர் முதலிய ரிஷிகளும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாரதாதி முனிவர்கள் பகவானை பக்தர்களாக வணங்கினார்களா; "நிர்க்குணப்பிரம்மமாக அறிந்தார்களா?" என்றகேள்வி யுண்டாயிற்று.

பகவான் சொல்லுகிறார்:— நாரதர் முதலியவர்கள் மேலான பிரம்மக்ஞானத்தையடைந்தவர்கள். ஆயினும் முணுமுணுத்துச் செல்லும் ஒரு சிற்றோடைபோல் புகழ்ந்து பாடிக்கொண்டு சென்றார்கள். இதனால் இவர்கள் ஞானமாகிய அஹங்காரத்தை வைத்துக் கொண்டார்களென்று தெரிகிறது.

அவர்கள் ஞானிகளாகவும் பக்தர்களாகவு மிருந்தார்கள். அவர்கள் லோக நன்மைக்காக பகவானைப் புகழ்ந்து பாடினார்கள்.

ஒரு நீராவிப்படகு தான் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச்சேருவதுமன்றி அனேக ஜனங்களையும் ஏற்றிக்கொண்டு சேர்க்கிறது.

நாரதர்போன்ற குருக்கள் இப்படகுகள்போல்,

பரமஹம்ஸர்களை இரண்டு வருப்பாகப் பிரிக்கலாம்: முதலாவது நிராகாரவாதிகள்; அதாவது நிர்க்குணப்பிரம்மமே ஸத்திய மென்று சொல்பவர்கள். த்ரைலிங்கஸ்வாமிகள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர். இந்த வகுப்பைச்சேர்ந்த மஹான்கள் தமது முக்தியையே கருதுவதால், அவர்களை ஸ்வயாயம் கருதுபவர்களாகச் சொல்லலாம்.

இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஸாகாரவாதிகள், அவர்கள், கடவுள் ரூபத்துடனும், ரூபமின்றியுமிருக்கிறா ரென்றும், பக்தர்களுக்கு அனேக ரூபங்களுடனும் தன்னைத் தோற்றுவிக்கிறாரென்றும் சொல்கிறார்கள்.



ஒரு நதிக்குப் பக்கத்திலுள்ள கால்வாய், பிரவாஹத்தில் அந்த நதியுடன் ஒன்றாயிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் கால்வாய் இருந்த சுவடே தெரியாமல் ஆற்றுடன் ஒன்றாகக் கலந்து விடுகிறது. ஆனால் உற்றுப்பார்த்தால் அவ்விடத்தில் ஒரு இலேசான சலனம் காணப்படும். அதனால் அது ஆற்றை விட்டு வேறானதென்று அறியலாம்.

இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த குருவினுடைய விஷயம் இவ்வாறே அவன் ஜீவன் பரமாத்மாவினுடன் சேர்ந்துவிடுகிறது. ஆயினும அறிவு (வித்தை) ஆகிற அஹம் கொஞ்சம் பாக்கி நின்று அவனை பரப்பிரம்மத்தினின்றும் பிரித்துக் காண்பிக்கிறது.

மேலும் அப்படிக்கொத்த குருவை குடத்திற்கு ஒப்பிடலாம். அக்குடத்திலுள்ள ஸாமானை இன்னொரு குடத்திற்கு மாற்றலாம். இவ்விரண்டாவது குடம் தான் சிஷ்யன். நிறைந்த குடம் பிரம்மக்ஞானத்தினால் நிறைந்திருப்பதைக் குறிப்பிடுகிறது.

இவ்விதம் மனிதர்களைக் கடைத்தேறச்செய்யும் தத்துவங்களை மற்றவர்களுக்குப் போதிப்பதற்காக அறிவாகிய அஹங்காரம் தங்கி நிற்கிறது.

இன்னும் ஒருவன் கிணறு வெட்டுவதாக வைத்துக்கொள். அக்கிணற்றின் ஜலத்தினால் தனது தாகத்தைத் தீர்த்துக்கொள்கிறான். ஆயினும் அக்கிணறு வெட்டுவதற்கு வேண்டிய மண்வெட்டி குந்தாலி முதலிய கருவிகளைத் தன்னிடம் வைத்திருப்பது முண்டு. இது தன்னைப்போல் வேறு கிணறு வெட்டுபவர்களுடைய உதவிக்காகத்தான். அதுபோலவே இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த குரு கடவுளாகிய நித்தியானந்த ஸாகரத்தின் நீரை அருந்தி, பிரபஞ்ச தாபத்தைத் தீர்த்துக்கொண்டு பிரம்மக்ஞானவித்தியை அடைந்தபோதிலும, உலக நன்மையின் பொருட்டு, குருவுக்குவேண்டிய ஞானம் பக்தி இவைகளாலாகிய அஹங்காரத்தை வைத்துக்கொள்ளுகிறான்.

சிலர் மாம்பழம் சாப்பிட்டாலும், சாப்பிட்ட அடையாளமே தெரியாமல் வாயை நன்றாய்த் துடைத்து விடுகிறார்கள். இவர்கள் தன்னயமே கருதுபவர்கள், வேறு சிலர் தாங்கள் மாம்பழம் சாப்பிடும் போதெல்லாம் வேறு யாருக்காகிலும் கொடுத்தேதான் சாப்பிடுவார்கள்.

பிருந்தாவனத்தில் கோபிமார்களின் மனோபாவம் இப்படிப்பட்டது. அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனது அன்பை ருசியுடன் எப்பொழுதும் அருந்துவதற்கே கோரினார்கள். அவர்களுக்கு பகவானே ஆத்ம ருசியான ரஸம். தாங்களே ரஸிகர்கள். அப்படியிருப்பது அவர்களது கோரிக்கை. அவ்விதமே ராமப்பிரஸாதரும் "எனக்கு சர்க்கரையை சாப்பிடுவதற்குப் பிரியமே யொழிய, நானே சர்க்கரையாயிருப்பதற்குப் பிரியமில்லை" என்று பாடியிருக்கிறார்.

இது அனுலோம விலோம வியவகாரம். நீ (அனுலோமவழியாக) கடவுளிடம் சென்று அவருடன் ஒன்றாகிறாய். இது தான் ஸமாதி. பிறகு (விலோமவழியாகத்) திரும்புகிறாய். உன் அஹங்காரத்தை யடைந்து, முன்னுள்ளஸ்திதிக்கு வந்ததும், பிரபஞ்சமும் உனது ஜீவனும் பரமாத்மாவின் அம்சமாயிருப்பதையும் கடவுள், மனிதன், பிரக்ருதி இவைகளெல்லாம் கேவலன் பேர்மாத்திரம் வித்தியாசமேயொழிய உண்மையில் பேதமற்றன வென்றும் அவற்றில் ஒன்றை உண்மையாயறிந்தால் மற்றவைகளும் அறியப்பட்டதாகுமென்றும் தெரிந்து கொள்ளுகிறாய்.

பகவானது திருநாமத்தை பக்தியுடன் உரைப்பாயானால், மலை போன்ற உன் பாவங்கள், மலைபோன்ற பஞ்சுக்குவியலில் ஒரு நெருப்புப் பொறிபட்ட மாத்திரத்தில் எரிந்து அழிவதுபோல, மறைந்து நசித்துப் போகும்.

பயத்தினால், அதாவது நரகபயத்தினால் கடவுளை வணங்குவது பாலர்களுக்காக—ஞானவழியில் புதிதாக ஆரம்பிக்கிறவர்களுக்காக—ஏற்பட்டது. சிலர் பாபத்தையே பற்றிப் பேசுகிறார்கள். ஸாதாரண கிறிஸ்தவர்களும், பிரம்ம ஸமாஜத்தவர்களும் பாபத்தை அறிவதே பிரம்மக்ஞானமென்று நினைக்கிறார்கள். "பகவன்! நான் பாபி. எனது பாபத்தை மன்னித்தருளும்" என்று சொல்பவன் தான் அவர்களுக்குள் மேலானபக்தன். இந்தப்பாபஞானம் பக்தியின் தாழ்ந்த முதல்படியென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இதற்கு மேலானபடியொன்றிருக்கிறது. கடவுளை நமது தாய் தந்தையைப்போல் அன்பு பூண்டு அறிவது முன் சொன்னதற்கு மேலானபக்தி.

அப்பியாஸத்தின் பலத்தை ஜனங்கள் அறிவதில்லை. "நான் பாபி, நான் பாபி" என்று நீயெப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தால், கடைசிவரையில் பாபியாகவேயிருப்பாய் "நான் பத்தன்"—உலகத்தில் கட்டுப்பட்டவன் 'நான் பத்தன்' என்று சொல்பவன் எப்பொழுதும் பத்தனாகவேயிருப்பான். நான் முக்தன்" உலகபந்தத்திலிருந்து விடுபட்டவன் 'நான் முக்தன்'' என்று சொல்பவனே முக்தனாகிறான், கடவுள் நமது சொந்தத்தந்தையன்றோ? அப்பியாஸத்திக்கு இவ்வளவு பலமிருக்கிறது.

# மானஸ பூஜை

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிங் காட்டினோமே.

தேகமே தேவாலயமாகவும், ஜீவனே ஸநாதனமான தெய்வமாகவும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் அஞ்ஞான மென்னும் நிர்மால்யத்தைக்களைந்து ஸோஹம் பாவனையுடன் பூஜை செய்ய வேண்டும்.

இத்தேகமாகிய மாயர்புரியில் இருதய குகையில் வீற்றிருக்கும் பரம புருஷனை சிரத்தை யென்னும் நதியிலிருந்து கொண்டுவரப்பட்ட சித்த மென்னும் சுத்த தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, எப்பொழுதும் ஸமாதி யென்னும் பரிமள புஷ்பத்தால் ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டும் பொருட்டு பூஜை செய்கின்றேன்.

நாம் ஸாதாரணமாய் ஈசுவராராதனைக்குப் புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம் முதலிய பூஜாத்திரவியங்களைத் தேடுகின்றோமே யொழிய இவைகளெல்லாவற்றையும்விட முக்கியமான ஒரு பொருளை முற்றிலும் மறந்து விடுகின்றோம். அது நமது மனம்; மனம் பகவானிடம் ஈடுபட்டு அவனுடைய பாதார விந்தங்களில் நிற்காவிட்டால் பாஹ்ய பூஜையில் சிறிதும் பயனில்லை. ஆனது பற்றியே பட்டினத்தடிகளும்:

கையொன்று செய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூஜை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே.

என்று கூறுகிறார்.

ஈசுவரனைப் பூஜிக்க பக்தி நிறைந்த மனம் ஒன்றே தேவை. மற்ற ஸாமக்கிரியைகளாலாக வேண்டிய தென்ன? பகவானிடம் இல்லாத பொருளையா நாம் அவருக்கு அர்ப்பிக்கப் போகின்றோம்? 'உன்கையிலுள்ளதோ ஸ்வர்ணமலை; உன் வேலைக்காரனோ குபேரன்; உன் சிரஸிலோ சிந்தாமணி முதலிய ஐசுவரியக்களஞ்சியங்கள் பூஷணமாய் விளங்குகின்றன. இவ்வாறிருக்க நான் உம்மை எந்தப் பொருளைக்கொண்டு திருப்தி செய்வேன்? எல்லாம் உமக்குச் சொந்தம். என்னுடைய களங்கமான மனது மட்டும் எனக்குச் சொந்தம். ஆகையால் அதை உமக்கு அர்ப்பணம் செய்கின்றேன்' என்று ஆசாரியர் கூறுகிறார். பகவான் பிக்ஷாடன வேஷந் தரித்துக்கையில்

பாலத்தை யேந்தி நிற்கும்பொழுது அதிலிடத்தக்க பிக்ஷை யென்ன? அவர் நமது மனதையே யாசிக்கின்றார். அவர் இச்சித்த பொருளைக் கொடாது தூபத்தையும் தீபத்தையுங் காட்டிப் புஷ்பத்தையும் பழத்தையுங் கொடுத்து அவரை ஏமாற்றி விடமுடியாது; அவர் கேட்ட பொருளை முன்பு கொடுத்து விட்டுப்பின் எதைக் கொடுத்தாலும் மிகுந்த பிரீதியுடன் ஏற்றுக்கொள்ளுவார். "இலையாயினும், பூவாயினும், பழமாயினும், ஜலமாயினும் எது எனக்கு பக்திபூர்வகமாய் அர்ப்பிக்கப்படுகின்றதோ அதை நான் உவகைபூத்து ஏற்று ஆனந்திக்கின்றேன்." என்று பகவான் அருளிச் செய்திருக்கின்றார். 'தம்மிடமே மலர்ந்துள்ள இருதயமென்னுந்தாமரை மலரால் ஈசனை அர்ச்சிக்க வறியாமல் மூடர்கள் காடுகளிலும், மலைகளிலும் புஷ்பத்திற்காக அலைந்து திரிகின்றார்கள்' என்று சிவானந்தலஹரியில் கூறப்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் ஒரு அரசன் ஓர் பெரிய ஆலயம் கட்டுவித்து அதற்குக் கும்பாபிஷேகத்துக்காக ஜோதிடம்வல்லவர்களைக் கொண்டு சுபதின மொன்று நிச்சயித்து மஹோத்ஸவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்தான். அயல் நாட்டரசர்களுக்கும் செய்தியனுப்பி வெகுஆடம்பரமாய் உத்ஸவத்தை நடத்த எண்ணியிருந்தபொழுது ஓரிரவு பகவான் அவன் கனவில் தோன்றி "ஒரு குயவன் தன் இருதய குகையில் நீ கட்டியுள்ளதைவிட கோடிமடங்கு அதிக அருமையான கோயிலைக் கட்டியிருக்கிறான். நீ கும்பாபிஷேகத்துக்கு நிச்சயித்திருக்குந் தினமே அவனும் என்னை அவ்வாலயத்தில் ஸ்தாபிக்க எண்ணியிருக்கிறான். ஆகையால் நீ வேறு தினத்தில் கும்பாபிஷேகத்தை வைத்துக்கொள். நான் எனது பக்தசிரேஷ்டன் விருப்பத்துக்கு மாறாக நடவேன்" என்று கூறி மறைந்தார். அரசன் திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டு தன் கனவைப்பற்றிச் சிந்திக்கலானான். 'குயவனுடைய மனக்கோட்டையல்லவோ பகவானுக்கு நான் கட்டி கர்வமடைந்த இக்கோயிலைக்காட்டிலும் சிறந்ததாயிற்று. பக்தியே பிரதானம்' என்று கண்டு அக்குயவனைத் தேடிச் சென்று அந்த பக்த சிகாமணியின் அடிகளில் பணிந்து தன்னை சிஷ்யனாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினான்.

இம்மஹானுக்கு ஈசுவராராதனையைத் தவிர வேறு தொழிலில்லை. ஆனால் அவர் கோயில் குளங்களைத் தேடிச் செல்வதில்லை. கோயில்களில் வழக்கமாய் நடை பெறும் பூஜை அவர் விரும்பிய வளவு சிறப்பு வாய்ந்ததாயில்லை. ஆகையால் அவர் தாமே ஒரு கோயில் கட்டுவித்தார். ஆகாயத்தை யளாவிய கோபுரங்கள் பொன்னாலேயே உருக்கி வார்க்கப்பட்டிருந்தன. ஆயிரக்கால் மண்டபங்களும் மரகதப் பந்தல்களும் மாணிக்க மேடைகளும் எங்கும் விளங்கின. இவ்வற்புதக்கோயிலுக்கு ஐந்து பிராகாரம். முதல் மதில் மண்ணாலும், இரண்டாவது இரும்பாலும், மூன்றாவது செம்பாலும் நான்காவது வெள்ளியாலும், ஐந்தாவது பொன்னாலும் ஆக்கப்பட்டிருந்தன. அங்கே விளக்குகளுக்குப் பதிலாக கோடிஸூரியப்பிரகாசம்பொருந்திய வயிரக்கற்களே தொங்கவிடப்பட்டிருந்தன. இவ்வாறு விளங்கிய பஞ்சபிராகாரமத்தியில் கர்ப்பக்கிருஹமமைக்கப்பட்டு அதில் ஜோதிர்லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. லிங்கத்தின் ஒளியே எங்கும் பரவி நின்றது. அவரணிந்திருந்த புஷ்பங்களின் நறுமணமே எங்கும் நிறைந்திருந்தது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த கோயிலை ஒரு ஏழைக் குயவன் எவ்வாறு கட்டியிருக்கக் கூடும்? என்று சங்கை தோன்றலாம். அஃது பாமரர்களே போற்றும் புறச் செல்வத்தாலன்றி பக்தர்களுரிமையாகிய அளவற்ற அகச்செல்வத்தால் அவருடைய ஹிருதய குகையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. முதல் மதிலாகிய மண் சுவரே அன்னமய கோசமெனப்படும் இந்த தேகம். இம்மனக் கோயிலில் முதற் பிராகாரத்தைப் பிரதக்ஷிணம் வந்து சிறிது சிறிதாய் தேகப்ரக்ஞையிழந்து பிராணமய கோசத்தை யடையவேண்டும். இரும்பு மதிலுக் கொப்பிடப்பட்ட பிராணமயகோசத்தையும் இவ்வாறே வலம் வந்து அதைக்கடந்து அடுத்தவாயிலிற் புகும்பொழுது பிராணனின் சேஷ்டையை நிறுத்திப்பின் செம்புக் கொப்பிட்ட மனோமயகோசத்தைச் சுற்றி மனதையும் பின் விட்டு விக்ஞானமய கோசம்புகுந்து அதையுங் கடந்து கடைசி மதிலை யடையும்பொழுது ஈசுவர ஸந்நிதானத்துக்கருகில், சேர்ந்ததால் நிரதிசயானந்த மெய்துகின்றது. இதனாலேயே இம்மதில் ஆனந்தமய கோசமெனப்படும். தைத்திரிய உபநிஷத்தில் இந்த உபாஸனையைக் கூறுமிடத்து "அன்னமயமாத்மான முபஸங்கிரம்ய, பிராணமயமாத்மான முபஸங்கிரம்ய, மனோமயமாத்மான முபஸங்கிரம்ய, விக்ஞானமயமாத்மான முபஸங்கிரம்ய ஆனந்தமய மாத்மான முபஸங்கிரம்ய" என்றபடி வரிசையாய் ஐந்து கோசங்களையும் அடைந்து 'காமானுசாரமாய் அன்னத்தையுடையவனும் இச்சானுரூபமாய் ரூபத்தை தரிக்கிறவனும் இந்தலோகங்களை அனுசரித்து சஞ்சரித்துக்கொண்டு 'ஹா$^{3}$! வுஹா$^{2}$! வுஹா$^{3}$ வு—அஹமன்னமஹமன்ன மஹமன்னம்—அஹமன்னாதோ இஹமன்னாதோஹமன்னாத:—நானே அன்னம்; நானே அன்னத்தைப் புசிப்போன்; நான் சுலோகத்தைச் செய்கிறவன் நான் சத்தியத்திற்கு முதல்வன்; நான் தேவதைகளுக்கும் முன்னுண்டானவன்; அமிருதஸ்வரூபியாயிருக்கிறேன்; ......நான் ஸமஸ்தலோகத்தையும் ஜயித்திருக்கிறேன்" என்று இவ்வானந்த நிலையைச்சுருதி மாதா புகழ்கின்றாள்.

இந்நிலையை அடைய அவாவுவோர் இவ்வாறாய் உபாஸித்து "காயமே கோயிலாக..."வென்றதின் உண்மையையறிய வேண்டும். அக்னி, வாயு, ஸூர்யன், சந்திரன் முதலிய தேவதைகளை இந்த தேகத்திலேயே காணவேண்டும். "அக்னி வாக்கிலும், வாக்கு இருதயத்திலும், இருதயம் என்னிடத்திலும்; நான் அமிருதத்திலும், அமிருதம் பிர்ம்மத்தினிடமும் வாயு பிராணனிலும் பிராணன் ஹ்ருதயத்திலும், இருதயம் என்னிடமும் நான் அமிருதத்திலும், அமிருதம் பிர்ம்மத்தினிடமும்" அவ்வாறே "ஸூர்யன் கண்ணிலும்,...சந்திரன் மனதிலும்...திசைகள் காதிலும்...அப்பு ரேதஸிலும்...ஒஷதிகள் ரோமத்திலும், இந்திரன் பலத்திலும்,...ஆத்மா ஆத்மாவினிடத்திலும், ஆத்மா இருதயத்திலும், இருதயம் என்னிடத்திலும் நான் அமிருதத்திலும், அமிருதம் பிர்மத்திலுமென்றபடி காண்க"

இவ்வுபாஸனையால் படிப்படியாய் அண்டத்தைப் பிண்டத்தில் கண்டு நமது தேகமே எல்லா தேவர்களும் வாசஞ் செய்யும் சிறந்த கோயிலெனவுங்கொண்டு மேற்கூறியவாறு யோகபலத்தால் இருதய குகையை யடைந்து அங்கே காணப்படும் ஜோதிர் லிங்கத்தைப் பூஜிக்கவேண்டும்.

நவரத்னங்களிழைக்கப் பெற்ற ஆஸனமும், இமயபர்வதத்திலிருந்து வரும் கங்காதீர்த்தஸ்நானமும், சிறந்த பட்டுபீதாம்பரங்களும், பலவித ஆபரணங்களும், சந்தனமும், ஜாதி சம்பகம் பில்வம் முதலிய பத்ரபுஷ்பங்களும், தூபமும் தீபமும் ஹே! தயாநிதே! பசுபதே! என் ஹிருதயத்தில் கற்பிக்கப்பட்டவைகளை அங்கீகரிக்கவேண்டும்.

"பொற்கிண்ணத்தில் நெய்யும் பாயஸமும், ஐந்துவகைப் பக்ஷணங்களும், பாலுந்தயிரும் மிக்கருசிகரமான பானகமும், தீர்த்தமும், தாம்பூலமும் என்மனதால் பக்தியுடன் நிர்மிக்கப்பட்டவைகளை ஹே! பிரபோ! ஸ்வீகரிக்கவேண்டும்.

"குடை, சாமரங்கள் கண்ணாடி, வீணை, பேரி, மிருதங்கம், கீதம், நிருத்யம், ஸாஷ்டாங்க நமஸ்காரம், ஸ்தோத்ரம், இவையனைத்தும் ஸங்கல்பத்தாலேயே உமக்கு ஸமர்ப்பித்தேன். ஹே விபோ! இந்தப்பூஜையை கிரகிக்க வேண்டும்.

"என தாத்மாவே நீ, புத்தியே பார்வதி; பிராணன்களே பூதகணங்கள்; சரீரமே கோயில்; விஷய யோகங்களே உனது பூஜை; நித்திரையே ஸமாதி; பாத சஞ்சாரமே பிரதக்ஷிணம் பேர்செல்லாம் உனது ஸ்தோத்திரம், எந்தெந்தக் கர்மம் செய்கின்றேனோ, அவையனைத்தும் ஹே! சம்போ உமதாராதனையே;

"அத்துவித வஸ்துவைச் சொற்பிரகாசத் தனியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதியேக
தத்துவசொருபத்தை மதசம்மதம் பெறாச்
சாலப்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வியோமநிலையை
நித்தநின் மலரகித நிஷ்பிரபஞ் சப்பொருளை
நிர்விஷயசுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதேசோ மயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையையஞ் சலிசெய்வாம்.



---

# சிந்தனை மொழிகள்.

பகவானிடம் உடல் பொருள் ஆவியனைத்தும் அர்ப்பித்து அவரைச் சேவித்தலே மானிட ஜன்மத்தின் பயன். மற்றையதெல்லாம் வீண்.

இதுவே உயர்ந்த ஞானம். உலகைத்துறந்து உய்யவகை தேட வேண்டும்.

அழிவடையும் பொருளைத்தேடி அது நம்மைக் காப்பாற்றுமென்றெண்ணி அதைப்போற்றுதல் வீண்.

புகழை விரும்பி பிறர் செய்யும் மரியாதையால் மகிழ்ந்து உயர்ந்த பதவியை நாடுதல் வீண்.

இந்திரியங்களில் மனதைச் செலுத்தி அவைகள் இழுத்துச் செல்லும் வழி மனதைப் போகவிட்டு அதையே இன்பமாக நினைத்தலும் வீண்.

நல்ல வழியில் செல்லவேண்டுமென்ற எண்ணமின்றி தீர்க்காயுள் வேண்டுமென்பதும் வீண்.

'கண்டதே போகம்; கொண்டதே கோலம்' என்றும் 'இதுவே பரம்; இனியேதுமில' என்றும் இனி வரப்போவதைப் பற்றிச் சிந்தியாதிருத்தலும் வீண்.

ஸச்சிதானந்தத்தை நாடாமல் நிலையற்ற விஷய சுகத்தைப்பின் தொடர்தலும் வீண்.

ஆகையால் வெளி நோக்கம் வீணெனக்கண்டு உள்நோக்கங் கொண்டு மனதை பகவானுடைய பாதாரவிந்தங்களில் நிறுத்த வேண்டும்.

# திருஷ்டி ஜாலம்.

திருஷ்டிதோஷம்—நம்மவர்களிடம் காணப்படும் பழக்க வழக்கங்களில் பலவற்றை மூடநம்பிக்கையாலுண்டானவை யெனத் தற்கால நாகரிகமடைந்தோர் நிகழ்கின்றனர். 'திருஷ்டி தோஷம்' எனப்படுவதும் இவ்வகைத்தே. ஆனால் இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளிலுங்கூட ஆராயுமிடத்து உண்மையிருக்கிறதென்பது வெளியாகின்றது.

கோபம், பொறாமை முதலிய தீயகுணங்கள் உள்ளவர்களின் பார்வை மிகவுங் கொடியதென்றும் அவர்கள் கண்பட்ட பொருள்கள் கெடுகின்றனவென்பதும் அனுபவத்தில் காணப்படுகிறது. ஆகையால் ஸ்திரீகள் நல்லபண்டங்களைக் கொடியவர் பார்வைக்குள்ளாகாதபடி வெகு கவனமாய்க் காப்பாற்றுவதையும் அப்படி அவர்கள் திருஷ்டிபட நேர்ந்தால் தக்கபரிகாரங்கள் செய்வதையுங் காண்கிறோம்.

இதெல்லாம் மதியீனம் எனக்கூறுவோரும் சிற்சிலசமயங்களில் திருஷ்டியின் சக்தியை ஒப்புக் கொள்ளுகின்றனர்; ஒருவர் நமக்குப் பின் நின்று நம்மை உற்று நோக்கினால் அவரிருப்பதை நாம் அறியாமலிருந்தாலும் அவரது பார்வையால் கவரப்பட்டு நாம் திரும்பிப்பார்க்கின்றோம். அயர்ந்த நித்திரையிலிருக்கும் ஒருவனை உற்று நோக்கினால் அவனுடைய நித்திரை கலைந்து விடுமென்று பலர் கூறக்கேட்டிருக்கின்றோம். பிறர் நம்மை நேராக உற்று நோக்கினால் நாமும் அவரை அவ்வாறே திரும்பி நோக்குவது கடினமென்றும் அறிவோம். துஷ்டமிருகங்களைப் பழக்குவோர் அவைகளை உற்று நோக்கினால், அவை அஞ்சுகின்றன என்று கூறுகின்றனர்.

டாக்டர் சார்லஸ் ரஸ் என்னும் ஒரு தத்துவ சாஸ்திரி தமதாராய்ச்சியின் பயனாக நமது கண்ணிலிருந்து ஒருவிதமான ஜோதிக்கிரணம் நாம் நோக்குந்தோறும் வெளிச்சென்று நாம் காணும் பொருட்களின் மேல் தாக்குகின்றனவென்றும் அஃது காந்த சக்தியைப்போன்றதென்றுங் கூறுகின்றனர். இதைஸ்தாபிக்க இவர் செய்த ஆராய்ச்சியில் காந்த சக்தியால் மட்டும் அசைவடையக்கூடிய ஒரு நுண்ணிய கருவியை உபயோகித்தார். அதை ஒரு பட்டு நூலில் கட்டித் தொங்கவிட்டு அது காற்றால் அசையாமலிருக்கும்படி அதற்கு ஒரு கண்ணாடிப் போர்வையிட்டு அதில் சில துவாரங்கள் விட்டு வைத்தார். அத்துவாரங்களின் வழியாய் நுண்ணிய கருவியைப் பார்த்த பொழுதெல்லாம் பார்ப்பவன் கண்



திரும்பியபடி அது திரும்பியதென்றும் அதன்மேல் பார்வைநேராக விழாதகாலத்து அசைவற்று நின்றதென்றும் கண்ணாடி வழியாய்ப் பார்த்ததில் அசையவில்லை யென்றும், பன்முறை பரிசோதித்ததிலும் இவ்வாறே நிகழ்ந்ததால் கண்ணிலிருந்து வெளிப்படும் காந்தி காந்தசக்தியே என்று இவர் கூறுகிறார். ஒரு குடத்துக்குள் வைக்கப்பட்ட விளக்கின் பிரகாசம் வெளிப்போந்து அங்குள்ள பொருட்களின்மேல் விழுவதுபோல் நமது கண்ணின் வழியாய்க் காந்த சக்தி வெளிப்பட்டு நாம் காணும் பொருட்களை வியாபித்து நிற்கிறதென்றும், இச்சக்தி நமது மனோநிலைமைக்கும், குணங்களுக்கும் ஒப்ப திருஷ்டிபட்ட பொருட்களை மாற்ற வல்லதென்றும் தெரிய வருகிறது. இதெல்லாம் உண்மையென்பது ஸ்தாபிக்கப்பட்டால், பாபிகளின் தீயதிருஷ்டியால் விளையுந் தீமையும், யோகிகளின் தூய திருஷ்டியால் விளையும் நன்மையும் மூடநம்பிக்கை யெனப்படாமல் நாகரிகம் பெற்றோராலும் உண்மையென அங்கீகரிக்கப்படும்.

நிலத்தில் வாசம் செய்யும் மீன்: "நீர் விட்டகன்ற மீன்போல்" என்பது பழமொழியாயினும், சிலவகை மீன்கள் தவளைகளைப்போல நீரிலும் நிலத்திலும் வாசம் செய்கின்றன என்று தெரியவருகிறது.

நமது நாட்டில் சில பாகங்களில் சிற்றாறுகளில் வசிக்கும் மீன்கள், ஆறு உலர்ந்து போகுங்காலத்தில், உயிரிழப்பதில்லை யென்றும், எறும்புக்கூட்டங்களைப்போல் சேர்ந்து நீருள்ள விடத்தைத் தேடிச் செல்கின்றனவென்றும் அதைச் சில தேசசஞ்சாரிகள் கண்டிருப்பதாயும் கூறப்படுகிறது. அவை ஐந்து அல்லது ஆறு அங்குல நீளமுள்ளவைகளாய் நிமிர்ந்து நின்று சிறகுகளை ஊன்றி நடக்கின்றனவென்றும், அடிக்கடி கீழே விழுந்தும் துள்ளியெழுந்து செல்வதைக்காண வெகு விசித்திரமாயிருக்குமென்றும் கூறப்படுகிறது. சில சமயங்களில் இவை வெகுதூரம் செல்ல நேரிடும்பொழுது பல பறவைகள் இவைகளைப் பின் தொடர்ந்து நாசம் செய்கின்றனவாம். அவைகள் சில சமயங்களில் மரங்களில் ஏறுகின்றனவாம். ஒட்டகம் வனாந்தரத்திற் செல்லும்பொழுது நீர்ப்பையை நிறைத்துக் கொள்வதுபோல் இம்மீன்களும் நீரைக்கொண்டு செல்லும் என்று சிலர் சந்தேகித்துப் பரீட்சித்ததில் அவை நீர்கொண்டு செல்வதில்லையென்றும், காற்றையே ஆகாரம் செய்கிறதென்றும் வெளியாயிற்று. இம்மாதிரி மீன்கள் ஸுமத்ரா, போர்னியோ, முதலிய தீவுகளிலும் இருக்கின்றனவாம். கடலோரங்களில் அவை தவளைகளைப்போல் நீரினின்று துள்ளி நிலத்தில், அடிக்கடி வந்து சிறு நண்டுகளையும் நீர்ப் பூச்சிகளையும் பிடித்துத் தின்கின்றனவாம். அவைகள் மரமேறுகின்றனவென்றும் காற்றை ஆகாரம் செய்கின்றனவென்றுங் கூறப்படுகிறது. ஆபிரிக்காவில் ஒருவகை மீன் தடாகங்களில் நீர் வற்றியகாலத்து, நிலத்தின் கீழ் ஒரு கடினமான கூடுசெய்து கொண்டு உயிரற்றவைபோல் ஆகாரமே உட்கொள்ளாமல் உறங்குகின்றனவென்றும், குளத்தில் நீர் வந்தால் மேற்கிளம்பி வருகின்றனவென்றும் தெரியவருகிறது.

# சிஷ்யர்களின்வகை

## அல்லது

# இந்திரனும் விரோசனனும்.

முன்னொருகாலத்தில் தேவர்களும் அஸுரர்களும் ஆத்மவித்தையைப்பெறவேண்டுமென்று ஆசை கொண்டார்கள். ஆத்மாவையுணர்ந்தால் தாங்கள் மூவுலகங்களையும் எளிதில் ஜயித்து அரசுபுரியலாம் என்பது அஸுரர்களுடைய கருத்து. ஆத்மஞானத்தால் பாபம் நீங்கி ஆனந்தத்தையடையலாமென்பது தேவர்களுடைய நோக்கம். தேவர்களுக்குள் இந்திரனும் அஸுரர்களுக்குள் விரோசனனும் பிர்ம்மாவிடம் ஸமித்பாணிகளாய்ச் சென்று, அவரை நமஸ்கரித்து அவருக்குப்பணிவிடை செய்துகொண்டு முப்பத்திரண்டு வருஷகாலம் பிரம்மசரியவிரதமனுஷ்டித்தார்கள். அதன் முடிவில் பிரஜாபதி அவர்களை நோக்கி "உங்களுடைய விருப்பம் என்ன?" என்றனர். அவர்கள் "ஆத்மா பாபமற்றது, அழிவற்றது, ஸச்சிதானந்தமயமானது; அது உண்பதுமில்லை; உறங்குவதுமில்லை; அதனிடம் காமவிகாரங்கள் கிடையா; அது ஒன்றே ஸத்யம்; அதையடைந்தால்தான் ஜீவனுடைய ஆசைகளெல்லாம் நிறைவேறுகின்றன; என்றிவ்வாறாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால் அந்த ஞானத்தைப் பெற விரும்பியே இங்கே வாசம் செய்கிறோம்" என்றார்கள். பிரஜாபதி கூறியதாவது. "நீங்கள் கண்ணினுள் காணுந் தோற்றமே ஆத்மா. அது தான் சோகமோஹங்களும் பிறப்பிறப்புமற்ற பிர்ம்மம்." 'கண்' என்றதால் பிர்ம்மா ஞானக்கண்ணைக் குறிக்க, அதை யறியமாட்டாத சிஷ்யர்கள், ஊனக் கண்ணெனக் கொண்டு "தேவரீர் கூறியதோற்றம் நீரில் காணப்படுவதா? கண்ணாடியில் காணப்படுவதா?" என்றனர். குரு "அஃது இரண்டிலும் காணப்படும்" என்று கூறி ஒரு தொட்டியில் நீர் கொண்டு வரச் சொல்லி, அதனுள் பார்க்கச் சொன்னார். அவர்கள் "பாதாதிகேச பரியந்தம் எங்களுடைய பிரதிபிம்பத்தைக் காண்கிறோம்" என்ன, மேலுங்குரு சிலேடையாக, சிஷ்யலட்சணங்களைக் குறிக்கும் பொருட்டு அழகிய ஆடைகளால் அலங்காரம் செய்து கொண்டுவாருங்கள்" என்றார். உட்கருத்தை யுணரமாட்டாதவர்களாய், அவர்கள் தேகத்தை ஆபரணங்களாலலங்கரித்துக்கொண்டு நீரில் பிம்பத்தைப் பார்த்து "நாங்கள் அலங்கரித்துக் கொண்டுள்



ள்படியே பிம்பமுந்தோன்றுகிறது." என்றனர். பிரஜாபதி அவர்களைப் பரீக்ஷிப்பதற்காக "இதுவே அழிவற்றதும், ஆனந்தமயமானதுமாகிய பிர்ம்மம்" என்று கூற, இரண்டு சிஷ்யர்களும் ஆத்மாவையுணர்ந்து விட்டதாய் நினைத்துத் தங்களிருப்பிடமேகினர். அவர்கள் திரும்புவதைப்பார்த்துப் பிரஜாபதி "இருவரும் உண்மையுணராமற் போய்விட்டார்கள். என்னுடைய சொற்களால், அவர்கள் ஒருபயனும் பெறவில்லை" என்று சொன்னார்.

விரோசனன் இராஜ்யத்துக்குச் சென்றதும் தான் ஆத்மவித்தையை யறிந்ததாய்ப் பறையறைவித்துப், பிரஜைகளை வரவழைத்து "ஆத்மாவே பூஜிக்கத்தகுந்தது. ஆத்மஸேவையாலேயே மனிதன் இகபரசுகங்களனைத்தும் பெறுதற்குரியவனாகிறான். ஆத்மா எனப்படுவது இந்த தேகமே" என உபதேசம் செய்தான். அஸுரர்களனைவரும் இந்த வேதாந்தத்தைப் பின்பற்றி தேகாத்மவாதிகளாய் இந்திரிய போகங்களே பரமார்த்தமெனக் கொண்டு எவ்வாற்றானும் அதைத் தேடுவதே புருஷார்த்தமெனக் கருதி பரஹிம்ஸையிலேயே பிரமுகர்களாயினர். தேகமே ஆத்மாவாதலால் இறந்த பின்பும், தேகத்தை அலங்கரித்துப் பெட்டிகளில் வைத்து வாசனையமைத்துக் காப்பாற்ற வேண்டுமென்பது இவர்கள் மதம்.

இந்திரன் சிறிது தூரம் சென்றதும், மனது திருப்தியடையாமல் "பிரதிபிம்பம் எவ்வாறு ஆத்மாவாகும்? ஆத்மா விகாரமற்றதென்று கூறப்படுகிறது. பிம்பமோ, தேகம் அலங்கரிக்கப்பட்டால் அலங்காரமாயும், சுத்தப்படுத்தப்பட்டால் சுத்தமாயும் தோன்றி, இது மறையுமானால் மறைந்தும் போகிறது. ஆகையால் பிம்பம் ஆத்மாவாகாது" என நிச்சயித்துக் கொண்டு பிரஜாபதியிடந் திரும்பிவந்தான். அவர் ஆக்ஞைப்படி மறுபடி முப்பத்திரண்டு வருஷம் குருகுலவாசம் செய்து வந்தான். பின்பு பிரஜாபதி "ஸ்வப்னாவஸ்தையில் விரும்பும் பொருளைப்பெற்றதாயெண்ணி எது ஆனந்தமடைகிறதோ, அதுவே ஆத்மா." என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டு சிறிது தூரம் போனதும் மறுபடி சந்தேகமடைந்து இந்திரன் திரும்பிவந்து "தேகோபாதிகளால் விகாரப்படாவிட்டாலும் ஸ்வப்னத்திலுள்ள ஆத்மபாவனை பலவிதமான துக்கங்களுக்குட்பட்டிருப்பதால் அது உயர்ந்த தத்வமாகாது. உண்மையறிவை யளிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். மறுபடி முப்பத்திரண்டு வருஷங்கள் சென்றபின் பிரஜாபதி "ஸுஷுப்தியில் எது ஸ்வப்னங்களாலுந் தாக்கப்படாமல் தனித்து நிற்கிறதோ, அதுவே ஆத்மா" என்றார்.

சிறிது நோக்கழித்து முன்போலவே இந்திரன், இதிலுந் திருப்தியடையாமல் 'ஸுஷுப்தியில் ஒன்றும் விளங்காத அந்தகாரமே மேலிட்டிருக்கிறது. இது எவ்வாறு ஆத்மாவாகும்?' என்று ஐயங்கொண்டு பிர்ம்மாவைப் பணுக மறுபடி ஐந்து வருஷம் தன்னிடம் வாசஞ் செய்யச் சொன்னர்.

கடைசியாக பிர்ம்மா இந்திரனை நோக்கி "ஆத்ம வித்தையைக் கூறுகிறேன் கேள். உன் தேகம் அழிவுள்ளது. என்றும் அழிவற்ற ஆத்மாவிற்கு அது தங்குமிடம். இவ்வாறு தேகமுள்ளதாய் பாவிக்கப்பட்டால், ஆத்மா காமக்ரோதங்களால் விகாரமடைவதுபோல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் ஆத்மா நித்ய சுத்த முக்தஸ்வரூபமுள்ளது. அதனிடம் ராகத்வேஷங்கள் கிடையா. காற்றும் மழையும், மின்னலும் இடியும் சூரிய வெப்பத்தால் உருக்கொண்டு ஆகாயத்தில் தோன்றுவதுபோல ஜீவனும் ஸச்சிதானந்த வெளியில் தேகாதிகளால் கட்டப்பட்டவன் போலத் தோன்றுகிறன். உண்மை நிலையை யுணர்ந்த ஞானிகள் இதெல்லாம் தோற்றமெனக் கண்டு கொண்டு ஒன்றிலும், பற்றப்படுவதில்லை. உலகிலிருந்தாலும் உலகைத்துறந்தாலும் இன்பமடைந்தாலும் துன்பமடைந்தாலும் மாறுபடாதவர்களாய் அவர்கள் தாக்கற்றிருக்கின்றனர். வண்டியில் கட்டப்பட்டமாடு வண்டியுடன் ஒன்றாய்க் காணப்பட்டாலும் எவ்வாறு வேறே, அவ்வாறே தேகத்துடன் ஸம்பந்தப்பட்ட ஆத்மா. எவன் தத்துவ விசாரத்தால் இவ்வுண்மையை உணர்கின்றனே. அவன் எல்லா ஆசைகளும் நீங்கப் பெற்றவனாய் இன்ப நிலை எய்துகிறன்" என்று உபதேசித்தருளினர்.

# சிறுத்தொண்ட நாயனர்.

முன்னொரு காலத்தில், சோழவள நாட்டிலே, திருச்செங்காட்டங்குடியில், ஆமாத்தியர் குலந்தன்னில், பரஞ்சோதியார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் ஆயுர்வேதம், படைக்கலப்பயிற்சி, குதிரையேற்றம், யானையேற்றம் முதலியவைகளில் வல்லவராய் இருந்தார்.

இவர் இவ்வாறு பெருமையுற்று விளங்குங் காலையில், அரசன் இவரது பெருமையைக்கண்டு, தன்னிடத்தில் அமைச்சராய் அமர்த்திக்கொள்ள, அவர் தம் அரசன் பொருட்டு, பற்பல சிற்றரசர்களிடம் சென்று, கப்பம் வாங்கி வந்தனர். இதனுல் இவரது பெருமை எங்கும் பரவியது. இப்படியிருக்கு நாளில், இவர் வட இந்தியாவிலுள்ள வாதாவி என்னும் நகரத்திற்குச் சென்று, அதனை வென்று பலவகை ரத்தின முதலியவைகளைக் கொண்டுவந்து அரசனுக்கு நல்க, அரசனும் இவரது திறமையைக்கண்டு வியப்படைந்தனர். பிறகு ஓர் நாள் பரஞ்சோதியர் ஓர் சிவபக்தர் என்பதையும் அவருடைய பெருமையையும், அரசனது முக்கிய உத்தியோகஸ்தர்கள் அவனுக்கு அறிவிக்க, அரசன் பரஞ்சோதியரிடம் சென்று, தான் அதுவரையிலும் செய்த குற்றத்திற்காகத் தன்னை மன்னிக்கும்படிக்கும், தமது காரியத்தைக் குறைவறச் செய்து கொண்டிருக்கும்படிக்கும் சொல்லி, வேண்டிய திரவிய மீந்து வழிவிட்டனுப்பினர்.

இவ்வாறு அரசனல் மரியாதை செய்யப்பட்ட பரஞ்சோதியர், திருவெண்காட்டு நங்கையாரை மணந்து, மனுநீதி தவறாது இல்லறம் நடாத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு நாளாவது ஓர் சிவபக்தருக்கு அன்னமிடாது, இருவரும் சாப்பிடமாட்டார்கள். இப்படி நெறிவழுவாது இல்வாழ்க்கை நடாத்தி வருங்கால், பரஞ்சோதியர் சிவபக்தர்களை ஆதரித்து வந்ததனுல் சிறுத்தொண்டர் என்னும்பெயர் பெற்றார்.

இச்சிறுத்தொண்டருக்கும், இவரது உத்தம பத்தினிக்கும் சீராளர் என்னும் அருமைப் புத்திரன் அவதரித்தனன். அச்சிறுவனுக்கு ஐந்தாவது பிராயத்தில் வித்தியாரம்பம் செய்வித்தார். அதே சமயத்தில் திருஞானசம்பந்தர் அத்திருப்பதியை தரிசிக்க வந்தார். அவர் வந்தபோது அவரைச் சிறுத்தொண்டர் தமது வீட்டிற்குக் கூட்டிச்சென்று, வேண்டிய உபசாரம் செய்து, வணங்கித் துதித்து நிற்க, திருஞானசம்பந்தர் சிறுத்தொண்டரைப் புகழ்ந்து பாடினர்.

இவ்வாறிருக்க, எல்லாம் வல்ல பரமேச்வரன் இவரது பக்தியைப் பரிசோதிக்கக் கருதியவராய், ஓர் சிவபக்தன்போல் வேடம் பூண்டு சிறுத்தொண்டரது கிருகத்திற்கு வந்து, வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்த தாதியை, "சிறுத்தொண்டர் வீட்டிலிருக்கின்றனரா?" எனக்கேட்க, அவள், உட்சென்று, அடியாரது வரவைத் தெரிவிக்க, தொண்டரது மனைவி, வெளிவந்து அன்று ஒரு சிவபக்தரும் கிடைக்காததால், சிவபக்தரைத்தேடி சிறுத்தொண்டர் சென்றுள்ளாரென்றும், சீக்கிரம் வந்து விடுவாரென்றும், சொல்ல, அவர் தாம் ஒரு திருவாத்தி மரத்தின்கீழ் இருப்பதாய்ச் சொல்லிச் சென்றனர்.

இவர் சென்ற சிறிது நேரத்திற்குள், சிறுத்தொண்டர் இல்லமேகி, தாம் அன்று ஒரு சிவபக்தரையும் காணவில்லையென்று சொல்லி வருந்தும்போது அவரது உத்தமபத்தினி, தான் ஒரு சிவபக்தரை வாசலில் பார்த்ததாயும், அவரை அழைக்க, புருடரில்லாதவமயம் தாம் வீட்டினுள் புகமாட்டாரென்றும் எஜமானன் வந்த பிறகு தான் வருவதாயும் சொல்லி, திருவாத்தி மரத்திற்குச் சென்று அங்கே தங்கியுள்ளார் என்றும் சொன்னாள்.

உடனே சிறுத்தொண்டர், திருவாத்தி மரத்தினடியிற்சென்று அங்கே உட்கார்ந்திருந்த சிவபக்தருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, அவரைத் தம் வீட்டிற்குவந்து அமுதுண்ணும்படி வேண்ட அவர், "நீவிர் தானோ சிறுத்தொண்டர்?" என்று திருவாய் மலர்ந்தருள, சிறுத்தொண்டர் அவரை வணங்கி "சுவாமி! சிவனடியார்கள் தங்கள் கருணை மேலீட்டினால் அடியேனையே அப்படி அருளிச் செய்வார்கள்" என்று உத்தரமளித்தனர்.

பிறகு சிவனடியார், தாம் ஆறுமாதத்திற்கு ஒரு முறை பசு மாமிசம் உண்பது வழக்கமென்றும், அப்பசு ஐந்து வயதுள்ள குழந்தையாய் இருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

அதற்குச் சிறுத்தொண்டர் ஒப்புக்கொண்டு தன் மனைக்குச் சென்று, தன் மனைவியை அழைத்து, குழந்தை சீராளனை அழைக்கும்படிச் சொல்ல, அவள் சென்று சிறுவனை அழைத்து வந்தாள். பிறகு சிறுத்தொண்டர் தமக்கும், சிவபக்தருக்கும் நடந்த விஷயங்களைச் சொல்லி, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்கச் சொல்ல, அம்மனைவியும் சிறிது வருத்தப்பட்டாலும், தன் கடமையைச் செய்யவேண்டியவளாதலால், தன் மகனுக்கு திருமஞ்சன நீராட்டுவித்து, புருடனிடம் கொண்டுவந்து விட்டாள். புருடனாகிய சிறுத்தொண்டர், கையில் வாளை யெடுத்துக்கொண்ட வுடனே, மனைவி தன்மகனுடைய இரண்டு கால்களையும் கைகளையும் பிடித்



துக்கொள்ள, சிறுவனும் சந்தோஷமாயிருக்க, தகப்பன் தமது மகன் சிரத்தை வெட்டிவிட்டார். மனைவி மகனது தேகத்தைப் பக்குவமாய்ச் சமைத்து, சிவபக்தரை வரவழைத்து இலைபோட்டு வட்டிக்கவும், சிவனடியார் தாம் தனியே சாப்பிடமாட்டாரென்றும், தம்மோடு மற்றொரு சிவபக்தரும் இருக்கவேண்டுமென்றுஞ் சொல்ல, சிறுத்தொண்டர் தேடிவந்து வேறொருவரும் கிடைக்கவில்லையென்று சொல்ல, சிவனடியார் சிறுத்தொண்டரையே உட்கார்ந்து சாப்பிடச் சொன்னார். சிறுத்தொண்டரும் அவரது கருத்துக்கிணங்க, சிவபக்தர் தாம் குழந்தையில்லா வீட்டில் அன்னமுண்பதில்லை யென்று சொல்ல, உடனே புருஷரும் பத்தினியும் மிகவும் வருத்தமுற்றவர்களாகி, பற்பல விடங்களிலும் சென்று கூவியும் வாராததால் கடைசியாக "சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும் பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கின்றார். வா" என்று அழைக்க அச்சிறுவன் பள்ளியிலிருந்து வருபவன்போல் உல்லாசமாய் வர இவர்கள் புத்திரனை எடுத்து ஆலிங்கனம் செய்து, முத்தமிட்டு, உள்ளே வந்து பார்க்குங்காலை, சிவனடியாரையும் இலையிலிருந்த மாமிசத் துண்டுகளையும் காணாமையால் வருந்தி வெளிவர, எல்லாம் வல்ல பரமேச்வரன் சிறுத்தொண்டர் முதலியவர்களுக்குக் காக்ஷிதந்தருளியது மன்றி, கைலாசபதவியையும் அளித்தனர்.

# ஸ்ரீ துர்க்காசரண நாக மஹாசயரின் திவ்ய சரித்திரம்.

(299-ம் பக்கத் தொடர்ச்சி)

பரமஹம்ஸதேவர் திருவாக்குப்படி, மலர்ந்து மதுவைப்பொழியும் மலர்களிடம் தேனீக்கள் தாமேவருகின்றன. ஒரு மனிதன் தெய்வத்தன்மையடைந்து ஆனந்த நிலையெய்தினால் நல்ல புஷ்பங்களின் ஸுகந்தம் காற்றினால் வீசப்பட்டு எங்கும் பரவுவதுபோல, அம்மஹானுடைய புகழ் நாடெங்கும் பரவி பக்தரென்னும் தேனீக்களை அவரிடம் கொண்டுவந்து சேர்க்கின்றன. நாக மஹாசயரை நாடிய பக்தர்களுக்குக் கணக்கில்லை. அவர், வருவோரனைவரும் பகவான் தொண்டர்களென்றும், தாம் அடியார்க்கு அடிமையென்றும் பாவித்தார். தம்மனையாளை நோக்கி, "நம்மிடம் வருவோர் ஈசுவரனிடம் அத்யந்த பிரேமையுடையோராவர் என்று குருதேவர் கூறியிருக்கின்றார். ஆகையால் பக்தி சிரத்தையுடன் அவர்களுக்கு சிசுருஷைசெய்து அமுதுசெய்விக்கவேண்டும். அப்படி செய்தால்தான் நாம் பகவானுடைய கருணைக்கு உரித்தாகலாம்" என்று கூறுவார்.

ஒருநாள் மஹாசயர் கொடுமையான வயிற்றுநோயால் பிடிக்கப்பட்டு வெகு சிரமப்பட்டுக்கொண்டிருக்கையில் பத்துப்பேர் அதிதிகள் வந்தார்கள். வீட்டில் ஒரு, பிடி யரிசி கூட இல்லை. தம் நோயை அவர்களுக்குத் தெரிவிக்காமல் உடனே எழுந்து கடைக்குச் சென்றார். திரும்பி வரும் வழியில் நோய் பொறுக்கமாட்டாமல் மயங்கிக் கீழே விழுந்துவிட்டார். மயக்கம் தெளிந்ததும், "ஈசா! உன்னடியவர்கள் என் வீட்டில் பசியுடனிருக்க என் ஊத்தைச் சரீரம் அவர்களுடைய ஸேவைக்கு விக்னம் செய்கின்றதே! யான் என் செய்வேன்!" என்று பிரலாபித்து தட்டித்தடுமாறி எழுந்து வீட்டைநோக்கிச் சென்று துரிதமாய்ச் சமையல் செய்வித்து அதிதிகளைத் திருப்திசெய்து அவர்களை வணங்கித் தாமதத்தைப் பொறுத்துக்கொள்ளும்படி பிரார்த்தித்தார்.

மற்றொரு நாள் மழைக்காலத்தில் இரண்டு வழிப்போக்கர்கள் இவர் வீட்டில் வந்து தங்கினார்கள். இரவில் மழை தாரை தாரையாய் ஊற்ற ஆரம்பித்து கூரைவழியாய் வந்த நீரால் இவருடைய வீடு முழுவதும் நனைந்து வீட்டிலிருந்த நான்கு அறைகளில் ஒன்று



மட்டும் தங்கத்தக்க நிலையிலிருந்தது. அந்த அறையை அதிதிகளுக்குக் கொடுத்துவிட்டுத் தன் மனைவியைக் கூப்பிட்டு "நாமிருவரும் பாக்யசாலிகள். அதிதிகளைத் திருப்தி செய்வித்தோம். நாம் இன்றிரவு பகவந்நாமஸ்மரணஞ் செய்துகொண்டு வாசலிலிருப்போம், வா" என்று சொன்னார். அவ்வாறே ஸதிபதிகள் இரவைக் கழித்தனர்.

அதிதிகளை உபசரித்து அவர்களுக்கு அன்னமிட்டுத் தம் வீட்டில் தங்குவதற்கு இடங்கொடுப்பதுமட்டுமன்றிச் சிலசமயங்களில் அவர்களுக்கு வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்புவார். ஒருதடவை இவர் வீட்டுக்குவந்த ஒருவர் நோய்கண்டுஅங்கே படுத்துக்கொண்டார். அவருக்கு மருந்துகள் கொடுத்து அன்புடன் போஷித்து வியாதி நீங்கியதும், ஓர்படகிலேற்றிவிட்டு வழிச்செலவுக்குப் பணமுங்கொடுத்து அவரைச் சொந்த ஊருக்கு அனுப்புவித்தார்.

இவ்வாறாக இருந்துவரும் நாளில் இவருடைய தந்தை தீனதயாளுவின் இறுதிக்காலம் நெருங்கியது. அவருக்கு வயது எண்பதாயிற்று. திடீரென ஒரு நாள் தலையில் இரத்தம் சுரந்து மயங்கி விழுந்தார். அத்தருணத்தில் அவர் காதில் துர்க்காசரணர் பகவந்நாமத்தை யோதினார். அவரிறந்தபின் உத்திரக்கிரியைகளை வெகு சிறப்பாய்ச் செய்து முடித்தார்.

நாகமஹாசயரை நாடிய பக்தர்கள் பலர் அவரைக் குலகுருவாக வணங்கிவந்தாரெனினும் அவர் தாம் அடியார்க்கு அடியவரென்றும் தாம் குருவாய் வரிக்கத்தக்கவரல்லவென்றுந்தான் தாழ்ந்த குலத்துதித்தோனென்றுங்கூறி ஒருவரையும் சிஷ்யராய் ஏற்றுக்கொள்ள இசையவில்லை. எனினும் தம்மை நாடியவரனைவரையும் மிக்க அன்புடன் கவனித்துவந்தார். ஒருமுறை அவர்களை நோக்கி "பக்தசிரேஷ்டர்களே! எனது உடல்பொருள் ஆவியனைத்தையும் விட அதிகமாய் உங்களை நேசிக்கிறேன். உங்களைவிடப் பிரியமானவஸ்து எனக்கு இவ்வுலகிலில்லை. தங்களை ஸேவிப்பதைவிட இந்த எலும்புக்கூடு அடையக்கூடிய பிரயோஜனம் வேறொன்றுமில்லை" என்று மனமுருகிக் கூறினார்.

அவருடைய பக்தர்களில் முதன்மையாக அவர் மனைவி பதிவிரதாசிரோன்மணி ஸ்ரீமதி சரத்குமாரி தேவியையே கூறவேண்டும். அவரைக் கண்டோரனைவரும் அவர் பதிசிசுருஷையையும் அதிதிபூஜையையும் மெச்சி அவரை தெய்வத்தன்மை வாய்ந்தவராய்க்கருதிக் கைகூப்புவர். அவர் தம் கணவனைத்தவிர வேறு தெய்வத்தை யறியார். ஓராண்டு நவராத்திரிகாலத்தில் புஷ்பங்களால் கணவனை அர்ச்சிக்க அவர் விரும்பியபொழுது நாக மஹாசயர் "நீயல்லவோ நான் வணங்குந் தெய்வம்; அப்படியிருக்க நீ எங்ஙனம் என்னைப் பூஜிக்கலாம்!" என்று சொல்லி மறுத்தார். இதைக்கேட்டு வருந்திய

தேவி தக்கசமயத்தை எதிர்பார்த்திருந்து கணவனர் எதோயோசித்துக்கொண்டு ஒரு மூலையில் நிற்கையில் அவரறியாமற் சென்று அவர் பாதங்களில் மலர்களைப்பொழிந்து அவரடியிணைகளை யிறுகப் பிடித்துக்கொண்டு வணங்கிநின்றனர். பின்பு அப்புஷ்பங்களிற் சிலவற்றை ஒரு பொன் தகட்டில் கட்டித் தன் கழுத்தில் சிறந்த ஆபரணமென அணிந்துகொண்டார். தேவியார் இன்றும் பக்த கோஷ்டிகளால் தெய்வமெனக் கொண்டாடப்பட்டு வருகின்றார்.

நாக மஹாசயரின் கடைச்சகோதரி ஸ்ரீமதி ஹரகாமினியும் அவரிடம் அத்யந்த ப்ரேமைகொண்டு தன் தமயனையே தெய்வமாக வணங்கிவந்தாள். ஸ்ரீமான் ஹரப்ரஸன்ன முஜூம்தாரின் மனைவியும் இந்த பக்த கோஷ்டியிற் சேர்ந்தவர். இவரைப்பற்றி ஸ்ரீமத் விவேகானந்தஸ்வாமி "உமது கிருகத்தில் நான் ஒரு பெண்மணியைக் கண்டேன்; அவள் கல்விக்கொப்பான அறிவும் அறிவுக்கொப்பான பக்தியுமுடையவளாய்ச் சிறந்து விளங்கினள்" எனக்கூறினர். இவரை நாக மஹாசயர் தம் தாயைப்போல் பாவித்து "அம்மா! அம்மா!" என்று அழைத்து குழந்தையைப்போல் அவர் கையால் உணவு பெற விரும்புவார்.

நாட்டில் எங்கேயாவது பஞ்சமுண்டானல் அங்கே நாக மஹாசயர் சென்ற மாத்திரத்தில் அது சுபிக்ஷமாய் விடுமென்றும், எங்கேயாவது பெருவாரிநோய் உண்டானல்,அவர் பாததூளி பட்டமாத்திரத்தில் அது பறந்தோடிப் போமென்றும் அவருடைய பக்தர்கள் நம்பினர்கள்.

தேவபாக்குக் கருகாமையில் காசிபூர் என்னுங் கிராமத்திலிருந்த ஓர் முகமதியன் இவரை மகானெனக்கண்டு அவருக்குப்பணிவிடைசெய்து அவருடைய கருணைக்குப் பாத்திரமாக விரும்பி அடிக்கடி அவரை நாடி வெகுநேரம் அவருடன் கழித்துவருவது வழக்கம். இவருடைய சிறந்த குணங்களை மெச்சி நாக மஹாசயர் 'பெரியோரிடம் மதபேதம் ஜாதிபேதம் என்பவை கிடையா. எக்குடிப்பிறந்தோராயினும் பகவானிடம் பக்திமட்டு முள்ளவர்களாயின் அவருடைய கருணைக் குரித்தாவரென்பதில் ஐயமென்ன? குருதேவர் அருளியபடி வெவ்வேறு மதங்களும் ஒரே நதிக்குச் செல்லும் பல துறைகள் போலன்றோ? எந்த மதத்தைத் தழுவியவரும் தூயமனத்துடன் இடைவிடா தியானத்தால் அவரை நாடுதல் வேண்டும்" என்றருளியிருக்கின்றார்.

காளிகுமார், பூனியா, ஹரப்ரஸன்ன முஜூம்தார், நடபார முகர்ஜி, ஆனந்ததாகூர், கைலாஸ சந்திரதாஸ், பார்வதி சரணர், கோபாலசந்திர சக்கிரவர்த்தி; முதலியோர் இவருடைய பக்தர்களில் முக்கியமானவரென்று நாம் அறிகின்றோம். ஆனல் நமக்



குத் தெரியாதவர் அநேகரிருக்கின்றாரென்பது திண்ணம். எவராயினும் ஒரு முறை அம்மஹானுடைய திருவடியைக்கண்டவர் அவரிடம் ஈடுபட்டு அவரை வணங்கி அவரைப் பின்பற்ற விரும்பாமலிருந்ததில்லை. அவரது பெருமை அத்தகையது. ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் "நாம் அங்கு மிங்கு மலைந்து வாழ் நாட்களை வீணாக்குகின்றோம். நம்மனைவரினும் சிறந்த யோகி நாகமஹாசயரே. அவரே குருதேவருடைய திருவருளைப் பூர்ணமாய்ப் பெற்றவர்" என்று அடிக்கடி கூறுவார்.

இவர் தகப்பனர் காலமான பிறகு இவ்வாறாய் மூன்று வருஷங்கள் கழிந்தன. நாகமஹாசயருடைய இறுதியும் கிட்டியது. அவருக்கு ஒரு கொடிய மரண வியாதி தோன்றியது. அது பிராரப்த பலனென்றுணர்ந்த துர்க்காசரணர் துன்பத்தை மிகுந்த பொறுமையுடன் சகித்துக்கொண்டார். இவருடைய நோயைக் கண்டு மனைவி வருந்தினல் இவர் "ஏன் இவ்வெலும்புக் கூட்டைப் பற்றிக் கவலைப்படுகின்றாய்!" என்று கூறுவார். யார் என்ன சொன்னாலும் நோயைப் போக்க ஒருவிதமான மருந்தும்உட்கொள்ளச் சம்மதியார்.

இவர் நோயால் பதின்மூன்று நாட்கள் மிகுதியும் துன்புற்றாரெனினும் அதைப் பாராட்டாமல் காலம் முழுவதையும் பகவந்நாமஸ்மரணையிலேயே கழித்தார். அவரருகில் இத்தருவாயிலிருந்த அவருடைய சிஷ்யர் சக்கிரவர்த்தி அவர் பக்கமிருந்து ஸ்ரீமத்பாகவதம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள் முதலியவைகளைக் படித்தும், பக்திரஸம் மிகுந்த இனிய பாடல்களைப் பாடியும் அவரைக்களிப்பித்தார்.

தமது இறுதி நெருங்கியதை யறிந்த துர்க்காசரணர் கடைசி முறையாக ஸர்வலோகேசுவரியை விமரிசையாய் பூஜிக்க விரும்பினர். அவ்வாறே தேவியின் பிரதிமை செய்விக்கப்பட்டு ஆராதனைக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இவர் தேவியின் திருவுருவைக்கண்ட மாத்திரத்தில் பிரேமானந்தத்தால் ஸமாதியிலாழ்ந்தார். இதைக் கண்டோர் அவர் விண்ணுலகேகி விட்டனர் என்று எண்ணினர்கள். ஆனல் சிறிது நேரத்தில் அவர் கண்ணைத் திறந்து தாம் பூஜை செய்ய சக்தியற்றிருந்ததால் அங்குள்ளவரிலொருவரை நியமித்துத் தம் கோரிக்கைப்படி பூஜையைச் செய்யும்படி வேண்டினர். பூஜை முடிந்ததும் அங்கிருந்தோர் தேவியின் பிரஸாதத்தால் நாகமஹாசயரின் நோய் தீர்ந்து விடுமென்றெண்ணினர்கள். ஆனல் துர்க்காசரணர் அவர்களை நோக்கி "இந்த ஊற்றைச் சடலத்தைக் காப்பாற்றும் பொருட்டு இங்கே தேவி வரவில்லை; அவள் இங்கே பிரஸன்னமானது எனதன்பர்களைக்காக்கும் பொருட்டே. ஜகன் மாதா உங்களனைவரையும் ரக்ஷிக்கட்டும்!" என்று கூறினர்.

தன் சடலத்தை நீக்குதற்கு மூன்று நாட்களுக்குமுன் நாகமஹாசயர் பிரயாணத்துக்கு ஒரு நல்லதினத்தைப் பஞ்சாங்கம் பார்த்து நிச்சயிக்கும்படி சக்கிரவர்த்தியிடம் சொன்னர்.இதன்கருத்தை யுணராத சக்கிரவர்த்தி "புஷ்யம் 13௳ பத்துமணிக்குமேல் பிரயாணத்

திற்கு நல்லவேளை" யென்று கூறினன். "நீங்கள் உத்திரவு கொடுத்தால் நான் அவ்வேளையில் இவ்வுலகைவிட்டுப் புறப்படுகிறேன்" என்று அவர் பதிலுரைக்கக் கேட்டுச் சிஷ்யன் திடுக்கிட்டு உடனே நடந்தவற்றை குருபத்னியிடம் சென்று கூறினன். அவர் "அப்பா! இனி பரிதவிப்பதில் என்ன பிரயோஜனம். அவர் இனி இம்மண்ணுலகில் தங்கார். எல்லாம் எமையாளும் ஈசன் செயல்" என்று அவனைத் தேற்றினர்.

அடுத்த நாள் படுக்கைக் கருகில் அவர் மனைவி, சக்ரவர்த்தி, மற்றொரு பக்தர் ஆகிய மூவரும் நின்று கொண்டிருக்கையில் அவர் திடீரெனக் கண்களைத்திறந்து "இங்கே என் குரு நாதர் வந்திருக்கின்றார்; அவர் என்னைப் புண்யக்ஷேத்திரங்களுக்கு அழைத்துப் போகப் போகிறார். நான் புறப்படவேண்டும்" என்று சொல்லிவிட்டு சக்ரவர்த்தியைப் பார்த்து "தீர்த்தங்களின் நாமங்களைச் சொல்லிவா." என்றார். அவர் முதலில் "ஹரித்வாரம்" என்றதும் இவர் தேகம் பரவசமாய் "அதோ! கங்கை அதோ சண்டிமலை! ஸ்நானகட்டம் என்ன அழகு! நான் இருபது வருஷமாய் ஸ்நானம் செய்யவேயில்லை. இதோ கங்கையில் முழுகுகிறேன். என் பாபமெல்லாம் தொலைந்தது." என்று ஸமாதியிலாழ்ந்தார். அவர் கண்களைத்திறந்ததும் சிஷ்யன் "பிரயாக்" என்றான். உடனே ஸர்க்காசானார் "ஹே; கங்கே! யமுனே! உங்களை நமஸ்கரிக்கின்றேன். இங்கேயல்லவோ பரத்வாஜாசிரமமிருந்தது. எனக்கு ஏனோ குருநாதர் அவ்வாசிரமத்தைக்காட்டவில்லை," என்று மறுபடியும் கண்ணை மூடினார். சிறிது நேரத்துக்குப்பின் "காசிக்ஷேத்திரம்" ஸ்மரிக்கப்பட்டது. "ஜய! மஹாதேவசம்போ! சீக்கிரமே உன்னிடம் லயமாய் விடுவேன்" என்றார். இவ்வாறாக அத்தினங் கழிந்தது. மறு நாட்காலை 8 மணிக்கு மேல் அவர் உலகப்ரக்ஞை குறைய வாரம்பித்தது. அப்பொழுது அவர் முன் ஸ்ரீராம கிருஷ்ணதேவரது உருவப் படத்தைச் சக்ரவர்த்தி காண்பிக்க அவர் தழதழத்த குரலில் "எல்லாம் உனது அன்பின் பெருக்கு; எல்லாம் உனது திருவிளையாடல்" என்று கூறிக்கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிந்து அன்பால் மயிர்க்கூச்செறிந்து அசைவற்று மஹாஸமாதியிலாழ்ந்தார். அவர் ஸமாதியினின்று திரும்புவரோ வென ஐயுற்று அன்றிரவு 10 மணி வரை உடலைக் காத்து வந்தனர். மாலையில் அவர் மனைவி அவர் பாதாரவிந்தங்களை பில்வதளங்களாலர்ச்சித்து ஏழுமுறை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தாள். பின் புஷ்பங்களாலும் சந்தனங்களாலும் அலங்கரித்து அவர் தேகத்தை மயானஞ் சேர்த்து சந்தனக்கட்டையின்மேல் வளர்த்தி அவர் சிஷ்யர்கள் தீயிட்டனர். மூன்றுமணி நேரத்தில் எல்லாம் சாம்பலாகிவிட்டது. பக்தர்கள் அதைமேலே பூசிக்கொண்டு மிகுதியை ஒரு கலசத்திலிட்டு அதனுள் நாகமஹாசயர் செய்த தேவிஸ்தோத்ரம் ஒன்றும் எழுதி வைத்து அதை அவ்விடத்திலேயே அடக்கம் செய்து அதன்மேல் காளிகாதேவியின் உருவொன்று வைத்து அங்கே ஒரு ஸமாதியுங் கட்டுவித்தனர்.

# நாகராஜன் அல்லது
# மானிடன் மனக்கோட்டை.

(316-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 3.

ஒன்பது மணிக்கு சாப்பாட்டு மணி அடித்தது. மேஜையின் மேலிருந்த செக்கை எடுத்து வைத்து விட்டு நாகராஜன் உணவருந்தச் சென்றான். மிராசுதாரரும் அவருடைய நண்பரும் வந்திருந்ததும் போனதும் ஓர் கனாப்போல் தோன்றியது. போஜனமானதும் செக்கைப் பார்த்த பிறகே காலை நடந்த ஸம்பவங்கள் கனவல்ல என்றறிந்தான் நாகராஜன்.

வழக்கம்போல காலேஜிற்குச் சென்று தன் பாடங்களைக் கவனித்து வர முயன்றும் அவன் மனம் ஒன்றின்மீதும் செல்லவில்லை. இரண்டரை மணிக்கு வந்த தபால் சேவகன், ரிஜிஸ்தர் செய்த புத்தகக் கட்டு ஒன்றை நாகராஜன் பேருக்குக் கொண்டு வந்தான். அது திருவல்லிக்கேணி முத்திரையிடப் பட்டு, ராமச்சந்திரய்யரிடமிருந்து என எழுதப்பட்டிருந்தது. நாகராஜனுக்கு ஸாதாரணமாகப் புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும், புத்தக வியாபாரிகளிடமிருந்து வருவது வழக்கமாகையால் இப்புத்தகக் கட்டை ஒருவரும் கவனிக்கவில்லை. ஆனால் நாகராஜனுக்கு மாத்திரம் ஓர்விதப் புது உணர்ச்சி யுண்டாயிற்று. அது என்ன வென்று சொல்ல அவனுக்கே தெரியவில்லை. உலகமெங்கும் தன் பெயர் விளங்கினதுபோலும், தன்னைக் கண்டவர்கள் "அதோபார், முதற்றரமான ஆசிரியர்—பதிப்பாசிரியர்" என ஒருவர்க்கொருவர் சுட்டிக் காண்பித்துக்கொள்வது போலுமிருந்தது. மாலை நான்கு மணியாவது அவனுக்கு ஓர் யுகம்போலத் தோன்றியது.

அன்றையதினம் பாடம் முடிந்ததும், தன் அறைக்குச்சென்று, தலைப்பாகை சட்டை முதலியவைகளைக் களைந்துவிட்டு ஹாஸ்டலிற்குக் கிழக்கேயுள்ள மைதானத்தில் தனிமையான இடத்தில் உட்கார்ந்து தன் பேருக்கு வந்த புத்தகக்கட்டை அவிழ்த்துப்பார்த்தான். ஒரு சிறு பெண்ணின் குண்டு குண்டான எழுத்தில், சிற்சில இடங்களில் படங்களுடனும், சிற்சில இடங்களில், பூ, பழம் முதலிய சித்திரங்களுடனும் 100 செய்யுட்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தன. நாகராஜனுக்கு ஸங்கீதத்திலும் தமிழ் யாப்பிலக்கணத்திலும் நல்ல ஞானமிருந்தபடியால் பாட ஆரம்பித்தான்.

"ஆஹா, தெய்வவணக்கமா இது! பார்த்தபொருளும், ஆழ்ந்த ஞானமும் உள்ள மஹான் எழுதியதுபோலவன்றோ இருக்கின்றது. டாகூர் கீதாஞ்சலியில் எழுதியது இதற்கீடாக இருக்குமேயன்றி இதற்கு மேலாகாதே!" என்றான்.

மற்றப்பாட்டுகளும் இம்மாதிரியே இருந்தன. "எப்படியாவது இதைத்தகுந்தபடி அச்சிடல் வேண்டும். இங்கிலீஷ் முதற் கொண்டு எல்லா பாஷைகளிலும் பதிப்பிட்டால் ஜனங்களுக்கு எவ்வளவோ ஞானமுண்டாகும். மனதுக்குச் சாந்தமும், உயர் நிலையுமன்றோ இது கொடுக்கின்றது" என்றான்.

இரவு போஜனம் கழிந்த பிறகு, தன் நிலைமையும் குடும்ப நிலைமையும் நினைவிற்கு வந்தன. எல். டி. பரீக்ஷைக்குப் படிக்காமல் இருப்பது நியாயமாவென நினைத்தான். "இவ்வாயிரரூபாயையும் முன் பின்னறியாதவர்களிடம் பெற்றுக் கொண்டோமே? என்ன கார்யத்தை உத்தேசித்து இப்படி, அவர்கள் செய்தார்களோ? ஏமாற்றவோ? அல்லது கெட்டகார்யங்களுக்கு உடந்தையாயிருக்கவோ? ஆயிரம் ரூபாயும் செலவழிந்து,விட்டால் பிறகு என்ன செய்வது?" என்ற பல எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாயும், முன்னும் பின்னும் தோன்றியும் மனதை அலைக்கழித்தன. கடைசியாய் மறு நாட் காலை திருவல்லிக்கேணி சென்று இராமச்சந்திரய்யரைக் கண்டு செக்கையும், புத்தகத்தையும் திருப்பிக்கொடுத்து விடுவதே ஸரியானது என்று தீர்மானித்த பிறகு, மனது சாந்தமடைய அன்றிரவு நாகராஜனுக்குக் கழிந்தது.

## 4

"நேற்றையதினமே மிராசுதாரர் போய்விட்டாரே! தங்களிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ள எனக்கு அதிகாரமேயில்லை. ஆனால் வேண்டிய பணம் கொடுக்கத்தான் உத்தரவுண்டு" என்றார் ராமச்சந்திரய்யர்.

என் செய்வது? நாகராஜன் தன் நிலைமை குடும்ப விஷயங்கள் எல்லாவற்றையும் கூறினான் எல்லாவற்றையும் சாவதானமாய்க் கேட்டுக் கொண்டதும் வக்கீல் "பணத்திற்காக நீங்கள் அதைர்யப் படவேண்டாம். இதோபாரும்; என் மூலமாகப் பெறும்படி உமது பேரில் லக்ஷம் ரூபாய்க்கு அவர் இந்தியன் பாங்கியில் கட்டியிருக்கும் பணத்திற்கு ரசீது புத்தகம்" என்று புத்தகத்தைத் திறந்து காட்டினார். "என்கணக்கில் நாகராஜன் இராமச்சந்திரய்யர் மூலமாய் 2,3 வருஷம் வரையில் ஒரு லக்ஷம் ரூபாய் பெறலாம்" என்று எழுதப்பட்டிருந்தது.

"அவர் சுற்றுயாத்திரையில் பிரியமானவர். இப்பொழுது எங்கிருக்கிறாரோ! நான் சொல்ல முடியாது. நீங்கள் அவர் சொன்



னபடியே செய்தால் நன்றாயிருக்கும்" என்று சொன்ன இராமச்சந்திரய்யருக்கு "ஸரி" யென்று நாகராஜன் சொல்லவேண்டியிருந்தது. "தங்களுக்குப் பணம் தேவையானபோது, எழுதினால் போதும். வரக்கூட வேண்டியதில்லை. போய்வாருங்கள்" என்று வழியனுப்பினார் வக்கீல் நாகராஜன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டபோது 11 மணியாய் விட்டபடியால் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு செக்கை எடுத்துக்கொண்டு, இந்தியன் பாங்கின் தலைமை ஆபீஸிற்குச் சென்றான். அந்த செக்கைக் கண்டதும் பாங்கு உத்யோகஸ்தர்கள் சீக்கிரத்தில் 1,000 ரூபாய்க்கு நோட்டுகளாகவும் ரூபாய்களாகவும் கொடுத்தனர்.

ஆயிரம் ரூபாய்! 100 ரூபாய் மொத்தமாகக் காணாத நாகராஜனுக்கு இந்தப்பெருந்தொகையை வைத்துக்கொண்டு என்ன செய்வதெனத் தோன்றியது! செங்குத்தான மலை மேல் ஏற விரும்புபவன், கீழிருந்து உச்சியைக் காண்பானாயின் அவன் திடுக்கிடுவது போலவே நம் நாகராஜனும் திடுக்கிட்டான்.

## 5

பகல் ஸைதாப்பேட்டை போய்ச் சேர்ந்து காலேஜ் பிரின்ஸிபாலைக்கண்டதும் தான் சிலகாரணங்களால் எல்.டி. பரீக்ஷைக்குப் படிக்கமுடியாதென்று சொல்லி, அது வரைக்கும் பெற்றுக்கொண்ட ஜீவனம்சப்படியைத் திருப்பிக் கொடுத்துவிடவே அவர் அநுமதி தந்து விட்டார். பிறகு ஹாஸ்டலில் தன் அத்யந்த நண்பர்களுக்குக் காலேஜை விட்டுப்போக நேர்ந்ததைக் கூற, அவர்கள் முதலில் நம்பவில்லையாயினும், ரொக்கமாய்ப் பணமிருப்பதைக் கண்டதும் உண்மையென ஒப்புக்கொண்டனர். மாலைக்குள் இவ்விஷயம் ஹாஸ்டல் முழுவதும் பரவிவிட்டது. "நாகராஜன் அதிர்ஷ்டசாலி" யென்றனர் சிலர்; "மிராசுதாரன் பைத்தியக்காரன்" என்றனர் வேறு சிலர்; "எல்லாம் கொஞ்சநாளைக்கு" என்றனர் பலர். என்னவாயினும், ஒரு வாரத்திற்குள் நாகராஜன் தன் சாமான்களை எடுத்துக் கொண்டு, மயிலாப்பூரில் ஓர் சிறு வீட்டில் தங்கியிருந்தான். அச்சு வேலையில் நல்ல பழக்கம் முதலிலேயே இருக்கவேண்டியது அவசியமாகையால், சென்னையில் பெயர்போன ஓர் அச்சுயந்திரசாலையில் இலவசமாகவேலை செய்வதாக ஒத்துக்கொண்டு மூன்று மாதத்தில் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டான். அதற்கு மேல் ஆறு மாதங்களுக்கு இந்தியாவிலுள்ள பற்பல பிரபல இடங்களுக்கும் சென்று அவ்வவ்விடங்களில் சித்திரங்களையும் புத்தகங்களையும் அச்சிடும் மாதிரிகளையும், அதற்காக உபயோகப்படும் காகிதம், மை முதலியவைகளையும் நன்கறிந்தான்.

ஆறுமாத காலமாயிற்று. சென்னையிலேயே நுங்கம்பாக்கத்தில் ஓர் பெரிய வீடுவாங்கி 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஓர் அச்சாபீஸ் ஏற்படுத்தினான். அதற்கு வேண்டிய வேலைக்காரர்கள் இந்தியாவின் எல்லா விடங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டனர். புதிதாகத் தமிழ் நூல்கள் பிரசுரிக்க ஆரம்பித்தான். "குறைந்தவிலையில் சிறந்த முறையாக, மேலானகாகிதத்தில் பதிக்கப்பட்ட இத்தமிழ்நூல்களை இதுவரையில் ஒருவரும் பதிக்கவில்லை" என பத்திரிகைகள் எல்லாம் எழுதலாயின. நாகராஜனுக்கு கிடைத்த புகழ்ச்சிமொழிகளும் நற்சாட்சிப் பத்திரங்களும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. ஆரம்பத்தில் தன்பதிப்புகளைப் பற்றின அபிப்ராயங்களை வாசித்துப் பார்த்தபோதிலும் அவைகளைப்படிப்பது மிகவும் சிரமமானதால், அவ்வழக்கத்தை விட்டுவிட்டான் நாகராஜன்.

'லக்ஷ்மி பிரஸ்' எனப் பெயர்கொண்ட அச்சுசாலை, மிராசுதாரரின் பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டது. நாகராஜனுக்கு மாதம் மாதம் தவறாமல் 200 ரூபாயும், அவன் தாயாருக்கு 100 ரூபாயும் வந்துகொண்டிருந்தது. புது அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களின் விற்பனையினாலேயே நல்ல லாபம் கிடைத்தபடியால் இராமசந்திரய்யரிடம் பணம் கேட்கவேண்டிய அவசியமேயில்லாதிருந்தது.

ஆனால் 'லக்ஷ்மி'யின் பாட்டுகளை நாகராஜன் மறக்கவேயில்லை. இதுவரைக்கும் பதிப்பித்த புத்தகங்கள் எல்லாம் பாடல்களை அச்சிடுவதற்குத் தகுந்த முறையைக்கண்டு' பிடிப்பதற்கென்றே என அவன் எண்ணியிருந்தான். தன் ஓய்வுவேலைகளிலும், மனது பல கஷ்டங்கள் அடைந்திருந்தபோதும், அப்பாடல் புத்தகத்தை வாசித்து மனச்சமாதானம் அடைவான்.

நாகராஜன் எவ்வளவு முயன்றும் மிராசுதாரர் இருக்குமிடம் மாத்திரம் தெரியவில்லை. இராமசந்திரய்யரைக் கேட்டால் தமக்குத் தெரியாதென்றும் தெரிந்தாலும், சொல்ல முடியாதென்றும் சொல்லிவிட்டார். இவ்விதமாக ஒருவருஷம் கழிந்தது. இனிமேல் 'லக்ஷ்மி' எழுதின பாட்டுகளை அச்சிடலாம் என்ற எண்ணம் தோன்றியது. அதற்காகத் தகுந்த படங்களை வரையவும், அச்சிடவும் உலகில் பல தேசங்களிலிருந்தும் சித்திரமெழுதுபவர்கள் வரவழைக்கப்பட்டனர். சரியான காகிதம் இந்தியாவில் அகப்படாததால், அமெரிக்காவிற்குச்சென்று காகிதம் செய்யும் வியாபாரிகளிடம் தனியாகத் தனக்கு வேண்டிய காகிதத்தை செய்யும்படிக்கு உத்தரவுசெய்து அங்கிருந்து இங்கிலாந்திற்குச் சென்று அவ்விடத்தில் பிரபலமான வியாபாரிகளிடம் தன் புத்தகம் விற்பனையாவதற்



கான ஏற்பாடுகள் செய்துவிட்டு, பிரான்ஸ், ஜர்மனி முதலிய தேசங்களுக்கும் சென்றுக் கடைசியாக எஜிப்டு வழியாகத் தன் தேசத்திற்குத் திரும்பினான்.

பாடல்களை அச்சிடக்கொடுத்தாயிற்று. ஆனால் ஆறுமாதம் வரைக்கும் ஒரு பக்கமாவது அச்சிடப்படவில்லை. நாகராஜனுக்கு ஒருமுறை அச்சில் கோர்க்கப்பட்ட எழுத்துக்களில் அதிருப்தியுண்டானால், உடனே அச்சைக் கலைத்துவிட உத்திரவிடுவான்; மறு முறை தயார் செய்யப்படும் எழுத்துக்களும் அனேகமாய் இதேவிதந்தான் கலைக்கப்படும். சிற்சில வேளை பாதிபுத்தகம் அச்சிடப்பட்டபிறகு, எழுத்தின் வடிவம், நன்றாயில்லை என்று யாராவது சொன்னால் உடனே மொத்தமும் கலைக்கப்பட்டுப் புதிய அச்சில் கோர்க்கப்படும். ஆறுமாதங்கழிந்த பிறகுதான் என்ன அளவு அச்சில் அச்சிடுவது என்பது தீர்மானிக்கப்பட்டது. இதற்குள் பாண்டித்தியம் வாய்ந்த ஆசிரியர்களால் "ஸீதமாலை" என்னும் லக்ஷ்மியின் பாட்டுகள் பல அந்நியபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு சில 'லக்ஷ்மி பிரஸி'லும் சில வேறிடங்களிலும் அச்சாகிவந்தன. சுமார் 50 பாஷைகளில் ஒரே ஸமயத்தில், அந்நூல் அச்சிலிருந்ததுவென்றால் அதற்கு வேண்டிய ஏற்பாடு எப்படியிருக்கவேண்டுமென்று நாம் கூற வேண்டியதில்லை.

புத்தகம் அச்சிடுவது சிரமமாயினும் அதை விற்பனைசெய்வது அதனினும் சிரமம். புத்தகம் விற்பனையாகிப்பரவின பிறகேதான் ஆசிரியருடைய கவித்திறமை எங்கும்பரவும். அப்படி விற்பனைக்குத்தகுந்த ஏற்பாடுகள் இல்லாமையால் எவ்வளவோ புத்தகங்கள் அச்சியந்திரசாலைகளிலும், புஸ்தகசாலைகளிலும் காகிதக்கட்டுகளாக இருக்கின்றன. இந்த தந்திரம் நாகராஜனுக்கு நன்கு தெரியும். அதனால் அங்கங்கே பத்திரிகைகள், நோட்டீஸ்கள், விளம்பரங்கள் மூலமாய் உலகம் முழுவதும் இப் புதுப்புத்தகத்தைப்பற்றித் தெரிவித்தான். புத்தகத்தைப்பற்றின முகவுரைகள், தனிச் செய்யுள்கள், சித்திரங்கள், முதலியவை பெரிய எழுத்தில் முக்கியமான பொது இடங்களில் எல்லாம் பிரசுரப்படுத்தப்பட்டன. புத்தகம் முடிவதற்கு முன்னே அதற்காக முன் பணத்துடன் வந்த ஆர்டர்களுக்குக் கணக்கேயில்லை. அயல் தேசங்களுக்கு புத்தகங்களை எடுத்துக் கொண்டு போவதற்குக் கப்பல் ஒன்று தனியாக வாங்கவேண்டியிருந்தது.

## 6

நாகராஜன் வேலையிற் புகுந்து இரண்டுவருஷமும் 4 மாதங்களுமாயின. புத்தகம் வெளிவந்ததும், அதை அனுப்புவதற்கு ஒரு மாதமாயிற்று. புத்தகத்தைப்பற்றின அபிப்ராயத்தில் ஆசிரியையான லக்ஷ்மியின் கவித்திறமையை மிகவும் புகழ்ந்து ஓர் பத்திரிகை பின்வருமாறு எழுதியது:—

இந்தியச் சிறுமியின் கவித்திறம்

"கீதமாலை"

12 வயதான 'லக்ஷ்மி' என்னும் சிறுமி இயற்றியது

டாகூரின் கீதாஞ்சலிக்கு ஒப்பான

இந்நூல்

தமிழ்மொழியின் வன்மைக்கும் நடைப்போக்குக்கும் ஓர் நற் சாட்சி. செய்யுளுக்குத் தகுந்த சித்திரமும், கண்ணைக்கவரும் அச்சு முள்ள புத்தகத்தைப் படிக்காதவன் மனிதனல்லன். 50 பாஷை யில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

1,00,000 பிரதிகள் ஒரே மாதத்தில் விற்பனை

நீர் வாங்கினீரா?

" தமிழ் மொழியின் வன்மையைக் காண்பிக்கும் நூலான 'கீதமாலை'யை இயற்றின 12 வயதுள்ள லக்ஷ்மி, ஸரஸ்வதியின் அவதாரமே என்று சொல்லவேண்டும். அவர் சிறுவயதில் நோயால் வருந்தினதாகவும் அப்பொழுது இயற்றின செய்யுட்கள் இவை யென்றும் நூலின் முகவுரையில் கூறப்படுகின்றது. செய்யுளை வாசிக் கும்போதே சங்கீதஞானம் இல்லாதவன்கூட, அந்த அநுபவ ஆனந் தத்தையடைவான் என்று நாம் தைரியமாய்க் கூறலாம். நாளையதி னம் சிறந்த ஆசிரியரின் அபிப்ராயத்தைத் தனிப்பத்திரிகையாக வெ ளியிடுகிறோம். காலதாமதத்திற்கு நேயர்கள் மன்னிப்பார்களாக."

அச்சாபீஸின் தனியறையில் ஓர் சாய்வு நாற்காலியின் மீது நாக ராஜன் சாய்ந்துகொண்டு கீதமாலையை வாசித்துக்கொண்டிருந்தான். அவன் வாசிக்கும்போது கண்களில் நீர் தாரை தாரையாக ஓடியது, அதன் காரணம் தன் காரியத்தை ஸரிவர முடித்தோமென்ற ஸந் தோஷத்தினாலோ, அல்லது இனி என்ன செய்கின்றதென்ற எண் ணத்தினாலோ நமக்குத்தெரியாது. கீதமாலையின் ஆசிரியையான லக்ஷ்மியை ஒரு முறையாவது பார்க்கவேண்டுமென்ற ஆவல் மேன் மேலும் பொங்கிற்று.

புத்தகம் வெளிவந்ததும் ஆறுகாபிகளை இராமசந்திரய்யருக் கு அனுப்பி, மிராசுதாருக்கு அப்புத்தகங்களை அனுப்பும்படியும் இனிதன்காரியம் முடிந்தபடியால், மிராசுதாரரைக்கண்டு, வேலையை அவரிடம் ஒப்புவித்துவிட விருப்புவதாகவும் எழுதினான். "என்ன இன்னம் பதில் வரவில்லையே!" என்று அவன் எண்ணிக்கொண்டி ருந்தபோதே இராமச்சந்திரய்யரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது.



பிரியமுள்ள நாகராஜரே, திருவல்லிக்கேணி,

15—4—1921.

தங்கள் கடிதத்தையும் புத்தகங்களையும் பார்த்து ஆனந்த பரவ சனானேன். மிராசுதார் எழும்பூரிலுள்ள லக்ஷ்மி விலாஸத்தில், தம் குமாரியுடன் இருக்கிறார். அவர் நேற்று காலைதான் வந்தார். தங் களைப்பார்க்க அவர் விரும்புகிறபடியால், இன்று மாலை 7-மணிக்கு அவ்விடம் போகும்படி வேண்டிக்கொள்கிறேன். அநேகமாய் நா னும் அங்கிருப்பேன். சிரமத்திற்கு மன்னிக்கவும். மற்றவை நேரில்.

பிரியமுள்ள தங்கள்,

இராமசந்திரன்."

இக்கடிதத்தைக் கண்டதும் நாகராஜன் அன்று சாயந்திரம் எழும்பூருக்குச்சென்றான் என்பது நாம் கூறாமலே, விளங்கும்.

(அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

---

## வர்த்தமானம்

பினங்கிலுள்ள நமது நிருபநேயர் தெரிவிப்பதாவது:-

சுவாமி அபேதாநந்தர் அவர்களின் விஜயம்: நமது ஹிந்துமதத்துக் குத் திலகம்போன்றவராகிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யரும், ஹிந்து மதத்தை அமெரிக்காவாகிய அந்நிய நாட்டில் நிலை நாட்டியவருமாகிய விவேகாநந்த சுவாமி அவர்களின் தோழரு மான அபேதானந்த சுவாமிகள் இங்கு விஜயம் செய்தது இந்நாடு செய்த தவப்பயனேயாகும். சுவாமி அபேதாநந்தர் அவர்கள் பிரசங்கம், உருவம் முதலியவற்றில் சுவாமி விவேகாநந்தரையே ஒத்திருக்கின்றனர்.

நாச்சியப்பா தியேட்டர் என்னும் ஹாலில் பல வகுப் பினருமாகச் சுமார் 5000 ஜனங்கள் கூடியிருந்தனர். சுவாமி கள் அங்கு ஆங்கிலத்தில் செய்த பிரசங்கம் போற்றத்தக் கது. ஸகோதரத்துவம், ஸநாதன தர்மம் முதலிய விஷயங்களை சமஸ்கிருத சுலோகங்களுடன் சுமார், ஒருமணி நேரம் பேசினார் கள். அவர்களுடைய கருத்தும், போதனைகளும், வாக்குவன்மையும் எச்சாதியாரும் எம்மதத்தினரும், போற்றத்தக்கதாகவேயிருந்தன. அதில் கடவுள் ஒருவரே என்பது முக்கியமான கொள்கையாகும்.

(இதுவரை) இம்மலேயா நாட்டில் இவ்விஷயத்தைப் போதித் தது சுவாமி அபேதாநந்தா அவர்களே முதலாவதாவார்கள். அவர் கள் விஜயஞ்செய்த மகிமையால் இனி அடிக்கடி இங்கு நம் ஹிந்து மதத்தைப்பற்றிய பிரசங்கங்கள் நடந்து யாவர் மனதிலும் ஸகோத ரத்துவம் ஸநாதன தர்மம் முதலியன பரவவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுவாமிகளுக்கு. திடகாத்திர தேகத்தையும் நீண்ட ஆயுளை யும், சர்வேஸ்வரன் கிருபை புரிந்து நமது ஹிந்து மதத்தின் பெருமையை நிலவச் செய்வாராக.

---

துர்மதிஹு தக்ஷிணாயனம் கார்த்திகைமீ
கிறிஸ்து சகம் 1921ஹு நவம்பர்-டிசம்பர்மீ)

| கார்த்தி | நவம்பர் டிசம்பர் | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 15 | செவ் | ○பௌர-32-12 | பர-16-59 | விருச்சிக ரவி 27-23; கரிநாள் |
| 2 | 16 | புத | பிர-28-31 | கார்-16-10 | |
| 3 | 17 | வியா | துவி-25-45 | ரோ-14-17 | |
| 4 | 18 | வெ | திரி-21-11 | மிரு-11-13 | சங்கடசதுர்த்தி |
| 5 | 19 | சனி | சது-16-4 | திரு-8-15 | |
| 6 | 20 | ஞா | பஞ்-10-40 | புன-4-37 | |
| 7 | 21 | திங் | ஷஷ்-5-11<br>ஸப்-59-46 | {பூச-0-54<br>{ஆயி-57-15 | கரிநாள் |
| 8 | 22 | செவ் | அஷ்-54-38 | மக-53-49 | காலபைரவாஷ்டமி |
| 9 | 23 | புத | நவ-49-44 | பூர-50-36 | |
| 10 | 24 | வியா | தச-45-14 | உத்ர-47-51 | கரிநாள் |
| 11 | 25 | வெ | ஏகா-41-10 | ஹஸ்-45-30 | ஸர்வஏகாதசி |
| 12 | 26 | சனி | துவா-37-36 | சித்-43-40 | |
| 13 | 27 | ஞா | திர-34-41 | சுவா-42-26 | பிரதோஷம் |
| 14 | 28 | திங் | சதி-32-33 | விசா-42-1 | போதாயன அமாவாசை |
| 15 | 29 | செவ் | ●-31-23 | அனு-42-34 | அமா—தர்ப்பணம் |
| 16 | 30 | புத | பிர-31-22 | கேட்-44-16 | |
| 17 | 1 | வியா | துவி-32-40 | மூல-47-15 | |
| 18 | 2 | வெ | திரி-35-23 | பூரா-51-37 | |
| 19 | 3 | சனி | சது-39-32 | உரா-57-18 | கரிநாள் |
| 20 | 4 | ஞா | பஞ்-44-53 | திரு-60-0 | |
| 21 | 5 | திங் | ஷஷ்-51-8 | திரு-4-3 | |
| 22 | 6 | செவ் | ஸப்-57-54 | அவி-11-32 | ரத்தனசப்தமி |
| 23 | 7 | புத | அஷ்-60-0 | சத-19-6 | |
| 24 | 8 | வியா | அஷ்-4-2 | பூட்-26-18 | |
| 25 | 9 | வெ | நவ-9-25 | உட்-32-21 | |
| 26 | 10 | சனி | தச-13-19 | ரேவ-36-58 | |
| 27 | 11 | ஞா | ஏகா-15-22 | அசு-36-33 | ஸர்வஏகாதசி |
| 28 | 12 | திங் | துவா-15-24 | பர-40-14 | பிரதோஷம்; பரணிதீபம் |
| 29 | 13 | செவ் | திர-13-27 | கார்-39-6 | கிருத்திகை [யதீபப் |
| 30 | 14 | புத | சதி-6-45 | ரோ-36-21 | தத்தாத்திரேயஜந்தி; ஸர்வால |

| கே | | | |
|---|---|---|---|
| | 16-7 விரு-புத<br>17-53 விரு-சுக்<br>29-53 துலா-செ | | |
| | ரவி | புத-சுக் | செ-கு ச-ரா |

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு—திருக்குறள்.

தொகுதி 1] துன்மதிஹு மார்கழிமீ [பகுதி 12

உ

## கடவுள் வணக்கம்.

எனக்குமுனக்கு மிசைந்தபொருத்த மென்னபொருத்தமோ
இந்தப்பொருத்த முலகில்பிறருக் கெய்தும்பொருத்தமோ.

என்னுடலு முயிரும்பொருளு முன்னதல்லவோ
எந்தாயிதனைப் பெறுகவெனநா னின்றுசொல்லவோ
சின்னவயதி லென்னையாண்ட திறத்தைநினைக்குதே
சிந்தைநினைக்கக் கண்ணீர்பெருகி யுடம்பைநனைக்குதே.

அப்பாநின்னை யன்றியெங்கு மணைப்பாரில்லையே
யந்தோநின்னை யன்றியெங்கு மருள்வாரில்லையே
எப்பாலவர்க்கு நின்னையன்றி யிறைமையில்லையே
எனக்குநின்மே லன்றியுலகி லிச்சையில்லையே.

அரசேயுன்னை யணைக்கவென்று ளாசைபொங்குதே
யணைப்போமென்று முண்மையாலென் னுவிதங்குதே
விரைசேர்பாதம் பிடிக்கவென்கை விரைந்துநீளுதே
மேவிப்பிடித்துக் கொள்ளுந்தோறு முவகையாளுதே.

தமியேன்மேல்நீ வைத்ததயவு தாய்க்குமில்லையே
தகுமைந்தொழிலும் வேண்டேந்தோழக் கருதல்வல்லையே
வினவுமெனக்கென் னுயிரைப்பார்க்க மிகவுநல்லையே
மிகநான்செய்த குற்றங்குறித்து விடுவாயல்லையே.

என்னையாண்ட வண்ணமெண்ணி யுள்ளமுருகுதே
என்னைவிழுங்கி யெங்குமின்ப வெள்ளம்பெருகுதே
உன்னவுன்ன மனமுமுயிரு முடம்புமினிக்குதே
உன்னோடென்னை வேறென்றெண்ணின் மிகவும்பனிக்குதே
—எனக்கு.—

இராமலிங்க சுவாமிகள்.

# குருதேவர் வாக்கியம்.

(322-ம் பக்கத் தொடர்ச்சி)

குளத்திற் பாசியை யொதுக்கினா லொதுங்கும்பின்
கூடிடுங் கூடாமற்
பிளக்கு மூங்கிலாற்றடை செயினிலைக்குமிப்
பெற்றியினியன் மாயைக்
களக்க நீங்கிடு மீசர்பா லன்பினாற்
கருது ஞானந் தன்னால்
விளக்க மல்கிய சச்சிதா நந்தமே
வெளியுறப் புலனாகும்.

[ஒரு குளத்தில் மிதந்துகொண்டிருக்கும் பாசியை நீ ஒதுக்கினால் ஒதுங்கும். அது நீ கையெடுத்த உடனே முன்னிருந்தபடி ஒன்று கூடும். அதுபோலவே மாயையை நீக்க முயன்றால் மறுபடியும் வந்தடையும். ஆனால், ஒரு மூங்கிற் பாயினால் ஒதுக்கின பாசியைத் திரும்பவொட்டாது செய்ய முடிவதுபோல, ஞானம், பக்தி என்னும் தடைகளால் மாயையை ஒதுக்கி, அதை திரும்பவும் வரவொட்டாது செய்யமுடியும். அப்பொழுதுதான் நாம் சச்சிதானந்தத்தைக் காண்போம்.] (9)

தக்கணே சுரத்துறைந்த வொருதவர்
தபனனை முகின்மேவி
யக்கணத்தினி லகன்றது கண்டுநக்
கார்த்தன ரேதையா
நக்ககாரண மென்றனுஞ் சீவனை
நாடுமாயை யந்திரையி
தொக்குமேயன்றோ கணத்திருள் மறுகணத்
துளதுமுன்னிலை யென்றார்.

[தக்ஷிணேசுவரத்தில் வசித்துவந்த ஒரு மஹான், ஓர் நாள், மேகமொன்று பரவியதால் வானம் இருண்டதையும், அம்மேகத்தைச் சிறிதுநேரத்திற்கெல்லாம், பலமான காற்று அடித்துச் சென்றதையும் கண்டு, சிரிக்க வாரம்பித்தார், “ தாங்கள் சிரிப்பதற்குக் காரணமென்ன” வென்று நம் குருதேவர் கேட்க, மஹான் தாம் கண்டதைக்கூறி இவ்வாழ்க்கையில் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயையும் இத்தகையதே” என்று கூறினார்.] (10)

# ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

## அத்தியாயம்—2.

பிறகு அங்கிருந்த பாடகர்களைப் பார்த்து “ஜீவன் கடவுளை அடைந்த ஆனந்தத்தைக் குறிப்பிக்கும் பாடல் ஏதாவது பாடுகிறீர்களா?” என்றுகேட்டு, அங்கிருந்த ரக்கல் என்னும் சிஷ்யனைப் பார்த்து “ரக்கல், அன்று நோபின் நியோகி வீட்டில் பாடின ‘பிரம்மானந்தத்தில் மயங்கியிரு’ என்னும் பாட்டு உனக்கு ஞாபகமிருக்கிறதா ?” என்று கேட்டார்.

அங்கிருந்தவர்களில் ஒருவர் பகவானைப் பார்த்து “ஸ்வாமி! தாங்கள் ஒரு பாட்டு தயவு செய்யலாகாதா ?” என்று கேட்க பகவான், “நான் என்ன பாடுவது? நானும் உங்களைப்போலவேதான் பாடுகிறேன் ; ஸரி, ஸமயம் வரும்பொழுது நான் பாடுவேன்” என்று சொல்லிச் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்.

* * * * *

பகவான் பாடினமுதல் மூன்று பாடல்கள் ஸ்ரீசைதன்னிய தேவரையும், ஸ்ரீகிருஷ்ணனையும்பற்றி; அதாவது வைஷ்ணவ முறைப்படி; கடைசி இரண்டு பாட்டு ஜகன்மாதாவைப்பற்றி. அவையாவன :—

### பாடல்—1

### ஸ்ரீகிருஷ்ண சைதன்னியர் பேரிலுள்ள பிரேமை.

1. கௌர (சைதந்ய) ரது அன்பின் அலைகள் என் உடலின்மீது மோதுகின்றன. அவனது அன்பாகிய கடலின் கிளர்ச்சியினால் பாபிகள் நாசமடைகிறார்கள் ; உலகத்தையே மூழ்கச் செய்கிறது.

2. நான் கரையில் நிற்க எண்ணினேன். ஆனால் கௌர சந்திரனது அன்பாகிய முதலை என்னைப் பிடித்திழுக்கிறது. மனமிரங்கி யாராகிலும் என் கையைப் பிடித்திழுத்துக் கரையில் விடார்களா ?

### பாட்டு—2.

### ஸ்ரீகௌர சைதன்னியர்பேரிலுள்ள அன்பு.

1. நண்பனே வா! கௌரனது திவ்யரூபத்தைப்பார்! மின்னல் சேர்ந்த மேகம் போலிருக்கின்றது.*

2. இது ஒரு ஸ்வர்ண விக்கிரஹம். அவனது ஹிருதயக்கடல் அன்பாகிய அலைகளாகச் சலிக்கிறது. அந்த அன்பினால் அவன் சரீரம் முழுவதும் மிருதுவாகி, திரிபங்கமாகி (மூன்று வளைவுள்ளதாய்) விட்டது. அதினாலன்றோ என்மனம் கௌரனது உருவத்திலும் பார்வையிலும் சிக்கிக்கொண்டது.

* இருண்டமேகம் கிருஷ்ணன். மின்னல் ராதை. இவ்விரண்டும் சேர்ந்து கௌரசைதன்னியரானார்.

3. சிவனால் சிருஷ்டிக்கப்பட்ட ராதையால் அலங்கரிக்கப்பட்ட திவ்ய ரூபத்தையுடைய எனது கௌரன், சரீரம் முழுவதும் செம்பஞ்சுக்குழம்பு பூசி, தன்னைப்பார்த்த மாத்திரத்திலேயே எனது அன்பைப் பெருக்குகிறான்.

### பாட்டு—3.

### ஆழ்ந்து முழுகு.

1. சௌந்தரியக்கடலில் ஏ மனமே, ஆழ்ந்து முழுகு, ஆழ்ந்து முழுகு, ஆழ்ந்து முழுகு.

(199-ம் பக்கம் பார்க்க,)

### பாட்டு—4.

### ஜகன்மாதாவும் அவளையடையும் கஷ்டமும்.

1. எனது ஜகன்மாதாபோன்ற ஐசுவரியம் யாருக்குக் கிடைக்கும் ?

அவளது திருச்செவ்வடிகளின் தியானத்தில் முழுகுவது சிவனது தபஸ்ஸுக்கும் அரிதன்றோ ?

2. எனதன்னையைத் தியானம் செய்பவனுக்கு அரச செல்வமும், இந்திரனது பதவியும் ஒரு பொருட்டோ !

சியாமஸுந்தரியாகிய எனதன்னை அவனை ஒருதரம் கடைக்கணித்தால் நித்தியானந்தத்தில் மிதப்பான்.

3. யோகிகளுக்கும், மௌனிகளுக்கும் அதிபதியாகிய சிவனும், இந்திரனும் அவளது திருவடிகளை வீணே தியானம் செய்கிறார்களாயின், அக்குவள ஆநந்தத்தை யடைவது எளிதோ ?

குணமொன்றுமில்லாத கமலாகாந்தனும் அத்திருவடிகளின் தரிசனத்தை விரும்புகிறான்.

### பாட்டு.—5

### ஜகன்மாதா; பக்தியும் முக்தியும்.

1. ஸதாசிவனுக்குப் பிரியையாகிய சியாமஸுந்தரியான ஜகன்மாதா என்ன நேர்த்தியான இயந்திரம் அமைத்திருக்கிறாள் !

மூன்றரை முழ நீளமுள்ள அவ்வியந்திரத்தில் * என்ன வேடிக்கைகள் காண்பிக்கிறாள் !

2. அவளே அவ்வியந்திரத்திற்குள்ளிருந்து, அவ்வியந்திரத்தை யாட்டும் ஸூத்திரத்தை (கயிற்றை) பிடித்துக்கொண்டிருக்க, அவ்வியந்திரம் தன்னை யாராட்டுகிறாரென்பதை யறியாது 'நானே ஆடுகிறேன்' என்று சொல்லுகிறது.

3. அவளை அறிந்த யந்திரம் அதன்பின் இயந்திரமாயிராது. என்னம்மையே சில யந்திரங்களுக்கு பக்தியாகிய கயிற்றினால் கட்டப்படுகிறாள்.

பகவான் ஜகன்மாதாவைக் குறித்துப் பாடி, பாட்டு முடிந்ததும் ஸமாதியிலாழ்ந்தார். கண்கள் பாதி மூடினவைகளாகச் சலனமற்றிருந்தன; ஸ்தூல சரீரத்தின் வியாபாரங்கள் யாவும் அடங்கியிருந்தன ; இந்திரிய பிரக்ஞை அகன்று ஆத்ம பிரக்ஞை தங்கியிருந்தது.

---

* சரீரம்.



## அத்தியாயம்—3.

### பகவான் ஸமாதிக்குப்பிறகு வெளியிட்ட தத்துவங்கள்.

கொஞ்சம் பிரக்ஞை வந்ததும், அவர் ஜகன்மாதாவிடம் பேசுவதுபோல் சொல்லுகிறார் :—"அம்மா! என்னை வருத்தாதே. இங்கு இறங்கிவா! என்னம்மா ! கொஞ்சம்பொறு. அம்மா! நீ யாருக்காக எதைது விதித்திருக்கிறாயோ, அதுவே நடக்கும். இவர்களுக்கு நான் என்ன சொல்வது !"

ஞானமார்க்கத்தில், அதாவது, நித்தியாநித்திய விவேகம் இன்றி ஒன்றும் முடியாது. இத்துடன் (தனம், கீர்த்தி, சிற்றின்பம் முதலியவைகளில்) வைராக்கியம் அவசியம்.

வைராக்கியம் அநேகவிதமானது. ஸம்ஸார துக்கத்தின் கொடுமையினால் உண்டாவது ஒருவிதமான வைராக்கியம். உலகச் செல்வம் கைக்கெட்டுவதாயிருந்தும், அதை ஸாரமற்றது, அநித்தியமானது என்று உணர்ந்தறிவதினால் உண்டாவது மேலான வைராக்கியம். இதையடைந்தவன் எல்லாமிருந்தும் ஒன்றையும் விரும்புவதில்லை.

எல்லாம் காலத்தைப் பொருத்தது. உண்மை அறிவு காலக்கிரமத்தில் தான் உண்டாகும். ஆயினும் குருவினது உபதேசங்களைக் கவனித்துக் கேட்க வேண்டும். ஸரியானகாலம் வரும்பொழுது சிஷ்யனுக்கு அந்த ஞாபகம்வர "ஓஹோ! நாம் இவ்வுண்மையை முன் அந்த ஸமயத்தில் அந்த மஹானிடம் கேட்டோமல்லவா" என்று சொல்லுவான்.

இன்னொரு காரணம் என்னவெனில், இந்த உபதேசங்களை நாளுக்கு நாள் கேட்கக் கேட்க உலக ஆசை மெதுவாகத் தேய்ந்துகொண்டுவரும். இந்த ஆசையானது கள் குடித்தவனது மயக்கத்தைப்போன்றது. அரிசிக் கஞ்சி சாப்பிடச் சாப்பிட அம்மயக்கம் குறைந்து நீங்கிப் போகின்றதன்றோ.

பிரம்மஞ்ஞானத்தை அடைபவர்கள் மிகவும் ஸ்வல்பமே. ஆகையினாலன்றோ கீதையில் "ஆயிரத்திலொருவன் ஞானத்திற்காக முயற்சி செய்கிறான். அப்படி முயற்சி செய்யும் ஆயிரத்திலொருவனே என்னை அடைகிறான்" என்று சொல்லியிருக்கிறது.

இச்சமயத்தில் அங்கிருந்தவர்களிலொருவன் மேற்சொன்ன கருத்தையுடைய கீதையின் சுலோகத்தைச் சொன்னான்.—

"மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே
யததாமபி ஸித்தானாம் கச்சின்மாம் வேத்தி தத்வத :"

ஒருவனுக்கு உலகத்தில் பற்று எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கும் பிரம்மஜஞ்ஞானமடைவது அவனுக்கு அரிதாம். பற்றுதல் குறையக்குறைய ஞானமடைவது அதற்கு ஏற்றபடி எளிதாம். ஆதலால், இவ்வுலகத்தின் திரவியம், சுகம் முதலானவைகளின் மேலுள்ள ஆசையின்மைக்குத் தக்கபடி ஞானம் அதிகரிக்கவும், ஆசைக்குத் தக்கபடி குறையவும் செய்கிறது.

ஸச்சிதானந்தமாகிய பரம்பொருளை நினைத்தமாத்திரத்திலேயே பேச்சிழந்து நிற்கும் நிலைமைக்கு, பாவனை என்று பெயர். ஸாதாரண மனிதர்களுக்கு இந்த பாவனைதான் அடைய முடியும்.

பிரேமையானது சிலரால்தான் அடைய முடியும். அப்படிப்பட்டவர்கள் அபூர்வமான சக்தியுடன் பிறந்தவர்கள். ' ஈசுவர ஆக்ஞையை வகித்தவர்கள். இவ்விதம் ஈசுவர மஹிமைக்கும் சக்திக்கும் உரிமையுள்ளவர்களாய்; பிறப்பதினால் அவர்கள் ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள்.

சைதன்ய தேவர் முதலான அவதாரங்களும், அவ்வவதாரங்களின் அந்தரங்கத்தினரான பக்தர்களும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

இந்தப் பிரேமைக்கு இரண்டு அடையாளங்களுண்டு: முதலாவது, இப்பிரபஞ்சத்தை மறந்துவிடுகிறார்கள், இரண்டாவது, எல்லாருக்கும் மிகவும் அருமையான சரீரத்தையும் மறந்துவிடுகிறார்கள்.

பாவனை மாங்கனியைப்போன்றது. பிரேமை மாம்பழத்தைப்போன்றது. இப்பிரேமை கடவுளைக்கட்டுவதற்காக பக்தர்கள் கையிலிருக்கும் கயிறுபோன்றது. அதினால் பக்தன் பகவானைத் தன்வசப்படுத்திக்கொள்ளுகிறான். அவன் கூப்பிடும்பொழுதெல்லாம் பகவான் அவனிடம் போகவேண்டும்.

சதைக்குள் எலும்பும், எலும்பிற்குள் அஸ்திஸாரமும் (marrow) அதற்குள் வேறொன்றும், இவ்விதமாக உள் போகப்போகக் கடைசியில் கடவுளின் அன்பும் இருப்பதாக பாரஸீக புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கிருஷ்ணனுக்கு திருபங்கன் என்று ஒரு பெயர்; அதாவது மூன்றாக ஒடிக்கப்பட்டவன். ஒரு மிருதுவான வஸ்துதான் இப்படி சிதைவுபட முடியும். ஆகையால் கிருஷ்ணனுடைய இந்த ரூபம் அவனுடைய மேன்மையைக் காண்பிக்கிறது. அம்மேன்மைக்குக் காரணம் இந்த ப்ரேமையே.

பகவானை எப்படி பிரார்த்திப்பது? இவ்வுலக வஸ்துக்களுக்காக நாம் பிரார்த்திக்கக் கூடாது; நாரத முனிவரைப்போல் பிரார்த்திக்கவேண்டும். நாரதர் ஸ்ரீராமச்சந்திரனைப் பார்த்து "ஓ, ராமா! உனது திருவடித் தாமரைகளில் எனக்கு பக்தியிருக்கும் வண்ணம் அருளவேண்டும்" என்றார். ராமச்சந்திரன் "நாரதரே! அப்படியே ஆகட்டும்; ஆயினும் வேறு யாதாகிலும் விருப்பமில்லையா?" என்று கேட்க, நாரதர் "பிரபோ! பிரபஞ்சத்தையெல்லாம் மயக்கும் உனது மாயையினால் நானும் மயங்காதபடி வரமருளவேண்டும்" என்றார். ஸ்ரீராமச்சந்திரன் நாரதரைப்பார்த்து மறுபடியும் "அப்படியே யாகட்டும் நாரதரே! இன்னும் ஏதாவது வேண்டுமா? கேளும்," என, நாரதர் "பகவான்! வேறொன்றும் வேண்டுவதில்லை; நானிப்பொழுது கேட்டுக்கொண்டதே போதும்" என்றார்.

அறிவு பல படிகளையுடையது. முதலில் ஸாதாரண, உலகத்தவர்களின் அறிவிருக்கிறது. இந்த அறிவுக்கு பலமில்லை. ஒரு அறையில் வைத்திருக்கும் விளக்கைப்போன்றதாம். பக்தனது அறிவு இதனிலும் பிரகாசமானது. வெளியிலுள்ள பொருள்களையெல்லாம் விளக்கிக் காட்டும் சந்திரனுக்கு அதை ஒப்பிடலாம்.

ஆனால், பகவானது அவதார புருஷனுடைய ஞானம் இன்னும் பலமானது. அதை ஸூரியனது அதிதேஜோமயமான காந்திக்கு ஒப்பிடலாம். அவ்வெளிச்சம் உள்ளும் புறமும் அதிஸூக்ஷ்மமான வஸ்துக்களையும் தெளிவாகக் காட்டும், அவனுக்குத் தெளிவில்லாதது ஒன்றுமில்லை. ஆத்மாவைப்பற்றின அதிகடினமான கேள்வி விஷயங்களையும், ஸுலபமான பிரபஞ்ச விஷயங்கள் போலத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறான், ஜீவனைக் குறித்த மிக விஷமமான காரியங்களைப்பற்றி அவன் சொல்லுவது குழந்தைகளுக்கும் எளிதில் விளங்கும். அவன், யுகக் கணக்காகச் சேர்ந்திருக்கும் அக்ஞான இருளைப்போக்கடிக்கும் ஞான பாஸ்கரன். (சூரியன்)



கடைசியாக சூரியனது ஒளியும், சந்திரனதொளியும் சேர்ந்ததுபோன்ற ஒரு ஒளி யிருக்கின்றது. சைதன்யதேவர் முதலியவர்களதுபோன்ற அபூர்வ ஞானம் அவ்வித ஒளியைப்போன்றது. அவர்களது ஞானம் அன்புடன் கலந்திருக்கின்றது. ஆகையால் சூரியனும் சந்திரனும் ஒரே ஸமயத்தில் உதித்தாற்போல அது ஒப்பற்றது.

ஸம்ஸாரத்தில் முழுகினவனுக்கு பிரம்மஞ்ஞானமுண்டாகாது. அவனுக்குக் கடவுளது காக்ஷி ஒருநாளும் உண்டாகாது. சேற்றினால் கலங்கின தண்ணீரில் சூரியனாவது, வேறு ஏதேனும் வஸ்துவாவது பிரதிபலிக்காதல்லவா?

இதற்குப் பரிஹாரமொன்றுமில்லையா? ஸம்ஸாரத்தில் அழுந்தினவனுக்குக் கதியொன்றுமில்லையா? ஆம், நிச்சயமாக உண்டு.

சேறு கலங்கின தண்ணீரில் ஒரு சிறு துண்டு படிக்காரத்தைப்போட்டால் தண்ணீரிலுள்ள அழுக்குகளெல்லாம் பாத்திரத்தினடியில் படிந்து தண்ணீர் தெளிந்து சுத்தமாகிறது. நித்தியாநித்திய வஸ்து விவேகமும், வைராக்கியமும் அவ்விதம் தெளிவிக்கும் வஸ்துக்கள். அவைகளால் ஸம்ஸாரி உலகப்பற்றை யிழந்து சுத்தியடைகிறான்.

முதல்படி:—ஸாதுஸங்கம்—புண்ணியாத்மாக்களுடன் சேர்ந்திருத்தல்.

இரண்டாவது படி:—சிரத்தை—ஆத்ம விஷயங்களில் நம்பிக்கையும் பிரியமும்.

மூன்றாவது படி:—நிஷ்டை—குருவினிடத்திலோ, பிரம்மத்தினிடத்திலோ மனதை அசையாது வைத்தல்.

ஸகுணப் பிரம்மத்திலோ, அல்லது, அனேக அவதாரங்களிலொன்றிலோ தனது இஷ்ட தேவதையினிடத்தில் மனதை நிறுத்தலாம். விஷ்ணு பக்தர்கள் தங்கள் இஷ்டதெய்வமாகிய ஸ்ரீகிருஷ்ணன் முதலிய ரூபங்களிடத்திலும் சாக்தர்கள்—சக்தி பூஜை செய்பவர்கள்— காளி, துர்க்கை என்று சொல்லப்படும் சக்தி ரூபங்களிடத்திலும் நிஷ்டையா யிருக்கிறார்கள்.

நான்காவதுபடி:—பாவனை—கடவுள் நினைவு வரும்பொழுதே பேச்சிழந்து வியப்பினால் திகைத்தல்.

ஐந்தாவது படி:—மஹாபாவனை—இதில் மேற்சொன்ன அன்பும் வியப்பும் கடவுளது தரிசனத்தினால் அதிகரித்து ஸகிக்க முடியாத நிலைமைக்கு வந்துவிடுகிறது. அப்பொழுது பக்தன் பைத்தியக்காரனைப்போல் ஒரு ஸமயம் நகைக்கிறான்; மற்றொரு ஸமயம் அழுகிறான். அவன் சரீரம் தன் வசமற்றுப் போகிறது; இந்நிலைமையை இந்திரியங்களை ஜயிக்காத ஸாதாரண மனிதர்கள் எட்ட முடியாது. உலக ஸம்ரக்ஷணார்த்தம் அவதாரம் செய்யும் கடவுளின் அம்சர்களான மஹாபுருஷர்கள்தான் இந்நிலையை அடைவார்கள்.

ஆறாவது படி:—பிரேமை—இது மஹாபாவனையுடன் கூடவே உண்டாகிறது. கடவுளை யடைந்த பிறகு கடவுளிடமுண்டாகும் அதிதீவிரமான அன்பு. இதுதான் எல்லாவற்றிற்கும் மேலானது. இந்நிலைமை அடைந்ததற்கு இரண்டு அடையாளங்களுண்டு. அவையாவன: முதலில் இவ்வுலகத்தை மறத்தல்; இரண்டாவது, தன்னையும் தன் சரீரத்தையும் மறத்தல்.

இந்த நிலைமையை யடைந்த சைதன்னிய தேவர் கடவுளின் மீதுள்ள அன்பின் மிகுதியால் தன்னையும், தானிருக்குமிடத்தின் தன்மையையும் அடிக்கடி மறந்தார். தன் முன்னின்ற காட்டைப் பார்த்ததும் தன்னை மறந்து அதைப் பிருந்தாவனமென்று அழைத்தார். பூரியில் (ஜகந்நாத க்ஷேத்திரம்) ஸமுத்திரத்தைப் பார்த்தவுடன் அதை யமுனை என்று நினைத்தார். இந்நிலைமையில் அவர் கடலில் விழுவார்; இரண்டு மூன்று ஸமயங்களில் அவர் இறந்து விட்டதாக அவரது நண்பர்களும் சிஷ்யர்களும் நினைத்தார்கள். இந்நிலையில் பக்தன் கடவுளை யடைந்து நேரே தரிசிக்கிறான். அத்திவ்விய தரிசனத்தினால் ஜன்மஸாபல்யத்தை யடைகிறான்.

இச்சமயத்தில் பகவான் அங்கிருந்தவர்களை நோக்கி "உங்களுக்கு ஏதாவது கேட்கவேண்டி யிருந்தால் கேளுங்கள்" என்றார். ஆயினும் ஒருவரும் ஒன்றும் கேட்கவில்லை. பகவான்மேலும் சொல்லுகிறார்:—

திடீரென்று ஞானத்தை உண்டு பண்ணமுடியாது. அது காலக்கிரமத்தில் தான் உண்டாகும். ஜ்வரம் கடுமையாயடிக்கிறதென்று நினைத்துக்கொள். அந்த ஸமயத்தில் டாக்டர் கொயினா (quinine) கொடுக்கமாட்டார். அது பயன் படாதென்று அவருக்குத் தெரியும். முதலில் ஜ்வரம் நோயாளியை விட்டு அகலவேண்டும். அது காலக்கிரமத்தில் தான் நடக்கும். பிறகு கொயினா பிரயோஜனப்படும். சில ஸமயம் கொயினாவோ, வேறு மருந்தோ ஒன்றும் கொடாமலே ஜ்வரம் போய்விடுகிறது. ஞானத்தைத் தேடுபவனது விஷயமும் அவ்வாறே. அவன் பிரபஞ்ச விஷயத்தில் முழுகியிருக்கிற வரையில் தத்துவ போதனை பிரயோஜனப்படாது. இவ்வுலக விஷயங்களை அனுபவிக்கும்படி கொஞ்சகாலம் அவனை விட்டு வைக்கவேண்டும். அவனுடைய உலகப்பற்றுக்கள் அதினால் நாளுக்கு நாள் குறைந்து அழிந்து போகின்றன. அப்பொழுது தான் அவன் தத்துவபோதனையினால் பிரயோஜனமடைவதற்குத் தருந்தகாலம். அது வரையில் அவனுக்குச் செய்யும் உபதேசங்களெல்லாம் வீணே.

அநேகர் என்னிடம் வருகின்றனர். அவர்களில் சிலர் நான் சொல்வதைக்கேட்க ஆவலாயிருப்பதைப் பார்க்கிறேன். ஆனால் ஒன்றிரண்டு பேர்கள் என் முன்னிருக்கப் பிடிக்காமல் தங்கள் சிநேகிதர்களிடம் "நாம் போகலாம், நாம்போகலாம்" என்றும், "ஸரி நீங்கள் வேண்டுமானால் இருங்கள்; நாங்கள் படகில்போய் உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம்" என்றும் கர்ண மந்திரம் ஓதுகிறார்கள்.

'பக்கா (கெட்டி) செங்கற் சுவரில் ஆணியடிப்பது கஷ்டம். சுவரைத் துளைப்பதற்குள் ஆணியின் தலை உடைந்து போகும். முதலையை வாளினால் வெட்டினால் அதற்கு ஒருவித காயமும்படாது. ஆகையால் இவ்விஷயங்களில் காலத்தின் உதவி அவசியமானது. சரியான காலத்தில் தான் பரமார்த்த ஞானம் உண்டாகும். குரு ஒரு நிமித்த மாத்திரமே.

ஸங்கம் கலைந்தது.

பகவான் (ம—வைப்பார்த்து):—விஷயமென்ன வெனில், ஞானத்திற்கும் முக்திக்கும உண்டாகும் ஆசை ஒருவன் பூர்வ ஜன்மத்தில் செய்தகர்மத்தினால் உண்டாகிறது.

சிஷ்யன்:—ஆம், ஸ்வாமி, தன்னையறிவது மிகவும் கடினம். நமக்கு இப்பொழுது எப்படித் தோற்றுகிறதோ அப்படியே யிருப்பதாக நினைக்கிறோம். இதற்கு முன் நமக்கு நூறு ஜன்மங்கள் இருந்திருக்கலாம். நாம் ஒரு வீட்டின் தளத்தில் நடக்கும் பொழுது, அது எவ்விதம் செய்யப்பட்டிருக்கிறதென்பதையும், அதன் கீழே என்னென்ன விருக்கிறதென்பதையும் கவனித்துப் பார்க்கிறோமா?

பகவான் சிஷ்யனைப்பார்த்துப் புன்னகை செய்து, ஆசனத்தைவிட்டெழுந்திருக்கிறார். தமது அறையின் மேற்கு வாசற்படிக்கடுத்த தாழ்வாரத்துக்குவந்து விரைவாக மறைந்து கொண்டிருக்கும் சூரியனையும், தன் முன்னிருக்கும் புண்ணிய நதியின் தீர்த்தத்தையும் பார்க்கிறார்.

# ஸ்ரீ கிருஷ்ண விஜயம்

ஓம் நமோ பகவதே ஸ்ரீ கிருஷ்ணாய

இவ்வுலகில் நம்மெல்லோருக்கும் சுகத்துக்குப்பின் துக்கமும் துக்கத்திற்குப்பின்னர் சுகமும் மாறிமாறி வந்து கொண்டிருக்குமே அல்லாது, சுகமோ அல்லது துக்கமோ சாச்வதமாயிராது. ஆயினும் ஒருவன் சுகத்தை யனுபவிக்கும் போது தனது சுகத்திற்கு முடிவேயில்லை யென்றும் துக்கத்திற்காளான பொழுது தன் துக்கம் எப்போதும் நீடித்திருக்குமென்றும் நினைப்பது ஸஹஜம். இது பற்றியே துக்க ஸாகரமான இப்புவியிலுள்ள ஸாமான்ய மனிதர் ஒவ்வொருவரும் தமக்குத்தெய்வகதியால்உண்டாகும் அற்ப சுகத்தை மிகப்பெரிதாயும் சாச்வதமாயும் எண்ணி அதை யதேச்சையாய் அனுபவித்து மனஸ்திருப்தி அடைகின்றனர். இதுபற்றியே அவருக்குத் தம்பிராணனிடம் அமோகமான ஆசையுண்டாகின்றது. இக்காரணத்தினாலேயே கானல் நீர் போல் நிச்சய நிலைகளற்றவையும் க்ஷணபங்குரமும் அநித்தியமுமான இந்திரிய சுகங்களில் நியாயமாய் வெறுப்புண்டாவதற்கு மாறாக ஸர்வஜனங்களுக்கும் அளவற்ற ஆனந்தம் தோன்றுகிறது. இக்காரணத்தினாலேயே பெருந்துக்கத்தை அனுபவிக்கும் ஒவ்வொருவனும் தன் கஷ்டத்துக்கு அந்தமே இல்லை என்று நினைத்து மனச்சாந்தியற்று நிராசையை அடைகின்றான். மனிதனது ஜீவிதத்தை ஆளும் இந்த சுகதுக்கங்களைச் சமமாய்ப் பாவிப்போன் ஞானியொருவனே. சாமான்ய மனிதனோ, துக்கம் நிவர்த்தியாகிச் சுகம் அனுபவிக்க இருக்கும்போதும் அவ்வாறே தன் சுகம் ஒழிந்து துக்கம் மேலிட்டு வரும்போதும் இவ்விரண்டு ஸமயங்களில் மாத்திரமே தன்வியவஹாரங்களின் வாஸ்தவ நிலையை அறிகிறான். அக்காலங்களில் அவன் தனக்கு இனி என்ன நேருமோ எனக்கவலைமிக லோகசுகங்கள் முற்றிலும் அஸ்திரம் என்று நினைத்து அவற்றைத்துறக்கவேணும் என்று க்ஷணகாலம் விரும்புகிறான். ஆனால் அவ்விருப்பம் க்ஷணகாலம்தான் அவனிடம் தென்படுகிறது. இதற்குக் காரணம் அவனது சுகத்துக்கும் துக்கத்துக்கும் நடுவில் இடைகின்ற காலமும் மிக அல்பம் என்பதே.

இவ்விதமான அவஸ்தை புதிதாய் மணம் செய்துகொண்ட இரண்டு ஸதிபதிகளுக்கு அகஸ்மாத்தாய் நேர்ந்தது. அவ்விருவரும் தமக்கு இக்கதி ஸம்பவிக்கும் என்று கனவிலும் நினைத்தவர்

அல்லர். அவரிடம் ஸரளஸ்வபாவமும், ரூபமும், பெருந்தன்மை, காம்பீரியம் இவ்விரண்டுடன் ஒத்து விளங்கின. அவர் மார்தவமும் ஸௌகுமார்யமும் உடையவராயினும் தைர்யத்திலும் மனோநிச்சய சக்தியிலும் இணையற்றவராயிருந்தனர். இந்தத் தம்பதிகளில் மணமகன் பெயர் வஸுதேவன். அவரது பாரியாள் தேவகி. இவ்விருவரும் ரத்னாபரணங்களால் முற்றிலும் அலங்கரிக்கப்பட்டவராய் ரதத்தில் ஏறி அநேகமாயிரம் பரிஜனங்கள் கண்ணைப்பறிக்கவல்ல உடுப்புகள் அணிந்து, தங்கம், வெள்ளி, வைரம், கெம்பு முதலியவற்றினால் இழைத்த அநேக மணச்சீதனங்களைக் கையில் ஏந்தி அழகிய ரதங்களையும் தங்கத்தினால் சேணமிட்ட உத்தம அசுவங்களையும் மத்தகஜங்களையும் முன்னிட்டுக் கொண்டு தமக்கு முன்னும் இருபக்கமும் சூழ்ந்துவர, அக்காலத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றுத் தமதரண்மனையை நோக்கிச் செல்லாநின்றனர். இவரது ரதஸாரதியோ ரூபத்தில் இவர்க்கொப்பானவன். இதுவல்லாது, அங்கு இருந்தவர்கள் எல்லோரைக் காட்டிலும் மிகச்சிறப்பாய் ஆடையாபரணம் அணிந்து பலவிதமான ரத்னங்களாற் செதுக்கிய ஓர் தங்கக்கிரீடம் தன் சிரோபாகத்தை அலங்கரிக்க மிகவும் கம்பீரமான பார்வையுடன், தேரை ஓட்டிச்செல்லும் இச்சீமான் அவ்விராஜ்யத்தை ஆளும் அரசனான கம்ஸனே எனப் பார்ப்போர் எளிதிற் சொல்லக்கூடும். அக்காலத்தில் அரசாண்டு வந்த மன்னர்களுக்குள் கம்ஸன், தயை, தாக்ஷிண்யம் அற்றுக் குடிகளை ஹிம்ஸித்துக் கொடுங்கோல் மன்னன் எனப்பெயர் பெற்றவன். அவனது வார்த்தைக்கு அன்னியதா சொல்லும் தைரியம் ஒருவருக்கும் இல்லை. அவன் பெயர் உச்சரித்த மாத்திரத்தில் ஸாது ஜனங்களும் அடக்கமுள்ளோரும் பயந்து நடுநடுங்குவர். தேவகியென்பவள் இவனது அருமைச் சகோதரி. அப்பெண்ணினிடம் இவனுக்குள்ள ஸஹோதர வாஞ்சை இவ்வுலகில் மிகவும் காணவரியது. இக்காரணம் பற்றியே இன்று தன் உயிருக்குச்சமமான தன் தங்கையை அவள் கணவன் வீட்டுக்கு அனுப்பும்போது ரதத்தைத் தானேயோட்டித் தன் விசுவாஸத்தை ஒரு விதமாய்க் காட்டவேணும் என்ற பேரவா கம்ஸனுக்குண்டாகியது.

தேவகி வஸுதேவர்களது ஸந்தோஷத்திற்கு அளவில்லை. அவரது பாக்கியம் என்ன என்று சொல்லலாம். தேசம் எங்கும் எவனைக்கண்டால் அவரவரும் ஒடுங்கி நடுங்குவரோ அப்பெயர்க்கொத்த கம்ஸனே தமக்குச் சாரதியானான் என்னும் எண்ணமும் அவர்க்குக் குதூஹலத்தை உண்டு பண்ணியது. புஷ்பங்களின் நறுமணத்துடன் கூடிய மந்தமாருதமும் மனத்தை ரஞ்சிக்கச் செய்தது. சுற்றிலுமுள்ள மரங்களின் கிளைகளில் பக்ஷிகள் மிகவும் மதுரமாய்ப்



பாடிக்கொண்டிருந்தன. சூரியோதய காலமாகியும் அவனது சுகோஷ்ணமான கிரணங்கள் இரவெல்லாம் சோம்பிக் கிடந்த ஜந்து ஜாலங்களின் அவயவங்களுக்குப் புதிய சுறு சுறுப்பும் அவற்றின் மனத்துக்கு ஆனந்தமும் விளைவித்தன. எப்புறம் பார்த்தபோதிலும் ஒவ்வொரு வஸ்துவும் ஸந்தோஷகரமாகவே இருந்தது.

இப்படியிருக்க, அகஸ்மாத்தாய்ப் பிரகிருதியின் தோற்றம் முற்றிலும் மாறிற்று. பறவைகள் தங்கள் கீதங்களை நிறுத்திவிட்டன. சூரியனை ஓர் மேகம் மறைத்தது. இதுகாறும் ஸுககரமாய் வீசிய மந்தமாருதம் ஓர் பெருங்காற்றாய் மாறி மண்ணையும் தூசியையும் எல்லவர் கண்களிலும் அடித்தது. அண்டங்காக்கைகள் கர்ணகடோரமாய்க்கத்த ஆரம்பித்தன. இவையன்றி இன்னும் சில அபசகுனங்கள் ஸமீபத்தில் இவ்வதூவரர்க்கு ஏதோ அசுபங்களை ஸூசித்தன. அவ்வூர்வலத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் இதுவரையிலும் பயம், துக்கம் என்பவற்றைச் சற்றேனும் அறியாமல் மிகவும் உத்ஸாஹத்துடன் போய்க்கொண்டிருந்தனர். இப்பொழுதோ அவர் எல்லோரது ஹிருதயத்திலும் ஓர் நிஷ்காரணமான பயம் திடீரெனத் தோன்றி அவர்களை விசனத்துக் குள்ளாக்கியது. அக்கணமே ரதஸாரதியான இராஜனைக் குறித்து ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்தில் உண்டாகிப் பின்வருமாறு கூறியது. "அடா! புத்திஹீனனே! நீ யாருக்கு அவ்வளவு குதூஹலத்துடன் ஸாரத்தியம் செய்துகொண்டு போகிறாய்? உன் தங்கையின் அஷ்டமகர்ப்பத்தில் உள்ள சிசு உன்னைக்கொல்லும் என்பது நீ அறியாயா?" என்னும், கம்ஸன் அங்கிருந்தவர்கள் திடுக்கிடச் சரேலெனத் தேரினின்றும் துள்ளிக் கீழே குதித்துத், தன் உடைவாளைக் கையிற்பிடித்துத் தன் தங்கையைக் கொல்லுவதற்கு ஸாஹஸித்து, அவளருகிற் சென்றான். ஆனால் வஸுதேவர் அவனுக்குக் குறுக்கிட்டுத் தன் காதலியின் உயிரைக் காப்பாற்றும் நிமித்தம் அவன் காலில் விழுந்து இவ்விதம் சொல்லலுற்றார். "ஓ கம்ஸா! உன் சாவுக்கு மூலம் தேவகியின் எட்டாவது குழந்தை அல்லாது தேவகியல்ல. பின்னர் உன் மரணம் நேரும் விதத்தை யவள் அறிந்தவள் அல்லள். ஆகையால் அவளை நீ கொல்லவேண்டாம். ஆயினும் உனக்கு அவள் ஸந்ததியினின்றும் பயம் இருப்பதினால் அவளுக்குண்டாகும் ஒவ்வொரு சிசுவையும் அது பிறந்த உடனே உன்கையிற் சேர்த்து விடுகிறேன். நீ அதை யாது செய்திடினும் செய்துகொள். இது ஸத்தியம்" என்று வாக்குத்தத்தம் செய்து வஸுதேவர் கம்ஸனை மிகவும் வணங்கி வேண்டிக்கொண்டார். கம்ஸனும் இவர் சொல்வது யுக்தமென நினைத்து அப்படியே ஆகட்டும் எனச்சொல்லித் தேவகியைக் கொல்லாமல் விட்டுத் தன் மாளிகையை நோக்கித்திரும்பினான். வஸுதேவனும் தேவகியும் அதிக-கேதத்துடன் கண்ணீர் விட்டுக்

கொண்டு பரிஜனங்களுடன் கோகுலத்தை நோக்கிச் சென்றனர். ஊர்வலத்திற் சேர்ந்தவர் எல்லோரது துக்கத்திற்கும் அளவில்லை. கோகுலம் சேர்ந்ததும் வஸுதேவர் தன் கிருகத்தின் முன் ரதத்தினின்றும் இறங்கினார். அப்போது வஸுதேவரது நண்பனும் கோபாலர்களின் அரசனுமான நந்தன் தனது மித்திரன் புதிய மணமகளுடன் இருப்பதையும் அவ்விருவரது ஆனந்தத்தையும் பார்க்க ஆசை கொண்டங்கேகியவன் அவர் அழுவதைப் பார்த்து அதின் காரணம் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் அவனது ஆனந்தம் முற்றிலும்போய் அவன் மனதில் துக்கம் மிகவும் மூண்டியது. ஆயினும் நந்தன் தன் நண்பனிடம் பகவத் ஸங்கல்பத்தைப்பற்றிக் குறைப்படலாகாதெனச் சொல்லி அவரைத் தேற்றலும் வஸுதேவர் புத்திமானாகையால் நந்தன் சொன்னதை யங்கீகரித்து ஈசனது விருப்பத்துக்குட்பட்டுத் தைரியம் வகித்தார்.

---

## பால்கறந்தால் பாம்பு இரை யெடுக்காது.

பம்பாயிலுள்ள பாரேல் லேபோரேடரியில் பாம்பின் விஷமெடுக்க வென்று பாம்புகளைப் பிடித்து வளர்த்து வருகிறார்கள். பாம்பினின்றும் பால்கறக்க, ஒரு பெரிய ஸர்ப்பத்தைக் கொண்டுவந்து அதைக் கூட்டைவிட்டு வெளியேற்றியதும் அது படமெடுத்து ஆடும்பொழுது அதற்காகவென்று பழக்கப்பட்ட பிடாரன் ஒரு கோலினால் அதைக்கீழே அழுத்திப் பிடித்துக்கொண்டு அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு ரப்பர் மூடியிட்ட ஒயின்க்ளாஸ் ஒன்றை அதன் வாயின் எதிரேகொண்டு போய்த்திணிக்க, ஸர்ப்பம் சீறி அந்த ரப்பரைக் கடிக்கிறது. உடனே ஒரு உத்திரணி விஷம், பால்கறந்தாப்போல், கிளாஸில் விழுகிறது. இப்படி வேண்டிய விஷம் கறந்தபின் அதை ஒரு சீஸாவில் அடைத்து ஹிமாலயத்திலுள்ள காஸௌலி லேபோரேடரிக்கு அனுப்பிவிடுகிறார்கள். அங்கே அந்த விஷப்பால் பாம்பு கடிக்கு ஔஷதமாய் ஒருவித 'ஸீரம்' செய்ய உபயோகிக்கப்படுகிறது. இப்படி விஷம் கறக்கப்பட்ட பாம்பானது பின்னர் இரை யெடுப்பதில்லையாதலால் அதற்கு கோழிமுட்டையைப் பாலில் கலந்து சேர அடித்துப் புகட்டுவது வழக்கம். தன் விஷமாகிய வீரியத்தை யிழந்த ஸர்ப்பம் பசிதாஹம் பாராட்டாது இரையெடுப்பதில்லை.

பாம்புக்கு விஷம் எப்படியோ அப்படி ஜீவனுக்கு பிந்து வீரியத்தைக் கொடுப்பதாம். "ஆதியாயநின்ற அறிவு" முதல் தேஹத்தின் தத்துவங்களெல்லாம் "சேர்ந்தாய ஒன்று" "விந்து" என்று ஔவையார் சொல்லியிருக்கிறார். ஆதியாய நின்ற அறிவாம் பராசக்திக்குக் கடைசியாய் விளையும் விந்து தர்ப்பணத்தால் சந்துஷ்டியதிகம். இது சக்திக்கும் வித்துக்குமுள்ள ஆகர்ஷணசக்தியைக் காட்டுகிறது. வித்திலே சக்தியிருப்பதால் வித்தினால் தர்ப்பணம் செய்தால சக்திக்கு சந்துஷ்டி யென்பது சகஜந்தானே. ஆதியாயுள்ள சக்தியும் அந்தமாயுள்ள விந்துவும் போக நடுவிலுள்ள தொன்றுண்டு. அதுதான் "கிலகம்" என்று சொல்லும் மூளை. வித்தில் ஜலம் வார்த்தால் அதிலுள்ள சக்திவெளிப்படுகிறது: மூளையென்னும் விருத்தி லபிக்கிறது. அதை (வித்தை) வறுத்துவிட்டால்



மூளையும் மூளைக்கும் சக்தியும் மறித்துப்போகிறது. இதேபோல, ஜீவனாகிய மூளைக்கு அஹம்=பீஜம்; ஸ:=சக்தி. அஹம் என்கிற பீஜம் பிராணன் என்கிற ஜலம் பட்டால் "அஹங்காரம் என்கிற மூளைவிட்டுச் சீறிக்கிளம்பும். அஹத்திலிருந்து அஹங்காரமாகச் சீறி யெழுந்த மூளையானது (ஸம்ஸார விருத்தி), விஷம் கறக்கப்பட்ட பாம்புபோல் அஹங்காரமடங்கக் குளிர்ந்துபோனால் விஞ்ஞான விருத்தியோடு ஸம்ஸார விருத்தியும் அடங்கிப் போம். இந்த விருத்திகளிரண்டும் அடங்கின் துக்கநிவர்த்தி யுண்டாகி கோபதாபம் முதல் பசிதாஹங்கள் ஈறாக எல்லா சேஷ்டைகளு மடங்கிப் போம். சேஷ்டை யடங்கினால் தேஹம் நஷ்டமாகுமாதலால், தேஹஸம்ரக்ஷணைக்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்போல் பசிதாஹக்கொடுமை பொறுக்காது செய்ய நிமித்தமில்லையானாலும் ஈஸ்வராராதனமாக நடத்திவர வேண்டியது.

> "உடம்பினை யிழுக்கென்றிருந்தேன்
> உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
> உடம்பிலேயுத்தமன் கோயில்கொண்டானென்
> றுடம்பினையானிருந் தோம்புகின்றேனே."

என்பது திருமூலதேவர் திருமந்திரம்.

இப்படி நடத்திவந்தால் ஜீவாஹங்காரம் நசித்தவிடத்தில் பராஹங்காரம் தோன்றி அதுவும் பரமவியோமாகாரமாக விளங்கும். ஆதலால்தான் "அஹம் சீறியே குளிர்ந்தபின் எப்படியிருந்தாலென்?" என்று ஸ்வானுபவச் செல்வியாம் ஆவுடையாரம்மாள் பாடியிருக்கிறார்.

விஷத்தைக் கக்கின பாம்பு இரையெடுக்காததுபோல, அஹங்காரத்தை யிழந்த புருஷன் பிரவிருத்தி மார்க்கத்தில் பிரவேசியான். ஆனாலும் அவன் கர்மசேஷத்தால் பிரவிர்த்திக்க நேரிட்டாலும் அதன் பலாபலனைப் புசிக்காமல் கர்த்தா போக்தா வென்கிற நினைவிழந்து நிஷ்காமியமாகவே கர்மத்தைச் செய்து நைஷ்கர்மசித்தி பெற்று விளங்குவான். நைஷ்கர்மசித்தி பெற்றவன் "எப்படி யிருந்தாலென்?" என்று ஆவுடையாரம்மாள் பல்லவிபாடி யிருப்பதின் கருத்து இதுவே. இப்படி யஹங்காரத்தையடக்குவதற்கு "நாதப்பால் கறக்கிறது" என்று சொல்கிறது. "பூத முதலாகவே நாதபிரியந்தமும் பொய்யென்றெனைக்காட்டி" யென்றிருப்பதால் தத்துவங்களுக்கெல்லாம் மேலான நாதத்தைப் பால்கறந்து விட்டால், தத்துவவிருத்திகளெல்லாம் ஓய்ந்துபோம். தத்துவப்பேய்களின் தொந்தரவு இல்லையாகில் தத்துவங்களை விட்டு தத்துவனோ டைக்கியமாயிருக்கலாம். இதற்குச் சாதனம் மௌனமொன்றே. மௌனசாதனம் சித்திபெற்றால் ஞானமென்பது தானே கைகூடும். ஆதலால்தான் "மோன மென்பது ஞான வரம்பு"—என்றார்.

> "சாத்திரமோதும் சதுர்களை விட்டு நீர்
> மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்
> பார்த்த வப்பார்வை பசுமரத்தாணிபோல்
> ஆர்த்த பிறவி யகலவிட் டோட்டமே!"

என்பது திருமூலர் உபதேசம்.

—விவேகசிந்தாமணி.

# பக்தி

(ஸ்ரீமத்ராமக்ருஷ்ணாநந்த ஸ்வாமிகள்)

'வேதாந்த'மானது சிறிதுகூடப் பிசகேயில்லாத உண்மையென்று அத்வைதிகளும் ஸரி, த்வைதிகளும் ஸரி, ஒப்புக்கொள்ளுகின்றனர். அத்வைதி வேதாந்தத்தை ஆராய்ந்து பகுத்தறிய வேண்டுமென்னு மெண்ணத்துடன் நோக்குகிறான்; த்வைதியோ அதை மனஸால் போற்ற வேண்டுமென்னு மெண்ணத்துடன் நோக்குகின்றான். இருவரும் பயபக்தியுடன் ஈச்வரனின் பாதாரவிந்தங்களைச் சரணமடைகின்றனர். முற்கூறப்பட்ட மனிதன் 'பயம்' என்று ஒரு அவஸ்தையில்லையென்றும் அது நம்முடைய அஞ்ஞானத்தினால் கல்பிக்கப்பட்டதென்றும் நினைக்கிறான். த்வைதியோ 'பயம்' என்பது இருக்கின்றதென்று ஒப்புக்கொண்டு ஸர்வசக்தியுள்ள ஈச்வரனுடைய உதவியினால் அதினின்றும் விடுபட விரும்புகின்றான். பின்சொல்லப்பட்டவர்களால் பக்திமார்க்கம் அநுஸரிக்கப்படுகின்றது. இந்த மார்க்கம்தான் ஸுலபமானது; ஆகையால் அநேகரால் அநுஸரிக்கப்படுகின்றது. ஏனெனில், நேசிப்பதும் வெறுப்பதும், வாதித்து ஆராய்ந்தறிவதைக் காட்டிலும் மிகவும் ஸுலபமானது. ஆதலால் பக்திமார்க்கமானது எல்லாக் காலங்களிலும், ஸகல ஜனங்களாலும் போற்றப்படுவதற்காக ஏற்பட்டிருக்கின்றது.

அதனுடைய தத்துவ சாஸ்திரமானது மிகவும் ஸுலபமானது. எல்லாம் சக்தியற்றதென்னும் கொள்கையிலிருந்து அது ஆரம்பிக்கின்றது. நம்மில் ஒவ்வொருவனும் தான் சக்தியற்றவனென்று ஒப்புக்கொள்ளக் கட்டுப்பட்டவனாயிருக்கிறான். தன்னுடைய துர்பலமான நிலைமையிலிருந்து தானே விடுபட்டுக்கொள்ள முடியாது. அவனுடைய மனோபாவமானது அவனுடைய சக்தியற்ற நிலைமையைக்கண்டுகொள்ளுகின்றது; தன்னுடைய நிர்பலத்தைத் தரத்த அவன் சக்தியற்றவன். அவன் யாருடைய உதவியை நாடவேண்டியவனாயிருக்கிறான்? அவனை எல்லா நிர்பாக்கிய ஸ்திதியினின்றும் யாரால் காப்பாற்ற முடியுமோ அவரிடம்தான் அவன் உதவியை எதிர்பார்க்கவேண்டும். புவியில் வாழும் எந்தப் பெரியமனிதனாலும் அவனை விருத்தாப்பியம், வியாதி, மரணம் என்னு மிம்மூன்றினின்றும் காப்பாற்ற முடியாதென்பதை யவன் தெரிந்துகொள்ளுகிறான். ஆதலால் அவன் ஸர்வசக்திவாய்ந்தவரும் தயாநிதியுமான ஈச்வரனை உதவிக்காக எதிர் பார்த்து, அவருடைய பாதங்களைச்



சரணமடைகின்றான். இதுதான் பக்தியின் தத்துவம். நாமெல்லோரும் ஈச்வரனையடையவேண்டும். அவ்விதம் செய்வதற்கு நாம் இந்த ஜகத்தை விட்டு அப்பாற் செல்லவேண்டும். ஏனெனில் இவ்வுலகிலிருப்பதால் நாம் எல்லாவற்றின் சிருஷ்டியையும் காக்கவேண்டியதாயிருக்கின்றது. அப்படிச்செய்வதனால், நாம் எவற்றை நேசிக்கின்றோமோ, அவற்றின் ரூபங்களில் ஈடுபட்டு சிருஷ்டியின் வலையில் மாட்டிக்கொள்ளுகிறோம். சிருஷ்டியைக் கடப்பதற்காகத்தான், பக்தர்களெல்லோரும் ஈச்வரனைப் பஜனம் செய்கின்றனர்.

மேற்சொல்லப்பட்டவிதமான பக்தியானது நிஜமான பக்தியல்லவென்று கண்டுகொள்வது மிகவும் ஸுலபம். ஈச்வரன் எல்லாலோகங்களையும் சிருஷ்டிக்கின்றார், ரக்ஷிக்கிறார், ஸம்ஹரிக்கிறார் என்று எல்லாமதங்களும் கூறுகின்றன. ஈச்வரன் ஸர்வசக்தி வாய்ந்தவராயும், தயாநிதியாயுமிருப்பதாலும், நம்முடைய சக்தியற்ற நிலைமையிலிருந்து நம்மைக் காப்பாற்றக்கூடியவராயு மிருப்பதாலும் நாம் அவரைப் பூஜிக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது! இது பலத்தை யபேக்ஷிப்பதாகும்; பலத்தை யபேக்ஷிக்கிறவனுடைய பக்தி எவ்விதம் நிஜபக்தியாகும். கோடீச்வரன் அவனுடைய தனத்தின் பொருட்டு விரும்பப்படுகிறான். அவ்வித விருப்பம் அவனைப் பற்றியதல்ல; அவனுடைய தனத்தைப் பற்றியது. அவனுடைய திரவியமழிந்தவுடன் அவனை நேசிப்பவரொருவருமில்லை. பராக்ரமசாலியான மனிதனை, அவனுடைய பராக்ரமத்தின் பொருட்டு ஸ்நேஹிக்கின்றார்கள்; அவன் பொருட்டல்ல. இம்மாதிரி நேசம் நேசமென்று கூறப்படத்தகுந்ததல்ல. தான் விரும்புகிற வஸ்து மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்த பொழுதுங்கூட அதை விரும்புவதே நிஜமான நேசமாகும். ஸீதாபிராட்டியாருக்கு ஸ்ரீ ராமனிடமிருந்த அன்பு அவர் காட்டிற்கனுப்பப்பட்டபோது சிறிதும் குறையவில்லை; அநேகவாயிரம் மடங்கு அதிகரித்தது. ஈச்வரன் ஸர்வசக்திவாய்ந்தவர்; அவரால் நம்மைக் காப்பாற்ற முடியுமென்று பலத்தை யெதிர்பார்த்து அவரைப் பூஜிப்பவன் நிஜபக்தனல்ல. மனிதன் துர்பலன்; மிகவும் நிர்பாக்கியன்; தன்னைத்தானே சரியாய் நடத்திக்கொள்ளும் சக்தியில்லாதவன்; ஆதலால் அவன் ஈச்வரனால் நடத்தப்படவேண்டியவன். இவ்விதமாக நாம் ஈச்வரனைப் பூஜிக்கவும், அவரைத் தியானிக்கவும், அவருடைய திருநாமங்களை யுச்சரிக்கவும் கற்றுக்கொள்ளுகிறோம்.

லோகானுக்ரஹார்த்தமாய் எழுந்தருளிய பரமாசாரியர்களுள் ஒருவரான பகவான் ஸ்ரீராமக்ருஷ்ணபரமஹம்ஸதேவர் "ஈச்வரனுடைய மஹிமை அவருடைய ஸர்வசக்தியிலும், மஹத்தான ஸ்வரூபத்திலும், தட்டுதலில்லாத மனோநிருப்பத்திலும் பொருந்தியிருக்கவில்லை; தன் பக்தனுக்குச் சமமான அல்லது தாழ்ந்த நிலையில் தான் வந்து கடாக்ஷிப்பதிலே தான்" என்று திருவாய்மலர்ந்தருளுவது வழக்கம். அரூபியான ஈச்வரனின் மனுஷ்ய அவதாரமான ஸ்ரீகிருஷ்ணபகவான்,

"எந்த மனிதர்கள், வேறொன்றையும் நினைக்காமல் என்னை மட்டுமே பூஜித்து த்யானிக்கிறார்களோ, அப்பேர்ப்பட்டவர்களுடைய யோகக்ஷேமத்தை நான் வஹித்துக்கொள்ளுகிறேன் (IX-22)

"ஹே பார்த்த! பாபி, ஸ்த்ரீ, வைச்யன், சூத்திரன்—இவர்களும்கூட என்னையே சரணமடைவார்களாயின், மேலான கதியையடைகின்றார்கள், (IX-32)

"மிகவும் துர்நடத்தை யுடையவன்கூட, பூர்ணபக்தியுடன் என்னைப் பஜிப்பானேயாயின், ஸாது என்று கொள்ளப்படவேண்டும்; ஏனெனின், அவன் சரியான காரியத்தைச் செய்வதாகத் தீர்மானித்துவிட்டான் (IX-30)

"சீக்கிரமாகவே அவன் தார்மிகனாகி, அழிவில்லாத சாந்தியையடைகின்றான்; ஹே! கௌந்தேய! என்னுடைய பக்தன் அழிந்து போகிறதில்லை யென்று நீ நன்றாயறிந்துகொள் (IX-31)" என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

நாம் ஈச்வரனை எவ்வாறடைவது?

"எவன் பக்தியுடன் பத்ரம், புஷ்பம், பழம், அல்லது கொஞ்சம் ஜலமாவது கொடுக்கிறானோ, அவனால் கொடுக்கப்பட்டவற்றை நான் அங்கீகாரம் செய்கிறேன்" (IX-26). எப்படிக் கொடுக்கப்படவேண்டும்?—பக்தி பூர்வமாய். இந்த ஒரு நிர்ப்பந்தத்தின் மேல் தான் ஈச்வரன் நம்மால் கொடுக்கப்பட்டவற்றை அங்கீகரிப்பார். ஆனால் தனக்குச் சொந்தமில்லாத பொருளை ஈச்வரனுக் கர்ப்பணம் செய்தல் மனிதனுடைய அஹங்காரத்தைக் காட்டுகின்றதல்லவா? எல்லா வஸ்துக்களும் ஈச்வரனுக்குச் சொந்தமானவை யல்லவா? பத்ரம், புஷ்பம், சந்தனம், நம்முடைய சரீரங்கள், இந்த அண்டமுழுவதும் ஈச்வரனுக்குரிமையானவையல்லவா? இருந்தபோதிலும் பக்தியுடன் அர்ப்பணம் செய்யப்பட்டால் இவைகளை நாம் ஈச்வரனுக்கு ஸமர்ப்பிக்கலாம். ஈச்வரனுக்கு சொந்தமில்லாதபொருள் ஒன்றிருக்கின்றது—பக்தி. இந்த விச்வாஸத்தை நான் எங்கு வேண்டுமோ செலுத்தலாம்—மனைவியிடமோ குழந்தைகளிடமோ மற்றுமுள்ள லௌகிகவிஷயங்களிலோ நாம் அன்பைச் செலுத்தலாம். அபாத்ரங்களிடம் செலுத்தப்பட்டு, காமமாகவோ லோபமாகவோ அது மாறிவிடலாம். அது முழுமையும் எனக்கே யுரிமையானது. ஆதலால்தான் தனக்கு சொந்தமில்லாத பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்டவைகளை அங்கீகாரம் செய்வதாய் ஈச்வரன் சொல்லுகிறார் போலும்.

(தொடரும்)

# ஸ்ரீமத் அபேதாநந்த ஸ்வாமிகளின் உபந்நியாஸம்.

## ராஜயோகம்.

கோலாலம்பூர், விவேகாநந்தாச்ரமத்தில் அக்டோபர்மீ 3உ திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு:—அக்கிராசனம்:—கிள்ளான் கோபால ஐயர்.

### பிரவேசம்.

நண்பர்காள், ராஜயோக மென்பதானது ஒரு அரிய விஷயம். அநேகருக்கு அறிமுகமாயிருக்காது. யோக சாஸ்திரமானது மிக வும் விரிந்தது. அது ஈச்வர சாக்ஷாத்கார வழிகள் எல்லாவற் றையும் அடக்கிக் கொண்டிருப்பது. உயிர் வாழ்க்கையினுடைய இறுதிநிலை என்னவென்பதை ஸநாதந தர்மம் விவரிக்கின்றது. அது துரியாதீத நிலையில் சமாதியில் ஈஸ்வர சாக்ஷாத்காரம் செய்வது. அக்கடவுட்டன்மையை அடைவதும் அந்நிலை நிற்பதுந்தான் உயிர் வாழ்க்கையின் உறுபயன். தற்போது நாம் ஜாக்ரதாவஸ்தையில் இருக்கின்றோம். நமது சரீரம், பக்கத்திலுள்ள பொருள்கள், நமது ஆஸ்திபாஸ்திகள் கட்டிடங்கள் முதலியவைகளைக் காண்கின்றோம். நேரே அனுபவிக்கின்றோம். இதுதான் வாழ்க்கையின் பயன் என்று எண்ணக்கூடும். அஃதன்று. இதற்கு மேலான ஒரு நிலை யுள்ளது. வேறு அவஸ்தைகள் இருக்கின்றன. மனிதன் அடை யக்கூடிய உயர்ந்த நிலை ஒன்று இருக்கின்றது. அங்கே பூததத் துவங்கள் பிரகிருதி வாஸனைகள் முதலிய சகலத்தினுடைய சக்தி களையும் அடங்கக் காணலாம். அதுதான் ஸநாதந தர்மத்தின் லக்ஷி யம். அதையே பௌத்த நூல்களில் நிர்வாணம் என்பது. அது ஒரு சூன்ய நிலையன்று. ஆனால் உண்மையாய் அடையக்கூடிய அரிய நிலையே. அந்நிலையே வேதாந்தத்தில் கூறப்பட்டிருக்கும் நிவிருத் திப் பிரம்மன் என்னும் உன்னத நிலையை சாக்ஷாத்கரிப்பது. தற் போது நாம் நமது இந்திரியங்கள் அநுபவிக்கும் விஷயங்களை அறி கிறோம். அதற்கப்பாலிருப்பவைகளை அறியவானால் நமது இந்திரியங்க ளால் கூடாது. அதை அறியும் சூக்ஷ்ம இந்திரியம் ஒன்று உண்டு. அதைத்தான் புருவங்களுக்கிடையே இருக்கும் மத்ய ஸ்தானத்தில் இருக்கும் ஒரு கண்போலே உவமிப்பது. நமது ரிஷி முதலியோர் களின் சில உருவப்படங்களில் மூன்றுகண்களுடன் சித்திரிக்கும் அர்த்தம் அதுதான். அந்த மூன்றாவது கண் அவர்களுக்கு மட்டு

மல்ல, எல்லோருக்கும் உண்டுதான். சாமான்யர்களிடத்தில் அது மூடப்பட்டு மூடநிலையில் இருக்கின்றது. அந்த சக்ஷுரிந்திரியங்கள் வாஸனா ருசிகளால் கட்டுண்டு மூடப்பட்டிருக்கின்றது. அந்த மூட்டத்தைத் திறந்தால் அற்புதமான உண்மைகள் புலப்படும். ஒவ்வொருவரும் அதிமானுஷர்களாகவும் தேவர்களாகவும் ஆகிறார்கள். ஆதலால் அந்த ஞானக் கண்ணாகிய மூன்றாவது கண்ணைத் திறப்பதெப்படி? உண்மை தரிசனம் செய்வதெப்படி? அதற்கு அநேக வழிகள் உண்டு.

### யோக சதுஷ்டயம்.

நான்கு யோகங்கள் முக்கியமாய் உண்டு. யோகம் என்பது யுஜ் என்னும் தாதுவிலிருந்து சேர்ப்பது என்று அர்த்தப்படும். அதாவது ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் சேர்ப்பது; இணைப்பது பிணைப்பது என்றபடி. ஆங்கிலத்திலும் யோக் (yoke) என்ற பதம் ஸம்ஸ்கிருத யுஜ் என்ற அடியாகத்தான் வந்தது என்று பாஷா விற்பன்னர்கள் அறிவர். நமது தனி ஜீவனாய் இலங்குவதை பரமாத்மாவுடன் சேர்ப்பதுதான் யோகம். அப்பரம் பொருளை, விஷ்ணு, நாராயணன், சிவன் ஜிஹோவா, அல்லா முதலிய சப்தத்தில் எந்த சப்தத்தால் சொன்னாலும் சரி. எப்படியிருந்தாலும் எல்லா மதங்களிலும் ஒரே லக்ஷியம்தான். ஸகுண ரூபமற்று நிர்க்குணமாய் அறியுங்காலத்தில் பேத மேது? கிருஸ்து மதத்தினுடைய முடிவும் சமாதியே. அந்த சமாதியடையும் வழி எது? அநேக யோக மார்க்கங்களைக் கைப்பற்றி அனுஷ்டிப்பதே. அது கர்ம யோகம், பக்தி யோகம் ஞானயோகம், ராஜயோகம் என நால்வகைப்படும்; அவைகளை முறையே ஆராய்வோம்.

### தியானத்தினால் பெறும் சித்திகள்.

யோக சாமர்த்திய மில்லாமல் உலகில் பெரிய பெரிய காரியங்கள் செய்யப் படவில்லை. பூத பௌதிக சாஸ்திரிகளும், ஜோதிஷ தந்திர சாஸ்திரிகளும், கணிதம், சிற்பம், ரஸாயனம், வைத்தியம் முதலிய பற்பல சாஸ்திர விற்பன்னர்களும், ஆழ்ந்த தியானத்தினாலேயே அபூர்வ விஷயங்களைக் கண்டு பிடித்தார்களென்று சொல்லவேண்டும். அவர்கள் தாங்கள் ஆராயக் கோலிக்கொண்ட விஷயங்களை பன்னெடு நாளாயினும் ஒரே சிந்தனையுடன் அன்ன ஆகாரத்தையும் அநாதரித்து தீக்ஷண்யமான புத்தி விசாரம் செய்யா விட்டால் நீங்கள் இன்று சவாரி செய்யும் புகைரத மெங்கே, நெடுந் தூரத்தேயுள்ள நண்பனுடன் தந்தி பேசும் ஒலிக்கருவி எங்கே, அரை நொடியில் ஐம்பது யோஜனையும் கடந்து செல்லும் ஆகாய விமானமெங்கே? நீராவி, மின்சாரம், காந்தம் முதலிய அபூர்வ சக்திகளெல்லாம் ஆழ்ந்த தியானமென்னும் யோக சாமர்த்தியத்தினாலேயே கண்டு



பிடிக்கப்பட்டன. இன்று அளப்பரிய ஆகாயத்தில் கண்ணாடி மூலம் தரிசிக்கும் அற்புதக் காட்சிகளெல்லாம், ஸமாகமாதி தோற்ற நிர்ணயங்களெல்லாம், குஜாதி கிருஹவாஸி சொரூப சித்தாந்தங்களெல்லாம், லக்ஷக்கணக்கான ஆகாச லோகங்கள், அண்டங்கள் கோளங்கள் முதலியவைகளில் பரீக்ஷைகளெல்லாம் அநேக நாட்களில், வருஷங்களில், நூற்றாண்டுகளில்—அன்றன்று, பல்லாண்டு பல்லாண்டுகளில் மனிதன் பொறுமையால், விடா முயற்சியுடன் யோசித்துக் கண்டு பிடித்த விஷயங்களன்றோ?

### யோக நிலை.

யோகியானவன் வைராக்யத்துடனும் திடசித்தத்துடனும் ஒரே விஷயத்தில் சிந்தை செலுத்துகிறான். யோகி என்பவன் கால் முடக்கிக் கண்மூடி கைக்கட்டி மூச்சடக்கிப் பாழ்ங்கிணற்றில் கிடப்பானென்றெண்ணவேண்டாம். யோகி உண்ணும்போதும், உறங்கும் போதும், நடக்கும்போதும், திரியும்போதும் ஆழ்ந்த தியானத்திலிருப்பான். யோகி நிற்பதெல்லாம் நிலையே, பார்ப்பதெல்லாம் பரிபூரணமே, "கண்கொண்டு பார்த்த விடந்தொறுந் தோன்றுங் கருவைப்பிரான்."

"இருக்கினு நிற்கும்போது மிரவுகண் டுயிலும்போதும்,
பொருக்கென நடக்கும்போதும் பொருந்தியுண்டிருக்கும்போதும்
முருக்கிதழ்க் கனிவாயாரை முயங்கி நெஞ்சழியும்போதும்
திருக்களாவுடைய நம்பா சிந்தையுன் பாலதாமே"

எனவே, யோகிக்கு "உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமானென்றே." பாஹ்ய விசாரங்களிலும் அத்தகைய தியான முடையார் தான் புதினங்களைக் கண்டுபிடித்தவர்கள்.

### தாமஸ் எடிஸன்.

அமெரிக்காவிலுள்ள பெரிய சாஸ்திர விற்பன்னராகிய தாமஸ் எடிஸன் என்பவர் அநேக நூதன இயந்திர தந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கிறார். அவருடைய யந்திர சாலையில் யாம் அவரைச் சந்திக்கும் சமயம் பெற்றோம். அந்தப் பெரியாருடைய திருஷ்டாந்தங்களெல்லாம் அவருடைய தியான சித்தியே என்னத் தட்டென்ன? தாம் ஏதாவது நூதனமாய்க் கண்டு பிடிக்க மனோ சங்கல்பம் செய்தால், பிறகு அதை முட்டறுத்து முடிவு காணும் வரை; அவருக்கு அன்ன ஆகாரத்தில் அபேக்ஷையில்லை, சீதோஷ்ண உணர்ச்சியில்லை, காலக்கழிவின் அறிவில்லை, நித்திரையில்லை, மற்றும் வேறு யாதொன்றின் சிந்தனையுமே இல்லை. ஏகாக்ர சித்தராய் அவர் தம்முடைய பிரும்மாண்டமான யந்திர சாலை நடுவில்

தமது அறையில் ஒரு நாற்காலியில் பதுமைபோல் விஷய சிந்தனையுடன் ஆழ்ந்த சமாதியில் இருந்து விடுகிறார். வேலைக்காரர்கள் காலா காலங்களில் வழக்கமாய் அவருக்கு ஏற்பட்ட திட்டம்போல் உண்டி, உணவுகளை அவருக்குப் பக்கத்திலுள்ள மேஜையில் தயாரித்து விட்டுச் சென்று விடுகிறார்கள். காலை போஜனம் தயாரித்திருந்தது. சாப்பிடப்படவில்லை. ஆறிக் குளிர்ந்து விட்டது. மத்தியான போஜனமிடுவோர் உண்ணுகலைகளை நீக்கி அவ்வேளை ஆகாரத்தை மேஜையில் ஆயத்தம் செய்து வைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அதுவும் காலைச் சாப்பாட்டின் கதியே யாகிறது. பிறகு மாலை சிற்றுண்டி வைக்கப்படுகிறது. முன்படைத்த ஆகாரங்கள் சென்ற வழியே அதுவும் சென்றது. பகல் கழிந்து இரவு நெருங்கியது. இன்னும் அவர் அதே நிலையில்தான் உட்கார்ந்திருக்கிறார். அவர் தேகம் அசையவில்லை. நிலை பிறழவில்லை. பார்வை மாறவில்லை. பகல் போய் இரவு வந்ததும் அவருக்குத் தெரியாது. அவர் இன்னும் தன்னுடைய விஷய ஆராய்ச்சியில்தான் இருக்கிறார். அவர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அவர் அதன் முடிவை அறியாதுபோனால் வேறு ஒன்றையும் அறியப்போவதுமில்லை. இப்படி இரவும் கழிந்து மறு பகலும் வந்துவிட்டது. இதனிடையில் அவருக்குத் தூக்கம் வந்து சரீரம் சோர்வடைந்தால் அச்சரீரம் சிறிது அந்த மேஜையின் பேரிலேயே தலையைத் தொங்க வைத்து சோர்வு நீங்கியதும் மறுபடியும் தலை தூக்கி முன்னின்ற நிலையிலேயே நிற்கின்றது. அது சரீரந் தானாய் செய்துகொள்ளும் ஒரு சிறிய வேலை, அதைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. அவர் கவலை அவருடைய ஆராய்ச்சியில் நிற்கின்றது. இப்படி அவர் அநேக நாட்களும் இருந்துவிடுவார். இம்மாதிரி தியானத்தினால் கண்டு பிடித்தது தான் உங்களுடைய கம்பி இல்லாத் தந்தி, உங்களுடைய டெலிபோன் என்னும் ஒலிகருவி. இப்படியான தியானத்தினால்தான் அவர் இறந்தவர்களுடன் பேசும் வழியைக்கண்டுபிடிக்க பிரயத்தனம் செய்வது. இப்படியான உபாசனத்தினால்தான் இது வரையில் பல பல அபூர்வ விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இனியும் கண்டுப் பிடிக்கப்படுவன. எனவே ஏகாக்கிர சித்தத்துடன் செய்யும் தியானம் என்னும் யோக சாமர்த்தியமே ஸகல ஸாதன ரஹஸ்யம்.

### சிந்தனையற்ற வேலை சிதறும்.

ஆனால் இம்மாதிரியான ஏகாக்ரசித்தமில்லா விட்டால் ஒரு வேலையிலும் காரியம் நடந்தேறாது. இயந்திர வண்டி ஓட்டுபவன் தான் ஒருவழிப்பட்ட மனதுடன் தன் இயந்திரத்தைக் கையாளாவிட்டால் இடருற்று மரிக்கவும் நேரும். துவிச்சக்கிர வண்டி உந்துபவனும் தான் கருத்துடன் ஸாரானாகில் ஸார் நடுவே ஆள்மேல்



விட்டடிப்பன். சமையல் வேலை செய்பவர்தாம் கவனமாயிருந்து செய்யாவிட்டால் தீய்த்துக் கருக்கி வாய்க்கு வழங்காமல் செய்ய நேரிடும். எனவே எதிலும் கவனம் செலுத்தற்பாலது. அக்கவனம் நீண்டதுதான் தியானம். அத்தியானம் நீண்டதுதான் சமாதி. அச்சமாதியில் நிர்விகற்பயோக நிலை நின்று லயித்து விடுவதுதான் முக்தி. அம்மோன நிலையை வர்ணிக்கச் சொல்லின்று. "அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்." அந்நிலையடைய சாதனங்கள் அநேகம் உள.

### மூர்த்தித்தியானம்.

சச்சிதானந்த சொரூபியாகிய பகவான் திவ்யதேகங்களில் மூர்த்திகளாய் எழுந்தருளி யிருக்கின்றான். தனக்கு உகப்பான அம்மூர்த்திகளில் அறிவுடையோர் தியானம் செய்கின்றார்கள். படிப்படியாய் பாவ சமாதியிலிருந்து வர வர சூக்ஷ்மமான அப்பியாஸ கிரமத்தால் அவர்கள் ஆழ்ந்த சமாதி நிலையில் இருந்து விடுகிறார்கள். தியானம் தைல தாரைபோல் ஒரே வாய்க்கால் வழியோடி இறுதியில் ஒன்றில் வெள்ளமிட்டுக் கிடக்கின்றது.

### புத்த தேவர்.

இவ்விதமான தியானத்தினால்தான் புத்த தேவர் தத்வ தரிசனம் செய்து போதத்தை யடைந்தது. அந்த விசாரம் உண்டானால் பிறகு அம்முமுக்ஷுவுக்கு நித்யாநித்ய வஸ்து விவேகம், இஹாமுத்ரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்க சம்பத்து என்ற படிகளைக் கடந்து பஞ்சாக்னி மத்தியிலே நின்று தபிக்கப் படுவான் போல் ஸம்ஸாரத்தினின்றும் விடுபட புழுவாய்த் துடித்து நிற்கின்றான். புத்ததேவர் நல்லிளமையில் அழகிய ஸ்திரீயையும், பச்சிளம் குழந்தையையும், ராஜ்யாதி போக போக்கியங்களையும், ஒரு நிமிஷத்தில் துறந்து காரிருளில் காடடைந்த மஹா ராஜா துறவு எத்தகைத்து என்பீர்? ஆறு வருஷ காலம் அலையெழு கடலைப்போலும், அனலிலிட்ட மெழுகைப் போலும், மனமலைய நெஞ்சிளக அலைந்து திரிந்தும் அந்தோ! அறிவெய்தாதது அவரை என்ன வாட்டு வாட்டியது? ஆகாரம் வேண்டிலர். ஆறுதல் அடைந்திலர், உடம்பிளைத்து எலும்பெடுத்து நரம்பெழுந்து நனிவாடினர். எனினும் பேரறிவை அடைந்தாரில்லை. பிறகன்றே அப்போத விருக்ஷத்தினடியில், மஹா ஸங்கல்பத்தைச் செய்துகொண்டு எண்ணரிய கொடுந் தபஸை இயற்றியது. அந்தோ! அப்பெருமானனும் காணரிய காட்சிகளைக் கண்டனன். அறிவுச் சுடர் கொளுத்தப்பெற்றனன். உலகறிய ஓதினன். யாருமறியாத உண்மைகளை உபதேசித்தனன். எனவே யோக சித்தியினாலேயே வாழ்க்கை நிலையையும் உறுபயனையும், அடைய சாத்யம். அன்றேல் அல்லல் எனவே.

### பகவத் பிரசாதம்.

எல்லோரும் போதத்தை அடைய சாத்யர்கள் என்று எண்ணுங்கள். புத்த தேவர் வைராக்யத்தாலும் அப்யாஸத்தாலும் அடைந்த நிலைமையை யாரும் அத்தகைய பிரயத்தனத்தால் அடையலாம். நீங்களெல்லாரும் பகவத் பிரசாதந்தானே. எல்லோரும் அருட் பெருஞ் சோதியின் குழந்தைகள் தானே! யாவருடைய நெஞ்சகத்திலும் அவ்வண்ணல் உறைகின்றானே! நீங்கள் தெரியாத்தனத்தால் சிக்குண்ட பந்தக் கயிறுகிய தேகமே ஆத்மா என்றபுத்தி பண்ணி ஏமாந்து விடாதீர்கள். எம்பெருமான் ஏதோ நெடுந் தூரத்தில் மேகமண்டலத்திற்கப்பால் உட்கார்ந்திருப்பவனாய் எண்ணவேண்டாம். ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் அவன்கோயில் கொண்டுறைபவனாயும் அவன் நமது அருமைத் தந்தையென்றும் எண்ணற்பாலன். அதை உன்னி யன்றோ நாம் ஒருவரோ டொருவர் நமஸ்காரஞ் செய்து

### நமஸ்காரம்.

கொள்வது கையெடுத்துக் கும்பிடுவதின் தாத்பரியம் அது வன்றோ? ஸர்வாத்ம பரனாயிருக்கும் தன்மையை யன்றோ அவன் நாமங்கள் காட்டுகின்றன. "விச்வ விஷ்ணு:" 'வாஸுதேவ:' "நாராயண: பரம்" "சிவஸ்தாணு:" என்ற பல நாமங்கள் ஸர்வ வியாபக பரிபூர்ண ஸர்வமங்கள சொரூபத்தை யன்றோ குறிப்பிடுகின்றன. அதை எண்ணி

### கைகுலுக்கல்.

கையெடுத்துக் கும்பிடுவதை விட்டு அறியாத ஏழைகள் கைகுலுக்குகின்றார்களே! கை குலுக்குவதின் அர்த்த மென்ன? மேல் நாட்டுப் பழைய மனிதன் விலங்குத்தனமாய், பாமரனாய், முரடனாய், இருந்த ஞான்று, தற்காத்தல் நிமித்தம் கத்தியுங் கையுமாய்த் திரிந்தான். அஞ்ஞான்று இவன் நேயன் இவன் விரோதி யென்று கண்டு கொள்வது அடிக்கடியும் கஷ்டமாகும், ஒரு நிமிஷம் இருந்த புத்தி ஒரு நிமிஷம் இருக்காதபடியினால், எனவே, யார் தன்னிடம் நெருங்கினாலும், தன் கத்தியினிடம் செல்லும் போதுக "கை கத்தியை எந்த வேண்டியதில்லை, நான் விரோதி யல்ல, உன் சிநேகிதன்" என்று காட்ட கை குலுக்குவது வழக்கமாயிருந்தது. அம்மிருகப் பழக்கம் இன்றும் பயின்று வரவேண்டியா? அது என் இன்னும்? அதை விட்டு கையெடுத்து ஸர்வ ஜீவனிலும் உறையும்படியான எம்பெருமானை பிரணாமம் செய்வதாக எண்ணிக் கும்பிடுவது எவ்வளவு மேல். இது நிற்க.

### யோகக்கிரமங்கள்.

யோகமானது கிரமேண படிப்படியாய் ஸாதிக்க வேண்டியது. பூர்வாங்கங்களாகிய இயமம், நியமம், ஆஸன, பிராணாயாமப் பிரத்தி



யாகாரங்களை ஸாதனம் செய்து பிறகு ஒன்று முதிர்ந்து ஒன்றாய் தாரணை, தியானம், ஸமாதிகளை அப்யஸிக்க வேண்டும். இவைகளைப் பயின்றாருக்கு சித்திகள் கைவரும்.

### யோகசித்திகள்.

அவை அநேகமுண்டு, விரிப்பிற் பெருகும். சுருக்கிக் கூற அணிமா, லகிமா, கரிமா, மஹிமா, பிராப்தி, பிரகாம்யம், ஈசத்வம், வசித்வமென அஷ்டசித்திகள் எனலாம். மற்றொருடைய எண்ணங்களை அறியலாம். தூரத்தில் நிகழும் செய்திகளை இங்கிருந்தே அறியலாம். நீர் மேல் நடக்கலாம். ஆகாய கமனம் செய்யலாம். ரஸவாத வித்தை செய்யலாம். இன்னும் எண்ணரிய சித்திகளை இயற்றலாம்.

சந்ததமதக்கரியை வசமாய் நடத்தலாங்
  கரடிவெம் புலிவாயையுங் கட்டலா
மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
  கட்செவியெடுத் தாட்டலாம்
வெந்தழலினிரதம் வைத்தைந்து லோகத்தையும்
  வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர்காணாம லுலகத்துலாவலாம்
  விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலாம்
  மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்
சலமே னடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
  தன்னிகரிற் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற
  திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானதெய்வமே
  தேஜோமயா னந்தமே.

இவைகளில் சந்தேகம் வேண்டாம். சிப்பாய் கலகத்தின் போது தூரத்திலிருந்து ஒருவரோடொருவர் எண்ணங்களையும் நிகழ்ந்த சங்கதிகளையும் அறிந்து கொண்டதாகத் தெரிகிறது. இன்று அமெரிக்காவில் அச்சித்திகளெல்லாம் சாத்தியமென்றும், இயற்றலா மென்றும், ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அது சித்த நாடாய் ஆகிவருகிறது. திவ்ய சக்ஷுஸ் என்னும் தூர பார்வை, தூரத்தினின்றும் கேட்டல் முதலியவைகளும், திருஸ்து செய்த அற்புதங்களும், யோக சித்திகளே. இவைகள் அதர்வண வேதத்தில் வெகு விஸ்தாரமாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆகாயாஸம் செய்து தரையினின்றும் கிளம்பும்படியான தன்மையை இன்று அமெரிக்காவில் பரீக்ஷிக்கின்றார்கள். எந்த சக்தி வேண்டுமானாலும் யோகத்தினால் பெறலாம். எதையும் வைத்தால் வைக்கலாம். அழித்தால் அழிக்கலாம். அந்த சக்திகள் விரும்பற்பாலனவல்ல,

அவைகளை பில்லி, சூன்யம், மாந்திரீகமென்று ஒதுக்கினார்கள். ஆகம சாஸ்திரங்கள் அவைகளையும் சொல்லி கண்டிக்கின்றன; யோகாப்யாஸி அதிக ஆனந்தமான நிலையில் இருக்கலாம். அவனுக்கு ஒரு தீங்கும் வாராது. வியாதி ஒன்றும் நெருங்காது. தான் நினைத்தபோது சடத்தை விடலாம். கல்பாந்த காலமும் வேண்டுமானால் ஜீவனோடிருக்கலாம். எவன் ஒருவன் பிராணாயாமக் கிரமத்தினால் வீணாத் தண்டைக் கடந்து குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்பி அது பாம்புபோல் ஆதார சக்கிரங்களில் ஒவ்வொன்றாய் தலையெடுத்து நிற்கச் செய்து, பிறகு பிருமாந்திர ஸ்தானத்தில் புகுந்து, ஸமாதி நிலையில், உன்மனி முத்திரையுடன், லயிக்கின்றானோ, அந்த மஹாயோகி, ஆனந்த ஸாகரத்தில் மூழ்குகின்றான், சாச்வதமான, பதவியை யடைகின்றான். பிறப்பிறப்பற்று நித்யமான கைவல்ய பதவிக்கும் மேலான விதேகமுக்தியைப் பெறுகின்றான்.

தமிழகம்.

## நாகராஜன் அல்லது
## மானிடன் மனக்கோட்டை.

(351-ம் பக்கம் தொடர்ச்சி.)

அழகியதோர் பங்களாவில் 'மிராசுதார் லக்ஷ்மணன், பாங்கர்' என்று வாசற் பலகையில் எழுதப்பட்டிருந்தது மிராசுதாரர் பெயராயிருக்குமோ வென்று யூகித்துக்கொண்டே நாகராஜன் உள் நுழைந்தான். அன்றையதினம் நிலாவினாலும், மின்சாரதீபங்களின் வெளிச்சத்தினாலும், பங்களா மிகவும் அழகுடன் தோன்றியது. நாகராஜன் மனதிலுண்டான ஸந்தோஷமும் அவன் உற்சாகத்திற்கிடமாயிருக்கலாம். தாழ்வாரத்தில் ஓர் நாற்காலியின் மீது மிராசுதாரர் உட்கார்ந்திருந்தார். "வாருங்கள்! வாருங்கள்! தங்களைப் பார்த்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகின்றனவே!" எனக்கூறி, அவனை முகமலர்ச்சியுடன் வரவேற்றார்.

சற்று நேரம் வரையில் புத்தகத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது இராமச்சந்திரய்பரும் வந்துசேர, மூவரும் இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். "நீங்கள் என்னை எவ்விதம் நம்பினீர்கள்" என்று நாகராஜன் கேட்டதற்கு, லட்சுமணர் "என்னவோ! தங்களுடைய வியாஸங்களைப் படிக்கும்போதே உம்மிடம் நம்பிக்கை உண்டாயிற்று. பிறகு நாங்கள் இருவரும் உம்மைப் பார்த்தபோது அந்த நம்பிக்கை உறுதிப்பட்டது" என்றனர்.



அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் இனியகுரலில் ஒருசிறு பெண் அனைவரும் வியக்கத்தக்கபடி வீணை வாசிப்பது கேட்டது. "லக்ஷ்மி பாடுகிறாள்; வாருங்கள் போவோம்" என்று லக்ஷ்மணர் கூற, மூவரும் உள்சென்றனர். அங்கு இரண்டு நிமிஷம் இருந்து நாகரர்ஜுனை விட்டுவிட்டு, இராமசந்திரய்பரும், லக்ஷ்மணரும், புதிதாகவந்தவர்கள் யாரையோ வரவேற்க வெளிச் சென்றனர்.

"கீதமாலை எழுதினவளை இன்று காணப்போகிறோம். நமது பாக்கியமே பாக்கியம் ஆனால் அவள் முடமன்றோ? பாவம்! இடம் விட்டு இஷ்டப்படிச் செல்ல முடியாது. சோபாவிலேயன்றோ அவள் எப்பொழுதும் இருக்கவேண்டுமாம்! பாவம்! அவ்வளவு கல்வித் திறமையுள்ளவளுக்கு கால் முடமானால் அதுவே ஓர் அவலக்ஷணமன்றோ? ஓர் முடப்பெண்ணை எவ்வளவுதான் அழகாயிருந்தபோதிலும் பணமுள்ளவளாயிருந்தாலும் யார் விவாகஞ் செய்துகொள்ளுவார்கள்?" என்று நாகராஜன் யோசிக்கும்போது லக்ஷ்மணர் வந்து "எனக்கு மிகவும் வேண்டியவர்கள் வந்தனர். அவர்களை உள்ளேயனுப்பிவிட்டுவந்தேன். வாருங்கள் போகலாம்" என்று கூறி அவன் கையைப் பிடித்தழைத்துக் கொண்டு, பக்கத்தறைக்கு சென்றார்.

அவ்வறையில் ஒரு சோபாவின்மீது ஸர்வாபரணபூஷிதையாய், அழகே உருவெடுத்தாற் போன்று ஒரு சிறு பெண் வீணையும் கையுமாய் உட்கார்ந்து கொண்டு பாடிக்கொண்டிருந்தாள்.

"அப்பா! நீங்கள் இதுவரைக்கும் வரக்காணவில்லையே" என்று நினைத்தேன்" என்று கூறி சோபாவை விட்டு குதித்தெழுந்தாள்.

"அம்மா! இவர்தான் நாகராஜர். உன் பாடல்களை அச்சிட்டவர், நமஸ்காரம் செய்" என்றார் அவள் தகப்பனார்.

லக்ஷ்மி நாகராஜனை நமஸ்கரித்து எழுந்திருக்கும்போதுச் சரேலென ஓர் முறை அவனைப்பார்த்து விட்டு லக்ஷ்மணர் அருகிற் போய் நின்றாள்.

"லக்ஷ்மியின்—கால் குணமாய் விட்டதா?" என்றான் நாகராஜன். "இல்லை!—அவளுக்கு கால் எப்பொழுதும் முடமில்லை" என்றார் லக்ஷ்மணர். லக்ஷ்மி புன்னகை புரிந்தாள். நாகராஜன் திடுக்கிட்டான். அதற்குள் இராமசந்திரய்யர் உள்வர, லக்ஷ்மணர் —"அப்பா, விஷயங்களை நாகராஜருக்குத் தெரிவி" என்றார்.

"நாகராஜரே! லக்ஷ்மிக்குக் கால் எப்பொழுதும் ஊனமில்லை. ஆனால் நாங்கள் தங்களிடம் வரும் போது, காலில் கட்டி ஏற்பட்டு 2, 3, மாதம் படுத்த படுத்த படுக்கையாயிருந்தாள். அப்பொழுது தான் நாங்கள் தங்களிடம் வந்தது!"

"அப்படியா"? என்னைப் புத்தகத்தைப் பதிப்பிக்க ஏற்படுத்துவானேன்?

"அதற்குக் காரணம் ஒன்றுண்டு. லக்ஷ்மணருக்கு ஏகபுத்திரியாதலாலும், சொத்து ஏராளமாயிருப்பதாலும், யோக்கியரான ஒருவரை, பிராசின் கார்பஸ்தராகவோ, அல்லது லக்ஷ்மியின் கணவராகவோ, தேடவேண்டியிருந்தது; அதற்காகத்தான் நாங்கள் புதிதான ஓர் வழியைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. தங்களிடம் கூறியதுபோல், சிலரிடம் சொல்ல, அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. சிலர் மோசமும் செய்தனர். கடைசியாக உம்முடைய வியாஸங்களைப் படித்த பிறகு, உம்மைக் கண்டு, ஏற்பாடு செய்தோம். முடிவு என்னவென்று உமக்கே தெரியும்"

லக்ஷ்மணர் "நாகராஜரே! இராமசந்திரய்யர் சொன்னதிலிருந்து தங்களுக்கு எல்லாம் விளங்கியிருக்கும். தங்களுக்கு லக்ஷ்மியை விவாகஞ்செய்து கொள்ள ஸம்மதமோ?" என்றார்.

"நான் ஒருவன் இஷ்டப்பட்டால் போதுமோ?"

"குழந்தை லக்ஷ்மி தங்களைக் கணவராக வரித்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகின்றன. தங்கள் ஸம்மதம்தான் தேவை."

நாகராஜன் மனம் சற்றுத் தடுமாறியது. கடைசியில் "என் பெற்றோர்களையும் ஒரு வார்த்தைக் கேட்க வேண்டாமா?" என்றான்.

"அவர்களைக் கேட்காமலா? முன்னமேயே கடிதம் எழுதிக் கேட்டு விட்டேன். அவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள்." நாகராஜன் பிரமித்தான்—"தாங்கள் உள் வரும்போது சிலர் வந்தார்கள் என்று கூறினேனே! அவர்கள் தான் உங்கள் தாயாரும் தகப்பனும்—" எனச் சொல்லிமுடிப்பதற்குள் அறையின் கதவுதிறக்கும் சப்தம் கேட்டது. நாகராஜன் "அம்மா" என்றான்.... ...............

## 8

நாகராஜன் கண்விழித்தான். எதிரே இருந்த மேஜையின் மேலிருந்த தீபம் காற்றில் அலைந்து 'பக்' என்று அணைந்து போய் விட்டது—க்ரீச் என்ற சப்தத்துடன் கதவு திறக்கப்பட்டது, பக்கத்தறையிலிருந்த கிருஷ்ணன் உள் நுழைந்தான். நாற்காலியின் மேல் உட்கார்ந்திருந்த நாகராஜனைப் பார்த்து 'என்ன நாகராஜா! சாப்பிடக்கூட வரவில்லை; அவ்வளவு மும்முரமாகவா எல். டி. பரீக்ஷைக்கு வாசிப்பது?' என்றான்.

நாகராஜனுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை, "என்னமோ களைப்பாக விருக்கிறது என்று சொல்லிவிட்டு, அறையை விட்டுச் சென்றான். அறைக்கு வெளியே மரத்தடியிற் சென்ற போது குளிர் காற்று வீசியபிறகே, அவனுக்குத் தானிருக்கு மிடமும் இராத்திரி நேரமும் தெரிந்தது. தேம்லையைப் பற்றியும் லக்ஷ்மியைப்பற்றியும் தான் கனவு கண்டதாக அறிந்தான். "மானிடன் மனக்கோட்டை இதுவன்றோ" என்ற யோசனையுடன், சாப்பிடுவதற்குச் சென்றான் நாகராஜன்.

முற்றிற்று.

# சிந்தனை மொழிகள்.

பக்தன், பகவானிடம் பக்தி செலுத்தும்போது, தன் உள்ளம் முழுவதையும் அவனிடமே செலுத்த வேண்டுகிறான். தன் மனம் அவனிடமே செல்லும்பொருட்டு, அவனது திவ்ய நாமங்களை உச்சரித்து வருவது வழக்கம். அப்படிச் செய்வது கவனத்தை ஓரிடத்திலேயே செலுத்துகின்றது. ஈசுவரனது திரு நாமங்கள் நல்லெண்ணங்களையே கொடுத்து வருவதால், நாமஸ்மரணம் எப்பொழுதும் மிக்க பயன் தரத்தக்கது. இதுபற்றியே பெரியோர், சிறுவர்களுக்கு அவர்களுடைய இளமைப் பருவத்தில் ஸஹஸ்ர நாமஸ்தோத்திரங்கள், பாடல்கள் முதலியவற்றை மனப்பாடம் செய்யும்படி வற்புறுத்துகின்றனர். இச்ஸஹஸ்ரநாமங்களுக்குப் பொருள் அவர்களுக்கு முதலில் அதிகம் விளங்காதாயினும், பிற்காலம் நன்கு விளங்கும்.

* * *

நாம் கவனிக்கவேண்டியது பொருளின் குணமேயன்றி அதன் நாமத்தையல்லவே எனக் கூறுவாருளர். அது உண்மை. ஆனால், ஸாதாரண மனிதர்களுக்கெல்லாம், ஒரு பொருளின் பெயரைக் கூறும்போதே அதன் குணமும் மனதிற்படுகின்றது. உதாரணமாக, "மல்லிகை, ரோஜா" என்று ஒருவன் நமக்குக் கூறுவானாயின் உடனே நமக்கு அப்புஷ்பங்களின் அழகும் மணமும் நினைவிற்கு வருகின்றன. அதுபோலவே நாம் எம்பெருமானது திருநாமங்களைக் கூறும்போது, அந்நாமங்கள் அவனது எண்ணிறந்த நற்குணங்களைக் குறிக்கின்றன. ஆகையால்தான் நாம் முன்னொரு ஸஞ்சிகையில் கூறியவாறு, நம் முன்னோர், ஈசுவரனது திருநாமங்களையே தம்மக்கள் முதலியோருக்கு இடும் வழக்கத்தைக் கையாண்டு வருகின்றனர்.

* * *

பகவானது குணவைபவங்களைப்பற்றிச் சிந்திப்பதும், அவனது திருநாமங்களை உச்சரிப்பதும், பக்தன் ஒருவனால் தனிமையிலேயே செய்யக் கூடுமாயினும், சிலருக்கு அவ்வாறு செய்தல் இயலாது. மனமும் ஒரு நிலையில் நில்லாது. அப்படியிருப்பவர்கள் சிலர் ஓரிடத்தில்கூடி, ஸத்காலக்ஷேபம் செய்வது சிறந்ததாகும்.

* * *

அடியவர்கள் கூடி ஆண்டவனது பெருமைகளைக்கூறும் பாடல்களைப் பாடியும், திருநாமஸ்மரணம் செய்தும் வருவது மிகவும் மேலானதன்றோ. வெளி விஷயங்களில் செல்லும் நினைவை ஒரே விஷயத்தில் நிலை நிறுத்தும் சக்தி சங்கீதத்திற்குண்டு, மானிடனைத் தன்னிலைமை மறக்கச் செய்யும் வன்மையுமுண்டு. இத்தகைய சங்கீதம், பக்தர்களால் கைக்கொள்ளப்பட்டு வருமாயின், பக்தி மிகுவது எளிதாகும். இதற்கு அவசியமான வாத்தியங்களும் இருத்தல் நன்று.

திருவிழாநாட்களிலும் அடியவர்களுடைய திருநக்ஷத்திரங்களிலும் பஜனை செய்தும் அந்நாட்களின் விசேஷத்தைப் பெரியார் ஒருவர் சொல்லக் கேட்டு வருவதும் அந்நாளை நல்வழியில் கழிக்கும் வழிகள் எனக்கொள்ளலாம்.

***

இவ்வாறு பஜனையைக் கைக்கொள்வதில் இன்னுமொரு பலன் இருக்கின்றது. அஃது பிறரையும் பகவானைப்பற்றிச் சிந்திக்கச் செய்தலாம். நால்வர் பாடக்கேட்பின் வேறு சிலர் வந்து அங்கு கூடுவதை நாம் காண்பது ஸகஜம். நாளடைவில் அவ்வாறு பார்க்க வருபவர்களும் பக்த கோஷ்டிகளி லொருவராகின்றனர். சிறு குழந்தைகளும் இப்பஜனைகளுக்கு வந்து, தம்மழலைச் சொற்களால் பாடல்களைப்பாடி ஆனந்தமுற்றுச் செல்வர். இவ்வாறு இளம்வயதிலேயே சிறுவர்களின் மனதை நாம் ஈசுவரன்பால் செலுத்துவோமாயின், அவர்கள் வயதடைந்த பிறகும் பக்தர்களாக இருப்பது சுலபமன்றோ?

***

ஆயின் இவ்விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது வென்னவெனின், **பஜனை** யென்பது, பகவானைப்பற்றித் தியானம் செய்வதற்கு ஒருதவியாக இருக்கவேண்டுமே யன்றி, வெறும் பாட்டுக்கச்சேரியாக மாறக்கூடாதென்பதே. கருத்தியற்ற பாட்டுகள் நீக்கப்படுவதோடு வெறும் **தாளம் ராகம்** முதலியவற்றையே முக்கியமாகக்கொண்டு அவற்றிலேயே நம் கவனத்தைச் செலுத்துவது, எடுத்த காரியத்தை மறப்பதாகும்.

***

ஈசுவரனிடம் அளவிலாப்ரேமை கொண்டு, அவரையடையும் வழியை ஸத்குருவினிடம் அறிந்து, மனதை த்யானத்தில் நிறுத்தி, வாக்கை நாமஸ்மரணத்திலும் பஜனையிலும் செலுத்தி, காலத்தை ஸத்ஸங்கத்திலே செலவழித்து, கைகளை அடியார்க்குத் தொண்டு புரிவதில் உபயோகித்து அவர்களையும் தன்வழிச் செல்லுமாறு ஆண்டும் பக்தன் காலக்கிரமத்தில் கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவான் என்பதில் ஐயமுண்டோ?

# குறிப்புகள்.

சென்ற ஆறுமாத காலமாய் இத்தென்னிந்தியாவில் தங்கியிருந்து தம்மைக் காண வந்த பக்த கோஷ்டிகளுக்குத் தரிசனமும் ஞானோபதேசமும் செய்து வந்த ஸ்ரீராம க்ருஷ்ணமடத்துத் தலைவர் ஸ்ரீமத் ப்ரம்மானந்த ஸ்வாமிகள் சென்ற கார்த்திகை மீ (18-11-21) சென்னையைவிட்டு வட இந்தியாவிற்குச் சென்றனர். அவருடன் வந்திருந்த சிஷ்யர்களும் ஸகாக்களும் உடன் சென்றனர்.

***

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லத்தைச் சார்ந்ததாக ஒரு வைத்திய சாலையும் பிணியாளிகள் படுக்க அறைகளும் கட்டுவதற்காக பொப்பிலி மஹாராஜாவவர்கள் ரூ. 5,000 நற்கொடை யளித்திருக்கின்றார். கட்டிடவேலையும் வெகு விரைவாக நடந்து வருகின்றது.

***

அமெரிக்காஐக்கிய நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு மலாய் தீபகற்பம் வழியாய் வந்த ஸ்ரீமத் ஸ்வாமி அபேதாநந்தர் அவர்கள், முதலில் ரங்கூனிலிறங்கிப் பிறகு கல்கத்தாவிற்குச் சென்றார். தமது தாய் நாட்டை விட்டுச் சுமார் 26 வருஷங்களாக வெளியிருந்த ஸ்வாமிகள், தாம் திரும்பி வந்தபோது, தங்கின இடங்களிலெல்லாம், எண்ணிறந்த ஜனங்களுக்கு நம் மதத்தைப்பற்றிப் பல பிரசங்கங்கள் புரிந்தனர். எல்லாம் வல்ல இறைவனருளால் அவர் நீடூழி காலம் வாழ்ந்து, நலம் புரிவாரென பிரார்த்திக்கின்றோம்.

***

செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள வாலாஜாபாத் (சிவபுரம்) என்னுமூரில் வெகு விமரிசையாய் நடந்தப்படும் **இந்துமதபாடசாலையின்** 4-5-ம் ஆண்டு -அறிக்கையேடு வரப் பெற்றோம். நம் நாட்டுச் சிறுவர்களுக்கும் பழையமுறையில் சமயக் கல்வியும்,லௌகிக போதமும் எவ்வாறு பயிற்றுவிக்கக் கூடுமென்பதும், ஈசுவர பக்தி கொண்டவர்களால் நடத்த முடியாத காரியம் இல்லையென்பதும் நன்கு விளங்கும். இம்மாதிரிக் கலாசாலைகள் நாடுமுழுவதும் பரவ வேண்டுவது மிகவு மவசியம். அப்பொழுதே நம்நாடு பக்தி மிகுந்த மக்கள் நிறைந்து விளங்கும். இப்பாடசாலை பிறரது உதவியைப் பெரிதும் நாடுகின்றது. இதற்குச் செய்யும் உபகாரம் மிக நல்ல வழியில் செய்யப்பட்டதாகும்.

***

அடுத்த ஸஞ்சிகை—**தைமாதத்தியது**—நமது விஜயத்தின் இரண்டாம் தொகுதியின் முதற்பகுதியாகும் என்பதை நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அவ்விஷயத்தைப் பற்றி தனிப்பிரசுரம் வெளிவந்திருப்பினும் இங்கு சிறிது கூறவிரும்புகிறோம். புதிய விஷயங்கள் பல வெளிவருவனவற்றுள் தோத்திர

ங்கள், இனிய சிறு கதைகள், ஸ்திரீகள் சிறுவர்களுக்கான பக்கங்கள் முதலியவை முக்யமாகும். நமது பத்திரிகையை மதிப்பிடுமாறு மற்ற பத்திராதிபர்களை வேண்டுவதோடு, அவரது பத்திரிகைகளையும் புத்தகங்களையும் தக்கவரால் மதிப்பிட அனுப்பக் கோருகின்றோம். பத்திரிகையை சிறப்பிப்பதற்காக கூறப்படும் மொழிகளும் ஆவலுடன் எற்றுக்கொள்ளப்படும்.

* * *

துன்மதி௵ தை௴ 6உக்குச்சரியான 1922௵ ஜனவரி௴ 19உ வியாழக்கிழமை, ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தரின் ஜன்மதினம் சிஷ்யர்களால் கொண்டாடப்படும். அடுத்த ஞாயிற்றுக்கிழமை (தை௴ 9உ ஜனவரி 22உ) சென்னை மயிலாப்பூரில், ஷை ஜன்மதினத்தைக் கொண்டாட ஒரு பொதுக் கூட்டம் கூடும்.

---

## பத்திரிகை வரவு.

நமது "விஜயம்" கார்யசாலையில் கீழ்கூறப்படும் பத்திரிகைகள் இவ்வருஷம் வரப்பெற்றோம்:—

1. தமிழகம் — குவாலா லம்பூர்.
2. வைசிய மித்திரன் — காரைக்குடி.
3. செந்தமிழ் — மதுரை.
4. சுதேச மித்ரன் — சென்னை.
5. தத்துவ இஸ்லாம் — நாகர்கோயில்.
6. வேதாந்த தீபிகை — மாம்பலம்.
7. ப்ரம்ம வித்யா — காஞ்சீபுரம்.

பலபத்திரிகைகள் சிறிது காலமாவது தனிப் பிரதிகளாகவாவது அனுப்பப்பட்டமையின் அவைகளை இங்கு குறிக்காது விடுகின்றோம்.



### துர்மதி௵ தக்ஷிணாயனம் மார்கழி௴
### (கிறிஸ்து சகம் 1921௵ டிசம்பர்௴—1922௵ ஜனவரி௴)

| மார்கழி | டிசம்பர் ஜனவரி | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 15 | வியா | ○பௌ-4-35 பிர-58-20 | மிரு-32-19 | தனுசரவி 3-11 |
| 2 | 16 | வெ | துவி-51-25 | திரு-27-27 | பரசுராமஜயந்தி |
| 3 | 17 | சனி | திரி-44-14 | புன-22-9 | |
| 4 | 18 | ஞா | சது-37-9 | பூச-16-46 | சங்கட சதுர்த்தி |
| 5 | 19 | திங் | பஞ்-30-29 | ஆயி-11-42 | கே |
| 6 | 20 | செவ் | ஷஷ்-24-29 | மக-7-12 | |
| 7 | *21 | புத | ஸப்-19-19 | பூர-3-28 | 5-32 தனு-புத |
| 8 | 22 | வியா | அஷ்-15-4 | உத்ர-0-36 ஹஸ்-58 46 | 11-45 தனு-சுக் 24-12 மக-புத |
| 9 | 23 | வெ | நவ-11-48 | சித்-57-49 | ரவி \| புக-ச \| குஜன் \| கு-ர-ச |
| 10 | 24 | சனி | தச-9-28 | சுவா-57-41 | ஏகாதசி திதி |
| 11 | 25 | ஞா | ஏகா-8-1 | விசா-58-31 | |
| 12 | 26 | திங் | துவா-7-27 | அனு-60-0 | பிரதோஷம் |
| 13 | 27 | செவ் | திர-7-47 | அனு-0-10 | |
| 14 | 28 | புத | சதி-9-3 | கேட்-2-43 | ஸர்வ அமாவாசை |
| 15 | 29 | வியா | ●-11-29 | மூல-6-12 | |
| 16 | 30 | வெ | பிர-14-40 | பூரா-10-43 | |
| 17 | 31 | சனி | துவி-19-7 | உ-ரா-16-16 | |
| 18 | 1 | ஞா | திரி-24-36 | சிர-22-50 | |
| 19 | 2 | திங் | சது-30-54 | அவி-30 29 | சதுர்த்தி விரதம் |
| 20 | 3 | செவ் | பஞ்-37-41 | சத-37-57 | |
| 21 | 4 | புத | ஷஷ்-44-23 | பூ-தி-45-41 | ஷஷ்டி உபவாசம் |
| 22 | 5 | வியா | ஸப்-50-27 | உ-தி-52-51 | |
| 23 | 6 | வெ | அஷ்-55-11 | ரேவ-58-35 | |
| 24 | 7 | சனி | நவ-58-16 | அசு-60-0 | |
| 25 | 8 | ஞா | தச-58-56 | அசு-2-41 | |
| 26 | 9 | திங் | ஏகா-57-29 | பர 4-42 | ஸ்மார்த்த ஏகாதசி கிருத்திகை |
| 27 | 10 | செவ் | துவா-53-54 | கார்-4-33 | வைகுண்ட ஏகாதசி |
| 28 | 11 | புத | திர-48-27 | ரோ-2-20 மிரு-58-21 | |
| 29 | 12 | விய | சதி-41-29 | திரு-52-53 | ஆருத்ராதர்சனம் [29-29] |
| 30 | 13 | வெ | ○பௌ-34-27 | புன-46-31 | போகிப்பண்டிகை மகர ரவி |

* அன்னை ஸ்ரீசாரதாதேவியார் திதி.

துர்மதி ௵ உத்தராயணம் தைமீ
கிறிஸ்து சகம் 1922 ௵ ஜனவரிமீ—பிப்ரவரிமீ

| தமிழ் | ஜனவரி பிப்ரவ | வார | திதி | நக்ஷத்திரம் | விசேஷம். |
|---|---|---|---|---|---|
| 1 | 14 | சனி | ப்ர-24-49 | பூச-39-39 | உத்தராயண புண்யகாலம் |
| 2 | 15 | ஞா | த்வி-16-3 | ஆயி 32-45 | கோபூஜை |
| 3 | 16 | திங் | த்ரி-7-34<br>சது-59-46 | மக-26-19 | |
| 4 | 17 | செவ் | பஞ்-53-0 | பூர-20-41 | |
| 5 | 18 | புத | ஷஷ்-47-29 | உத்-16-10 | |
| * 6 | 19 | வியா | ஸப் 43-23 | ஹஸ்-12-57 | |
| 7 | 20 | வெ | அஷ்-40-16 | சித்-11-11 | |
| 8 | 21 | சனி | நவ 39-35 | சுவா 10-51 | |
| 9 | 22 | ஞா | தச 39-43 | விசா-11-52 | |
| 10 | 23 | திங் | ஏக -41-5 | அனு-14-6 | ஏகாதசி விரதம் |
| 11 | 24 | செவ் | த்வா-43-32 | கேட்-17-26 | |
| 12 | 25 | புத | த்ர-46-57 | மூல-21-45 | |
| 13 | 26 | வியா | சதி-51-16 | பூரா-26-57 | |
| 14 | 27 | வெ | அ-56-24 | உ-கா-32-57 | ஸர்வ அமாவாசை |
| 15 | 28 | சனி | ப்ர-60-0 | சிர-39-41 | |
| 16 | 29 | ஞா | ப்ர-2-15 | அவி-47-3 | |
| 17 | 30 | திங் | த்வி-8-42 | சத-54-46 | |
| 18 | 31 | செவ் | த்ரி-15-30 | பூ-ட்-60-0 | |
| 19 | 1 | புத | சது-22-17 | பூ-ட்-2-38 | சதுர்த்தி விரதம் |
| 20 | 2 | வியா | பஞ்-23-38 | உ-ட்-10-13 | வஸந்த பஞ்சமி, ஷஷ்டியுபவாசம் |
| 21 | 3 | வெ | ஷஷ்-33-59 | ரேவ-17-0 | |
| 22 | 4 | சனி | ஸப்-37-51 | அசு-22-29 | ரதஸப்தமி |
| 23 | 5 | ஞா | அஷ்-39-47 | பர-26-15 | கிருத்திகை |
| 24 | 6 | திங் | நவ-36-35 | க்ரு-27-58 | |
| 25 | 7 | செவ் | தச-37-10 | ரோ-27-32 | |
| 26 | 8 | புத | ஏகா-32-38 | மிரு-25 1 | ஏகாதசி விரதம் |
| 27 | 9 | வியா | த்வா-26-18 | திரு-20-39 | |
| 28 | 10 | வெ | த்ர-18-30 | புன-14-16 | தை பூசம். |
| 29 | 11 | சனி | ச-தி-9-37 | பூச-7-50 | |

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | 5-36 மக-சுக்<br>12-45 கும்-பு | | |
| ரவி-புத | 22-27 வி-குஜ<br>29-30 கும்-ச | | |
| சுக் | | குஜன் | கு-ச-ர |

* ஸ்வாமி விவேகானந்தர் ஜன்ம திதி.